അപ്പണ്ണ ഐയ്യങ്കാർ

ഛാഞ്ഞഭരനാടകം.

584

ஸ்ரீ

கடவுள்துணை.

காடிவாவி - கம்மவார்குலம்

அப்பணநாய்க்கரவர்கள்

இயற்றிய

# வாணாசுர நாடகம்.

இஃது,

கோயமுத்தூர் ஜில்லா - சண்டைபாளையம்

சண்முகஉபாத்தியாயர் அவர்களாலும்,

கண்ணம்பாளையம்

முத்துசாமிஉபாத்தியாயர் அவர்களாலும்

ஏட்டுப் பிரதிகளில் விட்டும் பொதிந்துமுள்ள

பாட்டுகளைப் புதுக்கியும், வழூஉக்களைக் களைந்தும்,

இராகதாளங்கள் அமைத்தும்,

புதுவை

கைலாயபரம்பரை

ஸ்ரீமாந் - வெங்கடரமணசுவாமிகள் மாணாக்கர்

சென்னை

தி. கந்தசாமிமுதலியார் அவர்கள்

பொருளிட்டுக்கொண்டு,

கோயமுத்தூர்

இ. ஒன்னையகவுண்டர் அவர்களால்,

சென்னை - சிந்தாத்திரிப்பேட்டை

இந்து பிரீச்சிங் ஸொஸைடி

அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

Registered Copy-right.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் வருடம் 1983
செப்பனிட்டு முடித்த
மாதம் வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்

இப்புத்தகம் வேண்டுவோர் சூலூர், புஸ்தகவியாபாரம் ம-ள-ள-ஸ்ரீ, நாராயணசாமிநாயுடு அவர்களிடமும்,

உடுமலைப்பேட்டை ம-ள-ள-ஸ்ரீ, வக்கீல் வி. முனியப்பபிள்ளையவர்கள் குமஸ்தாவும், தமிழ் வித்துவானுமாகிய ம-ள-ஸ்ரீ, எஸ். வெங்கடராயலுநாயுடு அவர்களிடமும்,

கோட்டேர் மலையாண்டிப்பட்டணம், சில்லரைக்கடை ம-ள-ள-ஸ்ரீ, கிருஷ்ணசெட்டியார் அவர்களிடமும்,

கோயமுத்தூர் பெரியகடைவீதி தென்புரம் சிரேணி 93-நெ. புஸ்தகஷாப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு.—10 புஸ்தகம் மொத்தமாகவாங்குவோருக்கு 1 புஸ்தகம் அதிகமும், வியாபாரிகளுக்குச் சகாயமாயும், என்னிடத்தில் மாத்திரம் அகப்படும். மற்ற இடங்களில் கிடைக்காது.

இங்ஙனம்,
இ. ஒன்னப்பகவுண்டர்,
93, புஸ்தகஷாப், கோயமுத்தூர்.

ஸ்ரீ

# சாத்துக்கவிகள்.

—:0:—

உடுமலைப்பேட்டை டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டு வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ, வி. முனியப்ப பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டது.

—

## நேரிசையாசிரியப்பா.

அம்மணி யிசைந்துட்டா முடிகிடக்கு
மிம்மகிதலத்தி னிசைதழீஇச்சுலார்
செம்மறவம்பொலை செறிகாடிவாவி
கம்மலமிருந்தவ னவிலருமிருந்தவன்
செம்மையார்கம்மவார் திருக்குலோத்துங்கன்
பெர்மமனற்செம்மலே புரிமுத்தமிழ்மதக்
கவிக்கைகுஞ்சாகமும் கனன்றடிகோளரி
வெவிட்டமுமதரித செஞ்சொலிரஞ்சிதன்
அப்பணப்போ னளிதிக்குபோன்
விண்புலவருக்கு விட்டுணுவேபோன்
மண்புலவருக்கு மருந்தென்றொரயிரக்
காவாஞ்சுரக் கதைநாடகத்தைப்
பாவிநாடகமிலார் பாருமியின்றென
தந்தன்னவந்தனந் தந்தனமுவந்தனம்
அந்நாடகத்தி னமாமைதாய
வித்தையையுணரா விரும்புபுசீர்சால்
செந்திருவிருக்கை திகழ்கண்ணநன்னகர்
துன்னுமுத்து சுவாமியுஞ்சன்னடையூர்
மன்னுசண்முக வாதனுமொருங்குசேர்ந்
திராகமுந்தாளமு மியைபுறவமைத்துத்
தராதலத்தேற்றந் தழைப்பான்வழங்கச்
சென்னையம்பதியுழிச் சிலமோர்வடிவாய்ப்
பொன்னைப்புணர்ந்த பொருவருமாலாய்த்
தாருவுமுகிலு மேருவுந்தானுந்
தேருநற்குணமணி செப்புசிந்தாமணி
பிரபலசிந்தி பெறுங்கந்தசாமி

பரிவுடனீந்த பசுந்திரவியத்தாற்
கோங்குகான்மிளிருங் குளிர்சந்தனக்குழ
வோங்குகோயமுத் தூர்க்கண்ணுறைபவன்
நன்னயப்பண்பன் நாவலர்நண்பன்
ஒன்னலரென்னு மொருமதிபூதி
யிச்செகமடங்கலு மெடுத்தெடுத்தியம்ப
வச்சிற்பதிப்பித் ததனைவெளியாக்கி
நிலையிற்பெயரா நீடிசை
தலமிசைபெற்றனன் தானியற்றினனே.

———:0:———

கோயமுத்தூர் காதலிக் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராகிய
ம-ா-ா-ஸ்ரீ, சாமிநாதபிள்ளை
யென்று மழைக்கப்படுகிற
சி. வீராசாமிபிள்ளையவர்களால்
இயற்றப்பட்டது.

———

பன்னிருசீர்க்கழில் நெடிலடி ஆசிரிய விருத்தம்.

இலட்சியக்கவிஞருயர் காடிவாவிப்பதிய
னியற்பெயரிலங்கப்பண்ணன்
என்னுநாயக்நன்ற னிதயத்தெழூஉநசையி
னிசைவாண நாடகத்தை
அலட்சியங்கொள்ளாது சண்டைமாநகரினுறை
யருள்பெருகு சண்முகனெனும்
அவனுமொருநன்னன்மா நகர்முத்துசாமியெனு
மவனுமுள ரகுநாதனுஞ்
சுலட்சணப்படவமைத் திடாசதானியாஞ்
சொல்வலவர் சூழுசென்னைச்
சுகுணனுங்கந்தசாமிக் குரிசில்பொருள்தரத்
தூயவச்சேற்றினன்காண்
நிலச்சுமைக்காகோதரத்தை யெளுமறிவோர்கள்
நீடுகோவைப் பதியினன்
நித்தியம்பணிகுணர் காளிநனிலையுளான்
நிர்வாகி யென்னை யனரோ.

———:0:———



வித்வான் சாமக்குளம்
ம-ா-ா-ஸ்ரீ, வெங்கடரமண தாசரவர்கள்
இயற்றியது.

———

அறுசீராசிரியவிருத்தம்.

சீருலவுபூதலத்தில்வியாதமுனிவான்முன்னாட்
சிறப்பினுய்த்த
பேருலவவருத்தகதைபதினெட்டிட்டாங்கவதப்
பெயர்ப்புராணத்
தேருலவு [illegible]ரத்தாங்கந்தமதிலனிருத்த
வி[illegible]மால்போன்
காருலவுகுழலியுடாங்கனைமானைக்கலந்தவிதங்
கடல்சூழ்வையில்.

பாடகத்தோம்படித்திடவு நாடகத்தோர்நடித்திடவும்
பயிலும்பாலர்
ஏடகத்தேபொறித்திடவு மிலக்கணநூலிலக்கியநூ
லிசைநூல்வல்லோர்
காடகத்தேசென்றிடினும் வாயோயாதுரைத்திடவுங்
கடவுளன்பை
* நாடகத்தார்க்கியநூணையாத் தரைமீதுபுரைதீர்த்து
நயம்பெற்றேழுக்கச்

செந்தமிழாஞ்டகமாய்ப்பழமொழிகள்நீதியெலாஞ்
செறியச்சேர்த்துந்
தந்துபெரும்புகழடைந்தானன்னவன்சீர்தனிற்சிலயாஞ்
சாற்றுதுங்கேள்
சந்தமுறும்பூம்பொழில்கள்சூழ்தாலாற்கொங்கெனும்பேர்
கவினத்தாங்கி
அந்தரத்தேவரும்விரும்பப்பலவளமுமொருங்கடங்கே
யவிர்நன்னாட்டில்.

காடிநகர்வருமாரன்கம்மவார்குலத்தினுக்கோர்
கனத்தந்திட்டோன்
வாமுடையமாலடியான்கொங்கர்புகல்தமிழ்மொழியின்
வழக்குந்தேர்ந்தோன்

———

* நாடி - ஆசம் = நாடகத்தார்க்கு = விரும்பியனத்தார்க்கு.

உரனிலகுமணிமார்பிற்பைந்தொடியார்கொங்கைவடு
வுற்றதிரன்
கரமொருவாக்கொடையாளனப்பண்ணைப்பெயர்பொறுத்த
கணிசவானே.

சொன்னயஞ்சேர்ந்திடுவோனாடகமாமிக்கதையைத்
துகளாராய்ந்து
நன்னயஞ்சேர்அச்சிலிடுவித்திடுகென்றவன்குமா
னவில்சொற்கொண்டே
ஒன்னயமென்றிடுகுரிசில்பற்பலராம்வித்துவனர்செய்
யுதவியாலே
சென்னையுஞ்சென்றச்சியற்றிச்சிறப்ப[illegible]தாறுதவினவர்
திறஞ்சொல்வாமால்.

பண்முகசுந்தரக்கவிகள்பயில்நாவன்பொதுமி[illegible]ஞர்
பலரும்வேண்டும்
கண்முகசுந்தரவடிவன்சுண்டைநகர்தனில்விளங்கும்
கவிஞன்பூமேற்
சண்முகமென்றிடுபெயரான்ராகமொடுதாளமெலாஞ்
சரியாய்ச்சேர்த்து
விண்முகமன்சுரர்மகிழக்கொடுத்தழியாக்கீர்த்திகொடு
விளங்கினனே.

நத்துச்சாமிக்கடியாளுடைகத்திற்சிங்கமென
நவிலப்பெற்றோன்
அத்துச்சாதனன்புரைவோர்தம்முடனேயுறவுசெயா
தகலுஞ்சீரோன்
முத்துச்சாமிப்பெயரோன்கண்ணகரானின்னூன்
முழுதுமாராய்ந்
தொத்துச்சார்ந்திடுதருக்கள்பலவுதவிவழுக்களைந்தே
யுயர்ந்தான்மாதோ.

இக்கநாடகத்தைதனி யச்சியற்றப்பொருளுதவி
யிசைந்துசெய்தான்
சந்தனுசலமுனிவன்றனை நிகர்த்துச்சென்னைநகர்
தன்னில்வாழ்வோன்
கந்தசாமிப்பெயர்கொள் தண்குணத்தானின்னோனைக்
கண்டேசெல்வ
வந்தராமேனையரிப்படிச்செய்து கீர்த்திபெற
மகிழ்ந்துமாதோ.



கோயமுத்தூர்ஜில்லா உடுமலைப்பேட்டையிலிருக்கும்
தமிழ்வித்துவான்
ம-ா-ா-ஸ்ரீ, S. வெங்கடராயலுநாயுடு அவர்களால்
இயற்றப்பட்டது.

---

சந்தவிருத்தம்.

கொங்குதேயமதிலுயர்ந்து கொங்குவீசிமங்குலேய்
குளிர்பொதும்பர்புடை நெருங்கியேவயங்குநகரியாம்
பொங்குசீர்கொள்காடிவாவி தங்குகம்மவார்குலப்
புருஷசிங்கமகிழ்தரும்ப்ர சங்கவித்வதுங்கநே
செங்குமின்றெ[illegible]வியந் தியம்பநன்குநாலெலா
மினி[illegible]ணர்ந்தசெந்த மிழ்க்கவிஞனன்புகூர்ந்
தெங்கணிதசெங்கணுதர் பாதபங்கயங்களுந்
திதயமேவுமப்பணன்றன் மெய்ப்புகழ்க்கிணங்கவே.

நீதியிதுபதுவலீது பாதகாமீதுமண்
ணிலவுபுலவர்சிரவணங்கொ ளமுதமீதுஞானமாஞ்
சோதியீதுதுகளிலாத சொருபமீதுதானெனத்
துதிசெய்வண்மைதிசையுங்கள் புலவிளக்கிமகிமைசேர்
ஆதிபாகவதபுராண மதிலியைந்ததிருகர்கோ
னுயிரங்கைவாணனின் பெருஞ்சரித்திரத்தினைத்
தீதிலாதநாடகத் திராவிடத்திலுலகுளோர்
செவிகள்செய்தபுண்யமென்ன! என்னவோதினனரோ.

அந்தநாடகத்திலிந்த நாள்சிதைந்துபோனதா
யறியவுந்தசிலதருக்க ளடிபுதுக்கியணிபெறத்
தந்துமேல்வழுக்களைந்து கண்ணபாடியத்தில்வாழ்
தவளவண்ணவாணிதன் னருட்ப்ரகாசமகிமையாஞ்
சுந்தரங்கொண்முத்துசாமி வித்துவானுமளவிலாச்
சுவைசெய்நல்விராகதாள நவையிலாதமைத்துநீள்
சந்தமுற்றசுண்டையம்பதிக்கண் மேவுசண்முகன்
றனுமெங்குமிசைவயங்க வேவிளங்கினரோ.

தனதனென்னமன்னமான பொன்னனனமானவே
தாசலன்புரிந்தமெய்த் தவத்துதித்தபுத்திரன்
கனதபோதனர்க்குநல்ல கிளருக்குமித்திரன்
கழனொருதாமதித அத்துவிதமதத்திரன்

மன்றழுக்கறுத்தசுத்த ஞானிசற்சரித்திரன்
வையமாயையின்பொலாத செய்கைகட்குருத்திரன்
தனதுசீர்விரும்பிவந்த வர்க்குகந்தசாமியத்
தருதியாகவள்ளலென்ற கந்தசாமிதன்னையே.

சென்னைவெய்தவேயுயர்ந்த தென்னைபூகமென்னவே
செந்நெலோடுகன்னலீடு சென்னைவந்துகண்டுசெம்
பொன்னையெய்திகன்னயங்கொ ளந்தநாடகத்தையிப்
பூதலத்திலெவருமெச்ச வச்சியற்றிமெய்த்தவர்
தன்னையுற்றுமண்ணிலு னறந்துலக்குநன்மையான்
சாதுசங்கமேவிரும்பு தன்மையான்மற்றுங்
கொன்னைமுற்றிலுந்துடைத்து மெய்மைகண்டபுத்திமான்
கோயமாநகர்க்கண்வாழு மண்ணலின்னையன்னரோ.

———:0:———

உடுமலைப்பேட்டை தமிழ் வித்வான்
மா-ா-ா-ஸ்ரீ, பு. ப. அ. முத்துசாமி செட்டியாரவர்களால்
இயற்றப்பட்டது.

———

சந்த விருத்தம்.

சீர்திருத்தியதொல் காடிவாளிவளர்
கம்மவார் குலசிகாமணி
பேர்திருத்தியக மப்பனைக்கவி
பிறங்குடாங்கவி பிணங்கிடவே
கார்திருத்து மனுருத்திரன்சுக
நடப்பபோதும் வெகுநயமதாய்
போர்திருத்து புயவானநாடக
மிசைத்தனன் புடவிபுகழவே.

புகழுமிம்மது ரவானநாடக
புராதனப்பிரதி யேடுவே
தகமொழிக்கபடி தக்கசொற்களிசை
தாளமெட்டுற வமைத்தனர்
திகழ்தமிட்பாவல சுண்டைபூர்வசுர்
சிரேஷ்டசன்முகசுசிலநுங்
அகளில்கண்ணபதி முத்துசாமியொரு
சுகுணனுந் தெளிவுபெற்றரோ.



பெற்றநாடகநல் விலைமிகுனையொளிர்
அச்சகங்கின் மிகுபெட்டபன்மா
சுற்றவித்வஜன சங்கதுங்கமன
துங்கனே நிகருமன்பன்மேற்
கற்றபூகமொடு காலதேசமுணர்
பாலராஜமத வேளனுன்
உற்றனிந்தபெய பொன்னையன்பெரி
துடக்கைகொண்டுமு னடத்தவே.

நடக்கைநன்குனி நாடிவேணுதி
நல்[illegible]விசை மல்கினன்
அடக்கமீதிபெறு கல்விமெய்க்கருணை
யறிவெ[illegible]ழுக்க மெதிர்கருது
விடக்காற்றகொடை யியலினுலனி
[illegible]வருநன்குமதி செயலினன்
அடக்குறும்பவ விருட்டிழம்பொருவு
சூரியோதய சுஞானமன்.

மன்றினிற்றிலத வாதவேங்கடா
மணசுவாமியிரு பதமலர்க்
கென்றுமன்புசெயும் விரதகங்கனை
னெழிற்பொழின் மலிதிருக்கழுக்
குன்றய[illegible]தயனைந்திர்
குலாமணித்திர டாங்கமேற
துன்னுசெவ்வினவளர் கந்தசாமிமுனிந்
சாந்தமாமன மகிழ்ந்தரோ.

———:0:———

உடுமலைப்பேட்டை தமிழ் வித்வான்
மா-ா-ா-ஸ்ரீ,
வங்கிபுரம் ஸி. திருமலைசுவாமி அய்யங்காரவர்களால்
இயற்றப்பட்டது.

———

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நறைமலிஞ்சியணிமதவேட் கன்றியுமவ்வான்வதியு
நற்றேவர்க்குங்
குறைவிலஞ்சிதவரிவி சுகமுகுந்தீன்காடிநகர்
குதிக்குமூரான்

மறைசொலஞ்சிகாவுறவா னருள்பெறுவப்பணக்கவிஞன்
 மதுரவாக்கரற்
றறைநலஞ்சிறியோர்பெரியோர் செவிக்கமுதெனத்தமிழிற்
 றக்கோர்பேசக்.

கனவரதவியாதனுரை பதினென்புராணமதிற்
 கரியமான்ம
தனவரதனவதார மகிமைசெறிபாகவதந்
 தசமஸ்கந்தத்
தனவரதநற்புகழாங் கற்புநிறையுஷாபரி
 யம்மென்னுலைச்
சொன்வரதம்விவான நாடகமெனும்பெயராற்
 றொகுத்தல்செய்தான்.

அந்நாடகத்தினைச்சீர் திருத்தியினி துறவளித்து
 மருமைசால
நன்னூரிகமுள கனராகதாளவகை
 நன்கமைத்தும்
பொன்னுனகாங்கூப்பிப் புவிதொழவேய்ந்தார்கண்ண
 புரியின்மேவு
சொன்னுவலன்முத்துசாமியுஞ் சுண்டைப்பதிச்சன்
 முகனுஞ்சூழ்ந்தே.

மன்றலவிழ்வனையலாத் தவிசனைக்குட்டிச்சிறையில்
 வைத்தகந்த
னென்றவொருஞானகுரு தேசிகனைநேர்தலினு
 லெவரினல்லோரும்
ஒன்றவுரைகாரணப் பெயர்க்கந்தசாமியெனு
 முயர்மெய்ப்போதன்
தன்றனத்தின்பேருதவி யாலந்நாடகத்தைத்
 தனியச்சிட்டுச்.

செங்கதிரோன்கிரணமெனத் தேயமெங்கும்பாவுபுகழ்
 செழிக்கப்பெற்றான்
துங்கமிகுசாதுஜன தேசவிசுவாசமுந்திர்
 சுகுணசீலன்



தங்குமதுரிதவமுத நயவசனநல்லாப
 சாம்பரதாயன்
கொங்கவிழ்தரும்பொழில்சூழ் கோயமுத்தூரொன்னையனெனக்
 குருமின்மாதோ.

———:o:———

இராமநாதபுரம் பாடசாலை உபாத்தியாயர்
## ஸ்ரீ-ா-ா-ஸ்ரீ, ம. குமாரசாமிபிள்ளையவர்கள்
இயற்றியது.

———:o:———

### நேரிசையாசிரியப்பா.

திருமகணாயகிடு செய்யசீர்க்கமல
மகிழ்மலரயனார் வகுத்தபூதலத்தில்
வியாதராயணனு மாமுனிமுனைநா
ளோதுபுராண முயர்மூவாறுட்
பாகவதத்திற் பனிவரைப்பைங்கொடி
பாகன்பொன்னடி பரசிடுவாணன்
சரிதையையுலகோர் தானறிந்திடவே
யொருநாடகமா யோதினன்றிகழ்சூழ்
மாநிலமாது மதிநுதற்றிலக
மானகற்கொங்கி லவிர்ந்திடுங்காடி
வாவிவாழ்கம்ம வார்மரபினுக்கோ
ராவியேயன்று னருங்கலைதேர்வான்
நற்பண்ணறிந்த வப்பணப்பெயரான்
செப்பியநாடகந் நீட்டியவோலை
யிற்பொலியளவில் தப்புகள்போக
விற்பனர்தம்மால் விளங்கவாராயப்
புரந்தரனகரிய புதுவைபுரூஉம்
அரவணிப்பரற்கை லாயபரம்பரைத்
தங்குசிவனுரைத் தகைத்தாட்கொளீஇ
வெங்கடரமண விபுதன்பாவசம்
பந்தங்கழற்றுவான் பாதம்புனைஇக்
கந்தசாமியாங் கதிர்வாழ்கொண்டல்
பெருமிதக்கருணையான் பெட்புறக்கணித்து
பொருளீட்டங்கொடு புலாருமுய்யக்

## சாற்றுக்கவிகள்.

கொத்தூராச்சிற் குடிற்றினன்கோய
முத்துவென்ன மொழிமுதுககான்
பன்னயஞ்செறிந்த பாங்குருகுணத்த
னென்னபென்ன வுரைக்கும்பேரன்
இந்நூலச்சி லியற்றிடற்குதவி
பன்னூட்செய் துபயின்றிரோக
தாளமும்பாங்காத் தானமைந்தெந்த
ஈக்கிதும்பொன்று நல்லிசைபெற்றான்
வண்டிசைபயிலுந் தண்டலைசெறிந்த
கண்டைமாககிரித் துலங்கியசெம்மல்
பண்முகஞ்சிறந்த பன்னூலுணர்வான்
சண்முகநாமந் தான்படைத்திட்டோன்
கண்ணன்பெயர்சேர் கடிநகரத்து
நண்ணியவீரன் நல்லறிவுடையான்
பத்தர்கள்மெச்சும் பாங்குறுபண்பன்
முத்துச்சாமி யெனமொழிபெயரான்
எட்டினிலில்லா திருந்தபல்கருக்கள்
கூட்டிக்கொடுத்துக் குறைகடல்வைப்பி
லிலக்கணக்கவிஞர் இகழாக்
கலக்கமொழித்தான் கவிசிகாமணியே.



ஸ்ரீ

இராமஜயம்.

ஸ்ரீமஹாபாகவதத்தில்

பத்தாவது ஸ்கந்தத்திலுள்ள

# வாணாசுர நாடகம்.

## பாயிரம்.

### காப்பு.

நேரிசைவெண்பா.

பொன்னிறத்தோன்சேயன் புதல்வனருள்புதல்வன்
றன்னருளால்வந்தசுரன் றன்புகழை—யிந்நிலத்திற்
செந்தமிழால்நாடகமாய்ச் செப்புதற்குமெய்ப்புகழ்சேர்
கந்தனுக்குமுன்னவன்றாள் காப்பு.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சீருலவும்யாழ்க்காத்தான் கனவிற்கண்ட
திருமகள்சேயருள்சுதனைச் சித்ரசேனை
கூருலவுஞ்சேணியொரு கொடிக்குள்ளாகக்
கொணர்ந்திடவா னைமினின்பங் கொடுத்துங்கூடி
பாருலவும்அவுணர்மடிந்திடப் போர்செய்ய
பாம்பினிற்கட்டுண்டிடும் போனுக்காய்வாணன்
மாருலவும்ஆயிரந்தோ ளெியச்செய்த
மால்மகிமைநாடகமாய் வழுத்துவோமே. (௧)

பொன்னிறமெய்யனுல கேழாண்டான்
புத்திரன்மால் தொண்டியனும் பிரகலாதன்
றன்னுடையமைந்தன் விரோசனனு முன்னல்
தனதுமைந்தன் மாவலியாஞ் சக்ரவர்த்தி
மன்னனுக்கு மூத்தமகன் வாணாசுரன்
மகிமைதனைச் செந்தமிழ் நாடகமாய்ச்சொல்ல
கன்னல்ரசந் தேன்கடலை பொரிபால்வேண்டும்
கரிமுகவன் றுளிணைகள் காப்பதாமே. (௨)

சுப்பிரமணியர்.

திருமகளும் பார்வதியும் வாணிமூவர்
சிந்தைகளுங் கலங்கிவிண்ணும் தேவருஞ்ச
கரிகளெட்டு மஞ்சவஷ்ட கிரிநடுங்கக்
கடல்கலங்க மேகமெலாங் கலங்கிவீழ
அரியானும் போர்பொருதி வாணன்றோள்கள்
அற்றசெயல் நாடகமாய் அடியேன்சொல்ல
கரிமுகவிநாயகன்றன் பின்றோனான
கந்தனிரு தாளிணைகள் காப்பதாமே. (௩)

முமூர்த்திகள், முத்தேவியர்.

மோகத்திற்கதிபதியா மதனராஜன்
மோகத்தில்வந்தானோர் பெண்மோகத்தால்
நாகத்திற்கட்டுண்டு மீண்டுவாணன்
நாரியைக்கைக்கொண்டிதன் நகரைநாடி
வேகத்துடன்வந்திரு தேவியர்களோடும்
விளங்குகதைநாடகமாய் விளங்கவேண்டி



காருந்தன்சிவனயனுந் திருவுமீசன்
காதலியுங்கலைமகளுங் காப்பதாமே. (௪)

நூற்பயன்.

தேகசுவஸ்தியும்வயது குணமும்ஞான
திரவியசம்பத்துபுத்ர பௌத்ரவாழ்வும்
மோகத்தை யலர்கலவி சூதத்துவம்
முறைநமைகளும்பெருமைகளும் முன்னோர்கட்டும்
வாகனச்செல்வம்குலவுத் தாரம்கல்வி
பாருவும்பிறருகுரு வாய்மைச்செல்வம்
பாகவதத்திரிமன்சேய் நாடகத்தைப்
பாடுவர்க்குங்கேட்பவர்க்கும் பலனுண்டாமே. (௫)

தக்கனைக்கொன்றிருனடியான் வாணாசுரன்
தன்புதல்விதன்னகத்தில்வெவ்வே றுகமாயன்
சக்கரத்தைவிட்டறுக்கும் போதேவென்னீர்
தானனிந்தோனரியைசமு தாயஞ்செய்த
இக்கதையைநாடகமாய்ப் பாடும்பேர்க்கும்
இனஞ்சொல்லென் றன்மையுடன் கேட்கும்பேர்க்கும்
மிக்கமனதாகவுங்கொண் டாடிமாலை
விரும்புவர்க்குங்கிடைக்குமுயர் வீடுதானே. (௬)

வாதுசெயுஞ்சூரர்க்கதி வீரந்தோன்றும்
மட்டடங்காத்துட்டருக்கு விவேகந்தோன்றும்
கோதையர்க்குச்சாத்துவிகக் குணமேதோன்றும்
கொப்பெனவேகாமுகர்க்கு புத்திதோன்றும்
தூதுவர்க்குபாயசம்ப்ர தாயந்தோன்றும்
துரைகளுக்குத்தானநிக நீதிதோன்றும்
மாதவர்க்குப்பரகதிபி னின்பந்தோன்றும்
வாணாசுரநாடகத்தின் மகிமைதானே. (௭)

அலைகடலினிரினைத்தான் மேகங்கொண்டு
அகிலமெலாங்காத்தருளும் அருமைபோல
நிலைமையுளகதைக ளநேகங்கள்சொல்லும்
சாத்விகமாம்பாகவத புராணந்தன்னில்
அநிருத்தன் விரதிமகனும் அசுரப்பெண்ணைச்
சேர்ந்தகதைநாடகமாய்ச் சிறியேன்சொன்னேன்

நலனுதவுமிக்கதைபா ராட்டுவோர்முன்
நமனுமுக டியுஞ்சனியும் நாடிடாதே. (௮)

ஏதுமில்லிருனியமும் வைப்புச்சோகம்
எதிரிபகைமதமச்சிர யமசஞ்சாரம்
மூதணங்கின்சஞ்சாரம் சனிசஞ்சாரம்
முற்பகையுஞ்பிற்பகையும் பேய்ச்சஞ்சாரம்
தீதுலவுமக்கினிபய மன்னர்விரோதம்
திருடர்பயம்நோய்பயங்கள் ஜன்மபீடை
சேதானும்மேவுகதை யமுதங்காதிற்
சேர்ப்பவர்க்கிப்பவங்களொன்றுந் தீண்டிடாதே. (௯)

## அவையடக்கம்.

கஞ்சமலர்க்கணன்மைந்தன் வாகனத்தை[illegible]
கண்டுசனிவாகனந்தான் நடந்தாப்போ[illegible]
பஞ்சவர்சகாயன்வா கனந்தான்விண்ணிற்
பறந்திடக்கண்டேபிபந்தான் பறந்தாற்போலும்
வஞ்சிகுறவள்ளிமண வாளனேறும்
வாகனத்தைக்கண்டு குக்குடமாடும்போலும்
பஞ்சலட்சணக்கவிசொல் பெரியோர்முன்யான்
பாடுகின்றகவியினுடை பண்புதானே. (௰)

சிங்கமதுவீற்றிருக்கும் வனத்தினுள்ளே
சிறுநரியும்பயமகற்றித் திரிந்தாற்போலும்
பொங்குகடலேழையுந்தான் கடந்தார்முன்னே
போம்புனல்சிற்றாறதையுங் கடந்தாற்போலும்
தங்கவரைமீதில்நின்று குதித்தார்முன்னே
தையல்கும்பமேனின்று குதித்தார்போலும்
சங்கமெச்சுந்தமிழ்வல்லோர் முன்னரின்யான்
தாழ்மையுடன்சொல்புலமைத் தன்மைதானே. (௰௧)

வாரிதிசிற்றாறதனை யுட்கொண்டாற்போல்
மலர்தனில்நார்கலந்து மணம்பெற்றாப்போலும்
நீர்தனிற்பால்தனையு முட்கொண்டாற்போல்
நிலமதுவும்புல்லினில நிறுத்திறைப்போல்
காரதுவும்எச்சில்துப்பு முட்கொண்டாற்போல்
கன்னல்ரசம்சாம்பல்தனை யுட்கொண்டாற்போ[illegible]



பாரதிலெல்லாமுணர்ந்த பெரியோரெல்லாம்
பாலன்சொலுங்கவிக்கின்பம் பகர்ந்துகொள்வீர். (௰௨)

மாதவனுக் குஞ்சிவனுக்கும் விரோதம்
வந்தகதைநாடகமாய் வழுத்துங்கூடில்
தீதுலவுஞ்சொற்குற்றம் பொருட்குற்றங்கள்
சீர்க்குற்றங்களெழுத்துச் சிதற்குற்றங்கள்
ஏதுகலைக்ஞானநான்மறை சாஸ்திரபுராண
மெல்லவுமாராய்ந்தறிந்த பெரியோரெல்லாம்
போதாவில்லாதிருக்குங் குற்றமெலாம்பொறுத்து
பிள்ளையின்மீதிற்கிருபை பொழிந்திடுரே. (௰௩)

வாரணிக்குதன்றிதினளாம் வாணன்மங்கை
மதன்மகனைமணமுடித்த சரிதந்தன்னை
சீரணிந்தசெந்தமிழ் நாடகந்தாகச்
செப்பினவனுலகினின்று னினியானென்று
சீரணிந்தசங்கரனை யயனைப்போற்றி
நீலவர்ணக்கமலக்கண்ணன் நெஞ்சில்நோய்
பாரணிந்தோன்றனைத்துதித்துப் பெரியோர்நல்லோர்
பாரிலுள்ளபோறியப் பகர்கின்றேனே. (௰௪)

## ஆசிரியர் வணக்கம்.

மாலருள்சேர்காடிநகர் தன்னில்வாழும்
வரிசையுளகார்காத்த வமிசந்தன்னில்
கோலமுடன்செழிக்கவந்தோன் கவிஞர்சிங்கம்
கோபாலனெனும்அரிபேர் கொண்டோன்பெற்ற
பாலன்திருமலைக்கொழுந்தென் றுயர்ந்தநாமம்
படைத்தவித்யாகுருபாதஞ் சிரமேற்கொண்டு
சீலமுடன்துதித்தரிபா கவதகாதை
செந்தமிழிநாடகமாய்ச் செப்புவோமே. (௰௫)

## நூல்செய்தவர் வரலாறு.

பரிதிமதிபுகழ்காடி நகரிற்கம்ம
வார்வகையிற்சுஞ்சுகுலம் பசமன்மாயோன்
வி[illegible]தமனுசரித்த திரு[illegible]ங்கடநாயக்கன்
[illegible]தன்சென்[illegible] நாய்க்கன்விந்தாங்

இரதமதிற்பிறந்தவன் அப்பண்ணையென்போன்
கேசவன்றன்மருமகள்தன் கிருபையாலே
இரதிசேயாம்வாணன்மரு மகன்றன்கீர்த்தி
இசைபயிலும்நாடகமா யியம்பினனே. (௧௬)

## நாடகாரம்பம்.

இந்திரனைத்தேவர்களைத் திருமால்தன்னை
யீசனையும் திருகௌரி யிசையுளானைக்
கந்தனையும்கணபதியை முனிவோர்வேதங்
கற்றபெரியோர்மிகவுங் கற்புள்ளோரைச்
சந்திரனைச்சூரியனைப் பூமாதேவி
தன்னைவிண்ணையவர் பாதந்துதித்தோர்முன்னே
சுந்தாஞ்சேர்மகனை மதன்மகனுக்கிந்த
சூரன்புகழ்விரித்துரைக்கத் தொடங்குவோமே. (௧௭)

## மங்களம்.

தரு-இராகம்-ஆரபி-ஏகதாளம்.

பல்லவி.

மங்களம் சங்குசக்ர மாயாவதாரனுக்கு
சிங்காவதாரனுக்கு மங்களம் - இரண்ய
சூரசம்மாரனுக்கு மங்களம்.

சரணங்கள்.

திருவளர்மார்பனுக்குத் தேவர்கள்தேவனுக்கு
சருவலோகேசனுக்கு மங்களம் - புவியில்
சகலரக்ஷகனுக்கு மங்களம். (௧)

வாமாவதாரனுக்கும் மச்சவதாரனுக்கு
இராமாவதாரனுக்கு மங்களம் - இலங்கை
இராவணசம்மாரனுக்கு மங்களம். (௨)

ஆபிராமனுக்கு அனந்தசயனனுக்கு
காயாம்பூவண்ணனுக்கு மங்களம் - தினம்
கருடவாகனனுக்கு மங்களம். (௩)

திரிபுரமெரித்தோனுக்குச் சேவேறுமீசனுக்கு
கரிபரியாக்கினோனுக்கு மங்களம் - கொடிய
நஞ்சுண்டநாதனுக்கு மங்களம். (௪)



அங்குசபாசனுக்கு ஆலவாயனனுக்கு
கங்கைச்சடையானுக்கு மங்களம் - சந்திர
கௌரிகல்யாணனுக்கு மங்களம். (௫)

மாரனைக்காய்ந்தோனுக்கு மாயன்மைத்துனனுக்கு
சூரசம்மாரனுக்கு மங்களம் - ஞானச்
சடலைநடிப்பவற்கு மங்களம். (௬)

எங்கும்நிறைந்தோனுக்கு ஏழைபங்காளனுக்கு
கண்கள்மூன்றுள்ளோனுக்கு மங்களம் - தினம்
கைலாசவாசனுக்கு மங்களம். (௭)

ஆனைமுகவனுக்கும் ஐந்துகரத்தோனுக்கும்
பானை வயிறனுக்கு மங்களம் - சத்தி
பார்வதிபாலனுக்கு மங்களம். (௭)

கையிராறுள்ளோனுக்கும் கணபதியநுசனுக்குந்
தெய்வானை பாகனுக்கும் மங்களம் - அதி
ஜயசுப்பிர மணியருக்கு மங்களம். (௮)

வேதமுணர்ந்தோருக்கும் விண்ணோரனைவருக்கும்
மாதாபிதாக்களுக்கு மங்களம் - சற்றும்
மருவில்லாக்குருமார்க்கு மங்களம். (௯)

பத்மநாபன் சத்திக்கும் பார்வதியம்மனுக்கும்
சதுர்முகன்தேவிக்கும் மங்களம் - உலகில்
சகலபெரியோர்களுக்கும் மங்களம். (௰)

## சோபனத் தரு.

பல்லவி.

சோபனமே - நித்ய - சோபனமே.

சரணங்கள்.

சோபனமேநித்ய சுகிர்தகல்யாண னுக்கு
சோபனமேதினமும் சோதைதன்பால னுக்கு
சோபனமேவெண் சரஸ்வதி மாம னுக்கு
சோபனமேவிண்ணோர் துதிக்கும் ஜகநாத னுக்கு (௧)

மாதுடனேபிறந்த மங்கைமணாள னுக்கு
காலனைத்தானேவெட்டிக் காலாலுதைத்தோ னுக்கு
ஆலகாலவிஷத்தைத் தமுதாயுட்கொண்டோ னுக்கு
மேலாகவேநுதலைத் தான்வில்லாய்வளைத்தோனுக்கு (௨)

அகிலலோகேசனுந்தி அருளும்நான்முக னுக்கு
சகலகலைக்குதவும் சரஸ்வதிநாத னுக்கு
முகில்வண்ணன்றங்கையாலே முகமொன்றிழந்தோனுக்கு
ஜகமீரேழெங்குமுயிரை சிருட்டிக்கும்பிரம னுக்கு (௩)

தொந்திவயிர்படைத்துத் துலங்குங்கண பதிக்கு
மந்திரவெண்ணீறணிந்த வள்ளிமணாள னுக்கு
செந்திருவிற்குமீசன் தேவிசாஸ்வ திக்கு
விந்தைமதனனுக்கு மேவும்ரதிதே விக்கு (௪)

சேணுலகத்தில்வாழும் தேவாதிதேவ னுக்கு
ஆணவந்தன்னைநீக்கும் அருந்தவத்தோர்க ளுக்கும்
வீணானதைச்சொல்லாத வேதபூசுரர்க ளுக்கும்
மாணுபதியிந்திராணி மாதுவருந்த திக்கும் (௫)

பரமானந்தத்தின்மீது பயபக்தியுள்ளோ ருக்கும்
சருவானந்தத்தின்மீது தயபக்தியுள்ளோ ருக்கும்
உருவானந்தத்தின்மீது உயர்பக்தியுள்ளோ ருக்கும்
குருவானந்தத்தின்மீது குணபக்தியுள்ளோ ருக்கும் (௬)

சோபனமே - நித்ய - சோபனமே.

## விநாயகர் வருதல்.

விருத்தம்:

சினந்திடும் பவத்தைநீக்கும் சிதரன் பதத்தியானம்
மனத்தினிவிருத்திக்கொண்டு மாவலிதவத்தினாலே
சனித்திடும் வாணாசூரன் சரித்திரந்தனைப்பாராட்டும்
கனத்திடும் சபையிற்செல்வக் கணபதி வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால், அநேகம் பெரிய பாவங்களை யெல்லாம் பரிகாரம் பண்ணப்பட்ட ஸ்ரீமந் நாராயணனுடைய பாதபதுமங்களை யென்னேரமுந் துதிசெய்துகொண்டு வாணாசூர சரித்திரத்தை பிரஸ்தாபஞ் செய்யப்பட்ட மகாபெரியோர்கள் நிறைந்த சபைக்குள்ளாக ஸ்ரீ விக்கினேசுரக் கடவுள் வருகிற சம்பிரதாயம் எப்படி யென்றால்.



கணபதி வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

கணபதி வந்தனரே - ஜயஜய
கணபதி வந்தனரே.

அநுபல்லவி.

கணபதி குணபதி - கவிவாணர்க்கருள்பதி
மணபதி தனபதி - மறைநான்குக்கதிபதி. (கணபதி)

சரணங்கள்.

௧. ஐந்துகரமிலங்கவே - தீன்மிகவேண்டும்
தொந்திவயிர்குலுங்கவே
முந்திமுந்தியெல்லோர்க்கும் - முன்னிற்கவேபரிந்து
திந்தோம்திந்திமுக்கெனத் - திகிர்தத்தாளம்புரிந்து. (கண)

௨. ஆனைத்தோல்தனையுரித்து - போர்த்தோனைவேண்டிப்
பாணியிற்பாசந்தரித்து.
ஞானிமார்கள்முன்னிற்கும் ஞானபோதவிலாசன்
வானுளோர்க்குமுன்னிற்கும் மாயன்அநுசிபாலன். (கண)

௩. ஆருவாகனமேறுவான் - தாய்வடிவம்போல்
மோகமாதினைக் கோறுவான்
தாகந்தனைத்தணிக்கும் தண்ணீர்த்தடத்தில்வாழ்வோன்
பாகவதசரித்திரம் பாராட்டுஞ்சபைதனில். (கண)

பட்டர்கள்வருகிறபோதுவிருத்தம்.

மன்னவன்வாணசூரன் மகள்மணமுடிந்ததிர்த்தி
பன்னுசெந்தமிழால்நாட்யம் பாடுவோராடுவோர்கள்
தன்னையேகாக்கவந்த தந்திமாமுகனைப்போற்ற
சின்னசின்னபட்டரோடு சிங்காரப்பட்டர்வந்தார்.

வசனம்.

அகோதெப்படியென்றால், வாணாசூர நாடகத்தை அன்போடு கூடிப் பாடியாடுகிறபேர்களுக்கும் கேட்கும்பேர்கட்கும் எழுதும்பேர்களுக்கும் யாதொரு துன்பமும்வாராமல் பவுஞ்சும் பாக்கியமுங் கொடுத்து இரட்சிக்கப்பட்ட விக்கினேசுவரக்கடவுளை பூசைசெய்வதற்காகச் சின்னப்பட்டனென்றும் சிங்காரப்பட்டனென்றும் பெயர்பெற்ற இரண்டு குருக்கள்மார் வருகிற சம்பிரதாயம் எப்படி யென்றால்.

பட்டர் வருகிற தரு-இ-ம்-புன்னாகவராளி தாளம்-மட்டியம்.

பல்லவி.

சின்னச்சின்னப்பட்டரும் வந்தனரே - செல்வ
சிங்காரிப்பட்டரும் வந்தனரே.

அநுபல்லவி.

நன்னன்னுமந்திரம் நன்றாய்ப்பாராட்டியே
நான்கையும் ஆறையும் எட்டென்று கூட்டியே. (சின்ன)

சரணங்கள்.

௧. முக்கவருப்நெற்றியில் நாமந்துலங்கவே
முப்புரிநூல்களும் மார்பிலிலங்கவே. (சின்ன)

௨. அள்ளிவிடத்து வித்தாரங்கள்பேசியே
அடைதட்டிக்கோணித்துக் கைகளைவீசியே. (சின்ன)

௩. சற்குணமுக்கியம் சந்தோஷந்தருமென்று
அற்குணமுக்கியந் அன்பர்கள்தருமென்று (சின்ன)

௪. கோணிக்கோணிக்கைகள் வீசிக்கொண்டுந்தானே
கோளாறுப்பழமைகள் பேசிக்கொண்டுந்தானே. (சின்ன)

௫. காஞ்சனக்குல்லாவுந் சூட்டிக்கொண்டுந்தானே
கணபதிமந்திரம் பாடிக்கொண்டுந்தானே. (சின்ன)

௬. கலைமகளைப்பேணக் கல்வியுண்டாமென்று
கணபதியைக்காணக் கன்மங்கள்போமென்று. (சின்ன)

௭. பஞ்சாங்கச்சுவடியைக் கைகளிற்சூடியே
பதினெண்புராணத்தின் பண்புகொண்டாடியே. (சின்ன)

௮. செங்காவிச்சோமன்மடிவைத் துடுத்தியே
ஜபதவநிஷ்டைகள்நன்றாய் நடத்தியே. (சின்ன)

௯. மானயனச்சத்திமகனே நமோவென்று
மோனமதத்தந்திமுகனே நமோவென்று (சின்ன)

௰. மாலைக்குந்தும்பொறி யெள்ளுருண்டைசர்க்கரை
மாங்கனிதேங்கனி பூங்கனிதேனுடன். (சின்ன)

௧௧. வாணசூரன்புகழ்தன்னை மதித்திட
வந்தகணபதி தன்னைத்துதித்திட. (சின்ன)



கட்டியக்காரன்வருகிற பொது விருத்தம்.

பட்டானவர்தான்வந்து பரிவுடன்கரிமுகற்கு
இஷ்டமாய்ப்பூசைசெய்து எழுந்தருளவுந்தானப்போ
துஷ்டநிக்ரகனும்வாண சூரன்தன்வாசற்காரன்
கட்டியக்காரன்சூரன் களரியிற்றோன்றினானே.

வசனம்.

அதோவிதப்படியென்றால், சின்னப்பட்டரென்றும் சிங்காரப் பட்டரென்றும் பேர்பெற்ற குருக்கள்மார் வந்து விக்கினேசுரரைப் பூசைசெய்துகொண்ட பிற்பாடு, இராஜாதிராஜன் இராஜமார்த்தாண்டன் இராஜகம்பீரன் இராஜவுத்தண்டன் இராஜகோலாகலன் இராஜ விற்பனன் மஹாராஜசேகரன் மாவலிசக்கரவர்த்தி புத்திரசிகாமணி யாகிய வாணாசுரமஹாராஜன் தோரணவாசல்காக்கும் கட்டியக்காரன் வருகிற சம்பிரதாயம் எப்படி யென்றால்.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-மத்யமாவதி-ஏகதாளம்.

பல்லவி.

துஷ்டாடக்கிடும் அஷ்டநசபலக்
கட்டியக்காரனும் வந்தான் - துஷ்டசம்மாரன்
கட்டியக்காரனும் வந்தான்.

அநுபல்லவி.

தட்டுத்தடியுங்கையிற் கட்டுமெட்டாயிலங்க
பட்டைபட்டையாகநாமம் நெட்டுநெட்டாய்த்துலங்க (கட்)

சரணங்கள்.

௧. சட்டியுருமாலைகட்டியே ஆரங்கள்நன்றாய்
பூட்டிக்கண்டத்தைமெட்டியே - மார்பினில்நன்றாய்
தீட்டுசந்தனம்பூசிப் - பாட்டுப்பழமைபேசி
போட்டிசெய்வோரையேசி மேட்டிமையாய்க்கைவீசி
தீர்க்கமாயனைவர்க்கும் ஏற்கவேநெறிமுறை
சாக்கிரதைகள்சொல்லி தாக்கிடத்தோமென. (கட்)

௨. காதிற்குண்டலமிட்டுமே - மேல்முருகிட்டு
ஆதாரிஜாருந்தொட்டுமே - கெச்சங்குலுங்கப்
பீதகத்தாற்கெச்சைகட்டி மாதரைப்போற்கண்சிமிட்டி
பூதலத்தில்தங்கக்கட்டி சாதுர்யத்தில்சிங்கக்குட்டி
ஊர்க்குருவிகளையும் தோக்குருவிகளையும்
மாய்க்கவுந்திறவில்லை பராக்கு பராக்கெனக். (கட்)

௩. கொண்டைதனிற்பூச்சூட்டியே - காலிற்சதங்கை
தண்டைவெண்டயம்பூட்டியே - மெட்டியடிக்குந் [த்தி
செண்டானதைப்போல்குதித்து தொண்டைமேகம்போல் நிற்
சண்டாளர்தன்னைவதைத்துப் பெண்டாளர்தன்னையுதைத்து
பாதகரைநகரில் பூதலிடேனெனத்
தாதிகுதகுதிகு தளாங்குதோமெனக். (கட்)

௪. செங்காதிற்கடுக்கன்பூட்டியே - தொங்கல்முருகு
திக்தோம்திமுக்கென்றாட்டியே - சொற்கட்டுகளால்
சத்துரோசயத்தையேயுருக்கி சந்தோஷவார்த்தைதபெருக்கி
மந்தாரங்களைநெருக்கி கொந்தாவுமிசைமுருக்கி.
வேழங்கள்நடுங்கிடவேகடு வானங்களிடும்பரிபிடதிட [னா
மேளங்களடர்ந்துமுழங்கிட தாளங்கிரகிட தளாங்குதோமெ

௫. ஞாலமும்நடுங்கமெட்டியே - கார்மின்னிலங்கள்
போலவுங்கண்கள்சிமிட்டியே - கூசாமற்கையில்
ஆலகாலவிஷமெடுத்துப் பாலதுபோலேகுடித்து
காலனையுமேதடுத்து மாவிமைகளேபடித்து
சற்சனர்க்குத்துரை சாரிவிடுவாரென
மெச்சினர்க்குத்துரை மேன்மைசெய்குவரென
துற்சனர்க்குத்துரை சூடுமிடுவாரென
எச்சரிக்கையிது எச்சரிக்கையென. (கட்)

கட்டியன் சொல் விருத்தம்.

சூராதிசூரனே துஷ்டசம்மாரனே சுந்தரனேவெகுபாராக்கு
வீராதிவீரனே வீரமாகோரனே வேந்தனே வெகுபாராக்கு
போராதீரனே ஆயிரங்கையனே பிரபலனே வெகுபாராக்கு
பாராளும்அவுணனே கனசக்ரவர்த்திதன் பாலனேவெகுபாராக்கு

பொது விருத்தம்.

கட்டியக்காரனன்பாய்க் கட்டியங்கூறும்யாளிக்
குட்டியைப்போலும்வாணன் கொலுவுக்குவாராரென்று
பட்டணத்தெருக்கடோறும் பாங்குசெய்தலங்கரிக்க
அட்டிகள்கூடாதென்று அனைவர்க்கும்விளம்புவானே.

வசனம்.

அகோகேட்பபடியென்றால், இராஜாதிராஜன் இராஜகம்பீரன் இராஜமார்த்தாண்டன் இராஜகோலாகலன் இராஜவிற்பன்னன் வாணாசுரமகாராஜன் கொலுவுக்கு வருகிறார், பட்டணத்திலேயுள்ள மாடமாளிகை கூடகோபுரங்கள் சாவடிகள் மச்சுகள் கோட்டைகள் கொத்தளங்கள் இவைகள் எல்லாம் சீரணங்களாயிருக்கிறபடியினாலே இந்தக்கணத்திலேதானே இவைகளையெல்லாம் நாகரீகமாய்ச் சிங்காரிப்பீர்களென்று கட்டியக்காரன் சொல்லிவருகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.



கட்டியன்சொல்-தரு-திபதை-இ-ம-கலியாணி-அடதாளம்.

௧. சோணிதாபுரியாளும் நேசனே - ஜய
வாணாசுரமகாராஜனே.

௨. தான்சொல்லக்கேட்டிடுஞ் சனங்களே - இப்போ
நான்சொல்லக்கேளுங்கோ சனங்களே.

௩. பலவுக்குமுத்தாக் தந்திட்டான் - ராஜன்
கொலுவுக்குவருக நினைந்திட்டான்.

௪. தவறாமல்அனைவரும் சாலவே - வீட்டில்
அவரவர்கலியாணம் போலவே.

௫. வீடுகள்திண்ணைகள் வழியுங்கோ - தெய்வ
நாடுள்ளகோலங்கள் பொழியுங்கோ.

௬. நேசமாய்ச்சுவர்களைப் பூசுங்கோ - வீடு
வாசல்தோறும் பன்னீர்வீசுங்கோ.

௭. சுத்தமாங்களைத் தேடுங்கோ - பச்சைப்
பந்தல்கள்நன்றாகப் போடுங்கோ.

௮. குலைவாழைக்கம்பங்கள் நாட்டுங்கோ - அதில்
மலர்மாலைத்தொங்கலைப் பூட்டுங்கோ.

௯. விளரிளங்கமுகுகள் நாட்டுங்கோ - மாந்
தளிர்களிற்றோரணங் கட்டுங்கோ.

௰. நன்னையபரேகுமி கூட்டுங்கோ - இள
மங்கையரேஜல மாடுங்கோ.

௰௧. மஞ்சள்முகங்கட் கொளுத்துங்கோ - நீல
அஞ்சனங்கண்கட் கழுத்துங்கோ.

௰௨. சித்திரச்சேலைகள் புனையுங்கோ - மிக
வெற்றிலைபாக்குகள் கனியுங்கோ.

௰௩. ஆடையாபரணங்கள் தரியுங்கோ - வாயை
மூடிக்கொண்டேமெள்ளச் சிரியுங்கோ.

௰௪. சாந்துசவ்வாதுகள் பூசுங்கோ - நம்ம
வேந்தன்பிரஸ்தாபங்கள் பேசுங்கோ.

௰௫. நுதல்கட்குத்திலகங்கள் போடுங்கோ - கொண்டைக்
கதிவிதமலர்களைச் சூடுங்கோ.

௰௬. மங்களச்சோபனங் கூறுங்கோ - தப்பி
தங்களைச்சடுதியிற் பாருங்கோ.

௰௭. முத்தாலாலாத்திசோ டிணையுங்கோ - வச்சி
ரத்தாலாலாத்தி சோடிணையுங்கோ.

௰௮. இன்னமுங்கேளுங்கோ ஜனங்களே - பூங்
கன்னல்கமுகுதென்ன வனங்களே.

௰௯. போலவும்பூப்பந்தல் போடுங்கோ - அதின்
கீழாகச்சிலைகள் சூடுங்கோ.

௨௰. தாதிகளேவெளியே வாருங்கோ - அவரவர்
வீதிகளைநன்றாய்த் தூறுங்கோ.

௨௧. திட்டுகள்வெட்டியே சருவுங்கோ - வீதிக்
கட்டுகளெங்கினும் நிரவுங்கோ.

௨௨. சகலசோடினையுடன் என்சொல்லைக் - கேட்டு
நகராமலிருந்திடும் பெண்களே.

௨௩. குங்குமபன்னீரைக்கரையுங்கோ - வீதிகள்
எங்கினுந்நன்றாக இறையுங்கோ.

௨௪. சல்லிப்பலகையாலே தட்டுங்கோ - நல்ல
கல்லுகள் அப்பாலே கொட்டுங்கோ.

௨௫. விண்ணுலாவியவேய்கள் நட்டுங்கோ - அதில்
நன்றாகத்தோரணங் கட்டுங்கோ.

௨௬. அன்பாகக்கோலங்கள் செய்யுங்கோ - சித்திரக்
கம்பாதிதீபங்கள் வையுங்கோ.

௨௭. தோரணப்பூமாலை சூட்டுங்கோ - எங்கும்
பூரணக்கும்பங்கள் நாட்டுங்கோ.

௨௮. கங்கைசூழும் நந்தாவனங்களே - போலச்
சிங்காரஞ்செய்யுங்கோ ஜனங்களே.

௨௯. நாடகசாலையின்னோர்களே - இப்போ
தேடுங்கோநான்சொல்லுமுசார்களே.

௩௰. தங்கசரிகைச்சேலை புனையுங்கோ - தேகம்
சிங்காரஞ்செய்யவே நினையுங்கோ



௩௧. ஆடையாபரணங்கள் பூட்டுங்கோ - நகர்
தேடரிதாமலர் சூட்டுங்கோ.

௩௨. சந்தனக்கலவைகள் பூசுங்கோ - நல்ல
சுந்தரவார்த்தைகள் பேசுங்கோ.

௩௩. கஸ்தூரித்திலகங்கள் வையுங்கோ - ராஜ
விஸ்தாரச்சோதனை செய்யுங்கோ.

௩௪. வேல்விழிகளில்மையைத் தீறுங்கோ - கைகால்
மானங்களைச்சீராய்ப் பாருங்கோ.

௩௫. தோல்விட்டுக்கோலடி சூரரே - கேளும்
நாலெட்டுவாத்தியக் காரரே.

௩௬. சட்டதிட்டங்களைப் பாருங்கோ - உங்கள்
கட்டுவர்க்கங்களை நேருங்கோ.

௩௭. மேளதாளங்கையிற் கொள்ளுங்கோ - எகத்
தாளங்கள்அப்பாலே தள்ளுங்கோ.

௩௮. மற்றையோர்கள்எல்லாரும் தேட்டமாய் - இப்போ
வருவீர்கள்சடுதியிற் கூட்டமாய்.

௩௯. அல்வேடங்களிற்சிந்தை வையுங்கோ - பூணூல்
குடுமியைத்தூஸ்தாகச் செய்யுங்கோ.

௪௰. பணிக்கையாப்ச்சோமன் உடுத்துங்கோ - ராசன்
வணக்கங்களைநன்றாய் நடத்துங்கோ.

௪௧. பட்சமுடனேநன்மை நண்ணுங்கோ - நன்றாய்
அட்சதைகளைமிகப் பண்ணுங்கோ.

௪௨. பந்தத்துக்காரரே கேளுங்கோ - கரும
ருந்துத்தமாசரே கேளுங்கோ.

௪௩. பகல்தீவட்டி பதினாயிரம் - பின்னும்
இராத்தீவட்டி யெண்பதாயிரம்

௪௪. அன்பதினாயிரம் பீரங்கி - யுடன்
எண்பதினாயிரம் சாரங்கி

௪௫. அறுநூறுதசவாண வரிசைகள் - பின்னும்
இருநூறுதசவாண பிருதுகள்.

௪௬. லட்சங்கதனைகள் துடிகளே - பின்னும்
லட்சத்தீராயிரம் வெடிகளே.

௪௭. மெச்சிஇவ்விதத்துடன் வீரரே - நீங்கள்
இச்சணம்வரவேணும் சூரரே;

௪௮. சூரனுத்திரவுதள்ளும் பேர்கட்டும் - கட்டியக்
காரனுத்திரவுதள்ளும் பேர்கட்டும்;

௪௯. சிவன்கோயிலிடித்திடும் பேர்கட்டும் - பின்னும்
அவனாயந்தொடுத்திடும் பேர்கட்டும்.

௫௰. தன்மங்கள்செய்திடும் பேர்கட்டும் - பின்னும்
தன்மங்கள்செய்யாத பேர்கட்டும்.

௫௧. வரும்நிந்தைகேளுங்கோ ஜனங்களே - கேட்டுப்
பெருமையாய்ச்செய்யுங்கோ ஜனங்களே.

௫௨. பலபலவிதமாகக் கண்டிப்போம் - அவர்
தலைகள்வெவ்வேறாகத் துண்டிப்போம்.

௫௩. விலங்கொள்ளும் நஞ்சவர்க்கூட்டுவோம் - ஆட்ட
விலங்கு[illegible] [illegible]கட்டுப்பூட்டுவோம்.

௫௪. கூறுகூறுயுடலைக் கொய்[illegible]வோம் - சிவனால்
தீராதஆக்கினை செய்குவோம்.

௫௪. [illegible]திதங்களைத்தள்ளு[illegible] [illegible]களே - எந்தன்
சொறபடி[illegible]கொள்ளும் சனங்களே.

௫௬. புவிபுகழும்வாணசூரனே - சூரன்
அவருக்குநான்கட்டியக்காரனே.

௫௭. பராக்குப்பராக்கு எச்சரிக்கை - கிடு
கிடதாக்கு தகு தகுத்தாம்
திகு திகு தாக்குத்தாம்
தகு தகு தேக்குத்தாம் தெய்.

| கட்டியன் வசனம். | சேவகர் வசனம் |
| --- | --- |
| அரேபியா மைசூர் பங்காருநாயுடு, | ஜீ, மகாராஜ். |
| ஜல்தியில் வாவோய், | வருகிறேன் வருகிறேனையா. |
| ஜல்தி ஆவ்ஜி, | ஆத்தும் ஆத்தும் மகாராஜ். |
| ஜல்திக ாவோய், | ஒஸ்தானு ஒஸ்தானுபாபு. |
| ஜல்தி பாரோ, | பத்திணியா பத்தினி. |
| கம்பியர்குன், | ஐஷால் கம்சார். |



சேவகன் வருகிற - தரு, இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சேவகன்வந்தானே - மைசூர் - சேவகன்வந்தானே.

அநுபல்லவி.

சேவகன்வந்தான் சிறப்பில்மிகுந்தான்
மாவலிவாணன்மகன் கொலுமுன்பாய். (சே)

சரணங்கள்.

௧. வெங்காயமாங்களைப் பொங்காகவெட்டித்தள்ளும்
முன்கோபக்காரன்மைசூர் பங்காருநாயுடனே. (சே)

௨. நாய்களைநாய்களை வாய்கெட்டுப்பேசியே
ஆயிரங்கையன்முன் ஜெயமகாராஜாவென்று. (சே)

௩. வாக்குகள்கடந்திடும் போக்கிரிகளில்வெகு
போக்கிரிபங்காரு நாய்க்கனென்றேசொல்லி. (சே)

விருத்தம்.

கட்டியனுமிவ்விதமாகக் கட்டியங்கூறக்
கனகமதிலொளிரும்வச்சிரக் கிரீடஞ்சூட்டி
மட்டடங்கொண்ணுதசொர்ணப் பணிகள்பூட்டி
மாதர்பலர்சோபன மங்களங்கள்பாட
அட்டதிசையோர்புகழத் தீபமேந்த
அந்தணர்சன்மார்க்கமுட னாசிகூற
அட்டர்களைத்தானடக்கும் வாணசூரன்
ஆஸ்தானங்கொலுவில்வந்து தோன்றினனே.

வசனம்.

அகோஇதப்படியென்றால், ராஜாதிராஜன் ராஜகம்பீரன் ராஜமார்த்தாண்டன் ராஜகோலாகலன் ராஜவிற்பன்னன் ராஜசம்பன்னன் ராஜசம்போகன் ராஜவொய்யாரன் சூராதிசூரன் சூரசம்மாரன் சூரசஞ்சாரன் சூரசாமார்த்தியன் சூரஸ்ரீவாசன் சூரசற்பாத்திரன் சூரசிங்காரன் சமருக்ககோரன் ஆயிரங்கையன [illegible] புத்[illegible]ழனியான வாணசூரமகாராஜன் கொலுவுக்குவருகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணசுரன் கொலுவுக்கு வருகிற திபதை.

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

கண்ணிகள்.

௧. காவலர்மகிழ்ந்து கூட
நாவலர் புகழ்ந்து பாட
பூவையர்குஞ்சங்கள் போடவே - கொலுவைநாடி
மாவலிமைந்தனும் வந்தானே.

௨. இந்திரைபோல்மாதர் சூழ்ந்து
வந்துசூரன்முன்பே தாழ்ந்து
செந்தளிர்தீபங்க ளேந்தவே - ஜயவாணாசூரன்
மந்திரிமார்சூழ வந்தானே.

௩. வாளாக்கர்குலங்கள் சூழ
தாளமத் தாளங்கள் மூள
தாள்களிற்குற்றத்தோர் வீழவே - ஜயவாணாசூரன்
யாளிபோலடர்ந்த தோன்றினன்

௪. அண்டகோளகை வரைக்கும்
தொண்டைதிறந்தே யுரைக்கும்
வண்டராகூதரை நொறுக்கும் - ஜயவாணாசூரன்
பிண்டங்கள்பிறிட வந்தானே.

௫. எழில்மகுடங்கள் புனைந்து
அழகெலரிபோலே முனிந்து
குளிர்மதிமுகங் கனிந்துமே - ஜயவாணாசூரன்
வளர்கதிர்போல்வந்து தோன்றினன்.

௬. நாரியர்களே தொடர்ந்து
சிருநடனம் புரிந்து
மேருபோலசைந்நசைந்துதான் - ஜயவாணாசூரன்
மாருதம்போல் வந்துதோன்றினன்.

௭. கணைகளும் கைக விலங்க
அணிகலன்களு மலுங்க
இணையிலாத்துகில் குலுங்கவே - ஜயவாணாசூரன்
துணிகாலும் வந்து தோன்றினன்.

௮. அடாபணைவருந்தரா போலும்
படவிமிசை யொருந் காலும்
கடகரித்தேர் பரிகள் இருபாலும்
அடாவாணாசூரன்வந்தானே.

போது விருத்தம்.

சதுர்முகனொயிலும்நாணச் சகலசம்பிரமாய்த்தானே
சதுமுளவாணாசூரன் கல்லனலங்கிடவேவந்து
மதனசிங்காதனத்தி லிருந்துமந்திரிமைபநோக்கி
கதிர்முடிச்சிரமசைத்துக் கசடறவுரைக்கின்றானே.



வசனம்.

அகோகேதப்படி யென்றால், சர்வ பிராணிகளையும் சிருட்டிக்கப்பட்ட பிரமதேவனும் காணும்படியாகத் தரித்த ஆடையாபரணங்களெல்லாம் குலுங்கும்படி, கட்டியக்காரன் கட்டியங்கூற, கணிகைமாதர் வெண்சாமரைகள் வீச, இராசாக்கள் வாய்பொத்திக் கைகட்டி நிற்க சகலசோடனைகளிலும் ஒன்றுகொன்று குறைவில்லாதபடி வாணாசுர மகாராஜன் கொலுச் சிங்காதனத்தில் இருந்துகொண்டு தன்னுடைய மந்திரி கும்பாண்டனைப்பார்த்துச் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசுரன் சொல் திபதை, இ-ம் பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. சத்தியந்தவறாத புத்திநிலைமையுள்ள மந்திரீ - இப்போ
தவறுமலென்சொல்லை விபரமாய்க்கேட்டிடும் மந்திரீ.

௨. மெத்தநான் சிவன்பாதம் பத்திப்பிரியனாக மந்திரீ - இப்போ
வேணுமென்றெனக்கின்பந் தோணுதானாக மந்திரீ.

௩. அம்பிகைநாதனை நம்பிக்கையாகநான் மந்திரீ - நல்ல
அருந்தவஞ்செய்துபல் வரம்பெற்றுவரமட்டும் மந்திரீ.

௪. தன்பொருள்பிறர்பொருள் என்றதகைமைவிட்டு மந்திரீ - நல்ல
தருமத்திற்கேதுவாய்த் தானிபாரங்கள்செய்யும் மந்திரீ.

௫. குற்றங்கொடுமை கொலைகளவாளரை மந்திரீ - அணிந்து
கொல்வதுபாவமென் றுள்ளத்தில்வைக்காதே மந்திரீ.

௬. பெற்றபுத்திரனேனும் வெட்டியெறிந்திடும் மந்திரீ - உளம்
பேதலித்தோர்க்குப் பாகெதியில்லைகாண் மந்திரீ.

௭. குற்றஞ்செய்திடுவோரைச் சற்றுமிஞ்சவிடாதே மந்திரீ-பெருங்
குண்டுணிசெயும்பேரைத் துண்டுதுண்டாய்வெட்டு மந்திரீ.

௮. வெற்றிக்குண்டாகும் சத்துருக்களைக்கொன்றால் மந்திரீ - நிலை
வேண்டாதேவஞ்சர்களை தீண்டாதேயொருக்காலும் மந்திரீ.

௯. பஞ்சபாதகருத்திரம் நெஞ்சினில்வைக்காதே மந்திரீ - இந்தப்
பாரிலேழைகள்முறை கேட்காமலிருக்காதே மந்திரீ.

௰. மிஞ்சியகோபங்கள் நஞ்சென்றெண்ணிக்கொள் மந்திரீ - இன்னு
மித்திரபேதமார்க்கம் சத்துருவென்றெண்ணிக்கொள் மந்திரீ.

௰௧. அந்தணர்க்கொருநாளும் நிந்தனைநினையாதே மந்திரீ - நொந்து
அகங்காட்டுமெளியார்க்கு முகங்காட்டாதிருக்காதே மந்திரீ.

௰உ. சந்தேகங்களேரம்பப் புத்தியில்வைக்காதே மந்திரீ - மீறுந்
தயிரியங்கொண்டெதிர்த்த வைரிகள்களைவெல்லும் மந்திரீ.

௰ங. தன்மந்தலைக்காக்கும் கன்மம்விளையாக்கும் மந்திரீ - வாய்மை
தப்பாமல்மனமகிழ்ந் திப்புவிதனையாளும் மந்திரீ.

௰ச. விருமன்கையச்சரம் சிதறியழிந்தாலும் மந்திரீ - லோக
விஸ்தாரமாம்நிலை வஸ்துவுமாகாதே மந்திரீ.

௰ரு. சத்தியமாய்ச்சிவன் பத்தியுமுத்தியு மந்திரீ - நிதந்
தலைகாக்கும்பொருளென்ற நிலைகண்டாசாளும் மந்திரீ.

௰சு. நித்தந்தேவாலயம் நந்தவனங்களை மந்திரீ - நீதான்
நேர்த்திதவறுமல் பார்த்துக்கேள்விசெய்யும் மந்திரீ.

௰எ. சதகோடிகரிபரி தண்டுதளகர்த்தர் மந்திரீ - இன்னும்
சதுரங்கசேனைகள் தவிராமல்வைத்தாளும் மந்திரீ.

௰அ. முதலுக்குமுதலாக நடுவுக்குநடுவாக மந்திரீ - வாய்ந்த
முறைமைகளறிந்திந்தத் தரணிதானுநீவாய் மந்திரீ.

வசனம்.

அகோவாரும்மந்திரீ! நான் ஈசுரனைநோக்கித் தவம்பண்ணி எனக்கு வேணுமான வரப்பிரசாதங்கள்பெற்று வருகிறவரைக்கும் என்னுடைய ராஜியத்திற்கு யாதொரு தீங்குகளும் அணுகாதபடி தருமமியானமாக நான் கட்டுப்பண்ணினபடியே இராஜிய பரிபாலனம்பண்ணிக்கொண்டிரும் மந்திரீ.

மந்திரிசொல் விருத்தம்.

தேவரீருரைத்தமார்க்கம் செவிகளுக்கமிர்தமாச்செ
பாவமேநீங்கிமேலாம் பாக்கியனானேன்சுவாமி
சாவில்லாவுனதுகீர்த்தி தனக்கொருகுறைவராமல்
ஆவலாய்நீதியோடும் அரசதுசெலுத்துவேனே.

வசனம்.

இராசாதிராஜ ராஜகம்பீர ராஜவுத்தண்ட ராஜமார்த்தாண்ட ராஜவிற்பன்ன இராஜசம்பன்ன இராஜகோலாகல இராஜ வெய்யார இராஜசிங்கார மாவலிச்சக்கரவர்த்தி புத்திரசிகாமணியான வாணாசுர மகாராஜனே; தேவரீர் சொன்ன வார்த்தை உசிதம், என்காதுகட்கு அமிர்தமாச்சுது, நான்செய்த பாவங்களெல்லாம் பறந்துபோச்சுது, நான் மகாபாக்கியவானுனேன், மேலும் தேவரீர் கீர்த்தி என்றென்றைக்கும் அழிவில்லாததல்லவோ, இந்த அழிவில்லாதகீர்த்திக்கு சேனுமாத்திரமும் பங்கம்வாரதபடி தீமை திருட்டுகள் நடவாதபடி தருமமானமாக இராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறேனையா சுவாமி வாணாசுரமகாராசனே.



பொது விருத்தம்.

மந்திரிதன்னைத்தானே மாநிலமாளச்செய்து
சிந்தையில்பகலும்ராவும் சிவபத்தியானமாக
ஐந்நூறுகரத்திற்றானே அமலலிங்கங்கள்காட்டி
ஐந்நூறுகைவில்வங்கொண் டருச்சனைபுரிகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், வாணாசுரமகாராசன் தன்னுடைய ராஜ்ஜியமெல்லாம் கும்பாண்டனாகிய மந்திரியை ஆளும்படியாகச்செய்து தான் தன்மனதிலே இரவும்பகலும் சிவத்தியானத்தை மறக்காதபடிக்கு ஐந்நூறுகையிலே லிங்கங்களை வைத்துக்கொண்டு ஐந்நூறுகையிலே வில்வங்களைவைத்துக்கொண்டு சிவபாத இருதயனாக அருச்சனைசெய்கிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசுரன் ஈஸ்பரரைத் துதித்தல், தீபதை-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

க. அரகரசிவசிவனே - எங்கும்
ஆனந்தமெய்ப்பொருளே - பின்னும்
திரிபுரதகனனே இரவும்பகலுனது
சேவடிநம்பினேனே.

உ. ஆதியுமந்தமில்லா - தான
அரும்பொருளாமுருவே - இப்போ
நீதுகளேதெந்தன் மீதிருந்தாலதைத்
தீர்த்துநீகாத்தருள்வாய்.

ங. [illegible]கங்கைகொன்றைதும்பை - நெடுஞ்
சடையிற்றரித்தவனே - இப்போ
சிசுவின்முன்றாய்வந்தாற் போலுன்றெண்டன்முன்பு
சேவினிலேவருவாய்.

ச. அண்டர்க்கரசளித்தவா - முன்னம்
ஆனைத்தோலையுரித்தவா - பின்னும்
கண்டத்திலரவப்பணி பூண்டவனேயென்னைக்
காப்பதுமுன்கடனே.

ரு. அம்பிகைநாயகனே - யெழில்
அனங்கனைக்காய்ந்தவனே - இப்போ
அன்பாதமேகதியல்லாமலேயெனக்
குறுதிவேறில்லையையா.

௬. தேகம்மனைவிமக்கள் - தேடும்
திரவியம்பக்துஜனம் - என்ற
ஆசைகளெல்லாங்கடந் தனைநம்புவார்க்
கபயம்கொடுத்தருள்வாய்.

௭. அஷ்டபோகமும்நித்திரை - மோகம்
அரசாங்கம்அன்னந்தண்ணீர் - இந்த
இஷ்டங்களைத்தானே விட்டுனைநம்புவார்க்
கின்பங்கொடுத்தருள்வாய்.

௮. எங்குந்நிறைந்தவனே - கால
யமனைச்சினந்தவனே - மூந்தும்
ஐங்கானைத்தந்த சங்கரனேயென்னை
அன்பாகக்காத்தருள்வாய்.

௯. தேவர்முனிவர்தொழுவே - வெள்ளைச்
சேவின்மேலிங்குவந்து - சக்ர
மாவலிசுதனனே னென்சிந்தைவேண்டிய
வரமதுதந்தருள்வாய்.

௰. அஞ்செழுத்தின்மந்திரம் - என்னெஞ்
செஞ்சில்நன்றாய்ப்பதிந்து - கொடும்
நஞ்சுண்டநாதரே யுன்பாததியானத்தை
நான்தினம்நம்பினேனே.

௰௧. ஆறிருகையனுக்கும் - மத
யானைமுகத்தோனுக்கும் - நல்ல
சீானதந்தைநீ யெனக்கிப்போ மோட்சந்தை
சேரமகிழ்ந்தருள்வாய்.

௰௨. செங்கோற்கடவுண்முதல் - மிகத்
தேடிக்காணுப்பொருளே - பின்னும்
அங்கத்திலந்தக்தி லட்சாத்திற்றேன்றும்
அமலனேயெனைக்காரையா.

போது விருத்தம்.

இந்தனன்மார்க்கமாக விசான்பதத்தைவேண்டி
அந்தியும்பகலும்நீங்கா தருச்சனைபுரியும்போது
சுந்தரச்சேவிலேறிச் சோணிதாபுரியைநோக்கி
சந்திரனைச்சடையில்சேர்த்த சங்கரன்தான்வந்தாரே.



வசனம்.

இந்தப்பிரகாரமாக வாணசூரன் ஐஞ்னூறுகையிலே லிங்கங்களை வைத்துக்கொண்டு ஐஞ்னூறுகையிலே வில்வமுங்கொண்டு இரவுபகல் ஓயாமல் அருச்சனைபண்ணிக்கொண்டிருக்கிறபோது அநேக சந்தோஷங்கொண்டு வெண்மைநிறம் பொருந்திய சேவின்மேலேறிக் கொண்டு ஈசான் வாணசூரனுக்கு முன்பாக வருகிற சாம்பிரதாயமெப்படியென்றால்.

ஈஸ்பரர் வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

ஈஸ்வரன்வந்தானே - விடையிலேறி
ஈஸ்வரன்வந்தானே.

அநுபல்லவி.

ஈஸ்வரன்வந்தானே யெழில்கைலைதுறந்து
பாசுபதஞ்செய்வோர்க்குப் பலிசுபாக்கியங்கொடுக்கும் (ஈஸ்)

சரணங்கள்.

க. விந்தைமதனை யெரித்தும் - அந்தவிதம்
சிந்தைதனிலே குறித்தும்
சந்தானைச்சனை தரித்தும் - தண்ணவிகொண்டு
அந்தமதாய்ச் சிரித்தும்
அந்தாதுந்துமி பந்தியடித்திட
செந்தமிழ்க்கவிஞர்கள் சந்தம்படித்திட (ஈஸ்)

உ. மாதவரே யொருபால் - சதுர்மறை
வேதியரே யொருபால்
[illegible]ரே யொருபால் - பொன்னுலகத்தின்
நாதனே[illegible] யொருபால்
மாதிருபால்வெண்சாமரைவீசிட
பூதகணத்தோர்ஜக தீசவென்றோதிட. (ஈஸ்)

௩. அம்பிகைகண் களிக்க - மலர்மாரி
யும்பர்களும் தெளிக்க
வெம்பிவாசுகி நெளிக்க - அஷ்டகஜங்கள்
பம்பரம்போல் சுளிக்க
செம்புத்திவதிரளை - சேங்கண்டனை நடத்தி,
பைம்பொன்பீதாம்பரப் - பட்டையிடையுடுத்தி (ஈஸ்)

ச. அசைவில்லா மண்ணாசையும் - உடலின்ற
விசைபோக்கும் பெண்ணாசையும் - பசியுமாற

குசியுட — னன்னாசையும் - பேய்களுடம்வேண்டும்
பசுமையாம் — பொன்னாசையும்
நிசமாகவிதையெல்லாம் - நீங்கிமாதவம்நச்சி
அசுராதிபனுஞ்செய்த - அருந்தவந்தனைமெச்சி. (ஈஸ்)

௫. அரவாபரண — மனுங்க - மந்திரவெண்ணீ
றுகமெல்லாந் — துலங்க
திரிசூலங்கையி — லிலங்க - காதினியிற்பூண்ட
திருவேடங்களுங்குலுங்க
புரிகொன்றையருகிற்று - புனைந்தசடையுமாட
அரகாசிவனேயென் - றண்டர்முனிவர்கூட. (ஈஸ்)

போது விருத்தம்.

தேவர்கள்துதிக்கஞானந் தெளிந்தவர்துதிக்கப்பாடும்
நாவலர்துதிக்கவேதம் நவிலுவர்துதிக்கவெள்ளைச்
சேவினிற்கதிக்கவந்த சிவன்பதமலர்கட்கன்பாய்
மாவலிதுதிக்கவந்த மைந்தனுந்துதிக்கின்றனே.

வசனம்.

இந்தப்பிரகார மாகத்தானேவந்த ஈஸ்வரனுடைய பாதாரவிந்தங்களை வாணாசூரன் தெளத்தியஞ் செய்யப்பட்ட சாம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசூரன் சொல் விருத்தம்.

அரகாசிவனேபோற்றி யானந்தப்பொருளேபோற்றி
சுரர்க்காசளித்தாய்போற்றி சூரனைக்கொன்றாய்போற்றி
முருகனைப்பயந்தாய்போற்றி முகுந்தன்மைத்துனனேபோற்றி
எருதின்மீதெனக்காய்வந்த விஸ்வராபோற்றிபோற்றி.

மான்மழுதரித்தாய்போற்றி மாரனைக்காய்ந்தாய்போற்றி
சேண்மதிச்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
பாம்பணிச்சிவனேபோற்றி பார்வதிநாயகாபோற்றி
நான்கணிற்பார்க்கவந்த நாதனேபோற்றிபோற்றி.

கடகரியுரிவைபோர்த்த கத்தனேபோற்றிபோற்றி
சுடலையில்நடனமாடும் சோதியேபோற்றிபோற்றி
வடமலைதன்னைவில்லாய் வளைத்தனைபோற்றிபோற்றி
இடர்தனைதீர்க்கவந்த ஈசனேபோற்றிபோற்றி.

வசனம்.

இந்தப்பிரகாரமாகத் துதித்த வாணாசூரனைப்பார்த்து ஈஸ்வரன் சொல்லுகிற சாம்பிரதாயம் எப்படியென்றால்.



ஈஸ்வரன் சொல் விருத்தம்.

சொந்தமாய்த்துதிக்கும்வாணா சூரனேசொல்லக்கேளாய்
சந்தமாய்நீதான்செய்த தவத்தினில்மகிழ்ச்சிகொண்டோம்
விந்தையாயினியுன்சிந்தை வேண்டியவரங்களெல்லாம்
தந்துகாத்திடுவோம்நீதான் தயிரியமுடன்சொல்வாயே.

வசனம்.

கேளாய் வாணாசூரமகாராசனே! நீயென்னுடைய பாதாரவிந்தந்தைவேண்டித் தவம்பண்ணினதுகண்டு மகாசந்தோஷ மடைந்தோம், இனி உன்னுடைய மனதுக்கு இச்சையாகிய வரங்களெல்லாம் நான் சந்தேகமில்லாமற் கொடுத்து இரக்ஷிக்கின்றேன், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, உனக்கு வேண்டியவரங்களைக் கேட்டுக்கொள்வாய் வாணாசூரனே.

போது வசனம்.

இப்படிச்சொன்ன ஈசுவரனைப்பார்த்து வாணாசுரன் கேட்கப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசூரன் சொல் விருத்தம்.

ஈசனேசொல்லக்கேளீர் எந்தன்மேற்கோபங்கொண்டு
கேசவன்வரினுமெந்தக் கெடுதிகள்வரினும்நீரும்
மாசிலாதிலங்குமுந்தம் மைந்தர்களுடனேவந்து
வாசமாயென்னைக்காக்க வரந்தரவேணும்ஸ்வாமி.

வசனம்.

அகோவாருமையா சுவாமி! கைலயங்கிரிவாசனே, அம்பிகைதேவி நாயகா, வல்லவர்க்கு வல்லவா, ஏழைபங்காளா, சூரசம்மாரனே, புலவர்கள்ரட்சகா, மழுவேந்துங்கையனே, சந்திரசேகரா, மெய்ஞ்ஞானக்கண்ணனே, சர்வலோகேசுரா, அடியேன் கோறிக்கையைச் சொல்லுகிறேன்; கேளும்சுவாமி அடியேன்பேரில் அடங்காக்கோபங்கொண்டு மகாவிஷ்ணுவந்து என்னுடன் யுத்தம்பண்ணுகிற காலத்திலே, நீரும் உம்முடைய புத்திரர்களும்வந்து காத்துரட்சிக்கவேணும் சுவாமி.

போது வசனம்.

இப்படிச்சொன்ன வாணாசுரனைப்பார்த்து ஈசுவரன் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

ஈஸ்வரன் சொல் விருத்தம்.

ஆக்கிரகந்தானேமூண்ட வசுரனேசொல்லக்கேளாய்
மூர்க்கமாயுன்மேல்மாலும் முனிந்துவந்திடும் நாளுன்னை
காக்கிறேனினிமேற்சிந்தை கலங்கவும்வேண்டாஞ்சொன்னேன்
சீக்கிரமாய்க்கைலைக்கிப்போ சென்றுநான்வருகின்றேனே.

வசனம்.

அகோகேளாய் வாணாசுரனே! உன்மேல் மகாவிஷ்ணு அதிக கோபங்கொண்டு உயுத்தம்பண்ண வேணுமென்று வருங்காலத்திலே நானும் எனதுமக்களும்வந்து உன்னைக்காத்து ரட்சிக்கிறோம், நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை, சுகமாயிரு; நான் கைலயங்கிரிக்குப்போய்வருகிறேன் வாணாசுரனே.

வாணாசுரன் வசனம்.

அப்படியே போய்வாரும் சுவாமி.

போது விருத்தம்.

ஈசனார்கைலைக்கன்பா யேகினார்அப்பால்வாணன்
தேசமேயாண்டுகொண்டு க்ஷேமமாய்வாழுநாளில்
நேசமாய்ப்பின்னும்வேறோர் நினைவினால்நகரைநீங்கி
வாசமாய்க்கைலைக்கன்பாய் வாணனும்வந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், ஈசுவரன் கைலாசகிரிக்குப் போனபிற்பாடு; பின்னும் வாணாசூரன் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளையிலே, பின்னும் ஓர் நினைவினாலே கைலயங்கிரியை நோக்கி நடக்கிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணன் கைலைக்குப்போகிற-தரு, இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

கண்ணிகள்.

க. ஆலகாலவிஷச்சேறுகள்கக்கியே
அஷ்டமாநாகங்க ளஞ்சவே
சூலானயானைகள் சூலுங்கரைந்திடத்
துஷ்டமிருகங்கள் பல்கெஞ்சவே
மேலானமேருவைப்போலவிளங்கிய
வெற்பினிற் கங்குல்கள் துஞ்சவே
காலனுமஞ்சிட வாணாசூரன்றானே
கைலயங்கிரி நோக்கி நடந்திட்டான்.

உ. அண்டர்களெல்லாம் பயந்தோடவுந்தானே
அஷ்டகசங்கள் மெய்வாடவே
பெண்டுகள்கர்ப்பங் கரைந்துவிழுந்திடப்
பூதபைசாசங்க ளோடவே
மண்டலமெல்லா மதிர்ந்தோடவுந்தானே
வாளரக்கர் வாய்மூடவே



கண்டாகுண்டிக்காரன் வாணாசூரன்றானே
கைலயங்கிரி நாடிநடந்திட்டான்.

௩. சோமனைச்சடையிற் றரித்தவனேஞான
சுடலைநடனனே நமோநமோ
மாமறையோர்புகழ் வேதவிநோதனே
மாவின்மைத்துனனே நமோநமோ
சேமங்கொடுத்திடுங் கௌரிகல்யாணனே
திரிபுரதகனனே நமோநமோ
காமதகனனே நமவென்றுசூரனும்
கைலயங்கிரிநோக்கி நடந்திட்டான்.

௪. வெய்யோனிட சுடர்மங்கவேதலை
மீதிற்கிரீட சுடர்மூடவே
மெய்யெலாவெண்ணீ றிலங்கவேமுக
வேர்வைகள் மாரிபோல்வீழவே
அய்யஅப்பாவென்று கிரகணுதிகள்
அஞ்சிக்கூடியடி தாழவே
கையாயிரம்வீசி வாணாசூரன்றானே
கைலயங்கிரிநோக்கி நடந்திட்டான்.

வசனம்.

இந்தப்பிரகாரம் வாணாசுரன் கைலயங்கிரிவந்து ஈசுவரனுடைய பாதாரவிந்தங்களைத் தெளத்தியஞ் செய்யப்பட்ட சம்பிரதாய மெப்படியென்றால்.

வாணாசுரன் துதி விருத்தம்.

நாரிபங்காளாபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி
சூரசம்மாராபோற்றி சூலபாணியனேபோற்றி
மேருவில்லவனேபோற்றி வெற்றிவேலவனேபோற்றி
நீரணிச்சிவனேபோற்றி நித்தனேபோற்றிபோற்றி.

இறைவனேபோற்றிபோற்றி ஈசனேபோற்றிபோற்றி
கறையணிகண்டாபோற்றி காலனைக்காய்ந்தாய்போற்றி
பிறையணிச்சடையாய்போற்றி பெண்ணிடப்பாகாபோற்றி
வெறுத்திடாதென்னைக்காக்கும் விமலனேபோற்றிபோற்றி.

வசனம்.

இந்தப்பிரகாரம் தெளத்தியம் செய்யப்பட்ட வாணாசுரனை ஈசுவரன் பார்த்துச் சொல்லப்பட்ட சம்பிரதாயம் எப்படி என்றால்.

ஈஸ்வரன் சொல் விருத்தம்.

அந்தமேமிகுந்தசோணி தாபுரிக்கரசேகேளாய்
எந்தன்மேற்பக்திகொண்டென் னிருப்பிடந்தன்னைத்தேடி.
பந்திசேர்தனங்கள்விட்டுன் பதியைவிட்டொருவனாக
வந்தகாரியமேதிப்போ வரிசையாயுரைசெய்வாயே.

வசனம்.

அகோகேளாய் வாணாசுரனே! நீயெனது திருவடிகளில் பத்தி வைராக்கியம் வைத்து நானிருக்கப்பட்ட இடந்தேடிவந்தகாரியம் தெரியப்படுத்தும்பிள்ளாய் வாணாசுரனே.

போது விருத்தம்.

இன்னகாரியமென்றென்றே டியம்பிடென்றினிதுகேட்கச்
சொன்னவீஸ்வரன்றன்றாளின் துகள்தனைத்துதித்துக்கொண்டு
பொன்னவன்சுதன்றன்பாலன் புத்திரன்புத்திரனானோன்
தன்னிடமனதிலுள்ள சஞ்சலமுரைக்கின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரஞ் சொன்ன ஈஸ்வரனைப்பார்த்து வாணாசுரன் கேட்கப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசுரன்ஈஸ்வரரிடம்சொல் தீபதை-இ-ம்-நாதநாமக்கிரிகை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. அரகரசிவசிவ அரவணியிறைவனே
அமரர்துயரந்தீர்த்தோனே சிவனே
திரிபுரதகனனே பரிபுரசரணனே
திரிசூலாயுதமுடையோனே சிவனே.

உ. உந்தன்சமுகந்தேடி வந்திட்டசெய்திதன்னை
ஒளியாமற்சொல்கிறேன் கேளையா சிவனே
சந்தேகமில்லாம லெந்தனுடனெதிர்க்கச்
சாமர்த்தியமொருவ ரில்லாததினால் சிவனே.

ங. ஆயிரங்கைகளிலும் ஓயாமற்தேகத்திலும்
அடங்காத்திமிர முண்டாச்சுதே சிவனே
வாயாயிரத்தோன்சொல்ல வோயாதடர்ந்ததிமிர்
வாதைபொருக்க முடியாததினால் சிவனே.

ச. மட்டுக்கடங்காதான முட்டத்திமிரொடுங்க
மந்திரதந்திர மில்லையே சிவனே
அட்டிசெய்யாதென்கைக்குட் பட்டதிமிரந்தீர
அவிழ்தம்சொல்வாரைக் காணேமே சிவனே.



ரு. அண்டமுகடுங்கிடுகிடென் றதிரவே
அமரர்களெல்லாம் பயந்தோடவே சிவனே
முண்டங்கள்குவிந்திடக் கவந்தங்கள்கூத்தாட
மூட்டப்பசாசுகள் நடமாடவே சிவனே.

கூ. மத்துப்பயப்படாமல் எதிர்த்துச்சண்டைகள்செய்யும்
வல்லோர்களைத்தான் தரவேணுமே சிவனே
கதித்துப்போர்செய்யுமெந்த விதத்தினும்கைதிமிரக்
கஷ்டத்தைதீர்த்துக் கொள்வேனையா சிவனே.

எ. போட்டிபாராமற்செய்யும் தாஷ்டிகரைத்தேடி
போவோமென்றெந்தன் சிந்தைகோருதே சிவனே
நீட்டவொட்டாமனுங்கை சேட்டைமிஞ்சினதாலே
நித்திராதேவியும்பகைத்தாளையா சிவனே.

அ. வடவாக்கினிமீதெந்தன் உடலானதைத்தான்வைத்து
வாட்டினுந்தீராத்திமிரந்தீர்க்கவே சிவனே
திடமாயென்றேடெதிர்த்தென் னுடல்தினவுதீர்க்கவே
திடவாளிகளைத் தரவேணுமே சிவனே.

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி பரமேசுவரா! அடியேன்தேகத்தில்திமிரம்மிஞ்சிவிட்டபடியினாலே அதினால் உபத்திரவப் பட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனதினால் என்னுடனே சண்டைசெய்யத்தக்க எதிராளிகளைத் தரவேணுமையா சுவாமி.

போது விருத்தம்.

கைகளாயிரத்தோன் சொல்லைக் காதிலேற் றதிசயித்து
தைரியமிவன்போல் யார்க்குந் தானியிலுண்டோவென்று
சைலமாய்ச் சிரித்தே யீசன்றன்னுளே தானாராய்ந்து
வைணமாய்ப் புகழ்ந்தே யன்பாய் வாணனுக் குரைக்கின்றாரே.

வசனம்.

இந்தப் பிரகாரமாக லோகாதிலோகங்களிலே யிருக்கப்பட்டவர்கள் திமிரம் பொறுக்க முடியாதென்றும், எதிராளிகளைத் தரவேணுமென்றும் வரங்கேட்கிற அதிசயமுமுண்டோடா? என்று ஈசுவரன் மகிழ்வடைந்து வாணாசுரனைப் பார்த்துச் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படி யென்றால்.

விருத்தம்.

செகமெலாம்மாலுக்கிந்தோன் சேயனேசொல்லைக்கேளாய்
மிகவுமேநீதான்போரின் மீதிலேவிருப்பங்கொண்டாய்

சிகரமாங்கொடிதானற்றுச் சிதறியேபாரில்விழுந்தால்
பகைவர்தான்வந்தேயுந்தன் பராக்ரமமொடுக்குவாரே.

வசனம்.

கேளாய் வாணாசுரனே! உனக்கு அகோரமான சண்டை செய்கிறதற்கு இச்சையுண்டாயிருக்குமானால் உன்னுடைய அரண்மனைவாசலில் விளங்கிக்கொண்டிருக்கிற சிகரக்கொடியானது அறுந்து உன் முன்னாலே விழுந்ததானால் உடனே உன்பராக்கிரமத்தை அடக்கும்படியான அகோரயுத்தஞ்செய்கிற எதிராளிகள்வந்து யுத்தஞ்செய்வார்கள். நீ உன் பட்டணத்திற்குப்போகக்கடவாய் வாணாசுரனே!

வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

போது விருத்தம்.

இன்னமார்க்கமதாயீச னியம்பியேபோய்வாவென்னச்
சொர்ணமாரிரதமேறிச் சோணிதாபுரிக்குவந்து
மன்னரெல்லோரும்போற்ற மடங்கலாசனத்திருந்தான்
முன்னதாய்த்துவசமாண்டாய் முறிந்துதான்விழுந்ததன்றே.

வசனம்.

அகோதெப்படியென்றால், வாணாசுரமகாராசன் கைலாசத்திலிருந்துவந்து சோணிதாபுரத்திலே கட்டியக்காரன் கட்டியங்கூற, இராசாதிராசாக்கள் கைகட்டிக்கொண்டுநிற்க, முப்பத்திரண்டுவகை மேளவாத்தியங்கள் முழங்க, கணிகைமாதர் கவரி குஞ்சங்கள் வீசக், கொலுசிங்காதனத்திலே யிருக்கிறபோது சிகரக்கொடியானது அறுந்துவிழ்கிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

சிகரக்கொடி அற்றுவிழும் தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

சிகரக்கொடி துணிந்து விழுந்ததே - பாரில்
சிகரக்கொடி துணிந்து விழுந்ததே.

அநுபல்லவி.

சிகரக்கொடி துணிந்து சோணிதாபுரிதன்னில்
ஜனத்தேவர்களுள்ளங் கலங்கச்சூரன்முன்பாக (சிக)

சரணங்கள்.

௧. ஆதித்தனுய்ந்திதை யண்ணாந்துபார்க்கவே
பூதப்பைசாசுகள் புகழ்ந்தின்பமேற்கவே (சிகர)

௨. இனத்துவீரருக்கெல்லாம் சினத்துக்கண் துடிக்கவே
கனத்தசேனைகட்கெல்லாம் அனர்த்தம்வந்தடுக்கவே (சிகர)

௩. ஆயிரங்கர்ச்சூரன் அகத்தியிரதுபோக
வாயாற்சங்கரன்சொன்ன வார்த்தைநிச்சயமாக (சிகர)



போது விருத்தம்.

பாவில்லாதெவையுந்தூள்செய் பதினெட்டாயுதங்களாலும்
அறவொண்ணாத்துவசந்தானே அற்றுமுன்விழக்கண்டே
செருவமேமிகுத்தோனாகிக் கெடுமதிகண்தோன்றாமல்
மருவிலாதுற்றசெய்தி மந்திரியோடுரைக்கின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், பதினெட்டுவிதமான ஆயுதங்களாலும் எந்தமந்திரங்களாலும் அற்றுவிழ்த்தக்கூடாத சிகரக்கொடியானது அறுந்து விழ்ந்ததைக்கண்டு கருவமிஞ்சினவனாய் கெடுமதிகண்ணுக்குத்தோற்றாமல் மந்திரியைப்பார்த்து வாணாசுரன் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

வாணாசுரன் மந்திரியிடம் சொல் திபதை.

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

கண்ணிகள்.

௧. உற்றசேதியைச்சொல்வேன் சித்தமிரங்கிநீதான்
உண்மையாய்க்கேளும் மந்திரீ
கற்றவர்புகழ்ந்தோதும் அத்தனருள்விளங்கும்
கைலைக்குப்போனேன் மந்திரீ

௨. சகலஜீவனைக்காக்கும் சகதீசனாகிய
சாமியைக்கண்டேன் மந்திரீ
சுகமாகவேசாமி பாதநாளுக்கன்பாய்
தோத்திரஞ்செய்தேன் மந்திரீ
வந்தகாரியஞ்சொல்லென் றெந்தன்முகத்தைநோக்கி
வரிசையாய்க்கேட்டார் மந்திரீ
சொந்தமாய்மனமகிழ்ந் தெந்தனினைவைநான்
சொல்லத்துணிந்தேன் மந்திரீ

௩. தீராதிமிரந்தான் றாருய்ப்பருத்துமெய்யில்
செறிந்ததென்றுரைத்தேன் மந்திரீ
சாருப்பிழிந்தபோதுந் தீராத்திமிரவாதை
தாளேனென்றுரைத்தேன் மந்திரீ

௪. பாவத்திமிரத்தாலே நாவிற்கறுசுவைகள்
பகையாச்சென்றேன் மந்திரீ
கோபத்திமிரத்தாலே ராவும்பகலுந்நித்திரை
குடிபோச்சென்றேன் மந்திரீ

௬. அஷ்டகெஜங்களோடு முட்டும்போரினுக்கிச்சை
ஆனதென்றுரைத்தேன் மந்திரி
வெட்டுங்குத்துக்குஞ்சாகாக் கெட்டிக்காரரைத்தா
வேணுமென்றுரைத்தேன் மந்திரி

௭. கொட்டுமுழக்குநம்ம பட்டணத்திற்சிகரக்
கொடியற்றுவிழுந்தால் மந்திரி
மட்டில்லாத்திறவஞ்சத் துஷ்டர்களுனைத்தேடி
வருவாரென்றார்காண் மந்திரி

௮. சொந்தத்துடனேதானே நந்திவாகனன்சொன்ன
சொற்பொய்போகாமல் மந்திரி
விந்தைச்சிகரக்கொடி யெந்தன்முன்பேயற்று
விழுந்ததுபாரும் மந்திரி

௯. கொத்துச்சிகரக்கொடி யற்றுவிழ்ந்திடச்சண்டை
குறுகுவதரிது மந்திரி
சத்திராயகன்பாதம் பத்தியுடனேநாமும்
சாக்கிரதையாயிருப்போம் மந்திரி

**வாணசுரன் சொல் விருத்தம்.**

இறைவன்முனுரைத்தவிதமெந்தன்முன்றுவசமற்று
தரையின்மேல்விழ்ந்ததிப்போ தடைபடாச்சமர்தான்வாய்க்கும்
அறைகுவேன்மேலும்நாமும் அசட்டையாயிருக்கொணாது
குறைவிலாச்சேனையெல்லாம் கூர்ந்தணிவகுப்பாய்மந்திரி

**வசனம்.**

அகோவாரும் மந்திரி ! முன்னாலே ஈசுரன்சொன்ன பிரகாரமாக சிகரக்கொடி அறுந்து என்முன்னாலே விழுந்ததல்லவா! இனி நமக்கு அடங்காத சண்டைவந்து வாய்க்கும், நாம் அசட்டையா யிருக்கக்கூடாது, நமது சதுரங்கசேனைகளை அணிவகுந்துக்கொண்டு ஜாக்கிரதையா யிரும் மந்திரி.

**மந்திரி வசனம்.**

அப்படியே யிருக்கிறேனையா மகாராஜனே.

**போது விருத்தம்.**

அடர்ந்திடும் தளத்தையெல்லாம் அணிவகுத்திடுவாயென்று
திடந்தனைமந்திரிக்கோதித் தீதிலாச்சூரர்போற்றும்
மடந்தையர்கவரிவீச மாளிகைக்கேகினான்பின்
நடந்திடுங்கதைவிர்த்தாந்தம் நல்முட்டனுரைசெய்வேனே.



**வசனம்.**

அதெப்படியென்றால், மந்திரியுடனே தன்னுடைய சேனைகளை அணிவகுக்கும்படி கட்டளையிட்டு அநேக அசுரர்கள் சூழ்ந்து துதித்துவர கணிகை மாதர் சாமரைவீச வாத்திய முழங்கத் தன்னுடைய அரண்மனைக்கு வாணாசுரன்போயிருந்தான். அப்பால் நடந்த கதைவிபரம் சொல்லுவோ மென்றவாறு.

**உடாங்கனை வருகிற விருத்தம்.**

இந்தமாநிலத்தில்வாண னீந்திடும்மகள்தான்மிக்க
சுந்தரம்பொருந்துந்தெய்வத் தோகையர்திலகமானாள்
தந்தைதாய்மனையைநீங்கித் தனதுமாளிகையைநோக்கி
சந்திரவதனமாதுடாங்கனை தான்வந்தாளே.

**வசனம்.**

இந்தப்பிரகாரம் வாணாசுரன் மகளாகிய உடாங்கனை யானவள் தாய் தந்தையின் அரண்மனையிலிருந்து தனது சொந்தமாளிகைக்கு வருகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

**உடாங்கனைவருகிற - தரு, இ-ம்-மத்யமாவதி-ஆதிதாளம்.**

**பல்லவி.**

தளினவுடாங்கனை வந்தாளே பளீர் பளீர் பளீரென
தளினவுடாங்கனை வந்தாளே.

**அநுபல்லவி.**

முழுமதிமுகச்சுடர் தள தள தளவென்ன
நகினகையினொளி பள பள பளவென்ன (தளின)

**சரணங்கள்.**

௧. நவனுதுகூரவிசை சல சல சல வென
இலகியகரவளை கல கல கல வென (தளின)

௨. நாற்கலர்மலர்வனத சீர் கம கம வென
பேர்பெறுகலைவயின் சார் குமு குமு வென (தளின)

௩. தங்கவடங்களெலாம் குலுங்கிச் சலீரென
தோங்குசதங்கைபல அலுங்கிக் கலீரென (தளின)

௪. முகநகையெழிலது நகு நகு நகுவென
செகம்விலையிடுந்துகில் நெகு நெகு நெகுவென (தளின)

௫. புவிபுகழ்பாங்கியர் கவரிகள் வீசவே
நவமணியிவளெனத் தவர்களும்பேசவே (தளின)

௬. ஒண்டொடிவிணைகைக் கொண்டுநடத்திட
கண்டிடுவோர்மையல் கொண்டுதொடர்ந்திட (தனின)
௭. சோணிதமாநகர் துரைமக்கள் தரிசனம்
காணவுமரிதெனக் களிகூரும்வாழ்த்திட (தனின)

போது விருத்தம்.

ஆழிசூழுலகில்ரூபத்தரம்மை மேனகையைவெல்வாள்
வாளிநேர்கண்ணாள்தன்பொன் மாளிகைக்கண்பாயெய்தி
தூளியாமெத்தைமீதில் சுகமுடனிருந்துகொண்டு
தோழிமார்தம்மைப்பார்த்துச் சுருக்கமாயுரைக்கின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனையானவள் வந்து கனகசொர்ணமண்டபக் கொலுவிலிருந்துகொண்டு தோழிமார்களைப் பார்த்துச் சொல்லுகிற சாம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை சொல் விருத்தம்.

தந்திரவல்லி கௌனவல்லி வச்சிரகாந்தி
சாசாதியோகரத்ன சமுகராணி
மந்திரகாணிமோகனஸ்ரீ பஞ்சபாணி
மதனவல்லி நாகரத்ன வதனயாளி
பந்தடாரிநீலவர்னப்பரிமளாங்கி
பாங்கியரேயானுரைக்கப் பண்பாய்க்கேளும்
காந்தனிடபிராணசகி சித்ரரேகை
இங்குவரத்தானழைப்பீரிப்போதானே.

வசனம்.

அடி தந்திரவல்லி, கவுனவல்லி, அடி வச்சிரகாந்தி, அடி சாசாதி, அடி யோகராணி, அடி சமுகராணி, அடி மந்திரராணி, அடி மோகனகலியாணி, அடி பஞ்சபாணி, அடி மதனவல்லி, அடி நாகரத்னி, அடி வதனயாளி, அடி பந்தடாரி, அடி நீலவர்னி, அடி பரிமளாங்கி, அடி வாருங்கோ தாதிப்பெண்களே ! என்னுடைய பிராணசகியாகிய சித்திரரேகையை என்சமுகத்துக்கு இப்போ அதிகசீக்கிரமாய் அழைத்துவாருங்கள் தாதிப்பெண்களே.

தோழிகள் வசனம்.

அப்படியே மகாபாக்கியம் அம்மாதாயே.

போது வசனம்.

அச்சமயத்திலே பாங்கிமார்கள்போய் சித்திரரேகையைக்கண்டு சொல்லப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால்.



பாங்கிகள் சொல் விருத்தம்.

மன்னரேபுகழ்ந்துவாழ்த்தும் மந்திரிகும்பாண்டன்பெற்ற
சொன்னமேகேளாய்வாணா சூரன்தானளித்தசெம்மல்
உன்னையேயழைத்துக்கொண்டு ஓட்டமாய்வரவேசொன்னாள்
அன்னையேநீதானிப்போ தங்கெழுந்தருளுவாயே.

வசனம்.

அகோசரணஞ்சரணமம்மா சித்திரரேகாய் ! நமக்கெல்லாம் அரசனுகிய வாணாசுரமகாராஜன் புத்திரிகாரத்தினமாகிய உடாங்கனையம்மாள் தன்னுடைய சமுகத்திற்கு உம்மை அதிக சீக்கிரம் அழைத்துக்கொண்டு வரச்சொன்னாள் வாருமம்மா தாயே.

சித்திரரேகை வசனம்.

அப்படியே வருகிறேன் தாதிமார்களே !

போது விருத்தம்.

ஓட்டமாய்வரச்சொன்னாளென் றுரைத்தபாங்கியர்களோடும்
வாட்டமில்லாதவச்ர மான்றபொற்கலன்கள்பூண்டு
நாட்டிகமிருந்தமாது டாங்கனைசமுகநாடித்
தேட்டமாய்ரதியும்நாணச் சித்ரரேகையும்வந்தாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால், அழைக்கவந்த பாங்கிப்பெண்களைக் கூட்டிக்கொண்டு சொர்ணாபரணங்களையும் தரித்துக்கொண்டு அனேக வேடிக்கை விநோதமாக மதனும் ரதியும் நாணும்படியாக உடாங்கனையின் சமுகந்தேடி சித்திரரேகையும் வருகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

...மோகனம்-அடதாளம்.

பல்லவி.

சித்திரரேகை வந்தாளே - இந்திரஜால
சித்திரரேகை வந்தாளே.

அநுபல்லவி.

சித்திரரேகைவந்தாள் விந்தாரங்களைப் பேசி
பத்தரைமாற்றுத்தங்கச் சித்ரப்பதுமைபோல (சித்)

சரணங்கள்.

௧. பல்லுஞ்சிவந்தகச்சருள் மெல்லமுகமும் வேர்க்க
செல்லுங்காற்சதங்கைகள் கல்லுக்கல்லென்றார்ப்ப (சித்)

உ. சித்திரப்பணிதிபோன்ற நத்தப்புல்லாக் கிலங்க
கொத்துச்சரங்களொடு முத்துவடங் குலுங்க (சித்)

௩. குலுக்கிக்குலுக்கியுடலை யலுக்கிக்குரலைத் தீட்டி
அலுக்கிப்பிலுக்கிரதியை மெலுக்கில்வெல்லுங்கண்ணாட்டி (சித்)

௪. இந்திரலோகம்புகழும் வித்தைமிகவும் பெற்றாள்
அந்திரமாகவிஞ்சை மந்திரதந்திரங் கற்றாள் (சித்)

௫. ஒளிகொள்திலகந்தீட்டி களினப்பழமை பேசி
குழலின்மலரைச்சூட்டி களபக்கலவை பூசி (சித்)

௬. சரிகைத்துகில்குலுங்க இருபொற்றன மிலங்க
சுரிகைக்குழலலுங்கச் சுருமதி மயங்க (சித்)

௭. சோணிதபுரிமந்திரி பேணும்மகள்நா னென்று
வாணாசுரன்மகட்குப் பிராணசகிநா னென்று (சித்)

சித்திரரேகை சொல் விருத்தம்.

அன்னையேசரணமம்மா ஆயிழைசரணமம்மா
என்னையேமறந்திடாத வந்திழைசரணமம்மா
உன்னையேபாதுகாக்கும் உத்தமப்பாங்கிமார்கள்
தன்னையேகாக்குமுந்தன் றாளிணைசரணமம்மா.

வசனம்.

அகோ சரணஞ்சரணமம்மா இராஜநாயகியே, யோகரத்தினமே, சந்திரவதனியே, நாகமாணிக்கமே, வர்ன்னமாமயிலே, இளங்கவரிமானே, வாலவோவியமே, வரிகிலக்குயிலே என்பேரிலே கிருபாகடாக்ஷம்வைத்து இரட்சிக்கப்பட்ட பாங்கியர்க்கரசே, வாணாசுரன் குலக்கொழுந்தே உடாங்கனையே! உன்னுடைய பாதாரவிந்தத்திற்குச் சரணஞ்சரணமம்மாதாயே.

போது வசனம்.

இந்தப்பிரகாரமாக வாழ்த்தி நிற்கப்பட்ட சித்திரரேகையைப் பார்த்து உடாங்கனைகேட்கப்பட்ட சம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை சொல் விருத்தம்.

நேமமேலபடர்ந்தஸ்தன்யச் சித்திரரேகாய்கேளாய்
நேமமாயுனதுவீட்டில் நீசென்றுசாதமுண்டு
ஏமமாயினும்ஓர்சோலி யிருக்கினும்நில்லாயின்று
தாமிதஞ்செய்தவாறு தடையிலாதுரைத்திடாயே.

வசனம்.

அகோகேளும் பெண்ணே! எனது பிராணசகியாகிய சித்திரரேகாய், நீ அனுதினமும் உன்னுடைய வீட்டுக்குப்போனால் போன



தட்சணமே அநேக நியமத்தோடு போஜனஞ்செய்து தாம்பூலமுங்கொண்டு எ னை அநுவலிருந்தபோதிலும் அர்த்தராத்திரி கேமமாயினும் சிறிது தாமதஞ்செய்யாமல் இங்கேவரப்பட்டவள் இன்றைய தினம் பாங் மார்கள்வந்து அழைக்கும்வரைக்கும் தாமதஞ்செய்த காரணம் எ தும் தெரியச்சொல்லும் பெண்ணே சித்திரரேகா.

சித்திரரேகை வசனம்.

அப்படியே சொல்லுகிறேனம்மாதாயே.

விருத்தம்.

மந்திரித்தனமில்லாத மன்னர்கள்கெடுவாரென்றும்
தந்திரவுபாயமில்லாத் தாதிமார்கெடுவாரென்றும்
தந்தைதாய்கதைதானென்று சாற்றினாரினாற்பஞ்ச
தந்திரக்கதைபடித்தேன் றாமதமாச்சுதம்மா.

வசனம்.

அகோகேளுமம்மாதாயே! இவ்வுலகத்திலே மந்திரித்தனமில்லாத ராசாக்களுக்கும், சதுர்விதஉபாயமில்லாத பாங்கிமார்களுக்கும் எவ்விதத்திலும் கெடுதிகள்வந்து நேருமென்பதாக என்னுடைய தாய்தகப்பனும் ஓர் கதை சொன்னார்கள். அக்கதை முடியும்வரைக்கும் நான் பயபத்தியாகக்கேட்டு சந்தோஷமாகி உபாயதந்திரங்கள் தெரிவதற்கு எந்தக்கதை படிக்கலாமென்று தாய்தந்தைகளைக் கேட்டேன், பஞ்சதந்திரக்கதை படித்தால் வருமென்று சொன்னார்கள், ஆனதினால் நான் பஞ்சதந்திரக்கதையைப் படித்துக்கொண்டிருந்ததினாலே இன்றையத்தினம் தாமதமாச்சுதம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

நல்லகாரியமாச்சுது இந்த சொர்னக்கட்டிலின்மீதிலே இருக்கக்கடவாய் சித்திரரேகாய்.

சித்திரரே…சனம்.

அப்படியே இருக்கிறேனம்மா தாயே.

உடாங்கனை சொல் ஆடி சிங்காரபத்தியம்.

சகிசித்திரரேகையே யென்பிராணநாயகி
சதிர்கட்டுவைப்பமா சதிர்பார்ப்பமா
சாஸ்திரவேதங்களும் புராணகாவியங்களும்
தத்துவமொடுகலைகள் சாதிப்பமா
ககனத்துலாவிடுங் கொடிசாதிப்பமா.
கரிபரிரதவாரி கள்செய்வமா
கத்திசாதனைவில்சாதனை கள்செய்வமா
காருடத்தொழில்களை கருதலாமா

மிகுபத்தியோடெசங்கரி பூசைசெய்வமா
மிகருத்ரவீணையே மீட்டலாமா
மேலானசங்கீதவித்தை சாதிப்பமா
வேட்டைமார்க்கங்களை விரும்பலாமா
அகிலத்துளோரெலாம்புகழ் நகைதரிப்பமா
ஆடைகள்புனைந்தபுனு கணியலாமா
அழகுபூஞ்சோலைசேர்ந் தெழில்மலர்பறிப்பமா
அம்மலர்புனைந்துபந் தாடலாமா

பந்தயமொழிந் திருவர் பகடை யாடல்
அந்தமுடன் விந்தையொடு மாட லாமா
எந்தவகை செய்வமடி,யிந்திர சால
மந்த்ரமொடு விந்தைபுணர் மந்திரி மகளே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே, யென் பிராணசகியாகிய சித்திரரேகாய்! நாமிருவரும் இன்றையத்தினம் பொழுதுபோக்க ஒருகாரியமும் காணேம், ஆகையினாலே நாடகசாலைப் பெண்களை அழைப்பித்து நடனவுல்லாச சதுர் கட்டிவைத்து வேடிக்கை பார்ப்போமா, வேதசாஸ்திரங்களைச் சோதிப்போமா, புராண காவியங்கள் படிப்போமா, தத்துவங்களை ஆராய்வோமா, கலைஞானங்கள் கற்போமா, கொடிகாதங்களைசெய்வோமா, ஆனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை வாள்வித்தை இவைகளைச் செய்வோமா, காருடத்தொழில்களைக் கருதுவோமா, ஸ்ரீ கவுரியம்மனைப்பூசை பண்ணுவோமா, வீணைவாசிப்போமா, சங்கீத சாகித்தியம் பயிலுவோமா, வேட்டைமார்க்கம் போவோமா, சொர்ணாபரணங்கள் தரிப்போமா, மாந்தளிர்ப்பட்டுகை உடுப்போமா, புனுகு சவ்வாதுகள் பூசலாமா, சோலைக்குப்போய் கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ வென்கிற நான்வகைப் புஷ்பங்கள் பரித்துச்சூடலாமா, பந்துவிளையாடலாமா, சொக்கட்டா னாடலாமா, சதுரங்கமாடலாமா, இத்தனை விதங்களில், எந்தவிளையாடல் செய்யலாமடி சித்ரரேகாய்?

சித்திரரேகை வசனம்.

வாருமம்மாதாயே! உனக்கு எந்தக்காரியஞ்செய்ய விருப்பமுண்டா யிருக்கிறதோ அதுவே எனக்கும் விருப்பமம்மா தாயே.

விருத்தம்.

நந்திர இந்திரஜாலம் தான்கற்றபாங்கிகேளாய்
எந்தன்யோசனைதானுய்ந்து எற்றிடும்வழிகட்கெல்லாம்
இந்தனையுரைத்திடாமல் நீயிசைந்திடுவதல்லால்
உந்தன்யோசனைக்குநேரா யுண்மையொன்றுரைக்கொணாதோ.



வசனம்.

கேளும்பெண்ணே பாங்கி நான் என்ன விளையாட்டுகள் புரியலாமென்றாலும் நீ ஒட்டிசொல்லாமல் நல்லதென்று சம்மதிக்கிறாய், இப்போது உன்மனக்கபடம் விட்டு உனக்குப் பிரியமான விளையாடல் இன்னதென்று சொன்னலாகாதோ சித்திரரேகாய்.

பொது வசனம்.

இப்படிச் சொன்ன உடாங்கனையைப்பார்த்துச் சித்திரரேகை சொல்லுகிற சம்பிரதாயம் என்னவென்றால்.

சித்திரரேகை சொல் சிங்காரபத்தியம்.

இந்தொளிர்ச்சூடாமணிக் கிணையானமணியில்லை
இந்திரனைப்போலுலகி லிறைவரில்லை
தந்தைதாயுறவுபோ லுறவில்லைகற்பகத்
தருவினுக்கிணையான தருவுமில்லை
நந்துபாற்கடலுக்கு மேலான கடலில்லை
நதியினிற்கங்கைபோல் நதியுமில்லை
அந்தமாம்பாரிசாதத்தி னிணைமலரில்லை
அன்னதானத்தின்மேல் தானமில்லை

அனகனாதிக் கிணையுலகி லழகு மில்லை
பனகசயனனுக் கதிக பாக்ய ரில்லை
உனதறிவுக்கிணை யறிவில் வுலகி லில்லை
வனிதையர்கள் திலகமே வாணன் மகளே.

வசனம்.

அகோ கேளுமம்மாதாயே! சூடாமணிக்கு நிகரானமணிகளில்லை, தேவேந்திரனுக்கு நிகரான ராஜாக்களில்லை, தந்தை தாய்களுக்கு மிஞ்சின சிநேகிதமில்லை, கற்பகத்தருவுக்கு மிஞ்சின தருக்களில்லை, பாற்கடலுக்கு உயர்ந்த கடலில்லை, கங்காநதிக்கு உயர்ந்த நதியில்லை, பாரிசாதத்திற்கு மிஞ்சின புஷ்பமில்லை, அன்னதானத்திலுஞ் சிறந்த தானமில்லை, மதன்ராதிகளுக்கு உயர்ந்த சுந்தரமில்லை, ஸ்ரீநாராயணனுக்கு மிஞ்சின பாக்யவான்களில்லை, உன்னுடைய அறிவுக்குமிஞ்சின அறிவு இந்த உலகிலில்லை, ஆகையால் எல்லாந்தெரிந்த வுனக்கு நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லையம்மா தாயே!

பொது வசனம்.

இப்படிச்சொன்ன சித்திரரேகையைப்பார்த்து உடாங்கனை சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை சொல் விருத்தம்.

நிதிலாவிளையாட்டெல்லாத் தினந்தினம்நடத்திநாமோம்
சூதுசார்ந்தாசாரடுஞ் சொக்கட்டான்காய்தானும்
ஆதிநாளான்தாலே அதனில்யானுஞ்சகொண்டேன்
தாதிநீபகடைச்சாலை தன்னையேஅலங்கரிப்பாய்.

வசனம்.

அகோவாரும் பெண்ணே சித்திரரேகாய் எல்லாவிதமான விளையாட்டுகளும் தினமுஞ்செய்துவருகிறோம் இராஜாதிராஜாக்கள் சபதங்கூறி ஆடப்பட்ட பகடைவிளையாட்டுவிளையாடி அநேகநாளானபடியினாலே இப்போது எனக்கு அதின்பேரிலே ஆவலுண்டாயிருக்கிறது, ஆகையினாலே நம்ம பகடைசாலையை அலங்காரம்செய்யும்பெண்ணே சித்திரரேகாய்.

வசனம்.

அப்படியே மகாபாக்கியம்மா தாயே.

**போது விருத்தம்.**

பத்தரைமாற்றுச்சொர்னப் பசம்பொன்மாமண்டபத்தில்
உத்தமியெழிலாள்மிக்க உடாங்கனையிருந்துகொண்டு
சுத்தசாமர்த்தியத்தோடுஞ் சொக்கட்டானாடச்சேடி
சித்திரரேகைதன்னைச் சீருடனழைக்கின்றாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் சொர்னமண்டபத்திலே சித்திரரேகை அலங்கிருதம் பண்ணின பகடைசாலையிலே போய் உடாங்கனையானவள் இருந்துகொண்டு சித்திரரேகையைப் பகடையாட அழைக்கிற சாம்பிரதாயம் எப்படியென்றால்.

**உடாங்கனை சொல் இராகம்-மோகனம்-அடதாளம்.**

பல்லவி.

பகடையாடுவம் வாடி - சித்திரரேகா
பாங்கி நீ வாடி

அநுபல்லவி.

பகடையாடுவம்வாடி சகிநாமிருவர் கூடி
மகிழ்வுடனுறவாடி மிகவுங்கூர்மைகள் தேடி (ப)

சரணங்கள்.

க. விந்தைகள்தனில் மீறியே இருவரும்பாச
பந்தயங்களைக் கூறியே - பாங்கி
நியந்தன்பாஞ் செலித்தா லெனக்குநீயாளென்றும்
உந்தன்பாம் செலித்தால் உனக்குநான்கிறென்றும் (ப)



உ. வாசமலரைச் சூடியே சந்தனச்சேறு
பூசிப்பந்தயம் பாடியே - ஆடும்
ராசராசாக்களுக்கும் ரோசம்வரவேகாட்டும்
ராசமங்கையரெண்ணிப் பேசிப்பொருதையோட்டும். (ப)

ரு. சந்தேகங்களைப்பார்க்கவே ஆட்டங்கள்தன்னில்
விந்தவழக்கைத் தீர்க்கவே - சகியே
புந்தன்பங்கினிற்பத்து விந்தைப்பெண்களைச்சேர்த்து
எந்தன்பங்கினிற்பத்துத் தந்திரப்பெண்களைச்சேர்த்து (ப)

விருத்தம்.

மங்கையிவ்விதந்தான்சொல்லி மந்திரிபெண்தனையழைத்து
அங்கணாக்கொண்ணூற்றேழு அடர்ந்தவர்புவியில்காட்டி
குங்குமமஞ்சட்பச்சை கூர்ந்திடுங்கறுப்புக்காய்தூள்
பங்கியிரெட்டாய்க்கூட்டிப் பகடைதானுருவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக உடாங்கனை சித்திரரேகை இருவரும் சொக்கட்டானாடுகிற விபரம் எப்படியென்றால்.

**பகடையாடல், திபதை-இ-ம்-சங்கராபரணம்.**

சித்திரரேகை சொல்லல்.

க. ஆட்டம்வேண்டுவார்கலம் நாடத்தங்கவளைகை
யாட்டப்பகடைக்காயை யாடம்மா - நீதான்
கூட்டிப்புடனேகைகள் நீட்டிக்கூர்மையிலேறி
சோடுசொக்கட்டான் காய்போடம்மா.

உடாங்கனை சொல்லல்.

உ. சோடுசொக்கட்டான் காய்போடென்றுசிக்கிரஞ்
சொல்லுகிறாய் சகிகேளடி - துணிந்து
ஆடவந்தாரம்மா வோடமாட்டார்நானே
அலங்கிர்தம் செய்கிறேன்தாளடி

சித்திரரேகை சொல்லல்.

ரு. அலங்காரஞ்செய்வதற்குள்ளாக நான்முந்தி
ஆடினாலாகாதோ பெண்ணரசே - மீறும்
பிலம்கொண்டுவெல்கிற ஆட்டமென்றால்மனம்
பேதகங்கோள்ளுமோ கண்மணியே.

உடாங்கனை சொல்லல்.

௪. பேதமென்றென்னுடன் வாதஞ்செய்யாதடி
பெண்ணேநீதான்முத்தியாடடி - யார்க்கும்
பாதகமேபயிராகா தென்றேசொல்லிப்
பாடுமேடிபகடை போடுமேடி.

சித்திரரேகை சொல்லல்.

௫. போடென்றுதாயேநீ வாய்மூடும்போதேநான்
போட்டேனிதோபாரி தொன்பதே - பின்னும்
ஆடவுங்காய்கள் பின்னேடிமூன்றுச்சுது
ஆகிலும்என்னை துவஞ்சுதே.

உடாங்கனை சொல்லல்.

௬. கைதுவஞ்சால்நல்ல காரியமாச்சுது
கணக்குடன்காங்களை யெண்ணடி - உலகில்
மெய்சொல்லிப்பிழையாதார் பொய்சொல்லிப்பிழைப்பாரோ
மித்திரஞ்செய்வார்வாயில் மண்ணடி.

சித்திரரேகை சொல்லல்.

௭. மித்திரபேதங்களாகக் காங்களெண்ணுவதில்லை
மின்னாசேநீதா னுடம்மா - நல்ல
சுத்தமிர்தவசனச் சொர்ணக்கிள்ளையேநீதான்
சோடுசொக்கட்டான்காய் போடம்மா.

உடாங்கனை சொல்லல்.

௮. சோடுசொக்கட்டான்காய் போடுகிறேனிட்
தோழியேநீகூர்ந்து பாரடி - நானே
ஆடினவுடனிதோ ஒன்பதுநாலெட்டு
ஆண்டுபகடையி ராறடி

சித்திரரேகை சொல்லல்.

௯. ஈராறுபகடைநா லெட்டொன்பதுக்கும்
எண்ணிப்பகடைக்காயைத் தாவம்மா - பின்னும்
வேறொன்பதிரெட்டு யிருக்கால்ரண்டுபகடை
ஒன்பதுநாலிதோ பாரம்மா.

வாணாசுர நாடகம். 

உடாங்கனை சொல்லல்.

௰. பார்த்தேனடிசகியே கொண்டுவாபகடைக்காய்
பச்சைக்காய்சோடா முடுக்கு வண்டி - நீதான்
சிச்சியென்றுள்ளம் சலித்திடவேயுந்தன்
சிவப்புக்காய்சோடா யெடுப்பே னடி.

சித்திரரேகை சொல்லல்.

௰௧. சிவப்பின்சோடெடுமுந்திப் பழுக்கப்போடாதேபோனால்
சித்திரரேகை ஒருதே னம்மா - பின்னும்
புகைபோகுமிடமெல்லாம் நுழைந்தோடும்திருடர்க்கு
புத்திமதிகள் சொல்லப்போகே னம்மா.

உடாங்கனை சொல்லல்.

௰௨. திருடர்க்குப்புத்திசொல் பவளென்றுமிரட்டாதே
சிவப்பின்சோடெடுபட்டுப் போச்சு தடி - பாங்கி
இரடிசும்மாவெறும் மிரட்டிங்கேசெல்லாது
என்காயாறும்பழ மாச்சு தடி.

சித்திரரேகை சொல்லல்.

௰௩. பழமானாலாகட்டும் ஆட்டந்தான்முடிவாச்சோ
பகடைக்காய்தனையிங்கே தன்று மம்மா - தாயே
இளவயதாளேபா ரிப்போதேயென்னுட்டம்
ஈசுவரிகிருபையால் வெல்லு மம்மா.

உடாங்கனை சொல்லல்.

௰௪. ஈசுவரிகிருபையா லுந்தன்கையாட்டந்தான்
எப்படியென் றதிமா பார்க்கி றேண்டி - இப்போ
லேசாகவேபோன ஆட்டங்கெலித்தாக்கால்
ஈஸ்வரிபூசைநா னேற்கி றேண்டி.

சித்திரரேகை சொல்லல்.

௰௫. ஏற்கிறேனென்றுநீ சொன்னதட்சணமேதான்
என்னுட்டமேவெற்றி யாச்சு தம்மா - சின்ன
ஆர்க்குருவியுந்தானே கருடனைவென்றுப்போல்
உன்புறமே வினைப்போச்சு தம்மா.

உடாங்கனை விருத்தம்.

பாங்கியேசொல்லக்கேளாய் பார்வதியருளினாலே
ஓங்கியேதோற்றவுன்காய் சொக்கட்டான்கெலித்ததாலே
நீங்கிலாக்கைலைக்கேகான் சென்றவ்வீஸ்வரியைக்கண்டு
நீங்கிடாவரங்கள்பெற்று நிமிஷத்தில்வருவேன்பாராய்.

வசனம்.

கேளும்பெண்ணே! சித்திரரேகாய் நீஇப்போது ஈஸ்வரியை நினைத்ததினாலே உன்புறம் தோல்வியாய்க்கண்! ஆட்டம் கெலித்ததல்லவா? ஆனதினாலேயானும் ஸ்ரீகயிலாசத்திற்குப்போய் ஈஸ்வரியின் பாதாரவிந்தங்களைக்கண்டு வரம்பெற்றுக்கொண்டு சீக்கிரம் வருகிறேனடி சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

அப்படியே மகா பாக்கியமம்மா தாயே.

பொது வசனம்.

உடாங்கனை கைலையங்கிரிக்குப் போகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை கைலையங்கிரிக்குப்போகிற தரு-இ-ம்-மத்யமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

நடந்தாளே உடாங்கனை - கைலையைநோக்கி
நடந்தாளே உடாங்கனை.

அநுபல்லவி.

நடந்திடப்பார்த்தெழில் மடந்தையருருகவே
அடர்ந்தன்னப்பேடுகள் தொடர்ந்துபின்வருகவே (நட)

சரணங்கள்.

௧. செங்கையின்வளைகள் குலுங்கியிலங்கவே
தங்கவடங்கள் குலுங்கிச்சுழ்[illegible]ன (நட)

௨. தோடுகள்காதினில் ஆடிப்பளீ[illegible] - நா[illegible]
பாடகஞ்சிலம்புகள் சாடிக்கலீ[illegible] (நட)

௩. சீர்கெடவரும்வினைத் தோர்வைகள்நீங்கவே
பார்வதியாள்பதச் சேவைகண்காணவே. (நட)

பொது விருத்தம்.

உத்தமவடிவின்மிக்க வுடாங்கனைகைலைச்செய்தி
சித்தசன்[illegible]ன்னைக்காய்ந்தோன் தேவியம்பிகைதாள்கண்டு
பெ[illegible]டும்அன்னைதந்தை பிறப்புறவெல்லாம்நீயே
[illegible]தியும்நீயேயென்று சரணங்கள்செய்குவாளே.



வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனை கைலையங்கிரிக்குப்போய் ஈசுவரியின் பாதாரவிந்தங்களைக்கண்டு நமஸ்காரம் பண்ணப்பட்ட சம்பிரதாயமெப்படியென்றால்.

உடா[illegible]கனைசொல் திபதை-இ ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. பார்வ[illegible]யேநாரெனுருதிரணமம்மா - உந்தன்
பாதாரவிந்தத்துக்கே சரணமம்மா

௨. கார்மேகவடி[illegible]ன் தங்கச்சியே - யென்றும்
கைலையங்கிரிவாசன் மனமெச்சியே.

௩. அரவாபரணங்களைச் சூடிடுவாய் - அறஞ்செய்
அரனுடன்கூடி விளையாடிடுவாய்.

௪. பரிவாகக்காரியங் கைகூடிடுமே-பாதம்
பணிந்துதானென்றும் வேதம்பாடிடுமே.

௫. பதினெண்புராணத்தில் விளையாடல்செய்தான் - செய்த
பார்வதிதனைக் கலியாணஞ்செய்த.

௬. சதுர்முகப்பிரமதேவன் சிரசுகொய்த - கைலை
சங்கரன்புகழெண்ணுன் கறமுஞ்செய்தாய்.

௭. தாயும்நீதந்தையுநீ குருவும்நீயே - இந்தத்
தாரணியீரேழுக்கும் தெய்வம்நீயே.

௮. மாயும்வகையும்நீயே பிறப்பும்நீயே - சொர்க்க
மண்ணும்விண்ணும் ஜனிக்கும்உயிரும்நீயே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் துதித்து சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணின உடாங்கனையைப் பார்த்து பார்வதியம்மன் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்;

பார்வதியம்மன் சொல் விருத்தம்.

நாரணனதுசியென்று நானிலமெல்லாம்போற்றும்
காரணப்பொருளென்றேத்தும் கன்னியேசொல்லக்கேளாய்
தாரணியுள்ளோர்மெச்சச் சகலயோகந்தானா[illegible]
பூரணவாயுள்பெற்றுப் புவிதனில்வாழ்ந்திடாயே.

வசனம்.

நாராயணன் சகோதரி யென்று பெரிய பூலோகத்தாரெல்லாம் தோத்திரிக்கா நின்ற காரணப்பொருளாகிய பார்வதித்தாயேயென்று ஸ்தோத்திரஞ்செய்துநிற்கும் வாணாசுர குமாரியே! நீ இங்கேவந்த காரியம் யாதோ தெரியச்சொல்லுவாய் பெண்ணே.

உடாங்கனை வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் ஸ்ரீயே.

உடாங்கனை சொல் விருத்தம்.

சத்திபார்வதியேமாலின் தங்கையேயுன்பாதங்கள்
சித்தமாய்த்தேடிவந்து தெரிசித்தயான்றான்கற்ற
வித்தைதான்முழுதுமோதி வீணைதான்மீட்டிச்சேமம்
பெற்றுநாம்போவோமென்று பிரியமாய்வந்தேனம்மா.

வசனம்.

அகோ சரணஞ்சரணம்மமா தாயே, சர்வலோகதயாபரி ஈசுவரி! உன்னுடைய பாதாரவிந்தத்தைக்கண்டு நமஸ்கரித்து நான்கற்ற வித்தைகளையெல்லாம் உன்னுடைய சமுகத்திலே படித்து வீணைவாசித்து வரம்பெற்றுப் போகலாமென்று வந்தேனம்மா தாயே.

பொது விருத்தம்.

சாத்திரந்தனிலுலாவும் சங்கரியடிவணங்கித்
தோத்திரஞ்செய்தபின்னும் சுரமெலாமதிமயங்க
ஏற்றமாஞ்சரசவீணை யிருகாத்தெந்திராகக்
கீர்த்தனம்படித்துமாது செவிப்புடன்பாடுவாளே.

வசனம்.

உடாங்கனையானவள் வீணைமீட்டுகிற

தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

தாவ்டிகவாணன் மக — ளுடாங்கனை - வீணை
மீட்டினள் பார்வதிமுன் — புடாங்கனை

அநுபல்லவி.

நாட்டியரம்பையர்க — ளடங்கவே - மகுடஞ்
சூட்டியராசாள்மன்னர் — தொடங்கவே
கூட்டிற் பறவைக — ளொடுங்கவே - நாமம்
அடிடுந் தலைகுனிந் — தடங்கவே (தாவ்)



சரணங்கள்.

௧. தோகையர்க்குள் ரோசிமகராசியே - வாடை
வாருசந்தனக்கலவை — பூசியே
பாகுமொழியார்க்குரலை — ஏசியே - சகல
நாதமதிலேபதங்கள் — பேசியே. (தாவ்)

௨. நாரதன்றன்சிந்தையே — மகிழ்ந்திட - அசையாப்
பாணநிகமனம் — நெகிழ்ந்திட
பாரிலெண்ணரும் — சிறந்திட - ஜக
நாரிமையாளுந் — கரைந்திட. (தாவ்)

௩. புனிதமாலின்றங்கைநீதான் யென்றுமே - நாவிற்
றினமுமேமுனைத்துதிப்பே னென்றுமே
தனிசரிகமபதனிசசனிதப வென்றுமே - பின்னும்
சனிதபாமகரிசாசடாதரி — யென்றுமே. (தாவ்)

பொது விருத்தம்.

வாணன்மகளிவ்விதம்யாழ் மீட்டிமுக்கண்
மாதுபதம்பணிந்துதினம் மகிழுங்காலை
வீணைபெருங்கையுமையாள் அருளும்போகம்
வேண்டிடக்கண்டசுரமங்கை விரகங்கொண்டு
நீனிலத்திலெத்தினத்தி லெனக்கோர்காந்தன்
நேயமுடன்வருவதென நினைக்கும்போது
காணரிதாம்சத்தியந்த நினைவறிந்து
கன்னிமுகந்தனைப்பார்த்துக் கழறுவாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் வாணாசுரன்மகள் இப்படிப் பார்வதியம்மனைத் துதிசெய்துகொண்டு ஸ்ரீபார்வதிதேவியும் பரமசிவமும் உலகுயிர்கட்கு போகமூட்டும்படியாக நாயக நாயகி பாவனையி லிருப்பதைக்கண்டு எனக்கும் இப்படி யொருநாயகன் எப்போது வருவான் என்றுநினைத்தாள், அக்குறிப்பை அம்மனானவள் தெரிந்துகொண்டு உடாங்கனையைப் பார்த்துச்சொல்லுகிற சாம்பிரதாயம் எப்படியென்றால்.

பார்வதியம்மன் சொல் விருத்தம்.

மாதுடாங்கனையேநீயோர் வாகுசேர்குமான்றன்னை
நீதமாய்க்கனவிற்காண்பாய் நிசமதாயவனேவந்து
காதலாயுன்னைச்சேர்வான் கணவனேயவன்றானவான்
வேதமேதழைக்கநீங்கள் மேன்மையாய்வாழ்குவீரே.

வசனம்.

அகோ தேப்படியென்றால், வாராய் உடாங்கனையே நீயொரு ராஜ குமாரனைக் கனவிலே காணுவாய், அவனே உனக்கு நாயகனுவான், நீங்களிருவரும் சுகஜீவிகளாய் வாழ்ந்துவரக் கடவீர் உடாங்கனையே!

உடாங்கனை வசனம்.

அப்படியே மகாக்கியம் தாயே,

பார்வதி வசனம்.

நீயுன் பட்டணத்திற்குப் போய்வருவாய் உடாங்கனையே.

உடாங்கனை வசனம்.

அப்படியே போய்வருகிறேன் தாயே.

பொது விருத்தம்.

வேதமேநழைக்கவாம்த்தி விடைகொடுத்தனுப்பசத்தி
பாதமேபணிந்து [illegible] பாலெனமனமகிழ்ந்து
சூதிலாதிலங்குகின்ற சோணிதாபுரிக்குவந்து
தாதியாஞ்சித்திரரேகை தன்னைப்பார்த்துரைக்கின்றாளே.

வசனம்.

அம்மனிடத்தில் வரம்பெற்று நகரத்தில் வந்து சேர்ந்த உடாங் கனை தாதியை யழைத்துச் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படி யென் றால்.

உடாங்கனை சொல் விருத்தம்.

பாங்கியேசொல்லக்கேளாய் பாவைநான்படுத்துத்தூங்கும்
தூங்குமஞ்சனத்தைநன்றாய்ச் சோடினைசெய்வாயிப்போ
தீங்கிலாதென்றுசொன்னாள் சிரம்திற்காங்குவித்து
தாங்கலானதில்லாமற் றுதிசோடினைசெய்வாளே.

வசனம்.

வாராய் பாங்கி, நான் சயனித்துக்கொள்ளுகிற தூங்குமஞ்சன த்தை அலங்கிருதஞ்செய்யென்று சொல்ல, நல்லதென்று தாதிஅலங் கிருதம் செய்கிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

சித்திரரேகை தூங்குமஞ்சம் சோடிக்கும்
தரு இராகம் முகாரி அடதாளம்.

பல்லவி.

அதிவிதசித்ரரேகை உடாங்கனை தூங்குமஞ்சனம்
அலங்கிர்தம் செய்தனளே - ஒய்யாரமா
யலங்கிருதம் செய்தனளே.



அநுபல்லவி.

பதிவிரதபலஸ்திரீகள் புகழுமேமுத்தாகளாலும்
பவழமரகத மாணிக்கத்தாலும் - ஒய்யாரமாய்
கதிரொளித்தோன்றிடும் வச்ரவைடூரியங் கோமேதகத்தாலுங்
க[illegible]கபுஷ்பராகத் தாலும் (அதி)

சரணங்கள்.

க. மல்லிகைமுல்லை மருவுசெண்பகம் இருவாட்சிசெந்தாமரை
மலர்க[illegible]ளாலும்
சொல்[illegible]நற்கரிதா[illegible] பாரிசாதபுஷ்பத்தாலும்
[illegible]கற்பகத்தாலும். (அதி)

உ. பத்தரைமாற்றுத் தங்கத்தால் செய்சித்ரவேலைகம்பங்களை
பரிசுத்தமாய்விளக்கியே
சித்ரமண்டபமுழுதும் சூரியனொளித்தாற்போற்
செந்தீபங்கள்முழக்கியே. (அதி)

ங. சந்தனங்கஸ்தூரிபன்னீர் குங்குமமத்தப்புனுகு
தங்கக்கின்னங்களில்கரைத்து
அந்தரவானவர்கள் வாடைதேடிவந்திடவே
அழகுமஞ்சனஞ்சூழஇறைத்து (அதி)

பொது விருத்தம்.

புந்தியில்நினைத்தவண்ணம் போதவேயறிந்துசொல்லும்
மந்திரிகும்பாண்டனுக்கு மகளெனுஞ்சித்ரரேகை
சுந்தரியலங்கரித்த தூங்குமஞ்சனத்தின்மீது
சந்திரவதனமாதுடாங்கனை சயனித்தாளே.

வசனம்.

இந்தவிதம் அலங்கிருதம் செய்யப்பட்ட அம்சதூளிகா மஞ்சத் தின்மீது உடாங்கனை நித்திரைசெய்கிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை சயனிக்கும்-தரு-இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

தனிவுடாங்கனை தூங்குமஞ்சமீது
சயனித்துக்கொண்டாளே - ஒய்யாரமாகச்
சயனித்துக்கொண்டாளே.

அநுபல்லவி.

பளபளென்றிலங்குஞ் செஞ்சுடர்வீசும் வச்சிரங்கள்
பதித்தமகுடஞ்சூடிடும் மழுவேந்துவனைப்போற்றும்
வானன்மடியின்மீது மயிலைப்போல்விளையாடிடும். (தனி)

சரணங்கள்.

௧. தோகைமயிலைப்போலும் அன்னப்பேடையைப்போலும்
சொர்னக்கிள்ளையைப்போலவே
மோகாதியைப்போலும் சித்ரப்பதுமைபோலும்
முகில்மொய்குயிலைப்போலவே. (தலை)

௨. கலைகாவளிமொழிவிந்தை பாடகம்வெண்டயங்
களும்பதாமலே - நல்ல
குழலணிமலர்மஞ்சள் விழிமைதிலகம்சொர்னக்
கொப்புகள்சிதாமலே. (தனி)

௩. உலையிலிடுமெழு கென்னவேகன்னியா
உள்ளமதுகரைந்து - அந்தச்
சிலைநுதலம்பிகை தருவாங்கைவந்து
சேர்வதெப்போதென்றயர்ந்து. (தனி)

போது வசனம்.

இந்தவிதமாக வுடாங்கனை தூங்குமஞ்சத்தின்மீது நித்திரைசெய்கிறபோது சொற்பனங்காணுகிறசாம்பிரதாயம் எப்படி யென்றால்,

அகவல், நேரிசை யாசிரியப்பா.

திருமகள் தினமுந் திருநடம் புரியும்
சுரநகர்க் கிணையாஞ் சுந்தரஞ்சேரிந்த
சோணிதா புரத்திற் றுரைத்தனஞ் செய்யும்
வாணனு மசுரன் வயிற்றுவந் துதித்த
சித்திரம் போலச் சிறந்தெழில் படைத்த
உத்தமவடிவின் உடாங்கனை யென்னும்
பெயரது படைத்த பிரபலமாம் சித்ர
தயிரிய சாலி சற்குண வனிதை
மயிலெனச் சாய்ந்து மலரணை மிசையில்
செயம்பெற நித்ரை செய்திடும் போது
மன்னர்கள் திலகன் மதனவொய் யாரன்
மின்னலான் றெழுந்த மேகம்போல் தேகன்
தெரிவையர்க் கின்பன் சித்ர சிங்காரன்
மரைமலர்க் கண்ணன் மலர்ந்த செவ்வாயன்
நவமணி முடியுடன் நாட்டிய கேசன்
கவசகுண் டலங்கள் கதித்தொளிர் செவியன்
புனைதச் சரங்கள் புனைந்திடுங் கழுத்தன்



ஆனைபரன் வரையை அனைந்திடும் புயத்தன்
மின்னு முன்றூலு மிலகிய மார்பன்
வெண்ணிலா வடத்தை வெல்லுமா ரைத்தன்
பன்முறு வாள்வில் பழகிய கையன்
இலகுபொற் கச்சை இடையினின் றெருங்கச்
சிலம்பொடு சதங்கை சித்ரவெண் டயங்கள்
புலம்பிட நன்றாய்ப் புனைந்திடுந் தாமன்
செல்லமா யிரதி சேஷன்வாய் களிலும்
சொல்லவு மரிதாம் சுந்திர திலகன்
இராஜரா சேந்திரன் ராஜ குமாரன்
நேசமாய் வந்து நேரிழை குழலை
நீவியே வகிர்ந்து நேயமாய்க் காவிப்
பூவினைச் சூட்டப் புயனிறங் காட்ட
கன்னிமார் பதனிற் கலவைகள் பூச
என்னதே யுன்னதென் றின்பங்கள் பேச
சந்திரவதனத் தையல் பிறை நுதலில்
சிந்தூர ரத்தின திலகமே தீட்டி
வெற்றிலை தின்ன விந்தையாய் மென்று
தத்தைவாய் திறந்து தம்பலங் கொடுத்து
சந்தேக மில்லாத் தையல்தா னென்று
புந்திதான் மகிழ்ந்து புணரவும் நினைந்து
கோகிலா திலங்குங் கொக்கோக சாத்திரம்
நீதிதப் பாமல் சேர்ந்து சையோகம்
சுந்தர போகஞ் சுரதவேள் போகம்
இந்திர போகம் இஷ்டபோ கமதே
செய்யவே கண்டு தெருவையர் திலகி
மையலே கொண்டு மனமது மகிழ்ந்து
கனவென்று சிறிதுங் கருத்தில் வைக்காமல்
நினைவிது தானே நிச்சய மென்று
மன்னனைக் கனவில் வாழ்த்தி யன்போடு
தன்னிரு கையாற் றழுவியே சீக்கிரம்
கன்னிமார் பதனிற் கட்டியே மெட்டிப்
பின்னியே நெருங்கிப் பிடித்துடல் நிமிர்ந்து
கொண்டெல் வாணன் குலக்கொழுந் தின்பம்
உண்டனள் நன்று யுடாங்கனை மாதே.

விருத்தம்.

அச்சுதன்சகோதரி தன்னருளினாலே
அங்கசன்செய்கனவில்வந்து ஆகமீய்ந்து
இச்சையுடனருங்களபக் கலவைபூசி
எந்துகருங்குழலில்மலர் எழிலாய்ச்சூடி
மெச்சியிதம்பேசிமத சாஸ்திரத்தால்
மெய்தழுவிசையோகம் விளைக்கும்போது
நிச்சயமாய்மருணன்வந்து லபித்தானென்று
நினைந்திட்டாள்சொற்பனத்தி லுஷைதானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், இந்தப்பிரகாரமாகக் கனவில் ஒருராஜகுமாரன்வந்து கொண்டையிலே காவிப்புஷ்பங்களைச் சூட்டவும் முகத்தோடுமுகம்வைத்து அணைக்கவும், பன்னீர்க் கலவைநீர் மேலேயிறைக்கவும், ஆடையாபரணங்களை அவுக்கவும், அதரபானஞ் செய்யவும், ஸ்தனபாரங்களைப் பிடிக்கவும், மதனசாஸ்திரப்பிரகாரம் இஷ்டபோகம் செய்கிற பாவனையாய்க் கனவிலே காணவும், உடாங்கனை கனவென்று எண்ணாமல் நிசந்தானென்று நினைந்து அதிக ஆவலோடும் சரசபோகஞ்செய்த லட்சணபுருஷனைக் கனவிலேதானே கட்டியணையப்பட்ட விதமெப்படியென்றால்.

௩௫-இ-ம்-நாதநாமக்கிரியை ரூபகதாளம்.

பல்லவி.

கட்டியணைந்தனளே - உடாங்கனை
கட்டியணைந்தனளே.

அநுபல்லவி.

கட்டியணைந்தனள் கட்டழகனைத்தானே
இஷ்டசிங்காரனை மெட்டிமெட்டிமிக (கட்)

சரணங்கள்.

௧. அரசர்திலகச் சந்த்ரனை - ரம்பையர்புகழ்
அஷ்டபோக இந்த்ரனை - நல்ல
சுரதமதனில் வசந்தனை - எனக்கேற்கும்
சுருபஞ்செய்திடுந்தந்த்ரனை - நல்ல
புருஷனேநீயென்று பூவைமனமகிழ்ந்து
இருகைபூணாரத்தோடே யிறுக்கியிறுக்கிச்சேர்ந்து (கட்)
௨. விரகக்கணைகள் சொரிந்து - அதினாலெலத்தன்
திரேகவிசிதந் குறைந்து - நல்ல



அறிவும்நினைவும் மறந்து - நான்படுகின்ற
ஆபாதந்தனை பறிந்து - நல்ல
அரனுக்கிடப்பாகம் அமர்ந்தஅம்பிகைதந்த
வரங்கனெனக்கிப்போ வந்துலபித்ததென்று (கட்)
௩. காய்த்ததரு வினங்களை - பறவைதேடிக்
கனிகள்தந்தது போலவே - ஜீவனைத்தானே
மாய்ந்தவுடலைத் தேடியே - சஞ்சீவிவாழ்
மலைகள்வந்தது போலவே - பொன்கொடிதன்னை
யெய்த்ததேகத்துக்கும் எழிலுக்குங்குணத்துக்கும்
வாய்த்தமாப்பிளைதானே வலியச்சிக்கினனென்று (கட்)

விருத்தம்.

தேட்டமாய்க்கனவில்வந்து சித்தைதானுருகக்காமக்
கோட்டியொத்தவனைக்கொங்கைக் குடங்கள்மீதணைத்திரண்டு
நாட்டமேதிறந்துபார்க்க நாதனைக்காணாதாலே
தாஷ்டிகந்தேய்ந்துமா துடாங்கனைசாற்றுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாகக் கனவில்வந்து சரசசல்லாபஞ்செய்த புண்ணியபுருஷனை உடாங்கனை தனதுகையினாலே தாவிப்பிடித்து தனபாரங்கள்மீதிலே கட்டியணைத்துக்கொண்டு ஈசுவரிசொன்ன வார்த்தை நிச்சயமாச்சுதென்றும் மாய்ந்தபேருக்குச் சஞ்சீவிவாடைபோலாச்சுதென்றும் என்னுடைய ரூபலாவணியத்திற்கு இசைந்த மணவாளன்வந்து வலியக்கிடைத்தானென்று மகிழ்ந்து கண்களைத்திறந்து பார்க்கும்போது ஒருவரையும் காணாமல் சந்தேகமும் சந்தோஷமும் சரி நிறையென்று உலகஞ்சொல்வதுபோலாச்சுதென்றும் ஐயோ! இதென்ன அநியாயமென்றும் மனதிலே யெண்ணாததெல்லாம் எண்ணி கண்பிசைந்து சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

௩௬, இ-ம்-மத்யமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னகாரணம்மிது நானறிகிலனே - ஒகோகோசிவனே
ஏதுகாரணமிது நானறிகிலனே.

அநுபல்லவி.

என்னகாரணம் என்னிருதயமது
மின்னுமுழைமெழு கென்னவுருகிற (தென்ன)

சரணங்கள்.

௧. தேட்டைமாயிடைய கூட்டிப்பிடித்ததும்
காட்டந்திறக்குமுன் னோட்டமெடுத்ததும். (என்ன)

௨. பாரஸ்தனமதி னாறும்விரகமது
நிரவுமணைந்தவன் சோரனானவிதம் (என்ன)

௩. தீர்க்கமாயென்மன தேற்குமழகுதனைத்
தூக்கந்தெளிந்துநான் பார்க்கமறைந்தவிதம் (என்ன)

௪. தாயினும்வேனியென் மயலினைத்தீர்த்ததும்
நயனந்திறக்குமுன் னெருவிலுடன்பார்த்ததும். (என்ன)

௫. மோடிகொண்டுவினை யாடிவந்தெனைக்
கூடியணைந்தவ னோடிமறைந்தவிதம் (என்ன)

௬. மெள்ளவந்தென் னுள்ளமுநிர்துகை
கொள்ளவுந்தவன் கள்ளனானவிதம். (என்ன)

௭. சொப்பனங்கண்டதித் தப்பிதமிலையென
அற்புதவம்பினை சொற்பழுதாம்விதம். (என்ன)

௮. இரண்டுகொங்கைகளை இரணியவட்டங்களை
நெருடிமருவினவன் திருடனானவிதம். (என்ன)

௯. கட்டழகதிலெனும் மெட்டடன்னையிலகப்
பட்டபொருளது பொட்டெனப்போம்விதம். (என்ன)

சிங்காரபத்தியம்.

என்னஅதிரூபமோ என்னமுகிலரூபமோ
என்னஜகஜாலமோ என்னமாயம்
என்னசுகலாபமோ என்னநிகலாபமோ
என்னஅவதானமோ என்னருட்சம்
என்னஅவிதானமோ என்னாதிபாகமோ
என்னதகலைஞானமோ என்னஞாயம்
என்னதவுநாயமோ என்னவெகுசாயமோ
என்னதிகமோகமோ என்னசுரூபம்.
என்னமந்திரதந்திரமோ விண்ணில்
இமையோர்செய்மோசமோ இறைவர்தொழிலோ
இன்னமென்னருதுக்கு காணாவனே
இதுவிபாம்அறியாமற்றை தழுவிட்டேனே பெண்மனமே.



உடங்கனே சொல் நத-இ-ம்-மத்திமாவதி-மட்டையதாளம்.

பல்லவி.

மனதேநான்மோசம்போனனே - சூன்டசமரில்விலலே
மறந்துஇருந்தாற்போலானேனே.

அநுபல்லவி.

மனதேபெற்றன்கனவில் வந்துசையோகஞ்செய்த
மன்னர்கள்திலகனை மதனவெவாய்யாரனைப்
பின்னர்சடைதனிற் பின்கட்டாய்க்கட்டாமல். (மன)

சரணங்கள்.

கள்ளப்பயலென்றுவசியே - அப்பாலேபோடாவென்று
கடிந்தவார்த்தைகள்பேசியே
கன்னத்திரேகத்தின்மீது - கனகரேகதுன்னான்ற
கல்லுக்கொண்டடியாமற் - கன்னத்திலேடியாமல்
மல்லுக்குநிற்காமல் மடியிற்கைபோடாமல். (மன)

வேதசாஸ்திரங்கள்சாட்சியாய் - அண்டருமுனிவரும்
வேண்டும்தெய்வங்கள் சாட்சியாய்
மெய்யாமாகாசவாணி மேதினிசாட்சியாக
வித்தாரப்பெண்ணேயுனை - விட்டுப்பிரியேனென்று
சத்தியஞ்செய்தபின் தழுவியணையாமல். (மன)

எந்தவூரெந்ததேசமோ - அந்தஇந்திரஜாலக்கள்ளன்
எந்தநாடெங்கேவாசமோ
எந்தக்குலமெந்தகோத்ர மெந்தத்தொழிலெந்தச்சாதி
எந்திழைக்கிப்போதே எல்லாமுஞ்சொல்லென்று
கூர்ந்துநான்கேட்காமற் கூடவேதுடாமல் (மன)

சிங்கார பத்தியம்.

இந்த்ரனோ கோகர்ன மந்த்ரனோ கஜகர்ன
இந்திரஜாலத்தொடு மகேந்த்ரஜால
தந்த்ரனோ திரவிய குபேந்திரனோ ரணசம்ப்ர
தாயனோவெழில்பாத சாசலோலா
சந்த்ரனோ மோகரிட பேந்த்ரனோ மகாராஜ
சுமுகனோகல்யாண சுகிர்தவசனு
சந்த்ரனோ மதன வுபேந்த்ரனோ மோக
சஞ்சாரனோதீரனோ தாணிமன்னு

சாமியென்னைநீ யாட்கொள்ள மனமகிழ்ந்து
திவ்ய சல்லாபஞ்செய்திடிலுன் வலிமைபோமோ
தாமிசஞ்செய்த லிப்போது தர்மமலவே
பேதகமில்லாமல் வாருமெந்தன் பிராணநாதா.

தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

மோடிசெய்யாமலிங்கே வந்திடலாம் - ஸ்வாமி
மோகனுங்கிக்கேயின்பந் தந்திடலாம்

சரணங்கள்.

க. இன்னொருதரம்நாமள் சேர்ந்திடலாம் - துரையே
இந்திரன்இந்திராணிபோலே வாழ்ந்திடலாம்

உ. மேகவர்னசொரூபத்தைக் காட்டிடலாம் - சுவாமி
மேகக்குழலின்மலரைச் சூட்டிடலாம்

ங. மன்னன்மறைந்திருக்க லாகாதையா - ஸ்வாமி
மாதர்பாவங்கைகொள்ளப் போகாதையா.

ச. கனவினானென்றுநீரே யென்னலாமே - துரையே
கலியாணகாரியமே பண்ணலாமே.

ரு. உள்ளத்தில்வேறோராசை நாட்டேனையா - சுவாமி
உன்னைமறந்திருக்க மாட்டேனையா.

சா. பாவபுண்ணியமெண்ணிப் பாருமையா - உனது
பட்டத்துத்தேவியெதிரே வாருமையா.

சிங்கார பத்தியம்.

மோடிசெய்யாம லென்னெதிர்வந்து நின்றிடல்
முககாந்தியொயிலாண்மை முங்கியுமோசொல்
ஓடிவந்தென்முகம் பார்த்து வசனிக்கிலுன்
ஓதுசெவ்வாயின்முத் ததிருமோசொல்
வாடியென் றழைத்தெனைப்பின் கூட்டியேகிறல்
மன்னனேயுன்னமுசை மங்குமோசொல்
தேடிவந்தெனைமணஞ் செய்கின்ற வரையிலும்
சேமமாயென்மனந் தேறுமோசொல்
தெருவிற் பரதேசிபோல்த் திரியலாகுமோ
பாதலிப் பதுவுமொரு பாரமலவோ
கருவினை வதைப்பவர் கற்பழிப்பவர்
பெருமையது பெறுவரோ பிராணநாயகா.



தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

என்பிராணநாதா - கற்பழிந்தது
முன்செய்ததீதா.

அநுபல்லவி.

அன்பாகவுள்ளத்தி லென்போகமேவேண்டி
சம்போகஞ்செய்தவன் பின்போகலாயமோ
கூடிமருவவும் மோடிசெய்ததேனோ
வாடிமனஞ்சலித் தோடினதேனோ. (என்)

சரணங்கள்.

புதலத்தன்னிலே சாதிபேதமில்லாத
மாதுலிகதாபம் வாதுவென்றொழிந்தது
நீதியோஸ்வாமி - நானேயுனக்கு
வாதியோஸ்வாமி
பாசபந்தயம் பேசவைத்ததும்
ஆசைதந்தெனை மோசஞ்செய்ததும். (நீதியோ)

உ. பழுதில்லாத[illegible]தம் தொழுதுகொண்டிருந்தாலும்
எழுதா[illegible]வதசாலதாம பு[illegible]போகினும்-பெண்
பழிதள்ளப்போமா - எனக்கேற்குய
எழிலுள்ளகாமா
தப்புலாவிய அப்பொழித்திடும்
நற்புலாவிய கற்பழித்திடும் (பழிதள்ள)

ங. சல்லாபலீலை னெல்லாக்தெரிந்தொன்றுங்
கல்லாதவனைப்போலும் பொல்லாதவனைப்போலும்
சொல்லாதோடினதேன் - கண்திறக்குமுன்
னில்லாதோடின தேன்
தீரன்வாணு சூரனருளிய
நாரியேபோய் வாரேனலுப்பென்று (சொல்லா)

சிங்கார பத்தியம்.

மன்னனேயதிகவிற் பன்னனேயெனையாள
மனதிலாதேபோன வர்மமெனவோ
சொன்னசொற்றவறுத கன்னிதனைவிட்டுநீ
தலைதூரமோடினுற் ரோஷமலவோ.

முன்னமேயுனதுகுல கோத்ரமறியாமல்
மோகித்தவனிதைமேல் மோடியாமோ
என்னமோவுன்னழகை யென்னழகுகோருதே
எந்தன்மீதுந்தனுக் கிச்சையிலையோ
மோசமெனுந்தொழில்ராஜ முறைபேற்குமோ
சாசனமதானபொருளெனவுனைத் தழுவினேன்யான்
காசினியீரேழுமாயினுமொரு கணவன்மீதில்
ஆசையதுவைத்துவாழ்கேனென் னாசைநாயகா.

---

தரு-இ-ம்-இந்துஸ்தான்-காப்பி-தாளம் மட்டையம்.

பல்லவி.

கனவில்வந்தணைந்த கள்ளனே - யுனையலால்வேறொரு
கணவன்றன்னைநினைவிற் கொள்ளேனே.

அநுபல்லவி.

அனகனுக்கு மதிகளுமானே - மாய்கையாயென்
னாவியதனைக்காந்த தீபனே
அட்டகமுடனே சிரித்துச்சிரித்து ... நடங் தரித்துத் தரித்து
கடைக்கண்சலுதிற ... ந்ததுவொடிக்கு ... த்தைக்குறித்துக்
கன. [குறித்து

சரணங்கள்.

௧. வல்லிருள் தனைத் தரிக்குமே - ஐய்யாரமாக
வதனஞ்சந்த்ரனெழில் பறிக்குமே
மெல்லியர்கள் மெய் கரைக்குமே - எழில்மிகுந்த
வேல்விழிகளைப் பழிக்குமே
மிருதுமுகத்தைக்காட்டிக்காட்டி வரிசைநகைகள்பூட்டிப்பூட்டி
அருசாய்விழிகள்தீட்டித்தீட்டிச் சரசப்பழமைநீட்டிநீட்டி
கன.

௨. முந்திமயக்கபொடிகள் தூவியே - சொருகுசதாவென்
முலைகள்மீதுமுகத்தைப் பாவியே
உந்தனுவி யெந்த னாவியே - ஒன்றுதானென்று
உரைத்தபோ தென்னுடலைத்தாவியே
உரத்திலாரத்தைத்தீந்தித்தீத்தி கரத்தில்முதுகைப்போத்திப்போத்தி
சிரத்தின்மலரைச்சாத்திச்சாத்தி நிறத்தைநச்சவாய் மாத்திமாத்தி
கன.



௩. சீரமுழுதும் நாவில் வழித்துமே - கமலக்காத்தில்
சரிகைத்துகிலை நெகிழ இழுத்துமே
கரியகுழலைக் குலைய விழ்அவித்துமே - பின்னுமெந்தன்
கார்மின்னிடையைத் துவளஅணைத்துமே
கரவிந்துடையைநீக்கிநீக்கி மதனச்சுனையைநோக்கிநோக்கி
அதனில்விரகம்தேக்கிதேக்கி விரகமதனைப்போக்கிப்போக்கி
கன.

---

ஈரடிச் சிங்கார பத்தியம்.

மகமேருநிகரானபுயசில பலசாலிமகிபாலனென்றுநான்
மாழ்ந்திழுந்த மீய்ந்தேனே
மடமாதருடல்மீது மலர்வாளிதனையேவுமதராஜனென்றுநான்
மகிழ்ச்சியாயணைந்தேனே
சேகமீது தவமேவுமுனிவோர்கள் மனமேவுசகதீசனென்றுநான்
சேர்ந்துறவுகொண்டேனே
சேகருபனபுருப தசருப மதுவானதிருமார்பனென்றுநான்
செவ்விதழை ... மீந்தேனே
குகனானவனுமாருமுகமான வனுமானகுமரேனென்றுநான்
கொங்கைகளை யீந்தேனே
குருபூசையரிபூசை சிவபூசைமறவாத குணசாலியென்றுநான்
கொஞ்சிமுகம் பார்த்தேனே
சுகமேவுதிடமாக வுயர்வானுலகையாளும் சுராசனென்றுநான்
சொல்லியிஷ்டங் கொண்டேனே [நான்
ஆடிராஜர்புகழ்வாகி யென்னுமகிழ் தருகுபோசுபயோனென்று
சொக்கிமெய் மறந்தேனே
திராணிமானாகிலும் திருடனல்லவோ
திருடனெனமுந்திநான் செய்திகேட்டிடில்
பிராணனதுபோயினும் யென்பின்னற்சடையில்
பின்கட்டாய்க்கட்டுவேன் பிராணநாயகா

---

தீபதை-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. பஞ்சதந்திரக்கள்ளனென்று முந்திக்கண்டால்
மிஞ்சவிடுவேனோ - நீதான்மிதந்
தெஞ்சவிடுவேனோ

௨. இந்திரசாலக்கள்ளனென்று முந்திக்கண்டால்
சிந்தைகொடுப்பேனே - உன்னோடேநான்
வந்துபடுப்பேனே.

௩. மோசக்காரப்பையலென்று முந்திக்கண்டால்
ஆசைப்படுவேனே - உன்னைநான்
வசால்விடுவேனே.

௪. பாதகாரப்பயலென்று முந்திக்கண்டால்
வாதுக்குநிற்கேனே - உன்னைநான்
வீதிக்கிழுக்கேனே.

௫. கெட்டப்புத்திப்பயலென்று முந்திக்கண்டால்
கட்டாமல்விடுவேனே - உன்னைநான்
வெட்டாமல்விடுவேனே.

௬. சின்னப்புத்திபயலென்று முந்திக்கண்டால்
தேகத்திற்சேர்ப்பேனே - உந்தனிட
மோகத்தைத்தீர்ப்பேனே.

௭. மித்ரபேதக்கள்ளனென்று முந்திக்கண்டால்
முத்தங்கொடுப்பேனே - உந்தனிட
பத்தம்பிடிப்பேனே.

௮. அர்ச்சனைக்கண்டால் தூரப்போய்நில்லென்ற
சொற்பொருள்பொய்போமோ - எந்தனிட
கற்புப்பறிபோமோ.

௯. நாற்றிசையும்புகழ் அம்பிகைதாய்சொன்ன
வார்த்தையும்பொய்போச்சே - நானேஅவ
கீர்த்திக்கும் ஆளாச்சே.

௧௦. ஓடிமறைந்தவன் பேடிப்பயலவன்.
ஊரையுங்காணேமே - தேடிப்பார்த்தால்
தாரையுங்காணேமே.

---

சிங்காரபத்தியம்.

ராசமோகத்திலே வுதயமானவனுமில்
ரசைம்பிரதாயமதில் அஞ்சுவானே
காசினிபுகழ்ந்திடும் நல்ருபவானுமிறை
கன்றெந்தி திலாக்கர்ானுமோர



பேசுமொழியுனிதமும் குணமுமோனுமிறைற்
பெண்ணைவிட்டொருவனே பிரிவனோதான்
நேசமதுமெரிகிலாப் பாமாத்மனுமில்லான்
தோள்சேர்ந்துமறையவுந்தோதறிவனே.

அர்ச்சனரைச்சேவிப் பாவரினுங்கீழ்
தொண்டர்களைச்சேவிப் பாவரினுங்கீழ்
பிச்சையெடுத்துண்பவர்க ள்வரினுங்கீழ்
பேடிநீர்தானையா பிராணநாயகா.

---

தரு மோகனராகம்-அடதாளம்.

கந்தார்த்தம்.

கனவினிற்கூடி - ஓடிமறைந்த
கள்ளனீபேடி.

௧. பனுவலோர்புகழ் சோணிதபுரியிந்தப்
பட்டணந்தனிலரசேபுரி
தனமதில்மிஞ்சிய பக்ஷதரியெந்தன்
தகப்பன்வாணுசூரன்அராசுரி
எனவுமாலோசனைசெய்து
இருந்தால்மோசம் வருமென்று
மனதிலெண்ணி மறைந்தோட
மந்திரதந்த்ரம் படித்த
வஞ்சகத்திருடா - கண்டுபிடித்துன்னை
வாட்டுறேன்பொறுடா.

௨. பெற்றோனறியவென்னை முட்டிடும்வகைநினைந்தாற்
பிராணனுக்கழிவு நேர்பட்டிடும்
மற்றதம்பார்மிசையினில் சுட்டிடுஞ்செய்தியைக்
கேட்டுன்தாய்தகப்பன் பிராணனைவிட்டிடும்அந்தக்
குற்றம்வருகுமென்று உன்னறிவினாலே
கூர்ந்துணர்ந்து மனதுபயங்கொண்டதாலே
பத்தினிநான்கண் திறந்து பார்க்குமுன்னே
பட்டப்பூச்சிபூவைவிட் டோடல்போலவே.
பாய்ந்திட்டபாவி - நானேயுனது
பட்டத்தேவி

௩. சதமேறிவருகின்ற துரைகளுங்கிளைக்கிட்ட
சகியமறிந்துசொல் மந்திரிகளும்
மதமீரித்திரிகின்ற கரிகளும்வானில்
மழைமுகிலெனப்பாயும்பரிகளும்
இதுவிதங்களும் விட்டொருவனுமே
யேழைபோலும் வந்தெனைச்சேர்ந்து
மதிமிகவேகலங்கிமுகம்
வாடியோடினபின்பு.
மகிபாலனலவே - சொன்ன சொல்லுக்கு
மறுவார்த்தைநசொலவே.

௪. மணிமகுடங்களைச்சூட்டியேபுலகாளும்
மன்னரைவரச்சொலிச்சாட்டியே
மணைமீதிலெந்தனைநாட்டியே யென்கழுத்தில்
மங்கலசூத்திரம் பூட்டியே
புணரும்முறைதனைவிட்டுப்
புணராமுறைமையொடுஞ் சேர்ந்தால்
கணவனென்று சொல்வாரோ
கட்டுமெட்டுமிழந்த
கள்ளனேவாடா - வந்தெனைக்கண்டு
மெள்ளவேபோடா.

---

ஆனந்தபைரவி-சிங்கார பத்தியம்.

சாத்ரமுறைதவறாத பதிவிரதைமனவேதை
தன்னைநீரேற்பதோ தருமமலவே
நேத்திரமிழந்தவன் கோலிழந்ததுபோல
நினைவுதடுமாறுதல் நீதியோசொல்
சூத்ரமுங்கபடமும் வினையுநானறியனே
தூஷணம்உன்மீது சொன்னேனோநான்
பார்த்திபவிஸ்வாஸ பாதகஞ்செய்வதே
பார்தனக்கேயதிக பாரமலவோ
குருநிந்தைசதிமோசம் கர்த்தத்துரோகம்
கோஸ்திரிபிரம்மகத்தி கோறுவார்களே
அருநரகவீட்டினில் அழுந்துவாரென
அறிஞர்களுரைத்தசொன் னைநாயகா



தரு-நீபதை-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. மூவேழுசநநத்துக்கும் நரகத்தினில்
மூழ்குவ ரிச்சனரோ - வேதங்களில்
முனிவ ருரைத்தனரே.

௨. பூவாளியனும் ரதிபோலப்பிரியாத
பேரைப் பிரித்தனரும் - கூடிவாழும்
கூரைத்தீ வைத்தனரும்.

௩. நாவாளினிற்போர்வெல் பாவாணர்கள்கருத்தை
நலியத்தூஷித் தனரும் - முதல்முதல்
விலையைக்குறைத்தனரும்.

௪. வாவாளிகளைச்சேர்ந்த நீதிப்பெரியோர்கள்
வார்த்தை முறித்தனரும் - பின்னத்தோரைப்
பார்த்துச் சிரித்தனரும்.

௫. முந்தியபத்தினி மார்தன்னையேபெரு
மூச்சிட்டடித் தனரும் - தூர்க்கந்தங்கள்
காச்சிக்குடித் தனரும்.

௬. சந்ததமேதிலார்ற் கன்னிதமாகப்பொய்ச்
சாட்சிசொடித் தனரும் - சேர்ந்தபெண்ணை
யேசிவிடுத் தனரும்.

௭. உள்ளத்தில்வினைவைத்து உதட்டிற்சிரிப்புவைத்
துறவைப் பிடிப்பவரும் - கடியாத
அரவைத் தடிப்பவரும்.

௮. எள்ளத்தனையேனு மிரக்கமில்லாமலே
ஏழையடிப்ப வரும் - குடிகெடுக்குங்
கோளைப்படிப் பவரும்.

௯. அள்ளிப்பிச்சையிடாமல் வள்ளத்தினிற்குறை
யாக்கியளப் பவரும் - தானேபெற்ற
சேய்க்குமொழிப்பவரும்.

௰. கள்ளத்தனத்துக்கு வாவென்றுமெச்சிக்
கருதியழைப் பவரும் - அவரோடு
பொருதிப் பிழைப்பவரும்.

௰௧. உற்றதாய்பசிக்கவே பார்த்துத்தனதுவயி
றண்டுபிழைப் பவரும் - வெட்டவெளியில்
மண்டைகிழிப் பவரும்.

௰௨. பெற்றிடுங்கற்புள்ள பத்தினிமார்களைப்
பெண்டுக்கழைப் பவரும் - பாதகனாப்போ
யண்டிப்பிழைப் பவரும்.

௰௩. சோற்றில்விஷத்தைக் கலக்கிவைத்துப்பிராணன்
சோர்ந்திடக்கொன் றனரும் - பன்றிகோழி
மாமிசந்தின்ற வரும்.

௰௪. மூத்தோர்கள்வார்த்தை முறித்தனரேசண்டை
மூட்டிட்டுப்பார்த்த னரும் - வேளாண்மையில்
மாடிட்டுமேய்த்த வரும்.

௰௫. நேத்திக்கடன்க ளொழித்தனரும்குரு
நிந்தைநடத்தி னரும் - ஊரோரத்தின்
மந்தையடைத் தனரும்.

௰௬. காத்தாட்சிக்கிறேனென் றுசைகொடுத்துப்பின்
கையை விரித் தனரும் - மெய்யைவிட்டுப்
பொய்யை யுரைத் தனரும்.

௰௭. மெய்யைவிட்டுப்பொய்யை யுரைத்தனரேபொல்லாப்
பில்லிபிடித் தனரும் - பசுவுருஞ்சும்
கல்லை யிடித் தனரும்.

௰௮. வாய்மதத்தோரைச் சற்புத்திரற்குப்பழி
வைக்கச்சொல் கோளர்களும் - தர்மதானத்
துக்குக்கை நீளார்களும்.

௰௯. ஆபுதத்தாலுயிர் பதைக்கக்கழுத்தை
யறுக்குந் துரோகி களும் - அடியாரை
நெறுக்குங் கிராதி களும்.

௨௰. கோயிலைத்தானே யிடிப்பவரேகுளம்
முறிக்குங் குரோதர் களும் - வாழ்மரங்களை
தரிக்குஞ் சிதடர் களும்.

௨௧. காய்சினத்தோர்களை அன்னியமாதரைத்
தைதொடும் லோபி களும் - சிசுவத்தி
செய்திடும் பாவி களும்.

௨௨. அநீதமாய்வட்டி கரந்தோர்களேவாளதினாலே
வெட்டி யிறந்தோர் களே - படைமுகத்தில்
முட்டிமுறிந் தோர் களே.



கருட்டி - சிங்கார பத்தியம்.

வெகுமிரட்டும் புனைசுருட்டு முள்ளோனெனும்
வாள்தனக்குஞ் சமர்தனக்கும் மில்லானெனும்
அடர்செருட்டும் பலநாட்டு முள்ளானெனும்
அவைநெருக்கஞ் சபைப்பெருக்க மில்லானெனும்
வெகுபுறட்டும் மொழிப்புறட்டு முள்ளானெனும்
குணவணக்கம் சனவணக்க மில்லானெனும்
கசபுரட்டுங் கனதிருட்டு முள்ளானெனும்
உனைப்பேசப் படும்பிராண சமேதனே.

௩௫, ௫-ம்-காபி அடதாளம்.

பல்லவி.

கலைகள் சொல்விற்றே - திருடாபுராண
கதைகள் சொல்விற்றே.

அநுபல்லவி.

புலிபோலுடலின்மீது சலுதாய்லாகுகள்பாயும்
அலறிப்பாவைவிழித்தால் தலைவில்மறையுமென்று (கலை)

சரணங்கள்.

௧. அறியாமல் ஒன்டு - போட்டுநித்திரை
வரும்வேளை கண்டு - நுணிமாத்திரம்
சரியாத செண்டு - ஸ்தனங்கள்தனை
விரலாலே கண்டு
உரமீ தருண்டு
அரையூறு கண்டு
உறவேசெய் பண்டு
பாமான முண்டு
அரிவைகாவலர்கள் நெறுநெறெனநெருக்கி
இருவிழிகள்திறந்தால் விரைவில்மறையுமென்று (கலை)

௨. வஞ்சிவா ழூரும் - அவள்பேரும்
நெஞ்சினில் கோரும் - விபரங்காண
அஞ்சனம் பாரும் - பார்த்துத்தூங்கு
மஞ்சனம் ஏறும்
செஞ்சுட சோறும்
நெஞ்சுடல் பூறும்
நெஞ்சிட மாறும்
கொஞ்சுகள் சோறும்
0

சஞ்சலங்கள்தெளிந்து வஞ்சிநன்கள்விழிந்த
செஞ்சிலியிணைக்கக்காற்றுப் பஞ்சாப்பறக்கவென்று (கலை)

௩. சோணிதநகர் தேடி - நான்றுயில்
சேணமிகவே நாடி - மதன்பஞ்ச
பாணங்கையிற் பூடி - சார்கால
வாணன்மகளைப் போடி
கிணர்பொற் கூடி
பேணுவதோ மோடி
வீணாகக் கோடி
காணும்வேட்கை யூடி
மாணமாய்வெற்றிலேதா பாணர்போற்பாடுங்காலே
வீணைகையாள்விழித்தால் நாணங்கெட்டோடென்று (கலை)

---

## சிங்கார பத்தியம்.

செகராஜதிலகனே யென்னசொன்னலுமுன்
சித்தமதிரங்காம லிருப்பதேனோ
முகமிதுமுகமதே மோர்ந்ததிரசமுன்னை
முத்தாடமலராட மோகமீர
சுகலீலைபுரியவே மருவிவிளையாடவே
சுந்தரனேஇனிவாச் சோலிசெய்தால்
மகாசர்அதியவே சாகவதிசாட்சியாய்
வாள்மீதில்வீழ்ந்தெனது வல்லுயிரையே
மாய்த்திடவுமேமனது மலிவுகொண்டால்
கீர்த்திகளிலேயதிக கீர்த்திநின்றாய்
வாய்த்தமாவலிச்சந்த்ர வர்த்திராசன்
பேத்திநானல்லவே பிராணநாயகா.

வசனம்.

மதனவொய்யார மதனசிங்கார மதனகம்பீர மதனலோலாற்புத மதனலாவண்ய மதனசம்போக மதனசற்பாத்திர மதனவிசித்திர மதனயேகாந்த மதனவிற்பன்ன மதனசம்பன்ன மதனருட்சிதா மதனசாலோக மதனசாமீப மதனசாரூப மதனசாயுச்சியா மனோரஞ்சித அடவஞ்சகா யென்முகம்வாடுதே படபாவி பெர்ணம ரம் பிதிர் கெட்டு மாய்ப்பதே யுனக்கதிக பெருமையோ சொல் லென துயிரான சமேதனே.



தரு - இராகம்.

பல்லவி.

சரீரமும்விருதாவாகமாட்டேந்தன் - சமர்த்ததிகிறநா
சரீரமும்விருதாவாகமாட்டேனே.

அநுபல்லவி.

பரதநாட்டிய மாடும்
சாசசங்கீதம் பாடும்
பார்வதிமெச்சவே சுதிகூட்டுவள்
நாரதன்மெச்ச வீணையைமீட்டுவள் (சரீ)

சரணங்கள்.

௧. சந்தனங்கஸ்தூரி அத்தர்புனுகுசவ்வாது பன்னிரு
செந்தூரமும்நதம்பம் விஞ்சைமஞ்சள்குங்குமம்
தினந்தினம்இவைதேடி பணிந்திடுங்கனம்
காவைகள்கண்டுபணிந்திடும். (சரீரம்)
௨. நல்லசெவ்வந்தியும் பாரிசாதமும் நாறுஞ்செண்பகமும்
அல்லிமல்லிகைநாடும் மல்லிகைமலர்தேடும்
ஆரகப்பொடி பனுதிலஞ்சாப்பிடும்
நேரமொன்றுக்கு ஒருபொதிபூப்படும் (சரீரம்)
௩. மூவுலகிவிளையேசத்தியவசம் மொழிந்துயிர்தனையே
தேவதேவனுக்குத்தான் மாவலிவாணன்பெற்றான்
சேனோர்புகழ்சிவன்பாதம் துதித்திடும்
வாணாசுரன்வயற்றி துதித்திடும் (சரீரம்)

## சிங்காரபத்தியம்.

கூசாமல்வாள்தனில் வீழ்ந்தெனது பிராணனைக்
கொல்வனென்றே சபதங்கூறினாலும்
மேசாதிபதிபுகழ்மேகிற பூபாலனென்னவும்
மிக்காணசூரனென மெச்சினாலும்
பேசாமலூமையெனக் கபடியெனவஞ்சனென
பேடியெனத்திருடனெனப் பேசினாலும்
ரோசமேமானமேயீன மெல்லானென்றும்
லோகமேயிகழ்கின்ற பேடியென்றும்
கண்பனெனவுன் னழகைநத்தினாலும்
கண்மறவைநீங்கி மனக்கபடம்நீங்கி
வண்ணையுடனெந்தன் முன்வராதபோனால்
பெண்ஜனனமெடுத்தசெய்வேன் பிராணநாயகா.

தரு-இராகம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

என்னென்னசொன்னாலுந்தந்த்ர
இந்திரசாலக்கள்ளனே நீ
இன்னமும்வாரதுதான் - என்னமோடியோ

அநுபல்லவி.

இன்றொருநாமும்வந்து என்னிடமார்பிலணைந்து
யேகினாற்றான் சேதமேது - என்சாமி சாமி
யேகினாற்றான் சேதமேது
ஏகினாற்றான்சேதமேது ஏகினாற்றிருவீராது
இதபாதகருள் சோராது இறைவனுக்கிதுபோகாது
நகையினுங் குறைவாராது நலனெனப்பேர்பெறாது
நிகரிலாச் சாசசானன் நினைவினுக்கிசைந்தமாது (என்)

சரணங்கள்.

௧. வாடியபயிர்க்குமழை வந்ததுபோலெந்தன்கிட்ட
வந்தெந்தனுறவைநண்ணு - என்சாமி சாமி
வந்தெந்தனுறவைநண்ணுய்
மோடியென்னசாலமென்ன மோசமென்னயென்முகத்தில்
முத்தங்கள்தருவாய் என்ன - என்சாமி சாமி
முத்தங்கள்தருவாய் என்ன
முத்தங்கள்தருகஎன்ன முக்கனிரசத்தையென்ன
நத்தியேகாந்தி லுன்ன நற்பொளித்சமைந்தயின்ன
சித்தாத்தனத்தைக்கண்ணு சிக்குறாதுக்குமொன்று
லொத்தியேசுகித்திபண்ணுஉத்தமகுணத்தில்பெண்ணுள் (என்)

௨. மெத்தையிற்படுக்கொணாமல் நித்திரையுஞ்செய்யொணாமல்
மெய்யினிற் சிவந்தமோகா - என்சாமி சாமி
மெய்யினிற் சிவந்தமோகா
மெய்யினிற்சிறந்தமோகா அத்திரங்கள் நாள்நாளாக
ஒன்றிரேண்டொன்றணுகிடாமல் - என்சாமி சாமி
அந்தரத்தெழுந்துபோக
அந்தரத்தெழுந்துபோக அங்கஜனுளம்புண்ணாக
உம்பருக்குகந்தபோக முண்டுசுகிப்பதற்காக
சம்பிரத்துடனேநாக சர்ப்பமணிந்தோன்தேக
மும்பிடித்தணைக்கும்யோக முக்கனியருள்மெய்யாக (என்)



௩. சொந்திருவாணைப்படிக்குன் சிந்தையதுதான்மிகத்
தெளிந்திடநடக்கிறேனே - என்சாமிசாமி
தெளிந்திடநடக்கிறேனே
இந்துவைப்பழித்திட விளங்குமுன்முகத்தினிமீ
தென்முகமடுக்கிறேனே - என்சாமி சாமி
என்முகமடுக்கிறேனே
என்முகமடுக்கிறேனே உன்னுயிர்கொடுக்கிறேனே
வர்ணமும்படிக்கிறேனே மஞ்சனஞ்சோடிக்கிறேனே
தன்னிலும்படுக்கிறேனே சந்தனம் வடிக்கிறேனே
உன்மைபல்துடைக்கிறேனே உன்கைகால்பிடிக்கிறேனே(எ)

சிங்காரபத்தியம்.

மழுவாளனெனுமீசன் சடைமேவுருளிசேர
வானுதல்படைத்திடும் வேதகாரணி
மகிபாலர்புகழ்சேரு மலராசன்மகளாக
வந்தவதரித்திடும் ஞானபூரணி
செழுநீலநிறமாயருள் பாலனயனார்தன்
சிரசொன்றுமறுத்திடும் லோகநாயகி
சினமனமதில்மீறிநுதல் சேரும்விழியாலே
திரிபுரமெரித்திடும் சிவமனோகரி
சிற்புத்திகள்கருதிவந்திடும் திருடனாலேயே
துப்புறவிவியிறைறு மூன்றுங்குவேளையில்
சற்புத்ரனானவன்வந்து தழுவிடாமலேயெந்தன்
கற்புப்பரிபோகலாச்சுதே கயிலையீசுவரீ.

---

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை அடதாளம்.

கற்புப்பறிபோகலாச்சே - ஓ ஓ மனமே
முக்கண்உமையே
யென்னசெய்வேன் - ராத்திரி
சொற்பனந்தனில்வந்த சோரனைச்சேர்ந்தேன் (கற்பு)

௧. வசுவார்க்குப்பட்டமனமே சொல்லக்கேளு
யென்னைவளர்த்த தாயுந்தகப்பன் வந்து
இருபிறப்பாளரைக்கேட்டு நற்றினமே கண்டு
காசினியறியத்தன்சனமே காணும்படியாய்
மனதிஷ்டமதாயென்னை மணமேல்வைத்து
கலியாணகாரியஞ் செய்திடுமுனமே. (கற்பு)

உ. சர்ப்பத்துக்கிந்திடும்பாலே போலுந்தானே
நிறைந்தபோரில் மூந்தியோடும்
சர்வசண்டாள பையல்கைக்கு
தந்திடும்வேலே போலுந்தானே
அற்பரைப்பல்லாக்கின்மேல்வைத்து
நலமாயுபசாரங்கள் செய்வதுபோலும்
ஓடும்ஆற்றில்கரைத்த பழம்புளிபோலேவீணில் (கற்பு)

௩. சூத்திரச்சேலையுரித்து அப்பாலெறிந்து
மார்பிலணைந்து அழுந்துதெனவே
சொல்லிச்சொர்ணக்கலன்களைத் தானேயற்றெறிந்து
மதனசாஸ்திரவந்தனை தெரிந்து அந்தப்படியே
எந்தனுடனேதானே சரசஸீலே
சாதிக்கமகிழ்ந்து - நான்
மெய்மறந்திருந்தேந்தன் (கற்பு)

சிங்காரபத்தியம்.

௧. பூர்வதியுன்னருளாற் கனவினினானகண்ட
பார்த்திபன்வதனவெழில் பகாவசமோ
மேர்தனைநிகர்த்தபுஜபல னேடுமெதிர்த்தசூரர்
வெற்றிகொண்டியிரோடு மீளவசமோ
சீர்பெறநடக்குமொழி லளவுநிலையிதுவென்று
செகமெலாந்தாங்குவோன் செப்பவசமோ
தார்புகழுமமுச்சயோகா விசேஷத்திரை
சாஸ்வதியம்மனாற் சாற்றவசமோ.

தன்னழகுதான்மதிக்க வந்துதானுமொருவனே
என்னழகுதனைமதிக்க அவன்மனதிற்கேற்கவிலையோ
முன்னழகுதனைமதிக்க அதிகமோகமாகும்
பின்னழகுமதிகமனம் பிரியவிலையே பிரபலஈஸ்வரி

௩௫-இ-ம்-எதுகுல்காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

க. இதாஎவர்செயலென்று பொருளிழந்தார்போலும்
என்னுது என்னுதம்மா - அம்பிகைத்தாயே
என்னுதும் என்னுதம்மா



உ. மதியைமயக்கிப்பின் மறைந்தோனைமறவாமல்
மனதுவருந்துதம்மா - அம்பிகைத்தாயே
மனதுவருந்துதம்மா

௩. கூடிக்குலாவிய இன்பந்தனைநினைந்தாற்
கொங்கைதளருதம்மா - ஈஸ்வரித்தாயே
கொங்கைதளருதம்மா

௪. தோடிராகத்தாலே பாடியலுங்கிடும்
தொண்டையுங் கம்முதம்மா - ஈஸ்வரிதேவி
தொண்டையுங் கம்முதம்மா

௫. சொப்பனந்தனில்வந்த சோரனழகுதன்னை
சொல்லமுடியாதம்மா - அம்பிகைதேவி
சொல்லமுடியாதம்மா

௬. அற்புதனெழில்தன்னை யெப்போகாணுவோமென்று
ஆவிபதறுதம்மா - ஈஸ்வரித்தாயே
ஆவிபதறுதம்மா

எ. சேர்ந்தணைந்தவிதத்தை நினைக்கநினைக்கஎன்
தேகந்தளருதம்மா - ஈஸ்வரிதாயே
தேகந்தளருதம்மா.

அ. காந்தன்வடிவம்போற் பார்த்ததிசையெங்கும்
கண்ணுக்குத்தோணுதம்மா - அம்பிகாதேவி
கண்ணுக்குத்தோணுதம்மா.

௯. மதனக்கணைகள்தன்னை விலக்குந்திறமைசொல்ல
வாய்லட்சம்போதாதம்மா - பார்வதிதேவி
வாய்லட்சம்போதாதம்மா.

௰. அதரக்கனிகடித்த பதனத்தினைநினைக்க
ஆவிபதறுமம்மா - ஈஸ்வரியேயென்
னாவிபதறுதம்மா.

௰க. நாலாவிதத்தினிலும் மேலாம்[illegible]தத்தைப்பார்த்தால்
நமக்கானபுருஷனம்மா - லட்[illegible]தீரன்
நமக்கானபுருஷனம்மா.

௰உ. காலாலேசெய்யச்சொன்ன வேலைமுழுதும்நானே
கையாலேசெய்வேனம்மா - ஈஸ்வரிதேவி
கையாலேசெய்வேனம்மா.

௰௩. கும்பஸ்தனங்கள்தன்னை நம்பும்பாங்கைகினைக்க
கொண்டைகுலையுதம்மா - பார்வதிதேவி
கொண்டைகுலுங்குதம்மா.

௰௪. செம்பவளவிதழைக் கவ்வும்பாங்கினைநத்திச்
சிந்தையுருகுதம்மா - பார்வதிதாயே
சிந்தையுருகுதம்மா.

௰௫. கடிந்தோடுந்திருடனைத் தொடர்ந்தோடவில்லையென்றென்
கால்கள்பதறுதம்மா - அம்பிகைதேவி
கால்கள்பதறுதம்மா.

௰௬. நடந்தோடுந்திருடன்றன் காலைசிக்கலையென்றே
நயனங்கலங்குதம்மா - அம்பிகைத்தாயே
நயனங்கலங்குதம்மா.

௰௭. மன்னவனூர்கேட்க மறந்திருந்தோமென்று
வாயும்பதறுதம்மா - பார்வதிதேவி
வாயும்பதறுதம்மா.

௰௮. பின்னல்சடையிற்கட்ட மறந்தேனென்றென்னாவி
பெருமூச்சுக்கொள்ளுதம்மா - அம்பிகைத்தாயே
பெருமூச்சுக்கொள்ளுதம்மா.

௰௯. கட்டழகனைத்தாவும் மெட்டுநழுவிச்சென்றென்
கைகள்பதறுதம்மா - அம்பிகைதேவி
கைகள்பதறுதம்மா.

௨௰. இஷ்டத்தையினியெப்போ தனுபவிப்போமென்றென்
னிருதயங்கோருதம்மா - பார்வதிதேவி
இருதயங்கோருதம்மா.

௨௧. இனத்தைவிட்டுப் பிரிந்திட்ட மான்போலநான்
எப்படிபிழைப்பேனம்மா - ஈஸ்வரிதாயே
எப்படிபிழைப்பேனம்மா.

௨௨. நினைத்துப்பார்க்கப்பார்க்க நிஜமாகச்சொல்கிறேன்
நீசெய்தகபடமம்மா - ஈஸ்வரன்றேவி
நீசெய்தகபடமம்மா.

௨௩. எழிலும்மொழியுமாண்மை குணமிவைநான்கிலொன்
றெதைமறந்திருப்பேனம்மா - பார்வதித்தாயே
எதைமறந்திருப்பேனம்மா.



௨௪. உளமுழுமெழுநாக வருகுதுவினைத்தாக்கால்
உயிருமபதறுதம்மா - அம்பிகைதேவி
உயிரும்பதறுதம்மா.

விருத்தம்.

சத்தியமினியேமர்வின் தங்கையே நீதான்செய்த
மித்திரமல்லால்வேறோர் மித்திரமல்ல கண்டாய்
வெற்றிசேர்வரமும்நீதான் வேண்டியீந்ததைத் தவிர்த்தால்
குற்றமேசேர்வதல்லால் கோதைநா னென்செய்வேனே.

வசனம்.

அகோவாருமம்மா தாயே சர்வலோக தயாபரி லோகநாயகி! பராசக்தி சிவமனோகரி இந்தக் கபடநாடகம் நீசெய்தது அல்லாமல் வேறேயொருவர் செய்ததல்லவே எனக்கு மனது இஷ்டமாகிக்கொடுத்த வரப்பிரசாதத்தை பின்னும்நிறைவேறுமல்செய்தால் நான் என் வாயின் ... றிலும் என்னையே கொந்துகொண்டு உயர்விடவே ... லாமல் வேறே நான் என்னசொல்லப்போகிறேனம்மா தாயே.

அகவல்.

ஆதிசுந்தரிசக்தி அம்பிகைதேவி
வேதநாரணிஞான விமலமாதங்கி
பார்வதிகௌரி கபாலிசாமுண்டி
சிர்வாணிமகிடன் சிரசற்றகோரி
சாம்பவிநீலி சருவஆனந்தி
பாம்பணிந்திடுநற் பசுபதிபாரி
வெற்புராஜேந்திரன் வேண்டுசெந்திருவே
முப்புரமெரித்த முக்கணீஸ்வரியே
அன்னையேயென்னை ஆசித்தணைந்த
மன்னவன்இப்போ மாயமானதுதான்
காரணீசெய்த கபடமல்லாமல்
வேறொருவர்செய் வித்யாமலவே
சோதியேயுனது சொல்லினை ...திக்க
யேதுதோதுகளும் எவராலுமில்லை
அரிவைசொன்னேனு ...லால்மன்னவன்
மறைவதாகிய துன் மகிமைதானம்மா
உன்சொல்பொய்போயின் உலகமேயில்லை

என்சொல்பொய்போய் இப்படியாச்சே
செப்பரிதான திருவுளம்பிரியந்
தப்பிதமென்ன சாதித்தேனம்மா
பண்ணினதவசு பலியாததேனோ
எண்ணினவெண்ணம் ஈடேறவில்லை
அன்னையேயெந்த னாசைவிணாச்சு
கன்னியாமெனது கற்புவிணாச்சே
எந்தன்மெய்வீணி விளைந்தேனம்மா
கொண்டையும்வீணிற் குலைந்ததென்னம்மா
செண்டுகள்வீணிற் சிறுத்ததென்னம்மா
மதிமுகம்வீணில் வாடுதென்னம்மா
குதிகொளுந்தயிரியங் குறைந்ததென்னம்மா
அந்தரக்கள்ளன் அழகினைநத்தி
சுந்தரம்வீணிற் றுலைந்ததென்னம்மா
இத்தனைவிதத்தி விரடுதாவெனக்கு
பத்தாததற்குப் பகைகாரர்வேறே
இருக்கவுந்திருடன் எழிலதுதன்னை
மறக்கவுமெனக்கு மனதில்லாதலே
அதனமாய்மோக அனலதுமீறி
மதனபாணங்கள் வந்துபட்டுது
பூவடமோடு பொற்பமர்பவளத்
தாவடமோடு தாளமாவடங்கள்
கலனணிமுழுதுங் கனல்மாருதமாய்
சலவைசந்திக்குளிர் சசிதணலாகும்
தெருவெங்குமிங்குத் தென்றல்வீசிடுது
கருவண்டினங்கள் கவிபாடுதம்மா
குயிலினம்வந்து கூவுதாம்[illegible]
மயிலினம்நடன மாடுதென்னம்மா
வெளியோருமென்னை[illegible]கழ்ச்சிபேசிடவும்
கிளிகளென்னோ[illegible]கிருதுபேசிடவும்
இத்தினைவிதனத்திற் கிடந்தேனம்மா
மித்ர்சகசு மேலாச்சதம்மா
என்புத்திகொண்டுதா னென்செய்வேனம்மா
உன்சித்தமென்பாக்கியம்பூமைமையேயீஸ்வரியே



சிங்கார பத்தியம்.

ஆதிபரமேஸ்வரி அகிலாண்ட வீஸ்வரி
சிதசந்திரவதனி சேதாகினி பஞ்சாக்ஷரத்திரி
பரமேட்டிதன்னைகீ மெய்ஞ்ஞான வாசகி
மீனலோசனி காதல கபாலி
கனதத்திரிசூலியே திரிபுராந் தகனெனும்
சிவமனோகரி நித்ய கல்யாணியே
நீலிநிர்வாணியே சத்திகௌ மாரியே
சங்கரிநீபரா பரமும் நீயே
நீயுயிரளித்திடில் நின்றையே தம்மா
நீயுயிருண்டாக்க நேரமாகுமோ
நீயுயிர்காப்பதும் நிசமதானையால்
நீசெய்தபடிதானம்மா நிமலிபீஸ்வரி.

வசனம்.

[illegible]சிகாவாருமம்மா பார்வதிதாயே! சர்வலோக தயாபரி லோக [illegible]ராணி எந்தலோகமும் உண்டாக்கிக் காத்து அழிப்பவள் நீயே யா னையால் இந்தச்சூதும் உன்னாலேயே நடந்ததென்று உடாங்கனை பி ன்னுஞ்சொல்லுமிற தெப்படியென்றால்,

தரு-நீபவந்த-இ ீ-பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. ஈஸ்வரனுக்குஇடப்பாகம் வாழ்கின்றஈஸ்வரி - தாயே
பெத்தன்மீதுந்தனுக் கித்தனைவர்மமேன் ஈஸ்வரி
௨. சாஸ்வதமென்று நீ தந்தவரந்தன்னை ஈஸ்வரி - நீ
தானேபயகரிக்கால்நானென்செய்குவேன் ஈஸ்வரி
௩. மாயனுக்குச்சொந்த மைத்துனனாகிய ஈஸ்வரா - லோக
மாதாவுந்தன்தேவி ஆதியில்வந்தவள் ஈஸ்வரா
௪. வாயிற்பிறந்திடும் வார்த்தைநல்லாருக்கால்ஈஸ்வரா - சற்றும்
மாறுதெனதுயாருடன் சொல்லுவேன் ஈஸ்வரா
௫. எப்புவனத்துயி ரெல்லாமும் சிருஷ்டிக்கும் நான்முகா - நீதான்
என்னைச்சிருஷ்டித்தது உன்னைவொந்தமுகவோ நான்முகா
௬. கற்புவிணாகக்கனவினிற் போச்சென்று நான்முகா - இளம்
கன்னியமுத்துயர் உன்னைக்கூடாதோசொல் நான்முகா

எ. மாதவனுக்கு மருமகளாகிய சரஸ்வதி - யார்க்கும்
மாபாவம்பெண்பாவம்ஆகாதென்றேசொல்விசரஸ்வதி

அ. வேதன்றனக்கு விளம்பிறலாகாதோ சரஸ்வதி - வயிர்
வெந்துஅழும்பாவம்உந்தனுக்கில்லையோ சரஸ்வதி

கூ. மருகுதனன்றனே மார்பிலணைத்திடுந் தாரணி - பூமி
மாதேவுனக்குநான் பாதகமென்செய்தேன் தாரணி.

க0. சதிபாதகங்களைத்தாங்கிப் பொறுப்பதேன் தாரணி - எந்தன்
சஞ்சலமெல்லாமுன் நெஞ்சமறியாதோ தாரணி

கக. நீராவழக்கிலும் தேவர்நினைந்திடும் வானமே - நானே
சிந்தையிலுந்தனைநொந்து இகழ்ந்தேனோ வானமே

கஉ. ஆராத்துயரிலகப்பட்டுக் கொண்டேனே வானமே - இந்த
அனியாயந்தீர்க்கவேயுன்னாலுமாகாதோ வானமே

கங. சித்தசனென்பது ஜகதலமறியாதோ மன்மதா - இப்போ
தெரிவையர்மேற்சண்டை பொருதிறலறிவாரோ மன்மதா

கச. பத்தினியெனுமிளம்பாவையென்றெண்ணமல் மன்மதா-நீதான்
பஞ்சபாணங்களை அஞ்சாமல்விடலாமோ மன்மதா

கரு. ஏதெந்தன்மீதிலித்தனைகோபந்தான் இந்துவே - நாட்டி
லெல்லோருநல்லார்கள்[illegible]நான்றானோ இந்துவே

கசு. சீதக்குளிர்ச்சியைத்திகைத்துக்கைவிட்டாயோ இந்துவே-எந்தன்
தேகமுழுதுந்தானேகச்சுடலாமோ இந்துவே

கஎ. தர்மதியானுன்னைத் தூஷணைஞ்சொன்னேனோ தென்றலே-உன்
தோதகஞ்செய்யாத மாதுமேல்வாதென்ன தென்றலே

கஅ. மன்மதவாதையில் மதிகெட்டவேளையில் தென்றலே - மெய்
வாடவும்மென்மேலாய்ச் சாடிடலாகுமோ தென்றலே

ககூ. வரவேணுமென்றுவருந்தியழுந்தாலுங் குயில்களே - அப்போ
வந்துகூவாமலே சந்தில்நழுந்தோடும் குயில்களே

உ0. ஒருமொழிசொல்லவாயோய்ந்திடும்வேளையில் குயில்களே-கொ
ஓய்வுமில்லாமலே கூவுதல்ஞாயமோ குயில்களே [ஞ்ச

உக. நாளொருவண்ணமாய் நானேவளர்த்தேனே கிளிகளே - அந்த
நன்றிகளுள்ளத்தில் ஒன்றுமெண்ணாமல் கிளிகளே

உஉ. ஏழைபோலாகினேனென்னைக்கொண்டிடும்வேளைகிளிகளே-மிஞ்ச
ஏசவுங்கிருதுகள் பேசவுஞ்ஞாயமோ கிளிகளே



உங. சீர்சிறப்போடுஞ் சினுக்கெடுக்கில்லையோ உடைமையே - உனைத்
திட்டமதாய்த்தினந்தொட்டுப் பார்க்கில்லையோ உடைமையே

உச. மார்பிலழுந்தினால் மார்புநோகாதோசொல் உடைமையே-எந்தன்
மனஞ்சலித்திடும்வேளை கனங்கொள்ளலாகுமோ உடைமையே

உரு. குடியுமுழுமைத்துதித்துப்புகழ்ந்தேனே மலர்களே - கையில்
தொட்டதல்லால்வாசம் மட்டெடன்றுரைத்தேனோ மலர்களே

உசு. வாடியும்வெம்பிமயங்குவதேன்சொல்லீர் மலர்களே - நான்
மதிநொந்தவேளையி லுதிர்ந்திடலாகுமோ மலர்களே.

உஎ. சந்தனங்கஸ்தூரி சவ்வாதுள்ளாழ்ந்திடுங் கலவையே - உன்னைச்
சாசனமாகவேபூசினதில்லையோ கலவையே.

உஅ. எந்தன்மீதுந்தனுக் கித்தனைவர்மமேன் கலவையே - நீதான்
ஏராளமாகநீ ரீராகவடிவதேன் கலவையே.

உகூ. தூங்குமஞ்சனந்தானேசொகுசுடன்தாங்கியமெத்தையே-நானோ
தூஷணமாயுன்னை யேசினதுண்டோசொல் மெத்தையே.

ங0. பாங்கான அரசர்கள் [illegible]ங்கவும்அழகான மெத்தையே - நானே
படுத்தாலிண்டம்முள்போ லிடித்திடலாகுமோ மெத்தையே.

ஙக. இத்தனைபகையா[illegible]ய்ச்செய்ய் பிராணனே - உலகில்
எப்படிநீதானே [illegible]ப்பிழைப்பது பிராணனே.

ஙஉ. பத்தினித்தனத்[illegible]க்குலைத்தோனைமறக்கவேபிராணனே-நீதான்
பாங்கறியாமலே பே[illegible]காலமிதுதானோ பிராணனே.

விருத்தம்.

எப்போ[illegible]ன்கனவில்வந்தா னெழில்தனைக்காண்பனென்று
எப்போநான[illegible]க்கூடி இந்திராணிந்திராணிபோல
எப்போநான்பிழைப்[illegible]ன்று எண்ணியேமதிமயங்கி
ஒப்பிலாவடிவமா துடாங்கனைசோபித்தாளே.

வசனம்.

ஆகாகா! இந்தப்பிரகாரம் என்னுடைய கனவிலேவந்த புண்ணியபுருஷனுடைய ரூபலாவணியத்தை எப்போ கண்ணினால் காண்பேனென்றும் தேவேந்திரனு மிந்திராணியும்போல எப்போ நாம் அவனைக்கூடிப்பிழைப்போமென்றும் மனநிலையெண்ணுதெல்லாமெண்ணி மதிமயங்கி உடாங்கனை சோபங்கொள்ளப்பட்ட மார்க்கமெப்படியென்றால்.

தரு-இ-ம்-இந்துஸ்தான்-காப்பி-ஏகதாளம்.

கண்ணிகள்.

க. தூங்கையிற்கண்டதர்க்கா புடாங்கனையெனுஞ்சித்ரம்
சோபமாகினுள் ராணியைத்துதிப்பாள்
சோபமாகினுள் த்ராணியைச்சாதிப்பாள்
சோபமாகினுள் வீணையைச்சாதிப்பாள்
சோபமாகினுள்

உ. முளைத்துச்சிலநாளாகி மழைத்தூரல் காணுப்பயிர்போல்
முகமும்வாடினுள் கொஞ்சமும்பேசாள்
முகமும்வாடினுள் மஞ்சனும்பூசாள்
முகமும்வாடினுள் குஞ்சமும்வீசாள்
முகமும்வாடினுள்

ங. விளக்கேபுவியிற்பெண்ணுய் செனிக்கலாகாதென்றெண்ணி
விதியைநொந்தாளே கௌரியைத்தினம்தியானி
விதியைநொந்தாளே கௌரவதுரைசானி
விதியைநொந்தாளே பவதிக்நேசமானி
விதியைநொந்தாளே

ச. கதிரோனிப்போஜன்மத்தி ... ன்றுதலைமேல்
காங்கள்வைத்தாளே மலர்போலிரண்டு
காங்கள்வைத்தாளே ருவிழிநீர்திரண்டு
காங்கள்வைத்தாளே கெந்தரைமேற்புரண்டு
காங்கள்வைத்தாளே

ரு. பிரியாவஞ்சுணமாக மருவுஞ்சேவலைக்காணுப்
பேடன்னம்போல மினலெனவீவீர்வர்ணப்
பேடன்னம்போல மையிபாடுமினாதின்றுப்
பேடன்னம்போல மனதுலைமெழுகென்னப்
பேடன்னம்போல

சு. நித்தியந்தவமிருந்து பெற்றதாய் தகப்பன்மேல்
நினைவில்லாமலே சென்முளைப்பிரகாரம்
நினைவில்லாமலே சொல்லியசொல்லின்சாரம்
நினைவில்லாமலே அல்லொடுபகல்நேரம்
நினைவில்லாமலே

தூங்கையிற் கண்டதர்க்கா.



விருத்தம்.

இந்தவிதம்மலரணைமேல் மயங்குமாதை
யிந்த்ரவல்லிமந்த்ராகரணி மோகனஸ்ரீ
பந்தடாரிநிலவர்ணி யெனுமனேகம்
பாங்கியர்களோடிவந்து பண்பாய்த்தாங்கி
சந்தனம்பன்னீர்தெளித்து விசிரிவீசி
சலவைசெய்யச்சோகமது தணியாதாலே
எந்தவிதத்தாலிதைநாம் தீர்ப்போமென்று
எண்ணங்கொண்டு பாங்கியர்களியம்புவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தூங்குமஞ்சத்தின்பேரில் மயங்கிவிழுந்த உடாங்கனையை பந்தடாரி நிலவர்ணி இந்திரவல்லி முதலான பாங்கிமார்கள் கூடிவந்து தாங்கிப்பிடித்துக்கொண்டு சந்தனத்தெளிவு இறைத்தும் பன்னீர் தெளித்தும் விசிரிகள்கொண்டு விசிரியும் சோகமானது சிறிதும் தெளியாமல் பாங்கிமார்கள் திகிலடைந்து சொல்லுவதெப்படி யென்றால்.

தரு-இ-ம்-நாத ...மக்கிரியை-ஏகதாளம்.

கண்ணிகள்.

க. உத்தமவடிவா முட...கைத்தாயார்க்கு
இந்நிலைசோபமுட் ... வந்ததையோ

உ. காணவுமரிதான ... லைக்குப்போனுளே
சோணிதாபுரிநோக்கித் துரைசானிவந்தாளே

ங. வந்து ...ஞ்சனமீது மயிலென்சாய்ந்தாளே
அ... ந்துநித்ரை செய்யத்தொடங்கினுளே

ச. செய்யும்நித்ரைதெ... திடுக்கென்றெழுந்திருந்து
மையுடுங்கண்களை மாதுதிறந்தாளே

ரு. கண்கள்திறந்தென்ன காண்மென்றுளே
எண்ணுதும்எண்ணிப்பின் னேழைபோலானுளே

சு. விஞ்சைமந்திரங்கற்ற வீராதிவீரர்செய்த...
வஞ்சகமோவென்று மனதிற்குறித்தாளே

எ. சாதனீலையிற்சிக்கிச் சுக்கிறையனுபவித்து
உருவந்தனையிழந்து பாவனையானுளே

௮. விழிகளிரண்டையும் விரைவிற் றிறக்குமுன்னே
ஒழியலாகுமோவென்று ஓங்கியுரைத்தாளே

௯. உளமுழுமையுமுகாக வுருகிச்சோகமிருந்து
மலரணைமேற்சாய்ந்த மார்க்கந்தானென்னவோ.

௰. தாங்கத்தாங்கக்கேசஞ் சுவங்கிக்குனியுதே
திங்காகவேநடு கிரகுமொதிக்குதே.

௧௧. எள்ளளவுந்துய் செங்கட்குத்தெரியில்லை
மெள்ளமெள்ளக்கண்கள் விழித்துமறைப்பதேன்.

௧௨. சந்திரன்மதியினில் முகில்சாடுவதேபோல
கந்தத்துள்ளேமுகக் காந்திமறையுதே.

௧௩. தண்ணீர்தனையகன்ற தாமரைபோலவே
வுண்பதையும்விட்டு வுடலும்உருகுதே.

௧௪. செயதுரை தானிந்த தீங்கைநாதினிற்கேட்டால்
உயிர்ச்சேதம்வந்திடும் உடனேதானையையோ.

௧௫. அகிலத்திலேவிதிப் பிரகாரம்முடியுது
சகிசித்ரரேகையும் தானிவரக்காணேமே.

விருத்தம்.

தாங்கலாற்றமுவல்லாரும் சலவையால்விசிறியாலும்
நீங்கிடாதிருக்குஞ்சோகம் நீங்கியேநலமதாக
பாங்குவேறறியோமென்று பாங்கியர்தவிக்கும்போது
திங்கிலாவடிவம்போன்ற சித்ரரேகையும்வந்தாளே.

வசனம்.

இந்தவிதமாக மூர்ச்சித்துவிழுந்திருக்கும் உஷாங்கனையைப் பன்னீர்கொண்டு வீசி அனேக சைத்தியோபசாரங்களைச்செய்தும் சோபங்தெளியாம லிருப்பதைக்கண்டு திடுக்கிட்டு இதை வாணாசுரனறிந்தால் கிரசாக்கினைவருமேயென்று பாங்கிமார் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறபோது சித்திரரேகை வருகிற,

சஙு-இ-ம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

வந்தனள்சகி சித்திர ரேகையே - சகனவிருந்தை
மந்த்ரதந்த்ரம்பாராட்டுந்தோகையே.



அநுபல்லவி.

இந்த்ரகருக்குத் தான்துணைபோகும் - குபேரனுன
சந்த்ரகருக்குத் தானிணையாகும் - வாணாசுரனும்
இறைவன்சோணித புரியின்வீதியில்
சாதமாதெழில் இரதிபோலவே
கிரதகிடதாதிமி கிரதகிடதாமென
கிரதகிடதோதிமி கிரதகிடதோமென (வந்தன)

சரணங்கள்.

௧. மோனையெழிலைச்சந்திரன் பார்க்கவே - நடந்து வந்த
தானையெழில்அன்னங்கள் காக்கவே - தேகச்சுடராம்
பேரொழிநுங்கே சொர்ணங்கள்தோற்கவே-வார்த்தைநகள்பேசு [ம்
சிமொழிலைக்கிள்ளையினங்க ளேற்கவே - பூபாலர்மெச்ச
சித்ரவேலைநன்றாய்த் தெரிந்தாள்
மித்ரபேதகத்தோ தறிந்தாள்
தத்திமி திகுதிகு தாகிரதகிட தாமென
தித்திமி திகுதிகு கிரதகிட தோமென. (வந்தன)

௨. மெட்டிமீலிவிரலி லுன்னவே - பிடியிடையில்
கட்டுஞ்சேலைநெகுநெகென்னவே - பனிரண்டுவரிசை
அட்டிகைகழுத்தில் மின்னவே - நுதலிற்சொர்ன
சுட்டியுந்தளத ளென்னவே - கண்களைத்திட்டி
சொக்கமான கலவைபூசி
சக்காந்தங்கள் நன்றாய்ப்பேசி
தக்கு தகுதிகு தாகிடித கிடதாமென
தொக்கு திகுதகு தோகிர்தகிட தோமென (வந்த)

௩. நடையோடுந்தங்கவுடந்து ளாடவே - மாம்பின்னலான்ற
சடையோடுநாகபடங்க ளாடவே - மின்னலைவென்ற
வுடலோடுங்கொங்கைக்குடங்களாடவே - பேசியசந்த
மிடரோடுமுத்துவடங்க ளாடவே - ஒய்யாரநெற்றி
மீது திலகம் பளீர் பளீரென
பாதசரங்கள் கலீர் கலீரென
தாத்தைய தையதோம் கிரதகிட தோமென
தோத்தைய தையதோம் கிரதகிட தோமென (வந்தன)

சிங்காரபத்தியம்.

பேசாதவுயிர்மீதிலும் பேசுமுயிர்கட்கும்
　பெருங்கிலேசமுமுறும் பேர்களுக்கும்
ஆசாரமாகிமனு நீதியானதுதவ
　றுமலேமன்னவர்க ளாசையாளும்
தேசாதிதேசம்ஙளதுவோ வ்தனிலேநல்ல
　தேன்புனல்பெருகும்நதி யோரமதிலே
மாசிபங்குனிசித்திரை வைகாசியிதுநான்கு
　மாதங்களாகும் வசந்தகாலம்
　　பிறந்துவளர்ந்துஅதிக பிரபலமாக
　　விரிந்துகனமாகிய விருட்சமதிலே
　　குறைந்திடாமலர்பூத்த கொம்புபோல
　　பிரிந்துசித்ரரேகை பேதைநின்றாளே.

வி[…]த்தம்.

இந்தவாறனந்ததந்த்ர இந்திரஜாலப்பாங்கி
வந்துமுன்னிரையப்பூத்த மாங்[…]ம்புபோலேநின்று
சந்திரவதனமா துடாங்கனைமெய் தான்தாழ்ந்து
சோர்ந்துசேர்ந்திருக்கக்கண்டு நுண்மையாய்நவலுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வந்த சித்திரரேகையானவள் உடாங்கனை சோர்ந்துகிடப்பதைக்கண்டு சொல்லுகிற விபரம் எப்படியென்றால்.

விருத்தம்.

தேட்டமாய்ச்சொன்னவேலை செய்யும்பாங்கிபரேகேளீர்
தாஷ்டிகமிருந்தமாது டாங்கனைத்தாய்தானிப்போ
மேட்டிமைகுறைந்ததேனோ மெய்தளர்ந்தோய்ந்ததேனோ
வாட்டமேசோர்ந்ததேனோ நமக்குநீருரைசெய்வீரே.

வசனம்.

அகோவாருங்கள் தோழிமார்களே இப்போது நம்ம உடாங்கனைத்தாயார் இவ்விதமான மயக்கமூர்ச்சையடைந்து சோர்ந்துகிடக்குங் காரணமென்னத் தெரியச்சொல்லும் பாங்கிமார்களே.

விருத்தம்.

மந்த்ரதந்த்ரங்கற்றுணர்ந்த தாயேநாங்கள்
　மலரெடுத்துன்மண்டபத்தில் வரும்போது
சுந்தரனேயொழிய லாமோவென்று
　சொல்லநம்மநாயகிக் கோபமானாள்



சிந்தைநகளுங்கலங்கியம்மை தேகந்தன்னை
　சீக்கிரத்தில்தாங்கியிருந் சலவைசெய்தோம்
நிந்தைதருஞ்சோபமது நீங்காதாலே
　நீயும்வரக்காணுமென நினைந்திட்டோமே.

வசனம்.

அகோவாருமம்மாசித்திரரேகாய்! நாங்கள் பற்பலபுஷ்பங்கள்தேடியெடுத்துக்கொண்டு ஆரமனைக்குள் வருகிறபோது, உடாங்கனைத்தாயானவள் தனக்குத்தானே வார்த்தைசொல்லிக்கொண்டு இப்படிக் கண்திறக்குமுன்னே ஒழியலாமோ திருடாவென்று மதிமயங்கிச்சோபமானாள், நாங்கள் அனேக சைத்தியோபசாரங்களைச்செய்தும் சோபநீங்காதபடியால் உன்னுடையவரவுக்கு எதிர்பார்த்திருந்தோமம்மா சித்திரரேகாய்—இப்படிச் சொன்ன பாங்கிகளைநோக்கிச் சித்ரரேகை சொல்லுகிற.

சிங்கார[…]த்தியம்.

சகிமாரேகம்முடை[…] தாயுடாங்கனைமாது
　மிகவுமேசோப[…]மாம் விதமேதெனில்
வாசுதேவன்செய்[…] மனவஞ்சமிதுவல்ல
　ஈசன்றான்செய்[…] பிசகிதல்ல
அம்பிகைசெய்திட்ட அனியாயமிதுவல்ல
　பிரமதேவன்செய்த பிசகிதல்ல
விண்ணோர்கள்தான்செய்த வித்யாசமிதுவல்ல
　மண்ணாளர்செய்திட்ட வஞ்சமல்ல
　　துன்மதியினோர்செய்த தொழிலிதல்ல
　　கன்மநோயல்லவிது காச்சலல்ல
　　சென்மமதைமாய்த்திடுஞ் செய்கையல்ல
　　மன்மதன்செய்திட்ட வஞ்சமிதுவே.

வசனம்.

ஆ-ஆ-கேளுங்கள் பாங்கிமார்களே! நம்மதுரை மகளுக்கு வந்திருக்கிறமயக்கத்தைப் பார்த்தால் இது பிரம்மாவிஷ்ணு ருத்திரர்களாலும் தேவர்களாலும் மற்றவர்களாலும் நடந்தபிசகுகள் அல்லவென்று தெரிகிறது பின்னே யென்னவென்றால் அந்தமதம்பிடித்த மன்மதனால்வந்த வினையே யிதுவென்றறியுங்கள் பாங்கிமார்களே. அல்லாமல் இது எவர்செய்த வினையாயிருந்தாலும் எட்டடிப்பட்ட வகையா

ருந்தாலும் நான் அதைக்குணப்படுத்தி விடுகிறேன் நீங்கள் உங்கள் காரியங்களைப் பார்த்து விட்டுவாருங்கள் தாதிமார்களே—அப்படியே நல்லதம்மா சித்திரரேகாய்.

விருத்தம்.

பலபலவேலைக்காகப் பாங்கிமார்தன்னையேவி
மலரணைமீதிற்சாய்ந்து மயங்கியமாதைப்பார்த்து
கலகமேயாய்ந்துபார்க்கக் காமன்செய்கலகமென்றெண்ணி
சிலைநுதல்சித்ரரேகை திர்ஷ்டிதான்கழித்திட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திரரேகை பாங்கிமார்களுக்கெல்லாம் வெவ்வேறு வேலைகளைக் கட்டளையிட்டு உஷாங்கனையின் மயக்கத்தைப் பின்னும் நன்றாயாராய்ந்துபார்த்து இதுமன்மதவாதனைதானென்று நிட்சயித்து உஷாங்கனைக்கு திருஷ்டிகழிக்கிற,

தரு—இ-ம்-இந்துஸ்தானி காப்பி ஏகதாளம்.

திர்ஷ்டிகழித்தனளே சித்ரரேகை
தெய்வமேனகைக்கிணையாந் தோகை
அஷ்டதிக்குபாலர்களைத் துதித்தும்
ஆகாபூமிதனையுந் துதித்தும்
அரிஅரனிந்திரனிவர்களைத் துதித்தும்
இரவியோடிருநான்கையுந் துதித்தும்
இருதுதாரெழுரேழையுந் துதித்தும்
சுரரொடுமுனிவர்களையுந் துதித்தும்
அனலாங்கொழுந் தங்கையிலேந்தியெ
குணசாலியுஷாங்கனைக் கொடிக்கு. (திர்)

பழப்கூரைத்துள் ஒவ்வொருசேரை
பரிவால்த்தொங்கல்தா னிரண்டுசேரை
மிளகாயொன்பது மூன்றுசேரை
மிகுக்கும்வீதிமன் ஞான்குசேரை
முறையாயிந்த மூன்றையும் தரைசானி
உடல்முகந்தலைக்கொரு ஏழ்தரமாக
வலமிடம்சுற்றியே ஒரேழ்தரமிப்படி
இடம்வலம்சுற்றியே ஏரேழ்தரமாக
பற்றியெறிந்திடும் தழல்மிசையினில்
வைத்தனள்புகையெங்கும் வளர்ந்திட. (திர்)



கள்ளியென்றிவளைச் சொல்லும்பேர்கண்
கைகலந்திட நினைக்கும்பேர்கண் - இவளை
தெள்ளிமையே நிந்தித்தபேர்கண் - இவளைச்
செய்யும்வேலைபொய் யென்றபேர்கண் - சீதரியோட
தேவருஞ்செய்திடு வார்கண் - நடந்தோட
மனதுருகிடுவார்கண் கரந்தோட - தினக்
கருதிடுவார்கண் யிரந்தோட - நெஞ்சில்
நினைந்திடுவார்கண் கருவழிந்திந்தக் கண்களெல்லாம் செந்நெற்
பொரிபொரிந்திடல் போலவும்போமென. (திர்)

அங்கசனேயும்நாடாதே ஐந்தில்நீயொன்றுந்தேடாதே
திங்களேநீவந்துகூடாதே தென்றலேநீவந்துஞ்சாடாதே
செங்கதிரே நீவெருகாதே
வெங்கலியே நீவெருகாதே
புங்கவனே நீவெருகாதே
சங்கரியே நீவெருகாதே
அல்லாதவிரோத மிவ்வேளைக்கு
நல்லோரெனவே சூழ்ந்திடுவாயே. (திர்)

அகவல்.

அண்டரோகரே அசுரரேஅரக்கத்
தொண்டரேமந்திரந் தோதிஞ்சிவனை
பார்த்தகண்ணேறு பல்லேறுதன்னை
தீர்த்திடும்விதங்கள் செய்துபின்பாங்கி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னாற்செய்த
சித்திரவேலை சிறந்தசப்பரத்தில்
மீதுபஞ்சணையா மெத்தையைக்கிடத்தி
தூதிமெத்தையின்மேற் சுருக்கொலாகிபிர்த்தி
அதன்மிசைச் சமுக்காளத்தினைவிரித்து
சதுரமாயதன்மேற் சகலாத்தைவிரித்து
பதனமாயதில் துப்பட்டியைவிரித்து
அதன்மிசையெழில்மாந் தளிர்களையைவிரித்து
அதன்மிசையிளஞ் சல்லாவினைவிரித்து
இதன்மிசைதகவிழி விதழ்களைப்பரப்பி
அதன்மிசைபாரிசாத மாமலர்கள்
உதிரியேமாந்தளிர் ஒருமையாய்க்குவித்து

பூமியிலனைவரும் புகழ்மலர்மீதே
தாமரைமலர்கள் தன்னையே தூவி
இரண்டுஐம்பதெட் டிதழ்மலர்மீதில்
திரண்டசெண்பகங்கள் சிறப்புடன் தூவி
செழுமைமிகுசெண் பகமலர்மீது
அழகினில்மிகுமல் லிகைமலர் தூவி
அல்லிமாமலர்க ளாவதின்மீதில்
முல்லையின்மலரை முக்யமாய்த் தூவி
முல்லைமலரின் முனைமழுங்காமல்
மல்லிகைமலரை வரிசையாய்த் தூவி
இரதிவேண்டிமெல் லிகைமலர்மீதில்
மருவிலாச்செவ்வந்தி மலர்களைத் தூவி
தேடுதற்கரிதாம் செவ்வந்திமீதில்
வாடிடாஅலரி மலர்களைத் தூவி
வாலொளிரலரி மாமலர்மீதில்
நீலமாமலரை நிலைபெறத் தூவி
மருவிலாநீல மலர்களின்மீதில்
இருவர்ணமலரை இச்சையாய்த் தூவி
இசைந்திடுமெழில்சா லிருவர்ணமீதில்
வசந்தபன்னீரை வரிசையாயிரைத்து
பந்தட்டியாகோர் பன்னீரின்மீதில்
சந்தனமெனச்சொல் சாறுமுந்நிறைத்து
சந்தனம்புனுகு சவ்வாதின்மீதில்
அந்தலாகோர் அத்தரையிரைத்து
அண்டர்கள்விரும்பும் அத்தரின்மீதில்
பண்டுதேன்பசுநெய் பால்தயிரிறைத்து
மிகவுமேவிரக வேதனைக்கிதவும்
பகையென்றுசொல்லும் பழுதுநீங்கிடவே
சத்தியைநினைந்து சலவைமந்திரத்தை
சித்திரரேகை செபதவஞ்செய்தாள்.

வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திரரேகையானவள் பஞ்சணையில்மலர்களைப் பரப்பிப் பன்னீர்தெளித்து பிறகுவிரகத்திற்குப்புஷ்பமும் பகையானபடியாலே புஷ்பங்களிலிருக்கிறவிஷத்தையும் வாங்கும்படியாய்சித்திரரேகை மந்திரஜபத்தியானம் பண்ணுகிற விதமெப்படியென்றால்.



௩௩-இ-ம்:நாதநாமக்கிரியை.

ஆனந்தக்களிப்பு.

மந்திரஞ்செபித்தாள் கண்ணாட்டி - கும்பாண்டனார்
மந்திரிமகள் சித்திரரேகை சீமாட்டி (மந்)
வாருங்கவுரியேபாரும் - செபதவம்
சூரன்மகள்துயரம் தீருஞ்சனமென

௧. ஓங்காளிஓம்திரிசூலி - பத்ரகாளி
ஓம்பிடாரிஓங்காரி ஆங்காரிசீலி
ஓங்கும்களின வுடாங்கனையின் - உடல்
சோகுந்துயரைநீ வாங்குஞ்சனமென (மந்)

௨. ஆயிடாகினியேநீ வாவா - தேவியானே
அடியாள்முன்னும் அனுதினம்வாவா
அஷ்டதிசைகள் கட்டுவினைந்து - பின்
துஷ்டவினைகளை ஓட்டுஞ்சனமென (மந்)

௩. பூவிற்செனித்த விஷங்கள் - வந்திப்
பூசுங்கலவையிற் பொங்கும்விஷங்கள்
போகவேதுயரேகவே சுகமாகவேகணமாகவே (மந்)
மந்திரஞ்செபித்தாள் கண்ணாட்டி.

விருத்தம்.

சூட்சசகிமந்திரங்கள் ஜபித்தேயப்பால்
சூரன்மகள்தனையணைமேற் சுமந்தேவைத்து
பூச்சொரிந்துமேனியெங்கும் பன்னீர்தாக்கிப்
பொற்பனமாய்விசிறி யிசைபோடும்போது
மூச்சுவிசைகொண்டெழும்பிச் சோகந்தீர்ந்து
மூடியகண்டிறந்தெழுந்தாள் முகத்தைப்பார்த்து
ஆச்சரியமென்றுடன்சொல் தாயேயென்று
அடிபணிந்துமந்திரிமக ளுரைக்கின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திரரேகைசெய்த சைத்தியோபசாரங்களெல்லா முடிந்தவுடன் உடாங்கனை சோகந்தீர்ந்து எழுந்திருந்தாள் அப்போது உடாங்கனையை வணங்கிச் சித்திரரேகை கேட்கிறவிதம் எப்படியென்றால்.

௫-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

௧. என்னம்மா வித்தியாசம் - உனக்
கெந்தவிதத்திலே வந்ததம்மா
௨. மன்னன்வாணுசுரன் - பெற்ற
மாங்குயிலேபேசும் பூங்கிளியே
௩. அன்னநடையாளே - நல்ல
அந்தரத்தோர்க் குத்தாரந்தாமே
௪. மின்னல் யிடையாளே - வீணை
மீட்டுமுடாங்கனை தாவ்டிகமே
௫. கோதிமுடிந்திருந்த - கொண்டை
குலைந்ததுவும்பின் கலைந்ததுவும்
௬. பாதிப்பிறை நுதலில் - மிகப்
பதுங்கித்திலக மொதுங்கினதும்
௭. சோதியெனும் விழிகள் - மெத்தச்
சுருங்கினதேன்சோர்ந் துறங்கினதேன்
௮. காதுங் கேளாததேன் - இரு
கன்னத்திலுங்கண்ணீர் மின்னினதேன்
௯. வாயுநாவுஞ் சுத்தது - போல்மிக
வரண்டதுமேன்மின்னி முண்டதுமேன்
௧0. சாயாததிங்கள் முகமும்வாடி - மிக
சாய்ந்ததுமேன்மங்கி யோய்ந்ததுமேன்
௧௧. மாய்குவார்போலே நெஞ்சில் - மிக
மதித்ததுமேனுளம் கொதித்ததுமேன்
௧௨. தேயாதமேனி சண்டும் - சற்றே
தேய்ந்ததுமேன்முகம் சாய்ந்ததுமேன்
௧௩. புயங்கள் இரண்டினிலே - பூரிப்
பில்லாததேன் செவ்வேயில்லாததேன்
௧௪. நயங்கள்தொடும் வலக்கை - தலைக்கு
நாட்டினதேன்விரல் கூட்டினதேன்
௧௫. சுயங்கள்தொடும் இடக்கை - அங்கை
தொடைக்கிட்டதும் ரொம்பமடிக்கிட்டதும்



௧௬. கைக்கால் முடங்கி - உடல்
களைத்ததுவும் பின்னிளைத்ததுவும்
௧௭. நிசமாயிரண் டன்னையும் மிக
நெளிந்ததுமேன்பின் குழைந்ததுமேன்
௧௮. அசையாத சொர்னக்கலை - மிக
அவிழ்ந்ததுமேன்மெய் கவிழ்ந்ததுமேன்
௧௯. சிரார்தபாதம் சண்டும் - மிகச்
சிறுத்ததுவும்விரல் விறுத்ததுவும்
௨0. விதியாகவே யுள்ளங்கால் - மிக
வெட்கினதும்விரல் சொக்கினதும்
௨௧. ஆடையா பரணங்கள்மே - விசார
யாகாதாதுந்துயர் போகாததும்
௨௨. சோடினையாய்க் குழலில் - மலர்
சூடாததும்பக டையாடாததும்
௨௩. மேடையின்மே லிருந்து - வீணை
மீட்டாததும்கூவி கூட்டாததும்
௨௪. வாடைக் கலவைதனை - மிக
வருந்தாததும்நெஞ்சு பொருந்தாததும்
௨௫. பேசுங்கிளிகளுடன்-நீதான்
பேசாததும்பன்னீர் வீசாததும்
௨௬. பாவையுமீ சொன்பதிலும் - பதம்
பாடாததும்வினை யாடாததும்.
௨௭. வாசப்பல்லக்கினிலே - சாரி
வருகாததுந்தானந் தருகாததும்.
௨௮. தேசிகள்மேலிருந்து - நடனம்
செய்யாததும்மலர் கொய்யாததும்.
௨௯. இஷ்டாங்கமென்னுஞ்சுகம் - மனம்
என்னாததும்அன்னமுண்ணாததும்.
௩0. பட்டாங்கமாகக்கண்ணால் - எனைப்
பாராததும்பதில்கூறாததும்.

௧௧. கொட்டாவிவிட்டதுவும் - சேர்க்கை
கொண்டதுவும்தீரம்விண்டதுவும்.

௧௨. திட்டமுடனெனக்கே - யிது
தெரியச்சொல்லு மெல்லாமறியச்சொல்லும்.

என்னம்மா இந்தயாம் - இது
எந்தவிதத்தினால் வந்ததம்மா.

வசனம்.

அகோவாருமம்மா உடாங்கனையே உனக்கு இப்படிப்பட்ட மய க்கம் வந்தகாரணம் யாதோ தெரியச்சொல்லுமம்மா.

பொது விருத்தம்.

அன்னமேகுயிலேதேனே அரிவையர்க்கரசேகேளாய்
உன்னிடதுயரமெல்லா மொழியாமலெந்தனோடே
பன்னியேயுரைத்தால்கல்ல பாக்கியம்பெறுவாயென்று
சொன்னதோர்சகியைப்பார்த்துச் சூரன்சேயுரைக்கின்றளே.

வசனம்.

இந்தப்பிரகாரம்கேட்ட சித்திரரேகையைப்பார்த்து உடாங்கனை யானவள் சொல்லுகிற தெப்படியென்றால்.

தரு ௩-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

எதுவும்நானறிகிலேனே - போம்போமம்மம்மா சித்திரரேகாய்
எனைத்துகிருய்நீதான் சும்மா அம்மம்மா

அநுபல்லவி.

எந்தன்மதியுந்தானே சிதறிப்போனதும் - அல்லாமற்பின்னும்
மனதுதானுலையின் மெழுகானதும் - சந்திரவர்ணம்
அழுத்துஞ்சுட்டித்திலகம் வச்சிரத்தொடும்புல்லாக்கு
கழுத்தின்கலம்இடையிற் கட்டுஞ்சேலைபொட்டியாணம்
தழைக்குங்காவனைகள் நாலுக்கனிகலன்கள்
செழிக்கும்இந்தவகைதான் சிறுக்கிப்போனதுகைதான் (எது)

சரணங்கள்.

௧. சுருண்டுந்தானேநலே விரிந்ததும் - நாசிமிசையில்
தோன்றுஞ்சுவாஸமதுதான் சிறுத்ததும் - கண்கள்முடி
இருண்டுந்தானேமுகங் கறுத்ததும்-மனதுதன்னில்
ஏக்கமோடுதுயரம் பெருத்ததும்-தன்னஸ்தத்தில்



எய்யும்இரம்ழுந்து இரண்டுதோள்களிரண்டு
கையும்மார்புமருகு கனகரும்பங்கள்வயிர்
மையும்இடைதுடைகள் பாதபங்கயமரண்டு
மெய்யாயிந்தவகைதான் மிகுக்கவாடுந்துகைதான் (எது)

௨. பத்தம்பிரியங்களே யில்லாததும் - சகியெனக்குப்
பதிவாகந்தானுமே யில்லாததும் - ராசர்கள்மெச்ச
வெற்றிவார்த்தைகளே சொல்லாததுவும் - எந்தனுடனே
வேதசாத்திரங்கள் சொல்லாததும் - பசுவின்பால்நெய்
வெண்ணெய்தயிருந்மோரில் விளங்குஞ்செக்நெல்லமிர்தம்
கன்னுக்குநந்ததேன்கல்கண் கண்டுகன்னலின்ரசம்
வின்ஞேர்நுகர்சர்க்கரை வெல்லம்முன்றுகனிகள்
உன்னும்இந்தவகைதான் ஒழிந்துவிட்டதுகைதான். (எது)

௩. பால்ச்சோறிட்டுந்தானே நித்தமும் - நன்றாய்வளர்த்தும்
பஞ்சவர்ணக்கிளிகளுடன் ரஞ்சிதமும் - சொல்லிக்கொஞ்சாமல்
நாகிலெட்டுராகங்களால் பதமும் - வீணையில்விரலே
நாட்டிவாசித்திடாத விதமும் - இதுவல்லாமல்
நாசியிலேற்கதம்பம் நல்லகஸ்தூரிகந்தம்
ஈஸ்வரிபூசும்பன்னீர் எல்லார்க்குமாகும்அத்தர்
தேசதேசமாகுமஞ்சள் நெருகுங்குமம்புனுகு
வாசமாயிந்தவகைதான் வருந்தாதவில்லாததுகைதான் (எது)

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் சொன்ன உடாங்கனையைப்பார்த்து சித்திரரே கை சொல்லுகிற.

விருத்தம்.

பருத்தமுழுப்பூசணிக்காய் சோற்றில்தானே
பதித்திடுக்தொழிலெனக்குப் படிணமம்மா
முழித்திருக்கமுண்டமதை வாங்கவல்லான்
முண்டகனல்தனில் மூழ்கவல்லான்முன்னே
எழுத்தைநொந்துசோர்ந்தழுத விருத்தைத்தானே
என்னளவுஞ்சொல்லாமல் யிருநயத்தால்
ஒழித்திருந்தாற்சிறுமையல்லாற் பெருமையில்லை
உற்றது சொன்னால்நற்ற தொட்டுத்தானே.

வசனம்.

அகோகேளுமம்மா வுடாங்கனைமாதே முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற வித்தை எனக்கும் பாடமுண்டு முழித்திருக்குமுண்டாந்திருடுவேன் அக்கினியில் மூழ்கிவருவேன் இப்படிப்பட்ட என்னிடத்திலே உள்ளதைச் சொல்லமால் மறைத்ததினால் நான் உண்மைதெரிந்து கொள்ளமாட்டேனோ உற்றது சொன்னால் அற்றது பொருந்தும் ஆகையால் உள்ளதைச்சொல்லுமம்மாதாயேஉடாங்கனை சொல்லுகிற.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

எந்தவிதமித்துயரம் நீங்கி - நானுன்றோடே
யென்னென்று சொல்லுவேன் பாங்கி

அநுபல்லவி.

அந்தமும்விந்தையு மோடிப் - போனதல்லாமல்
சந்திரமுகமும் வாடி - எந்தன்
விந்துவிணி இடைந்துபோகுது
சந்துசந்தாய்க் குடைந்துநோகுது (எந்த)

சரணங்கள்.

௧. பூவெனும்பாணங்களாலே - குயிலினங்கள்
கூவிடுஞ்சத்தங்களாலே - தேகம்நடுங்கி
பாவிநானென தாவிசிதறுது
நாவுமுலருது சாவுநோகுது (எந்த)

௨. ஊருமேபகையுமாக - எந்தனிட
பேருமேபகையுமாக - இனிமையான
நீருமினிக்குது மோருதுவக்குது
சாறுகசக்குது சோறுபகைக்குது (எந்த)

௩. துஷ்டருக்கதிகதாகம் - செய்விக்குமோகம்
மட்டில்லாதடர்ந்ததேகம் - தன்னுளேசீவன்
பெட்டிப்பாம்பென வொட்டிநோகுது
தொட்டகாரியம் நஷ்டமாகுது (எந்த)

வசனம்.

அகோவாரும் பிராணசகியே! என்னுடைய சரீரம் மிகவும் நோகுது பிராண நிலைகலங்குது அசதியாகிய எனது துயரத்தை உன்னிடத்தில் எப்படிச் சொல்லுவேனம்மா சகியே.



இப்படிச்சோரான உடாங்கனையைச் சித்திரரேகை கேட்கப்பட்ட;

விருத்தம்.

மாவலிவாணனின்ற மைந்தனார்மகளேகேளாய்
கோவுநோக்காடதாகில் கொடியினில்தீர்ப்பேன்மித்ரர்
ஏவியசூனியமாகிவிட்சணந் தன்னிற்றீர்ப்பேன்
சிவனுக்கழிவில்லாச்செய்கை நான்செய்வேனம்மா.

வசனம்.

அகோதேனாய் வாணாசுரன் குலக்கொழுந்தே உனக்கு வந்தது ஜ்வரம் வியாதிகளால் நேர்ந்ததாயிருந்தாலும் சத்துருக்கள் செய்ததாயிருந்தாலும் கிரகதோஷமாயிருந்தாலும் ஒருநொடியிலே தீர்த்துவிடுவேன் நீ அஞ்சாமல் உள்ளதைச் சொல்லுமம்மாதாயே.

உடாங்கனை சொல் விருத்தம்.

சிற்பசாஸ்திரத்தின்விதம் சித்திரமெழுதும்பாங்கி
வெப்புநோய்நோக்காடென்ற வேதனைத்துயரமல்ல
சப்ரமஞ்சத்தில்ராத்ரி சயனித்துத்தூங்கும்போது
சொற்பனங்கண்டதா லித்துயரந்தான்கொண்டேனம்மா

வசனம்.

அகோகேளும் பெண்ணே சித்திரரேகாய்! எந்தனுக்கு வந்தது யரம் நோய்களாலும் சூனியத்தாலும் மற்றதினாலும் வந்ததல்ல நான் சப்பிரமஞ்சத்திலே ராத்திரி படுத்துறங்கும்போது, ஓர் அதிசயமான சொற்பனங் கண்டேன். அதனாலே அடங்காத சோகங்கண்டேனடி! பாங்கி அதனால் அந்த சொற்பனத்தின் விபரம் தெரியச் சொல்லுமம்மாதாயே.

உடாங்கனை சொல்தரு-இ-ம்-மத்யமாவதி-தாளம் மட்டையம்.

பல்லவி.

வந்தான் வந்தானம்மாசகியே - ஒருராஜகுமாரன்
வந்தான் வந்தானம்மாசகியே

அநுபல்லவி.

சிந்தைமகிழ்ந்துநித்ரை செய்யும்போதுகனவில்
தேசதேசர்புகழ் தேசர்புகழ்ந்திடும்
இராஜராஜர்புகழ் ராஜர்திலகனென

சரணங்கள்.

௧. சித்ராச்சகியோர்த்திரி - வேளையெந்தன்கனவில்
வேதசாஸ்திரங்களை வேண்டியுணர்ந்திடும்
மாதர்கண்டுபுகழ் மதனராஜனென (வந்தா)

௨. இந்திரஜாலச்சகியே யெந்தன்கனவில்ராத்திரி
இஷ்டமுடனுலகில் யாவரும்வருந்திய
அஷ்டலட்சுமிகளுக் கழகுநிலையெனன (வந்தா)

௩. சித்ரரேகாய்ராத்ரி நித்திரைசெய்க்கனவில்
தேவிலாதபுகழ் தேடிவயங்கிய
தேவதேவர்புகழ் தேவர்திலகனென (வந்தா)

வசனம்.

அகோசேகரும் பாங்கி என்னுடைய கனவிலே ஒரிராஜகுமாரன் வந்தான் அவனைப்பார்த்து மோகமீறி இப்படி யளவில்லாச் சோகங் கொண்டேனடி சகியே.

இப்படிச் சோகங்கொண்ட உஷாங்கனையைப்பார்த்து சித்ரரேகை சொல்லுகிறது.

விருத்தம்.

அன்னையேவாணாசுரன் அருந்தவக்கொழுந்தேகேளாய்
என்னயோசனைதான்செய்தாய் எதிதனக்கேற்கவில்லை
இன்னவன்இனியாரென்ற வேற்பாடொன்றறிந்திடாத
மன்னனைக்கனவில்கண்டு மயங்கல்பெண்மதிதானம்மா.

வசனம்.

அகோ வாருமம்மா உஷாங்கனையே என்னயோசனைசெய்தாய் இது என்மனதிற்கு ஏற்கவில்லை மேலும் இன்னான் இனியானென்று குறிப்பில்லாமல் கனவிலேகண்ட ராசகுமாரனுக்காக ஆசைகொண்டு மதிமயங்கினதும் ஞாயமல்லவே பெண்புத்திபின்புத்தியென்று சொல்வது சரியாயிருக்கிறதம்மாதாயே.

இப்படிச் சொன்ன சித்திரரேகையைப்பார்த்து உஷாங்கனை சொல்லுகிறது.

விருத்தம்.

பேசினுற்பகையுண்டாகும் பெண்மதிதானேயென்று
லேசாய்ச்சொன்னாய்சித்ர ரேகையேசொல்லக்கேளாய்
ராசராசேந்த்ரர்மெச்சும் ராசன்றன்னழகைப்பார்த்து
ஆசைதான்கொண்டுசேர்த்தேன் அழகுதான்கேளாய்பாங்கி.



வசனம்.

ஆ! ஆ! கேளாய் பாங்கி பேசினுற்பகை, பேசாதிருந்தாலும் பகை, பெண்புத்தி பேதமையென்று சொல்லவேண்டாம் நான் கனவிற்கண்ட ராசகுமாரன் மட்டடங்கா வடிவமிருந்த சுந்தரபுருஷனு டையபாலே நான் அவனைக் கட்டியணைந்தேன், மயங்கினேன் அவனுடைய ரூபலாவண்யத்தைச் சொல்லுகிறேன் கேளடி பாங்கி.

௪௫-ம்-சங்கராபரணம்-ஆதாளம்.

கண்ணிகள்.

௧. மகாராஜர்கண்டு மெச்சியபுருஷனேஅம்மா - அவன்
மன்மதனுருவிலும் அதிகரூபனேயம்மா.

௨. கமலாசனென்று சொல்லும்வேதனேசகியே - மெச்சும்
சமலமலர்போலவும் பொற்பாதனேசகியே.

௩. மச்சங்களைப்போலும் கெண்டைக்காலுள்ளோனம்மா - அவன்
மாயவனுக்கும் அதிக மானுள்ளோனம்மா.

௪. அச்சுவமுகம்போல் முழங்காலுள்ளோனம்மா - அவன்
அன்னியில்லன்னோம் சித்ராவாருள்ளோனம்மா.

௫. கரிகரத்தைதானேவெல்லும்தொடையுள்ளோன்பாங்கி - அவன்
கார்மேகத்தின் ஜடையைவெல்லும் அடியுள்ளோன்பாங்கி

௬. நிறைநதியில்லாவிடம்போய்ச் சுந்தியான்பாங்கி - அவன்
நீர்ச்சுழியைவெல்லுந் திருவுந்தியான்பாங்கி

௭. அமிர்தமனதைவெல்லுஞ் சொல்மயத்திறனம்மா - அவன்
ஆலிலையைவென்றிடும் வயிற்றினனம்மா

௮. கமுகுதன்னைவென்றிடுங் கழுத்தினனம்மா - அவன்
கன்னல்தன்னைவென்றிடும் வழுத்தினன்பாங்கி

௯. உடுக்கையிடைக்குநிகர் ஒவ்வாதுபாங்கி - அவன்
உடம்பைத்தானேமுகந்து பார்த்தால்சவ்வாதுபாங்கி

௧௦. அடுக்கின்றவார்த்தைகள் தன்னைச்சொல்வேனனம்மா - அவன்
அரம்பையிலே தன்னை வெல்லும்முதுகினனம்மா

௧௧. பார்த்தவர்க்குநீரான மார்பனேசகியே - அவன்
பத்தினிமார்க்கின்பமான சொரூபனேசகியே

௧௨. மேருவுக்குநிகரான தோளனேஅம்மா - அவன்
வேதசாஸ்திரமீதினிற் றயாளனேயம்மா

கங. கருநீலமுகில்போலும் மெய்யனேபாங்கி - அவன்
கமலமலர்தன்னைவெல்லும் கையனேபாங்கி

கச. மரைமலர்கள்தன்னைவெல்லும் நயனனேசகியே - அவன்
வாருடன்சிவந்த கனிவாயனேசகியே

கரு. தானங்களைத்தானேவெல்லும் நாசியினன்பாங்கி - மேக
சுவனங்களைத்தானேவெல்லுஞ் செவியினன்பாங்கி

கசா. திரள்கமேதான் சிவந்தநாக்கினன்பாங்கி - சற்றுந்
தீங்கில்லாதெள்மலரைவெல்லும் முக்கினன்பாங்கி

கஎ. கதிரவனார்தன்னைவெல்லும் முகத்தினன்பாங்கி - அவன்
கண்ணாடிகள்தன்னைவெல்லுங் கன்னத்தானம்மா

கஅ. வதுவைசெய்முறைமைகளை ஓதுவான்சகியே - அவன்
வள்ளிக்கொடிதன்னை வெல்லுங்காதினனம்மா

ககூ. நவரத்னகிரீடந்தன்னைச் சூட்டினன்சகியே - மூன்று
நாமத்தையுநுதலில் நன்றாய்த்தீட்டினன்சகியே

உ0. கவசகுண்டலங்கள் காதிற்றொட்டனன்பாங்கி -, அவன்
கன்னத்தின்மேற்றிட்டியாம் பொட்டிட்டனன்பாங்கி.

உக. கண்களுக்குநீலமையைத் தீட்டினன்பாங்கி - அவன்
கழுத்தினிற்கதிர்சுடரைவெல்லும் நகைகள்பூட்டினன்பாங்கி

உஉ. பங்கயப்பூவங்கிதன்னைத் தொட்டனன்சகியே - அவன்
பட்சடங்கள்கட்டிச் சொருகுவிட்டனன்சகியே

உங. ஏருறத்திகில்குமுன்னால் போட்டனன்சகியே-அவன்
இடையில்லைநாணை நன்றாய்ப்பூட்டினன்பாங்கி

உச. கார்மின்னலைப்போலுங்கொலுசொன்றணிந்தனன்பாங்கி-அவன்
காலினிற்சொர்ணக் கெச்சங்கள்புனைந்தனன்பாங்கி

உரு. சக்காந்தப்பழமைகளைப் பேசுவான்சகியே - அவன்
சாந்துசவ்வாதுகள் மிகப்பூசுவான்சகியே

உசா. மிக்கவாசமாகுமலரைச் சூடுவான்சகியே - அவன்
வித்தாரக்கவிதைகளைப் படுவான்சகியே

உஎ. சுந்தரத்தையென்றிரண்டாய்ச் சொன்னனன்பாங்கி - அவன்
சோராமல்அழகுமுற்றுஞ் சொல்லவேபாங்கி

உஅ. அந்தரமோடிப்புவியைத் தாங்குவோன்பாங்கி - அந்த
ஆதிசேஷன்வாய்களினால் முடியாதுபாங்கி



உகூ. கண்ணீராயிரத்தோன் பார்க்கமுடியாதுசகியே - அவன்
கட்டழகையாரால் பார்க்கமுடியுமோசகியே

ங0. பெண்ஜன்மமாய்ப்பிறந்த நானொருவாயாற்சகியே - அவன்
பேரழகையென்னவென்று பேசுவேன்சகியே

பொது விருத்தம்.

அஷ்டதிக்கெல்லாந்தாங்கும் ஆயிரவாயோனன்றால்
கட்டழகதனைத்தானே கழறவுமுடியாதப்பால்
மட்டில்லாப்புகழ்ச்சியோடென் மனமதற்கேற்கத்தானே
இஷ்டமேகொடுத்தபாங்கை யென்னென்றுசொல்வேன்பாங்கி.

வசனம்.

ஆ ஆ கேளும்பெண்ணே சித்திரசேகாய்! என்கனவிலே வந்த வனுடைய ரூபலாவணியத்தை ஒன்று விட்டொன்று சொல்லாம லாமல் சரியாகச்சொல்லவில்லை. சரியாகச்சொல்ல வேணுமானால் ஆயிரம் வாய்களையுடைய ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது [illegible] ன்என்று சொல்லுவேனம்மா சித்திரசேகாய்.

சித்திரரேகை சொல்லுகிற விருத்தம்.

அறந்தவறுதமரயோன் அரனயன்தேவருக்கும்
இருந்திடும்ஆசைநம்மோர்க் கில்லாமற்போவதுண்டோ
தெரிந்திடச்சொன்னேனின்றான் சிந்தையில்வெட்கநீங்கி
எரிந்திடும்வார்த்தைவிண்டுன் னிஷ்டத்தையியம்புவாயே.

வசனம்.

அகோகேளுமம்மா உஷாங்கனையே! உலகத்திலுள்ள சகல பிராணிகளுக்கும் பிரம்மா முதலான தேவர்களுக்கும் உண்டான ஆசாபாசங்கள் நமக்கும் உண்டாகாமல் போகுமோ, ஆகையால் நீ கனவிலே கண்ட விபரங்களையும் உன் இஷ்டத்தையும் வெட்கமடையாமல் என்னுடன்சொல்ல வேணுமம்மாதாயே.

உஷாங்கனைசொல் விருத்தம்.

தையலேசகியேஇஷ்டந் தந்ததைக்கூர்ந்துசொன்னால்
வெய்யிலேபட்டபூப்போல் மெய்யெலாம்வெம்பிவாடி
மையலாம்வலையிற்சிக்கி மன்மதப்பாணம்பட்டு
ஐயையோவென்றேகூறி யழுந்துயர்க்காளானேன்.

வசனம்.

அகோகேளும்பாங்கி! என்கனவிலே வந்த திவ்யபுருஷனை [illegible] த்து முன்னமே மன்மதவாளையில் அகப்பட்டுப் பிரக்ஞையில்லா

வீழ்ந்திருந்தேனே இன்னும் அதைநினைத்துச் சொன்னால் அதிகவிரகாக்கினி கொண்டுதவிக்க நேருமே சித்ரரேகாய்.

சித்திரரேகை சொல் விருத்தம்.

பாரெல்லாம்புகழுமாதே பத்தெழுத்தோரத்தன்னில்
ஒரெழுத்ததனைக்கூட்டி யோதினாரறியுஞ்சொல்லோன்
ஆரெழுத்தகத்தில்வைத்து அஞ்செழுத்தகனைநீக்கிச்
சோரன்தான்கனவில்தந்த சுகத்தினையுரைத்திடாயே.

வசனம்.

அகோகேளுமம்மாதாயே! பத்தெழுத்தோடு ஒரெழுத்தைகூட்டிச்சொன்னால் ஊரெல்லாம் அறிந்து பரிகாசம் பண்ணுவார்கள் ஆகையால் நீ ஆரெழுத்துப்பெயரை மனதில் வைத்துக்கொண்டு ஐந்தெழுத்தை மறந்து சோர நாயகனை உன்கனவிலே வந்தவன் தந்த சுகங்களைச் சொல்லம்மாதாயே.

உடாங்கனை சொல்லுகிற

௩௫-இராகம்-செஞ்சுருட்டி தாளம் மட்டையம்.

பல்லவி.

சொல்லமுடியாதிந்தச் - செகம்
சுமந்தோன்வாயாலந்தச்சுகம்

அநுபல்லவி.

சல்லாபசங்கீத சற்குணந்தானேயுள்ளவன்
பொய்துற்குணந்தன்னைத் தானேதள்ளு
சட்டம்படித்ததையென்னைத் தானகைகொண்டு
இஷ்டங்கொடுத்ததை. (சொல்ல)

சரணங்கள்.

௧. சாசசம்பிரமதீரன் சமரைவென்றிடுஞ்சூரன்
அரசர்திலகபாரன் அவனிபுகழ்நம்பீரன்
சுரதமதனில்மாரன் துலங்குவச்சிரசரீரன்
மறைநான்கினனுசாரன்மாதர்புகழ்சிங்காரன்
மன்மதன்போலவெ வந்திடுந்திட்டத்தை
சன்மதியாகவே தந்திடும்இஷ்டத்தை. (சொல்ல)

௨. இருவர்ஒருப்படவே இதழ்நல்காயப்படவே
விரகம்பொடிபடவே வெயர்வைபுறப்படவே



உரமுங்சலிப்பிடவே உடலும்நெகிழ்படவே
சுரதம்சரிப்படவே துகிலுங்குலைபடவே
மருவவேமோகன மந்திரஞ்செபித்ததை
சாரும்புகழவே சுந்தரம்பிடித்ததை. (சொல்ல)

௩. களினக்கொங்கைகள்ரண்டு நன்றாய்ப்பிடித்துக்கொண்டு
இளநீர்ச்சாறுவண்டு இருக்கும்இதழ்நீருண்டு
மெழுகித்தருகுநண்டு விரும்பியிருந்துக்கொண்டு
செழுமைக்குகந்தபெண்ணே தேகந்தழுவிக்கொண்டு
செப்பரிதாகிய சித்தாடும்வேலையை
முப்போகஞ்செய்தவன் முத்தாடும்லீலையை. (சொல்ல)

வசனம்.

அகோகேளும் பெண்ணே சித்திரரேகாய்! ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாகிலும் ஒருபோகத்தின் திட்டத்தைச்சொல்லமாட்டான் நான் ஒரு நாவுகொண்டு முப்போகத்தின் திட்டத்தை யென்னென்று சொல்லுவேனம்மா சித்திரரேகாய்!

சித்திரரேகை சொல் விருத்தம்.

கவினைதனையொன்றிரண்டா புரைத்தாயப்பால்
கலவிசொல்லக்கடினமென்று கருதுந்தாயே
அவனியொடுவிசும்பளவா யிரத்தெட்டு
அண்டமிருநூற் றிரண்டுபத்துநான்கு
புவனமளவுயிர்த்தொகையும் வரைக்கணக்கு
புனலளவும்நிறங்குறியும் பொய்மெய்யாவும்
கவனமதால்கயிறதனற் சாஸ்திரத்தால்
கணிதமிலைஅளாந்திடுவேன் கேளாயம்மா.

வசனம்.

அகோகேளுமம்மா உடாங்கனைமாதே! நீசொற்பனத்திலே கண்ட கனவனுடைய ரூபலாவணியங்களில் கொஞ்சஞ் சொல்லி பிறகு என்னால் முடியாதென்கிறாய், நான் இந்த ஆயிரத்தெட்டு அண்டம் இருநூற்றிருபத்துநாலு புவனங்களி லிருக்கிற சராசரங்களாகிய ஆன்மாக்களின் தொகையும் மலையும் கடலும் இவ்வளவு என்று யாதொரு சாஸ்திரங்களையும் ஆராயாமல் மனோஞாபகத்தால் சொல்லுகிறேன் கேளம்மாதாயே.

இப்படிச்சொன்ன சித்ரரேகையைப்பார்த்து உடாங்கனே சொல்லுகிற,

### விருத்தம்.

கெட்டபாலநற்பாற்செய்வாய் கெடாதனுங்கெடவேசெய்வாய்
அட்டதிக்ககலநீளம் அதிஉள்ளவிதமுஞ்சொல்வாய்
ஒட்டிடாதொட்டச்செய்வாய் உந்தனுக்கார்தான்சொல்வார்
அட்டியில்லாமற்கேட்டா லன்புடனுரைக்குவேனே.

### வசனம்.

அகோவாராய் பாங்கி, நீ ஆகாயத்தை வில்லாகவளைப்பாய், மணலைக்கயிறாகத் திரிப்பாய், இந்திரஜாலமகேந்திரஜாலஞ்செய்வாய், உன் சமர்த்தை யாவரோ அளவிடவல்லவர், ஆனால் எனக்குத்தெரிந்தமட்டில் இன்னும் சொல்லுகிறேன் கேளடி சகியே.

### உடாங்கனே சொல்லுகிற சிங்காரபத்தியம்.

நவரத்னமகுடம்திலங்க நாமமிலங்க
நகசுவேலைகளான்ற நகையிலங்க
கவசகுண்டலமிலங்க முன்னூலுமிலங்க
கனககாப்பொடுகொலுசு கையிலிலங்க
புவிபுகழுமறைஞாணிலங்க வாளுமிலங்க
பொற்கச்சிலங்கப் பொற்குச்சிலங்க
குளிமுலைமடந்தையர்கள்புகழ் சதங்கையிலங்க
கொத்துவெண்டயமொடு கொலுசிலங்க
நந்துபாற்கடலிலெழு நாரிபுகழும்
சந்தரவுருவெனு மதனத்தனிருபோலும்
இந்தவிதமாய்க்கனவி லென்குதோரம்
வந்துவின்றுமணந்து வந்தனசகியே.

### வசனம்.

அகோகேளும் சகியே! சிரசிலே நவரத்தின மகுடம் பிரகாசித்துவிளங்க நல்ல சிற்பிகள் கைதேர்ந்துசெய்த ஆபரணங்கள் கவசகுண்டலம் முதலானதும் விளங்க, திருப்பாற்கடலிலே உதித்த பூரணசந்திரனுடைய கொழுந்துபோல் என்கனவில் வந்தானடி சகியே.

### சித்திரரேகை-வசனம்.

அப்படி வந்தவன் ஏதாவது சொன்னானா ஒன்றும் பேசாமல் போய்விட்டானா சொல்லம்மா தாயே.



### உடாங்கனே சொல்லுகிற அகவல்.

வேதசாஸ்திரங்களான் மேவுபுராணங்களால்
ஆதிபாரதம்பாக வதமிராமாயணம்
நீதிசாஸ்திரம்தனுர் வேதநேர்வித்தைசங்
கீதவித்யாரம்பம் கணிதகாந்தருவம்
ஓதுசேனைகட்டா முட்டிசிந்தனைகள்
அஞ்செழுத்தொடுமுத்தி யாகமதுசமயம்
பஞ்சதந்திரத்தோடு பாவுபத்தர்சரிதம்
அட்சரமேட்டியிரோடு ஆகாசகவனம்
சொச்சவிக்ரகமோடு சொரூபமேமாறல்
செஞ்சொலார்புகழ்புட்ப சேல்பரிக்கையிதம்
அஞ்சனத்தோடுநல் லஷ்டகர்மங்கள்
சாமுத்திரிகலையோடு தசகண்டிதமும்
நாமகம்பத நாட்டியவித்தைகளும்
தாளமத்தளமேள சரசசல்லாபங்கள்
வாழும்ருத்திரவீணை வாத்தியவத்னங்கள்
ராசவந்தனையான சாணசம்பிரமதாய்
பாசபந்தயமெய்து பகடைரஞ்சிதமும்
ஏதுசாமார்த்தியத்தில் எள்ளளவுகுற்றம்
ஓதியேபழிசொல்ல ஒருவருமில்லை
சரியென்னவுலகத்திற் சகலவல்லாண்மை
கருதியும்பினுமொன்று கருதாதனெனவும்
கோடிகோடியனேக கோடிநிதியங்கள்
தேடியபினுமொன்று தேடாதனெனவும்
வாடிடாதெழில்கொண்ட வாசமாமலர்கள்
சூடியும்பினுமொன்று சூடாதனெனவும்
வாசமாங்கலவைகள் வருந்திநாள்தோறும்
பூசியும்பினுமொன்று பூசாதனெனவும்
மண்டலாதிபர்திலகன் மௌனவானுமே
ஒண்டொடிதலைமாட்டி னேரமேவந்தனை
கொண்டுகூந்தலைக்கை குளிரவேநீவி
குண்டியம்செய்தனன் கும்பாண்டன்மகளே.

### வசனம்.

ஆ! ஆ! கேளும் பிராணசகியே, என்னுடைய கனவிலே வந்த புண்ணியபுருஷன் எல்லாந்தெரிந்தும் ஒன்றுந் தெரியாதவன்போலே

வெகு மெள்ளமாக என்தலைமாட்டிலே உட்கார்ந்து, என்கூந்தலைத் தடவி பலபழிசொற்கள் வாச்செய்தனடி சகியே.

## சித்திரரேகை-வசனம்.

ஆனால் சரி உட்கார்ந்தபின்பு என்னசெய்தான் சொல்லம்மா தாயே!

## உடாங்கனை சொல் வசனம்.

அப்படியே சொல்லுகிறே னம்மா சகியே.

## சிங்கார பத்தியம்.

அவனியிற்சகலமும் அறிந்துபின்னையுமொன்று
அறியாதவன்போ லென்னருகிருந்து
அரியையும்அரனையும் அயனையும்திருவையும்
அம்பிகைசரஸ்வதி அம்மைதனையும்
மாதவர்தொழும்மண் விண்ணையுங்கதிரையும்
மதிசெவ்வாயொடுமூன் றிரண்டுதனையும்
தலைமையாம்மாதமீராறையும் பனிரண்டு
தன்னையும்இருபத்து எழுதனையும்
சிவனுமேபுகழ்கின்ற நாலையும்ஆறையும்
திக்குளோர்களையும்விண் தேவர்களையும்
செபதவக்குருவையும் முனிவர்களையும்யோக
சித்தர்கள்அரிமேவு பத்தர்களையும்
நவநதிகளொன்பதைக் கடலானதேனையும்
நற்சர்ப்பமெட்டையும் மலைவெட்டையும்
கானிலந்தாங்குசேடனை வருடமறுபதை
நாலுசாதிகள்செய்யும் நட்க்கைதனையும்
வந்துவினைதீர்க்கு மாந்தர்களையும்
முந்திமாந்தர்கள்செய்த முறைமைதனையும்
சிந்தையிற்பதிவாக ஸ்ரீசெனையும்
தந்தைதாயாமிருவர்கள் தாள்கள்தனையும்
இன்பமாயிருதயத்தினிற் குறித்து,
நம்பினேனுன்னை நளினமாதே
வம்புசெய்யாமலே மருவுமென்று
கும்பிட்டான் சிரசிற்கும் பாண்டன்மகனே.



## தரு-இ-ம் - மோகனம் - ஆதிதாளம்.

### பல்லவி.

எடுமுன்தலையைத்தொட்டான் தாங்கி - ஸ்தனங்கள்தொட்டு
இருகையிலுங்கும்பிட்டான் பாங்கி

### அநுபல்லவி.

சிடுசிடெனினுங் கையை விடுவிடெனினும் பின்னும்
அடிமைபகரினுங் கை விடுவதில்லை யெனவே. (எடு)

### சரணங்கள்.

௧. கள்ளனென்றென்னைத்தான் வைதாலும்-இந்தப்பட்டணத்தில்
உள்ளோரெல்லாங்கூட்டஞ் செய்தாலும்-என்னைப்பிடித்துக்
கட்டினாலும் வாளில் வெட்டினாலும் நான்
எட்டாகிலு முனை விட்டுவாழ்கே னென. (எடு)

௨. மாதேநீயென்பட்டத்துத் தேவி-உந்தன்மீதேநான்
கும்பிடுசெய்தாலேவெகு பாவி-தானென்றுசத்ய
வார்த்தையுரைத்தம் வெகு கீர்த்தியதாய்ச் சொல்லி
பார்த்திபன் விரகமது தீர்த்திடலா மென. (எடு)

௩. மோசமென்பதுதான்கை கொள்ளாதே-வலியவந்த
ராசயோகத்தினைத் தள்ளாதே-என்றுதான்சொல்லி
மோடிநீங்கி யெனைக் கூடிமருவில் வெகு
கோடிபுண்ணிய முனைத் தேடிவருகு மென. (எடு)

### வசனம்.

ஆ-ஆ-கேளும் பெண்ணே! இந்திரசாலப்பாங்கி சகலமும் தெரிந்து ஒன்றுந் தெரியாதவன்போலே என் கால்மாட்டிலே யிருந்துகொண்டு பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், சரஸ்வதி, லட்சுமி, பார்வதி முப்பத்துமுக்கோடி தேவர்களையும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களையும் எல்லாப்பெரியோர்களையும் நினைத்துத் துதித்துக்கொண்டு பெண்ணே யுன்னாசையை மிகவுங்கொண்டு உன்னைநம்பிவந்தேன் நீசிறிதும் அட்டிபண்ணாமல் என்னைச்சேரலாம் நீயென்னைத் திட்டினாலும் கட்டினாலும் வெட்டினாலும் நானுன்னைச்சேராமல் போகமாட்டேனென்று சொந்தமான வார்த்தைகள் மிகவும்பேசித் தன்கைகளாலே முந்தித் தலையைத்தொட்டான் அப்புறம் ஸ்தனபார மிரண்டையும் மெதுவாகத் தொட்டுப்பார்த்தானடி சித்திரரேகாய்.

சித்திரரேகை சொல்கிற வசனம்.

அப்படியா நல்லகாரியமாச்சுது, உலகத்தில் சிலபழமை சொல்லுவார்கள். அதாவது, சபுருக இடங்கொடுத்தால் எருமைக்கடாபுருக இடம்பண்ணுவார்களாம். வெளிக்குப்போகத் தொல்லைகொடுத்தால் வீடுவாசலெல்லாம் என்னுடையது என்பார்களாம். பைத்தியக்கார ராசாவைக்கண்டால் பட்டணமெல்லாம் நம்முடையதென்பார்களாம். குந்தியிருக்கத் திண்ணை கொடுத்தால் பெண்டு பிள்ளையெல்லாம் நம்மதென்பார்களாம். பல்லைக்கெஞ்சிப் பழமைபேசினால் பறையனும் மதியானும். ஏழையென்று தாழ்த்திட்டால் எலியும் பூனைமேலேறுமாம். கூறுகெட்ட மணியகாரனைக்கண்டால் குடிகள் தலைக்குமே லேறுவார்களாம். சீமை அத்துகெட்டால் திருடருக்கும் கொண்டாட்டமாம் அடக்கமில்லாத பண்ணையைக்கண்டால் ஆடு மேய்ப்பனும் கேலி பண்ணுவானும். மௌனமில்லாத வேசியைக்கண்டால் மாடு மேய்ப்பனும் கேலிபண்ணுவானும். அப்படிப்போலே நீபேசாததும் கோபஞ்செய்யாமலும் அதுக்காமலும் பிதுக்காமலும் குலுக்காமலும் சாடை சன்னை பண்ணாமலும் இருந்தால், ஸ்தனத்தைத் தொட்டுப்பார்ப்பானோ தலையுந்தொட்டுப்பார்ப்பானோ இன்னும் வெவ்வேறே காரியங்களுக்கு இடம்பண்ணுவான். நானும் உன் மனதுக்கு விரோதமாய்த்தட்டிச்சொன்னால் உனக்குக்கோபம்வரும் இருக்கட்டும் அந்த ராசகுமாரன் தலையைத்தொட்டானே அப்போது நீ பேசாமலிருக்கக் கண்டன்றோ ஸ்தனங்களையும் கூசாமல் தொட்டான் அந்த மட்டோடேபோய் விட்டானோ பின்னும் ஏதாவது கல்வித் தனத்துக்கு இடம் பண்ணிவைத்தானோ எனக்கு விபரம் சொல்லுமம்மா வாணாசுரன் குலக்கொழுந்தே.

உடாங்கனை சொல் விருத்தம்.

தாங்களாம்வார்த்தைசொல்லத் தகாதுசித்ரரேகாய்
நீங்குன்னோன்மீதிற்றுனே செப்பியவிலவுவார்த்தை
நீங்கில்லர்க்குணமும்யோக நிலைமையும்பலமுமனை
பாங்குனோன்மீதிற்றனே பகர்ந்திடலாமோபாங்கி.

வசனம்.

அகோகேளும்பாங்கி! நீ இப்படி மனஸ்தாப வார்த்தைகள் பேசுவது தகாது சாதிமித்திர முன்னவனை பொய்பேசுகிறவனை இருடனை அருபனை கொலை விசுவாசத்துரோகம் செய்யப் பட்டவனைப் பார்த்துச்சொல்லப்பட்ட பழிப்பான வார்த்தைகளை மகாராஜ யோகராஜ வடிவும் ராஜ தருமமும் மற்றுள்ள சுபலட்சணங்களெல்லாம் பொருந்தியிருப்பவனைப் பார்த்துச் சொல்லலாமோ சித்திரரேகாய்.



சித்திரரேகை விருத்தம்.

ஆசாரமில்லார்பொய்யர் அற்பருக்கிடங்கொடுத்தால்
கூசாமல்சமுகமேறிக் கொள்ளைசெய்திடநினைப்பார்
ராசாதிராசர்போற்றும் ராஜனுக்கிடங்கொடுத்தால்
பேசாமற்போவரென்று பிரபஞ்சத்துரைசொன்னேனே.

வசனம்.

அகோகேளுங்கம்மா தாயே! ஆசாரமில்லாதவர்க்கும் பொய்சொல்லுவோர்க்கும் அற்பர் முதலானவர்க்கும் இடங்கொடுத்தால் மென்மேலும் நாளை கொள்ள நினைப்பார்கள். நல்ல ராசவம்சத்திற் பிறந்து அறிவும் அழகும் ஆண்மையும் பெற்றவர்க்கு இடங்கொடுத்தால் அவர்கள் வாய்திறந்து பேசாமலும் முத்தங்கொடாமலும் கலவி செய்யாமலும் மறைந்து போகமாட்டார்கள். இது உலகத்தின் நீதிப்பொதுவாகச்சொன்னேனல்லாது மற்றபடியல்ல, நீகோபங்கொள்ளவேண்டாமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அப்படியானால் சொல்லுகிறேன்கேள் சித்திரரேகாய்.

உடாங்கனை சிங்காரபத்தியம்.

அஞ்சலென்றோர்களைக் காப்பவர்மனதுபோல்
இந்துமொய்முகியுன் துரைதேடி
வஞ்சியேநானிங்கே வந்திட்டனேயென்னை
மருவுமென்றேசரச வார்த்தைபேசி
கொஞ்சுகிளிமுதுகையே நீவுவதுபோலுமிரு
கொங்கைகள்குழைந்திடக் கூட்டிநீவி
நெஞ்சுமீதினில்நெஞ்சு மொன்றாக்கியிருதாளை
நீட்டென்னநான்றாளை நீட்டிடாமல்
அகந்திலெனக்குவெட்க மதிகமாகியே
முகத்தைமேலுக்கெடாம லென்முடிகவிழ்ந்திட
நகத்திலென்னள்ளைதாக்கி யிடைநெருக்கியென்னை
நகைத்திடக்கோளாறுசெய்துதானு நகைத்தானம்மா.

உடாங்கனை-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

சிரித்தாள்சகியே கனகசித்ர விநோதனே-நகஜாலத்
தொழில்கற்றோ னென்பிராணநாதனே.

அநுபல்லவி.

குறித்தானுறைந்தானிரண்டு கொங்கைக்குடத்தின்மேல்
குதித்தானணைந்தானென்னது ஊமாம்படத்தின்மேல்
குதிரைகள்கனைக்கின்றவொலியொடு குயில்பாடுஞ்சீறுபோல்
மதுமழைசொரிகின்றவனத்தினில் மயிலாடும்வாறுபோல்
கதிர்மதியென்பரிருவர்வலது கைதோழிசெய்வதுபோல்
விதிவகையறிவர்களையும்தாய்த்திடும் வேயிற்சாடுசீறுபோல்

சரணங்கள்.

௧. மாதரானசபேணமல்மையல் நோய்தீரவும்
மாதாவைக்காணமல் மதலைப்பசியாறவும்
மைமுகிலடர்மழையெனுமலர்களை மாங்களுறுக்குந்தேகும்
தெய்வஅகிலமதில்வளர்தெரிவையர்சிரங்கள்குனுக்கும்போல்
சைவமனதுதனையுருக்குமதன் சரங்களனுக்கும்போல்
வையகம்புகழிந்திரன்மனையவள்வார்த்தைமெதுக்கும்போல் (சி)

௨. அங்கசன்கணைகள்வந்து அள்ளையிற்பாய்வதும்
அம்புலியானது அனலாய்க்காய்வதும்
அல்லாதவிரோதர்கள்பல்விசனமது பட்டுத்தீய்ந்திட
நல்லோர்களுக்கிடர்விளைப்பவருயிர் நரகத்திற்சாய்ந்திட
பல்லாண்டகவொங்கிலுமநல்மழை பருவத்திற்பெய்ந்திட
சல்லாபசற்குணமுறைதருநுவார் தருமத்திற்பாய்ந்திட (சிரி)

௩. கவினைக்கிசைந்திடுங் கருத்திதுதானென்றும்
கலவிக்கிசைந்திடுங் கணவனேநானென்றும்
சத்திகள்பகழிகள்தனக்கிசைந்திடும் சதுமைபுகழ்ந்திட
பத்தரைத்தமனியந்தனக்கிசைந்திடும் பதுமைபுகழ்ந்திட
புத்தியுள்ளதபோதனர்க்கிசைந்திடும் புதுமைபுகழ்ந்திட
எத்திசைபுகழ்ராசருக்கிசைந்திடும் இதமேபுகழ்ந்திட (சிரி)

வசனம்.

ஆகா கேளுஞ் சித்ரரேகாய் அந்த மகாராசன் தலையைத் தொட்டுக் கும்பிட்டதும் தன்பாதங்களைத் தொட்டதும் என்னைச் சிரிக்கச்செய்து தானும் சிரித்ததும் அப்பால் ஒன்றுஞ் செய்யாமல் மாயமா யோடிப்போனானடி சித்ரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

அப்படியா அம்மா சும்மாவோடிப்போனானோ? ஒருநாளும் போகமாட்டானே இதுதானானெனக்குச்சொல்லுகிறாய். உலகத்திலே சிலசொல்லு



வார்கள் சுத்ராக்கர்களிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன்சோளரிசியைப்பொத்தல்பண்ணி அதிலேவருவானும். அந்தமாயக்கன்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் வரகரிசியைப்பொத்தல்பண்ணி அதிலேவருவானும். அந்தே வேசைக்கள்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் ஊசிமுனையிலே பொத்தல்பண்ணி அதிலேவருவானும். அந்தே வித்தாரக்கள்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் கற்றாழைமுள்ளில் பொத்தல்பண்ணி அதிலேவருவானும். அந்தே அந்தக்கள்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் ஆலம் விதையைப் பொத்தல் பண்ணி அதிலேவருவானும். அந்தே ஒய்யாரக்கள்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் ஒற்றை மயிரிலே பொத்தல்பண்ணி அதிலே வருவானும். அந்தே சிங்காரக்கள்ளிக்கு வாக்குப்பட்டவன் எதிலேவருவானும், அவன் தினையரிசியைப் பொத்தல்பண்ணி அதிலே வருவானும். அந்தே மேனிமினுக்கிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் மீனின் கண்ணிலே பொத்தல்பண்ணி அதிலேவருவானும். அந்தேகண்ணாட்டிக்கு வாக்குப்பட்டவன் எதிலே வருவானும், அவன் கத்திரி விதையிலே பொத்தல் பண்ணி அதிலேவருவானும் என்பார்கள். அம்மா இதெல்லாம் எனக்கா சொல்லுகிறாய், சொல்லாதேபோனால் நமக்கென்ன போகிறது. சொன்னால் உனக்குநலமாகிறது. எப்படியோ அதிகாரியமாகிறது. நீ சுகமாயிரும்மா தாயே.

உடாங்கனை வசனம்.

ஆகா சித்ரரேகாய் என்னைப்பார்த்து நீ இப்படியெல்லாம் பரிகாசஞ்சொல்லலாமா? நான் எல்லாவிவரத்தையுஞ் சொல்லுகிறதற்கு கொஞ்சம் வெட்கமடைகிறேன், ஆயினுஞ் சொல்லுகிறேன் கேளடியாங்கே.

ஈரடிச் சிங்காரப் பந்தியம்.

பிசிறுகபடமோடு மெழில்தாமரைமலர்மேவு
பின்னற்சடைக்குநிகரோ ராயிரஞ்சலாம்
பிரியமாயிளதானமதி தானுமரிதாக
போமுகிலுக்குமோ ரிரண்டாயிரஞ்சலாம்
முகியாதேயசிறு கிறைசோமனிகரான
முகத்தின்வடிவுக்கொரு மூவாயிரஞ்சலாம்
முறையானமொழியோது கனிவாயினினிதான
முருக்கிதழுக்கொரு நாலாயிரஞ்சலாம்

கசகாதலவருஷ கமுகானததுபோலும்
கழுத்தழகினுக்கொரு ஐயாயிரஞ்சலாம்
கலைவஞ்சணிபதமேவும் மலர்போலுமழகான
கைகாலெழிலுக்குமோ ஈராயிரஞ்சலாம்
இசையாதமதமேவு கச்சகோடுநிகரான
இருதனங்கட்குமோ ரேழாயிரஞ்சலாம்
இடரோடேடர்காரின் மின்னலுக்கிணையான
இடையழகினுக்கோ ரென்றுயிரஞ்சலாம்
சர்ப்பபடம்நிகர் நதிக்கரைவிலாது
சலாஞ்செய்துமுத்தங்கள் தருவேனென்றும்
கற்பனைதக்கலைக்காமற் கடவேனென்றும்
கன்னிமேயுனக்குநான் கணவனென்றும்
சர்ப்பனை துரோகம்நான் செய்யேனென்றும்
சத்தியவசனங்களிப் படியநேகம்
செப்பியொயிலாகவென் மார்பின்மீது
சேர்ந்தணைந்தானம்மா சித்ரரேகாய்.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

அணைந்தான்வெகு சுந்தரமதனவொய்யாரன்-சசிசித்ரரேகாய்
ஆரோஅறியேனந்த ராசகுமாரன்.

அநுபல்லவி.

அணைந்துளந்தனைமிகப் பணிந்துதணிந்துகெஞ்சி
பிணைந்துசந்தனம்புனு கணிந்துமணந்துகொஞ்சி (அணை)

சரணங்கள்.

க. மடிமேல்மயூரமென்னவுஞ் சாய்ந்தான்-சுரதக்கலைகருதிய[ விட-
மதனன்ரதியிருவரும்வீணெனக்காய்ந்தான்-போலவுமகிழ்ந்தென்
முடிமீதினில்நறுமலர்களைமிகப் பெய்தான்-அந்தக்கணமேயெந்தன்
முகமீதிலேமுகம்வைத்தித ழீந்தான்-தினமோகனசெபதபம்
முடித்துக்கொங்கைகளைப் பிடித்துமெள்ளமெள்ளக்
கடித்துப்பொய்யமுர்தங் குடித்துக்குடித்துமகிழ்ந்து (அணை)

உ.கல்யாணியிலேசுரதப்பதம்படித்தான்-கொஞ்சங்கனிந்திடுகோமாங்
கனிபோலவுமென்னிருகன்னங்களைக்கடித்தான்-வெகுபதனமதாகவே
சலியாமலென்னிதழ்ரசத்தெளிவினைக் குடித்தான்-பின்னுமெந்தனிரு
தனபாரங்களின்மீதுகண் தாக்கிமெய் அடித்தான்-என்னுடல்தனைந்



தாவிப்பிடித்துமுகில் மேனியகூந்தலைச் [கைகளில்
சிலிர்சிலியநிற் பூவினைச்சூட்டியே (அணை)

௩. அங்கையோடங்கையழுத்திநகைத்தான் - கையிலட்சுமதாய்ப்பிடித்
தலைபோலவேதுடி[illegible]டைதன்னையுகைத்தான் கண்ணழகினைப்பார்த்துதி
கெந்தாமுளமெனமனது திகைத்தான்-நனிநாசிகினைக்காதினிற்
சேர்த்தபின்நாசியின்மீது முகைத்தான்-அவன்மன்னன்றுகவே
சேர்ந்துமார்பினிலுட் காந்துஉடலின்மிசை
பாய்ந்துமதிமுகத்தை மோந்துமோந்துபார்த் (அணை)

சித்திரரேகை வசனம்.

வாருமம்மா[illegible]ாயே! இந்தவித சிந்தையாக அணைந்த மகாராசன்
பனையேறியும் [illegible]டாமல் போவானு, சமுத்திரந்தாண்டினவன்
[illegible]டாரு,தேனழித்தவன் கைநக்காமலிருப்பானு,
வைகுந்[illegible]வன் மகாவிஷ்ணுவைக்காணமலிருப்பானு, இந்த
விந்த கோலாகலமாக அணைந்தவன் சும்மாபோவானு, போகானு
கையால் பின்னும் நடந்தவிபரம் சொல்லுமம்மா தாயே.

உடாங்கனைசோல் விருத்தம்.

மந்திரிகும்பாண்டனருள் மகளேகேளாய்
மாதென்றுகனவில்வந்த மன்னன்தானே
முந்திமுத்திக்காவிமலர் குழலிற்சூட்டி
மோகமதாயெனையணைத்து முத்தமீந்து
சந்த்ரவதனத்தொடுதன் வதனஞ்சேர்த்துத்
தனங்கள்பற்றியிதழமுதஞ் சாதித்தப்பால்
சுந்தரனும்எந்தனருங் குழலினன்றாய்ச்
சுத்தமுளகாவிமலர் சூட்டினனே.

வசனம்.

அகோகேளும் பாங்கி! என்கனவிலேவந்த ராசகுமாரன் காவிப் புஷ்பத்தை யென்கொண்டையிற்சூட்டி மார்புடனணைத்து முகத்தி லே முகம்வைத்து ஸ்தனபாரங்களைப் பற்றி அதரபானஞ் செய்து பின்னு மென்கூந்தலிலே காவிப்புஷ்பங்களைச் சூட்டினனடி சித்திர ரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

அம்மாதாயே! முன்னமொருதரம் காவிப்பூவைச் சூட்டினவன் பின்னும் இரண்டாவது காவிப்பூவைச் சூட்டினனென்றால் அதென் னகாரணம் விபரமாய்ச் சொல்லம்மா தாயே.

உடாங்கனை சொல் தீபதை-௫-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

௧. தாங்கியணைத்துச்சவிப்பாரவே யென்னைநீக்கினான் - பின்னும்
அங்குமஞ்சனைமிகுசுகமாகவே சந்தேகந்தீர்க்கினான்

௨. சோலிசெய்யாமலேதுக்கந்தைத் தானேயொழித்தனன் - நல்ல
வாலவயதுமகிபாலன்கண்கள் விழித்தனன்

௩. மந்திரிமகனேயென்மதிமுகம் நன்றாகக்கண்டனன் - அந்த
சந்திரவதனவென்தலைமாட்டி ஆட்கார்ந்துகொண்டனன்

௪. மணமலரைக்கையில்வாரியென் மீதினில்வீசினான் - தங்கக்
கணையாழிமோதிரக்கைகளினு லென்னைத்தடவினான் [வன்

௫. வேர்வைதுடைத்தெந்தன் வெட்கத்தைநன்றியத்திருந்தினான்-அ
மார்பிலணைத்துமடி மீதிலென்னையிருத்தினான்

௬. கட்டியணைத்தெந்தன் கன்னத்தின்மேற்கன்னத்தாக்கினான்-நல்ல
இஷ்டமதாகவென்னிருகண்ணிலும் முத்தந்தேக்கினான்

௭. சுகமாகவேமுகச்சுந்தரம்பார்த்துக் கண்சோர்ந்திட்டான்-எந்தன்
முகமீதினிற்சந்தரமுகமானதை வைத்துமோந்திட்டான்

௮. பூவேயடர்ந்திடும்பின்னற் சடையைக்கைபற்றினான் - நன்றுய்
நீவிப்பிடித்ததை செஞ்சாம்படத்தினில் ஒத்தினான்

௯. பூப்பலவுஞ்சிந்தப் பின்னலைத்தானேகலைந்தனன் - அதின்
கோப்புக்கலைந்திடக் கூந்தலைத்தானேயலைந்தனன்

௧௦. சம்பங்கியான தயிலத்தைத்தொட்டதைநீவினான் - பின்னும்
இன்பமிகுந்து இருகையாலுமதைத் தாவினான்

௧௧. கைவிரலாலே கருங்குழலிற்றூசை யடித்தனன் - சொர்ண
மைகோதியாலே மறுத்துச்சிணுக்கை யெடுத்தனன்

௧௨. தங்கம்பூணந்திடுந்தாமரைக்கைகளால் பாவினான் - பின்னும்
இங்கிதமாக இரணியசிப்பாலே சீவினான்

௧௩. கூட்டிப்பிடித்துக் குலுக்கியேகைகளில் மெட்டினான்-அதைச்
சூட்டிப்புடன்றானே சொர்ணக்கயிறாலேகட்டினான்

௧௪. கட்டுக்குமேலாக எட்டங்குலந்தா னளந்திட்டான்-கொஞ்சம்
மெட்டுக்குலையாமல் மின்னுங்குழலை வகுந்திட்டான்

௧௫. சுந்தஞ்செறிந்ததிற் காவிமலரினைச் சூட்டினான் - பின்னும்
சிந்தூரத்னத் திலகத்தைநெற்றியிற் றீட்டினான்



௧௬. தாழைமலர்மய மாகச்சடைதனைப் பின்னினான் - அதில்
வாழைமலரென மாழைக்குமிழ்களை உன்னினான்

௧௭. சொர்ணமலர்களைப் பின்னற்சடைமீதுபெய்தனன் - அவன்
இன்னுமனேகமாம் வர்ணிப்புநன்றாகச்செய்தனன்

௧௮. சிங்காரஞ்செய்ததைத் தெய்வமடந்தையர்மெச்சுவார்-மிகவ
லங்காரஞ்செய்ததை அசுரமடந்தையர் நச்சுவார்

௧௯. வேடிக்கைசெய்திட வேண்டியுமென்றனை தாங்கியே - பூவாற்
சோடித்தவித்தைகள்சொல்லமுடியாது பாங்கியே.

வசனம்.

அகோகேளும்பெண்ணே! என்னைவேடிக்கை விநோதமாக சிரித்து அணைத்துசிரித்துவிளையாடி வேர்வை துடைத்து உடம்புசலித்து நான் தூங்கிவிட்டு எழுந்திருந்து அங்குமஞ்சத்திற் படுத்து சிக்கிரத்தி லெழுந்து என்தலைமாட்டி லுட்கார்ந்து என்னை வாரி யெடுத்து மடிமீதுவைத்துக்கொண்டு என் பின்னலை யவிழ்த்து சம்பங்கியெண்ணை தீர்த்து சொர்ணச்சீப்பால் வாரி வகுந்துத் தாழைமலர் வைத்துப்பின்னி சொர்ணபாணங்களாலே சடையை யலங்கிரித்து சிங்காரஞ் செய்து நெற்றியில் ரத்தினத்திலகந்தீட்டி சடைக்குமேலாய் எட்டங்குலம் அளந்து சீர் குலையாமல் காவிப்புஷ்பங்களைச் சூட்டினானடிபாங்கி. அவன் செய்த வித்தையான விநோதங்க ளெல்லாம் எத்தனை நாள் சொன்னாலு முடியாது கொஞ்சஞ் சொன்னேனடி பாங்கி.

சித்திரரேகை வசனம்.

அப்படியா அம்மா வாணாசுரன் குலக்கொழுந்தே! நல்லாச்சொல்ல வந்தாய் திருடத் தெரிந்தவன் பொய்சொல்லத்தெரியாதா ஏரோட்டத்தெரிந்தவன் எருதுமேய்க்கத் தெரியாதா? வேஷம்போடத் தெரிந்தவன் விகடம் பேசத்தெரியாதா? மந்திரந்தெரிந்தவன் தந்திரந்தெரியாதா ? ஆடத்தெரிந்தவன் பாடத்தெரியாதா ? மதன சாஸ்திரந்தெரிந்தவன் மலர் சூட்டத்தெரியாதா ? தெரிவான். அது இருக்கட்டும் அந்தமகாராசன் மலர்சூட்டினதோடு போய் விட்டானோ? மற்றெது வேணும்செய்தானோ சொல்லுமம்மாதாயே.

உடாங்கனை விருத்தம்.

சந்தனங்கதம்பமொடு புனுகுஅத்தர்
சாதிமஞ்சட்குங்குமம் சவ்வாதுபன்னீர்
வந்தனைசெவ்வந்தியும் செண்பகமும்சந்த்ர
வர்ணமலர்மல்லிமுல்லை மருவுதாழை

சுந்தரம்பொருந்து மெழிற்பாரிசாதம்
　　சூதமுங்கடம்புமரிக் கொழுந்துசோகு
விந்தையுடனிச்சுகந் தன்னில்மூழ்கி
　　மேன்மையுடன்போகமது விளைத்திட்டானே.

வசனம்.

ஆகா கேளும்பிராணசகியே! சந்தனங் கஸ்தூரி புனுகு சவ்வாது அத்தர் பன்னீர் மல்லிகைமுல்லை முதலிய பரிமளங்கள் கூட்டி என்னை அணைந்த விதம் இன்னமுஞ் சொல்லக்கேளாய் பாங்கி.

தரு-இ-ம்-மணிரங்கம்-அடதாளம்.

பல்லவி.

சையோகசம்பிரம வொய்யாரியென்னோடே
சரிவாச்செய்தானே - சித்ரலேகாய்
பொய்யல்லமெய்தானே. (சை)

அநுபல்லவி.

வையகம்புகழ்பாரிசாத மல்லிகைமுல்லை
மலரணைமீதில் வந்து - மதுரமந்த
இலவிதழ்தானே தந்து

சரணங்கள்.

௧. தமனியக்கொம்பென்றும் தவனக்கொழுந்தென்றும்
சாந்தென்றும் பேருமிட்டான் - என்றன்முகத்தை
மோந்தொரு முத்தமிட்டான். (சை)

௨. சந்தனங்கஸ்தூரி அத்தர்புனுகுபன்னீர்
சரிவிமார்பினிற் பூசியே - எந்தனுடனே
பரிகாசமொழி பேசியே. (சை)

௩. சம்பங்கிமெழுக்கிட்டுத் தங்கச்சிப்பாற்சிவும்
தார்குழலைத் தணித்து - செங்கையாலே
மார்பிலெனை யணைத்து. (சை)

௪. தாழைமலர்களோடு மாழைராக்கிடைபின்னல்
சடைமீதிற்சிகை யுராஞ்சவே - எந்தனிட
உடல்மீதிலுட அராஞ்சவே. (சை)

௫. சிங்காரமாக இடையிற்புனைந்திடும்
சேலைகுலைந் திடவே - காதிலணி
தலைகலைந் திடவே. (சை)

௬. இருவர்க்குஞ்சமமான மருவப்பருவமென்றென்
விருபாதங்களை மேவினான் - தந்தைதாயின்
குருபாதங்களை மேவினான். (சை)

௭. பத்தரைமாற்றுத்தங்க முத்திரைமோதிரக்கையால்
பந்துஸ்தனங்கள் பிடித்து - நன்றாகவே
யெந்தனிதழைக் கடித்து. (சை)

௮. குழலின்மல்லிகைமலர் கொண்டுவெந்தருட்டி
குஞ்சிரிப்பைத் சிரித்து - காங்களில்
உராஞ்சும்வளைகள் நெரித்து. (சை)

௯. சகலசமர்த்திலும் அகலாதிருக்கின்ற
திடமுள்ளதேக தேசன் - எனக்கேற்ற
வடிவுள்ளமதராசன். (சை)

வசனம்.

அகோகேளும்பாங்கி! இந்திரபோக மகேந்திரபோகமா யிப்படிச் சம்போகஞ் செய்தானடி பாங்கி.

உடாங்கனை விருத்தம்.

சாந்தமுடன்மகிழ்ந்தாள காரியத்தைச்சொன்னால்
　　தன்னதென்றெண்ணாதவர் தம்முடனேசொல்லும்
ஆந்தரிகம்இஷ்டமில்லார் வீட்டிலுண்ணும்
　　அன்னமதும்விஷப்பாம்புக் களித்தபாலும்
பாந்தமில்லாஅற்பர்களுக் கிசைக்கும்நன்றி
　　பாதகர்தன்சிநேகிதமும் பார்தானாளும்
வேந்தர்பகைபோலுமிந்த விதங்களெல்லாம்
　　வீணென்றுசொல்லுவதும் விஷந்தான்பாங்கி.

வசனம்.

அகோவாரும்பாங்கி! தன்னுடைய காரியம்போல் பாவிக்காதவர்களிடத்திலே சொல்லுகிற ஆந்தரிகமும், இஷ்டமில்லாதவர்கள் வீட்டில் சாப்பிடுகிற அன்னமும், சர்ப்ப சாதிகளுக்குக் கொடுத்தபாலும், அற்பருக்குச்செய்த நன்றியும், பாதகரோடு செய்யும் சிநேகிதமும், இராசாக்களுடைய பகையும் வீணென்பது கூடாது. அவை விஷத்திற்குச் சமானமாமடிபாங்கி.

சித்திரரேகை விருத்தம்.

சித்ரவித்தாரமதாய்க் குழலிற்பூவைச்
　　சேர்த்தவனைமெச்சியெந்தன் முன்றொழுந்தும்

சுந்தராணிபதியவனைக் காண்போமென்றும்
என்மூலெழுத்துப் பேரெண்டிசைக்கும்
சுத்தியலேயென்னிடத்தில் வந்தானே
சொல்வதற்குள்ளாகவு நீ சொன்னவார்த்தை ந
அர்த்தந்தெரியாமையினாற் பினுஞ்சொல்லென்றேன்
அசத்தியமென்றெண்ணினாலாகாதம்மா.

உடாங்கனை தரு இ-ம் புந்நாகவராளி-அடதாளம்.

பல்லவி.

இஷ்டபோகஞ்செய்தா னிந்திரன் - மாறன்
இருவரையும்வெல்லும் சுந்தரன்

அநுபல்லவி.

அஷ்டைசுவரியமுண் டாகவே - மூ
தணங்குமெந்தனைவிட்டு ஏகவே (இஷ்)

சரணங்கள்.

க. பின்னற்சடையைக்கையிற் பற்றியே - பெரும்
பெரிதானமலர்மாலை சுற்றியே - என்
கன்னத்தின்மீதிற்சடை யொத்தியே - மிகக்
கருத்திலென்னாசையை நத்தியே (இஷ்)

உ. மேகக்குழலில்மலர் சூட்டியே - நெற்றி
மீதெழிற்றிலகத்தைத் தீட்டியே - மதன்
மோகக்கனலையப்பா லோட்டியே - எனக்கு
முருக்கிதழ்ச்சாமு தூட்டியே (இஷ்)

௩. முத்துச்சரங்க ளிலங்கவே - நல்ல
மோகனமாலை துலங்கவே - பின்னும்
கொத்துச்சரங்க ளலங்கவே - நல்ல
கொலுசுச்சரங்கள் குலுங்கவே (இஷ்)

௪. காலாழியினங்களும் பதறவே - இரு
கால்நகையினங்களும் கதறவே - மெத்த
விரைமலரினங்களும் உதிரவே - மெய்யின்
வேர்வைமுத்தினங்களும் சிதறவே (இஷ்)

௫. கொங்கைக்குடங்கள் நலுக்கியே - இடையைக்
கூட்டிப்பிடித்து அலுக்கியே - பின்னும்
செங்கைவளைகள் தளுக்கியே - தன்
தேகத்தைத்தானே குலுக்கியே (இஷ்)



௬. கனகமயத்தின மானெனும் - மூன்று
கனிகள்சுவர்த்திடுந் தேனெனும் - இனி
உனைமணஞ்செய்பவன் நானெனும் - எனக்
கொய்யாதத்தேவிநீ தானெனும் (இஷ்)

௭. கைகளிற்சேலையைப் பன்னியே - இரு
கால்களிற்கால்களைப் பின்னியே - பின்னும்
மெய்யொடுமெய்தன்னை புன்னியே - யார்க்கும்
மேலானகுன்முள்ள கன்னியே (இஷ்)

௮. என்கழுத்தின்தானே தாவியே - உடம்
பினைத்திட்டநோவென நீவியே - பின்னும்
குங்குமப்பொடிதன்னைத் தூவியே - வாயிற்
கொங்கைக்குடங்களைச் சீவியே (இஷ்)

௯. அம்மம்மாவென்றென்னைத் தாங்கியே - என்னை
யடிப்பவன்போற் கைக ளோங்கியே - கெஞ்சிற்
சும்மாபடுத்துமே தூங்கியே - அவன்
தூரிசாகச்சடைவது நீங்கியே (இஷ்)

௰. மாந்தளிர்ச்சேலை சுருக்கியே - எந்தன்
மனத்தினைநெய்போ லுருக்கியே - மினும்
கூந்தலைமெள்ள முருக்கியே - கையால்
கும்பஸ்தனங்களை நெருக்கியே (இஷ்)

௧௧. மன்மதபாணங்க ளஞ்சவே - பின்னும்
மாங்குயில்குலொலி துஞ்சவே - நல்ல
வெண்மதியானவன் கெஞ்சவே - பொதிய
வெற்புள்ளமாருதம் அஞ்சவே (இஷ்)

௧௨. எந்தன்யாழைவாங்கிப் பாடியே - என்பா
விருந்துகொஞ்சிவினை யாடியே - மலர்
சந்தனகுங்குமஞ் சூடியே - என்னைத்
தழுவினன்மார்புறச் சேடியே (இஷ்)

௧௩. பஞ்சபாணனும்வெகு கதமதாய் - வவும்
பாணங்கள்படமோக பதமதாய் - நிரக்
கொஞ்சிக்குலாவி நல் விதமதாய் - மதன
கொக்கோகசாத்திர விதமதா (இஷ்)

சித்திரரேகை-வசனம்.

வாருமம்மாதாயே! அடக்கம் ஆயிரம்பெறும், விட்டாற்கொட்டைப்பாக்கும் பெறுமென்று நானென்னமாட்டேன் இன்னுமுள்ளதும் சொல்லுமம்மாதாயே.

உடாங்கனே தரு-மோகனராகம்-தாளம்-ரூபகம்.

கந்தார்த்தம்.

க. ஜெகராஜராஜ சிரோரத்னமென்றும்
திரிலோகராஜ ஜெயசிங்கமென்றும்.
மகாராஜராஜ மதராஜனென்றும்
மணிமார்போடணைத்து மனமகிழ்ந்துகண்திறந்திட
மாயமாய்ப்போனான் - இப்படியுண்டோ
மகிபாலனானன்
மாயதந்திரவு - பாயமுடனேசம்பிர
தாயமுடனேசீக்ர - வாயுவேகமதாக (மாயமா).

உ. மடலானதற்குள் மணமானதகலவும்
மலரானதொருவர் மதியாதுமேலென்
னுடலானதற்கு ஒருகாசுவிலையும்
உதவாமல்மனதை உருக்கிஆசைப்பெருக்கி
ஓடிப்போனானே - அவனும்நல்ல
உருமாறிதானே
ஓடிப்போனவன்முகம் - வாடிச்சோம்புவதுண்டோ
வாடிப்போனதல்லாமற் - பேடிப்பயலைப்போலே (ஓடி)

ந. இந்திராணியிந்திரன் எனவிலைபுரியும்
என்பிராணநாதனென் றெண்ணியெனது
முந்தானையதனில்முக வேர்வைநீக்கி
முகமீதுகொஞ்சிமுத்தம் வைத்தணைத்தெந்தன்
மோகந்தீர்த்தானே - கண்திறக்குமுன்
மோசஞ்செய்தானே
மோகமதாயிருந்து - தேகமதாகனந்து
ஏகமாமதனைகொக் - கோகவிதமதாக (மோக)

ச. உடலோடுஉடலை மெய்யிலோடிணைத்து
உயிரோடுமுயிரை உறவோடிணைத்து
இடையோடுமிடையை யிதமோடிணைத்து
வி... ரையூட்டியேக போகஞ்செய்தென்னை



யேச்சிப்போட்டானே - அவனெனைப்பிரிந்
திருக்கமாட் டானே
ஏச்சிப்போடாதேயென்று கூச்சத்துடனேசொல்ல
சீச்சியுனக்கடுத்த பேச்சல்லவென்றுசொல்லி(யே)

வசனம்.

அகோகேளும் பாங்கி! கனாவில்வந்து என்னைச்சேர்ந்த புண்ணியபுருஷன் எனக்கிசைந்த மணவாளனென்று தனபாரங்களிற் சேர்த்து அணைத்துக்கொண்டு ஈசுவரிகொடுத்த வரம் பலித்ததென்று என் மனதிலேயெண்ணி சந்தோஷத்தோடு கண்களைத் திறந்துபார்க்கக் கண்ணுக்ககப்படாமல் மாயமாய் மறைந்து ஓடிப்போனானடி பாங்கி, பாதகஞ்செய்தானடி யம்மா, நம்பினபெண்ணை நட்டாற்றில் கைவிட்டான்தோழி, வாசமிழந்த மலர்போலானேனேனடியம்மா, இனிநானெப்படி மனந்தேறுவேன் சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

அன்னநடைப்பெண்ணரசே சொல்லக்கேளாய்
அரசனைநீகண்டதுபோல் நானேகண்டால்
என்னுடையபின்னற்சடை தன்னாற்கட்டி
இழுத்தெனதுமடியின்மிசை யிருத்திக்கொண்டு
சொன்னசொல்லுக்கேபதிலும் வரும்பேரும்
சொல்லுமென்றுகேட்கவவன் சொல்லாவிட்டால்
கன்னங்கன்னமாயறைந்து பயப்படுத்தி
கையாளச்செய்துன்மனை காக்கச்செய்வேன்.

வசனம்.

அகோசரணஞ்சரணமம்மா சிங்காரப்பெண்களின் சிரோரத்தினமே, வாலவோவியமே, வரிநீலக்குயிலே, இளங்கரிமானே, மாணிக்கச்செஞ்சுடரே, வாணாசுரன்குலக்கொழுந்தே, உன்னுடைய சொர்ப்பனத்தில்வந்த புண்ணியபுருஷன் நீகண்டமாதிரி நான் கண்டேனேயானால், என்னுடைய சொர்னமயம்போன்ற பின்னற்சடையினால் அவன் இடையை நன்றாய் வரிந்துகட்டி என்னுடைய மடியின்மீதி லுட்கார வைத்து, நான்கேட்ட கேள்விக்கெல்லாம் பதிலுத்திரஞ் சொன்னாலாயிற்று, இல்லாவிட்டால் கன்னங்கன்னமாயறைந்து பயப்படுத்தி யென்னுடைய வார்த்தையைக் கேட்கும்படியாய்ச் செய்வித்து, பிற்பாடு உன்னுடைய அரண்மனைவாசலைக் காக்கும்படியாய்ச் செய்விப்பேன், நீயானதினால் விட்டுவிட்டாய் நானானால் ஒருபோதிலும் விடமாட்டேனம்மா தாயே.

சித்திரரேகை-வசனம்.

வாருமம்மாதாயே! அடக்கம் ஆயிரம்பெறும், விட்டாற்கோட்டைப்பாக்கும் பெறுமென்று நானெண்ணமாட்டேன் இன்னுமுள்ளதும் சொல்லுமம்மாதாயே.

உடாங்கனை தரு-மோகனராகம்-தாளம்-ரூபகம்.

கந்தார்த்தம்.

க. ஜெகராஜராஜ சிரோரத்னமென்றும்
திரிலோகராஜ ஜெயசிங்கமென்றும்
மகாராஜராஜ மதராஜனென்றும்
மணிமார்போடணைத்து மனமகிழ்ந்துகண்திறந்திட
மாயமாய்ப்போனான் - இப்படியுண்டோ
மகிபாலனானன்
மாயதந்திரவு - பாயமுடனேசம்பிர
தாயமுடனேசீக்ர - வாயுவேகமதாக (மாயமா)

உ. மடலானதற்குள் மணமானதகலவும்
மலரானதொருவர் மதியாதுமேலென்
னுடலானதற்கு ஒருகாசுவிலையும்
உதவாமல்மனதை உருக்கிஆசைப்பெருக்கி
ஓடிப்போனானே - அவனும்நல்ல
உருமாறிதானே
ஓடிப்போனவன்முகம் - வாடிச்சோம்புவதுண்டோ
வாடிப்போனதல்லாமற் - பேடிப்பயலைப்போலே (ஓடி)

௩. இந்திராணியிந்திரன் எனவிலைபுரியும்
என்பிராணநாதனென் றெண்ணியெனது
முந்தானையதனில்முக வேர்வைநீக்கி
முகமீதுகொஞ்சிமுத்தம் வைத்தணைத்தெந்தன்
மோகந்தீர்த்தானே - கண்திறக்குமுன்
மோசஞ்செய்தானே
மோகமதுமிகுந்து - தேகமதுகளைந்து
ஏகமாமதனகொக் - கோகவிதமதாக (மோக)

௪. உடலோடுஉடலை பொயிலோடிணைத்து
உயிரோடுமுயிரை உறவோடிணைத்து
இடையோடிடையை யிதமோடிணைத்து
மை ... ரையுட்டியேக போகஞ்செய்தென்னை



யேச்சிப்போட்டானே - அவனெனைப்பிரிந்
திருக்கமாட் டானே
ஏச்சிப்போடாதேயென்று கூச்சத்துடனேசொல்ல
சிச்சியுனக்கடுத்த பேச்சல்லவென்றுசொல்லி(யே)

வசனம்.

அகோகேளும் பாங்கி! கனவில்வந்து என்னைச்சேர்ந்த புண்ணியபுருஷன் எனக்கிசைந்த மணவாளனென்று தனபாரங்களிற் சேர்த்து அணைத்துக்கொண்டு ஈசுவரிகொடுத்த வரம் பலித்ததென்று என் மனதிலேயெண்ணி சந்தோஷத்தோடு கண்களைத் திறந்துபார்க்கக் கண்ணுக்ககப்படாமல் மாயமாய் மறைந்து ஓடிப்போனானடி பாங்கி, பாதகஞ்செய்தானடி யம்மா, நம்பினபெண்ணை நட்டாற்றில் கைவிட்டான்தோழி, வாசமிழந்த மலர்போலானேனேனடியம்மா, இனிநானெப்படி மனந்தேறுவேன் சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

அன்னநடைப்பெண்ணரசே சொல்லக்கேளாய்
அரசனைநீகண்டதுபோல் நானேகண்டால்
என்னுடையபின்னற்சடை தன்னாற்கட்டி
இழுத்தெனதுமடியின்மிசை யிருத்திக்கொண்டு
சொன்னசொல்லுக்கேபதிலும் ஊரும்பேரும்
சொல்லுமென்றுகேட்கவவன் சொல்லாவிட்டால்
கன்னங்கன்னமாயறைந்து பயப்படுத்தி
கையாளச்செய்துன்மனை காக்கச்செய்வேன்.

வசனம்.

அகோசரணஞ்சரணமம்மா சிங்காரப்பெண்களின் சிரோரத்தினமே, வாலவோவியமே, வரிநீலக்குயிலே, இளங்கரிமானே, மாணிக்கச்செஞ்சுடரே, வாணாசுரன்குலக்கொழுந்தே, உன்னுடைய சொர்ப்பனத்தில்வந்த புண்ணியபுருஷன் நீகண்டமாதிரி நான் கண்டதேயானால், என்னுடைய சொர்ணமயம்போன்ற பின்னற்சடையினால் அவன் இடையை நன்றாய் வரிந்துகட்டி என்னுடைய மடியின்மீதி லுட்கார வைத்து, நான்கேட்ட கேள்விக்கெல்லாம் பதிலுத்திரஞ் சொன்னாலொழிய, இல்லாவிட்டால் கன்னங்கன்னமாயறைந்து பயப்படுத்தி யென்னுடைய வார்த்தையைக் கேட்கும்படியாய்ச் செய்வித்து, பிற்பாடு உன்னுடைய அரண்மனைவாசலைக் காக்கும்படியாய்ச் செய்விப்பேன், நீயானதினால் விட்டுவிட்டாய் நானானால் ஒருபோதிலும் விடமாட்டேனம்மா தாயே.

உடாங்கனை தரு-இராகம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

மதிமோசம்போனே — னடி - சித்திரரேகாய்
மாபாவியானே — னடி

அநுபல்லவி.

மதமச்சரத்தொழிலால் - மிகுந்தோனைச்
சதுருபாயத்தொழிலால் - அவனை
வளைக்காமலும்வாவென் — றழைக்காமலுங்கூடி
பிழைக்காலும்வாழ்வு — செழிக்காலும்நானே (மதி)

சரணங்கள்.

க. மின்னுருற்பொன் — னாலே - துலங்கிய
பின்னற்சடைதன் — னாலே - கையால்
எட்டாமலும்அதினாற் — கட்டாமலுந்தலைமேற்
குட்டாமலும்அவனைக் — கிட்டாமலும்நானே (மதி)

உ. பேசாமற்போன — வனை - பதசென்று
கூசாமல்நான — வனை - யெட்டிப்
பிடிக்காமலுங்கட்டி — யடிக்காமலும்அவனை
கொடிக்காமலுஞ்சினம் — முடிக்காமலும்நானே (மதி)

ங. ஒட்டமெடுத்த — போதே - அந்தக்கணம்
நாட்டந்திறந்த — மாதே - கூடவே
ஓடாமலும்மலர் — சூடாமலும்வினை
யாடாமலுந்தினம் — கூடாமலும்நானே (மதி)

வசனம்.

அகோவாரும் சித்திரரேகாய்! நான் நித்திரைக்கிருக்கிற சமயத்திலே அவன் எந்தவழியில் ஓடிப்போனானோ தெரியவில்லை, அவனைமறந்துவிடவும் என்மனம் சம்மதிக்காமல் உலைமெழுகுபோல் உருகுதடி சித்திரரேகாய்.

சித்திரரேகை-விருத்தம்.

ஆயிரங்கையோன்பெற்ற அருந்தவப்பயனேகேளாய்
காயமேயிளைத்துநீங்காக் காதலைக்கருத்தில்வைத்து
வாயுமேயுலர்ந்துபேசும் வார்த்தைகோணுவதும்பார்த்தால்
பேயதேயுன்னைப்பற்றும் பிசகுபோற்காணுதம்மா.

வசனம்.

அகோவருமம்மா தாயே! உன்சரீரம் வாடிப்போனதும் மட்டடங்கா மோகம் மனத்திலுண்டானதும், வாயுலர்ந்துவார்த்தைதடுமாறுவதும் பார்த்தால் உன்னைப் பேய்பிடித்துக்கொண்டதுபோல் காணுதம்மா.



உடாங்கனை தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

பேயினங்கள்செய் — குதுவாதுகளல்லடி - எந்தன்பிராணசகியே
உந்தன்யோசனை — வல்லடி

அநுபல்லவி.

வாயதேயொருகளவு பொய்யுரை — கூறுமோ - எனது
மனதுபெருமையைக்கண்டல்லாமலுந்தேறுமோ
நீயும்பழமைகளெந்தன்காதினி — லேறுமோ-கனவில்நான்கண்ட
திருடனென்முன்வாராமலென் — குறைதீருமோ. (பே)

சரணங்கள்.

க. கனியிலாமரமதனிற்பறவைகள் — தங்குமோ - விறகினிற்படு
கனல்படாமலும்முதுபாலது — பொங்குமோ
மனதிலாசையிலாமலெனதுடல் — மங்குமோ - உயிர்கடந்திடு
மயிர்கலந்தன்னமென்வாயது — வுண்குமோ (பே)

உ. விரையிலாமலர்தனையென்குழலது — சூடுமோ - வாலைதிரிபுரை
வேண்டிடாக்கவிதனையென்வாயது — பாடுமோ
அறனில்லாக்கதைகேட்கஎன்மனம் — நாடுமோ-பின்னுமென்மன
தழகிலாததையறிவில்லாததைத் — தேடுமோ. (பே)

ங. நிலையில்லாவுமெனது நெஞ்சினிலெட்டுமோ-இனியமாந்தளிர்
நிறமில்லாத்துகில்தனை — யென்னிடையதுகட்டுமோ
பலனில்லாநதியாடில் — மோட்சமுங்கிட்டுமோ - தாகவேளையில்
படியில்லாக்கிணற்றுநீர் — கைகளுக்கெட்டுமோ. (பே)

ச. புலிபசித்திடிற்புல்லு — மண்ணையருந்துமோ - கையின்மிசையில்
பொருளிலார்தனைவேசி — மனதுவிரும்புமோ
நிலமிகுந்தவர்பங்கில் — முகடிபொருந்துமோ - எனதுமுகமதில்
நேரில்லாப்பொருள்வந்து விளங்கித்திருந்துமோ. (பே)

ரு. காடுகரைகளில்கிணறுமரங்களில் — வாழ்ந்திடும் - எனர்தேடிய
கனதனம்புதைத்திட்ட — காளிறுக்கார்ந்திடும்
பேடிவனிதையருடலின்மிசையினிற்புகுந்திடும்-தடைகொலந்தில்
பெரியசாகமெனுந்திசால் — விடுபோய்ச்சேர்ந்திடும். (பே)

௬. மானியங்கெடுபோன தொழில்களுக்காகையே - கேடுநினைந்திடு
மடையர்கூடியசமுகமுன்பு நீ போகையே
வானில்மறையவும்விஞ்சைகருதிய தோகையே-கும்பாண்டனுய
மந்திரிபெற்றவளர்த்திடுஞ் சித்ரரேகையே: (பே)

௭. மந்திரிமகளே நீ யுந்தன்கைபிடிவாளடி - அல்லாமல்வேறில்லை
மங்கையேயுனக்கிந்த வேளைநாளடி
உந்தன்யோசனையிந்தவேளையில்கேளடி - கோபஞ்செய்யாமலே
உற்றகாரியஞ்சொல்லுவேன் கொஞ்சந்தாளடி. (பே)

வசனம்.

கேளும்பெண்ணேபாங்கி! நீநல்லவார்த்தை சொல்லவந்தாய், விளக்குச்சுடரை ஈமறைக்குமா, வெண்கலத்தகட்டை எறும்புகரைக்குமா, நெருப்பைப் புழுவரிக்குமா, நெல்லுமியை கரையான்தின்னுமா, நாகசர்ப்பங் கருடனைத்தீண்டுமோ, நஞ்சுக்கட்டியை நாய்கவ்வுமா, சத்தியவான்களிடத்திலே வினைஅணுகுமா, நீஆலோசியாமல் என்னைப் பேயனுசரித்ததென்று சொல்லலாமா சித்திரரேகாய்.

சித்திரரேகை-விருத்தம்.

சாதுரியம்வருத்திவைக்கும் உறவைநீக்கும்
சமஸ்தானமேறவிட்டுச் சண்டைமூட்டும்
பாதகமேசெயப்பண்ணும் பகையுண்டாக்கும்
பாவையைச்சேர்த்துவைக்கும் பழியைநீக்கும்
வாதுவென்றிடப்பண்ணும் உயிரைக்கொல்லும்
வந்தபிணிதனைநீக்கும் மணமுண்டாக்கும்
யாதுதொழிலுஞ்செலுத்தும் தனத்தைத்தாக்கும்
அந்தப்பேய்மாதரைத் தொட்டுஞ்சிடாதே.

வசனம்.

அகோகேளுமம்மாதாயே! இந்தவுலகத்தில் வாழ்கின்றபேர்களுக்கு சாதுர்ய வித்தைகளை வருவிப்பதும், உறவைநீக்குவிப்பதும் சமஸ்தான மேறப்பண்ணுவதும், போர்க்கலமூண்டு பண்ணுவதும், கொலைகளவு விசுவாசத்துரோகம் செய்விப்பதும், பகையுண்டாக்குவதும், ஸ்திரீகளை வசமாக்குவதும், பழியைத்தீர்ப்பதும், உயிரைப் போக்குவதும், உயிர்காப்பதும், நோய்தீர்ப்பதும், அபகாரியங்கள்முடிப்பதும், பெருமை சிறுமை நன்மை தீமை முதலியவெல்லாங் கொடுப்பதும், தனத்தைக் காப்பதுமான பேயானது ஸ்திரீசாதிகளை அனுசரிக்கிறதற்குப் பயப்படாதம்மாதாயே.



உடாங்கனை-வசனம்.

ஆகாகேளும்பாங்கி! நான் கற்புள்ளபெண்ணல்லவா, என்னையும் பேய்தொடுமோ சித்திரரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

கேளுமம்மாதாயே! ஒருசந்திப்பானையென்று நாயறியுமா, காசிதீர்த்தமென்று காக்கைஅறியுமா, விபூதிமேடையென்று வெறிக்கழுதையறியுமா, தெய்வபத்தர்களென்று திருடர்களறிவார்களா, குருபுத்திரரென்று கொலைபாதகரறிவார்களா, சத்தியவாதிகளென்று சண்டாளப் பயல்களறிவார்களா, பத்தினிஸ்திரீகளென்று பணத்தைக்காக்கும் பேய்களறியுமா, அறியமாட்டாது. பேய்களனுசரித்த ஸ்திரீகளுக்குக்குணமேதென்றால் அவரவர் மனதிலே எப்படியோசனைசெய்வார்களோ அப்படியே கனவில்காணும், மதிமயங்கும், தலைகிறிகோலமாகும், பயித்தியம் பிடித்ததுபோ லிருக்கும், பலவிதஞ் செய்யுமம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

ஆகாபாங்கி! அப்படிப் பேய் அனுசரித்திருந்தால் அதற்கு என்னசெய்யலாம் பாங்கி.

சித்திரரேகை வசனம்.

அப்படிப் பேய் பிடித்திருப்பது நிசந்தானென்று ஒப்புக்கொண்டால் நானதை யந்திரத்தாலும் எந்திரத்தாலும் ஓட்டிப்போடுகிறேனம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

ஆகாகேளும் பாங்கி! உற்றது சொன்னால் அற்றது பொருந்துமென்று உலகத்தார் சொல்லுவார்கள். ஆகையால் நான் நடந்த உண்மையானமார்க்கத்தைச் சொல்லுகிறேனம்மா சித்திரரேகாய்.

உடாங்கனை அகவல் இராகம் ஆபரி.

பசுபதிமனைவி பார்வதிதேவி
அசுரருக்குதவிக்கும் அம்பிகையருளால்
சித்திரரேகாய் சீக்கிரம்இனிநான்
உற்றகாரியத்தை ஓதுவேன்கேளாய்
கங்காளன்வாழும் கைலையங்கிரிக்கே
மங்கைநான்போகவும் வரவுமிருந்தேன்
அந்தமார்க்கமுன் னகத்திற்குத்தெரியும்
சிந்தையின்மனத்த சேதியைக்கேளாய்
நேற்றுநான்மனதில் நினைந்துமையதத்தை

பார்த்திங்குவருகப் பயணமுமாகி
சிந்தூரிதனிற் சீக்கிரங்குளித்து
கந்தமார்குழலைக் கடிகையிலுலர்த்தி
கோதியேவகிர்ந்து கொண்டையைமுடித்து
மோதுபன்னீரால் முகத்தினைக்கழுவி
கையொடுகால்கள் கழுத்துவாய்காவும்
மெய்யெலாம்பன்னீர் மிதந்திடக்கழுவி
மெல்லியவஸ்திரத்தில் மேன்முகந்துடைந்து
இலகுமெய்யீர மெல்லாந்துடைந்து
நெற்றியிற்கனக நீலமார்திலகம்
கொற்றவர்ககமும் கோணதான்வைத்து
மாந்தளிர்க்காந்தி மருவுமஞ்சனத்து
சாந்திருவிழிகள் தன்னிலுமணிந்து
புனுகுபன்னீர் பொடிவகைகதம்பம்
கனிவுகஸ்தூரி கரைத்தசந்தனமும்
கெந்தமுர்மஞ்சள் கிளர்ந்தகுங்குமமும்
சந்தனாதியெனும் தயிலமுமத்தர்
சொர்க்கலோகத்திற் றுலங்குசெந்தூரம்
இக்கலவைகளை யின்பமாயணிந்து
மல்லிகைமுல்லை மருக்கொழுந்தல்லி
நல்லசெண்பகமும் நாறுமிருவாட்சி
பாரிசாதமுநற் பாகுசேர்தாது
நூறுமெட்டிதழின் கொய்யதாமரையும்
மருவொடுபுன்னை மாந்தளிர்தாழை
அரலிசெவ்வந்தி அழகுபாடலையும்
மராமரம்பாலை மகிழ்மாங்கடம்பு
நாதிபாருந்தும் கார்சேர்துளசி
இவ்வகைமலர்க ளெல்லாமெடுத்து
அவ்வுமைமகிழ அணிந்துநான்பின்னும்
சித்திரவேலை சிறந்தபில்லைகளும்
கொத்துடன்முத்துக் கோர்த்தவில்லைகளும்
வச்சிரம்பதித்த மாழைவில்லைகளும்
பச்சைவைரியம் பதித்தவில்லைகளும்
இளம்பிறைபோல இலங்குரேக்குகளும்
மழைவில்லைப்போல் மாழைரேக்குகளும்
செய்குராடாவின் நிகருரேக்குகளும்



ஒயில்மயிலியற்கை யொருத்குரேக்குகளும்
இன்னமும்அநேக இனியரேக்குகளை
பின்னலின்சடையிற் பிரியமாய்ப்பதித்து
தகாமிற்றுளைந்த தமனியச்சரங்கள்
முகரைபோல்நெற்றி முகட்டினிற்பதித்து
தாழவேமுகட்டிற் சந்திரப்பிறையும்
மாழையாஞ்சூரிய வட்டமேபதித்து
முந்துளநுதலின் முகட்டினின்வலத்தில்
சந்திரக்கொப்பி தான்பதித்ததனில்
வச்சிரக்குச்சு வயங்கிடக்கோத்து
பச்சைவைரியப் பணிகளைப்பதித்து
சொர்ணமாம்ரேக்கில் துளிர்த்திடும்நீல
வர்ணமார்திலகம் வாணுதல்சேர்த்து
சூரியப்பிரபை தோன்றிடும்நத்து
கார்மினின்சுடரைக் கதிர்ந்தபுல்லாக்கு
இவ்வையிரண்டும் இந்திரத்தனுக்கும்
செவ்வையாநாசி மிசையினிற்சேர்த்து
சங்கிலித்தொங்கல் சரப்பணிமுருகு
செங்கமலப்பூச் செய்கையாம்புகடி
சந்திரச்சுருள்கள் தமனியக்கொப்பு
இந்திரநீலத் திலங்கியகோவை
சுருண்டிடுங்கலன்கள் தொகையிலாதெடுத்து
இரண்டுகன்னங்களி லெழிலுறவணிந்து
பிடிசரங்கொலுசு பின்னலட்டிகையும்
கொடியுஞ்சிந்தாக்குக் கோதுமைமணியும்
பட்டைமணிகள் பவழத்தாவடங்கள்
கெட்டிமுத்துகள்பைங் கிளிசிறப்பதக்கம்
நறுமலர்ச்சரங்கள் நன்மணிச்சரங்கள்
தரைமகள்விலைசெய் தளுக்குநற்சரங்கள்
முழுத்தொழிலோர்செய் மோகனமாலை
கழுத்திலிக்கலன்கள் கனம்பெறப்பூட்டி
சத்தொடுகொலுசு சந்திரவளைகள்
கற்றவர்புகழுங் கைகட்டுப்பவழம்
கடகங்கள்காப்புக் கனகரேக்குகளும்
சுடரொளிப்பிரபை தோன்றுமோதிரங்கள்
நலம்பெறவிருவு நாடியேந்தக்

கலன்வகைமுழுதுங் கைகளிற்பூட்டி
யருக்கனார்சுடரை யடக்கிடுந்துகிலை
யிருக்கமாயெந்த னிடையினிற்கட்டி
பட்டிமீதிடையிற் பசும்பொனாற்செய்த
வொட்டியாணத்தை யொடுக்கமாய்ப்பூட்டி
குஞ்சரக்கோடெனக் கொங்கைகள்மீது
சஞ்சிதமான ரவிக்கையைப்பூட்டி
சிலம்பொடுதண்டை சிந்தவெண்டயங்கள்
புலம்பிடுஞ்சதங்கை பூந்தபாடகங்கள்
அந்தக்காலாழி அழகுள்ளபீலி
சந்திரமெட்டி தடுக்கொடுமிஞ்சி
கவனமாயிந்தக் கலன்களிலொன்றும்
தவறிடாதெடுத்தென் தாள்களிற்பூட்டி
விணையைக்கரத்தில் விந்தையாயேந்தி
சோணிதாபுரியை தொடர்ந்துதாண்டித்தென்
பட்டணங்கடந்து பலநகர்கடந்து
மட்டில்லாதுயர்ந்த வரைகளுங்கடந்து
சரிவுகள்கடந்து சமுத்திரங்கடந்து
நார்புகாவனத்தில் நடந்திடும்போது
வேட்டைக்குவந்த வேந்தர்தம்மக்கள்
காட்டகந்தன்னிற் கண்டதிசயிப்ப
அன்னங்கள்நடை கண்டதிசயிப்ப
உன்னிதம்இலகு மொழிலைவர்னிக்க
கறயினில்மிருந்த கனலிதாலென்று
சர்ப்பசாதிகளும் தடத்தைவிட்டோதுங்க
பார்வதிமீதிற் பரிவுளாளென்று
கூர்விழிமிருகக் கூட்டங்களொதுங்க
விஞ்சையாற்சுரரை வெல்லுவாளென்று
குஞ்சரக்கூட்டம் கும்பிட்டோதுங்க
மலைகளைத்தகர்க்கு மந்த்ரவாதியென
அலைகைகள்வழிவிட் டடங்கவுமொதுங்க
கலன்வகைமுழுதுங் கலிர்கலீரென்ன
மலர்வகைமுழுதும் கமகமவென்ன
வசந்தவாடைகள் வனமெலாம்வீச
ஓசந்தபட்டாடை ஒயில்கிகிகவென
ஆவலாய்க்கையிலே யங்கிரியடுக்க



பூவைநான்டந்து போறபோதங்கே
அனவிலைவளர்த்தி யாகமேபுரியும்
கனமுனிவோர்கள் கண்டதிசயிப்ப
காதலேமிகுந்து கைலையங்கிரியென்
வீதியில்நானும் மெல்லவேபோக
முன்புமுப்பத்து முக்கோடிதேவர்
அன்புளநாற்பத்தெண் ணாயிரம்ரிஷிகள்
கின்னரர்இனிய கிம்புருடர்நற்கணு
கர்னச்செயவின் கருடகாந்திருவர்
சித்தர்வித்யாதரர் சிவபக்தகோத்ரர்
இத்தனைபேரும் என்னிடாழிலைப்
பார்த்ததிசயிப்பப் பார்வதிவாரும்
மாற்றுயர்கனக மண்டபமென்னும்
கோவிலுக்குள்ளாய்க் கூசாமல்யானும்
ஓவியம்போல ஒயிலுடன்போனேன்
அம்பிகையுடனே அரன்மனமகிழ்ந்து
சம்போகம்விளைக்கத் தையல்யான்கண்டு
மனமதில்நாண மானதுமிகுந்து
கனத்தினில்முகத்தைக் கவிழ்ந்துநான்பார்த்து
ஆணிமுத்தாக ளடர்ந்தமண்டபத்தில்
தூணில்மறைவில் தோகைநானின்று
எருத்தானுமையு மிசைந்தசைபோகம்
கருத்தினில்நினைந்த காதலேமிகுந்து
கத்தியவாக்கியம் ... சொல்லாக்கியன்
தந்தையிற்பன்னன் தனபதிமைந்தன்
அயனுடைகருவ மடக்குமுல்லாசன்
புயல்வண்ணமிசை பொருந்தியதேகம்
மருமலர்ப்பகழி மன்மதருயன்
அரிவையர்புகழு மழகுளகாந்தன்
எனைமணம்புரிந்து என்னுடன்சேர்ந்து
அனகனும்சதியும் மாகவேமகிழ்ந்து
ஆசையுந்தீர அணைந்துகொண்டிருவர்
ஈசனுமுமையு மிருப்பதுபோல
இருந்திடும்பெருமை யென்றைக்கென்னுடலில்
பொருந்திடுமென்று பூசதந்தனை
வென்றமண்டபத்தில் விளங்குதூண்மறைவில்

நின்றுமென்மனதில் நினைந்திடும்போது
திங்கள்சேர்சடையன் திரிபுரமெரித்த
சங்கரனுமையும் சம்போகநீங்கி
அப்புரம்சத்தி அழகினில்மிகுந்த
சப்பரமஞ்சத்திற் சகலசம்பிரமமாய்
இருந்துகொண்டென்னை யிதஞ்சொல்லியழைக்க
மறைந்ததூண்கடந்து வந்துமுன்னாகச்
சிரசினைக்கவிழ்ந்து சிந்தையும்வெட்கி
சரசவீணையிலேழு தந்தியுமுருக்கி
பார்வதிமீது பதபத்தியங்கள்
கூர்தொழிலமர்ந்து குனிந்தபார்வையதாய்
மணத்தொடென்னையும் மருவவுந்தினமென்
குணத்திலுக்கேற்ற கொழுநனுமெந்த
தினத்தினில்வருவ னென்றுசிந்தையினில்
நினைத்துசஸ்வரிமுன் நின்றிடும்போது
பார்வதியென்னைப் பக்கத்திலழைத்து
ஏர்பெறுமுகத்தை யேறிட்டுப்பார்த்து
உடல்தனைத்தழுவி யொருகையாலெடுத்து
மடிமிசையிருத்தி மார்பிறோடணைந்து
அவிழ்ந்திடுங்கலையை அவிழ்ந்திடாதிருத்தி
கவிழ்ந்திடுஞ்சிரசைக் கவிழாதிருத்தி
கதுப்பின்மேற்றனது கதுப்பினையழுத்தி
துதித்திடும்வாயின் தம்பிலைக்கலைத்து
அன்னமேகுயிலே அறிவுள்ளமானே
வன்னமாமயிலே மரகதக்கிளியே
மின்னறபுனைந்த மேகசித்திரமே
கன்னற்சாறனைந்து கலந்தகற்கண்டே
சர்ப்பவாய்மணிகள் தனில்வளர்சுடரே
கற்பகவெலத்திற் கலந்தசெந்தேனே
அண்டர்கள்முனிவ ராசைசெய்யமுர்தம்
மண்டலந்தனிலுள மாந்தர்கட்கரசே
உச்சிதத்தெய்வ வுலகில்வாழணங்கே
யட்சகன்வருந்தும் ரத்னசித்திரமே
கதலியின்கனியிற் கனிந்திடும்ரசமே
மதனனும்விரும்ப வந்திடும்ரதியே
சோணிதபுரத்திற் றுரைத்தனஞ்செய்யும்



வாணாசூரன் வளர்த்தபைங்கிளியே
பலகலைமுழுதும் பகரவேயெந்தன்
மலரடிதுதிக்க வந்தவென்மகளே.
உந்தன்புத்தியில் யோசித்தவிதமென்
சிந்தையினன்றாய்த் தெரிந்தனனம்மா
அப்படியேயுன் னகத்தினுக்கேற்கும்
புஷ்பபாணங்கள் பொழிகுலதிலகன்
திருமகளமிசை சேர்ந்திடுந்தேகன்
புரவலர்மடங்கப் போர்செயும்தீரன்
புனிதகுபேரன் புகழ்ந்திடும்யோகன்
அனகனும்ரதியும் அகமகிழ்ரூபன்
தாமரைமலர்க்குச் சமதையாங்கண்ணன்
சோமனுக்கிடு சொல்லியவதனன்
கார்நிறமுகிலுங் கமழ்ந்திடுந்தேகன்
மேருவாமலையை வென்றிடுபுயத்தின்
விளைந்திடுதர்மம் வேண்டிடுகரத்தின்
தவளமுத்தாலைத் தரித்திடுமார்பன்
வாடையங்கலவை மகிழ்வுடனணிந்து
ஆடையாபரண மழகுடன்பூண்போன்
அறிவிலுந்திறமை அழகிலும்யாரும்
குறைவில்லாச குமாரனேயுனது
கனவினில்வந்து கருங்குழல்மிசையில்
புனிதமாங்காவிப் பூவினைச்சூட்டி
நேசமாயுனது நினைவினிலடர்ந்த
ஆசையானது மடங்கலுந்தீர
மதனனும்ராக வரிசைகள்பலவும்
விதம்விதமாக விளையச்செய்விப்போன்
கன்னியேயுன்னைக் கனவினிலணைந்த
மன்னனேயுனக்கு மகிழ்நனுமாவான்
அப்படிமகிழ்ந னனகாலத்தில்
தப்பிலாமகிழ்நன் றனுநீகூடி
வாழ்குவிர்சகல வரிசைபெற்றுலகை
ஆளுவீர்நீங்கள் ஆசசந்[illegible]
என்றுசஸ்வரியும் எனக்கருள்கொடுத்து
நன்றுநல்லென்னை நகரினுக்கனுப்ப
தூங்குமஞ்சத்திற் றோகைநான்படுத்து

நீங்கிலாநித்ரை செய்திடும்போது
என்னுடன்முன்பு ஈசுவரிதேவி
சொன்னமேரைக்கோர் சுந்தரன்வந்து
மருவவும்என்னது மனமதுமகிழ்ந்து
இருகையாலணைத்து இருவிழிதிறந்து
பார்த்தபோதந்தப் பஞ்சபாதகனும்
மாற்றெனப்பறந்து காணாததினால்
சென்மமேமடங்கி சித்திரரேகாய்
உன்னுடன்றானே யோசனைசெய்தால்
மாயமாய்ப்போன வயணமேதென்னில்
பேயதேயுன்னைப் பிடித்ததுஎன்று
பகரொணாவார்த்தை பகருவதுனக்கு
சகசமோசொல்லும் சகிசித்ரரேகாய்

வசனம்.

இந்தப்பிரகாரம் நான் ஈசுவரியினிடத்திலே பெற்றுக்கொண்ட வரத்தின்படி கனவிலே வந்து அணைந்து மறைந்துபோன ராசகுமாரன்மீது காதல் கொண்டிருந்தால், பேய் பிடித்ததென்று சொல்லுவது உனக்குத் தருமமோ சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

பேய்பிடித்தமார்க்கமென்று நான்தோற்றுமல்
 பேசுமபவாதமதைப் பொறுப்பாய்பெம்மான்
வாய்கொடுத்தவர்மதுதான் தவறினாலும்
 மதிகதிர்தென்வடக்காயின் வயிர்பெருந்தோன்
தாய்கொடுத்தவரமதுதான் தவறாதம்மா
 தவறினதும்நீசெய்த தப்பிதந்தான்
காய்கொடுக்கக்கனியாகுங் கனிகாயான
 கள்ளமதையெந்தனுடன் கழறுந்தாயே.

வசனம்.

அகோகேளுமம்மா உடாங்கனையே! நான் பேய் பிடித்ததென்று கூறிய அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ளவேணும். சந்திர சூரியாள் கதிமாறினாலும் ஈஸ்வரிவாக்கிலே பிறந்தசொல் தப்புகிறதில்லை. ஆனாலது தவறிப்போனது போலேதாணுகிறதென்றால், நீ அந்த ஈசுவரிதேவிக்கு பெரிய தப்பிதம் செய்தாப்போல் காணுகிறது. ஆகையால் உன்னுடைய மனசிலே உண்மையாக நினைத்தகாரியத்தைச் சொல்லுமம்மா தாயே.



உடாங்கனை வசனம்.

நான் ஈஸ்வரிக்கு ஒரு குற்றமுஞ் செய்யவில்லையே சித்திரரேகாய்.

சித்திரரேகை-தரு-௫-ம்-காம்போதி-அடதாளம்.

பல்லவி.

தப்பிதஞ்செய்த  துண்டோ - ஈஸ்வரிதேவி
கற்பினைவைத  துண்டோ

அநுபல்லவி.

சிப்பிக்கருதினவ  சொப்பும்புதுமையென
செப்புமொழிமகிபன்  சப்ரமிசையினுனை
சேர்ந்தணைந்துடலை  மோர்ந்துகாமலாகிரி
தீர்ந்துமனதுகளி  கூர்ந்தவிதங்கள்தனிற் (றப்)

சரணங்கள்.

க. சிரித்தவகைகள்  தனிலும் - கலன்மலர்
 தரித்தவகைகள்  தனிலும் - கைகள்
 நெறித்தவகைகள்  தனிலும் - துகில்தனைச்
 சரித்தவகைகள்  தனிலும் - இதம்ரசம்
 பறித்தவகையிற்காம — வாரிதவகையிற்றனம்
 பிரித்தவகையிலலங்  கரித்தவகையிற்பதம்
 பாடும்வகையில்வினை  யாடும்வகையில்மலர்
 சூடும்வகையிற்பாங்  கோடும்வகையில்நீதான் (தப்)

உ. எந்தன்தேவி  நீதானே - நீதான்
 உந்தன்புருஷன்  நான்தானே - என்னும்
 இந்தவாய்மை  தானே - நிலையெனச்
 சிந்தைதேரு  மானே - யென்றும்
 சுந்தமார்குழல்  வருந்தலைத்ததிலும்
 சந்திரோதய  முகந்துடைத்ததிலும்
 கட்டியணைத்துமுத்த  மிட்டுநுதலில்சிந்து
 பொட்டுமளித்துத்தனந்  தொட்டமருவினதில் (தப்)

ங. சகலசுகமும்  தாரேன் - வேறொரு
 தையல்முகமும்  பாரேன் - நன்
 பகலில்சரதம்  கேரேன் - உந்தன்சொல்லைப்
 பழித்துவேறு  கூறேன் - என்று
 பாதம்பற்றிமுக  மீதிலெற்றிநல்கி
 னேதமெத்தநல்கி  வேதசத்தியங்கள்

பண்ணும்கினைவைமறந் தென்னும்உனைப்பிரியேன்
கண்ணுங்கருத்தென்றுன்னைச் சண்ணுங்கலவிதன்னில் (தப்)

வசனம்.

ஆகா கேளுமம்மா தாயே! உன்னுடைய கனவிலேவந்த அந்த ராசகுமாரன் கலவிநடத்துகிறபோது, நீ அவன் மனதுக்குச்சரியாய் நடக்காமலும் அதரபானங்கொடாமலும் சரசவார்த்தைபேசாமலும் அவருக்குக் கைகால் பிடிக்காமலும் முகவேர்வை முன்றானையால் துடைக்காமலும் நான் உன்பெண்சாதி நீயே யென்புருஷன் என்று ஸ்தோத்தம் பாராட்டாமலும் மவுனமாயிருந்தாயோ, அந்த ராஜகுமாரனைப்பார்த்து சிடுசிடென்று முகத்தைத் திருப்பிக்கைகளால் தள்ளி பேய் நாய் என்று பேசிவிட்டாயோ, இன்னம் என்னதப்பிதங்கள் செய்தாயோ, ஆனதினாலே இத்தப்பெண் நமக்கு இணங்கின பெண் ணல்லவென்று மனம்வெறுத்துத் தன்னுடைய ஊருக்குப் போய்விட்டானோ, இல்லையென்றால் உன்னுடைய மனதைச் சோதித்து அறியலாமென்று வேஷமாறிக்கொண்டு பக்கத்திலேதானே மறைந்துகொண்டிருக்கிறானோ தெரியவில்லை, ஆகிலும் உன்னாலேயாவது தப்பிதங்கள் நடந்ததுண்டானால் என்னிடத்தில் விபரமாகச்சொல்லுமம்மா தாயே.

உடாங்கனை விருத்தம்.

எந்தனிடபிராண சகிசொல்லக்கேளாய்
இந்திரவுலகினர் முனிவரெல்லோர்காண்
சந்திரசூரியரறிய விண்ணுமண்ணும்
தானறியத்தந்தையன்னை சாட்சியாக
கந்தனுடன்கரிமுகனுஞ் சிவனுங்காண
கவுரியுமைபாத மலர்காணத்தானே
சுந்தரனுங்கனவிற்செய்த சம்போகத்தில்
தூசளவுதப்பிதத்தைச் சொல்லவில்லை.

வசனம்.

அகோவாரும் பெண்ணேசகியே! மும்மூர்த்திகளும்முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரமுனிவர்களும், ஆதிசத்தியும் ஆனைமுகனும் ஆறுமுகக்கடவுளும், சந்திரசூரியரும், ஆகாசம் பூமியுமறிய, எனது சொர்ப்பனத்தில் வந்து சம்போகஞ்செய்த ராசகுமாரனுக்கு நானொரு தப்பிதமும்செய்யவில்லை அடி பாங்கி.

சித்திரரேகை விருத்தம்.

தப்பிதமில்லாளாகிற் சத்திபார்வதியுன்றனுடே
செப்பினவார்த்தைநல்ல தினத்திலேபிறந்ததானால்



கற்புள்ளாளாகிச்சேர்ந்த கணவனற்குணனுமானால்
இப்பயேயழைத்தாயானால் க்ஷணம்வருவான்கண்ணே.

வசனம்.

அகோவாருமம்மாதாயே உடாங்கனையே! நீதப்பிதமொன்றுஞ் செய்யாதவளானால், உமையவள்வரங்கொடுத்தது நல்லவேளையாயிருந்தால், உன்னைக் கனவிற்கூடியகணவன் நற்குணமுள்ளவனுமானால், இப்போ நீ அவனை அழைத்தாயானால் ஏனென்று ஓடிவந்து எதிரே நிற்பானம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

அப்படியே அழைக்கிறேன் சித்திரரேகாய்.

உடாங்கனை-தரு-இ-ம-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

துரையேயென்முன் னிகூஷணமேவருவாய் - தேவேந்திரபோக சுகமேதந்தென்னை மணமேபுரிவாய்

அநுபல்லவி.

மறையேசொல்லும் வல்லவேபுகழும் - நானென்றுகலையின்
மதியேயுதிக்கும் நிகரேநிகழும் - அத்தர்பன்னீரோன
வாசமுகச்சுடர் தளதளதளவென
வாயதரக்கனியொளி நிகநிகநிகவென
கேசமிசைக்கிரீடம் பளபளபளவென
கிள்ளொளிர்திலகமும் தகதகதகவென (துரை

சரணங்கள்.

௧. வாய்நீரென்வாய்நீரொன்றாகச்செய்தும் - பின்னையுந்தாறுமாறாகவும் தூறாகவும்வைதும் - இதுவல்லாமல்
பேய்போலென்னினைவு தன்னையேசெய்தும் - தலையிற்கூந்தல்
பெருமல்நகங்கள்தனிலே கொய்தும் - ஒய்யாரமாக
பின்னற்சடையைக்கையிற் பிடித்துக்குலுக்கித்துயில்
மன்னிப்பிடித்தென்தனை மருவியணைந்திடவே (துரை)

௨. இனிமேல்தந்தைதாய் அமுதால்வாழ்கேன் - நீகால்வைக்காத
இடமேபோயெனது காமேநீள்கேன் - அல்லாமலும்
அனியாயத்தொழில்கட்கேமனமூழ்கேன் -நீ யாருங்க
ரல்லாமலும்வேறே நகர்தனை ஆள்கேன் - இதுவெல்லாமெய்
யாமெனவேயுன் னகத்திலெண்ணியென்
காமலாகிரியெனுங் கனலினையாற்றிட (துரை)

௩. ஒய்யாரக்கழுத்தில் கலன்களைப்பூட்டேன் - சுகங்கள்தொட்
டுனைக்காணுமட்டு மலர்களைசூட்டேன் - வானத்திலேழும்
வெய்யோன்சுடருக்கென் முகத்தினைக்காட்டேன்-இனியுநான்
விரகதாபத்தைப் பொறுக்கமாட்டேன் - என்றிஷ்டமாக
விரும்புவனுக்கவிர விரதஞ்செய்பவள்தன்னை
கரும்பினிலினிதெனக் கலந்துமகிழ்ந்திடவே (துரை)

வசனம்.

இந்தப்பிரகாரம் வெகுவிதங்களாக வர்ணித்து அழைத்தும் அந் தராசகுமாரன் வரக்காணேமே, என்னுவி தவிக்குதே சித்திரரேகாய்.

சித்திரரேகை தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

பல்லவி.

இனியென்ன செய்யலாமம்மா - தாயேகாம்
இனியாரை வையலாமம்மா

அநுபல்லவி.

அனியாயமாகவே நம்ம - யோசனைநல்லைக்
கடலாகப்போகுமோசும்மா
மனமேதெரிந்து போன - மகிழ்நாவாவாவென்று
அனமேரியும் புகழ்ந்து - அழைத்தும்வராதேபோனால்

சரணங்கள்.

௧. இந்திரபோகனென்றும் அஞ்சுபஞ்ச
தந்திரயூகனென்றும் - நீமகிழ்
சந்திரதேகனென்றும் குபேரற்கு
முந்தியயோகனென்றும் நீதான்
இந்தப்பிரகாரமுன் னிருதயத்தினிற்போற்றி
சொந்தம்பகர்ந்தழைக்கத் துரையும்வராதேபோனால் (இ)

௨. மாதாபிதாகுருவும் தெய்வமுஞ்-சிவன்
வேதாஅரியுருவும் நீயேனென்றும்
ஆதாவென மருவும் விந்துநாத
மாதாரமாங்குருவும் யாவுமெனக்கு
நீதானெனவுமுந்தன் நினைவிற்புகழ்ந்துபிராண
நாதாவாவென்றழைக்க நாதன்வராதேபோனால் (இ)

௩. மாரனருள்மகனே அல்லாமலினி
தாருந்திருமகனே அல்லாமல்கு
போன்பெருமகனே அல்லால்வாணு
சூரன்மருமகனே நீதானிந்த



நேசம்வாவென்றுவுந்தன்நினைவிற்புகழ்ந்துநானே
கூறியழைக்கவுந்தன் கொழுநன்வராதேபோனால் (இ)

வசனம்.

அகோவர்மம்மாதாயே! கொடுத்து வைத்துப் பிறவாததற்குக் கூப்பிடு போட்டால் வருமா? எட்டாத கனிக்கு இச்சைப்பட்டால் வருமா? கல்லுக்குரங்கைக் கடல்தாண்டச் சொன்னால் தாண்டுமா? சுவரிலே சித்திரமெழுதிச் சிரிக்கச்சொன்னால் சிரிக்குமா? கனவிலே கண்ட திரவியத்தை கடப்பாரையால் தோண்டிப்பார்த்தால் கிடைக்குமா? கனவிலேகண்டவனை விடிந்து கணவனாகச் சொன்னலாவானா? நீ எந்தவிதஞ் சொல்லிக் கூப்பிட்டபோதிலும் இராஜகுமாரன் வருவதற்கு அதிஷ்டமில்லாத காரியமென்று இருக்க வேணுமல்லாமல், அசத்தியம் எண்ணினபேருக்கு ஆகாதென்று எண்ணவேணும்; ஒருவரை வைவதினாலும், அஞ்சுவதினாலும், அழுவதினாலும், மனநோவதினாலும் ஒரு காரியமுமாகிறதில்லை யம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

ஆகாகேளும்பாங்கி! நான் என்னபிரயாசப்பட்டாலும் வாரானா? நானென்ன அசத்தியத்தை எண்ணப்பட்டவளா? மந்திர தந்திரங்கற்றவர்களுக்குங்கூட முடியாதா? பூர்வஞானந் தெரியப்பட்டவர்களுக்கும் முடியாதா சித்திரரேகாய்.

சித்திரரேகை-விருத்தம்.

மந்திரதந்திரங்கற்றோ ரானுலென்ன
மலரயனுமரியானு மானுலென்ன
அந்தரமண்ணுகுமண் ணந்தரமாகும்
ஆகிறதாகாது ஆகாதம்மா
விந்தையுடனேசகல விதமுஞ்செய்வார்
விதிவசத்தையாவர்களும் வெல்லமாட்டார்
எந்தனிடதிராணியதா லுன்னெண்ணத்தை
ஈடேறச்செய்திடும் வீயிளையாதம்மா.

வசனம்.

ஆகா கேளுமம்மா தாயே! மந்திரதந்திரங் கற்றவர்களானுலென்ன? பிரம்மா விஷ்ணு ருத்திரர்களானுலென்ன? ஆகாசம் பூமியாகும், பூமிஆகாசமாகும். ஆகிறகாரியங்கள் ஆகும், ஆகாதகாரியங்கள் ஆகமாட்டாது. ஆனாலும் மும்மூர்த்திகளும் விதியென்னும்முடிச்சுக்குள்ளே அகப்படுவார்கள். ஆனால் என்னுடையதிராணியானது உன்னுடைய எண்ணமானதைத் தீர்க்க மார்க்கங்கண்டதால் ஒன்றுக்கும் பயப்படாதம்மா தாயே.

உடாங்கனை-விருத்தம்.

ஈஸ்வரிகிருபையாலும் என்னிடயோகத்தாலும்
சாசனமாயுன்கைக்குள் சாமர்த்தியமிருப்பதாலும்
ஆசைதானீங்காதெந்த னகத்தினிலிருப்பதாலென்
யோசனைவிணாய்ப்போவ தொருநாளுமில்லைபாங்கி.

வசனம்.

அகோவாராய்பாங்கி! ஈஸ்வரியின் கிருபையினாலும் என்னிட யோகபலத்தினாலும் உன்னுடையசாமார்த்தியத்தாலும் எனதுஆசையாலும் நான் எண்ணினகாரியம் நிறைவேறுமடி பாங்கி.

சித்திரரேகை-வசனம்.

அப்படி நிறைவேறினால் மகாபாக்கியமம்மா தாயே! மூளைப்பாரைப் புறைப்பாருண்டா? அந்த ராசகுமாரன் அழகை நானும் கண்ணாற்பார்க்க ஆசைப்படுகிறேன் சீக்கிரத்தில் அழையுமம்மா தாயே.

உடாங்கனை தரு-இ-ம்-முகாரி-மட்டையதாளம்.

பல்லவி.

நீயழைத்தால்வரு　　வாரடி எந்தன்சாமி-யிது
நிச்சயமாகவுரைத்　　தேனடி மதனகாமி

அநுபல்லவி.

ஆயிரங்கைபடைத்த வாணனென்னும்　　அதிசூரன்
அருணாங்குமாரத்தியுடாங்கனைக் குன்மீதில்பிராணன்-என்று　(நீ)

சரணங்கள்.

௧. பிராணனுக்கேபிராணசகிமீதில்　　வாதா - ராசப்
பெண்கட்காசியுடாங்கனைக்கேபிராண　　நாதா - என்று(நீ)

௨. சித்திரந்தன்னிலெழுதவொண்ணாத்திவ்ய　　ரூபா - உயர்
தெய்வசபைகளிலென்னோரும்பிரஸ்　　தாபா - என்று(நீ)

௩. விஞ்சைமந்திரத்திலெனக்குமிகுந்திடும்　　லோலா - நல்ல
விற்பனமகளாமுத்தமிஸ்திரீபெற்ற　　பாலா - என்று (நீ)

௪. மன்மதனெழில்பழிக்கப்பிறந்தவொய்　　யாரா - தெய்வ
மாதர்மனத்தையுருக்கிடுஞ்சித்ரசிங்　　காரா - என்று　(நீ)

௫. பாற்கடலில்பள்ளிகொண்டோனேமனதில்நேமா - உந்தன்
பட்டத்துத்தேவிமேல் வர்மஞ்செலுத்திட லாமா - என்று　(நீ)

௬. உலகுக்குள்ளேயுந்தன் தேவியிழைப்பது　　கேவி - தனக்
கிடஞ்செய்யலாமா சூரதபராக்கிரம　　சாவி - என்று (நீ)

௭. கன்னிகுழன்மிசைக் காவிமலரினைச்　　சூட்ட - நான்
காணக்கிடையாதனைக் கண்கள்முன்னே　　காட்ட - யென்று (நீ)



௮. இன்றொருநாமுன்தேவியுடன்　　விளையாட - ரதிமதன்
இருவருங்கூடிக் கலந்ததுபோலவே　　கூட - வாவென்று(நீ)

௯. வாணாசுரன்மகள்வாயிற் பிறந்தசொல்　　வீணே - போமென்று
வானகத்துள்ளமடந்தையர்வாய்மொழிகளிற்காணே-னென்று(நீ)

வசனம்.

அகோவாரும்பெண்ணே சித்திரரேகாய்! நீ மனமகிழ்ச்சியோடு இந்தப்பிரகாரஞ் சொல்லி என் சாமியை அழைத்தால் வாருவாரடி சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

ஆகாகேளுமம்மா தாயே! எனக்கென்ன அழைக்கிறதற்கு வாயாநோகுது, நீ அழைத்ததுக்கு ஒரு பங்கு அதிகமாகவே அழைக்கிறேன். அந்த ராசகுமாரன் அட்டியில்லாமல் வந்திடுவானா, வாசதேது, பண்ணடிபோய் ஆகாதகாரியம் பயலாள்போய் ஆகுமா, மனுநீதி மன்னனுக்கிணையாத தாசி மந்திரிமகனுக் கிணங்குவாளா, கடவுக்கடங்காத யானை கைக்கொப்பத்துக் கடங்குமா, பேழைக்கடங்காத பாம்பு பெட்டிக்கடங்குமா, இடிக்குண்டேறுதமலையில் வெடிக்குண்டேறுமா, துரைசானி கூப்பிட்டுவாராத ராசன் தோழி கூப்பிட்டுவருவானா, நீகூப்பிட்டு வாாதவன் நான் கூப்பிட்டால் வருவானா, சும்மாயேன் கூப்பிடச் சொல்லுகிறாயம்மா தாயே.

உடாங்கனை-வசனம்.

அடி நீ விகடம்பேசாமல் கூப்பிடடி சித்திரரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

கேளம்மாதாயே! கூப்பிடுகிறதுசரி அவரிங்கேயிருப்பது மெய்யானால் கூப்பிட்டவுடனே ஓகோவென்றுவருவார், அவரெந்தமலையிற் போய்விட்டாரோ இங்கே தன்னைப்போலே கூப்பிட்டுத் தொண்டைகாய்வதுதான் கண்டது இதை ஆராகிலுங் கேட்டால் கேலிக்கிடமாகுமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அடிவாடிபெண்ணே சித்திரரேகாய்! என் சாமியைக் கூப்பிடச் சொன்னால் கூப்பிடுகிறதற்கு இத்தனை மன்றாட்டஞ்செய்கிறாய். ஏன் இப்படி வயிறெரிக்கிறாய், உனக்குப் புண்ணியமாகட்டும் கொஞ்சங் கூப்பிடடி சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

அப்படியே கூப்பிடுகிறேனம்மா தாயே.

சித்ரரேகை சிங்காரபத்தியம்.

கதிரவன்சுடரெனச் சிரசில்மகுடமின்ன
காதினிற்குண்டலங் கதறிமின்ன
மதிமுகமுமின்னவே திலகநெற்றியில்மின்ன
வரிசைசந்திரசாம் அணுங்கிமின்ன
பதறிவெண்டயமின்ன கொலுசுதண்டைகள்மின்ன
பல்வரிசையிதழ் பாகமின்ன
சதுர்முகனுமகிழ்வே கார்மேகமதுவென
சரீரமதுமின்னவே தாள்கள்மின்ன
சன்னைசெய்தேகனவு தன்னில்நீரே
முன்னமொருதரம்மருவி முத்தம்வைத்த
கன்னிவாணன்புதல்வி கண்கள்முன்னே
இன்னமொருதரம்மருவ இப்பவாரீர்.

வசனம்.

அகோவாருமம்மாதாயே! நான் ரொம்பவும் புகழ்ந்து அழைத்தேன் அந்தமகாராசன் வரக்காணோமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

இன்னமொருதரம் வருந்திக் கூப்பிடடி சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

அப்படியே நல்லது தாயே.

சித்திரரேகை சிங்காரபத்தியம்.

வேதவேதாங்கமொடு அறுபத்திநாலுகலை
வித்தியாரம்பமதில் மேவுலட்சுமி
ஓதுதற்கரிதான ரூபசிங்காரமும்
உல்லாசசல்லாப முணவுமொழியிலும்
சாதுர்யத்தொழில்களும் சாசவிஸ்தாரமும்
சபைமேவுவார்த்தையுஞ் சகலபலமும்
பாதகக்கசடரை அடக்கிடுமுபாயமும்
பண்புசாத்மீகமும் பாக்யசுகமும்
பழமைகளினங்களும் பார்வைவிதமும்
இளவயதுங்குலமு மினவகள்தனிலே
தளர்வுமோராணுமிலாச் சரசதுரையே
எழில்வனிதையின்முன்பு இப்பவாரீர்.

வசனம்.

அகோவாருமம்மா தாயே! நான் அநேகவிநயமாகக் கூப்பிட்டும் அவர் வரவில்லையம்மா தாயே.



உடாங்கனை வசனம்.

பாங்கி! முக்கால்மூன்றுதரமுண்டு இன்னொருதரமும் கூப்பிடடி.

சித்திரரேகை சிங்காரபத்தியம் ஆனந்தபைரவி.

தருமம்நீயேஅரிய வரிசைநீயேபெற்ற
தாய்தந்தைநீசகோ தரமும்நீயே
குருவும்நீயேசத்தி யுள்ளதெய்வமும்நீயே
குலமும்நீயேநல்ல குணமும்நீயே
திருவும்நீயேதிருவு மிந்தசெல்வமுநீயே
செயமும்நீயேசகல செனமுநீயே
உருவும்நீயேயென்று உடலும்நீயேயுடலில்
உயிரும்நீயேயென்று உணர்வும்நீயே
உல்லாசம்நீயேகண் ணொளியும்நீயே
நல்லோர்கள்நீயேயென் னருமைநீயே
வல்லாண்மைநீயேயென் மகிழ்நன்நீயே
யெல்லாம்நீயேயென்பவள்முன் னிப்பவாராய்.

வசனம்.

அகோ வாருமம்மா தாயே! முக்கால் மூன்றுதரம் கூப்பிட்டும் அந்த ராசகுமாரன் வரக்காணோமே அம்மா தாயே.

உடாங்கனை புலம்புகிற தரு-இ-ம்-நாதநாமக்கிரியை அடதாளம்.

பல்லவி.

பாங்கியினிநானென்ன செய்குவேன்-ஓ-ஓ-ஓ-பிராண
பாங்கியினிநானேது செய்குவேன்

அநுபல்லவி.

தூங்கும்போதெந்தன் குழலின்மலரைச்
சூட்டிமுத்தமிட்டவனையென்கையால்
தாங்கியணைத்துக்கண் திறந்துபார்க்கச்
சதுதாய்மறைந்தோடிப் போனானேபாவி (பாங்கி)

சரணங்கள்.

௧. பாரங்கள்முகமீதில் தாக்கினான் - உயிராயிந்திரிய
சாரந்தனைமதனவீட்டில் தேக்கினான் - லட்சணகாந்தன்
பேருஞ்சொல்லாமல் பிறப்புஞ்சொல்லாமல்
பெற்றதாய்தந்தை வழியுஞ்சொல்லாமல்
ஊருஞ்சொல்லாமல் குலமுஞ்சொல்லாமல்
ஓடிமறைந்திட்டானே பஞ்சபாவி (பாங்)

௨. சப்பிரமஞ்சனமீது மேவியே - வாடியவாச
புஷ்பமாரிமெய்மீது தூவியே - எந்தன்மீதினில்
குப்புறப்படுத்தே கொடியமதன
கோட்டிசெய்திடும்போது சார்ந்
கைப்பிடிநழுவாதெந்தன் சடையாற்
கட்டியிழுக்க மறந்திட்டேனேபாவி (பாங்)

௩. *நாற்றிசையும்புகழும் நாகரீகனே - உலகையாளும்
பார்த்திபர்க்கதிகமான தேகனே - மதனகெர்க்கோக
சாஸ்திரவந்தனை யாகவேதான்
சையோகஞ்செய்த பிராணநாதன்
வார்த்தைநளினத்தா லெனதுமதியை
மயக்கிக்கற்பழித் தொழிந்தானேதோழி (பாங்)

வசனம்.

அகோவாரும்பெண்ணே சித்திரரேகாய்! அந்த பஞ்சபாவி யென்கைக்கு எட்டாமலும், என் கண்ணெதிரே நிற்காமலும், ஊரும் பேருஞ் சொல்லாமலும், மாயமா யோடிப்போனானடி, அவனை மறக்கவுமாட்டாமல் என் மனம்பதறுதே சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

காசினியிலுந்தனுக்குச் சொந்தமான
கருணையுளஅத்தைமக்க ளம்மான்மக்கள்
வாசமுடன்ராச்சியங்க ளாண்டுகொண்டு
மன்மதன்போல் ழகுடனேவாழும்போது
நேசமுடனவர்களிலுன் மனதுக்கான
நிருபனைநீமணம்புரிய நினைத்தால்க்ஷேமம்
வேசமெனவந்தொழிந்து போனவற்காய்
விரகமடைந்தழுவதுவும் வீண்தானம்மா.

வசனம்.

அகோகேளுமம்மா தாயே! இந்த லோகத்திலே உனக்குச் சொந்தமான அத்தைமக்களும் அம்மான் மக்களும் வெகு அழகும் திறமையும் பெற்று வாழ்ந்துகொண் டிருக்கிறார்களே, அவர்களிலே உன் மனதுக்கான சுந்தரகுமார னொருவனைப்பார்த்து விவாகம்பண்ணிக் கொண்டு பெருமையோடு வாழ்ந்திருக்கலாமே, அதை விட்டு வேஷம்போட்டுக்கொண்டு வந்து அடினதைக்கண்டு விடிந்து பார்த்து ஒன்றுங்காணாதவர்போலே, சொப்பனத்தில் வந்துபோன திருடன்மீது விரகங்கொண்டு விருதாவாய் மயங்கலாமோ தாயே.



உடாங்கனை விருத்தம்

எத்தனைபேர்அத்தைமக்கள் மாமன்மக்கள்
இருக்கிறார்தான்கனவில்வந்து இதமாய்ச்சேர்ந்தான்
புத்தியொடுமெந்தன்புத்தி சேர்ந்தபோதே
புருஷனவனல்லாமற் போவதுண்டோ
மற்றொருவன்மீதினி யாசைவைத்தால்
மறவிபதஞ்சேர்ந்தழுந்தி மயங்கலாகும்
பத்தினிநானென்பதற்கு முறைமையில்லை
பாமபதம்சிவபதமும் பலித்திடாதே.

வசனம்.

அகோவாரும் சித்திரரேகாய்! அத்தைமக்கள் மாமன்மக்கள் அநேகம்பேரிருந்தாலும், முன்னமே யென்னைச்சேர்ந்தவன் கருத்துடனே யென்கருத்தும் இணங்கினபோதே அவனேயெனக்குப் புருஷனல்லாமல் வேறேயொரு நாயகன்மீதி லாசைவைத்தேனானால், கற்புநிலை இழந்து நரகத்திற்காளாகி எமவாதைக்குட்பட்டு வைகுண்ட கைலாசமாகிய நற்பதவிகளும் கிடையாமற் போகும். நானினிமேல் மறு புருஷர்முகம் பார்க்கமாட்டேன் சித்திரரேகாய்.

உடாங்கனை ரோபமடைகிற த-ரு-இ-ம் சாவேரி அடதாளம்.

பல்லவி.

ஆவிபதறுதம்மா பாங்கி - இனிநா
ளுருடன்சொல்லுவேன் துயரம்நீங்கி

அநுபல்லவி.

பாவிபெண்ணைமிகவும் வெறுத்து - அழகு
பார்த்திபன்கடந்ததிசையைக்குறித்து - என் (ஆவி)

சரணங்கள்.

௧. தோழியேயெந்தன்காயத்தைக் கடக்க - கனவில்வந்த
சுந்தரன்படுக்கையிற்போய்ப் படுக்க - என் (ஆவி)
௨. உரையுங்கடங்குமன்னைத் தின்று - தேகம்
ஒழிந்துபோகநான்வந்த தென்று - என் (ஆவி)
௩. இந்திரஜாலங்களைநான் படிப்பேன் - துரைதா
னெங்கிருந்தாலும்போய்க்கண்டு பிடிப்பேன் - என்று(ஆவி)
௪. புத்திக்கேற்றிடுங்கலன்கள் பூண்பேன் - கனவில்வந்த
புருஷன்திருமுகத்தைக் காண்பேன் - என்று(ஆவி)
௫. காமனைச்சண்டைக்குவாவென் றழைக்க - கனவில்வந்த
னுடனேசல்லாபம் விளைக்க - என் (ஆவி)

௬. கோனிமையோர்புஷ்பமாரி பெய்ய - கனவில்வந்த
கொழுநனுக்கேழூழியங்கள் செய்ய - என் (ஆவி)
௭. காசினியிரேழிற்புகழ் தேட - கனவில்வந்த
கணவனுடன்கூடிவிளை யாட - என் (ஆவி)
௮. அத்தைமகள்நானேயென்று கூற - கனவில் வந்த
ஆசைநாயகன்மார்பில்போய் சேர - என் (ஆவி)
௯. பாரினிலோர்காந்தன்முகம் பாரேன் - கனவில்வந்தான்
பாதங்களைச்சிரசில்வைக்கப் போரேன் - என் (ஆவி)
௰. செய்தபாவங்களையெல்லாந்தலைப்பேன் - கனவில்வந்தோன்
தேவியாகயென்றைக்குநான்கிலேப்பேன் - என் (ஆவி)
௧௧. அரிவையேயுனக்கினிக்கை நீட்டேன் - நானினிமேல்
அரைக்கொடியிங்கிருக்க மாட்டேன் - என்றென்(ஆவி)

வசனம்.

அகோவாரும்பெண்ணே சித்திரரேகாய்! என்மனமானது என் கனவில் வந்தவனை யெங்கிருந்தாலும் தேடிப்பிடித்துக் கலந்து கூடி அவன் சொன்ன ஊழியங்களைச் செய்துகொண்டிருந்கலா மென்று என்னுவிபதறுதே யென்னசெய்வேனடி சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

கனமதுபெற்றிருப்பதுவு மனதுதானே
களவுசெய்துதியங்குவது மனதுதானே
தனிவழியாய்ப்பிரிகுவது மனதுதானே
சுகணஞ்சேர்ந்துகூடப்பறவு மனதுதானே
சினமதுகொண்டுளறுவதும் மனதுதானே
சினமதனையடக்குவதுஞ் சிந்தைதானே
மனமதுபோம்மார்க்கமெல்லாம் போகாதென்று
மறைமொழியக்கேட்டிருந்து மயங்கலாமோ.

வசனம்.

அநேக விசனத்தையடைந்திருக்கிறதாயே! கேளும், கனந்தேடப்பட்டதும் மனது, திருட்டுத்தொழில் தேடுவதும்மனது, தனியாக ஓடுவதும் மனது, உலகத்தோடு பொருந்தி நடப்பதும் மனது, கோபங்கொள்வதும் மனது, பொறுமையா யிருப்பதும் மனது, ஆகையினாலே மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டா மென்று நீதிசாத்திரங்களிலெல்லாம் படித்திருந்தும், இப்படி மனம்போனபோக்கிலே போகவிட்டு மயங்கலாகுமோ அம்மா தாயே.



உடாங்கனை-நந இ ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. ஈரேழுவயதுகொண்ட மாதுக்கடி - சகியே
இந்தவிரகதாப மேதுக்கடி - சகியே
௨. மன்னவனழகுதனை மறக்கிலையே - சகியே
மன்னனுக்குத்தேவியாகப் பிறக்கிலையே - சகியே
௩. தீயிலிட்டமெழுகாயுள்ள முருகுதடி - சகியே
தேகமெங்குமோகதாகம் பெருகுதடி - சகியே
௪. இருஸ்தனங்களும்விம்மி யிருக்குதடி - சகியே
இந்தவிரகந்தணிக்கவென்னா லாகுமோ - சகியே
௫. தடைபடாவிரகவாதை தாளுவதெப்படி - சகியே
சாமியைக்காணாமல்நான் வாழ்வதெப்படி - சகியே
௬. அந்தமகாராஜனுக்கு மோகமில்லையோ - சகியே
அவருக்குநான்தேவியாக யோகமில்லையோ - சகியே
௭. எண்ணைக்குந்தண்ணிக்குநந்த நிந்ததிரேகம் - சகியே
எந்தவிதந்தாங்குமிந்த வெகுமோகஞ் - சகியே
௮. மன்னனைக்காணாமலாவி தேடுதடி - சகியே
மன்மதபாணங்கள்வந்து சாடுதடி - சகியே
௯. சர்க்கரைகசந்திடுதே தலைநோகுதே - சகியே
சந்திரக்குளிர்ச்சியுந்தான் தணலாகுதே - சகியே
௰. புந்தியுந்தடுமாறுது வாய்கூசுதே - சகியே
பொதியமாருதந்தணல் போல்வீசுதே - சகியே
௧௧. பிடியிடையுமெள்ளமெள்ள வலிக்குதடி - சகியே
மதிவதனமிகவுந்தானே வாடுதடி - சகியே
௧௨. குலைநடுங்கிக்கவ்விக்கவ்வி தாவுதடி - சகியே
கோகிலங்களெல்லாம்வந்து கூவுதடி - சகியே
௧௩. மதிவதனமிகவுந்தானே வாடுதடி - சகியே
வண்டினங்களுந்தானே பாடுதடி - சகியே
௧௪. வீணையவாசிக்கக்கைகள் கூசுதடி - சகியே
விகடப்பிரசங்கங்கிளிகள் பேசுதடி - சகியே
௧௫. சுக்குப்போலநாவு தானே உலருதடி - சகியே
சொல்லதனில்தூஷணச்சொல் கலக்குதடி - சகியே

௧௬. கள்ளனைத்தானெந்தனெஞ்சு நினைக்குதடி - சகியே
கற்சுமைபோலுடைமையெல்லாங் கனக்குதடி - சகியே

௧௭. சத்தியமென்னோடுஞ்சண்டை எற்படுதே - சகியே
சந்தனம்பன்னீர்வெந்நீர் போற்சுடுதே - சகியே

௧௮. தேகமெல்லாங் காமமுகி லோடுதடி - சகியே
சீக்கிரத்தில்மலர்களெல்லாம் வாடுதடி - சகியே

௧௯. விரகப்பேய்களென் னெதிரே நிற்குதடி - சகியே
மேல்மெத்தைநெருஞ்சிமுள்போல் தைக்குதடி - சகியே

௨௦. பாதகியென்சரீரமினைத்துப் போச்சுதடி - சகியே
பாலன்னம்வாயிற்குமருந்து ஆச்சுதடி - சகியே

௨௧. என்னைகேடோசிரசுதானே கவிழ்ந்திடுதே - சகியே
இடையடர்ந்தசேலைதானே அவிழ்ந்திடுதே - சகியே

௨௨. கூந்தலுங்கலைந்துதானே சரிந்திடுதே - சகியே
கூட்டோடுகைவளைகள்தானே நெறிந்திடுதே - சகியே

௨௩. வித்தைகளெல்லாம்விண்ணுக்குப் பறக்குதடி - சகியே
வேதங்களைத்தானேமனம் மறக்குதடி - சகியே

௨௪. உண்பதையெல்லாமென் மனது வெறுக்குதடி - சகியே
உன்சொல்லெல்லாம் விஷமா யிருக்குதடி - சகியே

௨௫. இத்தனையவதிக்குநா னானேனே - சகியே
ஏசுவார்க்கும்பேசுவார்க்கும் கிழானேன் - சகியே

௨௬. என்னையேயனுபவிக்க வேளைமீது - சகியே
இத்தனைபோர்செய்யலாமே மெத்தவாது - சகியே

௨௭. குடிகெடுப்பாரிவர்களெல்லாங் கோபமடி - சகியே
கொண்டுவாதுசெய்தாலென்ன லாபமடி - சகியே

௨௮. பாவியென்றுந்தோஷியென்றும் வைததுண்டோ - சகியே
பாதகங்கள்பழிகள்முன் செய்ததுண்டோ - சகியே

௨௯. இவர்களுக்குத்தானேயிந்த மதமாமோ - சகியே
இந்தமதமென்றென்றைக்கும் சதமாமோ - சகியே

௩௦. பேருலகில்பெண்பிறக்க லாகாது - சகியே
பெண்பழியிவளைவிட்டுப் போகாது - சகியே

௩௧. கொலைகளவனியாயங்களைக் குறித்தேனோ - சகியே
கூடியிருந்தவரைமுன்நாள் பிரித்தேனோ - சகியே



௩௨. துரைகளுக்குமுன்நாள்செய்த தீதுதானோ - சகியே
துக்கத்திற்காளானதெந்தன் விதிதானோ - சகியே

௩௩. ஈஸ்வரியின்கிருபையெனக்கில்லாமல் போச்சு - சகியே
இந்தனைபேரெந்தன்மேல் விரோத மாச்சு - சகியே

௩௪. ஐயையோபெண்ணாய்ப்பிறந்தினென்ன செய்வேன் - சகியே
அந்தரமாய்வந்தநோவுக் காரை வைவேன் - சகியே

௩௫. இத்தனைபகையுந்தப்பி யென்பிராணன் - சகியே
எப்படிப்பிழைக்குமோதா னேதுகாணேன் - சகியே

(தெலுங்கு.)

௩௬. முத்துமொகுடனிஜாகவிடுசி புத்திலேகநேனு
மோசபோதி ராத்திரிவேள சித்திரரேகா

௩௭. வித்துலேகசெட்டு கனுகே சித்திரரேகா
எண்டிபோயினட்லலாயபதுகு சித்திரரேகா

உடாங்கனை-வசனம்.

அகோகேளும் பெண்ணே சித்திரரேகாய்! பசித்திருப்பவர்க்கு முன்னாலே பகடையாடுவது போலவும், தவசுசெய்கிறவர்கள் முன்பு சதுரங்கங்கட்டினது போலவும், புலிக்கூட்டுக்குள்ளே புல்லுச்சுமை போட்டாப் போலவும், கண்ணிழந்தவன் முன்னாலே காருடவித்தைகள் செய்தாப்போலவும், வேதசாஸ்திரம் புராணமென்று நீ சொல்லுகிறதெல்லாம் என் காதுகளுக்கு நாராசங்காய்ச்சிக் காதுகளிலே விட்டால் எப்படியோ அப்படியிருக்கிறது. அதுவுமல்லாமல் உடம்பு வெடுவெடென்றுவருகிறது. கண்விழி கத்திரித்து விம்மிபோயிருக்கிறது, உடம்பெல்லாம் வேர்க்கிறது, பஞ்சபூதங்களும் தடுமாறுகிறது, பயித்தியம் பிடித்தாப்போ லிருக்கிறது, மோகதாக மதிகமாகிறது, காதுகளும் குப்பென்று அடைத்துக் கொள்ளுகிறது, இனிநானென்னசெய்வேன் பெண்ணே சித்திரரேகா.

சித்திரரேகை வசனம்.

அம்மாகாதுஞ் செவிடாய்ப் போச்சுதா? இனிக்கண்ணுந்தெரியாமல் போகிறதற்கு நாள்வந்ததா? ஐயோ! குருட்டோடே அழுகிறதும் செவிட்டோடே அழுவதற்கு யாராலாகும். இனிச் சத்தம்போட்டு ஊரோரு நாடேகேளென்று நான் சொல்லமாட்டேன், இன்னோஞ் சொன்னதெல்லாங் காதிலேறிற்று இனிச்சொல்லுகிறது காதிலேறப்போகுதா இனி உன்ன திர்ஷ்டமம்மா தாயே.

உடாங்கனை-வசனம்.

அகோவாரும் பெண்ணே சித்திரரேகாய்! இனி விரகாக்கினி வேதனையைப்பொறுக்க வசமல்ல, என்சரீரம் மிகவும் தத்தளிக்கிறதே, என்சாமியாசையை மறக்க மார்க்கமறியாமல் மனது தடுமாறுதே, உலைவாயிலிட்ட மெழுகுபோலே உள்ளமெல்லா முருகுதே, தேகமெல்லாம் மோகமயமல்லாமல் வேறேயில்லை, சரீரத்தை விட்டுக் குடிபோவது போலே ஸ்தனபாரங்கள் விம்முதே, இனிமேல் பிராணனை வைத்திருப்பது வெகு பிரயாசமாகக்காணுதே எனக்குத்தானோ இத்தனை மோகம் அந்தமகாராசனுக்கு மோகமில்லையோ, அவனுக்குப் பெண்சாதியாக எனக்கு யோகமில்லையோ, காசுபொருத கண்ணாட்டிகளெல்லாம் என்னை யேசுகிறதற்கு இடமாச்சுதே, முன்னே பேசினவார்த்தை பின்னேமறந்துபோகுதே, பெண்ஜென்மமாய்ப்பிறந்தார்க்கு இத்தனைஅவமதிப்புண்டோ, இன்னமும்என்னென்ன துக்கத்திற்கு ஆளாவேனோதெரியேன். தலைசுத்திவிடுது, கைகால்சோர்ந்துபோகுதே, இடுப்புவலிக்குதே, நாவறண்டுபோகுதே,மனதுநடுங்குதே,மன்மதபாணங்கள் மென்மேலாய்ச்சாடுதே, சந்திரகிரணம் தழலாக வெதும்புகின்றதே, தென்றல் காத்தே தணிவில்லாமல்வீசுதே, சமுத்திர அலைகள் சத்திக்குதே, கோகிலங்களெல்லாம் ஒரேஇனமாகக் கூவுகிறதே, முகவாட்டங் கொள்ளுதே, வரிவண்டினங்கள் கீதங்கள்பாடுதே, வீணைவாத்தியம் பண்ணைக்கைகள்கூசுகிறதே, பஞ்சவர்னக்கிளிகள் விகடம்பேசுதே, வார்த்தைகளிலே தூஷணைவார்த்தைகள் கலக்குதே, அடிக்கொருதரம் என்பிராணநாயகனை மனதுநினைக்குதே, ஆடையாபரணம் மிகவும் கனமாகுதே, சந்தனக்கலவைகள் வெந்நீர் போலச்சுடுகிறதே, புஷ்பங்களெல்லாம்சரீரத்திற்பட்டமாத்திரத்தில் வாடிப்போகிறதே, காமப்பேய்கள் என்னெதிரே நிற்கிறதுபோலே என்கண்ணுக்குத் தோன்றுதே, பஞ்சணைமெத்தையானது நெருஞ்சிமுள் [illegible]சரீரபுஷ்டி குறைந்சுதே, பாலுஞ் சோறும் வாயிக்கு மருந்துபோலிருக்குதே, சிரசுசெலவையாய் நிற்கமாட்டேனென்கிறதே கூந்தல்சரியுதே, சேலை அவிழ்ந்துபோகுதே, உன்னுடைசொல்லுகளெல்லாம் என்காதுக்கு விஷமாயிருக்குதே, நெருப்புத்தழல் பரப்பிஅதிலே படுக்க வைத்தாற்போல் என்சரீரம் வெதும்புகிறதே அந்தப்புண்ணியபுருஷனை நினைக்கநினைக்கத் தீராதஎண்ணமும் ஆராத்துயரமும் மேன்மேலாயுண்டாவதுந்தவிர, விரகவேதனை பொறுக்க முடியவில்லையே, என்தாய் தகப்பனுக்கு நானொருத்தியாய்ப்போகிறதுந்தவிர சண்டாளனாகிய மன்மதன் பஞ்சபாணங்களாலே



அடிபட்டு உயிர்தப்புவது கஷ்டம்போற் காணுகிறது. இச்சமயமே னுக்கும் சந்திரனுக்கும் தென்றலுக்கும் குயில்கட்கும் கிளிகட்கும் சந்தனக்கலவைக்கும்புட்பத்திற்கும் உடைமைகட்கும் [illegible] னென்னகுற்றம் பண்ணினேன், இதுகளெல்லா மென்மேலில் வர்மம் சாதிப்பதேதோ, இத்தனை வாதனைகட்கெல்லாம் என்னை ஆளாகவைத்துப் போட்டு என்பிராணநாயகன் எங்கேயோ மறைந்து விட்டானே சித்திரரேகாய்.

சித்திரரேகை-விருத்தம்.

உத்தமவடிவின்மிக்க வுடாங்கனைத்தாயே நீதான்
இத்தனை துயரங்கொண்டு ஏங்கிநின்றழுவதற்கு
சத்தியவாசகனும்மிங்கே தானிவரா திருந்தல்பார்த்தால்
செத்தவன்போலேயெந்தன் சிந்தையிற்றோணுதம்மா.

வசனம்.

அகோவாருமம்மா தாயே! நீ இத்தனை மதிமயக்கங்கொண்டு உயிர்போகாத தொரு குற்றமாய் புலம்பி அழுது கண்ணீர் விடுவதற்காக மனமிரங்கி அந்த மகாராசன் இங்கேவருவான்! இப்பவும் இத்தனை அலங்கோலத்திற்கும் வாரிருந்தபோதே அவனுயிரிழந்து போனதுபோலே எனக்குத் தோணுதம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

ஆஹாகேளும்பெண்ணே சித்திரரேகாய்! அவனெப்படி உயிரிழந்து போவானடி.

சித்திரரேகை வசனம்.

இப்படித்தான் எங்கேபோய் யாரையைப் பிடித்திழுத்தானோ, சமஸ்தானங்களிலும் புகுந்து கொள்ளையிடப்போனானோ, சாமர்த்தியசோடே சண்டைக்கு நின்றானோ, திருட்டியினாலேயோ புரட்டினாலேயோ,நோயாலேயோ, விஷங்களாலேயோ, பொறாமைக்காரர் கண்திருஷ்டியினாலேயோ, சாபத்தினாலேயோ, செய்வினையினாலேயோ, எந்தவிதத்தினாலேயோ மடிந்துபோனதுபோலே காணுதம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

ஐயோ அம்மா சித்திரரேகாய்! அவனிறந்து போனானா, இனி யெப்படியம்மா சித்திரரேகாய்.

உடாங்கனை புலம்பல்-நீபகை-இ-ம்-ஏகதாலராம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

க. ஐயையோயென்பிழைப் பவகேடாய்ப்போச்சுதேசித்ரரேகாய்-அத்
தய்யாரன்மடிந்திட்டானுயிர்வைத்திருப்பேனோசித்ரரேகாய் [illegible]

௨. பத்தாவிழந்திட்டபஞ்சமாபாவிக்கு சித்ரரேகாய் - இந்தக்
கொத்துச்சரங்கள்கொலுசுகளெனத்திற்கு சித்ரரேகாய்

௩. யோகமுள்ளபுருஷனுதவாதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
மோகமென்னத்துக்குத்தாகமென்னத்துக்கு சித்ரரேகாய்

௪. குணமுள்ளபுருஷனைக்கூடாதபாவிக்குச் சித்ரரேகாய் - இந்த
மணமலருஞ்சடைவர்ணிப்புமேதுக்கு சித்ரரேகாய்

௫. மன்னனைக்கூடியேவாழாதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
பின்னற்சடையும்பிறுக்கலுக்கேதுக்கு சித்ரரேகாய்

௬. விந்தைமிகுந்தோறும்வேண்டாதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
சுத்ரப்பிறையும்ராவிவட்டமெனத்திற்கு சித்திரரேகாய்

௭. கெட்டிக்காரப்புருஷன்கிடையாதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
கட்டியொடுங்கொப்பித்தொங்கல்தானேதுக்கு சித்ரரேகாய்

௮. சுகந்தந்தபுருடனைத்தோற்றிட்டபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
புகடிகளெனத்திற்குப்பொன்னோலையெனத்துக்கு சித்ரரேகாய்

௯. எண்ணினவெண்ணாத்தாவீடேறுப்பாவிக்கு சித்ரரேகாய் - இரு
கண்ணுக்குமையாமோகஸ்தூரிப்பொட்டாமோ சித்ரரேகாய்

௧௦. லட்சணபுருஷன்லபியாதபாவிக்குசித்ரரேகாய் - மூக்கில்
வச்சிரப்புலாக்கொடும்வளையலெனத்திற்கு சித்ரரேகாய்

௧௧. சத்திக்குப்பிரியமில்லாச்சண்டாளப்பாவிக்கு சித்ரரேகாய் - மிக
திந்திக்கும்வெற்றிலைத் தினிதானேதுக்கு - சித்ரரேகாய்

௧௨. அழகுள்ளபுருஷனை அணையாதபாவிக்கு சித்ரரேகாய் - சுடர்
பளபளென்றிலங்கும் பதக்கங்களேதுக்கு சித்ரரேகாய்

௧௩. சிங்காரபுருஷனைச் சேராதபாவிக்குசித்ரரேகாய் - இந்த
அங்கச்சரங்களின் தொங்கல்தானேதுக்கு சித்ரரேகாய்

௧௪. புருஷனைப்பிரிந்திடும் பொல்லாதபாவிக்கு சித்ரரேகாய் - நல்ல
மரகதமோகன மாலைகளேதுக்கு சித்ரரேகாய்

௧௫. கட்டழகுள்ளோனைக் கைவிட்டபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
அட்டிகையுஞ்சொர்ன பட்டாணையேதுக்கு சித்ரரேகாய்

௧௬. தவளச்சந்திரவதனனைத் தக்காதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
பவளத்தாவடங்களும் பதக்கங்களேதுக்கு சித்ரரேகாய்

௧௭. சுந்தரமிகுந்தனைத் தொடாதபாவிக்கு சி[illegible]ரேகாய் - இந்த
சந்திரவளைகளும் சந்துக்களேதுக்கு சி[illegible]ரேகாய்



௧௮. சங்கரிசொன்னசொல் தக்காதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
சிங்காரவிக்கையும் சேலைகளெனத்திற்கு சித்ரரேகாய்

௧௯. இஷ்டமுள்ளோனை யிழந்திட்டபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
ஒட்டியாணமேதுக்கு ஒய்யாரமேதுக்கு சித்ரரேகாய்

௨௰. புருஷனென்னுமுடைமை பெரியவுடைமையென்று சித்ரரேகாய்
பருகைநரியார்க்குப் பல்நகையேதுக்கு சித்ரரேகாய் [சொலும்

௨௧. கொஞ்சிக்குலாவக் கொழுநனில்லாதாட்கு சித்ரரேகாய் - வாடை
மஞ்சளெனத்துக்கு மல்நகையேதுக்கு சித்ரரேகாய்

௨௨. பண்ணினதபசு பலியாதபாவிக்கு சித்ரரேகாய் - இந்த
மண்ணுக்கானேதுக்கு மாளிகையேதுக்கு - சித்ரரேகாய்

௨௩. வாலப்பிராயத்தில் மகிழ்நனில்லதாட்கு சித்ரரேகாய் - தயிர்
பாலெல்சோதம் பலகாரமேதுக்கு சித்ரரேகாய்

௨௪. கனவிலணைந்தோனைக் கைவிட்டபாவிக்கு சித்ரரேகாய் - அத்தர்
பனீருசந்தனம் புனுகுதானேதுக்கு சித்ரரேகாய்

௨௫. காயமொழிந்திடு காடுபோய்ச்சேர்கினுஞ் சித்ரரேகாய் - பெற்ற
தாயுந்தகப்பனைந் தானேமறக்கினுஞ் சித்ரரேகாய்

௨௬. அந்தமகாராஜன் அழகுதனைமறக்க சித்ரரேகாய் - சகியே
யெந்தனாலாகாது யெவராலுமாகாது சித்ரரேகாய்

௨௭. தன்மத்தைச்செய்யாத தாயின்வயிற்றினில் சித்ரரேகாய் - நான்
ஜன்மித்தபேதையோ சரீரங்கொதிப்பது சித்ரரேகாய்

௨௮. மோகத்தீயினுள்ளே மூழ்காமலென்னுவி சித்ரரேகாய் - எந்தன்
தேகத்தைவிடவகை தெரியாமலலையுதே சித்ரரேகாய்

௨௯. சொற்பனந்தனில்வந்த சோரனழகுதன்னை சித்ரரேகாய் - நா
னெப்படிமறந்துயிரினிவைத்திருப்பது சித்ரரேகாய்

௩௰. பெருமைதனையிழந்து புலம்பிநான்தவிப்பது சித்ரரேகாய் - அந்த
பிரமனுங்கினிதான பெருவினைபாட்டோசொல் சித்ரரேகாய்

௩௧. விரகவாதைதயிற்சிக்கி விருதாவாயலைவதுஞ் சித்ரரேகாய் - அந்த
சரஸ்வதிதேவிக்கு சந்தோஷமாகுமோ சித்ரரேகாய்

௩௨. வேரற்றசெடிபோலே வெம்பித்தவிப்பது சித்ரரேகாய் - அந்த
பார்வதிதிருவுளப் பாங்கெனலாகுமோ சித்ரரேகாய்

௩௩. விதியைகொந்திவ்வேளை விரகத்திற்கிளைப்பதும் சித்ரரேகாய் அந்த
மதனனுக்கினிவாரு மரியாதைதானோசொல் சித்ரரேகாய்

௩௪. செந்தழல்போலவென் தேகந்தனக்சுலேதம் சித்ரரேகாய்-அந்த
சந்திரனுக்கிதுவொரு சாமர்த்தியந்தானேசொல் சித்ரரேகாய்
௩௫. தின்றநிலையில் நிலைக்காமலலைவதும் சித்ரரேகாய் - அந்த
தென்றலுக்கிதொரு திருவிளையாட்டோசொல் சித்ரரேகாய்
௩௬. ஒளிகளுக்கிதுவொரு வெம்பிரமாகுமோ சித்ரரேகாய் - அந்த
அளிகளுக்கேனிந்த ஆங்காரமாகுமோ சித்ரரேகாய் [அந்த
௩௭. குயில்களுக்கிதொரு கொண்டாட்டந்தானேசொல் சித்ரரேகாய்
மயில்களுக்கிதொரு மகத்துவந்தானேசொல் சித்திரரேகாய்
௩௮. உடைமைகட்கிதுவொரு உச்சிதந்தானேசொல் சித்ரரேகாய்
கடல்களுக்கிதொரு காரியந்தானேசொல் சித்ரரேகாய் [அந்த
௩௯. மலர்களுக்கிதுவொருவல்லாண்மைதானேசொல் சித்திரரேகாய்
கலைவைகட்கிதுவொரு கனலாபந்தானேசொல் சித்ரரேகாய் [அந்த
௪௰. உடைகளுக்கிதொரு யோகந்தானேசொல் சித்ரரேகாய் - அந்த
படைகளுக்கிதொரு பாக்கியந்தானேசொல் சித்ரரேகாய்
௪௧. உண்பதுக்கிதொரு உற்சாகந்தானேசொல் சித்ரரேகாய் - நிதம்
தின்பதுக்கிதொரு சிங்காரந்தானேசொல் சித்ரரேகாய்
௪௨. பத்தினியென்றெண்ணிப் பாராமல்மதமிஞ்சி சித்ரரேகாய்-எனத்
தித்தனைபேர்களும் எதிராளிஆனார் சித்ரரேகாய் [ந்த
௪௩. பாரெல்லாங்கூடிலோர் பருப்புலியென்செய்யும் சித்ரரேகாய்-அ
ஊரெலாங்கூடினுமொரு பிராணியென்செயும் சித்ரரேகாய்
௪௪. புருஷனுயிரிழந்து போனதுமெய்யானால் சித்ரரேகாய் - இனி
யொருகொடிபேனுமென் னுயிர்வைத்திருக்கேனே சித்ரரேகாய்
௪௫. தானேனிந்தக்கஷ்டந்தாயிசஞ்செய்யாமல் சித்ரரேகாய் - அரி
வாள்தனைநட்டுயிர் மாய்த்திடுவேனிப்போ சித்ரரேகாய்

வசனம்.

அகோவாரும்பெண்ணே சித்திரரேகாய்! என்னுடைய பிராண நாயகன் இறந்துபோனது நிச்சயமாயிருக்குமா, இருக்குமாயின் நா னினிமேல் உயிர்தரித்து வாழமாட்டேன் மந்திரவாளால் வெட்டிக் கொண்டு பிராணனைவிட்டு விடுவேன் இதுநிச்சயம்அம்மா சித்திரரே காய்.

சித்திரரேகை-விருத்தம்.

பத்தும்பத்துங்கடறவே விசாரியாமல்
பாருலகில்மடிந்தவர்கள் பலபேருண்டு



செத்ததும்சாகாததையுங் கண்டுபார்த்து
செத்ததுமெய்யாகிலதை ஜெயந்தான்செய்ய
உத்தசமிரானிருக்க நீதானிப்போ
உயிர்விடவும்ஞாயமில்லைஉயிர்தான்விட்டால்
பெற்றவரும்தான்துயரப் படுவதல்லால்
பேருலகெல்லாமிகழ்ச்சிப் பேசுவாரே.

வசனம்.

அகோகேளும் வாணாசுரன் சிரோரத்தினமே! இந்த லோகாதி லோகங்களிலே பத்தும்பத்தும் நிரவிசாரியாமல் உயிர்ச்சேதமானா வர்கள் அனேகருண்டு. ஆனதினால் நீயிப்போது அந்தமகாராஜன் உயி ர்ச்சேதமாகிவிட்டதும் உயிருடனிருப்பதும் மனப்பூர்வமாகப்பார்த் தபின் அந்த மகாராஜன் உயிர்ச்சேதமாயிருப்பது மெய்யாயின் உன் மனதிஷ்டப்படி சந்தோஷங்கொடுக்க நானிருக்கும்போது, நீபிராண னை மாய்த்துக்கொள்வது ஞாயமல்லவே, மானமும் பிராணனும்போ னால் வாராது, நீ பிராணனை மடித்துக்கொண்டால் தாயுந்தகப்பனுங்கூட அநேக வியாகுலமாவதுந்தவிர உலகிலுள்ளவரும் இகழ்ச்சிப் பேசு வாரம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அகோகேளும் சித்திரரேகாய்! நீசொன்னதெல்லாம்மெய்தான் அதிலே குறைவில்லை, எங்காயகனிறந்துபோனதும் போகாததும் இன்னமும் கண்டுபார்ப்போமென்று தைரியப்பட்டிருந்தபோதினும் இக்கண்டாளனான மன்மதனுக்கு என்பேரிலேன் இவ்வளவுகோபம், இவனுக்கு நானென்ன வனியாயம்பண்ணினேன் புட்பபாணத்தை என்மேலே விடலாமோ சித்திரரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

மன்மதனுக்குப் பிழைப் பதுதானம்மா தாயே.

உடாங்கனை-ஈரடி. சிங்காரபத்தியம்.

வெள்ளிதங்கத்தினால் தேருண்டுபண்ணியதின்
மீதுவாய்வால்திர வுருணஸ்திரமுதலாய்
மேலானபாணங்க ளேற்றியத்தேருக்கு
வேடிக்கைசெய்ததில் வெகுகுதிரையை
என்னளவும்சரியாமல் பூட்டியத்தேரினில்
இருந்துசத்திராதியோ டடறுசெய்து
எமனேடெதிர்த்தம்புகளைவி யமர்வெல்லும்
இறைவர்முன்னானுமொரு இறைவனென்று

கன்னாணுகாதிடம் பொதிகைமலைமாருதம்
கனகரதமாய்க்கிளிகள் புரவியாக
கன்னலேசிலையாக வண்டினம்நாணாக
கடிகமழும்மலர்களே கணைகளாக்கி
இன்னமொழிமாதர்மேல் நாணமில்லாமலே
கேட்டபேர்பார்த்தபேர் கேலிபண்ணவே
திருதுபோர்செய்வதைப் பார்க்கிலுமாழமுள
கிணறுபார்த்ததில்வீழ்ந்து கெடுதல்நன்றே
விருதாவிலேகெட்டலைந்துயிர்விடும் வினைகள்நீங்க
பெரியோரையண்டிநற்புத்திகேட்டுப் பிழைத்திடாமல்
பொறுக்காதெதன்தேகமிசையவன்கைப் பிடித்திடாமல்
மரியாதைகெடப்பேசலாமோடியந்த மதனராஜன்,

வசனம்.

அகோகேளும் பெண்ணே சித்திரரேகாய்! இந்த லோகாதி லோகங்களிலே யிருக்கப்பட்ட ராஜாதிராஜாக்களெல்லாம் பொன்கலம், வெள்ளி, இரும்புமுதலான பஞ்சலோகங்களாலே தேருண்டுபண்ணி, நவரத்தினங்களாலே அலங்கிரதம்செய்து, வாயுவேக மனோவேகமான குதிரைகளைப்பூட்டி, மேலானவாய்வாஸ்திரம் வருணாஸ்திரம் அக்கினியாஸ்திரம் பிரம்மாஸ்திர முதலான அஸ்திரவரிசைகளைப் பார்மேல் வைத்தி, யந்தேரின்பேரி லிருந்துக்கொண்டு யமனுக்கு நிகரான சத்துராதிகளோடே எதிர்த்து ஜெயம்கொண்டுவரப்பட்ட ராஜர்களுக்கு முன்னாலே, இவனும் வெகு கெட்டிக்காரன்போல மன்மதராஜனென்னப் பெயரிட்டுக்கொண்டு தென்றல்காற்றையொருதேராகவும், கிளிகளேகுதிரையாகவும், கரும்பேவில்லாகவும், வண்டினமேநாணாகவும், பூக்களே பாணங்களாகவும், கொஞ்சமாகிலும் நாணமில்லாமல் கேட்டவர்பார்த்தவர் கேலிபண்ணத்தக்கதாக ஸ்திரீகளின்பேரில்சண்டை செய்வதைப்பார்க்கிலும் ஆழமுள்ள கிணற்றில் வீழ்ந்து பிராணனை மாய்த்துக்கொள்வதே வெகுநல்லது, அப்படிச்சாக மனமில்லாவிடில் பெரியோரைப் போயடுத்து அவர் சொல்லும் புத்திமதிகளைக் கேட்டுப் பிழைக்காமல் என்பேரில் புஷ்பபாணம் விடப்பட்ட மன்மதனை நாமிரண்டுபேருங்கூடி அவன் மானமரியாதை யெல்லாங் கெடத்தக்கதாக ஏசலாம் பாங்கி.

சித்திரரேகை விருத்தம்.

பெரியோர்கள்சிறியோரென்று பேசிமுபிர்கட்கெல்லாம்
சரியானநினைவும்போகம் சத்திபுகழும்புண்யம்



விரிவாகக்கொடுக்கும்மார வேள்தனையுன்னாலென்னால்
மரியாதைகெடுக்கப்பின்னும் மாதரால்முடியாதம்மா.

வசனம்.

அகோகேளும் வாணாசுரன் சிரோரத்தினமே! இந்த லோகாதி லோகங்களிலே வரப்பட்ட எறும்புகடையானைமுதல் எண்பத்து நான்கு நூறாயிர ஜீவசெந்துக்களுக் கெல்லாம் அததற்குத்தக்க கிளைவுகளும் போக பாக்கியங்களும் ஐசுவரியங்களும் புத்திரசம்பத்தும் பெருமையுங் கீர்த்தியுங் கொடுக்கப்பட்ட மன்மதனை மரியாதைகெடுப்பதற்கு உன்னாலேயும் என்னாலேயும் மற்றுமுள்ள ஸ்திரீஜாதிகளாலேயும் ஒருபோதும் முடியாதம்மா தாயே.

உடாங்கனை விருத்தம்.

சாவெனக்குஇல்லையென்று கிருஷ்ணதேவர்
சிந்ததிராணென்றுகெர்வம் தானேமிஞ்சி
எவிரக்கமில்லாமல் கோபத்தோடும்
இளமடவார்பகைமிசை கைப்பற்றுக்கொண்டு
பாவபுண்ணியமென்னாமல் தானேபுஷ்ப
பாணங்கள்மீதில்விட்டுப் படும்போர்செய்து
வாவுகொண்டுவாழ்மதனைப் பைபல்தன்னை
மதிச்சடையோனேடுசொல்லி வதைக்கலாமா.

வசனம்.

அகோவாருங்பாங்கி! கொஞ்சமேனும் ஈவு இரக்கமில்லாமல் மன்மதன் என் நெஞ்சைக்கும் காவில்லாதவன்போல மனதிலே எண்ணியும் கிருஷ்ணதேவருக்கு மகனென்று சொல்லியும், அகங்காரமிருந்து அடங்காத கோபத்தோடு ஸ்திரிகளுடைய பகையைக் கைப்பற்றிக்கொண்டு, சற்றும்பாவ புண்ணிய மென்னிப் பாராமலே என்பேரில் புஷ்பபாணங்களைச் சாமாரியாக விட்டு ரொம்பவும் கஷ்டம் படுத்தும் பஞ்சமாபாவியை பண்டு புனைக்காரனான ஈஸ்வரனுடன் சொல்லிக்கொல்லலாமோ சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

பாகுமொழிமாதரசே வாணாசுரன்
பயந்திடுமென்கண்ணரசே பகர்க்கேளாய்
போகவொண்ணாவுயிர்சிறக்க வழியைக்கேட்டுன்
புத்தியைநீமறக்கில்பின் புகல்வேன்யானி
வாகினியால்வரங்கள்பெற்ற விரதிமாது
மங்கிலியம்வளர்ந்திருக்கும் மட்டுந்தானே

மோகனவேள்தன்னுடைய உயிரைத்தானே
முடிப்பதற்குமாமனும் முடியாதம்மா.

வசனம்.

அகோகேளும் வாணன் பைங்கிளியே! உனக்கெத்தனை விதஞ் சொன்னாலும் போகாத வருத்துத் தடங்கேட்கிற புத்திபோகிறதில்லை. மேலும் பார்வதி கிருபாகடாட்சத்தாலே என்றைக்கும் அழிவில்லாத மங்கிலிய யோகம்பெற்றுக்கொண்டவள் ரதிதேவியாகையால் அந்தரதிதேவி மங்கிலிய சூஸ்திரவனு இருக்கும்மட்டும் மன்மதராஜனைக் கொல்லுவதற்கு மும்மூர்த்திகளாலும் ஆகாதம்மாதாயே.

உடாங்கனை-வசனம்.

அதுவும் என் விதிவசந்தான் சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

அரனெற்றிப்பிறந்தநேரம் ஆயுளொன்வனுந்திருந்தும்
குருதிசைதன்னிற்றோன்றும் சொற்றவன்றன்னைத்தேடி
வரும்பெருநோய்கள்மாய்த்தான் மந்திரருளியமுக்கண்டம்
இரவிதன்முகத்தைப்பார்த்த பிறுவெனவேகுந்தாயே.

வசனம்.

அகோகேளாய் வாணன்குமரியே! அரன் தரும் விதிவசத்தினாலும் நலக்கிசகடையலக்கணத்தினாலும் பிறந்த மன்மதராசனை எப்படிப் பட்ட நோய்களும், மந்திரம் மிஞ்சிருளியங்களும் சூரியனைக்கண்ட இரவுபோல் சோராது நீங்குமம்மாதாயே.

உடாங்கனை விருத்தம்.

சிவனேபனைபகைக்கத் தேகமேகிநின்ற
கோபமேமிகுந்தாவீசும் கொடுந்தனல்தன்னைவாரித்
தாவியேயென்மேல்தாக்கும் சண்டாளச்சந்திரனுக்கே
பாவமேசற்றிடாதோ பகைவரால்மடிந்திடாரோ.

வசனம்.

கேளாய் தோழி! எனது ஜீவன் பதைக்கவும், சரீரம்கொதிக்கவும், கொடிதாகிய வெந்தணலை மிகவுங் கோபங்கொண்டு வீசி, தாமரையைப்போன்று என்னைக் கூம்பச்செய்யும் சண்டாளனாகிய சந்திரன் எப்பாவமும் பழியுமேற்று, அவன்பகைவரால்மடிந்திடானோசகியே.

சித்திரரேகை விருத்தம்.

நீறணிசிவனோர்கொம்பன் நிமலியாகனலுங்கல்ல
காரணன்வேதன்வேள்பொன் னாட்டினியுள்ளோர்ஞான
காரணர்கள்லும்புவியும் கடல்களாகாசவாணி
தானியுள்ளமட்டும் சந்திரன்சாகானம்மா.



வசனம்.

கேளும் என்னருமைத்தலைவி! திருநீற்றை மெய்யெல்லாம்பூசியுள்ள சிவனது சடாபாரத்தில் விளங்கிய சந்திரன், மும்மூர்த்திகளும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், உலகமும், பூமிதேவியும், ஆகாசவாணியும் உள்ளவரையில் இறந்துபோகானம்மா.

உடாங்கனை விருத்தம்.

தெளிவிலாதடர்ந்துவீசும் தென்றலைநிறுத்தலாமா
கிளிகளைவதைக்கலாமா கீதங்கள்தானேபாடும்
அளிகளைக்கொல்லலாமா அலைகடலொடுக்கலாமா
குளிர்மைதான்கலக்கூவும் குயில்களைக்கொல்லலாமா.

வசனம்.

கேட்பாய் சேடி! தெளிவில்லாமல் எங்குங்குளிர்ந்துவீசும் தென்றற்காற்றையும், வசனத்தைமாற்றும் கிளிகள்சப்தத்தையும், கீதங்கள் பாடும் வண்டுகள் ரீங்காரத்தையும், தைரியத்தைத்தரும் கடல்களின் ஒலியையும், உல்லாசத்தைக் கொடுக்கும் குயில்களின் ஓசையையும் தோன்றும விருக்கச் செய்வது அந்த மாபாவி மன்மதனுக் கழகோ அம்மா சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

வண்டினம்குயில்கள்தென்றல் மாருதம்கிளிக்குலங்கள்
தெண்டிரைக்கடலிதெல்லாம் செகமெலாமுண்டுமிழ்ந்த
விண்டுவின்மகனுக்கன்பாய் வேண்டியேயிருப்பதாலே
ஒண்டொடிநீதானிப்போ உரைத்தசொல்பலியாதம்மா.

வசனம்.

கேட்டிடும் பெண்ணரசே! வண்டுகளும், குயில்களும், கிளிகளும், தென்றற்காற்றும், கடற்சப்தமும், உலகத்தை யுண்டுமிழ்ந்த உபேந்திரன் மகனாகிய மன்மதனுக்குச் சிநேகமாயிருப்பதாலே உன்னுடைய எண்ணமெல்லாம் பலியாதம்மணி.

தரு-இ-ம்-சங்கராபரணம் அடதாளம்.

பல்லவி.

மோகமீறுதடி ரஞ்சிதமானசகியே
மோகமீறுதடி.

அநுபல்லவி.

மோகமதால் நேசமதே
சோகமதாய் நோருதே மெத்த (மோ)

சரணங்கள்.

௧. தேட்டம்வெகு — தேட்டமே - சொற்பனத் தவிலெனது
நாட்டம்வெகு — நாட்டமே
நாட்டினவன் — கூட்டிமையும்
மேட்டிமையும் — நாட்டகமும் நத்தி (மோ)

௨. ஜம்பம்வெகு — ஜம்பமே - கனவில்வந்தோன்கொடுத்த
இன்பம்வெகு — இன்பமே
ஜம்பமதே — நம்பினதால்
சொம்பனமே — கும்பத்தனக்கன் விம்மி (மோ)

௩. தாழைமலர் — வாசனே - பர்நசாஸ்திரவிதந
கேளிக்கையுல் — வாசனே
வேளிம்பூ — வாளிகளால்
ஏழையுநான் — ஜன வெளுனு (மோ)

வசனம்.

அகோகேளும் பாங்கி! உலகத்திலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் கணவனென்கிறவுடைமையே உண்மையானவுடைமையென்றுவேத சாஸ்திரஞ்சொல்லக்கேட்டும் புருஷனையிழந்த பெரும்பாவிக்கு இந்த வுடைமைகளென்னத்திற்கு, பட்டுச்சேலை பணங்காசு புனுகுசந்தனம்புஷ்பம் தாங்குமஞ்சனம் தோழிமார்கள் வெற்றிலை பாக்கு வீடு இமாளிகை அன்னகார மிதுவெல்லா மென்னத்திற்கு ஒன்றுமாகாதடி சகியே.

சித்திரரேகை வசனம்.

அகோவாருமம்மா தாயே! நீ இப்போது சொன்னயோசனை என் மனதுக்கு நன்றாயிருக்கிறது. அதெப்படியென்றால், எவனோ ஒருத்தி ஆத்துமன்னோடுசோடிச் சூத்துக்கழுவாமல் போனளாம். அரசனோடு சோடி புருஷனைக்கட்டி அடித்தாளாம். சாத்துச்சட்டியோடேசோடி சோத்துப்பானையை உடைத்தாளாம். தட்டானோடேசோடிப் பொட்டுத்தாலியை அறுத்தாளாம். காற்றுமன்னோடே சோடிச் சேற்று மண்ணிலே புரண்டாளாம். அப்படிப்போலவேயுமுடைமைகளைக் கழட்டி யெறிந்துபோட்டு பரிமள வாசனையாகதென்றும் சோறுதண்ணீ ராகாதென்றும் இருந்தால் அநாம பெருமைகளெல்லாம் உனக்கேயல்லாமல் வேறேயாருக்கு; உனக்கு நீயே மந்திரி நீயெப்படிச்செய்தாலுஞ் செய்யலாமம்மா தாயே.



உடாங்கனை வசனம்.

அடிவாடிபாங்கி! நீ இந்தனை விதங்களெல்லாம் சொல்லவந்தாயே, புருஷனையிழந்த ஸ்திரீகளுக்கு உடைமைஉற்பத்தி, வேடிக்கை விநோதம், வாத்தியவரிசை, வாகனைத்திரவியம், பரிமளம், பந்தாட்டம், பகடையாடல், இதுபோன்ற கோலாகலமெல்லாம் என்னத்துக்கடிபாங்கி.

சித்திரரேகை-வசனம்.

அகோகேளுந்தாயே, அப்பவேஉனக்கு உன்தாய்தகப்பன் ஒரு மாப்பிள்ளையைதேடித்து ஐம்பத்தாறு தேசராஜாக்களையும் வரவழைத்து மணவாசபேற்றி சந்திரசூரியர் ஆகாயம்பூமி அக்கினிசாட்சியாய் உன்னை விவாகஞ்செய்து கொடுத்தாற்போலவும்,நீயுங்கணவனும்மன்மதனும் ரதியும்போலே விலாசன்வாழ்ந்து வந்தாற்போலவும், உன்புருஷன்அப்பவேயிறந்துபோனதுபோலவும் உனக்குவிளையுந் துக்கமும் ஆச்சுது, இனி உன் உடைமை உற்பத்தியெல்லாங் கழற்றி யெறிந்துபோட்டு பிராணனையும் விட்டுவிடவேணுந்தான். மெய்தான்மெய்தான்!! உன்பிழைப்பு எப்படியிருக்குதென்றால் சிறுபிள்ளைகள் சிற்றுடை யுடுத்தினதுபோலவும் பாஸ்திரிகள் பரிகாசம் பேசுவதுபோலவும் திருட்டுப்பயல்கள் திரவியம் தேடுவதுபோலவும் இருக்கிற தம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

கேளாய்பாங்கி! உலகத்திலே எட்டுவிதவிவாகமுண்டு, அதிலே கந்தருவவிவாகமும் ஒன்று. அதாவது, கணவனும் மனைவியும் மனமொத்துக் கண்டவிடத்திலே புணர்வதுதான், உனக்கு எல்லாந்தெரிந்திருந்தும் என்னை இப்படி யேசிக்காட்டலாமோபாங்கி.

பொது வசனம்.

இப்படிச்சொன்ன உடாங்கனையானவள் இனி உன்னோடே வாதஞ் செய்வதற்கு எனக்கு வலிமையில்லை. என் ஆசைமணாளன் இறந்துபோயிருப்பானென்று நீ சொல்லுகிறபடியால் இனி நான் பூமியிலிருந்து சத்துருக்கள் சிரிக்கவாழ்வதுமில்லை. என்னுடைய கத்தியை பூமியில் நாட்டி அதில்விழுந்து இறந்துபோகிறேனென்று சொல்லுவாளாயினள்.

உடாங்கனை-தரு-இ-ம்-ஏதுதலநாய்போதி-அடதாளம்.

பல்லவி.

உயிரைக்கூணமேநாலவே
யெந்தன்மனம் - அனிபாவிதுல் - வாணன்மகள்
உடாங்கனைநானல்லவே

அநுபல்லவி.

துப்பாச்சம்பலொடுக்கவே
யெந்தனுடனே - பஞ்சணைதன்னில் - சரசம்பேசி
சொகுசுடனேபடுக்கவே
உயிருக்குயிர்தடுக்க வுடலுக்குடல்தடுக்க
சுயாத்திதழ்கடிக்க சரசப்பதம்படிக்க
வியர்வைப்புனல்வடிக்க விம்மித்தனம்பிடிக்க
மையலிக்ஷணம்முடிக்க மருவவாராதேபோனால் (உயி)

சரணங்கள்.

௧. அனங்கன்வந்தனைக்கெஞ்சவே
இஷ்டமாக - கொஞ்சிகுலாவி - கொவ்வையைநிகர்
அதாரசமுருஞ்சவே
மனங்கலங்கலொதுக்கவே
யெந்தன்சுவாமி - உந்தன்மையலால் - பன்னிப்பன்னி
மதனாதிசோதிக்கவே
சினங்கண்போலவேசெக்க சிவந்திதழினைப்போக்க
மனக்கலக்கலொதுக்க மதனுந்தினம்வாதிக்க
தனங்கள்தொட்டேவெட்கந் தனைத்தள்ளியென்பக்க
தினங்கள்தோறுமுன்னிற்க க்ஷணமேவாராதேபோனால் (உயி)

௨. திருமுகந்தனைக்காட்டவே
ஒயிலதாக - மார்பிலணைத்து - எந்தன்பட்டத்துத்
தேவியென்றெனைநாட்டவே
இரதிமதனைவாட்டவே
இன்பமிகுந்து - சென்டுகள்போலும் - ஸ்தன்னியங்களையுன்
னிருகரங்களிற்கூட்டவே
விரகவேதனையைய வேர்வைமுத்துகள்பெய்ய
இருதுகள்நான்செய்ய இருதேனென்றெனைவைய
இரதிமதன்போல்மெய்ய இஷ்டபோகமேசெய்ய
இருவுமானும்போலைய்ய க்ஷணமேவாராதேபோனால் (உயி)

௩. சந்திரமகுடஞ்சூட்டியே
தகதகென்னும் - ஒளிவதன்னும் - வச்சிரம்பூண்ட
தங்கநகைகள்பூட்டியே
சுந்தரக்கைகளைநீட்டியே
மெல்லினமாக - நுதல்மீதில் - சிந்தூரத்னம்
துலங்குந்திலகந்தீட்டியே



வந்துஎன்முகம்பார்த்து மார்பிலெந்தனைச்சேர்த்து
சொந்தவார்த்தைகள்பேசி சுதவேள்தனையேசி
சந்தனமுங்கரைந்து சரீரமெல்லாம்பிறைத்து
இந்திரபோகமேசெய்ய இப்போவாராதேபோனால் (உயி)

விருத்தம்.

சசிசித்ரரேகாய்கேளாய் சாஸ்வதிசாட்சியாக
மிகையிலாதுரைப்பேன்கீழில் விழுந்தெந்தனுயிரைத்தானே
அகமதுதணிவாய்மாய்ப்பேன் அட்டிநீசொன்னதானால்
பகையெனக்குனக்குண்டாகும் பாவமுமுனக்குண்டாமே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே சித்திரரேகாய்! சாஸ்வதியம்மன் சாட்சியாக இனிநான் பிராணனை வைத்துக்கொண் டிருக்கமாட்டேன். என்னுடைய சந்திராயுதத்தை நாட்டி அதின்பேரில்விழுந்து என் உயிரை விடப்போகிறேன். நீ யேதாவது தடைசெய்வாயானல் உனக்கும் எனக்கும் பெரிய பகையுண்டாவதும் தவிர, உனக்குப் பாவமுமாகும் பெண்ணே சித்திரரேகாய்.

சித்திரரேகை அகவல் இராகம் ஆரபி.

ஈசனார்பதத்தை யிரவொடுபகலும்
வாசமாய்த்துதிக்கும் வாணனுஞ்சூரன்
வயிற்றினிற்பிறந்து வயங்குகண்மணியே
உயிர்தனைவீணி லொழிக்கலாகாது
உயிரொடுமிருந்தா லுப்பதுமாறி
பெயாதுவிளங்கப் பிழைக்கலாஞ்சிலநாள்
தயிரியமதனைத் தள்ளலாகாது
வயிரமேமனதில் வைக்கலாகாது
அம்மையேகுயிலே அழகுபைங்கிளியே
செம்பொனலயனார் செய்தசித்திரமே
சொல்லுவேன்கேளும் சொர்ணம்நாடாத
கல்லுகளில்லை கலன்கள்நாடாத
வெறுக்கைகளில்லை வெள்ளிகளில்லை
அருக்கன்காணாத அடர்சுடரில்லை
இந்துகாணாத இருட்களுமில்லை
தந்திகாணாத சதுர்லயமில்லை
வாசங்காணாத மலர்களுமில்லை
ஈசன்காணாத யாகங்களில்லை

புடவிகாணாத பொருமைகளில்லை
அடவிகாணாத அரியினமில்லை
திருவுகாணாத திரவியமில்லை
உறவுகாணாத உறிதங்களில்லை
பறவைகாணாத பயங்களுமில்லை
நார்கள்காணாத நடக்கைகளில்லை
உறவோர்காணா வுறுதிகளில்லை
வாணிகாணாத வாக்கியமில்லை
பாணிகாணாத பயிர்களுமில்லை
மாலவன்காணா மாய்கைகளில்லை
தாலங்கள்காணாத் தர்மங்களில்லை
புரந்தரன்காணாப் போகமுமில்லை
அருந்ததிகாணா அரியகற்பில்லை
அம்பிகைகாணா தாரங்களில்லை
யும்பர்காணாத வுயர்ததியில்லை
பிரமன்காணாப் பிறப்பதுமில்லை
பாமன்காணாப் பாக்கியமில்லை
சுகமதன்காணாச் சுரதங்களில்லை
நகவசிகாணா நடனங்களில்லை
ஐங்கரன்காணா வரிசையரில்லை
கன்னகாணாத கமலங்களில்லை
ஓடியும்பறந்தும் ஒருகொடிபதனில்
தேடிநான்காணாத் தேயங்களில்லை
குயின்மொழிமாதே கூர்ந்துநானெத்தன்
நயனங்கள்பாரா நாடுகளில்லை
பட்டணமில்லாப் பார்த்திபரில்லை
கட்டுமுகரில்லைக் காரியமில்லை
தானவரில்லைச் சைவருமில்லை
வானகமில்லை வையகமில்லை
மலைகளுமில்லை மரங்களுமில்லை
சிலைகளுமில்லை தெய்வங்களில்லை
அரக்கருமில்லை அசுரருமில்லை
பாக்குந்தொழிலின் பட்சிகளில்லை
நதிகளுமில்லை நலங்களுமில்லை
சுதிகளுமில்லைத் தோனையரில்லை



ஏதமில்லாத ஈரேழுலகிலும்
ஆயிரத்தெட்டு அண்டங்கள்தனிலும்
இருநூற்றுடனே யிருபத்திநாலு
பொருந்தியபெரிதாகையின் புவனங்களிலும்
உண்டானமன்னர் ரொயிலைபெண்கள்
கண்டதேயல்லாற் காணாததில்லை
வல்லமையெழிலின் வயங்குமன்னவர்கள்
எல்லாநான்கண் டிருப்பதினாலே
உனக்குநாதுமதி யோதினேனிப்போ
எனக்குண்மையான வுத்தனங்கேளாய்
ஞாலமீரேழின் நகினமன்னர்களை
வடிவாய்ப்படத்தில் வரைந்துநான்காட்டுவேன்
உனதுகண்குளிர உத்தமபுருஷனை
தாஷ்டிகமாக வுடாங்கனைத்தாயே
கலவியேவிளைக்குங் கனவில்வந்தோனை
நிலவரமாக நீகண்டுகொள்ளே
ஆவிக்குக்கேடென் டாக்குதல்ராஜ
பூவைக்குஞாயம் பொருந்தாதுதாயே.

வசனம்.

ஆ கோவாருமம்மா உடாங்கனைத்தாயே! வீணாகப்பிராணனைமாய்த்துக்கொள்ளவேண்டியதில்லை, நான்காணாத தீபதீபாந்தரங்களில்லை, நான் அறியாத ராசாக்களில்லை. ஆகையால் சகலதேசத்து ராசகுமாரர்களையும் பிரம்மா விஷ்ணு ருத்திரர் அஷ்டதிக்குப்பாலகர் இந்திரன் மன்மதன்முதற்கொண்டு படத்திலேயெழுதிக்காண்பிக்கிறேன். உன் கனவிலே வந்தவனெவனோ அவனை நீ கண்டுகொள்ளக்கடவாய். உயிரிருந்தால் உப்புமாறியுண்ணலாம், வைரியஞ்சாதிக்கலாகாது தாயே.

உடாங்கனை விருத்தம்.

உயிர்தனக்குயிராய்நின்ற உச்சிதசசியேகேளாய்
நயனங்கள்திறந்துபார்க்க நாயகன்வடிவம்செல்வம்
ஒயிலும்வில்தாரம்வார்த்தை உருக்கமும்தவறிடாமல்
வடிவமாய்ப்படத்தில்நீதான் வரைந்தென்முன்காட்டுவாயே.

வசனம்.

ஆ ஆ கேளும் பாங்கி! என்னுடைய கனவிலே வந்தவனுடைய ரூபலாவணியங்களைச் சீக்கிரமாக பென்னாளுஞ்சிசாமல் எழுதிக் காட்டுமாதே.

### சித்திரரேகை வசனம்.

ஆ ஆ கேளுமம்மா தாயே! கனவிற்கண்ட ராசகுமாரனை யெழுதிக்காட்டென்று சொல்லுகிறாயே! அவனை நான்கண்டபடி கேட்டபடி யொவ்வொரு ராசகுமாரர்களாக படத்திலெழுதிக் காண்பிக்கிறேன் உன் கனவிலே வந்தவனை நீ கண்டுகொள்ளம்மா தாயே.

### உடாங்கனை-வசனம்.

அப்படியானால் அதிகதாமதமாகுமடி பாங்கி.

### சித்திரரேகை வசனம்.

ஆமம்மா நன்றாய்ச்சொல்லவந்தாய், சொம்புத்தண்ணீரா குருக்காய் குடிப்பதற்கு, நீரப்பழமென பெண்ணை சிரித்துச் சிரித்துப்பேசுவதற்கு, இலையிலிட்ட சோறெடுத்து விழுங்குவதற்கு, சட்டியினுள்ள சர்க்கரையா சடுதியாய்த்தின்னுவதற்கு, சகலதேசராசாக்களையும் சிறிதும் பேதப்படாமல் ரூபலாவண்ணியம் முதலியவைகளோடு எழுதிக்காட்டுவதற்குக் கொஞ்சமேனும் தாமிசஞ்செல்லாதா தாயே.

### உடாங்கனை வசனம்.

அதிகதாமிசஞ்செய்தால் எனது பிராணன் கூடுவிட்டுப் போய் விடுமம்மா பாங்கி.

### சித்திரரேகை வசனம்.

பொறுத்தார் அரசாண்டார் பொறாதார்காடாண்டார். தணிந்தார் பெருமை பெற்றார் தணியாதார் சிறுமைபெற்றார். மெள்ளநடந்தார் சுகம்பெற்றார். வேகம்போனார் நோய்கொண்டார். துள்ளினவெருது துக்கங்கொண்டது. பறந்தார் பலனிழந்தாரென்று பழமொழி வழங்குகிறது பதறலாகாதம்மா தாயே.

### சித்திரரேகை படம் எழுதுகிற அகவல்.

அளகையம்பதிக்கு மதிகவிச்சித்திர
இளவனம்படைத்த வித்திரன்பதியும்
எந்தனுக்கிடு இல்லையென்றுரைக்கும்
அந்தரமிருந்த சோணிதாபுரியில்
மடங்கலாதனத்தின் மகிழ்ந்திருந்தாசு
தொடங்கியவாண சூரனும்வேந்தன்
விந்தினில்செனித்த மெல்லிநான்மகிழ்ந்து
அந்திமிமிருந்த தூங்குமஞ்சனத்தில்
மாதுநான்தோகை மயிலெனச்சாய்ந்து
நித்திராநித்திரை செய்திடும்போது
சொற்பனமதனில் சாரதால்முறையால்



கற்பினையளித்த காந்தனினழகை
சுவரிவாலளவு நழுவிடாதெடுத்து
கவினைசேர்படத்தில் கடிகையில்வரைந்து
எண்ணமும்வின்னுக் கேகிடவிரண்டு
கண்ணின்முன்படத்தைக் காட்டடியென்ன
மன்னவன்வாணன் மந்திரிகும்பாண்டன்
என்னும்பேருடையா னீன்றிடும்வனிதை
சித்திரரேகை சீக்கிரம்வாணன்
புத்திரிதன்செயலைப் புகழ்ந்தடிபணிந்து
வனிதையர்திலகி மனமகிழ்கூர்ந்து
கனகமாம்படத்தை கமலநேர்கையில்
விந்தையாயெடுத்து விரல்களாலளந்து
அந்தமாயளவு அங்குலம்பிரித்து
சலங்கைகள்கொஞ்சு சலசலென்றாற்றும்
அலங்குகந்திரிக்கை யால்சதிரித்து
காதலாலிட்டு கையிற்படம்பிடித்து
கோதையாளிட்டு குறங்கினிற்றூக்கி
வர்ணமேகநுக்க மைதிகள்வெக்கும்
சொர்னமாம்பாணி துறப்பினைவாங்கி
சிகதியோரம் செனித்தசெந்நாரைல்
ஆனதுதனிலுண் டாக்கும்லேகணியை
சீக்கிரந்தனது செங்கையாற்பிடித்து
பாகமாய்ச்சிறந்த பாணிவாய்தன்னில்
நுழைத்தலேகணிதன் நுனிதனைக்குலுக்கி
செழித்திடும்படத்தில் சித்திரினில்வலது
பிரிதனிலிலங்கும் பேர்சுழிபதித்து
குருவிரலளவு கோடுகள்விட்டு
வரியொடுநான்கும் வரிசையாயெழுத்தும்
மருவிலாதிலங்கும் மலர்க்கொடிகட்டிச்
சுற்றிலும்கிளிகள் துலங்கிடவதனைக்
கொத்திபேகிளிகள் கொஞ்சிடவெழுதி
நாலுமூலையில் சந்திரனைபதித்து
காலையொன்மதியைக் கடைகளில்பதித்து
அப்புறம்படத்தி னாராய்ந்திடுமுன்

தப்பிலாவெழுதும் தன்மையேதென்னில்
நல்லகணபதி நமாவெனவரைந்து
சிவமயமென்று சீக்கிரமெழுதி
அப்புறமன்பத் தாறுதேசத்தில்
தப்பிலாதாக சார்ந்திமென்னர்
வித்தையாச்சரிய விரியவல்லாச
வந்தணைபடத்தில் வரைவதேதென்னில்
நிலங்களின்மறைவில் நிதிபதியாகும்
கலிங்கதேசத்தின் கனகமன்னரை
பகாதிதான பார்வையாய் செழிக்கும்
மகாதேசத்தில் வழங்குமன்னரை
சதிபழிகொலைபொய் தானணுகாத
விதர்ப்பதேசத்தில் விளங்குமன்னரை
சித்தர்கள்முனிவர் செய்யுங்கற்பினைத்
தித்துங்கர்னுடை தேசமன்னரை
மந்திரிசொற்படி மனமதுமகிழ்ந்து
சிந்துதேசத்தில் செலுத்துமன்னரை
[illegible]தெல் விளைந்திடுபவி
லாடதேசத்தை யாளுமன்னரை
சங்கரன்முதலோர் சமுகங்கள்மிருந்த
வங்காளதேச மன்னர்மன்னரை
மங்கையர்ஸ்தனத்தில் வாசவியாத
கொங்குதேசத்தின் கொற்றவர்களையும்
கட்டோபங்கன் கலங்குமனுதாக்
கெவுடதேசத்தின் கீர்த்திமன்னரை
தலங்களின்மேல் சஞ்சாரமிருந்த
கலிங்கதேசத்தை கவினைமன்னரை
மேருகோர்மலைகள் மிகுதியாயிலங்கும்
கூர்மதேசத்தின் கொற்றவர்களையும்
பவுருஷாமதில் பார்வையர்பொருதும்
கௌளதேசக் கவினைமன்னரை
மாதமுமூன்று மழைபொழிந்திடும் நம்
சிதகாம்போச தேசமன்னரை
வேலெனவடிவில் வேந்தர்கள்மிருந்த
மாளுவதேச மன்னர்மன்னரை.



வித்துமில்லாமல் விளைவுமுண்டாகும்
மத்சதேசத்தின் வயங்குமன்னரை
சிவகோஷ்டிக்குகந்த தீர்த்தங்கள்மிகுந்த
சவுராஷ்டிகதேச சாசமன்னரை
பில்லிசூனியங்கள் பேய்களில்லாத
நல்லபாஞ்சால நாட்டின்மன்னரை
மறைநெறிகடந்த மனங்களைமுடிக்கும்
குருகுலதேசக் கொற்றவர்களையும்
கோணமலைசெங் கோல்முறைநடா
சேனதேசத்தில் செலுத்துமன்னரை
பக்ஷிகோசடிகள் பன்னிடாதிறி
அங்கதேசத்தை யாளுமன்னரை
பவளகற்கொடிகள் பாகமாய்வளரும்
சவுனதேசத்தின் தழைக்குமன்னரை
பாதைஷியொண்பதில் ஆசையேமிகுந்த
கோசலதேச கொற்றவர்களையும்
அசுவமேதயாக மறங்கனாலெட்டுக்
தேசாள[illegible]
இகபாமாறு யிகுநிலைகடனாள்
திரிகர்த்ததிரா தேசமன்னரை
தேடிபொருள்சேர்க்குந் தியாகங்கொடுக்குங்
ஐந்திரதேச மாளுமன்னரை
அங்கசன்தந்தை அரிமகளாக
டெங்கணதேசத்தில் செலுத்துமன்னரை
அஷ்டலக்ஷ்மிகளாகதான்செலுத்தும்
ஒட்டியதேசத்தி லுயர்ந்தமன்னரை
சந்ததிபாக்கியந் தனக்கனமிகுந்
குந்தளாடபத் குலவுமன்னரை
மங்கையரொளியில் மகிழ்ந்தையடக்கும்
வங்கதேசத்தில் வயங்குமன்னரை
பூசார்நதிக்கப் புயல்வளனிலங்கும்
காஸ்மீரதேச கவினைமன்னரை
தவ்வையெங்கவியும் தானணுகாத
நாட்டின்மன்னரை நவ்வைதீர்மு
பலதானஞ்செயினும் பலன்கிடையாது

மலையாளதேச மன்னமன்னரை
ஆண்டிகைகொள்ளுஞ் சோரர்கள்மிகுந்த
பாண்டியதேசப் பார்த்திபர்களையும்
சுகங்களுமுயர்ந்த துயரங்கள்தணிந்த
மகததேசத்தில் வயங்குமன்னரை
தொகைக்கடங்காத சொர்னங்கள்விளையுங்
குருதேசத்துக் கொற்றவர்களையும்
அற்புதமுளதென் றண்டர்கள்மகிழ
செப்புஞ்சூரத்துத் தேசமன்னரை
மெய்யானநீதி வேதங்கள்விளங்கும்
அயோத்திதேச மாளுமன்னரை
தாவடகஞ்செதுத்தூர் தையலருள்ளம
ராட்டியதேச ராஜராஜர்களை
நவதானியங்கள் நன்மையாய்விளையும்
சவுராட்டிரதேச சக்கிரமன்னரை
ஆந்திரியங்காந்த ரரிவையர்க்குரைக்குங்
கூந்தல்தேசக் கொற்றவர்களையும்
அறந்தவறாமல் அரிமருந்துவங்கள்
சிறந்திடுஞ்சோழ தேசமன்னரை
மாரியுங்கோடை மழைபொழிந்திலங்கும்
சேரதேசத்தில் ஜெனித்தமன்னரை
வச்சிரநீல மரகதம்விளையும்
குச்சலதேசக் கொற்றவர்களையும்
மினுக்கெனமணிகள் மெல்லியகழுத்தில்
செழிக்குமீழத்துத் தேசமன்னரை
அச்சவுகுலங்க ளதிகமாய்ஜனிக்கும்
மச்சதேசத்தில் [illegible]மன்னரை
கலன்களைபலுக்க காந்தர்கள்பகைக்கும்
தெலுங்குதேசத்தில் ஜெனித்தமன்னரை
தெய்வச்சந்நிதியில் தினமன்னதானம்
செய்திரிபுவன தேசமன்னரை
மேவிதன்செல்வமில்லாமல்விளையும்
சாலுவதேசச் சக்கிரமன்னரை
பாவையாரின் தனத்திறல்பணையும்
வாலியதேச மன்னர்மன்னரை



மாசலயத்தின் மருவின்பிசையும்
கேரளதேசக் கீர்த்திமன்னரை
தந்திரவிந்திரத்தில் தையர்பகையும்
இந்திரதேசத் தொழில்மன்னர்களை
கம்பனவிதத்தில் தோகையர்பகையும்
தென்தமிழ்தேசத் திகழும்மன்னரை
ஆபரணங்களிலும் அரிவையர்நாடுங்
காருடநாட்டின் கவினமன்னரை
மாதர்நாடகம் பனத்தினில்மயங்கும்
நீதிலாமாயிஷ தேசமன்னரை
இருபதும்பத்து மிருபத்தாறும்
பொருந்தியவெழிற்சேர் புரவலர்தன்னைப்
பல்லக்கில்சிலரைப் பரிமிசைசிலரை
வில்லுங்கையான் வேந்தர்கள்சிலரை
வாள்களுங்காத்தில் வயங்கிடச்சிலரை
ஆள்படைநடுவில் நடந்திடச்சிலரை
கரிமிசைச்சிலரைக் கால்மிசைச்சிலரை
தெரிவையரோடு தேர்மிசைச்சிலரை
புயநிறமகுடம் பூண்டிடச்சிலரை
வயல்நிறமகுடம் மார்ந்திடச்சிலரை
நவமணிமகுடம் நாட்டிடச்சிலரை
சவலைபொன்மகுடந் தரித்திடச்சிலரை
பொன்னிறக்கலன்கள் புனைந்திடச்சிலரை
[illegible]
பொங்குபச்சடங்கள் போர்த்திடச்சிலரை
பிசிதிறவச்சிரம் பிடித்திடச்சிலரை
சகிகர்துகில்கள் தரித்திடச்சிலரை
நீலமாங்குடைகள் நிழல்தனிற்சிலரை
பாலுநேர்குடையின் பந்தலிற்சிலரை
செந்தூரக்குடைகள் சிறந்திடச்சிலரை
சந்திரக்குடைகள் தழுங்கிடச்சிலரை
இந்தமார்க்கமதாய் இறைவரையெல்லாம்
அந்தமாய்ப்படத்தி லணியெனவரைந்து
இந்துதான்பருத்து இந்துதான்சிறுத்து
விந்தைவால்நிறத்து விடைதனையெழுதி

அதின்பிசைபீசன் அகமகிழ்ந்திருக்க
கதிர்மதிதொழுதக் காவலர்மதிக்க
தேவர்கள்துதிக்க சித்தர்கள்குதிக்கப்
பாவனையாகப் படத்தினிலெழுதி
சொர்னமுங்கலந்த சுடர்புயதிறந்து
வர்னமாந்தோகை மயில்தனையெழுதி
அதின்பிசையாறு அன்னம்படைத்த
ஆதிபிருகப்பிர மண்ணியனிருந்த
நாரியர்நடன நாட்டியஞ்செலுத்த
மாரிபோல்தேவர் மலர்களைப்பொழிய
நாவலர்துதிக்க நற்றவர்தொழஉம்
பாவனையாகப் படத்தினிலெழுதி
வாருதியேழும் வனைந்திடவயங்கும்
பாரினிலுள்ள பட்சிசாதிக்கும்
பவமறவுயர்ந்த பாக்கியம்படைத்த
கவிகையாஞ்செங் கருடனையெழுதி
அதின்பிசையுயர்ந்த அரிமகிழ்ந்திருக்கச்
சதுர்மறையாறு சாஸ்திரமுணர்ந்த
அந்தணாமார் ஆசிகள்கூற
இந்திரனோடு இமையவர்துதிக்க
மூவகைதெரிந்த முனிவர்கள்துதிக்கும்
பாவனையாகப் படத்தினிலெழுதி
பாவையொளிதன் பாரங்கவிழ்கில
நாகியேதனதல் சதிதனையெழுதி
அதன்பிசைமதனு மகமகிழ்ந்திருக்க
சதியொடுகளின சஞ்சிதம்படைத்த
அரிவையர்சூழ அமரர்கள்புகழ
பாவைநன்மகிழும் பாவனையாக
படத்தினிலெழுதி பாரிலெண்டிசைக்குள்
திடத்துடனரசு செய்திடும்வேந்தர்
இந்திரனக்னி யமனொடுநிருதி
வந்தனைவருண வாயுவுகுபேரன்
கோலசானியன் கூடவெண்டிக்குப்
பாலர்கள்தனையும் படத்தினில்வரைந்து



நிறமுங்கருப்பு நீஷ்களச்சிவப்பு
பால்நிறவெண்மை பச்சையென்விதத்து
வர்னமேதிர்ந்து மனமதுமகிழ்ந்து
சின்னநற்கையின் சித்திரரேகை
படங்கையிரண்டு பாணியாற்பிடித்து
மடக்கொடியாளை வாழ்த்தியோதுவளே.

சித்திரரேகை படமெழுதிக் காட்டுகிற-தரு-இ-ரு-கலியாணி அதிதாளம்.

இவன்மகததேசம் இவன்கலிங்கதேசம்
இவன்சவுளதேசம் இவன்கவுடதேசம்
இவன்கோசலதேசம் இவன்குந்தலதேசம்
இவன்குருகதேசம் இவன்காருடதேசம்
இவன்குச்சர தேசநிபுணன்
இவன்தெலுங்குதேசம் இவன்விதர்ப்பதேசம்
இவனிந்திரதேசமம்மா
அம்மம்மாஇவன் சவுராட்டிராசனம்மா
இவன்மகதநேசனம்மா இவன்மராட்டியதேசனம்மா
இவர்களிலுன்னைச்சேர்ந்தா னவனிருந்தாசொல்லம்மா.

உடாங்கனை-தரு.

இவனல்லஅவனும் இவனல்லஅவனும்
இவனும்அவனல்ல அல்லவே
இவனல்லஅவனும் இவனல்லஅவனும்
இவனல்லஇவனைத் தாட்டடி
கனவில்வந்தெனை யணைந்தவனைகாட்டடி
இவனல்லஇவனல்ல இவனல்லஇவனல்ல
இவனல்லஇவனல்ல இவனல்லஇவனல்ல.

சித்திரரேகை-தரு.

இவனேகர்நாடன் இவனேவில்லாடன்
இவனேவங்காளதேசன்
இவனேதிரிகர்த்தன் இவனேமலையாளன்
இவனேசௌராட்டிகதேசன்
இவனேசூரத்தா இவனேயிவந்தி
இவனேஅயோத்திதேசன்
இவனேதிரிபுரனன் இவனேதென்தமிழன்
இவனேபாஞ்சாலராசன் அம்மம்மாதாயே

இவனேகலிங்கதேசன் இவனேகோமளதேசன்
இவனேகாம்போஜ தேசன்
இவரினுன்னைச் சேர்ந்தொழிந்தாயெனவன்
அவனைச்சொல்லம்மா

உடாங்கனே-தரு.

இவனேஅஞ்ஞானி இவனேபஞ்ஞி
இவனென்னநீதி யிகழ்வோன்
இவனேஅரூபி இவனேபசாசன்
இவனே தயாளமில்லான்
இவனேகலாபன் இவனொருபேடி
இவனேரேழை யிடும்பன்
இவனேபொய்யாளன் இவனேமுழுமூடன்
இவர்களென்சாமிக்கிடோ அல்லடிபாங்கி
எனக்கிவர்களெல்லாஞ் சோடா
இவனேசல்லாபமில்லான் இவனேவாய்யாசமில்லான்
இவனேசாமர்த்தியமில்லான் இவனேகம்பீருத்திரமில்லான்.

சித்திரரேகை-தரு.

இவர்மற்றுள்ள தேசாதிசேந்திரர்
இவர்கள்கின்னரர் கிம்புருடர்
இவர்தான்கருட காந்திருவர்
இந்தவித்யாதரர்கள் இவரேஅஷ்டவசுக்கள்
இவர்கள்சந்திர னிரவி இவர்களஷ்டதிக்குப்பாலர்
இந்திரனும்தேவர்கோனே அம்மம்மாயிவன்
இந்திராணி காதன்றானே
இந்தபுண்ணியவான்களில் உந்தன்கணவில்வந்தோன்
வந்தவன்றானிருந்தால் சொந்தமாய்ச்சொல்லம்மா
இந்திரனும் தேவர்கோனே

உடாங்கனேசொல்-கந்தார்த்தம்-ஞ-ம்-மோகனம்.

எந்தனுக்கிசைந்த பாரிநீயென்று
இஷ்டவசனங்கள் பேசி
வந்துதானேந்தி யந்தரப்ராசாதம்
வயிறுதானிரம்பவு முண்டு
புத்திதான்மகிழ்ந்து சுரதநால்விதம்
போகஞ்செய்தோடி மறைந்த



அந்தமன்னனும் இவர்களிலேயல்ல அல்ல அல்ல
அல்லஅல்லடி பாங்கி - இவரையெல்லாந்
தள்ளுதள்ளடி பாங்கி.
வல்லாண்மையிருந்தஇந்திரன் எல்லாந்தெரிந்தவிவேகன்
உல்லாசாபிநயன சல்லாபாஞ்சிதலோலன் (அல்)

சித்திரைரேகை கந்தார்த்தம்.

௨. சித்தாண்டர்முனிவர்தொழ விடையிலேறிச்
செஞ்சடையிலெருக்கறுகு திறமாய்ச்சூடி
சத்திதனைமணம்புரிந்து கயிலையாள்வான்
சண்டனுக்கும்மகைகொடுத்து மழுவைத்தாங்கி
அத்திதனைத்தோலுரித்துப் போர்த்துப்பாம்பின்
ஆபரணம்பூண்டுவெண்ணீ றணிந்துகொண்ட
தத்தைமொழிவனிதை யுன்றன் கனவிற்சேர்ந்தான் அந்த
சங்கரன் றானோ - அவனானல்லான்
சற்றிதில்லிடு வேறோ
அங்கமுழுதுந்தானே கொங்கைச்சங்கசக்தி
சிங்காரவிக்கைகயைப் பங்கஞ்செய்தோனிந்தோவிந்தச்(சங்)

உடாங்கனே கந்தார்த்தம்.

௩. நாகதமில்லாதுமிழுட் டெருக்கில்தொத்திச்
சோமன்கிடையாது கரித்தோலைப்போர்த்தி
மாகதமில்லாதுசர்ப்ப வடங்கள்பூண்டு
வாள்விலிடையாமல்மான் மழுவையேந்தி
பெருந்தவலோன்போலிதனை யுதைத்துத்தளரி
புலுருகிடையாமல் வெண்ணீறணிந்துபூமேல்
பெருமலரில்லாமலெருக் கருகுஞ் சூடும் இந்தப்
பேயன்று னல்லடி - எந்தனுக்கேற்கும்
ஞாயஞ்சொல்லடி.
வாயுங்காவுஞ்சலிக்க நீயுங்காதுமறைந்து
உவென்றும்பரைநக்காத மாயதந்திரனிந்த (பே)

சித்திரரேகை கந்தார்த்தத.

௪. இந்தப்பெருச்சாளியின்மி திருக்கின்றாரே
இவரையும்மும்மூர்த்திகளும் பெரியோனென்பார்

சத்தனுக்குமுன்பிறந்தான் விவாகமில்லான்
கடலைகொண்டுருந்தவனை கனமாய்த்தின்பான்
தந்திமுகந்தான்படைத்தான் தாய்போற்பெண்டீர்
தன்னைநத்திரிந்தடங்கள் தன்னில்வாழ்வான்
தொந்திவயிறதுபடைத்தா னிவனையுத்தன்
சகந்தேடி யானோ - தேடியபின்பு
நகர்ந்தோடியானோ
தருந்தவார்த்தைதன்னைப்பேசி சகந்தக்கன்னவழுதி
மகிழ்ந்தபுகழ்ந்துகொஞ்சி முகந்தனில்முகம்வைத்தே (சக)

உடாங்கனைகந்தார்த்தம்.

௫. செகத்தி லுள்ளபேர்களெல்லாம் பெரியோன்நல்ல
தினிவர்போலொருவர்நின்று செறிக்கமாட்டார்
அகத்திலெண்ணும்படிபெண்டீர் பிறப்பதெப்போ
அரும்பதிதான்அடங்கவுந் திறந்தானீவார்
முகத்தழகைக்கண்டவர்கள் பெண்ணாரீவார்
மூஷிகவாகனத்தினிட முதுகுடனும்
வகுற்றைக்கண்டாலெனக்குப் பயமாகுதிந்த
வயிறன்றானல்லடி - எந்தனுக்குற்ற
துயரமகிலெல்லடி
தையிரியத்திறமைபெற்ற ஓயிலைக்கரந்தனிகொண்டு
உயிருமபறைபலதக்கத் தயாம்விளைத்ததிந்த (வழி)

சித்திரரேகை கந்தார்த்தம்.

௬. காசகுன்றுருவினை சங்காரஞ்செய்தான்
கழுகுமலையதனில்வளர் கந்தனென்பார்
மோகமுள்ளாள்கைகள் பனிரெண்டுமுள்ளான்
முகங்களுமோராறுமுள்ளான் மூர்க்கமிக்கான்
யோகமுள்ளான்குறப்பெண்ணை மணந்துவாழ்வான்
உம்பர்பதிமகளையுமணம் புரிந்தமேகன்
தோகைமயில்வாகனனுன் கனவிற்சேர்ந்தானிந்தச்
சுப்ரமண்ணியனோ - பன்னிருகையன்
விப்ரகன்னியனோ
சப்ரமஞ்சனமிதன் பொற்புமிகமுகமேலு
குப்புறப்படுத்தந்தன் கற்பழித்தவனிந்தச் (சப்)



உடாங்கனை கந்தார்த்தம்.

௭. செகத்தினிலே ஆறுமுகம்படைத்தமாதைத்
தேடிமனம்புரிந்திடவும் திறமில்லாமல்
முகத்தைநயொற்றையாய்ப்படைத்த மாதைச்சேர்ந்தால்
முருகனென்றுபெருமையெவர் மொழிகுவார்சொல்
மிருத்தகுலம்பழிக்கஇழிக் குலப்பெண்கொண்டான்
மேகக்கண்டாடுமயின் மீதிலேறும்
அகத்தினில்காமகுறித்திடுலோ விகாரருபன்
அறுமுகனல்லடி - கனவில்வந்தே
அணைந்தோனைச்சொல்லடி
புருஷனோகொன்று காதலிலைகள்செய்தான்
இருகண்திறந்துபார்க்கத் திருடனவனிந்த (அறு)

சித்திரரேகை கந்தார்த்தம்.

௮. செங்கருடன்மீதினிலே யிருப்பாரிந்தத்
தேகமெழில்தாமரைக்கண் சீர்தான்பாராய்
கங்கடர்ந்தவச்ர மகுடச்சீர்பாராய்
கவசகுண்டலச்சுடரும் கனிவாய்பாராய்
சங்குசக்ரவால்வில்லெழில் தன்னைப்பாராய்
சதுர்ப்புயம்பார்துளவ மணிச்சரங்கள்பாராய்
இங்கிதஞ்சேர்மரை மலர்த்தாள்பாராயம்மா
இவன்கிருஷ்ணசாமி - கனவில்வந்தோ
னிவனேசொல்காமி
இவனில்லாவிடமில்லை இவனில்லாத்தொழிலில்லை
இவனில்லாமொழியில்லை இவனில்லாத்துயரில்லை (இவ)

உடாங்கனை கந்தார்த்தம்.

௯. விதிப்படிக்கேமெய்நிறங்கண் வடிவுஞ்சாயல்
வீரியமும்முகத்தழகும் வேறேயல்ல
கதித்தெழுந்தகருடன்மிசை யிருப்பான்றன்னை
கனவில்வந்தோனெனமகிழ்ந்து கருத்தாய்ப்பார்க்கில்
சதுர்ப்புயமும் சங்குசக்ரம்வைவாளும்
சார்ங்கமும்கரங்கள்மிசை இலங்கலாலே
மதிப்புரட்டாய்த்தோணுதிப்போ அவனுமல்ல
மாயன்தானல்லடி - நான்பிழைக்கவு
பாயம்சொல்லடி.

வாயில்வாயினிவைத்து ஆயஅநாபானம்
நேயமுடனுகர்ந்தான் ஆயிரம்பேர்கொண்ட (மாயன்)

சித்திரரேகை கந்தார்த்தம்.

௧௦. சிம்பலவுள்ளோனுமல்ல நான்குள்ளோனே
செல்வன்றன்மேதினியைச் சிறப்பாயாள்வான்
கரும்பிலினிதானவொரு கலைகளுங்கொண்டான்
கதிர்முடிமேற்றுழைமலர் கனமாய்வைத்தான்
எரும்புகரியென்பதுமோர் நான்குநாறு
யிரமுயிரைச்சிர்வடிப்ப திவர்தானம்மா
நறுமலர்சேர்குழலியுந்தன் கனவில்வந்தானிந்த
நான்முகன்றானே - அவனேயானால்
நான்விடுவேனே
சாமிசாமியென்றுன்னை நேமமுடனேகெஞ்சி
காமலாகிரிதீர்ந்த சாமத்துரோகியுமிந்த (நா)

உடாங்கனை கந்தார்த்தம்.

௧௧. சத்திசிவன்மால்திருவு மிவருக்காகத்
தாழைமலரைச்சிகையில் தரித்தபோதே
புத்தியில்லான்முனிவரண்ட மனிதர்கையில்
பூசனையிலடங்காதோர் பெண்ணைக்கொண்டான்
வெற்றியில்லான்யோகமில்லா னழகுமில்லான்
வின்னமுற்றான் சிரமிழந்தான்பிரமதேவன்
சித்தமுடன்சிருட்டிக்கப் பாதியன்பிரம்ம
தேவன்றா னல்லடி - எந்தன்விரக
தாவத்தை வெல்லடி
சிவுங்கூந்தல்நடுவில் காவிமலரைச்சூட்டி
ஆவலுடனணைந்து காவலனிந்தபிரம்ம (தே)

சித்திரரேகை கந்தார்த்தம்.

௧௨. எந்திழையேதென்றல் ரதமீதிற்றானே
இருப்பவர்தான்பெயர் மதனராசனென்பார்
வேந்தர்களினின்னுமெழி துள்ளோருண்டோ
மேதினியிலிவரெழிலுக் கொவ்வாதம்மா
காந்தியினைப்பாரொயிலைப் பாராய்கையில்
கரும்புவில்லைப்பிடித் திருக்குங்கவினைப்பாராய்
மார்தர்புகழ்மாதரசே யுன்னைச்சேர்ந்தானிந்த



மன்மதன் றானே - இவனுனக்குச்
சம்மதந் தானே
ஜன்மம்கடுகடுங்க மன்மதபாணங்கள்
மென்மேலாய்ப்பொழிந்ததுன் னன்புங்கலந்ததிந்த (மன்)

உடாங்கனை கந்தார்த்தம்.

௧௩. மேகநிறங்கண்குறியும் பார்வைசாடை
மெய்யழகும்கையழகும் முகவில்தாரம்
நாகரிகமுங்கலன்கள் புனைந்தபண்பும்
நடத்தையெல்லாங்கனவில் வந்ததாதன்றானே
வேகமுள்ளதென்றல்ரதங் கரும்புவில்லும்
விந்தையுடனிரண்டெட்சா மிருக்குதம்மா
ஆகையினாலென் கனவில்வந்தானிந்த
அங்கச னல்லடி - இவரைத்தானே
அப்பாலே தள்ளடி
கொங்கைக்குடங்கள்தானே குலுங்கச்சிரிப்புக்கூட்டி
சிங்காரச்சடைப்பின்னல் பங்கஞ்செய்தவரிந்த (அங்)

சித்திரரேகை கந்தார்த்தம்.

௧௪. குதிரைமிசைமன்மதன்போ லிருப்பாரிந்தக்
கொற்றவன்மெய்கொண்ட லெனுங்கோலம்பாராய்
மதிமுகம்பார்வரைகளைப்போல் புயங்களைப்பார்
மார்பதனில்முப்புரிநூல் விளங்கல்பாராய்
சதுர்முகனும்எப்படித்தான் சிருட்டித்தானோ
சாற்றியதோரழகிலொன்றும் தாழ்வேயில்லை
இதமுலவும்எழிலரசர் திலகமானால் இந்த
வெழில்மதனேயே - கனவில்வந்தோ
னிவனேசொல்வாயே.
பழகினன்போல்வந்தான் னழகையெல்லாமெச்சி
விளையாடிப்போகஞ்செய் தொழிந்தோடினனிந்த (எழில்)

உடாங்கனை கந்தார்த்தம்.

௧௫. இவனிவன்றான்கனவில்வந்தா னிஷ்டமீந்தான்
இவனிவன்றானிருதனங்கட் கிளக்கஞ்செய்தான்
இவனிவன்றான்சாதவித்தை யெல்லாங்கற்றான்
இவனிவன்றானெந்திறத்தை யிதமாய்க்கண்டான்

இவனிவன்றனெனக்கிசைந்த பெழிலேயுள்ளான்
இவனிவன்றெனை தயிகாவ்வை யிதழ்சீருண்டான்
இவனிவன்றன்வதனமெல்லா முத்தமிட்டான் இவன்
இவுனென்னைத்தாங்கி - கனவில்வந்தோ
னிவனேயிவன்பாங்கி
சிவன்றேவிபருளால்வர் தவனென்னைக்கலந்தவன்
இவனிவன்இவனிவன் இவனிவன்இவனிவன் (இவனே)

பொது விருத்தம்.

இவனிவனிவன்றனென்று வளைதனவாயோயாமல்
அலசாமுடனேசொல்லி யந்தகன்கண்பெற்றாப்போல்
கவப்பலன்பெற்றாப்போலும் சொல்லொணாமகிழ்ச்சிகொண்டு
பவளவாய்வனிதைதானும் பாங்கியோடுரைக்கின்றாளே.

வசனம்.

இவனேயிவன் இவனேயிவன் என்று பலதரம் வாயோயாமற் சொல்லியும், பிறவிக் குருடனுக்குக் கண் வெளிச்சமுண்டானதுப்போலேயும், அதிசயித்த சந்தோஷத்தை உடாங்கனையானவள் சித்திரரேகையைப்பார்த்துச் சொல்லுகிற சம்பிரதாயம் எப்படியென்றால்.

உடாங்கனை-தரு-இ'ங்-அடாணா-ரூபகதாளம்.

சதுராய்சித்ரப்படம்வரைந்தாய் - என்னையில்
தந்தென்னிருந்தசேர்ந்தாயானாள்
பலபல்லினையுக்கு அழகியாம்செயிலி
பார்த்துப்போகுதியோக்கியம்சவந்
நீர்க்கம்பெருக்கியாக்கியம்பெற (சது)

சித்திரரேகை-தரு.

௧. இந்தா இந்தா அம்மா தாயே-மடமே
யேடுத்துப் பார்த்துக்கொள்ளேடி-தான்
சித்தனையில்லாமல்-தந்தேனம்மாடீதான்
சித்தம்சினை - கா்த்துனெயழில்
மெத்தத்திகழ் - சித்ரப்படம் (இந்தா)

உடாங்கனை-தரு.

௨. பாருங்பாருமம்மாடியே - இந்தப்
படத்தைத்தக்கை, என்றியே - வச்சிர
ஆரம்போதுமே - இருக்கிருக்கல்ல
அதுக்கும்உடல் - மெருக்கும்துயில்
பிணக்கும்குணம் - குணக்கும்அழில் (பாரு)



சித்திரரேகை-தரு.

௩. தாயேயிவனல்லறாடன் - பெண்களைச்
சதிமோசஞ்செய்திடுந்திருடன் - கல்ல
மாயக்கள்ளன்சம்பிர - தாயக்கள்ளன் - இந்த
மாத்தானையும்-நேத்திரங்களில்
பார்த்தேனம்மா - பார்த்தேன்தாயே (தா)

உடாங்கனை-தரு.

௪. தாதியிவன்முகலட்சணம் - பார்க்கத்
தரித்திரந்திருமிந்தட்சணம் - இவன்
பாதங்களிரண்டெக்கும் - வேதம்மலரினை
படிமீறிவ - இடலானது
வடிவேலிகள் - வடிவோயில்லை (தா)

சித்திரரேகை-தரு.

௫. கர்ச்சிதவாணன்றன்சேயே - யென்மேல்
பட்சம்வைத்தாளுவாய்தாயே-கீதான்
உச்சிதஞ்சொல்லாமல் - மெச்சிமதித்தது
ஒருபோதிலும் - குறைவேயில்லை
சரியேசரி - சரியேசரி (கர்)

உடாங்கனை-தரு.

௬. சகியேயிந்தமகாராசன் - எனக்குத்
தண்டியாம்சாசவுல்லாசன் - எந்தன்
முகம்தினிற்றனது - முகமானதைவைத்து
மோந்தானெனைச் - சேர்ந்தான்மையல்
தீர்ந்தான்விண்ணிற் - பாய்ந்தான்கணம் (சகி)

சித்திரரேகை-தரு.

௭. மெய்தான்மெய்தான்எந்தன்கண்ணே - வாணன்
விந்திறையிறத்திமெய்பெண்ணே - நல்ல
செய்யும்வெல்லம்போல - ஐயனும்அம்மானும்
கிட்டும்அவன் - கிட்டுஞ்சரி
சாட்டாகவே - சாட்டத்தகும் (மெ)

உடாங்கனை விருத்தம்.

சாய்ந்திடாத்திறமைபெற்ற சகிசித்ரரேகாய்கேளாய்
தேய்ந்திடாவடிவத்தோய்ந்த சித்திரப்படத்தில்சாய்
வாய்ந்திமொராஜராசன் மகாராஜன்சென்மமெல்லாம்
ஆய்ந்துநான்பார்க்கப்பார்க்க அழகுதான்வளர்ந்தபாராய்.

வசனம்.

அகாகேளும்பாங்கி சித்திரரேகாய்! இந்தமகாராசனிட ரூபலாவணியத்திற்கும் என்னுடைய ரூபலாவணியத்திற்கும் ஏற்றவித்தியாசமுண்டோ சொல்லடிபாங்கி.

உடாங்கனே வசனம்.

அகோவாருந்தாயே! இந்தமகாராசன் ரூபலாவணியத்திற்கும் உன்னுடைய ரூபலாவணியத்துக்கும், எப்படி யிருக்குதென்றால், சந்திரகாந்த மேடையிலே வச்சிரங்கள் பாப்பினதுபோலும், சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரி பொழிந்தாற்போலும், தாமரைப் பொய்கையிலே அன்னம்சேர்ந்தாற்போலும், பவளக்கின்னத்திலே முத்துநிறைத்தாற்போலும், ரதிதேவி கும்பஸ்தனத்திலே பட்டொளிக்கை யிட்டாற்போலும், சந்தமலைமேலே பாரிசாதம் முளைத்தாப்போலும், பொருத்தமா யிருக்குதம்மா. இனிமே உனக்கு யோகந்தானம்மா தாயே.

உடாங்கனே சொல்லுகிறதுடலாவணி.

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

௧. பாங்குதாவியன்மொழி தாங்கிக்காக்குமுயிர்பாங்கி - இந்தப்
 படத்திலெழுதினமெத்த
 விடத்திலில்லைவெகு
 திடத்திலுயர்ந்தமதனுக்கி உயிர்பாங்கி.

௨. தாங்கும்வேளைவெகு ராங்கியுடன்கனவில்தானே - மலர்
 சூடிக்கலந்துவினை
 யாடிக்குணத்தில்மறைந்
 தோடிப்போனதுரைதானே சிமானே.

௩. தீர்க்கமாகமுகம்பார்க்கப்பார்க்கப்பசிதீருது - நல்ல
 செம்பொற்குடங்கள்நிகர்
 கும்பஸ்தனங்களாண்டும்
 விம்பிபதித்துமயல்மீறுது சுகங்கோருது.

௪. மூர்க்கமானமயல் தீர்க்கும்மதனவொய்யாரன் - தன்னை
 முடுக்கிப்பிடித்துநடு
 நடுக்கியதன்னுருவம்
 ஒடுக்குஞ்சித்ரசிங்காரம் அலங்காரன்

௫. தெள்ளுமெழில்பொருந்தும் வள்ளைக்கொடியைவெல்லுங்காது -
 சிலகுணமகிபன்
 [நல்ல



 மேலைப்பார்க்கவெழில்
 நீலமுகிலும் ஒவ்வாது சவ்வாது

௬. வெள்ளைத்தாமரைப்பூ விள்ளுமிதழ்கள்விழிக்கிடோ - சகி
 மெய்யதாகச்சொல்வன்
 கையுங்கால்களுக்குச்
 செய்யமறைமலர்கள் சோடோ அதுசடோ

௭. துரைதன்மார்பினுக்குத் தாணிதானுமிணையாமோ - நகை
 சோடிணைகளணிந்த
 மோடிதனக்குமதன்
 மோடிதானுந்துணைபோமோ யிணையாமோ

௮. இரவிநேர்கலன்கள் வரிசைவரிசையாய்ச்சேராய் - புனைந்
 திலங்கும்வேடிக்கையும்
 அலங்கல்வேடிக்கையும்
 குலுங்கல்வேடிக்கையும் பாராய்பதில்கூறாய்.

௯. மேருமலையுஞ்சிங்காரன் புயத்துக்கிணையாமோ - இவன்
 வித்தைக்கிணைமதனன்
 வித்தைதனையுமித்ரான்
 வித்தைதனையுஞ்சொல்லப்போமோ வெல்லப்போமோ.

௧0. பார்வையாலேகணம் ஸ்திரீஜனங்கள்மையல்தீரும் - நல்ல
 பாக்கியங்களுஞ்சி
 லாக்கியங்களுமா
 ரோக்கியங்கள்வந்துசாருந் துயர்தீரும்

௧௧. பூமிதனிலிந்தச் சாமிபோலப்புருடரில்லையே - நலம்
 பொருந்தஇவர்மடியில்
 இருந்துபழகினபின்
 பிரிந்துபோதல்சுகமில்லையே வெகுதொல்லையே

௧௨. காமக்கணைகள்செய்யும் திமைகளைத்திறப்பொடித்தானே - கண்
 கட்டுவித்தையொடு
 செட்டும்வித்தைநவெகு
 இட்டமாகப்படித்தானே அடித்தானே

௧௩. தே[illegible]மிர்தத்தினுவமிக் கனிந்தகனித்தேநதேறு - சகல
 தேசமெங்கும்புகழ்
 [illegible]

விசுந்சோதிப்பிர
காசாதனச்சிலைநாதனே யஜமானே

௧௪. பூவதனில்பிறந்த பாவைநலங்கள்வளர்ந்தாளே - நல்ல
பூச்சொரிந்துபசுப்
பாற்சொரிந்துவயல்
காச்சகரும்பில்முளைந்தாளே இளைத்தாளே

௧௫. தவ்வையனுசிபுகழ் திவ்யரூபசிங்காரன் - என்று
தாணிபுகழுமிந்த
தரையைத்தான்படைத்த
பிரமதேவன்கெட்டிக்காரன் வெகுதீரன்

௧௬. எவ்வளத்துக்கெந்த னெவ்வளமும்பணிந்துகொஞ்சதே-துதி
ஏர்த்தவுடல்முழுதும்
வேர்த்தவழகுதனைப்
பார்த்துப்பார்த்துமயல்மிஞ்சதே மதிகொஞ்சதே.

## உடாங்கனை விருத்தம்.

செகமெலாம்புகழும்யூகச் சித்திரரேகாய்கேளாய்
மகாசனுடனேநன்றாய் வார்த்தைநயொன்றின்பமாக
பகாலமென்றுவராய் நான் பாபசத்தமைந்துகொண்டு
நகைசெய்யாதுனாதுநீயபோ நானென்னசெய்வேனபாக்கி.

## உடாங்கனை-த-ரு-புன்னாகதோடி-அடதாளம்.

௧. திங்குளன்கதம் சாங்கிபுடனே
பூங்கணைகளை வாங்கியேவிடும்
மதனப்போர்தனை வெல்லையா - வாய்திறந்தொரு
மழலைவாக்கியஞ் சொல்லையா
உதிரப்புனல்தெரிக்க மதமச்சாங்கள்போசி
பதிவைக்குலைக்கத்தானே அதிகப்பசங்கஞ்செய்யும் (மத)

௨. அனுக்கும்உயில் குனுக்கும்உடல்
மெனுக்கும்வெகு பினுக்கும்தொழில்
ஊனுக்குஇது நீதியோ - சாமிதுரையே
வல்லாமல்சான்வாதியோ
* வீணுக்குவிளையாடல் கோணிக்கோலியன்றுதந்
திராணிக்குவந்தபிர மாணம்அல்ல தடத்தாடல் (அனுக்கு)



௩. துடர்ந்தனைதுயின் நடந்தனைதடி
படிந்திடுமெழில் மடந்தையின்மிசை
இந்தனைமோடி யுண்டோ - சாமிதுரையே
யென்விட்டவார்த்தை நன்றோ
சத்தியந்தவறாத புத்திமதியிருந்த
உத்தமவனிதைமேல் மெத்தக்கோபமதாக (இந்தனை)

௪. குணங்குமிகளுந் திணங்கியுனது
மணங்கருது நல்லணங்கினைவிட்டு
மாயமாய்ப் போகலாமோ - உத்தமஸ்திரீ
மனதுநொ நோகலாமோ
தாயுந்தந்தைகுருவும் தாயதெய்வமுங்காந்தன்
நீயென்றிருந்தவளைப் பணிந்த ஆயிழைதனைவிட்டு (மாய)

௫. அந்திரமதனை முந்தனமையவள்
நித்யமுந்நவி சத்யவுமையவள்
திருமையாளுமிவள் கண்டேன் - மனதிலுன்ன
நிலைசத்தைதயெல்லாங்கண்டேன்
அருவுமாயுருவாய் இருமாய்ப்பருவாய்
சருவால்லவனை திருமால்சகோதரி (திருமையா)

௬. மனதிலிருப்பதும் நினைவுமறந்தனை
இனியொளித்திடேன் வனிதையிதனைநிசம்
மட்டுக்கடங்காத காமி - எந்தனையிப்போது
மருவியணைந்த சுவாமி
கட்டவிழ்ப்படுத்தந் கட்டியணைந்துகொண்டு
விட்டொளித்தான் விட்டுப்பிரியாதவன்நான் (மட்டுக்)

௭. காந்திகழ்வனை வெளிந்திடமயில்
பிறந்திடுமையல் பறந்திடமனி
முந்தனத்தினைச் சேரையா - மின்னுந்தியிந்த
மோகவிடாய் தீரையா
அத்திரகன்னகனிந்து முத்துந்தந்தன்கனிந்து
குத்துக்கொங்கைகனிந்து வித்தாரந்தனமிது (முந்தன)

௮. முகத்தின்மிசை முகத்தைநப்பதி
நகைத்துக்கடி நகைத்துக்கொஞ்சிக்
கூடக்குலாவும் அரையே - வைபோமாக
கோக்கோகநூலின்முறைதையே

நாடிக்கூந்தலின்மலர் குடிக்காமகலாபம்
தேடிக்கொஞ்சியேவினை யாடிமகிழ்ந்தமினி (கூடி)

௩. தேவகிசுதன் தேவையின்படி
மூவடிதந்திட்ட மாவலிசுதன்
வாணன்மகளாய்ப் பிறந்தேன் - உன்றன்சுகந
மார்க்கமெல்லாந் தெரிந்தேன்
ஆணவந்தனைக்கோரும் விஞ்ஞினிவரர்தன்
சேனைத்தனமொதுக்கிச் சோணிதபுரியாளும். (வாணன்)

வசனம்.

ஆ ஆ சேளுப் பாங்கி சித்திரரேகாய்! இந்தப் படத்திலே யிருக்கிற மகாராசனைப்பார்த்து என்னென்னவக்கணைபாகப் பேசி வந்தபோதிலும் என்னோடு மறுவார்த்தை கூறாமல் மௌனமாயிருக்கிறானே, நீ யாவது ஒருவார்த்தை சொல்லும்படிச் செய்கிறாயா சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

ஆமம்மாதாயே! சிலர் சொல்லுவார்கள்; அதென்னவென்றால், தன்னைப்பெற்ற ஆத்தாள் சின்னிப்பிச்சை யெடுக்கிறாள், தம்பி தங்கச்சாம்போடச் சொல்லித் தொங்கித் தொங்கி அழுகிறானும். கொண்ட புருஷன் காடுகாடாய் கண்டகூலி செய்கிறானும், பெண்டாட்டி செபமாலை போடச்சொல்லி சிணுங்கிச்சிணுங்கி யழுகிறாளாம், வைத்திருக்கிற நாயகனுக்குப் பிச்சையெடுத்தால் சீவனமாம். தாசி வச்சிரப்பதக்கம் போடச்சொல்லிக் கெஞ்சிக்கெஞ்சிக் கும்பிடுகிறாளாம். ஆத்தே! குருவுக்கு எந்நாளும் கொலைபாதகம் செய்வதேதொழிலாம், சீஷன் மெய்ஞ்ஞானஞ் சொல்லச்சொல்லி விழுந்து விழுந்து கும்பிடுகிறானும். பட்டமிழந்த ராசாவுக்குக் கொட்டைப்பாக்குக்கும் கெதியில்லையாம், புலவன் முத்துச்சரங் கொடுக்கச்சொல்லி முக்கிமுக்கிப்பாடுகிறானும், பெண்ணு கொடுத்த மாமனாருங் கொரு கன்றுக்குட்டிக்குங் கெதியில்லையாம், மாடு சீதனங் கொடுக்கச்சொல்லி மருமகன் சீராடிச் சிணுங்குகிறானும், இடையாடுசெய்து வந்தகுடியானவன் கெட்டானும், செட்டி கொடுத்தகடன் வரவில்லையென்று அடித்தடித்து நடக்கிறானும், கோவிலழிந்த கருப்பராயன் குடிபோறேனென்று அலைகிறானும், பூசாரியிடு கட்டிக்கொடுக்கச்சொல்லி விழுந்து விழுந்து கும்பிடுகிறானும், கொண்டகணவன் கோவணங்கட்டத் துணியிச்சேலைக்குக் கெதியில்லையாம், பெண்டாட்டி தன்னுடை சதங்கை



போடச்சொல்லித் தொண்டைவறளப் புலம்புறாளாம், அந்தக் கதையாயிருக்கிறதே. இந்தக்கதை நீமகாராசன் குமாரத்தி சகலகலைக்கியானங்களுங் கற்றவள், நீ முக்கி முக்கிப்பார்த்துக் குறக்கெஞ்சு கெஞ்சியும் ஒருவார்த்தை கூடப்பேசாமலிருக்கிற அந்த மகாராசன் சம்பளம் வாங்குகிற தாதிநான் பேசச்சொன்னால் பேசுவானோ? உனக்கு இதென்ன பயித்தியம் படத்திலிருக்கிற சித்திரமானது பேசுமென்று நினைத்தபோதே உன்னைப்போல பைத்தியக்காரி உலகத்திலில்லையம்மாதாயே.

போது விருத்தம்.

தாதிபோதனைகட்கன்பா யுடாங்கனைமனஞ்சாராமல்
நிதிலாப்படத்தில்வாய்த்த சித்திரந்தன்னைப்பார்த்து
காதலேக்கருத்தில்மிஞ்சி காயமேல்மாலைகெட்டு
பாதமேயொடிந்தாள்போலும் பஞ்சணைதனிற்சாய்ந்தாளே

சாலவேபன்னீர்சார்ந்த சந்தனத்தெளிவைத்தானே
மேலெல்லாந்தெளித்து வெண்சாமரைகளால்வீசும்போது
மாலைசேர்குழலாள்சாய்ந்த மயக்கந்தாழ்ந்தெழுந்துதானே
சோலிதான்செய்திடாமற் றோழியோடுரைக்கின்றாளே.

பஞ்சணைதன்னில்சாய்ந்த பாவையைச்சித்ரரேகை
கெஞ்சிதேறெட்டுந்தணைத்து நெற்றிநீர்தனைத்துடைத்து
கொஞ்சியமுகத்துள்நீக்கி குலைந்திடுமயிரொதுக்கி [ளே
மஞ்சள்நீர்வேர்வையெல்லாம் மலர்க்கையால்துடைத்திட்டா

வசனம்.

இப்படித்தாதி சொன்ன உபதேசஞ்செவியிலேறாமல் படத்தின் அழகைப்பார்த்து உடாங்கனை மயங்கிப் பஞ்சணையில் சாய்ந்து விட்டாள். பிறகு பாங்கியானவள் பன்னீர்கலந்த சந்தனத்தெளிவை உடாங்கனைமேல் விறைத்து சாமரங்களால் வீசி அநேக சைத்தியோபசாரங்களைச் செய்கிறபோது உடாங்கனை மயக்கந்தீர்ந்தெழுந்து தோழியைப்பார்த்துச் சொல்லுகிற மார்க்கம் எப்படியென்றால்.

உடாங்கனைசொல்-கீர்த்தனம்-இ-ம்-மோகனம்.

௧. மழைபோல்நிறத்தன்மலைபோற்புயத்தன்
மதிபோலவெண்ணிரண்டு
கலைசேர்முகத்தன்நெடிதானகர்னன்செங்
கனிவாயன்கமலக்கண்ணன்

ஒளிவானதந்தன் விரிவானமார்பன்
ஒயிலாகநடக்குந்தாளான்
எழிலானதற்கு மதனேயொவ்வாது
இந்தமகாராசனை நீங்கி - தனித்துநானே
யெப்படிபிழைப்பது பாங்கி
வித்தையாய்க்கொக்கோகசாஸ்த்ரம் எந்தனுக்குபதேசஞ்செய்து
அந்தரங்கவார்த்தைபேசி யிந்த்ரபோகம்நன்றாய்ச்செய்தான்
லாவிநோத சூரன்
பூலோகமெலாம்புகழ் சுந்தரன்
கோலாகலமோகன மந்திரன்
நாலாகலையோதிய தந்திரன் (இந்த)

௨. விழிமூன்றுபடைத்தகைலாயநாதன்
விடையேறிவயங்குவிமலன்
மழுவேந்துங்கையன் திரிலோகநாதன்
மாநாகவாரம்புனைந்தான்
அழியாதவயதுமார்க்கண்டனுக்கு
அளித்தான்வெண்ணீறையணிந்தான்
எழியாற்குமெழியன்மனையாள்கடாட்சம்
எந்தனுக்கில்லாமல்பகைக்குமா - இவனைப்பார்த்தகண்ணால்
இன்னொருவனைப்பார்க்கச்சகியுமா
அந்தமாகாரசீகம் சந்தமாகாரசிநேகம்
விந்தையாகாரசபோகம் சொந்தமாகாரசபோகம்
சொர்னச்சரிகைத்துகில் புனைந்தனுக்கனும்
மின்னற்கொடியிடை அவண்டனுக்கனும்
வர்னப்பணியது புனைந்தெழிற்பினுக்கனும்
பின்னற்சடைசுழன்றிடக் குலுக்கனும் (எந்)

௩. நிசமாகஇவர்தன்னயனங்கள்பார்க்க
நிலையானசெல்வம்வருது
இசையானகல்விவாய்பார்க்கவருது
இடைபார்க்க ஒழிதுமெழிதும்
புசம்பார்க்கப்பலமும் உரம்பார்க்கச்செயமும்
புகழானகுணமும்வருது
பதிநீரிவர்தன் முகம்பார்க்கமோக



பரிதாபமெல்லாந் தீருதே - பின்னுந்தான்கூர்ந்து
பார்க்கப்பார்க்க ஆசைமீறுதே
இரதிமதனன்றானே கரும்புவில்லாலேயேவும்
சரங்களாலேகதிக்கும் பெரிதாம்விரகவாதை
பேயெனவுளறுவதும் பொல்லாதது
தாயுடன்தந்தையுடனுஞ் சொல்லாதது
காயசித்திசெய்தவர்க்கு மில்லாதது
சீயெனவிடமனது தில்லாதது (பரி)

மதனவொய்யாரன் மதனசிங்காரன்
மதனசல்லாபமகிபன்
மதனசுகலீலன் மதனகுருபீடன்
மதனரஞ்சிதவிநோதன்
மதனசம்போகன் மதனகம்பீரன்
மதனகேளிக்கைவிலாசன்
மதனராசேந்திர திலகனுமிவனை
மறந்திடமனதுகூடுமா - இவனல்லாமல்
மற்றொருவன்சுகந்தேடுமா
இறந்திட்டாலும்பின்னும்வந்து பிறந்திட்டாலுந்தலைநாத்தில்
பறந்திட்டாலும்உடலைவாளா லரிந்திட்டாலும்-இவனுல்லாசம்
ஆகம்பொருள்விரவுவிவேகமும்
மேகநிறமதுறுமெழில்தேகமும்
நாகவுலகசுரர்புகழ்யோகமும்
மோகனசரச சமரசபோகமும். (மறந்)

வசனம்.

அகோ சேளும் பெண்ணே சித்திரோய்! என்கனவிலேவந்து என்னைத் தோள்சேர்ந்து மறைந்துபோன மகாராசனை நீயெப்படிக் கண்டுபிடித்தாயடி. பாங்கி.

உடாங்கனை-நந-இ-ம்-புன்றுநவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

எப்படிநீகண்டு பிடித்தாய் - இவனைப்போலே
எழுதுந்தோலெதவ்றுபடித்தாய்

அநுபல்லவி.

சப்ரமஞ்சனத்தின்மீது பொற்புதனையபோலென்மீது
குப்புறப்படுத்தனைந்து கொப்பெனமறைந்தவனை (எப்)

சரணங்கள்.

க. சந்தனங்கஸ்தூரிபூசி சொந்தமானவார்த்தைபேசி
எந்தனைச்சேர்ந்தோடிப்போன இந்த்ரசாலக்கள்ளனைத்தான் (எப்
உ. நாகரீகமாகவந்து மோகமானதாகந்திர
யேகபோகமாயணைந்து வேகம்போனயோகவானை. (எப்)
௩. நேசமானகூந்தன்மீதே வாசமானபூவைச்சூட்டி
ஆசைகாட்டிமோசஞ்செய்த வேசமாறிக்கள்ளனைத்தான். (எப்)

வசனம்.

அகோ வாரும் பெண்ணே சித்திரரேகாய் ! தத் ஸ்வரூபமாய்க் கண்டவள்போலே இப்படிக்கொஞ்சமும் பேதப்படாமல் எழுதுகிற வித்தை எங்கே படித்தாயடி பாங்கி.

சித்திரரேகை-வசனம்.

கேளுமம்மா தாயே ! கல்வாரியி லடிபட்டவன் கால்கணக்குப் பிள்ளை, ஆயிரம்பேரைக்கொன்றவன் அரைவயித்தியக்காரன், மூன் றுயுகங்கண்டவன் முக்கால்யோகீஸ்வரன், முப்பதினாயிரம்சுவர்களைக் கெடுத்தவன் முழுச்சித்திரவேலைக்காரன், அந்தப்படி நான் முப்பதி னாயிரம் சுவர் கெடுத்தவளாகையால் கண்டதுகண்டதுபோல எழுது கிறவித்தையில் எனக்கு மிஞ்சினவர் கிடையாதம்மா தாயே.

பொது விருத்தம்.

இச்சகத்துரைத்தசதி தன்னைமெச்சி
எழில்மடலையிருகரத்தில் கிளர்த்துங்கொண்டு
சந்த்ரமுகந்தனிலணைத்து விழியிற்சேர்த்துத்
தங்கமென்றும்எனக்கிசைந்த துரைதானென்றும்
சுந்தரஞ்சேர்கன்னிநுகண் மணியேயென்றும்
இலங்குபடச்சித்ரமுக மீதுதோகை
வந்தனையாய்ப்புகழ்ந்துகொஞ்சி முத்தமீந்து
மனமகிழ்ந்துசகியொடு வழுத்துவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சொன்னதாதியை மிகவும் புகழ்ந்துகொண்டு அழகு பொருந்திய சித்திரபடத்தை இரண்டு ஸ்தனபாரங்களிலும் அணைத்துக்கொண்டு பின்னும் சித்திரரேகையைப் பார்த்து உடாங்க சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.



உடாங்கனை-தரு-இ-ம்-முகாரி-ரூபகதாளம்.

பல்லவி.

ஆரோயிவனோ இவன்
ஆரோசொல்லும்பாங்கி - இன்னம்
அஷ்டைசுவரியமுனக்கேவா
வேணும்மதனுங்கி.

அநுபல்லவி.

போனதுருவமானது
போனதுமேதுவோ - இவனைப்
பெற்றுவளர்த்திடுந்தாய்தந்தை
போனதுமேதுவோ. (ஆரோ)

சரணங்கள்.

க. பின்னழகின்விலை மண்ணுலகம்பெறும்
முன்னழகின்விலை பொன்னுலகம்பெறும்
என்னழகுமவன் றன்னழகுக்கிணை
சொன்னதுதப்பித மின்னாசேயிவன். (ஆரோ)
உ. முனிநாரதன்வீணைச் சுதிமுடிவிற்பிறந்தானோ - உயர்
முருகுந்தன்மகன்மனையாள் சதிமுலையிற்பிறந்தானோ
வனமேவுகவரிமானதின் வயிற்றிற்பிறந்தானோ - பினும்
வானோருலகினிற் சண்பகமலரிற்பிறந்தானோ. (ஆரோ)
௩. அரிவாந்தனிலேயிருந்து பிறந்தவனோ - திரு
காந்தனிலேயிருந்து பிறந்தவனோ - சிவ
னுாந்தனிலேயிருந்து பிறந்தவனோ - சாத
மாந்தனிலேயிருந்து பிறந்தவனோ. (ஆரோ)
ச. வனக்காட்டினில்வாழுங்கிள்ளை வயிற்றில்செனித்தானோ
மகாரசனைகிறுத்தமனதில்லையோ சத்திக்கேனோ [தனை
எனக்கேகட்டித்தேனோயிவன் யார்க்குங்கட்டித்தேனோ-இத்
யெழிலாய்ப்பிரம்மதேவன்இவனையெப்படிச்சிருட்டித்தானோ
ரு. இந்த்ரனைப்பெற்ற இந்த்ரனோ - இவன்
சந்த்ரனைப்பெற்ற சந்த்ரனோ - மத
சுந்த்ரனைப்பெற்ற சுந்த்ரனோ - மாய
தந்த்ரனைப்பெற்ற தந்த்ரனோ. (ஆரோ)

௬. உனதாசைமகிழ்நன்றுனெனவுற்வே பிடித்தாளே • பிறும்
எனதாசைமனைவிநீயென இதழ்நீர்குடித்தாளே
னமீதினில்கனத்தாக்கியென் கனிநாக்கடித்தாளே
தனபாரங்கள்மீதில்மெள்ளச் சாய்ந்துபடுத்தாளே (ஆசோ)

௭. குழல்சரிந்திடச்சேலையை புரிந்தவன்றான்
வளைகெரிந்திட லீலைபுரிந்தவன்றான்
மிகச்சிறந்தடமயலைக் காந்தவன்றான்
விழிதிறந்திடக்ஷணத்திற் பறந்தவன்றான் (ஆசோ)

உடாங்கனை விருத்தம்.

மாதுநாநுலகில்நன்றாய் வாழ்ந்திடவேணுமென்றே
நீதியாயுனதுநெஞ்சில் நினைப்பதுமெய்யேயானல்
சாதுவாமிவன்பேர்தந்தை தாய்குலகோத்திரந்தான்
நீதறச்சொல்வாயென்னச் சித்ரரேகையுஞ்சொல்வாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனையானவள் சித்திரரேகையைப்பார்த்து, நான் இந்த வுலகத்தில் இன்னுஞ் சிலகாலம் வாழ்ந்துகொண்டிருக்கவேணுமென்று, நீ நினைத்திருப்பது உண்டானல் இந் மகாராசனுடைய பேரும் ஊரும் தாய்தந்தைகளின்பேரும் குலகோத்திர விவரமும் எனக்குத் தெரியச்சொல்ல வேணுமென்றபடி சித்திரரேகை சொல்லுவது எப்படியென்றால்.

சித்திரரேகை தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

அங்கசனும்ரதியும் இங்கிதத்துடன்பெற்ற
அருமைத்திருமகன் இவன்றனம்மா அம்மா

அநுபல்லவி.

சங்குசக்கரந்தரித்த | செங்கண்மாலவன்றன்னை
தழுவியெடுத்தணைத்த பாட்டனாம்மா (அங்)

சரணங்கள்.

௧. மதுகுதனைப்பெற்ற அதிரூபதேவகி
மாதேஇவனுக்குமுப் பாட்டிதானம்மா
பதிபாகத்தில்மிருந்த மதன்தாய்லட்சுமிதேவி
பாவையேயிவனுக்குப் பாட்டிதானம்மா. (அங்)



௨. புவனமெல்லாந்துழாவி இவன்மணஞ்செய்தபெண்கள்
போனதும்ருக்குமி தானம்மா அம்ம
கவனமதில்ருக்மி கவனமல்லாமல்ஓர்பெண்ணைக்
கனவிலுங்கூட நினையானம்மா அம்ம (அங்)

௩. ஆர்ச்சனங்கள்வினைகள் அச்சங்களுமனுகா
துவாரகாபுரி இவனூரம்மா அம்ம
அர்சுநானந்தன்புகழ்ந் திச்சையாய்வைத்திட்டபேர்
அனிருத்தனென்பதிவன் பேரம்மா அம்ம (அங்)

௪. வேயிசையூதும்பாலன் தாயார்தன்மடிமீதில்
விளையாட்டஞ்செலுத்தின பாலனேயம்மா
பேயின்முலைப்பாலுண்ட மாயன்றலைக்கிரீடம்
பிடுங்கிந்தான்வைத்துவினை யாடினனம்மா (அங்)

௫. அரிநாரணன்மனையாள் திருமகள்பூண்கலனை
அவிழ்த்துவிளையாடின பாலனேயம்மா அம்ம
மருவும்வித்தைதனில்அதி விருதுபெற்றிடுமோரன்
மணிமார்பிலேறிவினை யாடினனம்மா (அங்)

௬. மதனராசன்பெண்சாதி ரதிதேவிமுத்தமிட்டு
மார்பிலணைந்திட்ட பாலகனம்மா அம்ம
சுதனூர்மொழியறிந்து வதனருக்குமியோடு
சாதலீலைகள்செய்யுங் காந்தனேயம்மா (அங்)

௭. சித்திரசிங்காரம்பேசும் வித்தாரங்களைக்கண்டு
தேவர்களும்புகழும் ரூபனேயம்மா அம்ம
சந்துராதிகளைவெல்லும் அந்திரங்களைத்தொடுக்கும்
சாமர்த்தியந்தன்னிலதிசூரனம்மா (அங்)

௮. கட்டழகன்றன்னைக்கண்டு எட்டுக்கண்ணனொருநாள்
கட்டியணைந்து புகழ்ந்தானம்மா அம்மா
அஷ்டதிக்குப்பாலகர்கள் எட்டுப்பேர்களுமிவன்
அழகைக்கண்டாச்சரியங் கொள்வாரம்மா அம்ம (அங்)

௯. எல்லாவைபோகத்திலும் சல்லாபரூபத்திலும்
எள்ளளவேனுங்குறை யில்லையேயம்மா அம்ம
பொல்லாதார்களும்க்ஷணம் நல்லோராகவேபுத்தி
போதிக்கச்சொல்லும் புண்ணியசாலிதானம்மா (அங்)

௧௦. பார்த்தனையுண்மெழ்ந்த கார்மேகவடிவினன்
பாலகனுக்குமாமனாகவே யம்மா அம்மா
சீர்தருங்குணத்தில்நிகர் பார்தனில்நிகரில்லாத
தேவிரதியுமாமி யாகவேயம்மா அம்ம (அங்)

௧௧. படியீரேழையுந்தானே அடியொன்றாலேயளந்த
பரமனுக்குநீபேத்தி யாகவேயம்மா
கொடியகஞ்சனைக்கொன்ற நெடுமால்தேவிலட்சுமி
கோதைக்குநீபேத்தி யாகவேயம்மா அம்ம (அங்)

௧௨. கோவர்த்தனகிரியைத் தாவிக்குடைபிடித்த
கோவிந்தனுனதுபாட்ட னாகவேயம்மா அம்ம
தேவர்க்கிடுக்கண்தீர்த்த கோவிந்தனிடதாயார்
தேவகிக்கிநீயேபேத்தி யாகவேயம்மா அம்ம (அங்)

௧௩. சுருதியில்தோன்றுங்கரி வரதராசசெய்யும்
துவாரகாபுரியுன்னூ ராகவேயம்மா
இரதிமைந்தன்மார்பில் பொருந்நீசேரமுந்நாள்
எத்தனைமாதவங்கள் செய்தாயோஅம்மா (அங்)

௧௪. தாதியாம்நானிப்போ தோதுமொழிகளிற்பொய்
சற்றுமிலும்மிராது தானேயம்மா அம்ம
மாதுநீயிதற்குமேற்சொல் போதனைவினவிடாது
வாழ்வதெனதுநீதி தானம்மா அம்மா. (அங்)

வசனம்.

ஆ ஆ கேளுந்தாயே வாணாசுரன் குலக்கொழுந்தே, இந்தப்படத்திலிருக்கிற இராசகுமாரன் பேரும் ஊருங்கேள். இவன் தகப்பன் மதனராசன், தாய் ரதிதேவி, சர்வலோகங்களையும் காத்துரட்சிக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணனே பாட்டன், ஸ்ரீமகாலட்சுமி இவனுக்குப்பாட்டியார், இவன் ஊர் துவாரகாபுரி, இவன் பெண்சாதி ருக்மிதேவி, இவன்பெரோ அனிருத்தனென்று சொல்வார்கள். நீ ஒரு நாழிகையாவது ஸ்ரீகிருஷ்ணசுவாமியைப் பாட்டனாராகவும், மகாலட்சுமியைப்பாட்டியாராகவும், மதனராசனை மாமனாராகவும், ரதிதேவியைமாமியாகவும், இந்த மகாராசனைக் கணவனாகவும் சேர்ந்து கொண்டாயல்லவா? உன்னுடையயோகமே யோகமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அகோவாரும் பாங்கி நான் முன் ஜன்மத்திலே கொடுத்துப்பிறந்தவளானபடியினாலே இவ்வளவு பாக்கியவதியானேன் ஒருயோசனை சொல்லுகிறேன் கேளுமம்மா பாங்கி.



உடாங்கனை விருத்தம்.

காரிபேசகியேநீயும் நானுமாதவன்முன்வாழும்
வாரிசூழ்துவரைக்கேய்தி மன்மதராசன்மைந்தன்
விரியமழகுபார்த்து மெச்சினாமுறவுபேசி
சூரியன்தோன்றுமுன்னே சோணிதபுரியைச்சேர்வோம்.

வசனம்.

வாரும்பாங்கி! நானும்நீயும் இருட்டுவேளையிலே அந்த துவாரகாபுரிக்குப்போய் இந்த மகாராசனைக் கண்குளிரக்கண்டு சிநேகிதவார்த்தைபேசிக்கொண்டு பொழுதுவிடியுமுன்னே நமது பட்டணத்திற்கே வந்துவிடலாமடி பாங்கி.

சித்திரரேகை விருத்தம்.

உத்தமியித்தமார்க்கம் உலகெல்லாமாளுக்கிந்தோன்
புத்திரன்காதிற்கேட்டால் பொல்லாதவினையுண்டாகும்
சித்திரவதையேசெய்வான் செய்திடாதிருந்தாலுந்தான்
எந்திசைமட்டவார்மன்னர் ஏசுதற்கிடமுண்டாமே.

வசனம்.

கேளுமம்மாதாயே! இதென்னயோசனைசெய்தாய், இதை வாணாசுரமகாராஜன் தெரிந்தால் சித்திரவதைசெய்துபோடுவார். அப்படிச் செய்யாமல் விட்டாலும் உலகத்திலுள்ள ஆண்பெண் அடங்கலும் நகைப்பதற்கு இடமாய்விடுமம்மாதாயே.

உடாங்கனை-விருத்தம்.

நகைமுகச்சசியேமுந்நாள் நான்செய்ததவமெய்யாக
இப்பாத்தரிசேய்மைந்த னிருக்குமவிடம்போய்ச்சேர்ந்து
பகலவன்மறைந்தபின்பென் பதிதனையெடுத்துக்கொண்டு
செகதகாறியாமற்றான் சீக்கிரம்வருவாய்பாங்கி.

வசனம்.

வாரும் பாங்கி நீயும் நானும் துவாரகாபுரிக்குப்போனால் தலைபோய் விடுமென்று மெத்தப் பயப்படுகிறாய், நல்லது நான் முந்நாளிலே செய்த தவம் ஈடேறும்பொருட்டாக நீ ஒருகாரியஞ்செய்யவேண்டும் என்னவென்றால், நீ அந்த ராசகுமாரனிருக்கிற இடத்திற்குப்போய் அவனை அறுமைத்தாகத்தூக்கி ஒருவருக்குந்தெரியாமல் இங்கே கொண்டுவரவேணுமம்மா சித்திரரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

வாருமம்மா தாயே நீ பிழைக்கிறதற்கு நீ வழிதேடினால் நான் பிழைக்கிறதற்கு நான் வகைதேட வேண்டாமா? மேலும் இ—

மறியாமல் காலை நீட்டினல் இடைஞ்சல்வந்துசேரும் பிராணச்சேதத்திற்கு ஏதுவானகாரியத்திற்குப் போகக்கூடாது. கட்டுப்புங் காட்டுநெல்லிக்காயும் தற்செயலாய்க்கூடிக்கொள்வதுபோல உனக்கும் அந்தாசகுமாரனைக் கூடவேண்டிய பிராப்தி யிருந்தால்தானே அதற்கு மார்க்கமுண்டாகும், அதிஷ்டமில்லாதேபோனல் திரிமூர்த்திகளாலேயு மாகப்போகிறதில்லை. அதற்காக எனக்கும் பிராணச்சேதம்வரவேண்டியதில்லை, நீயும் வியாகூலப்படவேண்டியதில்லையம்மா தாயே.

உடாங்கனை-தீபதை-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கன்னிகை.

௧. இந்திரசாலச்சகியே யென் சாமி - அழகைத்
எப்படிமறந்திருப்பேன் நான் சாமி

௨. மறப்பமென்றாலும்மனது மறங் கில்லையே - சகியே
மட்டிச்சென்மமாகவே நான்பிறக் கிலையே

௩. ஆனைக்காளைகைகொடுத்தால் போல் தானே - புத்தன்
ஆதாவைநம்பிமோசம் போனே றானே

௪. சின்னப்புத்திமனுஷியென்று நான் கானேன் - உனக்கு
சித்திரரேகையென்றுவைத்த பேர் வீணே

௫. மோசகாரியென்றுமுன்பின் தெரிந் தாலும் - சகியே
மோகமாராலும்ரதியும் பிரிந் தாலும்

௬. கண்டகாரியமுந்தனோடே வுரைப் பேனோ - மெத்தக்
கனமுள்ளவளென்றுனைநான் குறிப் பேனோ

௭. என்னத்தைத்தீர்த்தாலுன்புகழைப்படிப் பேனே - சகியே
யென்னுடையபிராணனுனக்கே கொடுப் பேனே

௮. சணங்கன்வாலைப்பற்றிக்கரை யேற லாமோ - சகியே
துஷ்டர்களைநம்பிச்சொர்க்கஞ் சேர லாமோ

௯. மாட்டுவாலைப்பிடித்தால்கரையேற லாமோ - சகியே
மானிகளைநம்பிச்சொர்க்கஞ் சேர லாமோ

௧௦. மாதுநான்சொன்னகாரியந் தன்னைச்சேர திக்கவும் - சகியே
மாட்டனென்றால்நீதானென்ன மந்த்ர வாதி

௧௧. சமயகாலந்தன்னிலேதா னித்த வர்மம் - சகியே
சாதித்தபோதுன்போசொல்லும் ராச தர்மம்



௧௨. சாமிராமனுக்கனுமார்செய்த நன்றி தானே - போலச்
சகியெனக்கிருப்பதுபோ லெண்ணி னேனே

௧௩. பாக்கியுன்சினேகிதத்தை நம்பு னோம் - பெரிய
பள்ளமாற்றைநாடினாலும் உப காரம்

௧௪. எந்தனசைதன்னைநீதான் தீர்ப்ப தில்லை - சகினுன்
என்னசொன்னாலும்முகத்தைப்பார்ப்ப தில்லை

௧௫. காமபாணங்களாலென்மெய் நடுங்கு தடி - சகியே
கடன்பட்டார்நெஞ்சம்போலே ஒடுங்கு தடி

௧௬. கோடினகோரிக்கையெல்லாம் வீ ணாச்சே - நான்
கும்பிட்டதெய்வங்களெல்லாம் பொய் போச்சே

௧௭. தாதியர்க்கெல்லாமெந்தன்சொல் கோளை தானே - யெனது
தாய்வயிற்றில்நான்பிறந்த வேளை தானே

௧௮. ஆகுங்காரியமாகாதென்றன் விதி தானடி - எனக்கு
அழுதழுது தக்கிப்பதே கெதி தானடி

௧௯. புத்திகெட்டபெண்ணெனுந்நா ரெக்நனுக் குண்டு - சகியே
போர்முகத்திற்பின்வரும்பே ரெக்தனுக் குண்டு

௨௦. இந்தப்பூமிஇந்தப்பெயர் யாருக்குக் காணி - சகியே
எத்தனையோபிராணிதன்னில் நானொரு பிராணி

௨௧. உன்னுறவும்என்னுறவும் தூர மாச்சே - சகியே
உற்றபூமிக்கென்னுயிர்ப்போர் பார மாச்சே

௨௨. பிறந்தபோதேதேகம்வயதும் தேய்வு தாண்டி - சகியே
யென்றிருந்தாலும்ஒருநாள் சாவு தாண்டி

௨௩. நானினைத்தகாரியங்கைவிட லாமோ - யென்றன்
நம்முடையகண்ணீர் பெருகவிட லாமோ

௨௪. அக்கினிப்பிரவேசமாவேன் சத்திய மாக - இப்போ
தார்தடுத்தாலும் நிற்கேன் சித்திரரேகாய்

பொது விருத்தம்.

துணிகரமாய்ச்சூரன்மகள் ஆபுதந்தைத்
தும்பவிற்த்துஉருவிமண்ணிற் றரிதாய்நாட்டி.
பணிகளெல்லாங்கழற்றி யெறிந்துபோட்டு
பட்டுநித்திக்கச்சைகட்டிப் பன்பாய்ப்புரை

அனிருத்தன்முடிந்து உண்மையைநோக்கு
ஆயுதத்தைச்சுற்றிவந்தா னதனைக்கண்டே
சுணமதனிற்பாங்கிவந் தாயுதங்தைப்பற்றித்
தெரிவைமுகம்நோக்கியுரை செய்குவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக உடாங்கனையானவள் தன்னுடைய பிராணனைமடித்துக்கொள்ளத்துணிந்து ஆயுதத்தை உறையினின்றும் உருவிபூமியில் நாட்டி கச்சைகட்டி ஈஸ்வரியைத் துதித்து அதைச்சுற்றி வருவதைக் கண்டு சித்திரரேகை தடுத்துச்சொல்லுகிற விதம் எப்படியென்றால்.

விருத்தம்.

மாவலிதன்புத்திரனருள் மகளேகேளாய்
வர்மமதுதான்மிகுந்து வான்மேல்விழுந்து
சிவனழிப்பதுபெரிதென் றெண்ணவேண்டாம்
சீக்கிரமாயான்அவரை நகருஞ்சேர்ந்து
காவலர்கள்புகழ்மதனன் மகனைத்தானே
கட்டிலுடனேயெடுத்தென் கரத்திலேந்தி
ஆவலுடன்கொண்டுவந்து இவிடம்சேர்ப்பேன்
அன்புடனேவிடைகொடுத்து அனுப்புந்தாயே.

வசனம்.

வாருமம்மா உடாங்கனையே வாளில்விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளுவ தொரு பெரியகாரியமல்ல, அது முழுமூடர்களுக்கும் வெகு எளிதானகாரியமாம், இனிநான்றானே துவாரகாபுரிபட்டணத்திற்குப்போய் நான் கற்ற வித்தைமந்திர மகத்துவத்தாலே அந்தமன்மதகுமாரனாகிய அனிருத்தமாகாராசனைத் தூங்குமஞ்சனத்தோடே தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கமாய் ஒருநொடிக்குள்ளே வந்து விடுகிறேன் எனக்குச் செலவுகொடுத்தனுப்புமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

கேளும் பாங்கி நான் பிராணனை மாய்த்துக்கொண்டால் உனக்குப் பெரியவில்லங்கம் வருமென்று பயந்து போக்குக்காட்டவேண்டாம், எதார்த்தமாய் சொல்லும் பெண்ணே சித்திரரேகாய்.

சித்திரரேகை-வசனம்.

எங்கப்பானை சாமிசாக்ஷியாய் கண்ணானை மூக்கானை வாயானை பல்லானையாய்க் கொண்டுவருகிறேனம்மாதாயே. மூக்காலும் கொண்டுவருவேன், மூக்காலேநானம்மா மூக்காணிபணைக்காணி மூக்குத்தியும் கொண்டுவருகிறேனம்மா தாயே.



சித்திரரேகை துவாரகைக்குப்போகிற
தரு-ஙூம் - நாதநாமக்கிரியை - ரூபகதாளம்.

பல்லவி.

சகிசித்திரரேகையும் ககனத்திற்பாய்ந்தனளே
தந்திரஜாலம்-இந்திரஜாலம்-வித்தையுமந்தர
ஜாலமும் ஆய்ந்தனளே.

அநுபல்லவி.

அகத்தில்அரிதுள அறிவதுதேக்கியே
புகழுள்துவாரகா புரிதன்னைநோக்கியே (சகி)

சரணங்கள்.

க. ரஜதளதிறமென ரவைகளுக் தூரியுமே - பளீர்பளீர்பளீ
ரென்ஞ்சணஞ்சணமாகவே சிர்ரெனச் சீறியுமே [ரென
சேனைதிற்பாந்திடும் வாணங்கள்புகழ்ந்திட
சோணிதமாநகர் துரைமகள்மகிழ்ந்திட (சகி)

உ. அறந்திகழ்மாயனுக்காகியபத்தர்களே - புகழ்சுவன்குளிகைகொண்
பறந்துதிரிந்திடும்பதினெட்டுச் சித்தர்களே - இவள் [டு
பாய்ந்துவருஞ்செயலைப் பார்த்தவர்பதுங்கவே
கூர்ந்துஅடர்ந்தமுகிற் கூட்டங்களொதுங்கவே (சகி)

ங. மாவிசையுளசண்டமாருதம்உடைந் திடவே-வெகுதேசங்கள்மலை
நேயுதிபரந்தாம் க்ஷணத்திற்கடந் திடவே-ரொம்பச் [களும்
சிறுத்துச்சிறுத்தெனத் தேகத்தையொடுக்கியே
துருத்தியைப்போலச்சு வாசத்தையொடுக்கியே (சகி)

வசனம்.

இவ்வண்ணமாக சித்திரரேகை ஆகாசமார்க்கத்திலே பாய்ந்து சீக்கிரமாகத் துவாரகாபுரிபட்டணம் சமீபமாகவருகிறபோது சுவாமியினுடைய சக்கரமானது வந்து சித்திரரேகையை மறித்துக்கொள்ளச் சித்திரரேகை சுவாமியைத் தியானஞ்செய்யப்பட்ட விதம் எப்படியென்றால்.

தரு-தீபகை-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

க. அரிகரிகரிகேசவாஜயஆதி நாராய
ஆனந்தப்பொருளாய் நிறைந்தவேத காரண
உ. சர்வலோகதயாபரனே ஜனனி நாயகா
சக்கரத்தைவிலக்கவேணும் பக்த தாயகா

௩. இரணியாசுரனைக்கொன்ற யாளி ரூபனே - தேவ
ரிடுக்கண்தீர்த்தாட்சித்தோனே பத்ம நாபனே

௪. மரணம்நீயேபிறப்புநீயே மண்ணையுண்ட வனே-மண்ணில்
வாட்டம்நீயேதேட்டம்நீயே யெல்லாங் கண்டவனே

௫. திருட்டுப்புரட்டுச்சாலம்விஞ்சை செகத்ரட்சகனே-உனக்குத்
தெரியாதென்றுநானெண்ணவில்லைசாத்விகாட்சகனே[வாணன்

௬. குருட்டுக்கண்ணைநல்ல கண்ணாக்குங்கொண்டல்வண்ணனே-
கோதைதுயரந்தீர்க்கவேணும் கமலக் கண்ணனே

௭. ஆழியிற்றுயின்றவனே ஆர்க்கு மூத் தவனே
ஆயர்பாடிதன்னிலே ஆநிரையை மேய்த் தவனே

௮. திகிரிதன்னைவிலக்குமையா தேவ தேவனே
சித்தமுன்பாக்கியமையா மகா னு பாவனே

போது விருத்தம்.

காதலனைக்கொண்டுவந்து சேர்ப்பேனென்னைக்
கண்ணாசேயனுப்புமென்னப் போய்வாவென்று
நீதகல இவ்விதமாய்ச் சித்ரரேகை
சேணதனில்வாய்வதுபோற் சணத்திற்பாய்ந்து
சாதுரியத்துடன்பார்த்து நாகலோகம்
தன்னிலுள்ளோர்கண்டுமெச்சத் தானேவந்து
மாதவன்வாழ்துவரைநக ரெழிலையெல்லாம்
வந்தனையாய்ப்பார்த்துமன மகிழ்கின்றாளே.

வசனம்.

உயிர்த்துணைவியாகிய சித்திரரேகை வாயுவேகமாகப் பாய்ந்து வருகிறபோது சுவாமியின்சக்கரம் வந்துதடுக்க, சுவாமியைத் துதித்து சக்கரத்தை விலக்கிக்கொண்டு துவாரகாபுரியின் அழகையெல்லாம்பார்த்து மனமகிழ்ந்து சொல்லுகிற தெப்படியென்றால்.

நீபதை-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. பார்த்துச்சித்திரரேகை மகிழ்ந் தனளே - துவரைப்
பட்டணந்தனைத்தானே புகழ்ந் தனளே

௨. சாத்திரவேதங்கள் படிப் பவரே - மெச்சி
சகலவெகுமதிகள் கொடுப் பவரே



௩. துரைமார்கள் பல்லக்கி லேறிவர - நல்ல
தோழிமார் சூழ்ந்து தொடர்ந்துவர

௪. பரிமீதிற்சிலமாதர் ஏறிவர - நல்ல
பாங்கிமார்கவரிகள் வீசிவர

௫. மன்னருடன்மன்னர் சேர்ந்துவர - பல
மந்திரிமார்புடை சூழ்ந்துவர

௬. மின்னிடையார்தீப மேந்திவர - சில
வேசியர்நடனங்கள் நேர்ந்துவர

௭. பாரதக்கூத்துக ளாடவுமே - அதை
பார்க்கமின்னார்பலர் கூடவுமே

௮. சோரநாயகர்தன்னைந் தேடவுமே - அதைத்
சொந்தநாயகர்கண்டு போடவுமே

௯. வேசியர்களாட்ட பாட்டங்களே - அந்த
வேடிக்கைப்பார்ப்பவர் கூட்டங்களே

௧௦. வாசிக்குலங்களின் மாட்டங்களே - கால்
மாறுமேலயேகிடும் ஓட்டங்களே

வசனம்.

சித்திரரேகை துவாரகாபுரியின் அலங்காரங்களைப் பார்த்துக்கொண்டு அனிருத்த மகாராசனுடைய அரண்மனையிலே புகுந்து சூக்குமரூபமாகப்ப தங்கி யிருக்கும்போது அனிருத்த மகாராசன் வருகிறதெப்படியென்றால்.

அனிருத்தன் வருகிற விருத்தம்.

மதிநிகர்வதனமுள்ள மாதுருக்குமியிறோடே
துதிபெறுமதனசாஸ்திர துரிதசம்போகஞ்செய்யும்
கதிர்மதிபுகழ்ந்துபோற்றுங் கனகமண்டபத்தைநோக்கி
சதிபதிமதன்பேர்சொல்லும் ரதிமகன்வந்திட்டானே.

வசனம்.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குப் பேரனாகிய அனிருத்தமகாராசன் தனது அரண்மனைக்கு வருகிற.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

மதன்மகனும்வந்தானே - அனிருத்தம
மகாராசனும்வந்தானே

அநுபல்லவி.

மதிகதிர்புகழ்கன ரதியருள்மகனென
வானுளோருந் ஆதிக்கவே - பூவுலகினில்
தானுள்ளோரும் மதிக்கவே - எழில்மிகுந்த
மாசில்வச்சிரமிலங்கு கிரீட
ராசராசர்களுக்குமி கூட
வேசியராகுமரம்பைக ளாட
பூசுராட்சதைமகிழ்வோடு போட
மானிலமந்திர பேரிகையதிர
வானிலிருந்து பூமழைபுதிர. (மதன்ம)

சரணங்கள்.

௧. கிட்டமிடுங்கின்னரருங்கிம்புருடரும் - சிறந்திடும்
கெருடருஞ்சித்தவித்யா தரரும்
அஷ்டவசுக்கள்சாரணர்தபோதனரும்
அல்லாரும்இவரைப்போலச் சல்லாபனில்லையென்று
அழகைவர்ணித்துப் பேசவே - தேவர்விளங்கும்
அறநெறியிலும்அழகினில் எழில்ராச
வரையென அமரர்கள்மனைவியர் பேச
பிறைநுதல்வனிதையர்விசரிகள் வீச
மறையவரியல்பொடுகலவைகள் பூச
அரிவையரேசில சுருள்களையேந்த
ஆலாத்திகள்சில மாதர்களேந்த. (மதன்)

௨. சிரசிலணிந்தகிரீடமும் ஆயிரம்-கோடிசெங்கதிர்
பரவைகள்பொங்கும்சுடரைமின்ன
மெரிசுமின்னல்கள்போலவே காதிற்குண்டலம்
மின்னநுதலிலிட்ட சொர்ணத்திலககாந்தி
மினுக்கந்தனதென்னவே - ரத்னாபரணம்
மெருங்கையுரமிசை திகுதிகுதிகுவென
சரமொடுநளிர்கலர் தகதகதகவென
காமதில்வரள்சிலை செகுசெகுசெகுவென
பரிவுடனேயொளி நகுநகுநகுவென.
மெல்லியர்மயல்கொள் வார்த்தைகள்பேசி
மேட்டிமையுடனெயிற் றைகளைவீசி. (மதன்)



௩. வாரிதிகோஷ்டமென்ன - முரசதாக்குமி
வாருகுபணிலஞ்சின்ன காகளங்கள்முழங்க
நார்தன்வீணையிட்ட சாமரம்வீசி
நல்நகையர்கள்சோபன மங்களங்கள்படிக்க
நாமகளும்புகழவே - இந்திராணிபுகழ் —
நாவலரேகவிமாரிகள் தூவிட
பூவையரேசிலர் ஆதுக ளோவிட
மாவுகளேகரியா ஆமுலாவிட
காவலரேசிலசாமரம் வீசிட
நாரணனுந்திப் பூவினில்வந்த
நான்முகன்போது மூல்லாசமிகுந்த (மதன்)

பொது விருத்தம்.

மன்னன்னிருக்தனு மிவ்விதமாய்ச்சொர்ன
மாளிகையிற்புக்கியனு தினம்வாயோயா
பன்னுமறைசாத்திரங்கள் கலைக்ஞானங்கள்
பாஷைபதினெட்டுசிதம் பாராட்டாமல்
சொன்னசொல்லைகாலுமுறை சொல்லிக்கொண்டு
தூங்குமஞ்சனத்தின்மிசை துயிலும்போது
தன்னுடையமனைவிதங்கப் பதுமைபோலும்
சசிவர்னருக்குமியுந் தான்வந்தாளே,

வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்தமகாராசன் தனது அரண்மனையிலே வந்து தூங்குமஞ்சனத்தில் துயில்கிறபோது அவன் மனைவியாகிய ருக்குமிதேவி வருகிறவிதங்காண்க.

ருக்குமி வருகிற தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்திட்டாள்சற்குண ருக்குமி தேவி - வை
வந்திட்டாள் சித்தசன்மைந்தனுக் காவி

அநுபல்லவி.

வந்திட் டாள் - மன்மதன்மகனை
மணைந் திட்டாள் - காதலிக
குணர்ந்திட்டாள் - ரூபசவுந்தர
- மிகுந்திட் டாள் - வாலிபவயதுள
மானெனும்விழியினள்
தேனெனுமொழியினள்

மதாகிபாங்கினள்
சதிபழிநீங்கினள்
மழைமுகிலதைநிகர் - குழலுமலுங்கிட
மாந்தர் புகழ்ந்திடத் - தீர்ந்திடுதாளம்
தகடகதிகடக திகடக ஜெம்தரி
தாம்தெய்யத்தெய்த் தளாங்குதோமென (வந்திட்)

சரணங்கள்.

௩. வாதித்தாள்சகிகளுடன் விளை யாட்டம் - நல்ல
சாதித்தாள்சங்கீதவித்தையி னோட்டம் - அவள்
சோதித்தாள்மதனகலைஞானசிரேஷ்டம் அதைப்
போதித்தாள்மதாதிக்கிசைந்திடும்தேட்டம் அவள்
வேதித்தாள் நாதத்தினையும்சுர
ஸ்வதித்தாள் கேசயில்வைத்திசை
நாதித்தாள் வீணையைநயமுடன்
போதித்தாள் சதிசுதன்மகிழவே
மதியமுகத்தினள்
அதிசுகத்தினள்
மாகதமெய்யினள்
அறமிடைகயினள்
மட்டுளநெற்றியிற் - பொட்டுப்பளிரென
மன்னர்புகழ்ந்திட மின்னிடுதாளம்
தின்னகு டின்னகு
திங்குகு தோமென. (வந்தி)

௪. பாலுக்கேநமுவுசெவ்வாய்ச் சொற்றேஜொறன்ன - உடல்
மேலுக்கேபூசுசவ்வாது குடிசொன்ன - இரண்
டோலுக்கேமோதிரச் சுடர்கள்பளிசொன்ன - இரு
காலுக்கேபூண்டசதங்கை கலிசொன்ன - சுடர்
வேலுக்கே நிகர்விழிமிரளிட
ஆலுக்கே நிகர்வயிறிடம்விட
நூலுக்கே நிகரிடையசவளிட
பாலுக்கே நிகர்மொழியசரிட
பந்தாகளாடுவள்
விந்தைகள்தேடுவள்



பம்பரமாட்டுவள்
தம்புருமீட்டுவள்
பாடகபரிபுர - சோடினையாவிசிட
பாவலர்புகழவு லாவிடுதாளம்
தகடகதிகடக திகடகஜெம்தரி
தாம்தெய்யத் தெய்த்தளாங்கு தோமென.(வந்தி)

௫. வேசிக்கேமுக்கியமானது மோசம் - பரி
தேசிக்கேமுக்கியமானது பாசம் - நல்ல
வாசிக்கேமுக்கியமானது ரோசம் - வெகு
ரோசிக்கேமுக்கியமானது நாசம் - மக
ராசிக்கேமுக்கியமறநெறி
பூசிக்கே முக்கியநமையுதல்
சோசிக்கே முக்கியவருமைகள்
தோசிக்கே முக்கியவயதென
விதிவழிமுறைகளை
மதிதனிலெண்ணினள்
வேள்ரதிதாள்களை
யாழுகினைந்தனள்
விரகனுராகம் - அரமனைதேடியே
விந்தைமிருந்து அதிர்ந்திடுதாளம்
தாக்கிர்தக்கிட தீக்கிடக்கிரத
தாக்கிர்தக்கிட - த - தோமென. (வந்தி)

இதுவுமது-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

மதன்மைந்தனையாரி - ருக்குமிதேவி
வந்தாளேசிங்காரி

அநுபல்லவி.

சதுர்முகன்தன் பாரி - பார்வதிபுகழ்
சல்லாபகல் தாரி - மார்க்கமிருந்த
தையல்மீதினில்தேவர் - மய்யல்கொண்டுளம்வாட
கையின்வளைகள்சூர்ய - வெய்யல்சுடர்மூட (மதன)

சரணங்கள்.

௧. குயிற்போலும் குரலுங்கி - தாவடமாட
கொத்துச்சரங்கள் குலுங்கி

மயில்போலும்உடல் — துலக்கி - பிரதிவிம்பில்
வாய்சத்தினங்களை — யுலுக்கி - வானவர்மெச்சு
மாந்தளிர்க்கலையுந்தன் - சாந்திநெருநெனென
காந்தப்பொடியுஞ்சந்தனச் - சாந்துகமகமென்ன (மதன்)

௨. தங்கச்சரங்க — ளாலங்க - குங்குமக்கும்பலும்
தனங்கள்கொஞ்சியே — குலுங்க
செவ்வைவளைக — ளாலங்க - மூக்கினில்முத்துச்
சித்ரமூக்குத்தி — யிலங்க - அட்டிகையின்ன
செம்பவளவடங்கள் - கும்பமுலைபிற்சாட
சம்பள்ச்சகிமார்கள் - தம்பூரிசைகள்பாட (மதன்)

௩. அந்தப்பாடக — மலுங்க - பீலியலுங்க
அதற்றுஞ்சலங்கை — குலுங்க
சந்திரக்கொலுசு — மலுங்க - மெட்டியலுங்கத்
தண்டைவெண்டயம் — குலுங்க - மன்மதன்மெச்சும்
தனிமைமதாயிருந்த - கொழுநன்புகழைப்பாடி
அழகின்சுடரின்சித்ர - யெழிலின்மண்டபந்தேடி (மதன்)

## பொது விருத்தம்.

மாயவன்சுதனேயான மன்மதன்மைந்தனோடே
தூயருக்குமியுங்கூடிச் சாதயோக்கியஞ்சிலாக்யம்
ஞாயமாய்ச்செய்துகாம நலம்பலவடைந்துவாழும்
கோயிலின்மஹிமைச்சற்றே குவலயமறியச்சொல்வேன்

## வசனம்.

அகோதெப்படியென்றால் ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்குப் பேரனான அனிருத்தன் ருக்குமிதேவியோடு கூடிவாழுகின்ற அரண்மனையின் அலங்காரங்கள் எப்படியிருக்கிறதென்றால்.

## அகவல் ஆரபிராகம்.

அரிமகன்மைந்தன் அனிருத்தராசன்
உருவினுக்கிசைந்த உயர்தருக்குமியும்
இருவருங்கூடி யேகபோகமதாய்
மருவியே வாழும் மாளிகைமண்டபத்தின்
கட்டழகுதனைக் கவிஞனென்றெரிந்த
மட்டுமேபகரும் மார்க்கமேதென்னில்
வச்சிரப்பொடியால் வானவர்முனிவர்



மெச்சிடும்படிக்கு மேடையுண்டாக்கி
திங்களேபுகழச் சிறந்திடுங்கனகச்
செங்கலால்நளினச் சுவர்தனைவார்த்து
அந்தநற்சுவருக் கஞ்சவாணிகளை
தொந்தமாயிருக்கச் சொன்னத்தாற்பூசி
சூர்புகழ்ந்தோதுஞ் சொன்னமண்டபத்தில்
அறுபத்துநாலு அங்கணஞ்செய்து
சித்திரவேலை சிறந்திடமிகுந்த
உத்தமத்தூண்க ளொன்பதினாயிரம்
திட்டமாய்த்தூண்கள் சிரசிலுஞ்சுவர்மேல்
விட்டங்கள்தன்னை விந்தையாயேற்றி
விட்டங்கள்மீது வெறுக்கையாற்செய்த
சட்டங்கள்தன்னைச் சாந்தமாய்ச்சேர்த்து
சந்திரமயத்துச் சட்டங்கள்மீதில்
விந்தையாய்க்கனக வில்லைகளடுக்கி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னணிகள்
சித்திரவேலை சிகரமுண்டாக்கி
ஒளிவுடன்சிகர வுச்சியில்வச்சிர
பளிங்குடன்சுடர்கொள் பசும்பொன்துலங்க
சதுர்முகனுடைய தாபிதமமைந்த
மதன்மகன்விடுதி மாளிகைக்குள்ளே
செம்பொன்னாற்பலகை சித்திரவேலை
கம்பைகளணிந்த கதவுகளிலங்கும்
அறுபத்துநாலு அங்கணத்துள்ள
சொரூபத்தின்வகைகள் சொல்வதேதென்னில்
ஓர்மனைநிறைய வும்பர்நாட்டாவில்
மோர்நிகர்நிறத்து முத்துகளிலங்க
சிதேவிமகிமை சிறக்குமோர்மனையில்
பாதாளலோகப் பவளங்களிலங்க
அனகனும்மாதியும் மனமகிழ்ந்திடவோர்
மனைநிறைந்திடநல் மரகதமிலங்க
மருவிலாதிலங்கும் மற்றொருமனையில்
அரவவாய்மணிக ளதுநிறைந்திடவே
உச்சிதமாக ஒருமனையதனில்
வச்சிரமெனுஞ்சொல் வகைநிறைந்திடவே
தினகரனொளிதான் சிறந்திடுமற்றோர்

மணிநிறைந்திட வைடூரியமிலங்க
அதிவிதமாயோ ரங்கணம்நிறைய
மிதமிலாதொளிர்கோ மேதகமிலங்க
மஞ்சுசேர்ந்திடுமோர் மணிநிறைந்திடவே
ரஞ்சிதப்பொடிதா னழகாயிலங்க
அறைவதற்கரிதா மங்கணமொன்றில்
நிறையவுமிந்திர நீலமிலங்க
பேசுதற்கரிதாம் பின்னுமோர்மனையில்
நேசமாய்க்கனக நிதிநிறைந்திடவே
வன்னமதாயோர் மணிநிறைந்திடவும்
வெண்ணீறதுவும் விந்தையாயிலங்க
ஞானியர்சிந்தை நாட்டிடாதிலங்கும்
மாநிறநிதியோர் மனைநிறைந்திடவே
அருணநேர்சயன அரிவையர்வருந்தும்
இரணியநிதியோர் இடநிறைந்திடவும்
நிலைநேர்கலைகள் சித்ரவர்ணங்கள்
ஆயுதநிறையோ ரங்கணம்நிறைய
பட்டோடெளினப் பட்டாடைகளும்
இட்டாய்ச்சீன பீதாம்பரங்கள்
இவையொருபுறத்தி லெழிலொடுமிலங்க
அவைமகத்துவமோர் அங்கணம்நிறைய
அறுபத்திரு அங்கணத்துள்ள
திருவுலாமகிமை செப்பவோமகிமை
ஆயிரத்தெட்டு அண்டங்கள்தனையும்
மாயிருநூற்று இருபத்துநாலு
புவனங்கள்தனையும் புண்ணியங்களையும்
பாவசங்களையும் பருவதங்களையும்
தாங்கும்பலனும் தலைகளும்படைத்த
நீங்கிலாஆதி சேடனாயிரம்
வாயதுதனிலே வர்ணித்துச்சாற்றவும்
உன்னிதயெழிலா ருயர்ந்தமண்டபமுமே
அன்னலார்புகழும் அங்கசன்மதனும்
அலங்கதுய்மார்பில் அசைந்திடையிடையே
குறுங்குருக்குமியுங் கூடுமண்டபமே
அவிர்ந்திடுகித மதிர்வீணைவாத்தியம்



நவமணிச்சுடர்கள் நாடுமண்டபமே
பொன்குமிழ்பகட்டிகள் போதிகைத்தூண்கள்
ஒன்பதினாயிரம் உயர்ந்தமண்டபமே
புலவர்களுள்ளம் பூத்திடும்வாசம்
மலர்வகைமுழுதும் வயங்குமண்டபமே
சலவையுமிகுந்த சந்தனம்புனுகு
கலவைதன்வாசம் கமழுமண்டபமே
மயிலொயிலாதிதன் மருமகள்வளர்ந்த
குயில்களும்கிளிகள் கொஞ்சுமண்டபமே
மயில்கள்மானினங்கள் மாடப்புறாக்கள்
ஒயிலுடன்நடந்து உலாவுமண்டபமே
வித்தையும்ருத்ர வீணைதம்புரு
சத்தித்துவயங்கும் சந்திரமண்டபமே
பட்டடர்ந்ததுபோல் பச்சைத்தோரணங்கள்
கட்டியேவயங்கும் கனகமண்டபமே
மால்மனங்கொண்டு மருவிவாழ்ந்திருக்கும்
நால்ரெண்டுதிருமார் நளினமண்டபமே
இந்தமண்டபத்தி லின்னமுமநேக
சுந்தரமுண்டு சொல்லநேரமுமாம்
சொல்லரிதான சொர்ணமண்டபத்தில்
வல்லிருங்குமியுந்தான் வந்துநித்திரைசெய
தூங்குமஞ்சனத்தைத் தூரிதுடன்பார்த்து
தாங்கலாய்வலக்கை தலைதனைத்தாங்கி
சத்தியவாக்கியன் தம்பிரான்காந்தன்
நித்திரைமிகுந்து நினைவழிந்திருக்க
கண்டிருந்துமிமெய் கலங்கியேசெவ்வாய்
விண்டுதான்சொல்லும் விபரமேதென்னில்
அனுதினம்விடுதி அரமனைக்கிரவில்
வனிதைநானவரா வகைக்குமேநேர்தான்
சந்தனம்புனுகு சவ்வாதுவாடை
கொந்திடும்பன்னீர் குங்குமகஸ்தூரி
சாந்துநாடுமெந்தர் சாதித்தவம்பர்
காந்தனையிந்தக் கலவைகளணிந்து
மல்லிகைமுல்லை மருக்கொழுந்தலரி
அல்லிசெவ்வந்தி அழகுசெண்பகமும்
குங்குமகும்பம் குலையிருவாட்சி

கங்குமல்லிகையும் கற்பகப்பூவும்
மகிழ்சனையிந்த மலர்வகைபுனைந்து
சுகமுளவலம் தொகுகிராம்புடனே
பாக்குவெற்றிலைகள் பாகமாய்நின்று
தேக்கிய அறிவு தெளிவுபெற்றிலக
வேதவேதாங்கம் விளங்கியபுராணம்
நீதிலாக்கணிதம் சிறந்தகாந்திருவம்
அரியவித்தியாலம் ஆகாசகமனம்
இருமூன்றுசாத்திர மிலங்கியகண்டு
காமஅத்தியாயக் காருடத்தொழிலும்
சாமுத்ரிகக்கலை சகலமோகனமும்
அலியகம்பனமே அறுபத்துநாலு
கலைகளைப்படித்துக் காமநூன்முறையில்
பலன்களைபெருகப் பதங்களைப்பிடித்து
விலங்குகளுருக வீணையைமீட்டி
இப்படிச்சுகமா யின்பங்களுடனே
அற்புதஞ்செய்யும் அருமையைமறந்து
வனிதைநானிங்கு வருவதற்குள்ளே
துணியெலாமகற்றித் தூங்கமஞ்சனத்தில்
நித்திரைசெய்யும் நியாயகானறியேன்
கந்தனேபிராண காந்தனேமேலும்
நித்தியம்விரா கோமல்லாமல்
இத்தினம்சோம் எத்தமுமில்லை
காமிநான்செய்த கள்ளமும்என்ன
சாமிநான்செய்த தப்பிதமென்ன
இனியிடையேதும் என்பிராணநாதா
மனமறியாத வஞ்சனையில்லையே
எனக்குநேர்கை தந்திட்டநான்முதலாய்
சுதனத்தில்நான்வருமுன் சயனித்ததில்லையே
இருவருங்கூடி யோகபோகமதாய்
மருவியேகாம வாதைதீர்த்தப்பால்
நித்திரைசெய்யும் நீதியல்லாமல்
இத்தனைசெய்கை என்னகாரணமோ
நிலமிசைநானே நின்றுபார்ப்பதுவும்
நலமில்லையென்று நறுமலர்பாவும்
தாரியேபிடித்துத் தூங்குமஞ்சனமீ



தேறினாள்உசித விரதிசெய்விரக
தாபமேதணிக்கும் சரசவுல்லாச
நீபமேநிகர்த்த செய்யருக்குமியே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வெகு அலங்கிர்த கோலாகலமா யிருக்கிற சொர்ண மண்டபத்தினுள்ளே ருக்குமிதேவி வந்து பார்க்கிறபோது தனது பிராண நாயகனான அனிருத்த மகாராசன் தூங்குமஞ்சனத்தின்மீதே படுத்துநித்திரை செய்வதைக்கண்டு சொல்லுவாள். வாரீர்பிராண நாயகா நீர் என்னைக் கைக்கொண்ட நாள்முதல் இதுவரைக்கும் அடியாள் விடுதிமாளிகைக்கு வருதற்கு முன்னமே வேதசாத்திர புராணாதிய தத்துவநீதிகலைஞானசாத்திரங்களும் சங்கீதசாமுத்திரிக கோக்கோக நூன்முறைகளும் சிலநேரம் படித்து வீணை வாத்தியஞ் செய்து புனுகு சவ்வாது கலவை அணிந்து புஷ்பஞ்சூடி என்னுடனே சிலநேரம் விளையாடிப் பிறகு நித்திரை செய்கிறவர் இன்றைக்கு இது வொன்றுமில்லாமல் நித்திரை செய்கிற காரணம் யாதோ தெரியவில்லையே என்னாலே யாதொரு குற்றம் குறை நடந்ததுண்டோ என்று ருக்குமிதேவி வியாகூலப்பட்டு பிறகு நிலத்திலே நின்றிருப்பது சரியல்லவென்று தூங்குமஞ்சனத்தின்மீது பாய்ந்தேறுகிற விதந் தாண்க.

ருக்குமிதரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

புல்லவி.

ஏறினாள்சித்ரத் தூங்குமஞ்சனமீது
எழிலின்மீறிய ருக்குமியெனுமாது

அநுபல்லவி.

கூறினாள்நித்ராதேவியின்மேலொரு நீது
கூடினாள்கையிரண்டு சங்கிலி மீது
கொங்கைகுலுங்கவும் நகையிலங்கவும்
மலர்நலங்கவும்உடல்துலங்கவும் சுதனம். (ஏறி)

சரணங்கள்.

க. பஞ்சபூதங்களஞ்சு தடித் திட
பாவையாள்வல நயனந்துடித் திட
செஞ்சொலாள்கலைவாணிசெடுத் திட
திங்களான்ற முகமுங்கடுத் திட
செக்கச்செவந் திடு
மிகற்கவிழ்ந் திட

கலை அவிழ்ந் திட
இடை துவழ்ந் திடகூதணம். (ஏறி)

௨. நித்ரைக்கேயிருகண்களுதைந் திட
நித்தைக்கேயிருதோள்களதிர்ந் திட
பித்தத்தின்மூழ்கித்தலையுங்கனத் திட
பேச்செழாமலேவாயும் புதைந் திட
குழல்பிதிர்ந் திட
மலருதிர்ந் திட
வளையதிர்ந் திட
முலையதிர்ந் திடகூதணம். (ஏறி)

௩. தூணின்மாமண்டபத்தில் நீசென்றுமே
தூங்குவதென்ன காரண மென்றுமே
காணவேணுமென்று புகர்ந்துமே
காமருக்குமியெனும் வச்ரக் குன்றுமேகாவில்
கலசவெண்ட யம்
கொலுசுபாட கம்
ஓலிசதங்கை கள்
கலகலென்றிட்கூதணம். (ஏறி)

**போது சிங்கார பந்தியம்.**

சத்யவாசகமதே தவாதருக்குமி
சையோகமதனிலே சாசருக்குமி
வித்தியாம்பத்தில் மேலானருக்குமி
வேதசாஸ்திரங்களை வினவுருக்மி
அத்தையோதியாக மாமனேமதனுக
அதிகயோகமுமீறு மழகுருக்குமி
இந்ரமேபுகழ்கின்ற சிங்காருக்குமி
தெய்வஸ்திரீமார்க்கெலாம் திலகருக்குமி
சஜுதுடனேதூங்கு மஞ்சணமீதேற
கல்லுறும்பிராண நாயகனுமானன்
மலரணையின்நித்திரை மருகதினாலே
இவ்விதழின்வாய்திறந் தியம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவி தூங்குமஞ்சத்திற் பாய்ந்து வந்தும் அந்த அரவத்திலும் அனிருத்தமகாராசன் எழுந்திராமல் தூங்குவதைக்கண்டு ருக்குமிதேவியின்னுஞ்சொல்லுகிறதெப்படியென்றால்.



ருக்குமி விருத்தம்.

ரதிபயந்தபாலகனே சொல்லக்கேளாய்
ரணமுகத்திற்கேகவு மஞ்சுதல்சூதாடல்
அதிநித்திரைகொலைகளவு பகற்சம்போகம்
அடுத்தவரைக்கெடுத்தலயற் பொருளைவேண்டல்
இதுவிதங்கள்நலமென்றெண்ணி நடப்போர்தன்பால்
இந்திரைநில்லாள்மூதேவி யிருப்பாள்போகாள்
மதிமயங்கிவயதுகுறைந் தழகுதேய்ந்து
வாழ்வுகெடுமென்றுமனற வழுத்துரையா.

வசனம்.

வாரும் ரதிதேவியின் மகனான எனது பிராணநாயகரே! சமர் முகத்தைக்கண்டபின் அஞ்சியொழிவதும், சூதாடல், அதிகநித்திரை, கொலை, களவு, பொய்பேசுதல், காலைநேரத்தில் புணர்ச்சிசெய்தல், விசுவாஸத்துரோகம், இவைகளை நன்மைகளென்று செய்துவருவோரிடம் இலட்சுமி யிருக்கமாட்டாள், மூதேவிவந்து குடியிருப்பாள், அவர்களுக்கு வயது குறைந்து வறுமையுண்டாய், அறிவு மழுங்கி அழகுபோகும் என்று வேதசாத்திரஞ் சொல்லியிருக்க நீரறிந்திருந்தும் இப்படிப் பெருந்தூக்கந் தூங்கலாகுமோ வென்று ருக்குமிதேவி யானவள் பின்னுஞ்சொல்லுகிற தெப்படியென்றால்.

ருக்குமி தரு-இ-ம்-பந்துவராளி-ரூபகதாளம்.

பல்லவி.

துரையே யெழுந்தருளுமே - தூக்கந்தெளிந்து
துரையே யெழுந்தருளுமே

அநுபல்லவி.

நுரையே யெனதுமோகச் சிரையே தகர்ந்திடவே
முறையே தம்பலரச இறையே நுகர்ந்திடவே (துரை)

சரணங்கள்.

௧. சிட்டி-ரவிக்கைமேல்-கைநீட்டி விலக்கியே கண்
காட்டிக்-கும்பதனப்பா-லூட்டி யணுங்கியே மலரை
சூட்டிச்-சிரசைப்பிடித்-தாட்டிக் குலுங்கியே குரல்
நீட்டி-மதனகாமக்-கோட்டி செய்திடநல்வேளை (துரை)

௨. சுத்துஞ்-சுழலுங்கலைப்-பித்தம் அதிர்ந்திடவே
சித்தம்-சரிவற-வொருமுத்தந்-தந் திடவுமே
சுத்தம்-இல்லாமலென்மேற்-பத்தம்-வந் திடவுமே
நித்தம்-போலவுஞ்-சரசசத்தம்-கொடுத் திடவுமே (துரை)

௧. தாமரை-மலரினிறந்-தானை-கூர்ந் திடுமனத்
தானை-மயூரத்தொயி-லானை லட்சுமிகரத்
தானை-மெச்சினீ-ரிந்தவேளை-வேலை நிகர்ந்த
....-பிடித்தணைக்க-மாமைச் சித்திரம்போல (துரை)

வசனம்.

இப்படியாகச் சொல்லியெழுப்பவும் எழுந்திராமல் அனிருத்த மகாராசன் அதிக நித்திரையாயி ருப்பதைக்கண்டு பின்னும் சொல்லு கிற தெப்படியென்றால்.

நுத்தமி விருத்தம்.

வையகமெலாம்புகழ்வேள் பாலாகேளாய்
மாலையிட்டகாந்தனயர்ந் துறங்கும்போது
மெய்யதனைத்தொட்டெழுப்பல் ஆண்மைபேசல்
மித்திரங்கள்தானுரைத்தல் வீம்புகாட்டல்
பொய்யதனைப்பாராட்டல் போர்தான்செய்யல்
புத்தியதுபோம்வழிநான் போவேனென்னல்
கையதனைநீட்டியெதிர் நின்றுபேசல்
கற்புடையமாதர்தனக் கடுக்காதன்றே.

வசனம்.

வாருமையாசுவாமி மன்மதகுமாரனே! புருஷனானவன் படுத்து நித்திரை செய்கிறபோது கைகளினால் தள்ளித் தட்டியெழுப்பி விடுவதும், நம்மைபோலே கெட்டிக்காரியில்லையென்று வீரம்பேசுகிறதும், மித்திரபேத வார்த்தைகள் சொல்லுகிறதும், வீம்புபேசுவதும், பொய்பேசுவதும், சண்டைசெய்வதும், மனம்போனபடி யெல்லாஞ் செய்வதும், உத்தமிகளாகிய கற்புள்ள மாதர்களுக்கு அழகல்லவே சுவாமி.

நுத்தமி-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி அடதாளம்.

பல்லவி.

நரகஞ்சேர்ந்திடுந்தொல்லையே
வருவதல்லால்
தூங்கிடும்பேரைத்
தட்டியலட்டி
பேசிடும்பேர்க்கு
நல்லபதவியில்லையே.

அநுபல்லவி.

செருநண்சேர்ந்திடுங் கொல்லையே



உழுதபயிர்
செய்திடும்பேர்க்கு
மூவர்விளங்கும்
சாஸ்திரமுறைமை
செலுத்துமாந்தர்கள் சொல்லையே - தள்ளினபேர்க்கு
சின்னவயதின்சிசு தன்னைக்கொன்றிட்ட பேர்க்கு
அன்னைதந்தையின்மனம் குன்றவைதிட்ட பேர்க்கு
வின்னஞ்செய்திடமறு கன்னியைத்தொட்டபேர்க்கு
அன்னமிட்டவர்வீட்டில்கன்னம்வைத்திட்டபேர்க்கு (நா)

சரணங்கள்.

௧. மண்ணிற்கற்புள்ளமாதுக்கே
இடறுண்டாக்கும்
புருஷருக்கும்
தன்மையுஞ்சத்யம்
தவறுந
மகிழ்நன்றன்னுடன்வாதுக்கே - எந்நேரமும்
நின்றபெண்ணுக்கே தூதுக்கே
சென்றவர்தம்மை
கொன்றவருக்கும்
பிரத்தியார்கள்
நிதிகள்மேற்கை
நீட்டித்திருடுந் தோதுக்கே - சென்றவருக்கும்
நீலக்கலந்துபிள்ளைப் பாலையீந்திடும் பேர்க்கும்
மாலவன்றினத்தில்ஸ்திரீ சீலைவாய்ந்திடும் பேர்க்கும்
காலைவந்தபின்சந்தியா வேலைசெய்திடும் பேர்க்கும்
தாலியிழந்தபெண்மெய்மேலேபாய்ந்திடும்பேர்க்கும் (நா)

௨. சாத்வீகக்குருந்துபோகமே
செய்திடும்பேர்க்கும்
வழக்கிலோரம்
சொல்கின்றபேர்க்கும்
பொய்ச்சாட்சியோர்க்கும்
தையலர்மேல்வைக்குமோகமே - தள்ளவொண்ணுமல்
மூர்க்கத்துடனும் யோகமே

செய்திடும்பேர்க்கும்
நம்பியடுத்த
வேழைகள்தன்னை
கெடுத்தபேர்க்கும்
முழுதுங்கர்த்தத்துரோகமே - செய்திடும்பேர்க்கும்
மூத்தோர்கள்வார்த்தையைக் காற்றில்தூற்றிட்ட பேர்க்கும்
சோற்றிலேபாஷாணம் வைத்தூட்டிக்கொன்றிட்டபேர்க்கும்
ஆற்றில்அம்மணத்துடன் நீந்தற்கேற்பட்ட பேர்க்கும்
போற்றுந்தெய்வச்சிலையைப் பேர்த்தெறிந்திட்ட பேர்க்கும் (நா)

௩. பொருந்தும்விரதமும்சாவுக்கே
சிந்தைகொடாதோர்
தாரமதான
மங்கையைச்சேர்ந்தோர்
பன்றியைத்தின்றோர்
புல்லைமேய்ந்திடுங்கோவுக்கே - வாதுகொடுக்கும்
பெருந்துன்பமெனுநோவுக்கே
மருந்திடாத
பண்டிதருக்கும்
வேசியர்கூலி
கொடாதபேர்க்கும்
பிராணனேகிடும்சாவுக்கே - விசனஞ்செய்தோர்
பில்லிசூனியம்வைப்பு சல்லியங்கள் படித்தோர்
நல்லவிலங்குகள்மேல் வில்லம்புகள் தொடுத்தோர்
புல்லரினங்கள்சேர்ந்து கள்ளுமது குடித்தோர்
நல்விதந்தைக்குருவைக் கொல்லத்துணிந் தடுத்தோர் (நா)

வசனம்.

வாருமையா சுவாமீ! தூங்குகின்றவர்களைத் தட்டியெழுப்பின பேர்க்கும், சிசுகத்தி பிரமகத்தி கோகத்தி முதலியதுசெய்திடும்பேர்க்கும், நரகம் கிடைப்பதேயல்லாமல் சொர்க்கங் கிடைப்பதில்லையென்று வேதசாஸ்திரங்களெல்லாம் கூறுகின்ற படியிருலே, நானினியென்செய்வேன் பிராணநாதா.

ருக்துமி விருத்தம்.

சேற்றடர்ந்தநீருந்தல் இடங்கள்சேர்தல்
சுமைசுமத்தல் இளமிசைக்கல் சிரங்குளித்தல்
மூத்தபெண்சம்போகம் பலஸ்திரீகைச்சோறு
முண்பதுவுமோயாமல் நடையுமோடல்
ராத்திரிபுபவாசம் நித்திரைக்கெடுதல்யாவும்
ராசருக்குநேரிதல்ல நேரேயானால்
நேத்திரத்தில்வினையுண்டாம் தேகந்தானே
நோக்கேட்டுப்பலன்கெடுநோய் நேருந்தானே.

வசனம்.

வாரும்சுவாமி! சேற்றுநீர் குடிப்பதும், அசுத்தமான இடங்களில் சேருவதும், அதிக சுமை சுமப்பதும், அக்காலத்தில் ஸ்நானஞ்செய்வதும், தனக்கு மூத்தவயதுள்ள மாதர்களைப் புணர்வதும், பல ஸ்திரீகளிடத்தில் சோறுண்பதும், ஓயாதவழி நடையும், ஓடுவதும், இராப்பட்டினி யிருப்பதும், நித்திரை கெடுவதும், இராசாக்களுக்கு நேரான காரியங்களல்லவே; இக்காரியங்கள் செய்தால் நேத்திரங்களுக்கு விபத்தியுண்டாவதுமன்றி, உடலும் நோய்ப்பட்டு ஆயுளுங் குருகுமென்று, தத்துவ சாஸ்திரஞ் சொல்லுமையா சுவாமீ!

ருக்துமிதேவி வீணைவாசிக்கிற
தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

சரி - கம - பத - நிச - சநி - தப - மக - ரிச
சங்கீதச் சாளிபாராட்டினாள் - நல்ல
சாசருக்குமி வீணை மீட்டினாள்.

அநுபல்லவி.

குரகமலர்ப்பூவைக் கிளிகள் கோகிலம் புறாக்
குயில்கள் வெருவத்தொண்டை நீட்டியே - கிள்ளை
கொஞ்சுந் தொண்டையிற்சுதி கூட்டியே - சநுதாய் (சரி)

சரணங்கள்.

௧. கனகரத்னவளைகள் கைகள்மீதிலுராஞ்சிக்
கலகலகலகலென் றுடவே - மிகக்
காமக்ரோதங்கள் தன்னைச்சாடவே
அனகன் ரதியும்பெற்ற அழகுமைந்த னுடலில்
அகமகிழ்ந் தணைந்துதான் கூடவே - பின்னும்
அளவில்லாச் சுகிர்தங்கள் தேடவே - சநுதாய் (சரி)

௨. மாருதியுஞ் சுழன்றோடாமல் மண்ணில்
மரம்போலும் நின்று தத்தளிக்கவே - மீறும்
வடவைச்செந் தீபங்கள் தளிக்கவே

நாரதமாமுனி தேகம் நடுங்கவே
நாவும் வாயுங் கைகள் தத்தளிக்கவே - பின்னும்
நாலெட்டு ராகங்கள் ஒலிக்கவே - சனுதாய் (சரி)

௩. அடியாள் மனதுக்கேற்கும் அழகுகொண்டு பிறந்தாய்
அயனைப்போல் எளின வல்லாசனே - நல்ல
அறிவுந் திறமையுள்ள ராசனே
செடியி விரவுகாலம் வடிவுகொண்டு பிறந்த
செண்பக மலரெனும் மெய்வாசனே - சற்றும்
சினமில்லா தெனையாளும் நேசனே - யென்று (சரி)

போது சிங்நாரபந்தியம்,

அஷ்டமாநாகங்க ளெட்டுடன்தொடரவே
அண்டர்நாதன்மகிழ்ந் ததிசயிக்க
துஷ்டரே மனதுமிக வுருகவே புவியாளும்
துரைகளோதிமேல் துரிதமாக
இஷ்டமாய்ப்பூண்டிடும் வளைகள்பல்சுடராட
ஈரேழுயிரொன்ப திசைகளோடு
மெட்டுமேநாலாறு தந்திதானேரேழு
மேன்மையாய்க்கூட்டிடும் வீணைமீட்ட

அந்தஇசைதனிலும் மன்மதனாசன்
மைந்தனயர்நித்திரை மாறுதலாலே
சந்திரவதனங்கியெனுஞ் சாசருக்மி
சித்தையுருகியேபின்னும் செப்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள், ஸ்ரீருத்திரவீணையைக் கையிலேந்திக்கொண்டு சகல சீவராசிகளும் மோகமடையும்படியாக சங்கீதம் வாசித்தும், அனிருத்தமாராசன் நித்திரை தெளியா திருப்பதைக்கண்டு, பின்னுஞ்சொல்லுகிற விபரம் எப்படியென்றால்.

நந்துமி விருத்தம்.

நீண்டபிணியாதுமல்ல யாரோசெய்த
நிந்தனையல்லாமலிது நித்திரையல்ல
மாண்டபின்புநிலைமையிலார் கையில்தொடாத
மறையவர்க்கும் கற்புடையமாதருக்கும்



அண்டவர்க்கும்பசுக்களுக்கும் குருக்களுக்கும்
அரும்பிணிகள்வந்திடும்போ தாகமெல்லாம்
தீண்டியுயிர்க்காத்தல்கல மென்றேவேதம்
செப்புவதாலும்துமெய்யைத் தீண்டுவேனே.

வசனம்.

வாரும் மகாராசனே! இப்போது உம்மைக் குறிப்பாகப்பார்க்கிறபோது, உமக்கு வந்திருக்கிற இந்தத்தூக்கம் உண்மையான தூக்கமல்ல, வியாதிகளுமல்ல, யாரோசெய்த கைப்பிசகாகவே காணுகிறது தவிர உயிரிழந்துபோனபிறகும்,பிராமணர், பெரியோர்,கற்புள்ளவர், பசுக்கள், குருமார், தெய்வவடிவம் முதலியவர்கட்கு ஏதாவது ஆபத்துநேரிடும்போது கையினால் தொடுவது குற்றமல்ல, வியாதிகள் வந்தபோது தொட்டு அவுஷதங் கொடுக்கலாமென்று வேதஞ்சொல்லுகிறபடியால், நானும்மைத்தொடுகிறேன் நாதா.

நந்துமி தீபதை-இ-ம்-புன்னாகவராளி அடதாளம்.

கண்ணிகள்.

க. தூக்கத்தைக்கண்டிருமாந் திட்டாள் - சனுதாய்
தூங்குமஞ்சனமீதுட்கார் திட்டாள்

உ. சித்ரப்பொற்கிரீடத்தை வாங்கினாள் - மகிழ்நன்
சிரந்தன்னையிருகையால் தாங்கினாள்

௩. தலையைமெல்லெனச்சிறிதசைத் திட்டாள் - தனது
தங்கமடியின்மீதுவைத் திட்டாள்

௪. மோகனவஸ்திரத்தையுடுத் திட்டாள் - புருஷன்
முகமீதுதூசைத்துடைத் திட்டாள்

௫. பன்னீரிற்கைவிட்டு வாரினாள் - கையைப்
பத்தாவின்முகமெங்கும் பாவினாள்

௬. நிச்சளம்வெண்நாமம் தீட்டினாள் - புருஷன்
நெற்றியிற்றிலகமும் நாட்டினாள்

௭. சீதரன்மேல்மந்த்ரம் பாடினாள் - வித்தகன்
செவிதனிற்றுளசிகள் சூடினாள்

௮. அங்கையாற்கண்களை நீவினாள் - விரலில்
அழகாகப்புருவத்தைச் சீவினாள்

௯. கனகச்சிமிழின்மையைத் தொட்டனள் - காந்தன்
கன்னத்தைத்தீட்டிப்பொட் டிட்டனள்

௧௦. முருக்கிதழ்மேலங்கை தாங்கினாள் - மகிழ்நன்
முகத்தின்மேற்பன்னீரைத் தெக்கினாள்

௧௧. மாழைரேக்கணிக்குஞ்சம் வீசினான் - புருஷன்
மார்பினிற்சந்தனம் பூசினாள்

௧௨. அத்தர்புனுகுபன்னீர்களைத் திட்டாள் - புருஷன்
அங்கமெங்கினுந்தானேயிறைத் திட்டாள்

௧௩. சித்ரங்கள்போல்மார்பிலெழுத் திட்டாள் - புருஷன்
தேகமெங்கினுமலர்தெளித் திட்டாள்

௧௪. முந்தானைதனிற்றாசுதுடைத் திட்டாள் - மகிழ்நன்
முதுகைப்பொற்பனமாகப்பிடித் திட்டாள்

௧௫. கைகால்கள்முழுவதும் பிடித்தனள் - புருஷன்
கால்விரல்நெட்டை யெடுத்தனள்

௧௬. அத்தரின்கலவைகள் பூசினாள் - பின்னும்
ஆலவட்டங்களை வீசினாள்

௧௭. போதச்சிந்தவின்னிரை செய்தனள் - சலவை
பொங்கும்விதங்களெல்லாஞ் செய்தனள்

பொது சிங்காரப் பத்தியம்.

வான்களால்கனலதா வழிபடாதேகமழ்
வாசமேதோய்ந்திடும் மலர்களாலும்
தாள்விலாக்குங்குமம் பன்னீருமத்தரும்
சந்தனக்கலவையாந் தன்மையாலும்
நீள்குமந்திரமலால் நஞ்சுபாலாகவே
நீட்டிடுங்கைப்பாங்கு நிலமையாலும்
வேள்மகன்நித்திரை தெளியாதிருந்திடும்
வெண்மைகண்டேமாது விசனத்தாலும்
மன்னனனிருத்த னெழின்மார்பின்மீது
பொன்னனிர்மயூரமெனும் பூவைசாய்ந்து
என்னவிதமின்னமயா மிரைவமென்று
பின்னுமதிசோபமுடன் பேசுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக ருக்குமிதேவி யானவள், அந்த அனிருத்தமகாராசனை யெழுப்பும் பொருட்டு அநேகமானமுயற்சிகள் செய்து, சந்தனம் பன்னீர் வாரியிறைத்தும் சிறிதும் நித்திரை தெளியாமலிருக்கக்கண்டு, பின்னும் சொல்லுகிற மார்க்கம் எப்படி யென்றால்.



ருக்குமி-நந-இ-ம்-நாதநாமக்கிரியை - நபகநாளம்.

பல்லவி.

இன்னமும் நித்திரையே - தெளியார்
திருக்கலாமோ துரையே

அநுபல்லவி.

செங்கெல்புகழ்ந் தரையே - புகழுமுன்
தேவிமைபல் குறையே - இப்போ
தீர்க்கவுமேநல்ல நேரங்களாச்சுது
தேகமெல்லாம்வேர்வைவிரங்களாச்சுது
பார்க்கவுமேஸ்தனபாரங்கள் வாச்சுது
பட்டந்துத்தேவி பொய்பாரங்கள்போச்சுது. (இன்)

சரணங்கள்.

௧. அங்கையால் சிவினேனே - நேசகந்நன்னை
யன்புடன் நீவினேனே
குங்குமம் தூவினேனே - மெய்மீதினிற்
குஞ்சங்கள் வாவினேனே - இனிமை
அஞ்செவ்வாயிதழ் ஊரல்வறண் டேனே
குற்றமில்லாமலென் பத்தம்வெகுண் டேனே
நீராதெழும்பும கோரமும்விண் டேனே
நிரேகமும்வாடியே சோகமுங்கொண்டேனே (இன்)

௨. கெந்தங்கள் பூசினேனே - பதங்கள்சங்
கீதங்கள் நேசினேனே
சந்தங்கள் பேசினேனே - விசிறிகள்
சாய்மாம் வீசினேனே - பின்னும்
சாமியுன்மீதினிற் பூமழைபெய்த் தேனே
தாவிக்கைகால்களை நீவிக்கைபோய்த் தேனே
காமவிகாரத்தில் சேமமுக்தேய்த் தேனே
கைகால்முகந்தானும் மெய்யினைமேய்த் தேனே (இன்)

௩. ஆணவம்விட்டிட் டேனே - உந்நன்சந்நி
ஆனனம்தொட்டிட் டேனே
வீணையைமெட்டிட் டேனே - என்தனிட
வேடிக்கைகட்டிட் டேனே - பிரமிக

வேதனையாகவே தாது கதிக்குது
வீணுமதன்கணை கோணுது தைக்குது
தீதுடனேபாஞ் சோதி சதிக்குதே
தேவியுள்ளங்கரைந் தாவி கொதிக்குதே (இன்)

போது வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள் அதிக துயரமடைந்து பிரலாபிப்பதைத் தூண்மறைவிலேயிருந்து பார்த்துக்கொண்டிருந்த சித்திரரேகை யோசனைசெய்யப்பட்ட தெப்படியென்றால்.

போது விருத்தம்.

தாரணிதன்பேத்தியுடை வடிவுஞ்சொல்லும்
சஞ்சலமும்பார்த்தினிநாம் சாலஞ்செய்தால்
சூரியன்வந்துதிப்பனென்று மனதிலெண்ணி
தூக்கந்தெளிவாக மந்த்ரஞ்சொன்னாள்தோழி
சோணியுமாரனருன் மகன்றானித்ரை
சீக்கிரத்திற்றெளிந்தெழுந்தே யிருக்கும்போது
வாரணிந்தனைத்தினைராம் ருக்குமிதேவி
மலர்ப்பதத்தில்வீழ்ந்திறைஞ்சி வருந்துவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவி படுகிற துயரத்தைக்கண்டு தூண்மறைவிலிருக்கிற சித்திரரேகையானவள், அனிருத்தமகாராசன் தூக்கந்தெளியும்படி. ஓர்மந்திரஞ் செபித்தாள், உடனே எழுந்திருந்தான். அவனைப்பார்த்து ருக்குமிதேவி சொல்லுகிற தெப்படியென்றால்.

ருக்குமிதேவி-விருத்தம்.

அஞ்சுகணையான்மகனே சொல்லக்கேளாய்
அன்னமமுர்தந்தினம் நீர்தானுண்ணாமல்
பஞ்சவர்ணக்கிளிகளொடுந் தான்பேசாமல்
பதங்களொடுவீணையிசை பாராட்டாமல்
மஞ்சனத்தின்மீதிருந்து கலவைபூசி
மலரணிந்தளென்னுடனீர் மருவிடாமல்
வஞ்சிமனமஞ்சிவல நயனந்துன்று
மாறுதித்தாசெய்தவிதம் வழுத்துவீரே.

வசனம்.

அகோவாருஞ்சுவாமி பிராணநாயகா! நீர்இன்றையத்தினம் அநுதினம்போடு கூடிய சிற்றுண்டிக ளுண்ணாமலும், பஞ்சவர்ணக்கிளிக



ளோடு பேசாமலும், பதம்படித்துவீணை மீட்டாமலும், சந்தனபுஷ்பங்கள் அணிந்து என்னோடு விளையாடாமலும், எனக்கு வலக்கண் துடிக்கும்படியாக மாலை நேரத்திலே தானே நீர் மெய்மறந்து தூங்கிவிடக் காரணம்யாதோ சொல்லுமையா சுவாமி.

அனிருத்தன் சொல்தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

ஜயருக்குமிப்பெண்ணே - எனதுபிராண
தேவிமான் . கண்ணே

அநுபல்லவி.

நயசர்க்கரைத்தீனே - மிகுதித்திப்புள்ள
நறுநெய்படர்தேனே - கேளும்பெண்ணே
நானேயுனதாசை நீங்கில்லை
வானேபுவியேசுர் தீங்கில்லை
மானேயெனதாவி யேங்கில்லை
வீணுகநானுந் தூங்கில்லை. (ஜய)

சரணங்கள்.

க. நவரத்னவொயிலே - மின்னொளிர்மெய்மே
னகைமெச்சியகுயிலே - மாணிக்கங்களை
கவுஞ்சித்திரமயிலே - சைலராக
கனகப்பொற்குயிலே - கேளும்பெண்ணே
கண்ணிரண்டினிற் புனல்கள் சொட்டிடும்
விண்ணின்மதிமுக வண்ணங் கெட்டிடும்
உண்ணும்வாய்நின் னுணர்வு கெட்டிடும்
எண்ணமென்பது தன்னை விட்டிடும். (ஜய)

உ. ஐசுவரியப்பயிரே - தவர்புகழ்தேவர்
அமுர்தூறுந்தயிரே - திரவிளைந்த
வயிடூரியக் கயிரே - பூணுவில்மாரன்
மைந்தன்ஆருயிரே - கேளும்பெண்ணே
மல்லும்மகத்துவம் மௌனம் பூணனே
நல்லவகைப்பொருள் நவில நாணனே.
செல்லும்நித்திரை யாச்சென் பிராணனே
சொல்லும்பழிகளின் மீதிற் காணனே. (ஜய)

ஓதும்நான் மகளே - காணவுஞ்சொல்வேன்
உன்னைநானிகழேன் - வாலவயதின்
மாதர்தன் புகழே - வேண்டிவயங்கும்
மதன்மரு மகளே - கேளும்பெண்ணே
மந்தியங்களென மனதுதனிலில்லை
சத்துராதிக ளாலும்பயமில்லை
குற்றமானதுன் மீதுதனிலுமில்லை
நித்திரைபோனதி னாலும்வினையில்லை. (ஐய)

அநிருத்தன் விருத்தம்.

தூக்கமதிற்றீங்கில்லையென் மாதேவுந்தன்
தோளுடன்வலக்கண்ணும் அடித்திட்டாலும்
ஆக்கினைகள்நம்மவர்க்கு எதுவந்தாலும்
அரும்பிணிவந்தாலுமதை யன்பாய்த்தீர்க்கப்
பாற்கடலிற்பள்ளிகொண்டோன்றானேநம்ம
பாட்டனுமாயமைந்திருக்கப் பயமேயில்லை
சீக்கிரத்திலறுசுவைப் பதார்த்தம்பால்நெய்
தீனிகொண்டுவருவாய் தாமசஞ்செய்யாதே.

வசனம்.

அகோகேளும்பெண்ணே என்பிராணநாயகியே! என்மீது யாதொருபழி பாவங்களும் குற்றங் குறைகளுமில்லை, நான் யதார்த்தமாக நித்திரை செய்ததே யல்லாமல், வேறே மாறுபாடுகள் ஒன்றுமில்லை, நமக்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாகிய ஆதிநாராயணனே பாட்டனாராகக் கிடைத்திருக்கும்போது, நாமொன்றுக்கும் அஞ்சவேண்டியதுமில்லை. ஆகையினால் இனி நீ சீக்கிரஞ்சென்று கார்ப்பு, உப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்னும் அறுசுவைகள் கூடிய அன்னபட்சண பாயாசவகைகளெல்லாங் கொண்டு வருவாய் என்பிராணநாயகி!

ருக்குமி வசனம்.

அப்படியே நல்லதய்யா என் பிராணநாதனே.

ருக்குமி அன்னம்பரிமாறுகிற திபதை.

இ-ம்-புன்னாகவராளி ஆதிதாளம் (நதவுதிறக்கிறபாட்டுமெட்டு.)

கண்ணிகள்.

க. பதிபாசமாகவேதான் பதிதேவிபாலனுக்குப்
பணிவிடைசெய்யத்துடங்கினாளே - ருக்மி
பணிவிடைசெய்யத்துடங்கினாளே.



உ. சந்திரப்பலகைமீது சந்திரப்பதுமைபோல
சம்மணங்கூட்டியிருந்தானே - காந்தன்
சம்மணங்கூட்டியிருந்தானே.

௩. இருக்கும்பிராணகாந்தன் முன்தங்கக்கலங்களை
இனிமையுடனேயமைத்தாளே - ருக்மி
இனிமையுடனேயமைத்தாளே.

௪. முக்கனியதிரசம்சக்கரைதேன்குழல்
முன்தங்கத்தட்டிற்படைத்தாளே - ருக்மி
முன்தங்கத்தட்டிற்படைத்தாளே.

௫. பாலொருபொற்கிண்ணத்தில் தயிரொருபொற்கிண்ணத்தில்
பாங்குடன்நிறைத்துவைத்தாளே - ருக்மி
பாங்குடன்நிறைத்துவைத்தாளே.

௬. சனுதாய்வெள்ளிக்கிண்ணத்தில் பெருங்காயங்கரைத்திட்ட
சாற்றின்வகைகள்நிறைத்தாளே - ருக்மி
சாற்றின்வகைகள்நிறைத்தாளே.

௭. ஒப்பட்டும் ஆமவடை மோர்குழம்பாதியெல்லாம்
உவகையுடனேபடைத்தாளே - ருக்மி
உவகையுடனேபடைத்தாளே.

௮. சன்னச்சம்பாவரிசிதன்னாலே தும்பைப்பூப்போல்
சாதத்தையதிற்படைத்தாளே - ருக்மி
சாதத்தையதிற்படைத்தாளே.

௯. நெய்யிற்பொரித்தபல பலகாரம்பாயசம்
நேர்த்தியுடனேபடைத்தாளே - ருக்மி
நேர்த்தியுடனேபடைத்தாளே.

போசனஞ்செய்கிற-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

சாதிக்கத்துடங்கினாரே - இரண்டுபேரும்
சாதிக்கத்துடங்கினாரே.

சரணங்கள்.

க. மனதிரண்டுமொன்றாகக் கனகக்கலத்திலே
மாவகைதின்றனரே இரண்டுபேரும்-மா.

௨. அப்பளமதிரசம் முப்பழந்தேன்குழல்
அன்புடன்தின்றனரே இரண்டுபேரும் - அ.

௩. சார்முளபாலொடு சக்கரைபொருந்தவே
சாதம்நுகர்ந்தனரே இரண்டுபேரும்-சா.

௪. கனகவட்டிலொன்றில் மனதிஷ்டமாகவேதான்
காய்வகைதின்றனரே இரண்டுபேரும் - கா.

௫. ஒருமனதாகவேயிருவரும் பால்சாதம்தயிர்சாதம்
ஒருகலந்தனிலுண்டாரே இரண்டுபேரும்-ஒ.

௬. மன்னன்கைத்தேன்சாதம் மாதுதலையசைத்து
மனதிசைத்துண்டாரே இரண்டுபேரும்-ம.

௭. தயிரொன்றும்பாலென்றும் மயமாகவேசாதம்
சம்பிரமாய்நுகர்ந்தனரே இரண்டுபேரும்-ச.

௮. ஆனஅறுசுவைகள் தேனுடன் [சாதித்தாகி
அன்புடனெழுந்தனரே இரண்டுபேரும்-அ.

௯. இன்னேரந்தன்னிலே கைகள்கழுவியே
இஷ்டமுடனிருந்தனரே இரண்டுபேரும்-இ.

௰. ஒய்யாரமாகவேதான் சொர்னக்குரிச்சிமீதி
லுட்காந்துகொண்டனரே இரண்டுபேரும்-உ.

௧௧. காரங்களுங்குளிர ஆயாசங்களொதுங்க
கவரிகள்வீசினரே இரண்டுபேரும்-க.

௧௨. பன்னீர் சந்தனம் புனுகு கஸ்தூரி அத்தர்கள்
பாகமாய்ப்பூசினரே இரண்டுபேரும்-பா.

௧௩. மல்லிகைமுல்லை யிருவாட்சி செண்பக
மலர்வகைசூடினரே இரண்டுபேரும்-ம.

௧௪. தன்மையுடனேதானே கணமதிலேசிரேஷ்ட
தாம்பூலந்தின்றனரே இரண்டுபேரும்-தா.

பொதுவசனம்.

இந்தப்பிரகாரம் இரண்டுபேரும் ஏகபோகமாக தங்கவட்டலில் அறுசுவையோடுகூடிய உணவுகளைச்சாப்பிட்டு உல்லாசமாயிருக்கிற தெப்படியென்றால்.



அனிருத்தன்-ருக்குமீ-விருத்தம்.

பெண்ணாசேகிளிகளுக்கு அமுதமூட்டி
பெருங்கதவின்றுட்டாளைப் பூட்டிவாராய்
வண்ணமுள்ளகிளிகளுக்கு அமுதமூட்டி
மாணிக்கத்தாள்பூட்டி வந்தேன்ஸ்வாமி
கண்ணாசேசொர்னநகை தனியாய்ப்பூட்டி
கருந்துகிலைத்தானுடுத்தி வருவாய்கண்ணே
சொன்னமட்டுஞ்சொர்னநகை சரியாய்ப்பூட்டி
சேலைகருப்பாயுடுத்தி வந்தேன்சுவாமி

ருக்குமீபள்ளியறை-ஜோடிக்கிற-அகவல்-ஆரபி.

திருவருள்நிலவுஞ் சித்திரவொயிலி
மருவமர்குழலி மாதர்கள்திலகி
தீபச்சோதி திங்களின்வதனி
ரூபமேயுயர்ந்த ருக்குமிதேவி
எழில்தனில்மிகுந்த இரதியின்மைந்தன்
அழகினில்மிகுந்த அனிருத்திரன்றன்
ஆவியிற்றனது ஆவியுங்கலந்த
சேவினுக்கிணையாஞ் சித்ரசிங்காரன்
விரகமேதணித்து விளையாடல்செலுத்தி
அரவமேதவிர்த்து அயர்ந்துநித்திரைசெய்
தங்கமாங்கட்டில் தன்னையேருக்குமி
சிங்காரஞ்செய்யும் செய்கையேதென்னில்
பஞ்சவன்னத்தின் பாம்பினில்முத்து
குஞ்சங்கள்கோத்துங் குலுங்கியகட்டிலின்
தினகரனுடலிற் சிறந்திடும்கவிர்போல்
கனகமாணிக்கக் கதும்பொளிர்கட்டில்
அழகுதான்சிறந்த அசுமானகிரிகளின்
வைரக்கால்நாட்டி வயங்கியகட்டில்
கனகமாணிக்கக் கதுப்பொளிர்சிப்புகள்
கோமேதகத்திற் குச்சுகளிலங்கும்
அசுமானகிரியி னலங்கியகட்டில்
எச்சுடனிருக்கும் இந்திரநீல
குச்சுகளெட்டுங் கோர்த்திடுங்கட்டில்
இந்த்ராணியிந்த்ர னிருவருங்கூடி
சந்தோஷகாரி சாஸ்திரம்விளைத்து

பட்சமோடிருந்து படுத்திடுங்கட்டில்
விச்சித்ரந்தன்னை வென்றிடுங்கட்டில்
கார்குழல்வனிதை காமசாரதையும்
பார்புகழ்வியாழ பகவானுமன்பாய்
கூடிவித்திரைசெய் குங்குமக்கட்டில்
சோடினையெழிலைத் தாத்திடுங்கட்டில்
ஆடகக்கட்டி லதனையேருக்மி
சோடினைசெய்யுஞ் சுகிர்தமேதென்னில்
அடுக்கடுக்காக அழகுகட்டிலின்மேல்
படுக்கைவிரித்து பாப்புவான்சித்ரம்
சுந்தாஞ்சேர்ந்த தூயகட்டிலின்மேல்
சந்திரமெத்தை தரைமீதணைத்து
மெத்தைமேற்சன மெய்சுலாஞ்சுகனை
சுத்தமாய்விரித்துச் சொர்னலாஞ்சுகள்மேல்
சுகவாற்கம்பி சகலாத்தைவிரித்து
சகலாத்துமீது சமுக்காளம்விரித்து
தாங்கலாய்வைத்த சமக்காளமீது
பாங்குதாமெலிய பட்டினைவிரித்து
சோலையஞ்சாயலாம் துப்பட்டிமீது
சாலுவையெனச்சொல் சல்லாவைவிரித்து
சாந்தமாயிலங்கும் சல்லாவின்மீது
மாந்துளிர்கலையை வரிசையாய்விரித்து
மல்லிகைமுல்லை மருக்கொழுந்துடனே
அல்லிசெவ்வந்தி அலரியிருவாட்சி
சதுமுகன்புகழும் தாமரைமலரும்
சம்பங்கிமலருஞ் சாதமாமலர்கள்
செம்பங்கள்பொங்குஞ் செண்பகச்சேது
சூதடுக்காவி சூரியகாந்தி
இன்னமுமனேக எழில்மலர்வாசம்
தன்னிலேமிருந்த தருமலர்களையும்
தேவிலாக்கதுமை சிறந்தகத்திரிக்கை
நாவிறல்மலரை ரவைகளாச்செய்து
மெத்தைமேல்மாது மெல்லிதாய்த்தூவி
சுத்தசந்தனமுந் தூபபன்னீரும்
தயிருபாற்செறிவு தன்னையுமுருக்கி



சயிலமெத்தையின்மேற் சன்னமாய்த்தெளித்து
ஆசைநாயகனை ஆயிழைநோக்கி
சொல்லுவாள்மதன சாதமேவினைத்து
மேவினனீரும் மெத்தைமேற்படுக்கைக்
குறிஞ்சிமீதிருக்கும் கொழுநனேவாரும்
சிரஞ்சீவியான தேகனேவாரும்
மன்மதராசன் மைந்தனேவாரும்
நன்மையேசேரும் நாதனேவாரும்
எனச்சொலியழைத்தாள் இன்பமதாக
மனமகிழ்ந்தனளே மன்மதன்மருகி
கோபமெள்ளளவுங் கோடிடாவசனி
ரூபமேயுயர்ந்த ருக்குமிமாதே.

**பொது விருத்தம்.**

பூவணையையிவ்விதமாய்ச் சோடித்தாகப்
பூர்வலனும்பூவணைமீ திருந்துகொண்டு
ஆவலுடன்தேவிதன்னை மார்பிற்சேர்த்து
அகமகிழ்ந்துகொஞ்சி விளையாடும்போது
பாவமென்றுபாராமல் மதனபாணம்
பட்டுருவஅதிலெழும்பும் விரகத்தீயின்
காவொதுங்காசதமாங் குணத்திரோடு
காரிகையும்மன்னவனுங் கலந்திட்டாரே.

**வசனம்.**

இந்தப்பிரகாரம்படுக்கைமுன்தீப்புகனை சோடினை செய்திருக்கிற தங்கக்கட்டிலின் உட்கார்ந்து விளையாடுகிறபோது மன்மதபாணங்கள்வந்து தாக்குவதினால் இருவரும் ஏகபோகமாய்க் கலந்து விளையாடுகிறவிதம் எப்படியென்றால்.

**தரு-இ-ம்-மத்யமாவதி-ஏகதாளம்.**

**பல்லவி.**

கூடிவிளையாடினரே - அனிருத்தமனும் எழில் ருக்குமி யிருவரும் கூடிவிளையாடினரே.

**அநுபல்லவி.**

| | |
|---|---|
| | கூடி |
| மதனும்ரதியெனவுற | வாடி - நறாங் |
| கொத்திடுமெழில்மலர் | சூடி - குளிர் |
| சந்தனக்கலவைகள் | ஆடி - மலர் |

பந்துகளிருவரு மாடி - குயி
லுந்தருகுரலொலி தோடி - இசை
யும்பதவிந்தைகள் பாடி - திரு
வுந்தருவும்புகழ் தேடி
முத்தாடி
மல்லாடி
அய்யாடி
அப்பாடி - யெனக் (கூடி)

சரணங்கள்.

௧. குக்கி
ஆலிலைநிகர்வயறதை யெக்கி - மோ
கனலுவலசவைகளில் சிக்கி - தா
னொருவரிலொருவரை மொக்கி - செவ்
விதழொடிதழ்களை செக்கி - அதி
லேயடர்தேனினை நக்கி - சிந்
தையினெடுசிந்தைகள் வெட்கி - அன
மதிமுகமதில்முக நொக்கி
மொழிதிக்கி
குரல்விக்கி
மதிசொக்கி
மயல்கக்கி - விழக் (கூடி)

௨. வந்து
கொப்பொடுசிகைகலரவுட் காந்து - சுடர்
பொங்குமுகத்தினை மோந்து - இரு
நெஞ்சொடுநெஞ்செனச் சேர்ந்து - நுனி
நாவுகள்செவிகளில் பூந்து - மத
மச்சரமாலிரு மாந்து - தலை
யொடுதலையிரண்டுமன் னூந்து - துடை
யொடுதுடைதாளமுந் தீர்ந்து - வயி
றொடுவயிறென்றெனச் சேர்ந்து
துகையீந்து
வகைதீர்ந்து
மதிநேர்ந்து
விழிசேர்ந்து - மெல்லக் (கூடி)



௩. கூட்டி
மார்நோக்கியகொங்கைக ளாட்டி - மா
மைக்கலனின்வகை பூட்டி - நாட்
டங்களோர்கன்னையுந் தீட்டி - கொங்
கைக்குடப்பாலமு தூட்டி - தா
மரைமலர்க்கைகளை நீட்டி - தே
கத்தொடுமெய்யினைக் கூட்டி - பா
டகத்தாள்தனைமிக நீட்டி
தாளாட்டி
தோளாட்டி
மேலாட்டி
காலாட்டிக்கொண்டு (கூடி)

பொதுவிருத்தம்.

தேட்டமுடன்ராசதமாங்கலவியோய்ந்து
சீக்கிரமாய்த்தானிருவர்வெந்நீராடி
வேட்டிரண்டுடுத்திகொன்றுவேறேகட்டி
மேன்மையுள்ளசிற்றுண்வுமிதமாய்த்தின்று
வாட்டமில்லாமலரணிந்துகலவைபூசி
வாசமுள்ளவெற்றிலைதான்வராகாய்த்தின்று
நாட்டமுடன்தாமதமாங்குணபோகத்தை
நாடுவார்விதமாகக்கூடுவாரே.

நீபதை-இ-ம்-மணிரங்கம்-அடதாளம்.

கண்ணிகள்.

பித்தஞ்சிறந்தகிளிக்குலம்போலவும்பேசிப்புணர்ந்தனரே - வெள்ளை
அத்தியின்மீதுள இந்த்ரனும்இந்த்ராணிஆகவணைந்தனரே.
புற்றிலமர்ந்திடும் நாகமுஞ்சாரையும்போலும்பிணைந்தனரே - எழில்
சித்தசன்மைந்தனும்ருக்குமிதேவியும்சேர்ந்துஅணைந்தனரே. [கொடு
செச்சையில்வாழ்ரதிமன்மதராசன்றன்செல்வங்கொண்டாடினரே
நச்சரவந்தங்குஞ்சோலையில்வாழ்ந்திடும்நறுமலர்சூடினரே.
கெச்சிதமானசையோககலைஞானம் கெம்பீரம்பாடினரே-நன்று
யச்சுதன்பேரனும்ருக்குமிதேவியும்அன்புடன்கூடினரே.

வக்கணையானபதங்கள்பகர்ந்துசெல்வாய்கள்நுகர்ந்தனரே - கன்னற்
சக்கரைதின்று பன்னீர்கலர் சந்தனச் சாரமூர்ந் தாடினரே.

துக்கமதாகவுடற்கனமேறிடும் சோகந் தலைந்தனரே - எழில்
ருக்மணிபோனும் ருக்குமிதேவியும் சோர்ந்துகலந்தனரே.

அறிவதிலங்கமருமலர்ச்செண்டுகளாடவும்பூந்தனரே - பின்னும்
ஒருவர்முகத்தினிலொருவர்முகம்வைத்துலாவவும்மோந்தனரே.

குறிகளுடனவர்குறிகள்பொருந்தவேகொங்கைகளுஞ்சார்ந்தனரே - பெ
திருமகள்போனும் ருக்குமிதேவியும் சிருடன் சேர்ந்தனரே. [ரசும்

தாம்பூலிருந்துகுளிர்ந்து கமழ்ந்த சுகந்தஞ்சருவினரே-செஞ்
சாயங்கமழ்ந்திடும் வாய்களிலே விரல் தன்னைச்சொருகினரே.

நேயமிகுந்திடும் சேலையிடைகள் நெருங்க வருவினரே - போக
மாயவன்போனும் ருக்குமிதேவியும் மகிழ்ச்சுமருவினரே.

வைரவசிரம்பதிலோர்த்தமை மேனகை உல்லாசமேவினரே-பன்னீர்
சார்மலர்மல்லிகைமுல்லைகள்செண்பகச்சாதிகள்தூவினரே.

சிர்புனுகத்தரிமூரும் பன்னீர்தொட்டுத் தேகமும் நீவினரே-மின்னும்
கூர்விழிருக்குமியும்மாரன் மைந்தனுங் கொஞ்சிக் குலாவினரே.

நித்தரைசெய்யாத்தங்கவர்னம்போல் முக மேசங் கலந்தனரே-திவ்ய
பத்தரைமாற்றுப்பசும்பொன்போலத்தேகப்பாரம்விளைந்தனரே.

சித்ரவில்போலவும் சண்டிடையொன்றுகச்சேர விணைந்தனரே-மாரன்
புத்ரனும் ருக்குமிதேவியுமே யேக போகம் விளைந்தனரே.

விழிகள்சருக்கினர்பூமெத்தைதமேல்தேகவேர்வைகள் பெய்தனரே-சந்
தனங்கள்பொருந்துமுகங்களின்மேல்தர்துக்காயங்கள் செய்தனரே.[தர

கனிமலர்ச்சுடர்த்தேகங்களை சென்று காவாநு மெய்தனரே-துயில்
தனிரதிசேயும்ருக்குமிதேவியும் சையோகஞ் செய்தனரே.

விருத்தம்.

ஒருதரம்இஷ்டபோகம் உயர்ந்தராஜசமாய்ச்செய்து
மறுதரம்வக்கபோகம் வரிசைதாமசமாய்ச்செய்து
முறைமைதான்தவக்குறாது மும்மதப்போகமூன்றும்
தாமதுசாத்விகத்தின் சாண்டயாய்ச்செய்குவாரே.



திபதை-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. சேவள்மகனும் ருக்குமியும் - சித்ர
விந்தாரங்கள் தான்பேசி - நல்ல
தாள்பணிகள்கலகலென்று - கொஞ்சச்
சையோகஞ்செய்தனரே.

௨. கைகளுடன்கைகள்பின்னி - ஒய்யார
கால்களுடன்கால்கள்பின்னி - நீல
மெய்யுடனேமெய்யணைத்து - சாஸ்த்ர
விதிதமாகலீலைசெய்தனரே.

௩. ஆகங்களேமிகநெருங்க - சீக்ரம்
ஆவிகளேநடனஞ்செய்ய - மோக
தாகங்களேதணித்திடவே - கொஞ்சி
தாடனங்கள்செய்தனரே.

௪. இந்திரனும்இந்திராணியும்போல் - கனின
இரதிசேயும் ருக்குமியும் - நல்ல
சுந்தரஞ்சேர்மனையில் - சேர்ந்து
சாதலீலைசெய்தனரே.

போது விருத்தம்.

திருமகள்புதல்வன்மைந்தன் றேவிதன்னுடன்முப்போகம்
மருவரத்தானேசெய்து மையலுந்தீர்ந்தேயப்பால்
இருவருஞ்சீல்மாகி இரணியக்கட்டில்மீது
நிருபமாகத்தானே நித்திரைசெய்கின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்தமகாராசனும் ருக்குமிதேவியும் சொர்ணக்கட்டிலின்பேரில் படுத்து நித்திரைசெய்கிற மார்க்கம் எப்படியென்றால்.

௩௩-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

அழகுக்கட்டிலின்மாரன் மகனும் ருக்குமிதேவி
அணைவுடன்தூங்கினாரே - காமகலாபத்
துயர்விளைநீங்கினரே.

அநுபல்லவி.

தனிவச்சிரங்களையும் முத்துக்கோர்வைகளையும்
தழுவுந்தந்தத்தினாலேயே - பூவுகளாலே
முழுதுஞ்சித்திரவேலையே - ஆன. (அழகு)

சரணங்கள்.

௧. வீணென்றுமதன்கலை க்ஞானச்சிரேஷ்டவித்
தாரங்களையிகழ்ந்து - அவ்வேளையில்
சித்ராதேவியைப்புகழ்ந்து (அழகு)

௨. பொற்பதுமைகள்போல வாலவோவியம்போலும்
பொன்னின்செடிகள்போலவே - கார்காலத்தில்
மின்னுங்கொடிகள்போலவே. (அழகு)

௩. புருஷனுந்தேவியும் இருவரும்வெவ்வேறாய்ப்
பிரியுஞ்செயலறியாமலே - இப்போதுதான்
இருவரும்பிரியாமலே. (அழகு)

போது விருத்தம்.

சதிபுருஷனுந்தான்நித்திரை சயனத்திலிருந்தபோது
மதிமுகசித்ரரேகை மறைந்தபொற்றாணிந்தி
இதுநல்லசமயமென்றே இருகயக்கன்னிவெண்ணி
பதனமாய்க்கட்டிலோரம் பாங்கியும்பாய்ந்திட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அநிருத்தமகாராசனும் ருக்குமிதேவியும் சரு டல் ஒருடலாகக் கலந்து நித்திரை செய்கிறபோது தூண்மறைவிலி ருந்த சித்திரரேகை கட்டிலின்மீது லாகுபாய்கிற விதங்காண்க.

தரு-௨-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

லாகினள் பாங்கி லாகினள்.

அநுபல்லவி.

மேகமருவியமின்னலாமெனப்
போகமருவியபுள்ளரிமானென. (லாகி)

சரணங்கள்.

௧. கும்பல்தனங்களுங் குலுங்கிடாமலும்
செம்பொன்வளைகளும் சிணுங்கிடாமலே. (லாகி)

௨. பாதசரங்களும் பதறிடாமலும்
கோதுகுழலது குலைந்திடாமலும். (லாகி)

௩. செண்டுபோலவே தேகமொடுக்கியே
வண்டுபோலவே ஸ்வாசமடக்கியே (லாகி)

௪. மெதிதனைக்கண்ட வேங்கைபோலவும்
வாதிதனைக்கண்ட மங்கலம்போலவும் (லாகி)



௫. சனமெலாந்துயில் சாமநேரமே
கனகமயமெனுங்கட்டிலோரமே (லாகி)

போது விருத்தம்.

அரிவையெனுஞ்சூழ்ச்சிசகி லாகுபாய்ந்து
ஆடகக்கட்டிலின்மீ தட்காந்துகொண்டாள்
புருஷனுடல்தேவியுடல் ஒன்றேபோலப்
புணர்ந்திருந்தபுணர்ச்சியைப் யெதார்த்தமாக
பிரிவுசெய்தால்மோசம் வருமென்றேமித்ர
பேதகத்தாற்பிரிப்பமென மதியிற்கொண்டு
இருவருடல்மீது சொக்குப்பொடியைவாரி
இறைத்திட்டாள்மந்திரந்தா னுரைத்திட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நித்திரைசெய்கிற அவர்களிருவரையும் பிரிப்ப தற்கு உபாயஞ்செய்யலாம் என்று ஆலோசித்த சித்திரரேகையான வள் அவர்கள்மேல் சொக்குப்பொடியை வாரியிறைத்து மந்திரஞ்செ பிக்கிற விதங்காண்க.

மந்திர உச்சாடனம்.

ஓம் கயமுய கயமுய கய்முய் கய்முய் கய்முய்
கேகேமி சேஸ்தானு நூ நூ நூ நூ நூ நூ
ஓம் கலமுல கலமுல கலமுல கலமுல கலமுல கலமுல
ஓம் ததாததூத் ததாததூத் ததாததூத் ததாததூத்
ஓம் லபா லுபா லபா லுபா லபா லுபா லபா லுபா
ஓம் கெக்கெக் கெக்கெக் கெக்கெக் கெக்கெக் கெக்கே
ஓம் சலீக சலீக சலீக ஓம் சலீக சலீக சலீக சலீக
ஓம் சலி சலி சலி சலி ஓம் திமி திமி திமி திமி
ஓம் டமா டமா டமா டமா டம டம டம டம
ஓம் சாபுர சாபுர சாபுர ஓம் சடிபுடி சடிபுடி
ஓம் குணு குணு குணு குணு குணு குணு ஓம்

போது வசனம்.

அப்பால்நடக்கிறகாரியமவளுக்குத்தெரியாது. சும்மாயிருந்தால் வெள்ளைவாய், கரியை நக்கினால்கருவாய், வெற்றிலைபோட்டால் செவ் வாய், இந்தமந்திரம் படிக்கிறவர்கள் அர்த்தங் கேட்டுக்கொள்ள வே ணும். இதற்கு அர்த்தம் என்னவென்றால், முதலாவது கய்முய் மந் திரத்திற்கு அர்த்தம் இந்த ருக்குமிதேவியை யெடுத்துத் தரையிலே வைத்துப்போட்டு இந்த மகாராசனை கட்டிலுடனே தான் கொண்டு

போனபிறகு ருக்குமிதேவி யெழுந்து புருஷனைக்காணமல் அழுவது தான் சப்முப் மந்திரம். இரண்டாவது கலமுலமந்திரம். அதாவது ருக்குமிதேவி அழுவதுகண்டு பட்டணத்திலுள்ள எல்லாருங்கூடி புலம்புவது கலமுலமந்திரம். பிறகு கிருஷ்ணமூர்த்தியானவர் இதைத் தெரிந்து கோபங்கொள்வதுதான் தததகுந் என்னு மந்திரத்தின் அர்த்தம். போனதாகி இன்னும் வரவில்லையென்று உடாங்களை புலம்புகிறதுதான் லபாவுபாமந்திரம். இவரை நான் எடுத்துப்போன பிறகு இவர்கித்திரைதெளிந்துசிரிப்பது நான்தெக்தெக்கேமந்திரம். இனி டமம முதலான மந்திரங்கள் இந்த இருநட்சிக்காரர்களும் சண்டை செய்வது முதலானது என்று சொல்லி அவர்களிருவரையும் பிரிவு செய்கிற தெப்படியென்றால்.

போர்துதிபதை-தரு-௩௰-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

க. அஷ்டதிசைபுக ழுழகுளோரென
இஷ்டமாய்ப்புகழ்க் திருவர்கால்தொட்டுக்
கும்பிட்டாள்-பாங்கி-கும்பிட்டாள்.

உ. குணமுங்குணமுமொரு குணமதாகவே
அணைந்துதூங்கிய ஆணும்பெண்ணையும்
பிரித்திட்டாள் - பாங்கி - பிரித்திட்டாள்.

௩. இருகையில்பாமன்பேத்தியைத்தாங்கியே
வெருந்தரையில் மெள்ளவே
வைத்திட்டாள் - பாங்கி - வைத்திட்டாள்.

௪. வேளுருள்சுதன் மெய்தொடாமலே
மாழைக்கட்டிலை வலதுகையினில்
வந்திருள் - பாங்கி - வந்திருள்.

௫. மண்ணில்மறைந்திட்டமாயமந்திரம்
விண்ணில்மறையவும்விஞ்சைமந்திரம்
ஓதினுள் - பாங்கி - ஓதினுள்.

௬. மோகமாளிகைமுனையில் நின்றொரு
சாகுநான்முகாத்தினமதில்வந்து
நின்றனள் பாங்கி நின்றனள்.

வசனம்.

இந்தப்பிரகாரமாக சித்திரரேகை அவர்களுடைய ருபலாவணியங்களைக்கண்டு கால்தொட்டுக் கும்பிட்டு பிறகு ருக்குமிதேவி



யை அசையாமல் எடுத்து நிலத்திலே வைத்துவிட்டு அனிருத்தமகாராசனை கரத்தில் தீண்டாமல் கட்டிலுடனே தூக்கிக்கொண்டு முகாத்தினவாசலிலே வந்து நின்று பூமியில்மறைகிறமந்திரம்ஆகாயத்தில் பறக்கிறமந்திரமும் ஜபிக்கப்பட்ட மார்க்கம் எப்படி யென்றால்.

மந்திரம்.

ஓம்குருவாழ், குருநாதன்வாழ, எந்தன்வாழ, எந்தனுசாரியன் வாழ், எவ்வாணைமறந்தாலும் குருவாணைமறவேன், குருவிருந்தவீட்டில் கால் நீட்டி அருகிருந்து ஆசாரம்செய்வேன், குருதொட்ட செருப்பைச் சிரசுமேற்கொண்டேன், கவரிமானைப்பாசமாகக்கண்டேன், இருந்திடம் கைலாசமாகக்கண்டேன், ஓம், ஆம், பத்திரகாளி, நிருதியாரனே, நாற்றொருவர் ஆணைகட்டினேன், மாறவிட்டுக்கட்டினேன், தாளைப்பூட்டிவடக்கேபார்த்தேன், வடக்கேயிருந்துவருகிற பேய்பிசாசு சத்திராவதியை உருவேற்றி வெற்றிமல்லன்கையில் இருப்புலக்கையைவாங்கிஇடி இடிவைத்துப்பின்னும், ஆறுகாவலிலேகட்டினேன், என்னையும் உலகத்தையும் படைத்த பரமேஸ்வரி பாதத்தாணை கட்டினேன், என்கட்டேகட்டு நிசக்கட்டாக நிற்கச் சுவாகா.

போது வசனம்.

இந்தப்பிரகாரம் திசைகட்டு மந்திரம் - தன்கட்டு மந்திரம் இன்னும் பலபலமந்திரங்களை ஜபித்து விஞ்சைமந்திரமகத்துவத்தினலே ஆகாசவீதியிலே லகுபாய்ந்துபோகிறது எப்படியென்றால்.

தரு-௩௰௧. மத்யமாவதி-ஏகதாளம்.

பல்லவி.

பாய்ந்தாளேபாங்கி - ககனமீது
பாய்ந்தாளேபாங்கி.

அநுபல்லவி.

| | | |
|---|---|---|
| பாய்ந்து நனதுகர் | சேர்ந்திடருக்குமி | |
| காந்தனைபொருகையி | லேந்தியேசுனுதுடன். | (பாய்) |

சரணங்கள்.

| | | | |
|---|---|---|---|
| க. | ருக்குமிகணவனைக் | கைக்கெளிதாகவே | |
| | சிக்கினதுகல்ல | பக்குவந்தானெனப். | (பாய்) |
| உ. | அநிருத்தனையொரு | பாணிமிலேந்தியே | |
| | சேனுலகளவிய | வாணமதேதயெனப். | (பாய்) |
| ௩. | சந்தரமன்மதன் | மைந்தனைத்திருடியே | |
| | மந்திரபலத்தினி | லந்தரத்திருட்டினில். | (பாய்) |

௪. அங்கசன்மைந்தன் அசைந்துவயங்கிய
குங்குமக்கட்டிலைச் செங்காத்தேந்தியே. (பாய்)
௫. கைசலிக்காமலும் மெய்சலிக்காமலும்
வெய்யவனுதிக்குமுன் வய்யாளியாகவே. (பாய்)
௬. திருமகள்போலே மருமலரணையோடு
ஒருகையிலேந்தியே பறவைகள்நாணவே. (பாய்)
௭. பெண்பிள்ளையிவள்சாதி சம்பிரதாயங்கள்
ரொம்பவுமுள்ளவளென வும்பர்கள்பேசவே. (பாய்)

போது விருத்தம்.

இறைவனைத்திருடிக்கொண்டு இருட்டினில்விசும்பேபாய்ந்து
பறவைகள்நடுங்கத்தானே பாக்கியம்வருகும்போது
மருமலரணையிற்சேர்த்து மாயமாமெழிலைநத்தி
விரகமேமிகுந்துவாணன் மெல்லியும்விளம்புவாளே.

காதலாய்க்கனவிற்சேர்ந்த கணவனையெடுத்துக்கொண்டு
ஆதவனுதிக்குமுன்னே அம்மைநான்வருவேனென்று
மாதுபோனவள்தானின்னம் வந்திலாளெனமயங்கி
தாதவிழ்குழலாள்மா துடாங்கனைதயங்குவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சித்திரரேகையானவள் தந்திரமாக இருட்டுவேளையில் அந்தரமாக அனிருத்தமகாராசனை யேந்திக்கொண்டு வருகிறபோது உடாங்கனையானவள் விரகவேதனை யதிகப்பட்டு கனவிலே வந்த இராசகுமாரனை யெடுத்துக்கொண்டு பொழுதுவிடியுமுன் வருவேனென்றுபோன தாதி யின்னும்வரக் காணேனென்று உடாங்கனை சோகமடைகிற தெப்படியென்றால்.

உடாங்கனை-தரு ௩-ம்-நாதநாமக்கிரியை-துருவதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காணேனே - யென்றெண்ணும் எண்ணுதே
யென்பிராணனே.

அநுபல்லவி.

அன்னமேதேனேயென்றும் - கனவில்
அற்புதமானேயென்றும் - புகழ்ந்து
என்னையணைந்து - மறைந்ததிருடனை
இரவியுதிக்குமுன் கொண்டுவாரேனென்று
சென்னிதனிற்றென்முன் சத்தியப்பர்வசம்
செய்திடத்திட்ட சித்திரரேகைநான். (இன்)



சரணங்கள்.

௧. வானினில் நீந்தினளோ - சலித்து
வழியிலுட்காந் தனளோ - துவரை
மாநகர்சேர்ந் தனளோ - சொர்ணமய
மாளிகைபுகுந் தனளோ - தெளிந்திடும்
தேனின்மொழியாள்சதி மைந்தனைக்கண்டாளோ
தேடியுங்காணமல் சிந்தைதானொந்தாளோ
ஆனதாகட்டுமென் றுள்ளம் மகிழ்ந்தாளோ
அல்லாதசேதிக்கும் நல்லசேதிக்கிப்போ. (இன்)

நறியுந்துடித்திடுதே - என்தொண்டைக்கு
குயில்கள்சிடுத்திடுதே - எட்டுப்
பொறிகைவிடுத்திடுதே - ஐந்துவிதப்
பூதங்கடுத்திடுதே - சிதம்
விரிகொள்சசியும் மிகநன்றாய்க்காயுதே
வேகமாய்த்தென்றலும் மெய்யெலாஞ்சாடுதே
நறுமலர்மெத்தையும் முட்போலுறுத்துதே
நாவும்வாயும்மிக நலமற்றுலர்ந்துதே. (இன்

௩. அரவாபரணம்வாரியே அணிந்திடும்
ஆதிசிவன்பாரியே - இரு
சரணனந்தவாரியே - தலைதனில்
தான்வைக்கவுங்கோரியே - தொழுக
வுருவாகாத்தினில் யிருந்தவொய்யாரனை
உந்தன்கனவினில் வந்தசிங்காரனை
சரியாகவந்துகலந்து மறைந்தோனை
சசிசித்ரரேகை தலையில்வைத்துக்கொண்டு (இன்)

உடாங்கனை வசனம்.

ஆ! ஆ! பரமேசுவரி! உன்னுடைய கிருபையினாலே என் கனவிலே வந்து கலந்துபோன இராசகுமாரனைப் பொழுதுவிடியு முன்னமே தூக்கிக்கொண்டு வருவேனென்று போன சித்திரரேகை இன்னம்வரக்காணேனே, அவள் அங்கேபோய்ச் சேர்ந்தாளோ சேரவில்லையோ கண்டாளோவொன்றுமறியேன், மன்மதபாணங்களாலேநான்படும் துன்பமோர்சகிக்க முடியாது. நானென்ன செய்வேனம்மா தாயே.

போது விருத்தம்.

எதுவிஷயமெனினு முனிக்கனவிற்சேர்ந்த
எழில்மதனன்சுதனைக் கதிரொழுமுன்யானே
பதனமுடன்கொணர்ந்திடுவே னென்றுபோன
பாங்கிதனை இன்னம் வரக்காணேனென்று
மதிமயங்கித்தருவிழந்த கொடிபோலற்று
மான்கடுங்கி இனம்பிரிந்தமானேபோல
விதிதனைநொந்தழுது மலரணையிற்சாய்ந்து
விரகமிகக்கொண்டயரும் வேளைதானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனை சோகமடைந்திருக்கிறபோது சித்திரரேகை வருகிறது எப்படியென்றால்.

போதுவிருத்தம்.

சுருதிமந்த்ரதியானமதை ஜபித்துமாரன்
சுதன்படுத்துஅயர்வுகொண்டு தூங்குங்கட்டில்
சோடினையும்கலையாமற்காமீதேந்தி
சுமந்துகாமலையாமற்பாய்ந்துசூழம்
பெருதுவரைமாநகர்க்குள்ளோர்காணுமல்
பேதையுருமாறிவிசும் பெய்திநீந்தி
பெருமையுளசோணிதமாநகரிற்ரூம்
பேர்பெறுநல்லுடாங்கனையாம்பெண்ணாள்வாழும்
பொருதுசொர்ணமாளிகைசமீபம்பாங்கி
போகவுமேபுலத்யரிஷிபுதல்வனின்ற
புத்திரனிந்திரசித்தன்காத்தினஸ்திரம்
பொங்கியெழுந்தேசுழன்றுபேர்தன்னாலே
திருவளர்அயோத்திநகர்தன்னையாளும்
தசரதராசன்றவத்திற்சிறந்தசேயன்
ஸ்ரீரகுராகவன்றன்னைசுக்கிரீபன்
திறலுள்ளவாலிமகன்சிறந்தநீலன்.
அரதிமொழிச்சாம்புவந்தன்வானரங்கள்
அனைவோருமடிந்திடவேஅநுமானேகி
அடிபதறமால்வரையைப்பெயர்த்துக்கொண்டு
அடுக்கவரும்போதுஅவ்விடத்தின்வாசம்
உறுதிபட்டமடிந்தவர்களெல்லோருக்கும்
உயிர்வந்துஉளமகிழவெழுந்தாற்போலே



உலகுதனையுண்டுமிழ்ந்துகாத்துப்பாலா
முதநிதனிற்பள்ளிகொண்டோன்சுதனுமாரன்
இரதியிருவருக்குமெழிற்சுதனுய்வந்தோன்
பெழில்பெருகுமுடல்வாசமிலங்கிவீச
இறைவியெனும்வாணன்மகள் சோகந்தீர்ந்து
எழுந்திருந்துஉட்கார்ந்து இருகண்ணாலே
தெரிவையர்கள் திலகினிக்னைப் பார்க்குமுன்னே
செயஞ்செய மென்றேசெப்பிச் சிறப்பாய்வந்து
சித்தசன்றன்பாலகனை வனிதைமுன்னே
சேர்க்கையுடன்வைத்தினிமை செப்புவாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால், இந்தப்பிரகாரமாக சித்திரரேகை அனிருத்தமகாராசனைக் கட்டிலுடன் தூக்கிக்கொண்டு உடாங்கனையி னுடைய சொர்ணமாளிகைக்குச் சமீபமாகவருகிறபோது இந்திரசித் தனுடையபிரம்மாஸ்திரத்தினாலே மூர்ச்சையடைந்திருந்த ஸ்ரீராமர்சே னைகள் அநுமார்கொண்டுவந்த சஞ்சீவியின் வாடைபட்ட மாத்திரத் தில் எழுந்திருந்தாப்போலே உடாங்கனை மூர்ச்சை தெளிந்திருக்கச் சித்திரரேகை கட்டிலுடன்அனிருத்தராசனைக் கீழேவைத்துச் சொல் லுகிறதெப்படியென்றால்.

சித்திரரேகை விருத்தம்.

நாதமாமணியேவாழி கன்னையர்க்கரசேவாழி
வாருமோகனங்கள்தன்னில் வயங்குசெந்திருவேவாழி
மோகவேள்சுதனுங்நீயும் மோகவாரிதியில்மூழ்கி
யேக்போகமதாய்வாழ்க என்னாளும்வாழிவாழி.

போது வசனம்.

இந்தப்படியாக வாழ்த்தி நிற்கப்பட்ட சித்திரரேகையைப்பார்த்து உடாங்கனைசொல்லுகிற தெப்படியென்றால்.

உடாங்கனை வசனம்.

சுகமாய் வந்தாயா சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

சுகவரி கடாக்ஷத்தினாலேயும், உன் கடாக்ஷத்தினாலேயும், என் அதிர்ஷ்டமகிமையினாலேயும் சுகமாகவந்தேனம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

இந்த மகாராசனை யெப்படிக் கண்டெடுத்தாய் சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

இப்படித்தான் தேகத்தை யொடுக்கி நடுங்கி திருட்டுமுழி முழித்துக்கொண்டு இருட்டுக்குள்ளே கண்தெரியாதபடி குழியில்விழுந்து கையொடிந்து காலொடிந்து வேலிநுழைந்து சந்தில் மறைந்து அப்படி யிப்படிக்கண்டு பிடித்தேனம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அப்போது இவர் தூங்கிறாரோ விழித்துக்கொண்டிருந்தாரோ.

சித்திரரேகை வசனம்.

கொஞ்சம் தூங்கிக்கொண்டிருந்தார்.

உடாங்கனை வசனம்.

கொஞ்சம் தூங்குகிறவரை எப்படி தொட்டாய்.

சித்திரரேகை வசனம்.

அவர் அதிகநித்திரை பண்ணும்படியாய் ஒருகோளாறு பண்ணினேனம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அதென்னகோளாறு சொல்வாய்.

சித்திரரேகை வசனம்.

கேளுமம்மாதாயே! அந்தப்பட்டணத்திலிருக்கிறகடமுடப்பெருமாள் கணமுணப்பெருமாளுக்கு ஒருகுடம் பாலும் தயிரும் வெண்ணெயும் வைக்கிறேனென்று கும்பிட்டுக்கொண்டேன். உடனே இந்த மகாராசன் அதிக நித்திரைபண்ணினார். கட்டிலோடே தூக்கிக்கொண்டோடி வந்தேனம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அப்படியா அவருக்குக்கடமுடப்பெருமாள் கணமுணப்பெருமாளென்று பெயர்வந்தகாரணமென்னவோ சித்திரரேகாய்.

சித்திரரேகைவசனம்.

கேளுமம்மா! ஆயர்பாடியிலே அசோதை வீட்டிலேவளர்ந்தபெருமாள் வீடுதோறும்புகுந்து தயிர் பால் வெண்ணெய்த்தாழிகளை கடமுடவென்று உருட்டுகிறபோது கண்டுகொண்ட கோபிகைகள் கூடி இதோகடமுடப்பெருமாள் அகப்பட்டானென்று பிடிக்கப்போகையில் அவருடையவஸ்திரமட்டும் கைக்கு அகப்பட அவர் வஸ்திரத்தை அவிழ்த்து விட்டு தான் தப்பித்துக்கொண்டு நிருவாணமாய் ஓடினார். இதோ கணமுணப்பெருமாள் ஓடுகிறானென்று தூத்தினார்கள் அதனாலே அப்பெருமாளுக்குஅப்படிப் பெயராச்சுதம்மா தாயே.



உடாங்கனை விருத்தம்.

தோழியேசொர்ணமிகுங் கட்டிலோடே
சுந்தரனைச்சுமந்நகரம்சேர்ந்ததோதான்
ஆழிகள்சேர்காட்டகமும்வரைகள்தாண்டி
ஆகமெல்லாநொந்துமனந் தளர்ந்தாறோநாள்
தாளிரண்டும்கொப்பளித்துநொந்ததோதான்
தைரியமும்நீங்கிமனஞ்சலித்ததோதான்
தூளிமெத்தைமீதிருந் [illegible]ந்தசற்றே
[illegible]வசைபெல்லாந்துடைத்திடாயே.

வசனம்.

அகோவாரும் பாங்கி! நீ இந்தராசகுமாரனைக்கொண்டு வருவதற்காக எத்தனைபாடுபட்டாயோ, உன்சரீரம் என்னமாய்வாடி வருந்தியதோ, ஆகையால் அந்த ஆயாசமெல்லாந் தீரும்படியாக இந்த அம்சதூளிமெத்தையின்மீது சற்றே படுத்து இளைப்பாரும் பெண்ணே சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

இக்குளிஜயந்தெசலுத்து மன்னராலே
சிவனங்கள்செப்பவரும் திருடிவாழ்வோர்
சக்கரத்திப்போர்கடுவிற் சிக்கிவாழ்வோர்
தண்ணீரி[illegible]ந்து செலுத்திவாழ்வோன்
[illegible]காக்கும்பாம்புகளை யாட்டிவாழ்வோன்
குடிகெடுக்குங்கள்ளதனைக் குடித்துவாழ்வோன்
துக்கமொடுஜனவதைக்கும் பாவத்துக்கும்
தூர்மானத்திற்கும்இவர் துணைப்பட்டாரே.

வசனம்.

அகோவாருமம்மாதாயே! இராசாக்களிடத்திலே ஜீவனஞ்செய்யப்பட்டவர்களும், திருட்டுப்புரட்டுகளால்ஜீவனஞ்செய்கிறவர்களும் இருகுடிகட்டிக்கொண்ட இல்லறத்தார்களும், தண்ணீரில் தடம்கடத்தப்பட்டபேர்களும், பாம்பாட்டிச் சீவிக்கிறவர்களும், கள்ளுஞ் சாராயங்குடிக்கிறபேர்களும், இவர்களெல்லாம் அபகீர்த்திக்கும் துன்பத்துக்கும் பாவத்திற்கும் அவமானத்துக்கும் ஆளாகப்பட்டவர்களேயாம், ஆதலால் நானும் உனக்கு ஆளானபடியினாலே என்ன கஷ்டம் வந்தாலும் அனுபவிக்கவேணுமே தவிர மாட்டேனென்று விட்டுப்போகுமா சொல்லுந் தாயே.

உடாங்கனை வசனம்.

ஆமாம், சித்திரரேகாய்! இந்த மகாராசனை யெடுத்துக்கொண்டு நீயிங்கேவந்து சேருகிறவரைக்கும் எனக்குக் கூட்டிலே யுயிரில்லையடி.

சித்திரரேகை வசனம்.

ஆமம்மா! ஆமம்மா! அப்பப்பா! தென்னமரத்திலே தேள்கொட்ட பனைமரத்திலே நெறிகட்டிச்சாம். ஆத்தே! மாமனார் காட்டுக்கு மழையில்லையாம், மருமகன் காட்டுக்கு விளைவில்லையாம். ஆத்தே! பயலாள்வீட்டிலே யெழவாச்சாம், பண்ணைவீட்டிலே அழுகாச்சாம். ஆத்தே! மாதாரிபெண்டாட்டி பரதேசம்போனாளாம், மணியக்காரன் பெண்டாட்டி தாழாவப் போனாளாம். ஆத்தே! மந்திரிகாலிலே முள்ளுத்தைத்ததாம், மன்னவன்காலிலே வலியெடுத்ததாம். ஆத்தே! பள்ளச்சி புருஷன் செத்துப்போனானாம், பறையன் பெண்டாட்டி தாலியறுத்தாளாம். ஆத்தே! குசவன் பெண்டாட்டி குளித்து நின்னாளாம், கொல்லன் பெண்டாட்டி பச்சப்பட்டாளாம். ஆத்தே! குருமலை அடியோடே பறிச்சாளாம், கொல்லி மலை அடியோடே சாஞ்சுதாம். அப்படிப்போலே நான்போய் அலைச்சலும் அவதியும் படுவதற்காக உனக்கேனோ துக்கமுந் துயரமும் உண்டாயிற்று. நானென்ன உனக்கு பந்தா, பிதிரா, பிறப்பா சம்பளத்திற்கு உழைக்கிறவள் எனக்காக நீ துக்கப்படுகிறதேதம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அகோவாரும் பாங்கி! அப்படி நினைக்கப்பட்டவர்கள் யாரென்றால் சத்தியம் தவறி விசுவாசத்துரோகம் உண்டவீட்டுக்கு ரண்டகஞ் செய்கிறவர்களே அப்படி நினைப்பார்கள், நான் அப்படி நினைக்கமாட்டேன். மேலும் அன்போடு அன்னமிட்டவளே தாய். உள்ளதை மறைக்காமல் சொன்னவனே தகப்பன். உள்ள வித்தையை ஒளிக்காமல் சொன்னவனேகுரு. எண்ணைப்படாமல் இடைஞ்சல்நீக்கினவனே தெய்வம். கைசேர்ந்த வேளையில் காத்து ரட்சிக்கிறவனே சகோதரன். உயிர்போகிறநேரம் உதவியா யிருந்தவனே மகன். பிச்சையெடுக்க விதிவந்தாலும் பேச்சைத் தட்டாமல் நடந்தவளே பெண்சாதி. கொடுத்தகடன் குறைந்தோடு வாங்கினவனே பந்து. செய்நன்றி மறந்தவனே சிநேகிதன். ஆனதினால் எனக்கு நீ செய்த உபகாரம் மிகவும் பெரிது. அதனால் பந்து, குரு, பிதிரு எல்லாம் நீயேயென்று என் பிராணனுள்ளளவரையில் நடந்துவருவேன் சித்திரரேகாய்.



உடாங்கனை விருத்தம்.

என்றென்றைக்குஞ்சாசனமாம் கல்லின்மேலே
எழுத்ததற்கேயிணைநல்லோர்க் கிசையுநன்றி
தண்ணீர்மிதெழுதிதழுந்துக் கிணையாம்புல்லர்
தங்களுக்குச்செய்நன்றி தானேயென்று
நன்றுமறைதன்னிற்செவ்வை யுரைத்ததந்த
ஞாயமதாயின்றெனக்கு நீதானன்பாய்
பண்ணினதோர்நன்றிகல்லி னெழுத்தாமென்று
பாதகமில்லாமல்நெஞ்சிற் பதித்தேன்பாங்கி.

வசனம்.

அகோவாரும் பாங்கி! நல்லோர்க்குச் செய்த நன்றி கல்லி லெழுத்தாமென்றும், புல்லர்க்குச்செய்த நன்றி நீர்மேலெழுத்தென்றும் வேதம்சொல்லும், நீயெனக்குச்செய்த வுபகாரத்தை ஆயுள்வரைக்கும் நான் மறக்கமாட்டேனம்மா பாங்கி.

சித்திரரேகை வசனம்.

அப்படியானால் மகாபாக்கியமம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அகோவாரும் பாங்கி! இந்தமகாராசனை யெடுத்துக்கொண்டு வந்த வுனக்கு என்னபிரதியுபகாரஞ் செய்யப்போகிறேன், மூகநட்பினுக்குப் பெரிது அகநட்பு. சொர்ணதானத்திற் பெரிது அன்னதானம். முட்டித்தனத்திற்குப்பெரிது குடித்தனம். இந்திரபோகத்திற்குப்பெரிது இஷ்டபோகம். அரிபூசையிற்பெரிது குருபூசை. ஞாயமிப்படியாகையால் கொள்வதுங் கொடுப்பதும் பெரிதல்ல. என்வார்த்தை தட்டாமல்போய் இந்த மஹாராஜனை யெடுத்துக்கொண்டு வந்தாயே, உனக்குச் சகலசம்பத்து முண்டாகவேணும் சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

ஆமம்மா எனக்குச் சகலசம்பத்தும் நீ கொடுக்கிற சம்பளந்தான் கண்டபலன். எச்சிற்கஞ்சிதானே. தினமும் ஓடி அலைந்தாலும் சேவகனுக்குச் சம்பளம் பதினாறுபணந்தானே. வெடியமட்டுங்கூடினாலும் வேசிக்குக்கண்டபலன் ஒருபணந்தான். பாங்கித்தனத்துக்குத் திரிந்தவளுக்கு என்னபாக்கியம் வரப்போகிறது. ஏதோ உன்னாலக்குவிசேடமாய் பாக்கியம்வந்தாலும் நல்லதுதான் அம்மாதாயே.

உடாங்கனை வசனம்.

வாராய் பாங்கி! இந்த ஈனைசல்லாவை நீக்கி இந்த மகாராசனுடைய ரூபலாவண்ணியத்தை யெல்லாங் கண்குளிரப் பார்க்கட்டுமா சித்திரரேகாய்.

சித்திரரேகை விருத்தம்.

புவிபுகழும்வாணனருள் மாதேயுந்தன்
புத்தியதுபோம்வழியிற் றன்போகாதே
அவசரமேகொண்டவர்க்கும் யோசிக்காமல்
அஞ்சாதசபதங்க ளுரைத்தபோர்க்கும்
தவமதுவும்மேன்மைகளும் வீணேகெட்டு
தாரணியிற் றவித்தலைந்து திரிவாரென்று
பவமறவேதங்கள்சொலு மாகையாலே
பழிவருகும்அவசரம்நீ பண்ணுதம்மா.

வசனம்.

அகோவாருமம்மா தாயே! ஆத்திரக்காரருக்குப் புத்தி மட்டென்றும், பதருதகாரியம் சிதருமென்றும் பழமொழி யுண்டாயிருக்கிறது. ஆத்திரப்பட்டுத் துன்பமடைந்தவர் அனேகருண்டம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

அவர்களிலே சிலபேரைச் சொல்லுமம்மா பாங்கி.

சித்திரரேகை விருத்தம்.

சாந்தகுணம்விட்டதினால் அவசரத்தால்
தவமிழந்துநகுஷன்முன்னாள் சர்ப்பமானான்
வேந்தமுனிவசிஷ்டரொடு ஆய்ந்திடாமல்
விள்ளுசபதஞ்செய்து வெட்கங்கெட்டான்
கூர்ந்தறியாதொருசனிநா னிந்திரனோடே
கூறுசபதஞ்செய்து கூர்மைகெட்டான்
ஏந்திழையேஅவசரமாம் சபதத்தாலே
இடரேயல்லாமற் சுகமில்லைந்தானே.

வசனம்.

அகோகேளுமம்மா தாயே! அவசரப்பட்டு நகுஷமகாராசன் சப்தரிஷிகளைச்சீறிச்சர்ப்பமானான். ராசரிஷியாகிய கௌசிகன் அவசரமாக வசிஷ்டரிடத்திலே சபதங்கூறி அவமானப்பட்டான். சநிபகவான் ஆத்திரப்பட்டுஇந்திரனிடங்கூறியசபதத்தினால்மதிமயங்கினான் ஆனதினால் அவசரப்படலாகாதம்மா தாயே.

உடாங்கனை வசனம்.

இந்த விரகவேதனை பொறுக்க என்னாலாகாதடி பாங்கி.

சித்திரரேகை வசனம்.

அம்மா இப்போ வுனக்குச் சூரியகலையோடேதா! சந்திரகலையோடேதா பார்த்துச்சொல்லுமம்மா.



உடாங்கனை வசனம்.

எனக்குச்சூரியகலை நடக்குதே பாங்கி.

சித்திரரேகை வசனம்.

ஆனால் மகாராசனுடைய முகதரிசனம் காணலாமம்மா தாயே.

பொது விருத்தம்.

சாந்தமுடன்சகிமனது இஷ்டஞ்செய்து
சாம்பலதுப்ரகமதாய்ச் சருவும்போது
ஏந்துமருமலர்க்கிளையாங் காங்கள்கண்ணால்
இரவியசல்லாவொ தங்கி இருகண்ணாலே
கூர்ந்தெழிலைப்பார்த்ததிக மோகங்கொண்டாள்
கும்பாண்டன்மகளதிக குணமேசெய்தாள்
வேந்தனெழில்பின்னையு மாராய்ந்துபார்த்து
மெய்முழுதும்புளகிதமாய் விளம்புவாளே.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் பாங்கியின்மனது சம்மதித்தபின்பு சொன்னசகல்லாவை நீக்கி மெல்ல இராசகுமாரனுடைய அழகு சௌந்தரியங்களைப் பார்த்துச் சோபமடைந்தாள். உடனே பாங்கி தெற்றத்தெறி பின்னும் ஒரு முறைபார்த்து உடாங்கனை சொல்லுகிற விதங்காண்க.

உடாங்கனைவசனம்.

வாராய் பாங்கி! இந்தமகாராசனுடைய ரூபலாவணியத்தைபிரம்மதேவன் எப்படிச்சிருஷ்டித்தான் பாங்கி.

சித்திரரேகை வசனம்.

வாருமம்மா தாயே! அகிலலோக பிரம்மாண்டநாயகருடைய சிருஷ்டிகாரியத்துக்கு இதுவொரு ஆச்சரியமா? உப்புக்கடலிலே முத்துண்டாகிறது. சர்ப்பத்தின் தலையிலே மாணிக்கமுண்டாகிறது. புழுவின் வயிற்றிலே பட்டுண்டாகிறது. பூனையின்வயிற்றிலே புனுகுண்டாகிறது. அப்படியிருக்க ஒருவருக்குண்டான அழகைப்பார்த்து உபமானஞ்சொல்லவேணுமானால் மன்மதனையும் ரதிதேவியுமல்லவாசொல்லுகிறவழக்கம். அப்படிப்பட்ட மன்மதன் வயிற்றிலே பிறந்த இவருக்கு அழகுக்கென்னகுறைச்சலா?

உடாங்கனை வசனம்.

வாரிய் பாங்கி! இம்மகாராசனை மெல்லக்கையால்தட்டி யெழுப்படீமா பாங்கி.

சித்திரரேகை வசனம்.

வேண்டாம் தட்டி யெழுப்பலாகாது, இங்கிதமாய்க் கூப்பிடுமம்மா தாயே! அப்படியே நல்லதம்மா சித்திரரேகாய்.

௩௭-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

தூக்கந்தெளிந்தருள்வீரே - தெளிந்தால்<br>
துரையேயுன்பின்னால்நான்வாறேன்.

அநுபல்லவி.

மூர்க்கமாயெமோசக் - தீர்க்கவேசலுதாகவே. (தூக்)

சரணங்கள்.

௧. கல்வியும்போதா பிதாகுருவேதா<br>
யெல்லோரும்நீதா னென்பிராணநாதா. (தூக்)

௨. சண்பகச்செண்டே சகியேக்கிக்கொண்டே<br>
கண்கனாக்கண்டே கதிபெற்றுங்கொண்டேன். (தூக்)

௩. எங்கனவிற்சேர்ந்த எழில்ருக்மிகாந்தா!<br>
உன்தேவிநான்நான் உயர்வுள்ளவேந்தா. (தூக்)

௪. புகழ்வளர்பூமி புகழுடிமன்சாமி<br>
மிகவேநான்காமி என்மேற்க்ருபைகேமி. (தூக்)

௫. ஒழுகுந்திவ்நாரி நானுனக்காளபாரி<br>
களிவெவொய்யாரி நான்கெட்டிக்காரி. (தூக்)

௬. செப்பூறுக்தேனே நீதர்மவானே<br>
பொற்பாதங்கானே பூசிக்கிறேனே (தூக்)

உடாங்கனை-வசனம்.

ஆகா நெருப்பெண்ணே சித்திரரேகாய்! நான் அனேகவந்தனோடு கூப்பிட்டுமென்சாமி தூக்கந்தெளிந்தெழுந்திருக்கவில்லையே இனியென துகைகளினால் தட்டி யெழுப்பட்டுமா தோழி.

சித்திரரேகை-வசனம்.

அம்மா பொறுத்தது பொறுத்தாய். இன்னும்அரைநாழிகை பொறம்மாதாயே.

உடாங்கனை-வசனம்.

சவிவிமேல் அரைநாழிகையாவது விச[illegible]ம் சகிக்கமாட்டேன் சித்திரரேகாய்.



சித்திரரேகை-வசனம்.

ஆமம்மா! நானனேகம்பெண்களைக் கண்டிருக்கிறேன், உன்னைப்போல் இப்படி யேறுமல்லித்தனம் பண்ணுகிறவளை கண்டதில்லை, வீண் அட்டாதொட்டி பண்ணினால் இந்தமகராசன் எழுந்திருந்து பார்த்து தன்பெண்சாதி யில்லாதிருப்பதையும், மண்டபமாறி யிருப்பதையுங்கண்டு கத்தியையுருவி நம்மிரண்டுபேரையும் ஒரேவெட்டாய் வெட்டிப்போடுவான்; போட்டால் அப்புறம் ஏறுமல்லித்தனம் எங்கேபண்ணுகிறது இன்னும்அரைநாழிகை பொறுமம்மாதாயே.

உடாங்கனை-வசனம்.

வீசநாழிகைகூடப் பொறுக்கமாட்டேன் சித்திரரேகாய்.

சித்திரரேகை வசனம்.

ஆனால்சரி, விலங்குபூட்டியிருப்பினும் வேலிதாண்டிக் குதிக்கிற கள்ளனுக்கு விலங்கைத் தரித்துவிட்டால் விண்ணுலகமொரு பொருட்டா, கணக்குத்தெரியாமலே கணக்கப்பிள்ளைகளை யேய்க்கிறவனுக்குக் கணக்குத்தெரிந்தால் கச்சேரிவாசலொரு பொருட்டா, சதுருபாயந்தெரியாமலே தாசிகளை யேய்க்கிறவனுக்கு சதுருபாயந்தெரிந்தால் சமஸ்தானமொரு பொருட்டா, அருஞ்சிறையில் வைத்திருக்கவே அவசாரிபோகிற யுகாரசிக்கு அருஞ்சிறையை நீக்கினால் அசத்தியமொரு பொருட்டா, கண்தெரியாமலே தாசுமாறுகிற பயல்களுக்கு கண்ணுந்தெரிந்தால் கம்மாளத்தெருவொரு பொருட்டா, கொலைகளவுதெரியாமலே குடிகெடுக்கிற பயலுக்கு கொலைகளவு தெரிந்தால் குருநிந்தையொரு பொருட்டா, உதட்டுப்புண்ணோடே ஊர்சண்டையெல்லாம் பிடிக்கிறவனுக்கு உதட்டுப்புண் தீர்ந்தால் உலகத்துச்சண்டையொரு பொருட்டா, வழக்குத்தீர்க்கத் தெரியாமலே மணியம்பண்ணுகிறவனுக்கு வழக்குத்தீர்க்கத் தெரிந்தால் மாநிலமாள்வதொரு பொருட்டா, அப்படிப்போலே இந்தமகாராசனை இங்கேகொண்டு வருவதற்குமுன்னே நீயும்நானும் துவாரகாபுரிக்குப்போய் அந்தமகாராசனைக்கண்டு பேசிவரலாம் வாவென்று அழைத்த மகாராசிக்கு அந்தமகாராசனை இங்கே இருகண்ணுலுங் கண்டபோது இனிகையால் தட்டியெழுப்புவதற்கும் மல்லுகட்டுவதற்கும் தொடுவதற்கும் பயப்படுகிறவளா, இனிபுன்மனதின்படி நடந்துகொள்ளலாமம்மாதாயே.

உடாங்கனை-வசனம்.

அப்படி பேசல்லது பாங்கி.

உடாங்கனை-தீபதை-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

க. அச்சுதன்போனமுகையெல்லாங்கூர்ந்து பார்த்தனள் - நன்றாய்
மெச்சிமெச்சிமுகமீது மூக்மெல்லச்சேர்த்தனள்

உ. கும்பஸ்தனங்களின்கொம்பாலே கண்களைத்தாவினாள் - நல்ல
செம்பவளம்போலச்செவ்வாயில் நாசியைச்சீவினாள்

௩. கன்னங்கள்மீதுதன்கன்னங்களைவைத் துலாவினாள் - பின்னும்
மன்னன்முகத்தைதமரைமலர்க் கையாலேபாவினாள்

௪. செவ்விதழ்மீதுதன்செவ்விதழ்தாக்கி யிணைந்திட்டாள் -பின்னும்
கொவ்வையிதழ்மீது கும்பஸ்தனங்களை அணைந்திட் டாள்

௫. மோகத்துரையாலேமுகமீதுபன்னீரைத் தேய்த்தனள்-பின்னும்
வேந்தன்செவ்வாய்தனில் மெள்ள நவிராவைப்பாய்ச்சினள்

௬. கூசாமற்றுயில்பவன்குடுமியைக்கைகளில் பற்றினாள்- அதில்
வாசம்பொருந்தியமாலைநன்றாகவே சுற்றினாள்

௭. நடுநுதல்மீதினில்கஸ்தூரிக்கச்சாந்துப் பொட்டிட்டனள் - நல்ல
இடதுகன்னத்திலேயெழிலாகதிருஷ்டிப் பொட்டிட்டனள்

௮. கண்ணாடிபோலாகுங்கன்னங்கள்மேல்மூகம் தேய்த்தனள்-பின்
னும்
தண்ணியதானநவிராவைச்செவிகளில் பாய்த்தனள்

௯. வாழைகுருத்துநேர்மன்னன்கழுத்திற்கை பூசினாள் - நல்ல
சேலைச்சிறகினாற்சிங்காரன்முகமெல்லாம் வீசினாள்

௰. தங்கச்சரங்களைத்தாமரைக்கைகளில் நீக்கினாள் - பின்னும்
கொங்கைக்குடங்களைக்கொற்றவன்மார்பிலே தாக்கினாள்

கக. முத்தங்கள்வைத்தமுகமந்தன்கனையெல்லாம்பூசினாள்- எந்தன்
கந்தனேயென்றுகவரிக்குஞ்சங்களை வீசினாள் [னும்

கஉ. கும்பஸ்தனங்களைக்கொற்றவன் கைகொண்டுபோத்தினாள்-பின்
கம்பீரமாகவேகர்ப்பொடிகளைத் தூற்றினாள்

க௩. மன்னவன்கையொடுமாதுடாங்கனைகைகள் பன்னினாள்-பின்னும்
பின்னலைவாங்கியே பின்னும்விரல்களைப் பின்னினாள்

க௪. விந்தையிருந்தவன் விரலோடும்விரல்களைச் சேர்த்திட்டாள்-நல்ல
சுந்தரன்மீதிலேசொர்ணாரவைகளை வார்த்திட்டாள்

க௫. மாமயில்போலமதன்மகன்மார்பினில் சாய்ந்திட்டாள் - பின்னும்
பூவலங்காமலே பூவலன்மீதினில் பாய்ந்திட்டாள்



க௬. இடையெழிலைப்புகழ்ந் திருந்தவிதுமெள்ளத்தாவினாள்-நல்ல
துடைகளைச்செங்கையால் தொட்டுப்பிசைந்ததை நீவினாள்

க௭. கன்னங்களாற்சீவிக் கால்களின்மேற்றலை சாய்த்தனள்-பின்னும்
பின்னுங்கொங்கைக்குடமீது முழங்காலைத்தேய்த்தனள்

க௮. கால்மாட்டிலேராமே காரிகையொயிலாகக் குந்தினாள் - பின்னும்
மீமாட்டிகால்தொட்டு செங்கைகள்கூட்டவே முந்தினாள்

க௯. புழுலைக்கெளிம்பாலே பொற்பாதம்ரண்டையும் தூத்தினாள்-நல்ல
தாமரைக்கால்களைத் தங்கமடிமீது வைத்தனள்

உ௦. உத்தமிதன்னையால் உள்ளங்கால்ரண்டையும்நெருடினாள்-பின்னு
நித்திரைதெளியவே நகங்களினால்மெல்ல வருடினாள்.

பொது விருத்தம்.

நிலைவளிதையிவ்விதமா யிருப்பதத்தை
நெருடிமகிழ்ந்திடுமெளவில் நித்ரைநீங்கி
மலரணையின்மீதினன்பாய் அனங்கன்சேயன்
வாரிதியின்மாயனை வெழுந்தபோது
தலைவனையுமசாருல வாணாசுரன்
தனுசையெழுந்தே மறையத்தானேசொல்வுரன்
சிலையெனமுன்னுகிற்குஞ் சித்திரரேகை
திடமுடனேதெளிவாய்ப் பார்த்திடும்புவானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் புஷ்பசயனத்திலே நித்திரைசெய்யும் அனிருத்தமகாராசன்பேரில் உடாங்கனை புஷ்பங்களையும் பன்னீர்முதலிய திரவியங்களையும் இறைத்து உள்ளங்கால்களை நெருடுகிறவேளையிலே, அனிருத்தமகாராசன் நித்திரைதெளிந்து எழுந்திருந்து பார்க்கும்போது உடாங்கனை மறைவிலே போய்மறைந்துகொண்டாள். உடனே சித்திரரேகை யெதிரிலே வந்துநின்றாள் - அப்போது தன் அரண்மனையில்லா திருப்பதையும்பெண்சாதியில்லா திருப்பதையும்சித்திரரேகை நிற்பதையுங்கண்டு அனிருத்தமகாராசன் சொல்வதுஎப்படியென்றால்.

அனிருத்தன்தரு-இ-ம். புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

என்னகாரணமோ - இது
வென்னகாரணமோ-

அநுபல்லவி.

என்னுகாரணங் கனகமாடங்கள்
ஏந்தத்தீபங்க ளெங்குமுழங்கவே. (என்)

சரணங்கள்.

௧. பந்தியாகவுமே - நல்ல - விந்தையாகவுமே - திரும்பிப்
பார்த்தவிடமெங்கும் நீலக்கண்ணாடிகள்
பளீர் பளீரென்று பாந்துமின்னுவ. (தென்)

௨. சோடுநிலவுகளும்-தன்னை-மூடும்பலகைகளும்-எல்லாம்
சொர்ணமயமாகவேயிருப்பதுவும்
சூத்திரங்களும்வேறேயானதும். (என்)

௩. வாடைவீசுவதும் - கிளிகள் - சாடைபேசுவதும் - மின்னும்
மயிலினங்கள் வேறையானதும்
மாடப்புருக்கள்வேறேயானதும். (என்)

௪. நாகமண்டபமோ - எந்த - லோகமண்டபமோ - இது
நம்மமண்டபந்தன்னைக்காட்டிலும்
நாகரீகமாயிருப்பதும். (என்)

௫. ஆழிக்கொடிகளுமே - இரா - வாழைச்செடிகளுமே-எழுதிய
அழகுநுணைநுசித்திரங்களை
ஆய்ந்துபார்த்துநடனமாடுவ. (தென்)

௬. மணிகள்மின்னுவதும் - சில - பணிகள்மின்னுவதும் - உயிர்
வச்சிரராசிகள் குவிந்திருப்பதும்
வாசமலர்கள் நிறைந்திருப்பதும். (என்)

௭. கலீர்கலீரெனவே - வளைகள் - சலீர்சலீரெனவே - ஒருவர்
கைகளால்பிடித்தாட்டொணாமல்
கனகமஞ்சனம் ஊஞ்சலாடுவ. (தென்)

௮. வர்ணபேதகமோ - வானது - சொர்ணபேதகமோ - உயர்
மண்டபங்களும் வேறேயானதும்
மனைவிருக்குமிமாயமானதும். (என்)

௯. சந்திரச்சிலையைப்போல-வெகு-சுந்தரக்கலையைப்போல- என்
சார்ந்தருக்குமிதன்னைப்போலொரு [லைச்
தையுமெதிராகநிற்பதும். (என்)

போது வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்தமகாராசன் திகைத்துச் சொல்லி நா
லு மூலையும் பார்த்தான்.



போது விருத்தம்.

அண்டர்துதித்திடுந் துவரைநகர்புகுந்தே
யாயிழையைதனைதனிலேயடைவாய்விட
எண்டிசையுள்ளோர்களுக்குந் தெரிந்திடாமல்
இருட்டிவிந்தக்கட்டிலொடு மெதுவாய்த்தானே
கொண்டுவந்துஇந்த மனைதன்னிற்சேர்த்து
கோலமதையோசித்துக் குடங்கைதாக்கி
தொண்டைதொனிசலசலென நகைக்கும்போது
தோழியடிபணிந்து துதிக்கின்றாளே.

வசனம்.

தேவர்புகழும் துவாரகாபுரிபட்டணத்திலே அஞ்சாமல் புகுந்து எப்படியோ ருக்குமிதேவியையும் பிரித்து இந்த அந்தகாரமாகிய இருட்டிலே கட்டிலோடு என்னைத் தூக்கிக்கொண்டே வந்திட்டார்களோ, என்னவோ ஒன்றுந் தெரியவில்லை. என்னுடைய அரண்மனையிலும் அற்புதமான இந்த மண்டபத்தில் என்னையார்கொண்டு வந்தார் என்று கைதட்டிச் சிரித்தான். அப்போது சித்திரரேகை மெதுவாய்வந்து கும்பிட்டுச் சொல்லுகிற விருத்தாந்தம்.

சித்திரரேகை-நாமாவளி-இராகம். புன்னாகவராளி-அடதாளம்.

௧. சித்தசன்மைந்தனேசரணம் - அரி-சீதரன்பேரனேசரணம்-நல்ல
சித்தசிங்காரனேசரணம் - திவ்ய - ஸ்திரீகள்ஒய்யாரனேசரணம்
வித்தாரவசனனேசரணம் - நல்ல - வேடிக்கைலோலனேசரணம்
அத்திரசயனனேசரணம் - இசை-யனிருத்தராசனேசரணம்.

௨. சதுர்முகன்மகிழ்புவாசரணம் - சார - சங்கீதலோலனேசரணம்
மதியெனும்வதனனேசரணம்-எழில்-மதனஒய்யாரனேசரணம்.
ரதிதேவிபாலனேசரணம் - திவ்ய - ரஞ்சிதந்திரனேசரணம்
அதிவிதரூபனேசரணம் அனிருத்தமாராசனேசரணம்.

௩. விக்கிரமரூபனேசரணம் - மிக-வேதாந்தலோலனேசரணம்
கொக்கோகசாசனேசரணம்-மிகு-கூர்ந்தவிவேகனேசரணம்.
ருக்மணிபேரனேசரணம் - எழில் - ருக்குமிகாந்தனேசரணம்
அக்கிரமலோலனேசரணம் - செய-அனிருத்தராசனேசரணம்

௪. கிஞ்சுகநடையனேசரணம்-நாத-கீதப்பிரசங்கனேசரணம்
உஞ்சிதநேயனேசரணம் - இந்திர - உல்லாசலோலனேசரணம்
ரஞ்சிதரூபனேசரணம்-சகல - ராசர்களுல்லாசனேசரணம்
அஞ்சிடாவீரனேசரணம் - அனி - ருத்தமாராசனேசரணம்.

சித்திரரேகை விருத்தம்.

அருணனேர்பயன்மாதுஅழகுருக்குமிசமேதா
கருணையால்குரன்மாதைக்கனவினிற்கலந்தநாயி
இரணியச்சுடருமெரவ்வர்இரண்டுசெங்கமலத்தாட்கு
சரணமேசரணமென்னைத்தற்காத்தாட்சியையா.

வசனம்.

அகோவாரும் ராசாதிராசகெம்பீர ராசகோலாகல ராசப்பிரபு டீக அனிருத்த மகாராசனே! அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின்பேரனே சரணமையாசுவாமி,

அனிருத்தன் விருத்தம்.

சரணமென்றுனைகருவித்தமாதேயுத்தன்
சாதிபெயருந்தந்தைதாயின்பேரும்
கருணையுடனேதிபென்னைக்கட்டிலோடே
களவுசெய்தவாறுமெந்தன்காதல்தீர்க்கும்
அருணனைக்குயிலுமன்றந்தவாறும்
அந்தமுளமண்டபம்வேறானவாறும்
திரணமெனுமொழியாயத் பயப்படாமல்
சிந்தைமகிழ்ந்திடசுணம் நீசெப்புவாயே.

வசனம்.

அகோவாரும்பெண்ணே! என்னைத்துதிசெய்துநிற்கிறதியார்? உன் பெயரென்ன? தந்தை தாய் பெயரென்ன? என்பெண்சாதியைப் பிரித்துப்போட்டு என்னை இந்தக்கட்டிலோடே இங்கே கொண்டுவந்தவர் யார்? எல்லா விபரமும் பயப்படாமலும் ஒளியாமலும் சீக்கிரமாகச் சொல்லும்பெண்ணே!

சித்திரேகை வசனம்.

அப்படியேசொல்லி வருகிறேனையா சுவாமி.

சித்திரரேகை தீபதை-இ-ம்-புன்னுகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

க. சரணஞ்சரணமையா - மன்மதராசன்
தனயனேசரணமையா - இப்போ
திரணமனவுந்தானே மறைக்காமல்சேதியை
செப்புவேன்கேளுமையா.

உ. சகலசெல்வத்துடனே - நாங்கள்
தழைக்கும்பட்டணமிதுவே - சொந்தம்
சோகமண்டாதிந்தப் பட்டணத்தின்பெயர்
சோணிதாபுரிதானையா.



௩. தேவர்களும்புகழ - இந்நகரிற்
செங்கோற்செலுத்திடுவார்-சக்ர
மாவலிவாணசுமகனு மவன்பெயர்
வாணாசுரன்தானையா.

௪. மாயவன்தங்கைதனைத் - தாமே
மணஞ்செய்தசிவனருளால் - நல்ல
ஆயிரங்கைவாணன் பெற்ற மகள்பேரு
டாங்கனையென்பாரையா.

௫. செயவாணன்மந்திரிமகள்நா - னென்பெயர்
சித்திரரேகையென்பார் - அந்த
நயகுணசாலியா முடாங்கனைக்கேதினம்
நான்துணைப்பாங்கியையா.

௬. ஆதிசிவன்தேவியார் - அகி
லாண்டேஸ்வரிதானே - சொன்ன
நீதிவழுவாமலுனை யுடாங்கனை
நித்திரைசெய்தாளையா.

௭. பரிசையுடனுமையாள் - சொன்ன
வார்த்தைநிச்சயமாகவே - எங்க
ளரசியுடாங்கனை கனவிலேயுந்த
னழகினைக்கண்டாளையா.

௮. சொந்தமொழிகள்பகர்ந்து - தொங்கல்நடுவில்
சுந்தரமாகவேதான் - அவள்
சொருகுசடைக்குந்தலில் காவிமலர்களைச்
சூட்டவுங்கண்டாளையா.

௯. முத்தங்களைக்கொடுத்து - சந்த்ர
முகமீதுமுகமணைத்து - பின்னும்
வெற்றிலைதீனருந்தி சரசவார்த்தைபேசி
விளையாடக்கண்டாளையா.

௰. கூர்மைகொண்டேயுலங்கும் - அவள்
கொங்கைக்குடங்கள்பற்றி - உந்தன்
மார்பிலழுந்திடவே கொக்கோகசாஸ்திரம்
வாசிக்கக்கண்டாளையா.

கஉ. வெல்லாண்மைகள்பேசியே - மௌன
விஸ்தாரங்களாடியே - சகல
சல்லாபலீலைக ளுல்லாசமாகவே
சாதிக்கக்கண்டாளையா.

கங. சாந்துசவ்வாதணைந்து - மதன
சாஸ்திரமுறைறதெறிந்து - மார்பில்
சேர்ந்தணைந்திதமாகவேசையோகம்
செய்திடக்கண்டாளையா.

கச. புருஷன்லபித்தானென்று - இரண்டுகையில்
போர்த்திக்கொண்டேமகிழ்ந்து - வெகு
அருகில்தூக்கந்தெளிந்துதன் கண்களை
திறந்துதான்பார்த்தாளையா.

கரு. மனதிஷ்டத்துடன்பார்க்கவே - அப்போ
மன்னனுன்னெழில்காணாமல் - மீறும்
அனல்பட்டமெழுகுபோல்சிந்தைதானுருகியே
ஆயாசங்கொண்டாளையா.

கசு. இறைவனையுன்னமுதை - உடாங்கனை
யிரத்தீம்பசவும்ஙினைந்து - நீர்தான்
மறைந்துசென்றதைநத்தாளென்பித
மன்தாசைகொண்டாளையா.

கஎ. பாலன்னம்உண்ணாளையா - நல்ல
பலகாரம்வேண்டாளையா - பின்னும்
சிலம்பொருந்தியவெற்றிலைபாக்குத்
தினமுமேவேண்டாளையா.

கஅ. மஞ்சனைப்பூசாளையா - நல்ல
மலர்வகைசூடாளையா - கூட்டில்
பஞ்சவர்ணங்கொண்டகிளிகளுடன்நல்ல
பாஷைகள்பேசாளையா.

க௯. நகைகளைப்பூணாளையா - நடன்
காட்டியம்பாராளையா - இந்த
செகதன்முழுவதும்விலை கொண்டமாந்தளிர்
சேலைகள்வேண்டாளையா.



உ0. பரிமளம்பூசாளையா - பின்னும்
பகடைகளாடாளையா - அவள்
பண்புடன்வளர்ந்தவும்ஆடான்கிளிதப்
பரியேற்றங்கொள்ளாளையா.

உக. சந்தனம்பூசாளையா - சரச
வார்த்தைகள்பேசாளையா - நல்ல
சதுரங்கமாடாளேதோழிமார்தன்னோடும்
தான்வார்த்தைசொல்லாளையா.

உஉ. சதிருகள்கூட்டாளையா - வீணை
தம்புருமீட்டாளையா
மதுகரிமீதிலும்பல்லாக்குரதங்களில்
மகிழ்ந்தேறவேண்டாளையா.

உங. சங்கீதம்பாடாளையா - வேத
சாஸ்திரம்பாராளையா - நல்ல
சிங்காரச்சோலைக்கேபோகாளையாநல்ல
செண்டுகளாடாளையா.

உச. தேகம்இளைத்தாளையா - மனதில்
தெய்வத்தைநொந்தாளையா - நல்ல
மோகதாகந்தானே பொறுக்கமாட்டாமலே
முகவாட்டங்கொண்டாளையா.

உரு. வடிவங்குறைந்தாளையா - பின்னும்
வாய்நாவுலர்ந்தாளையா - நல்ல
கடலின்தொனிகளாலும் மயிலின்தொனிகளாலும்
கலைந்துவிழுந்திட்டாளையா.

உசு. தேமதியுந்தென்றலும் - ரதை
இந்தும்அங்கசமதனும் - செய்யும்
வேதைபொறுக்காமல் மனதினிலேங்கியே
விதனமடைந்தாளையா.

உஎ. சுற்றிலும்பார்ப்பாளையா - உனைநினைந்து
சோர்ந்துவிழுந்திடுவாளையா - மாது
நித்திரைசெய்யாமல் பின்னுங்கண்ணீர்தானே
நிலமீதுசொரிவாளையா.

௨௮. தானைகுழல்முடிந்து - பின்னும்
தானைகுழல்சரிந்து - இது
ஏனென்றுகேட்கவே அருகில்வந்தவரை
எட்டியடிப்பாளையா.

௨௯. சோபிதங்கொண்டாளையா - பெண்ணாள் உத்தன்
சுந்தரத்தைநினைந்து - அந்த
மூவர்களும்வாயாற் சொல்லக்கூடாவிதம்
மோகமேகொண்டாளையா.

௩௰. என்தாயார்க்கிந்தவிதி - தந்த
இஷ்டங்களைநினைந்து - அயன்
பெண்சாதிவாய்விட்டளவிடக்கூடாத
பித்தமேகொண்டாளையா.

௩௧. தாதிநானுன்னழகை - மெய்ய
தாகவுஞ்செய்யாவிட்டால் - வீணில்
மாதுபிராணனைமாய்த்துக்கொள்வாளென்று
மனதிற்குத்தோன்றிற்றையா.

௩௨. ஈசனும்அரியயனும் - பின்னும்
எண்ணேழுதேசத்தாரும் - நல்ல
வாசம்பொருந்தியராசரையெல்லாம்நான்
மடலில்வரைந்தேனையா.

௩௩. கோலமிட்டுன்னழகை - மடலைத்தானே
கோதைகையிற்கொடுத்தேன் - ரதி
பாலகனேநீதான்படத்திலிருந்தின்ற
பாங்கினைக்கண்டாளையா.

௩௪. அந்தரமாய்க்கனவில்வந்தே - எந்த
ஞவியைக்காந்தோனிந்த - வெகு
சுந்திரத்துரையிவனிவனிவனிவனென்றே
சொல்லிடைவிடாதுரைத்தாள்.

௩௫. கன்னங்கள்மீதணைந்து - மடலைத்தானே
கண்களிலேற்றிணைந்து - நன்றாய்
முன்னந்தம்பின்னந்தம்தன்னைப்பார்த்தாயிர
முகமீதுசேர்த்தாளையா.



௩௬. பண்புடனேயுனது - எழில்மிகுந்த
பாதங்களுக்குநன்றாய் - வெகு
கும்பிடுபோட்டனள்மடலைத்தானேகொங்கை
குடங்கள்மீதணைத்தாளையா.

௩௭. நாதிநிசமாய்ச்சொல்லவே - எனக்குச்
சகலசெல்வமுங்கொடுக்கும் - நல்ல
நாதனேநீயென்றுன்காலுக்கோராயிரம்
நமஸ்காரம்செய்தாளையா.

௩௮. பாரடிபாங்கியென்று - அந்தப்
படத்திலெழிலைமெச்சி - உத்தன்
பேரையுமூரையும் குலகோத்திரத்தையும்
பேசென்றுகேட்டாளையா.

௩௯. பார்த்திபாவுனதுபேரும் - உனது
பட்டணத்தின்பேருமுத்தன்
கோத்திரம்குலவழி தந்தைதாய்பேரும்நான்
குறிப்புடன்சொன்னேனையா.

௪௰. மாயன்வாழ்துவரைசென்றே - மந்திர
மாய்கையாலுனையெடுத்து - கொண்டு
வரச்சொல்லிச்சொன்னாளென் னுடன்தானேநற்குண
வாதியுட்டாங்கனையே.

௪௧. திரவியங்கள்திருடலாம் - ஆனை
சேனைகளும்திருடலாம் - நல்ல
தெய்வத்துரைகளைத் திருடவென்னலாகா
தென்றுபின்சொன்னேனையா.

௪௨. தேவர்கள்புகழ்துவரை - யென்னும்
திருநகர்தனிற்புகுந்தால் - புண்ணாம்
ஆவலால்தாடகைகதியெனக்காமென்று
அடைவுடன்சொன்னேனையா.

௪௩. புரட்டுக்கும்நோய்களுக்கும் - மந்த்ராப்
புல்லர்குனியங்களுக்கும் - பாவத்
திருட்டுக்கும்இடந்தராத் தெய்வீகமாநகர்
தெரியென்றுஞ்சொன்னேனையா.

௪௪. மனம்போனவழிகளெல்லாம் - போனால்
மானபங்கமும்வருகும் - நல்ல
கனம்போகும்உயிர்போகும் அபாயங்கள்வருமென்று
கனத்துடன்சொன்னேனையா.

௪௫. இராகவற்கனுசாரமாய் - விபீஷணன்
ராவணனுக்குரைத்தான் - அதுபோல்
போகக்கூடாதென்றென்தாய்க்குநானும்பல
போதனைசொன்னேனையா.

௪௬. எத்தனைபுத்திகளைச் - சொல்லியுங்காதி
லேற்றுக்கொள்ளாமலுந்தன் - அந்த
உத்தமிமடல்தன்னிலுந்தனழகுதனை
யோயாமல்பார்த்தாளையா.

௪௭. வல்லாண்மைகளைமறந்து - முகம்
வாடியேமதிமயங்கி - பின்னும்
சொல்லமுடியாதவிரகவாதைதயிற்சிக்கி
அயாமேகொண்டாளையா.

௪௮. தூங்கும்போதுகனவில் - உனைச்சேர்ந்தாள்
அயாத்தைத்தீர்க்கவென்றே - யெண்ணி
பாங்கிநானிரவினில்துவாரகாபுரியெனும்
பட்டணஞ்சேர்ந்தேனையா.

௪௯. அந்தமதாகவந்து - இரண்டுபேரும்
அறுசுவைகள்அருந்தியே - அப்பால்
சந்தனம்பூசியேமலர்சூடித்தாம்பூலம்
சாதிக்கக்கண்டேனையா.

௫௰. இங்கிதமாகவேதான் - இருவரும்
ஏகபோகம்விளைத்து - நல்ல
தங்கக்கட்டிலின்மீதிலிருவருங்கூடிச்
சயனிக்கக்கண்டேனையா.

௫௧. பக்கத்திலேவந்திருந்து - போர்த்திருந்த
பட்டாடைதன்னைநீக்கி - சந்தனம்
சொக்குப்பொடித்தூவிஇருவரையும்மெள்ளத்
தோழிநான்பிரித்தேனையா.



௫௨. பிரித்திடலாகாதென்றே - யெண்ணியும
டாங்களைப்பெண்டுபரம் - தன்னை
பெரிதாகவெண்ணியும்தேவியைத்தரைமீது
பேசாமல்வைத்தேனையா.

௫௩. தந்தக்கட்டிலோடுன்னையே - வலக்கையில்
தாங்கியெடுத்துக்கொண்டு - உந்தன்
விந்தைமாளிகைநீங்கிமுகாத்தினமுநீங்கி
விண்மீதுபாய்ந்தேனையா.

௫௪. சனுதாகஇங்கேவந்து - உன்னைத்
தமனியக்கட்டிலோடே - மெள்ள
அறுங்காமற்கைகாலுடாங்களைமுன்பினில்
அழகுடன்வைத்தேனையா.

௫௫. மாதும்உன்பாதங்களை - யேந்தி
மடிமீதுவைத்துக்கொண்டு - உந்தன்
பாதாதிகேசம்வரையில்அழகெல்லாம்
பார்த்துமகிழ்ந்தாளையா.

௫௬. சிதமலர்நித்திரை - நீர்தாவிப்பேர்
தெளிந்திடக்கண்டவள்தான் - சனுதாய்
மாதுவெட்கத்தாலேதமனியத்தூண்களின்
மறைவில்போய்நின்றாளையா.

௫௭. நம்பிக்கையாகவிப்போ - இங்கே
நடந்தவாறிதுதானையா - பின்னும்
உன்சித்தமென்பாக்யமென்றுள்ளகாரியத்
ஒளியாமல்சொன்னேனையா.

௫௮. கூடாமல்நானேவந்து - நானேசெய்த
குற்றமெல்லாம்பொறுத்து - ஜய
ராசாதிராசாவென்தாயின்பிழைபொறுத்து
ரட்சிக்கவேணுமையா.

போதுச்சந்த விருத்தம்.

நந்துகழுந்தினள்சித்திரரேகை நடந்தவிதங்களெலாம்
வந்தனையோருரைசெந்தவிடாமல் வரைந்திடவேள்சுதனும்
சிந்தைகுளிர்ந்துஇருந்திடுவிந்தை தெரிந்துஉடாங்களைநான்
சந்திரத்தூணணிமறைவினிநின்றியே சதுதுடன்வந்தனளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்த மகாராசனோடு சித்திரசேனையானவள் ஆதியோடந்தமாக நடந்தவாலாறுகள் முழுவதும் சிறிதும் ஒழியாமல் சொல்லிக்கொண்டு வருகிறபோது அனிருத்தமகாராசன் காதுகுளிரக்கேட்டு சந்தோஷமடைகிற சாடையைத் தூண்மறைவிலே யிருந்த உடாங்கனையானவள்கண்டு மெல்ல நடந்து அனிருத்த மகாராசன் எதிரிலே வருகிறவிதங்காண்க.

உடாங்கனைவருகிற-தரு-இ-ம்-ஓந்துஸ்தான்காப்பி-ஏகதாளம்.

பல்லவி.

பாங்கி துவக்தாள் - வாணாசுரன்மகளுடாங்கனை வந்தாள்.

அநுபல்லவி.

தூங்கையிற்கனவி லணைந்தவன்முன்னே
தாங்கிர்தகிட கிட தளாங்குதோமெனா. (பா)

சரணங்கள்.

௧. சித்திரக்கம்பத்தினைத் தாங்கியே
பத்தரைமாற்றபாஞ்சி நீங்கியே. (பா)

௨. பதிவிரதையென சதிசுதனேற்கவே
சதிமகனிட அதிவிதம்பார்க்கவே (பா)

௩. சத்திஇருபையைப் பற்றினள்நண்ணியே
நத்தினஅலமித்ததென்று எண்ணியே. (பா)

வேறு பல்லவி.

வந்தனள் வச்சிரம் - வாணாசுரனளித்த
தந்திரசித்திரம்.

அநுபல்லவி.

சுந்தரவுடல் பளபளபளவென
சந்திரமுகம் தள தள தள வென (வந்)

சரணங்கள்.

௧. குயிலொலியானது சலி சலி சலி யென
காவனைசதங்கைகள் கலி கலி கலி யென (வந்)

௨. சாந்தணிகடமொளி நகு நகு நகு வென
மாந்தளிர்க்கலை நெகு நெகு நெகு வென (வந்).



வேறு பல்லவி.

மாமலர்க்கொம்புபோல் வந்தாள்-உடாங்கனையாம்
தாமரைச்செம்பு.

அநுபல்லவி.

மாமலர்வாவெனும்கைவளைகளதுங்கிட
தேமலாடர்தனங்கள்குலுங்கிட. (மா)

சரணங்கள்.

௧. தயிரியந்தனை மனதினில்நாட்டியே
நயனங்களிரண்டையஞ்சனந்தீட்டியே. (மா)

௨. செங்கையிலேடு செங்கையைத்தாக்கியே
அங்கசன்மகன்மதிமுகம்நோக்கியே. (மா)

௩. மின்னற்கொடியிடை துவண்டசைந்திட
சொர்ணப்பணியாடமெய்பசைந்திட. (மா)

வேறு பல்லவி.

சித்ரசிங்காரி - வாணாசுரன்
பெற்றவொய்யாரி.

அநுபல்லவி.

சத்தியமுளபத்னியியங்கவே
சித்தசன்மகன்புத்திமயங்கவே.

சரணங்கள்.

௧. இந்திரன்இந்திராணியும்போலவே
சுந்தரமதன்தேவியும்போலவே. (சித்)

௨. அன்னமெனும்நடையாளறிவுள்ளவள்
மின்னலெனும்இடையாள்குணமுள்ளவள். (சித்)

௩. சேடனுடையஆயிரம்வாயொடு
பாடவும்அரிதாகியவெழிலொடு. (சித்)

வேறு-தரு-இ-ய். பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

உல்லாசஅபிநயமிருந்தாளே - வெகு
ஒயிலாயுடாங்கனைதான்வந்தாளே.

அநுபல்லவி.

எல்லாவைபோகத்திலும் - சல்லாபமார்க்கத்திலும்
நல்லநெல்லாநெகிழ்ந்து - வல்லார்வர்ணிக்குந்திவ்ய. (உல்)

சரணம்.

௧. அலுங்கக்கரவளை - குலுங்கப்பரிபுர
மிலங்கச்சிறுநகை - துலங்கப்பணிவொடு. (உல்)

வேறு பல்லவி.

வந்தாள்வாணசுரன்மகள்தானே - கனே
வாளும்விழிக்குநிகர் மடமானே

அநுபல்லவி.

சந்தங்கஸ்தூரிபூசி விந்தையாய்க்கைகள்வீசி
சொந்தவார்த்தைகள்பேசி யிந்திராணிதனையேசி. (வ)

சரணங்கள்.

செம்பொற்குடங்கள்நிகர் கும்பஸ்தனங்கள்மிக
விம்மிக்குலுங்கவதி சம்பத்துடனேசுகுணம். (வ)

வேறு பல்லவி.

சதுராய்வந்தாள்வேடிக்கைக்கெசமானி - உடாங்
கனிதானென்றுசொல்லுந்துரைசானி

அநுபல்லவி.

விலைதானதிகம்பெற்ற கலைநாயெனுகு செகெண
இலைநேர்துதனிலான்ற திலகம்பளபளென (சது)

சரணம்.

எத்திசைகளுமலர் அத்திரத்தால்வெல்லும்
சித்தசனருளிய புத்திரன்முன்வெகு (சது)

வேறு பல்லவி.

செகமோகினிபோல்வந்தாள் ஒய்யாரி - இவள்
தேவிகிருபைதான்பெற்ற சிங்காரி

அநுபல்லவி.

பகலோன்மனதுவெட்க மிகவேசோதிப்பிரகாச
நகைதான்துலக்கமதன் மகனேமதிமயக்குவேசா (செ)

சரணம்.

செகமோகினிபோல் வந்தாளொய்யாரி
நீட்டிக் குரலொலி திட்டிப் பகட்டு கண்ணொட்டி
சுழட்டு மொட்டிக் கதிபதி (செ)

பொது விருத்தம்.

வனிதையிவ்விதங்களாக வனசமாம்போது வந்து
கனவினிற்சேர்ந்தோனென்று கருதியேகூர்ந்துபார்த்து
நினைவினில்நினைந்தமார்க்கம் நேரகாப்புமுடிந்ததென்று
மனமகிழ்ந்திடமன்றன்னை மதிக்கின்றுள் துதிக்கின்றாளே.



வசனம்.

இந்தப்பிரகாரம் தூண்மறைவை விட்டு வந்த உடாங்கனையானவள் மனமகிழ்ச்சியோடு அனிருத்தமகாராசனை வணங்கித்துதிக்கின்ற வரலாறு எப்படியென்றால்.

உடாங்கனை-தரு-இ-ம்-புன்னாகவராளி-மட்டையம்.

பல்லவி.

மதன்மகனேசரணம் - எந்தன்
மகிழ்நாவுன் சரணம்.

அநுபல்லவி.

மரைமலர்நேர்குமுந்தன்
இருபதமேசரணம்.

சரணங்கள்.

௧. சதுர்முகன்படைப்பிறேனென் சத்திகிருபையாலும்
சகியாள்சித்ரரேகையாலும் சுவாமியுன்முகங்கண்டேன்
சுகிபுடனேநான்சகல பாக்யவதியானேன்
சுந்தரனேமனதிலுள்ள துயரமெல்லாம்விண்டேன். (மதன்)

௨. கன்னல்வின்மன்மதனும் ரதிஇருவருமொர்கிலையாய்
காசினியிலிதவயிருந்தாகன்றுடனே தந்த
மன்னவனேயுன்மனையாள் இவ்வருக்குதேவி
மாதிநெனுனென்னையுந்தான் ரட்சிக்கவேவந்த. (மதன்)

௩. இன்பமுடன் துன்பமதும் இரண்டுமெனுபவித்தேன்
இனிமேலெந்தன்வழிபெழுதெப்படியோகானேன்
அம்பிகைதன்னருளதனால்உனைக் கனவில்சேர்ந்தேன்
அன்றுமெநாட்டிக்கோமட்டுன் மீதிலெந்தன்பிராணன். (மத)

௪. தெரிந்துசொல்லுங்குருவும்நீயே தாய்தகப்பனும்நீயே
தெய்வமும்நீயுயிரும்நீயே தேகமும்நீயுடனே
பிறந்தவரும்நீயேகொண்ட புருஷனும்நீசமாய்
பேசும்மடவாள்பிழையைப் பொறுப்பதுந்தன்கடனே. ()

பொது விருத்தம்.

வாணன்மகளிவ்விதமாயுரைததேமுன்பாய்
மாமலர்க்கொம்பெனவுநிற்கும்போதேபஞ்ச
பாணன்மகன்மாதினைக்கண்டின்பங்கொள்ளும்
பண்பினைப்பார்த்தறிகுறும்பாண்டன்பாவை.

நாணமடம்தெரிவையர்க்குப்பெரிதாமென்னும்
நன்மதெரிந்தனள்மறைந்தாளந்தவேளை
தானுமைத்தன்மகன்சேய்மனதிலின்பம்
தழைத்திட்டானுடாங்கனையழைத்திட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சாணஞ்செய்து நிற்கிற வுடாங்கனையைப்பார்த்து மனதிலே அடங்காத மகிழ்ச்சியடைந்தான். அந்த சாடைதெரிந்த சித்திரரேகையானவள் அந்தப்புரம் போனாள், அப்போது அனிருத்தமகாராசன் உடாங்கனையை சமீபத்துக்கு அழைக்கிற நெப்படியென்றால்.

அனிருத்தன்-தரு-ஓ-ம்-முகாரி-மட்டையம்-தாளம்.

பல்லவி.

இஷ்டமாய்ச்சேர்வதற் கட்டிபண்ணுமலென்
கிட்டத்தில்வாடியென்கண்ணே
இந்தும்புக முந்தன்முகம்
எந்தன்முகஞ் சந்தித்திட. (இஷ்)

அனுபல்லவி.

இன்னும்இதம் வின்னஞ்செய
என்மனஞ்சினி னுவ்னெஞ்சுற. (இஷ்)

சரணங்கள்.

க. ஈணுதவாழைத்துடையினாளே - கேளும்
வாணாசுரன்பெற்றபெண்ணே
கட்டழகினிலிந்திராணியும்ஒவ்வாத
காரிகையேயிளமயிலே
கன்னல்வளஞ்சூழும் செந்நெல்வளமேவுந்
காமஞ்சிறந்திடுங் குயிலே
இளமாங் கனியே
யுயர்தேங் கனியே
நற்கருமாங் கனியே
மின்னுடாங் கனையே - யார்க்கும்
சுதமானதுபாரம் அதினுலென்னசாரம்
இதுவேநல்நேரம் மதனுற்பிரகாரம் (இஷ்)

(வேறு.)

உ. கூசாமலென்னுடன் ஆசாபாசங்களைப்
பேசலாந்திவ்யசிமாட்டி.



கோலாகல விலாசமம்
நாலாம்வித மேலாச்செனக் (கூசா)
கும்பஸ்தன மீதேதொட
எம்பற்குறி தானேபட (கூசா)
கொக்கோகலீலைதன் சக்காந்தமார்க்கத்தில்
வெட்கமாகாதுகண்ணாட்டி - அடி
ஆசாரமன்புங் குலாசாரமுள்ளோரை
ஏசலாகாதுசீமாட்டி
ஆதாரமாகவே மாதரசேயுன்னை
வேதமாயுள்ளத்தில் நாட்டி - ஆதரிக்கிறேனே
யெந்தன் அன்னமே
மாத்துயர் சொர்னமே
வருவதை முன்னமே
நான்சொல்கிறேனின்னமும் - கேளடி
அரியிந்திரை நிகரேன்
இரவும்பகல் நகரேன்
பிரியும்மொழி பகரேன்
மருமங்களை நுகரேன் (கூசா)

வேறு.

ந. நீதானேமுக்கனி - நீதானேசக்கரை
நீதானேபூங்கொம்புத்தேனே
நிசமும்இது - பசியுந்தணி
ரசவந்தனை - ருசிமிஞ்சிய (நீதா)
நீமேவியகுணமேகுணம்
பூமேவியமணமேமணம். (நீதா)
நிசமாகவேயுன்கை - வசமானேனடி
அசுராதிபன்பெற்றமானே
மாதேயெனதுபெண்சாதியும்நீயேத
நீயேவுந்நாதனும் நானும்மெய்தானே
இந்தமண்டலமெல்லாமுண்டுமிழ்ந்தாகாக்கும்
விண்டுவின்போனும்நானே - மற்றொருவனல்லடி
கிட்டவாரு மடி
முகம்பாரு மடி
என்னைச்சேரு மடி
மய்யல்தீரு மடி - பின்னும்

சகத்திவிடுங்குயிசகத்தினைகொந்தி
  நிகரப்பணிந் தனரே - பின்னும்
நிலைக்குமெழில்மந்த கலைக்குமுகந்திடும்
  நிசமுங்கணித் தனரே - நேராய்
    நீட்டியகால்களில் கால்களை நுழைத்திட
    பூட்டியகலனிரு மார்பைத் துளைத்திட
    வாட்டமில்லாமுகம் வாட்டங்கொண்டிளைத்திட
    மேட்டிமையாயிரு விரியுங்கிளைத்திட (மன்)
௩. பசைந்திருவருடல் ரசம்மதுவதென்று
  பகர்ந்துவூட் டினரே - மறை
படிக்கும்வாய்களை பொடுக்கிசாவுகள்
  பசைந்துநாட் டினரே
ஓசைதருகுரலொலிக் கிசைந்தகுரல்களை
  உவந்துநீட் டினரே - நல்ல
வாத்திநூர்ந்தன்னைக் காத்திரகாத்தினை
  வுளைந்துபூட் டினரே - நல்ல
    உல்லாசஅபிநய வொயிலுகளேசியே
    சல்லாபவார்த்தைகள் சரிவரப்பேசியே
    எல்லாவைபோக இந்திராணியையேசியே
    பல்லேப்படர்த்தரப் பழங்களைவீசியே (மன்)

போது விருத்தம்.

ஆதிமுதல்ராசதமாங் குணத்திறனோடு
  அனங்கன்மகனசுரன்மகளிவ்விதமாய்த்தானே
போதரவாய்க்கலந்து காமம்நீங்கி
  புனலாடிப்பின்னையும்பூ வணைமேற்சென்று
சீந்கலவைகளணிந்து மலர்கள்சூடி
  தினருந்தியிருவரும் வெற்றிலைத்தின்றின்று
தாதுபுஷ்டிமிகியுந்நா மதத்திறனோடே
  சார்ந்திட்டார்மனமகிழ்ந்து சேர்ந்திட்டாரே.

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை தாளம் மட்டையம்.

பல்லவி.

வெகு நிந்தயாய் வெகுஜம்பமதாய்ச் சையோகம்
  மிகவிளைத் தனரே
  கூணைந்திர்ந் தனரோ விரகதாபம்.



அநுபல்லவி.

மோகமதிலேமுக மோந்துகொண்டிசைந்திட
சகம்புகழ்வச்சிரதேகங்கள்பசைந்திட
நகைகளுஞ்சிலசிலநடுங்கியசைந்திட
சுகமதுபெருகவேதுடைகள்பிசைந்திட
நுடக்குடன்விம்மிமுலைக்குடக்கொங்கைபிடிக்கவும்
நடுக்கவுமதினமுர்தமடிக்கடிக்குடிக்கவும்
சார்பதிகலவைகள்சார்மனம்நாணவே
சரசமதன்கலவிசமானங்காணவே. (வெகு)

சரணங்கள்.

௧. தாக்குடனேநல்லமணம்பெறுந்தெரியலைச்சூட்டி - நய
  வாக்குகள்மிருதுவுடன்பேசியகுரல்களைத்தீட்டி - துனி
  நாக்குநள்தான்மெல்லச்செவிகளிலேநடுநோட்டி - வெகு
  பாக்குமென்றேநல்லஇதம்ரசந்தெளிவுகளூட்டி - வரும்
    நூக்கமதேவெகுதூரத்திலோடவும்
    நோக்குடனேமிகநோக்குகள்வாடவும்
    மூக்குடனேநெடுமூக்கதுகூடவும்
    டேக்குடனேவெகுடேக்கிணைபோடவும்
  செழித்தகுண்டலங்களும்சுழித்துச்சுழித்திலங்க
  முழித்துத்திலகச்சுடர்கொழுத்துக்கொழுத்திலங்க
  சிங்காரமகிபனைத்திதாதிகர்வென்று
  ரங்காவைபோகமே லகாலகாவென்று. (வெகு)
௨. வாலிபமானதிறல்விராகாக்கினிமிஞ்சி - நறும்
  கோலமதுசிறந்தமார்பொடுமார்பதுராஞ்சி - நல்ல
  சாலுவமானதன்கிளிகளும்போல்மொழிகொஞ்சி - பசும்
  பாலுடன்பழமெனஆவியுமாவியுமொஞ்சி - யிரு
    காலுடனேயிருகால்களிணைந்திட
    நாவிடையோடிடைசோஞ்சியிணைந்திட
    மேலுடன்மேலதுவேண்டியிணைந்திட
    ஆலிலைநிகர்வயிரடங்கிக்குழைந்திட
  ஆரகவாரணிபாரங்கள்குழைந்திட
  வேருவைமீறிச்சரீரங்கள்வளைந்திட
  ஐந்துகணைகள்மிகஅடர்ந்துநெருங்கவே
  உந்தியதன்விசையையுடாய்ந்துத்தள்ளவே. (வெகு)

கூ. வாடைபொடிபுனுகுவாசுபன்னீர்கந்தம்பூசி - ஓயில்
சாடைசன்னைகளொடுசரசவித்தாரங்கள்பேசி - சுத்த
ஆடகரேக்கனிந்தாலவட்டங்களைவீசி - மித
நாடியும்விரல்களும்நாகபடந்தனிலுலாசி - சொர்ண
பாடகஞ்சிலம்புகள்பதறவும்அதுக்கியே
சேடுள்ளமலர்சிந்தச்சிரங்களைக்குலுக்கியே
சோடிணையிடுங்கொங்கைக்குடங்களைக்குலுக்கியே
தாடனஞ்சுரிதகஞ்சரிவரப்பிதுக்கியே
சாதுபெருகுகுணசிதசந்த்ரவதன
மாதர்திலகியெழில்மாதர்திமதன
சாத்திரந்தெரிந்தவர்சவ்வாசென்றனுங்கவும்
சூத்திரந்தெரிந்தவர்சுவாஸங்குலுங்கவும். (வேறு)

போது விருத்தம்.

அரிவையுமன்னனுமுதல்ராஜசமாய்ச்சேர்ந்து
அப்புறந்தாமதகுணத்தின்மார்க்கமாக
மருவியிதழமுதருந்திக்காதல்தீர்ந்து
மலரணையைநீங்கிப்புனலாடிவாகாய்
இருவரும்பொன்னாசனிருந்து அணைமீதேறி
இருந்தமுதமருந்திப்பும் வெற்றிலைதின்றின்று
நறுமலர்கள்புனைந்திருந்த குணபோகத்தை
நாடினார்இன்பமுடன் கூடினாரே.

ஸீபதை-இ-ம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

க. சேமுலகம்புகழ் மாரன்மைந்தனும்பின்னும்
ஓராயிரங்கைவாணசூரன்மகளுங்கன்றாய்
ஏகபோகம்விளைத்தார் - ரஞ்சிதமென்னும்
நாகரீகந்தழைத்தார்.

உ. இங்கிதந்தருந்தேனும் நுங்கினிரசமும்பாலும்
செங்கரும்பின்பாலும் உண்குஞ்செங்கனிவாயால்
இதழ்ரசங்களைக்குடித்தார் - அச்சுதன்மீதில்
பதங்கள்மிகவும்படித்தார்.

௩. இன்பத்திடங்களையும் செம்பொற்கரங்களை ம்
அம்பொற்காக்களையும் கும்பஸ்தனங்களையும்
இழுத்துஇழுத்துப்பிடித்தார் - ஒருவர்க்கொருவர்
கழுத்தைமெல்லவுங்கடித்தார்.



௪. என்றுப்பூவெனும்நாசி யுள்ளுங்கண்களின்மீதும்
வுள்ளதிராங்காதி னுள்ளுநாவின்நுனிவிட்
டிட்டிபோல்வுந்துளைத்தார் - ஒருவர்க்கொருவர்
நீட்டிக்கால்களைவளைத்தார்.

ரு. பாஸ்தனங்கள்மீது வாரற்றிடவுந்தானே
மார்பொத்திடயிருவர் வேர்வைப்படவுந்தானே
பாக்குவெற்றிலைச்சாதித்தார் - மதனசாஸ்திரம்
இலாக்யமாகவேவேதித்தார்.

சா. பவிசுபாக்கியந்தன்னி - லெவரும்நிகரில்லாமல்
இவரழகினையவள் - அவளழகினையிவர்
பார்த்துப்பார்த்துமகிழ்ந்தார் - கொக்கோகமாம்
சாஸ்திரத்துறையில்மகிழ்ந்தார்.

எ. பழுமிட்டமுதுபோலும் உளிபட்டசிலைபோலும்
அளவிட்டிருவர்தேகம் உளமட்டும்பிரியாத
பதிபாகங்களைப்பாடினார் - தனிநாதி
மதனும்போல்விளையாடினார்.

அ. மின்னிக்கைநயொடுநைநயை பின்னிக்காலொடுகால்கள்
பின்னிப்பூவணைமீது மின்னிச்செண்பகமலர்
பந்துபோலவுந்தள்ளினார் - கூந்தலைத்தானே
சுந்தரக்கைநகளில்தள்ளினார்.

கூ. நாறுமலரைக்கைநயால் வாரிமைமிசைதூவி
காரின்நிறமதாக சேருங்கண்களின்மீது
நயனமிரண்டையும் அணைந்திட்டார் - நெஞ்சொடுநெஞ்சு
வயணத்துடன் இணைத்திட்டார்.

க0. நாவைச்செவ்விதழ்மீது லாவச்செங்கனிவாயும்
சீவப்பல்லொடுபல்லும் மேவச்சரசஞ்செய்து
நாக்கின்முக்கினைச்சீவினார் - நன்றாகவே
முக்கில்நாக்கினைமேவினார்.

கக. நாகத்துடனேசாரை மோகத்துடனணைந்த
பாகத்தினையிரட்டும் யூகத்துடனிருவர்
நடுவும்நடுவும்பிணைந்தார் - ரண்டுபேரும்
உடலும்உடலும் அணைந்தார்.

௧௨. ஞாயமதிலுஞ்சய்பிர தாயமதிலுஞ்சொல்லு
பாயமதிலும்ரண்டு காயமதிலும்னக்கும்
நகக்குறிகளைச்செய்திட்டார் - தந்தங்களால்
நாட்டிக்குறிகள் செய்திட்டார்.

௧௩. வார்குழல்மதனசொக்கோகவிதமதாக
மோகதாகந்திர வகபோகமதாக
வைபோகஞ்செய்தனரே - இரண்டுபேரும்
சையோகஞ்செய்தனரே.

பொது விருத்தம்.

ரதிமதனும்அசுரர்பெணுமுதலாக
ராஜசமாய்ச்சேர்ந்துபின் தாமதமாய்ச்சேர்ந்து
விதிமுறைமூன்றுந்தாஞ் சாத்விகத்திந்த
விதத்திலெண்டுபோகமுற விசுந்தீர்ந்து
பதிசதிபன்னீர்முதலாய் ஆடிவேறே
பட்டொடுசோமன்புனைந்து பலகாரங்கள்
மதுரரசத்தோடருந்தி மலரணைமேல்மேவி
மகிழ்ந்திட்டார்படுத்துநித்ரை மிகுந்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் இருவரும் விளையாடியபிற்பாடு பஞ்சசயனத்தின்மீது படுத்துக்கொண்டு நித்திரைசெய்கிற விதங்காண்க.

தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

நித்திரை செய்தனரே - இருவரும்
நித்திரை செய்தனரே.

அநுபல்லவி.

நித்திரைசெய்தார் மெத்தையிலினிற்சாய்ந்து
நீயேபுருஷனென்று நானேமனைவியென்று
சத்தியந்தவறாத பத்தினியாகிய
சதியும்பதியுந்தானே ரதியும்மதனும்போலே. (நித்தி)

சரணங்கள்.

௧. தந்தைதாய்கண்டாக்கால் நிந்தனைவருமென்று
சந்தேகந்தனைத்தானே சிந்தையில்வைக்காமல்
விந்தைமதனனருள் மைந்தனுடனுங்கூடி
இருவரும்துயிலாக சுகமலரணைமீதில். (நித்தி)



௨. மின்னிடைகுக்குமி தன்னையும்நகையும்
வேயிசையூதுசெய் வாயனையும்பெற்ற
கன்னல்வில்மன்மதன் தன்னையுந்தாயையும்
காணாதிருப்பது தோணாமல்மாதுடன். (நித்தி)

௩. எக்காலமும்அஷ்ட திக்குகளும்வாழ்த்தும்
இன்பம்போற்சகல சம்பத்திற்குட்பட்டு
சக்காந்தமாகவே கொக்கோகத்தின்முறை
தப்பாமலிருவரும் முப்போகஞ்செய்தாகி (நித்தி)

பொதுவிருத்தம்.

அலைகடலிற்றுயின்றவன்சேய் சுதனும்வாணன்
அரிவையும்போகமுற்றி யன்பாய்க்காம
கலகமதாதீர்ந்தனர்க்கே யின்றுற்றேனும்
கலக்கந்துதெரியாமற் கணைநான்மூடி
மலரணைமேற்படுத்திருவர் தூங்கும்போது
மாளிகையைச்சோதனைசெய் மடவார்கண்டு
தலைவனுடனிவ்விபரஞ் சொல்வோமென்று
சுருகின்றார்வெருசனுதாய் வருகின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக இருவரும் சப்பமஞ்சத்தில் படுத்து நித்திரைசெய்கிறபோது, மண்டபசோதனை செய்கிறசோதனைப் பெண்கள் வந்து பார்த்துத் திடுக்கிட்டு நெஞ்சலர்ந்து வாய்குளறி ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்து திகைத்து அய்யோ, இதுஎன்னவிபரீதம், இதை உடனே நமதுராசாதிராசனாகிய வாணாசுரமகா ராசனிடந் தெரியப்படுத்தாவிட்டால், நம்தலைபோய்விடுமே யென்று நடுங்கிக்கொண்டு வாணாசுரனிடத்தில் வருகிறமார்க்கம் எப்படியென்றால்.

தாதிகள்வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

இந்திரஜாலப்பெண்கள்வார் - எழிலைப்பாருங்கோ - நல்ல
தந்திரஜாலஸ்திரீகள்வார - தமாஷ்பாருங்கோ.

அநுபல்லவி.

சந்திரமுகமதுதளதளவென்னவே
சிந்தூரத்தினத்திலகம் மின்னவே
தங்கநகைகள்சரத் தொங்கலதுங்கிட
துங்கவெண்முத்து வடங்கள்குலுங்கிட

தருகு திகுகு தகு திகு திகு தகு
திகு தரிதகிட ஜணுத திங்கிடத் தோமென. (இ)

சரணம்.

௧. பஞ்சவர்ணக்கிளிகள்நாண மொழிகள்பேசியே - சொர்ண
குஞ்சங்கள்குலுங்க ஒயிற்கைகளை வீசியே - நின்று
கூடிக்கூடிப் பழமைபேசி
சாடிக்கார நறவையேசி
குந்திக்குந்தி நடந்துகண்ணீட்டியே
கந்தப்பன்மலையா ளொயில்காட்டியே
குகு குகு குகு குகு குகு குகு
தீன் செகு செகு செகு சேகிணத்தோமென. (இ)

௨. சுந்தரமலர்விசேஷங் குமுகுமுகுமுவென்னவே - குளிர்
சந்தனம்பன்னீரின்வாசம் கமகமகமவென்னவே - பசுந்
துகில்கள் நெருநெருவென்ன
நகைகளை கொருகொவென்ன
சுந்தரக்கடகங்கள் பளபளபளவென
சந்திரவொட்டியாணந் தளதளதளவென
தகததகதிங்கிணத்தோம் தகதிந்தகதக
திமிதிமிஜணுதகிங்கிடத் தோமென. (இ)

௩. கிளக்கையிற்றங்கவளைகள் பளபளென்னவே - யெழில்
தாள்களிற்றண்டைச்சதங்கை சலசலென்னவே - சற்றும்
கருதிப்பாராதே நடந்து
ஒருவர்க்கொருவரே தொடர்ந்து
மதன்சுதன்மேவிய வஞ்சியுடாங்களை
தன்செயல்வாணனுடன் சொல்லவே சுகணம்
தகடகதிகடகதிகடதகடகதிகடக
தாகிடஜேகிடகளாங்குதோமென. (இ)

தாதிகள் சொல் விருத்தம்.

அசுரர்கட்கரசேபோற்றி ஆயிரங்கரனேபோற்றி
வசுதையாள்பவனேபோற்றி மாவலிசுதனேபோற்றி
இசைபெறுமரசனேபோற்றி எங்கள்ரட்சகனேபோற்றி
பசுபதிக்கடிமையான பத்தனேபோற்றிபோற்றி.



வசனம்.

அகோவாரும் சுவாமி! ராஜாதிராச ராஜமார்த்தாண்ட ராசகோலாகல ராஜஉத்தண்ட ராஜபரமேசுர வாணாசுர மகாராசனே, சரணஞ் சரணமையா சுவாமி.

வாணாசுரன் விருத்தம்.

ஒடுங்கிநின்றிருகைகூப்பி யுண்மையாய்வணங்கிவாழ்த்தும்
அடாங்கிடாப்புகழ்தான்பெற்ற ஆயிழைமாரேகேளீர்
மடங்கலாசனத்தின்முன்பாய் வந்தகாரணத்தையிப்போ
தடங்கலில்லாமற்றானே சாற்றெனச்சாற்றுவீரே.

வசனம்.

அகோவாருங்கள் சோதனைப்பெண்களே! என் சமுகந்தேடிவந்த காரணம் என்னவோ சொல்லும் பெண்களே.

(சோதனைப் பெண்கள்) அகவல்.

காவலர்க்கெல்லாங் காவலனான
மாவலியளித்த மைந்தனேகேளாய்
செயந்தனைக்கருதுந் தெரிவையர்மனது
பயந்தனையகற்றிப் பகருவோமிப்போ
அய்யனேயுந்தன் அருந்தவத்துதித்த
ஒய்யாரமிகுந்த உஷாங்கனைத்தாயார்
மாதுளிற்றிருக்கு மண்டபந்தன்னை
சோதனைசெய்யத் தோகைமார்கூடி
கத்தனேயெங்கள் காதினில்வைத்த
உத்தரம்பெற்றே யுள்ளுறப்புகுந்து
அநுதினம்நாங்க ளனைவருங்கூடித்
துணிகரமாகச் சோதனைசெய்வோம்
இந்தனைநாளும் எழின்மனைதனிலே
மிந்திரபேந்திரர்கள் வேந்தர்சஞ்சாரம்
அடர்ந்துபோராடும் அசுரர்சஞ்சாரம்
நடந்தவாறதனை நாங்கள்கண்டறியோம்
இன்றையத்தினத்தில் எழில்மனைதனிலே
சென்றுசோதனைகள் செய்திடும்போது
கனகமண்டபத்திற் கத்தனேநாங்கள்
அனைவருங்கண்ட அஞ்ஞானந்தன்னை

எப்படியுரைப்ப தென்றுதான்மன்னா
கொப்பெனத்தினந்துங் கூசதுவாயும்
அரசனேயுந்தன் ஆக்கினைக்காக
வெருவிபேர்நாங்கள் விளம்புவோமிப்போ
பின்னும்எங்கள் பெரியோருரைத்த
நன்னிலையொன்று நவிலுவஞ்சுவாமி
சிறியோர்குற்றஞ் செய்திருந்தாலும்
பரிகரிப்பதுந்தன் பாக்யமாஞ்சுவாமி
வைர்ம்நீர்மனதில் வைத்தாலுநாங்கள்
தயிரியமாகச் சாற்றுவோம்சுவாமி
பார்த்திபர்வெங்கள் பழயோர்முன்பு
சாற்றியநீதி தானெதுவென்னில்
தன்னிடவய்து தான்செய்தர்மம்
கன்னியர்துன்பம் கற்பழித்ததுவும்
குருவுபதேசம் கோதையரின்பம்
நிரவியந்தனது திராணியுந்தனது
அரசனார்பலமும் அன்மச்சாத்திரிகம்
சிறிதாய்வெளியே செப்பினபேர்க்கு
பாவமும்கேடு பழிகளுந்தீர
சாபமுமவர்க்குச் சார்ந்திடுமென்று
சொன்னவாறதனுற் றேழையர்நாங்கள்
என்னமாய்ச்சாதித் திருந்திடப்போறேம்
சாதிக்கத்திறனும் தானிலாதாலே
நீதிக்குப்பகையாய் நிகழ்த்துவோம்சாமி
பேதைக்கென்றே பிறந்தபெண்கள்
ஆதலாலினது அருந்தவத்துதித்த
மாதுடாங்கனை தன் மனைதனிலிருக்கும்
நீதனைநாங்கள் செப்புவோம்சுவாமி
தினகரனவிர்கள் சேர்ந்திடாதிலங்கும்
மனைதனிற்கனக மலரணைமீதில்
மன்னவர்திலகன் மதனவொய்யாரன்
மின்னலான்றெழுந்த மேகம்போற்றேகன்
தெரிவையர்க்கன்பன் சித்திரசிங்காரன்
மரைமலர்க்கண்ணன் மலர்ந்தசெவ்வாயன்
நவமணிமகுடம் நாட்டியகேசன்



கவசகுண்டலங்கள் கனத்தொளிர்செவியன்
புருதச்சரங்கள் புனைந்தொளிர்கழுத்தன்
ஆனபொன்வரையை அணைத்திடும்புயத்தன்
மின்னுமுந்நூலு மிலங்கியமார்பன்
வெண்ணிலாவுருவை வெல்லுமானனத்தன்
பல்கணைவாளில் பழகியகையன்
இலகுபொன்கச்சை யிடையிலிலங்கும்
சிலம்பொடுதங்கை சித்ரவெண்டையங்கள்
புலம்பிடதன்றுப் புனைந்திடுந்தாளன்
செல்லமாயாதி சேடன்வாய்தனிலும்
சொல்லவுமரிதாஞ் சுந்தரஞ்சேர்ந்த
மனிதனுமுனது மகளுடாங்கனையும்
நினைவொழிந்தநிக நித்திரைசெய்ய
கண்டுமேநாங்கள் கடுகையில்வந்து
உண்டானசேதி யுரைத்திட்டோம்சாமி
இனிமேலுந்தன் இயம்புமுத்திரவு
மனுசாஸ்திரமே வழங்கிடலான
படிக்குநாங்களுமோர் பழுதுசொல்லாமல்
நடக்கிறேமெந்த நாளுமேமன்னா.

**போது விருத்தம்.**

நங்கையர்களுரைத்தவன்னாங் காதினுள்ளே
நாராசம்விட்டதுபோ லிருக்கவாணன்
சிங்கமெனக்கர்ச்சிதங்கொண் டார்ப்பரித்துச்
சினந்தெழுந்து அரவமெனச்சீறிச்சீறி
மங்கையர்கட்பங்கலங்கக் கூறுந்திட்டி
மடித்துஇதழ்கடித்தமட்டி மனதிற்கோபம்
பொங்கியனற்கினெழும் அனலாமாறி
பொழிந்திட்டான்கட்டவிழு மொழிந்திட்டானே.

**வசனம்.**

இந்தப்பிரகாரம் சோதனைப்பெண்கள் சொன்ன செய்தியானது வாணனுடைய செவியிலே நாராசஞ் சொருகியது போலாக, தனது கோரதந்தங்களைக் கடித்து இதழ் துடித்து நிலத்தி லடித்துக் குரல் வெடித்து சிங்கம்போற் கர்ச்சித்துக் கண்கள் அனல்மாரி பொழியக் கட்டியக்காரனைப் பார்த்துச்சொல்லுகிற தெப்படியென்றால்,

வாணசுரன் விருத்தம்.

காற்றினுங்கடியவேகக் கட்டியக்காராசேனாய்
நாற்றிசைபுகழ்ந்துபோற்று நம்மிடகொளுமுன்பாக
கூற்றுவன்றனையுமெண்ணாக் கொடியவல்லசுரர்தம்மை
வேற்றுமையில்லாமற்றான் விரைவினிலழைத்திடாயே.

வசனம்.

அடே கட்டியக்காரா! எமனையும் வெல்லும் வல்லமைபெற்ற நம்ம இராட்சசசேனைகளை இப்போது என்முன் அழைத்து வாரும் பிள்ளாய்.

கட்டியன் வசனம்.

அப்படியே மகாபாக்யமையா சுவாமி.

பொது விருத்தம்.

துஷ்டநிக்ரகனும்வாணன் சொல்லினுக்கிசைந்துசீக்ரம்
கட்டியக்காரன்சென்று கர்த்தனும்அழைத்தானிப்போ
அட்டிசெய்யாமல்நீங்கள் அனைவரும்வருவீரென்ன
மட்டில்லாஅசுரர்கூட்டம் வாணன்முன்வந்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் கட்டியக்காரன் அழைத்தவுடனே அநேகமாயிரம்ராட்சதவீரர்கள் வந்து வாணசுரனிட சமுகஞ்சேருகிற தெப்படியென்றால்.

அசுரர் வருகிற தரு-இ-ம்-புன்னாகவராளி மட்டைதாளம்.

பல்லவி.

அசுரர் வந்தனரே - விஞ்சைத்தொழில்
அதி தெரிந்தனரே.

அநுபல்லவி.

தசைபெருத்தனரே - சண்டைத்தொழில்
தனக்குமுந்தினரே - விண்ணில்
சந்திரசூரியர் தன்னைத்தடுப்பார்கள்
நிந்தனைசெய்வோர்கள் வாழ்வைக்கெடுப்பார்கள்
மந்திரமாய்கை விதங்கள்படிப்பார்கள்
தந்தைதாயாகினும் வர்மம்முடிப்பார்கள்
தடிகளைகள்பிடித்து - கடி-சாலவண்டக்கடித்து
சிடுசிடெனச்சிடுத்து - மிக - அடிகாரனத்தடித்து (அசு)



சரணங்கள்.

வீம்புகள்பேசிக் கொண்டும் - அதர்வண
வேதத்தையேசிக் கொண்டும் - மிகச்
சாம்பலைப்பூசிக் கொண்டும் - தொடைகளை
தட்டியேவீசிக் கொண்டும் - கரும்
தாழைமடல்களைப் போலவும்நாக்குகள்
பேழைவயிறுடு நீண்டிடுமூக்குகள்
ஆளிமுனிந்தெழல் போலவும்நோக்குகள்
மீளாதுடும்விஷம் போலவும்வாக்குகள்
சமர்மீதி லுருக்கம்
அமல்ரத்னப் பெருக்கம்
நிமிர்தேர்கரி வருக்கம்
சமராதிடு முருக்கங்கொண்டு (அசு)

உ. அக்கினிக்கண்ணர் சிலர் - அகன்றிடும்
ஆநாழிவாயர் சிலர் - கூர்ந்திடும்
கொக்கரைமூக்கர் சிலர் - வளைந்திடும்
கோடாலிப்பல்லர் சிலர் - பெருங்
கொப்பரைபோலுமுகம் படைத்தார்சிலர்
கப்பரைபோல்நெஞ்சகம் படைத்தார்சிலர்
பொற்புறுமேருபோல்மெய் படைத்தார்சிலர்
சிப்பிபோலும்செவி படைத்தார்சிலர்
கொள்ளிக்கண்ணைப் பழித்து
வெள்ளிக்கண்கள் விழித்து
துள்ளித்துள்ளி முழித்து
துள்ளித்துள்ளிச் சுழித்து (அசு)

ந. மண்ணுமதிரந் திடவே - பூதகண
வாய்கள்புதைந் திடவே - உயர்ந்த
விண்ணுமதிரந் திடவே - அலைகடல்
வெள்ளங்கரைந் திடவே - மிக
மெட்டிநடந்துதை தட்டிக் கிட்டியே
துஷ்டர்கள்தன்னை அடக்கி மிரட்டியே
கட்டுக்கசத்தை யெடுத்துப் புரட்டியே
வட்டக்கதிரெனத் திட்டி யுருட்டியே
மோகமேழுந்து சிதற
சோருசாதிகள் பதற

நாகமெட்டுஞ் சதற
சாகரங்களு மதிரசூரணம்(அசு)

பொது விருத்தம்.

அடர்ந்துபோர்முகத்தில்தானே அடுக்குடன்பாய்ந்துலாவி
சடைந்திடாசமரைவெல்லுஞ் சமர்த்துளவசுரரெல்லாம்
படர்ந்தாடும்ஆலங்காட்டின் பண்பெனப்பனங்காடென்ன
அடர்ந்துநின்றிறைவன்பாதம் அணிந்திட்டார்பணிந்திட்டாரே.

வசனம்.

அசுரக்கூட்டங்கள் வாணாசுரமகாராசனைத் துதிக்கிற விதங்காண்க.

அசுரர்-விருத்தம்.

தேவர்கள்துதிக்கவந்த திறல்வனேசரணமையா
காவலர்துதிக்கவந்த கர்த்தனேசரணமையா
மாவலிதுதிக்கவந்த மைந்தனேசரணமையா
பாவலர்துதிக்குமுந்தன் பாதமேசரணமையா.

இருவுமது.

சுந்தராபோற்றியெங்கள் துரையேபோற்றி
சுருங்கிலெங்களிவரையுஞ் சுருக்கர்ய்த்தானே.
உந்தனிடசமுகமதில் வரவேசொன்ன
உத்திரவுதனக்குவதி துரைத்திடாமல்
சிந்தைதனிலோர்கபடும் நினைத்திடாமல்
சீக்கிரத்திலொருமுகமாய்ச் சேர்ந்துநாங்கள்
வந்தனமெங்களுக்குரிய புத்திமார்க்கம்
வரைகுவீர்நடந்தசெய லறைகுவீரே.

வசனம்.

அகோ ராசாதிராச ராசமார்த்தாண்ட ராசபரமேசுவர ராசகோலாகல ராசவுத்தண்ட ராசகம்பீர வாணாசுரமகாராசனே சரணம் சரணம். தேவரீர் அழைத்த காரியம் தெரியச்சொல்ல வேணுமையா சுவாமி.

வாணாசுரன் விருத்தம்.

புந்திதனிற்கபடமொரு சிறிதில்லாமற்
போற்றிசெயுமசுரர்களே புகலக்கேளீர்
எந்தனிடசெம்மனுடாங் கனைதான்வாழும்
இல்லதனிலொருமனிதனிருக்கின்றானும்



அந்தமனிதனைப்பிடித்து விலங்குபூட்டி
அருஞ்சிறைகூடத்தினிற்போட் டடைத்துவைத்து
இந்நவிதஞ்செய்தருணம் வந்துசொல்வீர்
ஒருவீர்வெகுசதுரநாய்ப் போகுவீரே.

வசனம்.

அகோவாரும் அசுரக்கணங்களே! என்புத்திரி உடாங்கனையின் மாளிகையில் ஒருமனிதனிருக்கிறானும். அவனைப்பிடித்துச் சிறைச்சாலையிலடைத்துவைத்து இங்கேவந்துசொல்லுங்கள்இராசூதர்களே.

பொது விருத்தம்.

அரியுமல்லஅரனுமல்ல அயனுமல்லஅற்பமான
சிறுமனிதனைத்தான்பற்றிச் சிறையினிலிட்வேசொன்னீர்
புரவலாயிநாநாங்கள் புத்திக்குநேரேயானல்
விரைவினில்விடையைத்தாரும் வேந்தனேமகிழ்வாயிப்போ.

வசனம்.

வாருடகாராசனே! அரி அயன் அரன் என்கிற திரிமூர்த்திகளு மல்ல, இந்திரனல்ல கேவலம்அற்பமாகிய நாமனுஷனை ஒருபொருட்டாக நினைத்து எங்களை ஏவுகிறது தேவரீர் சித்தத்திற்குச் சரியானல் நாங்களப்படியேபோய் அம்மனிதனைப்பிடித்துக்கட்டிச் சிறைச்சாலையில் போட்டுவருகிறோம் உத்தரவுகொடுமையா சுவாமி.

வாணாசுரன் வசனம்.

அகோவாருங்கள் அசுரர்களே! கால்விசையில்லாத பில்லாய் ஊரோரத்திற்கு வரமாட்டாது. இலக்கணந்தெரியாத கவிராயன் சபையிலேறமாட்டான். அவனும் கொஞ்சம் காரியக்காரனாகத்தான் தோணுது. நீங்கள் சீக்கிரம்போய் வாருங்கள் அசுரர்களே.

அசுரர் வசனம்.

அப்படியே மகாபாக்கிய மையா சுவாமி.

பொது விருத்தம்.

கரிபரிதேர்களோடும் கணைகளாயுதங்களோடும்
முறைதவறுதவாத்ய முப்பத்திரண்டிணோடும்
உரனுறுவாணன்தன்கு முடாங்கனையெனும்பேர்கொண்ட
அரிவைதன்மனையைநோக்கி அடர்ந்திட்டார்நடந்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் சதுரங்கசேனைகளோடு அசுரவீரர்கள் உடாங்கனையின் அரண்மனையை நோக்கிவருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-புன்னாகவராளி-மட்டையதாளம்.

பல்லவி.

முடுகி நடந்தனரே - அசுரர்கள்
கடுகி படர்ந்தனரே.

அனுபல்லவி.

முடுகிநடந்தனர் கடகரியினமென
முகிலினமருகிட அகிலமதிர்ந்திட
வடவரைநிகரென முடலவரலைந்திட
மலையினமெழுநிகர் தலைகளுரைத்திட. (முடு)

சரணங்கள்.

க. எமனும்நடுங்கவுமே - வானுள
அமரர்ஒடுங்கவுமே
கமலனுமஞ்சிட அமரியமொழியொடு
சுருங்கியமெய்யொடு திமிலைநனைக்கிடு
தமரெனுமிவரொடு திரிபுரமெரிசெயும்
சரனெனதென்கடு அரனெனமுனிவொடு. (முடு)

உ. அமரர்அதிர்ந் திடவே - பரவைகள்
அஞ்சியொழிந் திடவே - வெகு
அருசுடனேபல கரிகள்நடத்தியே
சோர்வுமிலாதபல் தேர்கள்நடத்தியே
கரிசனமாய்ச்சில பரிகள்நடத்தியே
கண்டிதமாய்ப்பல வண்டிநடத்தியே. (முடு)

ங. கண்டுநடந் திடவே - குறளிகள்
கண்டுதொடர்ந் திடவே - மிக
மண்டலமதிரவே கொண்டல்கள்சிதறவே
வாரிகலங்கவே பேரிமுழங்கவே
அண்டமதிர்ந்திட செண்டையடர்ந்திட
அப்புறம்வாத்தியம் முப்பத்திரண்டுடன். (முடு)

ச. ஆயிரந்தோரணமுடன் - பதி
னாயிரம்பாண முடன் - நா
லாயிரந்தடியுடன் ஆயிரம்வெடியுடன்
ஆயிரம்வேலுடன் ஆயிரம்கோலுடன்
ஆயிரம்கொழுவுடன் ஆயிரம் வாளுடன்
ஆயிரம்உளியுடன் ஆயிரஞ்சூழியுடன். (முடு)



ரு. ரோசமிருந்த வனும் - ஒரு
ராசதுரந்த ரனும் - அவன்
காசினியாள்கிற நாளையிலேயவன்
காரிகைவேறொரு கணவனைக்கூடியே
தேசமதைக்கடந் தப்புறம்போகிற
சேதியைக்கேட்டவன் சென்றதுபோலவே. (முடு)

பொதுவிருத்தம்.

அடக்கவொண்ணாத்வீர அசுரரிவ்விதமாய்வந்து
மடக்கொடியிருந்துவாழும் மண்டபந்தன்னைத்தானே
கடற்குழியேழுஞ்சூழ்ந்த காட்சிபோல்வளைந்துகொண்டு
துடிக்குமின்னினங்கள்போலத் துள்ளுவார்விள்ளுவாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வீரபராக்கிரமம் பொருந்திய அசுரகூட்டங்கள்வந்து உடாங்கனையின் மண்டபத்தை வளைத்துக்கொண்டு சொல்லுகிறமார்க்கம் எப்படியென்றால்.

தரு-ஓ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

பயலேவெளியேவாடா - அடடாதிருட்டுப்
பயலேவெளியேவாடா.

அநுபல்லவி.

பயலேவெளியேவாடா - பழிதேடிக்கொண்டமூடா
பதரேவுனையுதையால்நொக்கி - வதைதான்செய்யவிதிவந்தது

சரணங்கள்.

க. பகைவன்சோறுண்ணாதே வெளியில்வாராமல்
பதுங்குவதெண்ணாதே இனிமேல்நீதான்
வெகுசோலிபண்ணாதே உனைநாம்லகுவில்
விடுவமென்றெண்ணாதே அல்லாமலுந்தப்பி
ஓடாதேமட்டிப்பேய்ப் பயலேயுனைவெட்டிப்
பிடிக்கவும் - கட்டி
அடிக்கவும் - பெலும்பை
யொடிக்கவும் - உயிரை
மடிக்கவும் - க்ஷணம். (பயலே)

உ. ஊர்க்குருவிகருடனைவெல்லுமோ கந்தைபுகுந்த
உளியிட்டிமேற்செல்லுமோ ஆண்பெட்டெனிலும்

சக்கரையான்இரும்பைவெல்லுமோ உடையாத்தேங்காய்க்
இச்சைப்பட்டால்நாய்க்குச் செல்லுமோசெல்லாதுகண்டாய்
ஆசையாலுன்தோலுரிக்கத்தானேகாக்கையிழுத்தலுக்கத்தானே

அண்டாண்ட - முட்டக்
கண்டிலங்கு - மெட்டுக்
கொண்டேர்க் - தவெட்டு
மண்டபத்தை - விட்டு (பயலே)

௩. தாவியேழ்முழத்துக்கு நீண்டாய் நீண்டதும்போ
சாணுக்குக்கீழ்க்குறுகினதேண்டா நிச்சயஞ்சொல்வோம்
சேவகம்பண்ணிநினைக்கவேண்டாம் உந்தனுக்கிப்போ
கெதண்தினில்வாய்மண்தாண்டா ஆசையாலுன்னை
சேரக்கட்டியப்பால் சிறையில்கொணர்ந்துஇப்பால்

அடைக்கவும் - தலை
அறுக்கவும் - அனைதக்
கரைக்கவும் - விண்ணுக்
இறைக்கவும் - சுதனம் (பயலே)

## பொது விருத்தம்.

ஆயிழைகொங்கைக ளூரத்திலழுந்தத்தூங்கும்
அனங்கன்மகன்அசார் தொனியதட்டினலே
தூயமின்னியுடாங்கனேயோ டுணர்ச்சியாகிச்
சுந்தரப்பொற்கச்சையிடை சுருட்டிக்கட்டி
சீயமெனவெழுந்திடக்கண் டரிவைச்சென்று
சீக்கிரத்திற்கதவுகளைத் திறந்துபார்த்து
மாயமுடன்கதவுகள் தான்முடித்தானை
மாட்டுவாள்வியாகுலம் பாராட்டுவாளே.

## வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனேயும் அனிருத்தமகாராசனும் தூங்கிக்கொண்டிருக்கும்போது சாகதசர் கூட்டம்வந்து மண்டபத்தைவளைந்துகொண்டு ஆரவாரம்செய்கிற அரவத்தால் தூக்கந்தெளிந்து இருவரும் எழுந்திருந்தார்கள். உடாங்கனே ஓடிப்போய் கதவைத்திறந்துபார்த்து நடுநடுங்கிக் கதவுகளை அடைத்துத் தாள்பூட்டிக்கொண்டு அனிருத்திரமகாராசனோடு சொல்லுகிறவிதமெப்படியென்றால்.



## உடாங்கனை கந்தார்த்தம்.

௧. நீதிக்குகந்த துரையேயுன்போக
நிலையாகவே யெக்காளும்
சாதிக்கலாமென்றெண் சிக்தைகோரும்
சந்தோஷமெங்கே போச்சோ
எதுக்குமஞ்சவேண்டாமென்று
இதஞ்சொன்ன சகியுமில்லையே
மோதிப்படர்ந்த மோசந்தில்நிக
மோசம்வந்துதே சாமி - பழிதேடிக்கொண்டேன்
நாசகாலிகான் சாமி
ஈசன்தேவிசொல்லாலே வர்சமாகியபூவை
தேசமீதினிற்குடி ஆசைதிரவுந்தூங்கி (மோ)

௨. தீயிற்குளிப்பர் தலையால்மலைகள்
சில்லுச்சில்லாக வுடைப்பர்
கோளைக்கிழிப்பர் எமனைச்சதிப்பர்
துளையாவிடக்கில் நுழைவர்
பேயைச்சிறைப்பர் இடியைப்பொறுப்பர்
பிறட்டுங்கொலைக்கு மஞ்சார்
வாயைக்கிழிப்பர் உருமாற்றஞ்செய்வர்
வந்துகூடுகிறாசுரர் - ரணசம்பிரதாய
வார்த்தைமிகவும்பேசுரர்.
சந்தேகமுடன்எந்தன் சிந்தைமிகக்கலங்கி
நைந்துசரீரநடுங்கஇந்த மண்டபத்தைத்தான்தேடி (வந்து)

௩. எதிராளியென்று படைகொண்டுவந்து
எதிர்நிற்கும்பேரை யெல்லாம்
மிதியால்மிதித்து வதைசெய்துமாங்கள்
வேரோடுசாய்த்து விசையால்
ரதிமானனெதவையுந் தூளாய்நெறித்து
ரவிசோடுவிதிட் டநட்டும்
மதயானைகூட்டம் கோடானுகோடி
மலைகள்போல்வந்துநிற்குதே - பொறுபொறென்று
தலைகள்தனை யசைக்குதே.
சிலசிலவெண்மைநிறமாய் சிலசில்கார்நிறமாய்
சிலசிலபெண்ணுமாக சிலசிலஆணுமாக (மலைகள்)

௪. மின்லானதற்கு நிகரானதுடினம்
வேல்போலே கூர்ந்தவிரைப்பும்
மனவேகத்திற்கு நிகரானவேகம்
வாய்வுக்குநிகர வல்லாண்மை
கனலானதற்கு நிகராய்வயங்கு
கருங்கண்ணுரு செங்கணுடனே
குணவால்குலுங்கப் பாந்தேயுலாவுங்
குதிரைக்கூட்டங்கள்நிற்குதே - தேசங்களாட்டிக்
குலுங்கிக்குலுங்கிக் கனைக்குதே
சதுருபாயத்தாற்பாய்ந்து மதமச்சரத்தைநீங்கி
எதிரிகள்தனைக்கொல்ல விதவிதத்துக்குலட்சம். (குதிரை)

௫. தவறுமனுமந்த்ர தந்திரங்களாலும்
தனுவாள் கணைகளாலும்
நவிராலுமங்கி வாய்வாவிந்த்ராணி
நாதன்றன் றனும்சத்தி
எவரால்விழாதமால் சத்தியாலும்
எண்கண்ணனுனு மெருதூர்
சிவன்மால்வந்தாலு மசைக்கப்படாத
தேர்கள்தெருவிற்பாவுதே - கலசங்கள்தானே
சேணுலங்கை யளாவுதே
ஊர்எல்லாம்ஒன்றுசேர்ந்து போர்செய்வதற்குத்தானே
யேறிச்சிறிநடத்தும் மேருவெனவனேகம். (தேர்கள்)

௬. வெறிகொண்டநாய்கள்போற் சீறியவுணர்
விசைகொண்டு ரதங்கள்விடுத்து
எறிகொண்டகல்லும் நிலம்விழச்சந்து
இல்லாமல்நெருக்க மிகலால்
சாமாரிபொழிவ தளவில்லையதனில்
சமர்செய்துவெல்வ தரிது
இருபேருமிந்தத்துன்பத்தைநீங்கி
யெவ்விதம்பிழைப்பது துரையே - நான்றனேபாவி
இந்தவிதிவருமென் றறியேன்
அவ்வைதான்வர்ணித்துப்பேசும் எவ்வர்ணகுணசிலாக்பா
திவ்வியாஞ்சிதாமோசத் தவ்வைசார்சண்டாளம்நீங்கி. (எவ்)



௭. கரிதானுமில்லை பரிதானுமில்லை
கனமானதேரொன் றில்லை
அரிவாளுமில்லை கொடுவாளுமில்லை
அம்பில்லைவில்லு மில்லை
பெருவாளுமில்லை வடிவேலுமில்லை
பிறையம்புவேறு மில்லை
சிறுசூரியில்லை வெறுங்கையுமாயிந்தச்
சேவகத்திற்கென்னசெய்யலாம் - என்றுரையேயிந்தத்
தீவினைக்குஆசை வையலாம்
மூவர்கள்நடுங்கத்தானே தேவர்கள்நடுங்கத்தானே
கோவமேபாராட்டுமிந்தப் பாவிகளைவெல்லத்தானே. (சே)

௮. கொஞ்சிப்பகர்ந்தமொழி மாதர்மனது
கோனீளங்கடவி றைழம்
அஞ்சித்தெளிந்து அளவேசொன்னாலும்
அடங்காக்கொடூர வவுணர்
வஞ்சத்தையளவு சொல்லப்படாது
மகாராசனே யிவ்வேளை
யென்சொல்லைப்பெண்சொ லென்றேதள்ளாதே
இந்தத்தண்டிக்குட்போகாதே - இவர்களைவெல்ல
எந்தவிதத்தினு மாகாதே
சந்தேகமில்லாமல்தானே யெந்தனைக்காத்திரட்சிக்கும்
வந்தனையாகியதர்மம் உந்தன்மனதிலிருந்தால். (இந்த)

வசனம்.

அகோவாருஞ் சுவாமி! இப்போது சமயபேதம் இப்படியிருக்கிறபடியால், எனக்கு நெஞ்சு தடுமாறுது, புத்திபேதளிக்கிறது, நாமிரண்டுபேரும் தப்பித்துப் பிழைக்கிறதற்கு வேறேமார்க்கம் காணோம், சித்திரரேகை யாகிய சகியும் இப்போது ஆஜரில்லை. தேவரீர் வெறுங்கையுடனே வெளியே போகக்கூடாது. நம்ம அதிஷ்டவாலாறு எப்படிமுடியுமோ என்க்குத் தெரியவில்லையையா சுவாமி.

அனிருத்தன் வசனம்.

அகோகேளும் பெண்ணே! என்னிருகண்ணே! நீசுழல்காற்றைக் கண்ட ஆலமரம்போலவும், செந்நாய்களைக்கண்ட வேங்கைப்புலிபோலவும், வாய்பதறி கைசோர்ந்து இப்படிப் பேடித்தனமடையலாமோ என்பிராணநாயகி.

உடாய்கனை-திபதை-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. இந்தமண்டபந்தேடி வந்தஅளியாயத்தை
என்னவென்றுநானுரைப்பேன் பிராணநாதா.
௨. அந்தரமாகஇங்கே வந்தநித்தன்தன்னை
ஆர்பலன்கொண்டுவெல்வேன் பிராணநாதா.
௩. ஆதினம்வெட்டப்போகப் பூதம்புறப்பட்டதாம்
அந்தக்கதைபோலாச்சே பிராணநாதா.
௪. கண்ணுக்கெட்டமட்டுக்கும் நின்றுநடந்துசேனை
கடல்போல்வளைந்ததையா பிராணநாதா.
௫. எண்ணிக்கைசெய்யச்செய்ய ஒன்றுக்குநூறாக
எற்றமாய்விளையுதய்யா பிராணநாதா.
௬. தொண்டர்பெருக்கம்அறி வண்டபெருக்கங்களைச்
சொல்லமுடியாதையா பிராணநாதா.
௭. அண்டம்ஆயிரத்தெட்டு விண்டெழுந்தாலிப்போ
அவர்களைத்தேடாதையா பிராணநாதா.
௮. கரிக்கூட்டங்களுமிப்போ பரிக்கூட்டங்களுந்தானே
கணக்கிடக்கூடாதையா பிராணநாதா.
௯. அரிமுகத்தார்களும் நரிமுகத்தோர்தனை
அளவிடக்கூடாதய்யா பிராணநாதா.
௧௦. கார்முகவாணங்கள் கூர்வாள்பெருங்கணைகள்
கணக்கிடக்கூடாதய்யா பிராணநாதா
௧௧. மேருப்போலுஞ்சிறந்த தேர்களநேகங்கோடி
மேன்மேல்வருகுதய்யா பிராணநாதா.
௧௨. அண்டஞ்செவிடுபடச் சென்னடபேரிகைகள்
அடிப்பர்இடைவிடாமல் பிராணநாதா.
௧௩. மண்டலங்கள்திர வண்டிவருகுதையா
மட்டிடக்கூடாதையா பிராணநாதா.
௧௪. மந்திரத்தாலும்பஞ்ச தந்திரத்தாலுமவரை
மாய்க்கமுடியாதையா பிராணநாதா.
௧௫. அந்தரத்திலிருந்து நிந்தாஸ்துதிகள்செய்யும்
அசுரரிவர்தானையா பிராணநாதா.
௧௬. மிரட்டிமிரட்டிக்கண்ட ஒருட்டிச்சம்பிரதாயம்
மிகவும்பேசுறுரையா பிராணநாதா.



௧௭. இருட்டைப்பகலாச்செய்வார் புரட்டைநிசமேசெய்வார்
யமனைச்சங்காரஞ்செய்வார் பிராணநாதா.
௧௮. பனைமரங்களைத்தானே கொளைவிரல்களிற்புத்தி
பல்லைவிளக்கிடுவார் பிராணநாதா.
௧௯. அனலினங்களைவென்ற மினலினங்களைத்தானே
அரைநாண்கயிறுக்கொள்வார் பிராணநாதா.
௨௦. குவடுகளைப்பல்லால் தவிடுபொடிகள்செய்வார்
குணபேதகங்கள்செய்வார் பிராணநாதா.
௨௧. இவர்கள்சம்பிரதாயம் தவறுமல்யான்முன்னே
யெல்லாங்கண்டிருக்கிறேன் பிராணநாதா.
௨௨. அலைகடல்எழினும் முழுகிஆழத்தைக்காணும்
அசுரரிவர்தானையா பிராணநாதா.
௨௩. ஆலகாலவிஷத்தைப் பாலுந்தேனுங்கலந்த
அன்னத்தைப்போலுண்பார் பிராணநாதா.
௨௪. மலைகளைத்தேங்காய்போல் தலைகளிலேயுடைப்பார்
மனிதரைத்துரும்பென்பார் பிராணநாதா.
௨௫. வேலாயுதவாணங்கள் காலாவிதஆயுதம்
மெய்யினிற்றைக்கவொட்டார் பிராணநாதா.
௨௬. பொருதவல்லவரென்று விருதுசெலுத்தும்பேரை
பிடித்திரையாகத்தின்பார் பிராணநாதா.
௨௭. குருதிவெள்ளத்தைத்தானே விருதாவாகக்குடித்து
குடித்துத்தக்கவைப்பார்கள் பிராணநாதா.
௨௮. இடிக்கும்இடியைக்கையால் தடுக்குஞ்சூரர்இராணி
இன்னமனேகமுண்டு பிராணநாதா.
௨௯. ஒடுக்கமில்லாமல்தானே அடுக்கடுக்காகத்தண்டு
உடைந்துநெருங்குதையா பிராணநாதா.
௩௦. ஒருவருமறியாமல் இருவரும்போவோமென்றால்
ஒருவழியுங்காணோமே பிராணநாதா.
௩௧. இருவருமறையவே உருமாற்றஞ்செய்யச்சித்த
ரேகையுமிங்கில்லையே பிராணநாதா.
௩௨. ஆபத்தென்றோரைக்காராப் பாவத்தாலெனக்கிந்த
அவதியிப்போவந்ததே பிராணநாதா.
௩௩. வேதத்துணையாம்பாங்கி ஆபத்துக்குதவாமல்
ஐம்மம்கடுக்குதையா பிராணநாதா.

௧௪. எனக்குவந்திடுந்துன்பம் உனக்குவந்திடலாமோ
இருவர்விதியொன்றுமோ பிராணநாதா.

௧௫. வினைக்குப்பயந்தொருவர் மனைக்குளிருந்தபோதும்
விதியைத்தள்ளப்போமோ பிராணநாதா.

௧௬. மகிழ்நனேயுந்தனிட நகைமுகங்கண்டுசேர
வகைநானறிந்தபாவி பிராணநாதா.

௧௭. சுகமேவியிருவரும் மகிழ்வுடனேபிழைக்கத்
தோதொன்றுமறியேனே பிராணநாதா.

௧௮. தாதிகளென்தகப்பன் பாதகனோடேசாடி
சொன்னாற்போற்காணுதையா பிராணநாதா.

௧௯. ஆதலாலென்தகப்பன் ஓதியனுப்பவந்த
அசுரர்படையிதையா பிராணநாதா.

௨௦. அன்னைதந்தைக்குஞ்சொந்த மன்னர்க்குமினத்தார்க்கும்
ஆகாதபாவியானேன் பிராணநாதா.

௨௧. உன்னையுமுந்தன்தேவி தன்னையும்பிரித்தபாவம்
உடனேபலித்ததையா பிராணநாதா.

௨௨. ஆண்பெண்தலையிலொன்றாய் நான்முகனே படைத்த
அதிர்ஷ்டமிவளவுதானோ பிராணநாதா.

௨௩. சேண்கண்டுலாவுந்தண்டை நான்கண்ணிற்பார்க்கவென்
சிந்தைதடுமாறுதே பிராணநாதா.

௨௪. சாவேமுன்னமாமிந்தப் பாவியர்சேனைக்குள்ளே
சாமிநீபோகவேண்டாம் பிராணநாதா.

௨௫. சிவனேசினபோதுங் கோபந்தணிவாரென்றுன்
சிந்தையில்வைக்கவேண்டாம் பிராணநாதா.

௨௬. சின்னஞ்சிறுவயதில் மன்னாவுன்றூவீரம்
செல்லாதிந்தப்படையில் பிராணநாதா.

௨௭. மின்னிடையானருக்மி தன்னையுமென்னையுந்தை
விட்டுரணம்போகாதே பிராணநாதா.

௨௮. இளங்கன்றிடங்கேடுக்குள் களங்கமற்றோடல்போல்
இச்சேனையுள்போகாதே பிராணநாதா.

௨௯. ஒழுங்கொழுங்காச்சேனை தளங்கள்கணக்கில்லாமல்
உலகெல்லாம் நிறைந்தாலும் பிராணநாதா.

௩௦. வந்ததெல்லாம்வரட்டும் இந்தமண்டபத்துள்ளே
மறைவாயிருப்போம்சுவாமி பிராணநாதா.



௩௧. எந்தன்புத்தியைத்தானே நிந்தனைசெய்தேதள்ளி
யேகவேண்டாம்போர்செய்ய பிராணநாதா.

௩௨. ஒச்சியமாயுன்றுயிருக் கச்சம்வந்துநேர்ந்தாக்கால்
உயிர்வைத்திருக்கமாட்டேன் பிராணநாதா.

௩௩. பட்சமுடனேயிது நிச்சயமென்றேயெண்ணி
படைக்குள்ளேபோகவேண்டாம் பிராணநாதா.

௩௪. தர்மஞ்செய்துபிறந்த புண்ணியசாலிகளானல்
தானேநீங்கும்படைகள் பிராணநாதா.

௩௫. கர்மஞ்செய்துபிறந்தால் நீங்காதிந்தப்படைகள்
கண்டுபாரிந்தவுண்மை பிராணநாதா.

## போது விருத்தம்.

இந்தவிதமுரைத்துமனங் கலங்குமாதை
இரதிமைந்தனிருகரத்தா லெடுத்துமார்பில்
சந்திரன்போலணைத்துமின்னாள் முகத்தைமோந்து
தையலர்கள்நாயகமே நீதானிப்போ
சிந்தையதுகலங்குவதேன் விதியிலுள்ள
செயல்முடியுமென்றுனது சிந்தைதேர்ந்து
எந்தனிடவல்லமையை யினிப்பாரென்று
இயம்பிரணயாளியென வெழுந்திட்டானே.

ஒருத்தனுஞ்சென்றிப்படையை வெல்வேன்பாரென்
றுடாங்கனைக்கேயுறுதிசொலி யுள்ளந்தேற்றி
கருத்தினிலோர்களங்கமது மில்லானாகிக்
கனகமணிக்கதவுகளின் றாளைவாங்கி
சிரித்தமுகமாய்மனைவாய் தன்னில்வால
சிங்கமெனநின்றசுரர் படையைப்பார்த்து
பொருத்தமில்லாதவிடந் தன்னைத்தாங்கும்
போதிகைத்தூண்தனிலொன்றைப் பிடுங்கினனே.

## வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனைக்கு அநேக தயிரியவார்த்தைகளைக் கூறிக் கதவுகளைத் திறந்து வெளியேவந்து அங்கே சட்டப்பொருத்துகளில்லாமலிருந்த தமனியந்தூணொன்றைப் பிடுங்கிக்கொண்டான் அதன் விசித்திரம் எப்படியென்றால்,

போது-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

பல்லவி.

சிங்காரத்தூணிதென்பார் - சகலரும்
சிங்காரத்தூணிதென்பார்.

அநுபல்லவி.

சிங்காரத்தூணிது சங்கரனும்நல்ல
சீதானுஞ்ஞய மாதவரும்விண்ணணில்
அங்குள்ளதேவரும் மங்கையர்சகலரும்
அவுணரும்ராக்ஷத நிபுணரும்நார்களும் (சிங்)

சரணங்கள்.

௧. விளங்கிடுங்கல்லைப் பிளந்துசெதுக்கியே
வேற்றுமையில்லாத சாஸ்திரத்தோதினால்
அளந்துவுளியிற் பிளந்தேயெவருக்கும்
அதிவிதமாகிய பதுமைபதித்திட்ட (சிங்)

௨. பதினாறுமூலைய தாகவகுத்தந்தப்
பந்திக்குள்மரைமலர் சந்தித்திடச்செய்து
சதுரங்களறுநான்கு தன்னைவகுத்தந்த
சதுரங்கள்தனிற்றெய்வ பதுமைபதித்திட்ட. (சிங்)

௩. தேசங்கள்கண்டோர் ரதிதென்றுஞ்சொல்லவே
சித்திரவேலையின் கொத்தடர்போதிகை
நேசமதாயவை அளித்தசிங்காரங்கள்
சிங்காமல்கலக்குமிழ் பாங்காகச்சோதித்த. (சிங்)

௪. மல்லிகைக்கொடிபோலும் முல்லையினிலைபோலும்
மாமரஇலைபோலும் தாமரைச்செடிபோலும்
அல்லியின்மலர்போலும் நெல்லியினிலைபோலும்
ஆலந்தளிர்போலும் நாலாவிதமுமான. (சிங்)

௫. ஆயிரம்வாய்கொண்டும் சொல்லமுடியாத
அக்ஷரங்களும்வெகு சித்திரங்களமைந்த
தூயகற்கம்பம் முழுதும்பத்தரைமாற்று
சொர்ணத்தினால்தானே வர்ணங்கள்தீர்ந்திட்ட. (சிங்)

விருத்தம்.

இந்தவிதத்தூண்தனைக்கைக் கொண்டேவேள்சேய்
இயம்புவதும்விதென்னி லெனக்குத்தானே
சந்திரவாளிதுவில்லும் அம்புமிது
சக்கரமுமிதுதெண்டும் தடிதானிது
மந்திரவாளிதுவெடியு மிதுவேசூலம்
மழுவுமிதுவேலுமிது வாங்குமிது
குந்தமிதுபிண்டியிது பாலமிது
கோலுமிதுபாரென்று கூறினானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தூணைக்கையிலேந்திக்கொண்ட அனிருத்த மகாராசன் இதுவே யெனக்குச் சந்திராயுதம், வேல், வாள், வில், அம்பு, அஸ்திரம், சஸ்திரம் எல்லாம் இதுவேயென்று சொல்லிக்கொண்டான்.

(பின்னும் படையி லஸுரநுழைந்து)

போது விருத்தம்.

வல்லவர்க்குப்புல்லுமொரு கணையாமென்றே
மானிலத்திலுள்ளவர்கள் வழுத்தல்போலக்
கல்லதுவேபெருங்கணையா மென்றேகூறிக்
கனகமணிமண்டபவாய் தனையுந்தாண்டி
மெல்லநடந்தசுரர்படை யோரம்வீர
விறற்சிங்கக்குட்டியென வீம்பாய்நின்று
வல்லமையுள்ளோர்களினிப் போர்தான்செய்ய
வந்திடலாமென்றபினும் வழுத்துவானே.

இதுவுமது.

போதிகைப்பொற்றூணதனை நிலத்திலூன்றிப்
போர்பொருதவாங்களென்று புகன்றேயப்பால்
காதுங்கேளாதவன்போல் மௌனத்தோடும்
களரிதனில்நின்றவன் மெய்கருக்கங்கண்டு
சாதுரியஞ்செலுத்துவையோ திருடாவாடா
சண்டைசெய்துகெலித்துனுயிர் பிழைக்கத்தானே
பேதுவிதியுனக்கிப்போ சொல்வாயென்றே
இடிபதுபோலுரைத்தசுர ரெதிர்த்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் பொற்றூணைக் கரத்திலேந்தி யுத்தத்திற்கு அரைகூவிநிற்கும் அனிருத்த மாகாராசனைப்பார்த்து, அடா திருடா வாடாவென்று அசுரர்கள் எதிர்க்கிறவிதமெப்படியென்றால்.

உயுத்தம்-திபதை-இ-ம்-சங்கராபரணம்-மட்டியதாளம்.

கண்ணிகள்.

க. அங்கஜன்மகன் மீதிலவுணர்கள்
சிங்கங்களென எதிர்த்தனர்
ஆண்பிள்ளையாலல் வாடாவென்றுமுன்
மான்கள்போலவே குதித்தனர்.

உ. சங்குசக்கரன் பேரன்மீதினல்
பொங்குஞ்சூலங்கள் விடுத்தனர்
சதுருபாயங்கள் தன்னாலினிமேல்
வதைசெய்வோமென மதித்தனர்.

ங. ஆயிரம்வெள்ளத் தசுரர்கூட்டங்கள்
சியங்களென அடுத்திட்டார்
ஆயிரம்பதி ஞாயிரந்தொகை
தீயினேர்மழு வெடுத்திட்டார்.

ச. ஆயிரம்வில்லி லாயிரம்பதி
னாயிரங்களை தொடுத்திட்டார்
ஆயிரம்பெயர் அச்சுதன்சுதன்
சேயன்மீதினில் விடுத்திட்டார்.

ரு. உம்பர்கள்வெரு வும்படிச்சிலர்
சம்பிரதாயங்கள் பேசினர்
ஒண்டியாய்வந்த போதிலுமிவன்
சண்டிதானென ஏசினர்.

சு. வம்புவார்த்தைகள் பேசினர்சிலர்
அம்பினங்களை வீசினர்
மாயவன்சுதன் மைந்தன்மீதினில்
ஆயுதங்களை வீசினர்.

எ. கண்டவர்பயந் தோடவேவெகு
தண்டுதாளைகள் பெருக்கினர்
கையறைகளினல் மலைகளை
நையநையவே நொறுக்கினர்.

அ. வண்டிகள்பல நொறுக்கினர்பலர்
கொண்டைமீசைகள் முறுக்கினர்
மதகரியணி நொறுக்கினர்பலர்
குதிரைகளணி நெருக்கினர்.



கூ. கல்லெறிந்தனர் சிக்கிரஞ்சிலர்
கைக்குச்சிக்கின தெறிந்தனர்
கலையெறிந்தனர் சிலர்களேபலர்
கண்டகோடரி யெறிந்தனர்.

க0. சொல்லெறிந்தனர் சிலர்களேகொடுஞ்
சூரிகள்தனை யெறிந்தனர்
சூலமெறிந்தனர் சிலசிலர்பனந்
தண்டங்கள்தனை யெறிந்தனர்.

கக. மாரன்புத்திரன் றனைக்கண்டுசிலர்
மேருபோலவே யெழுந்திட்டார்
வாருதியில் லோகநாயகன்
பேரன்மீதில் வளைந்திட்டார்.

கஉ. சாரியமிது வேளைதானென்று
சூரருள்ளங் குளிர்ந்திட்டார்
சாஸ்திரப்படி யாகவேசிலர்
அஸ்திரப்புடை பொழிந்திட்டார்.

கங. கள்ளனிவன்றலை தன்னையேயிப்போ
கிள்ளுகென்றுகண் காட்டினர்
கஞ்சியாகவே பிதியெனச்சிலர்
குஞ்சரங்களை யோட்டினர்.

கச. தள்ளியோடுவா னென்றுமேசிலர்
முள்ளுவேலிகள் நாட்டினர்
சக்கரந்தடி யெறிந்தனர்சிலர்
உக்கிவேல்களை நீட்டினர்.

கரு. ஓடுங்கல்லுக ளெறிந்திட்டார்இருப்
புலக்கைகளெடுத் தெறிந்திட்டார்
உருக்குச்சில்லுக ளெறிந்திட்டார்சிலர்
உரல்களையெடுத் தெறிந்திட்டார்.

கசு. சிடும்வீட்டங்க ளெறிந்திட்டார்சிலர்
நிலவுகதவையெறிந்திட்டார்
நெடியவுலக்கையெறிந்திட்டார் சிலர்
நெருங்குமலைகளெறிந்திட்டார்.

௧௭. பொருதிவெற்றிகொண்டோர்கள்போலவே
முரசுதுந்துமிகடத்திட்டார்
பூரிசின்னங்களூதவேசிலர்
பேரிகைகளையடித்திட்டார்.

௧௮. பரிதியும்மதியும் வெருவவேமிக்
சுருதியஸ்திரங்க ளெடுத்திட்டார்
பார்முழுதையும் உண்டுமிழ்ந்தவன்
பேரன்மீதினில் விடுத்திட்டார்.

௧௯. புல்லியங்களரற்றவேசிலர்
வில்லினிற்கணை கோத்திட்டார்
பார்த்தும்பாராமல் ரதிமகன்மீது
ஆத்திரமழைதூற்றிட்டார்.

௨0. எல்லுலகுள்ளபேர்களுமிந்தத்
தொல்லைகண்டுகண்பூத்திட்டார்
இச்சமாவாணன்தனயனிந்திரன்
நற்றவர்களும்பார்த்திட்டார்.

௨௧. உளிகள்வாச்சிகள்விசினார்சிலர்
முழுமாங்களை விசினார்சிலர்
உருக்குநால்வலை விசினார்சிலர்
கருக்குவாள்களைவிசினார்.

௨௨. மழுவினங்களைவிசினார்சிலர்
கொழுவினங்களைவிசினார்
வளைதடிகளைவிசினார்சிலர்
கரிமுளைகளைவிசினார்.

௨௩. செருக்களமுழுதுஞ்சனங்கள்
நெருக்கமாகவேமேவினார்
தேர்களேறிக்கொண்டவசுரர்
மேருபோலுலாவினார்.

௨௪. கரிக்குலங்களும் பரிக்குலங்களும்
உருக்கமாகவேகீவினார்
கட்டழகன்றன்மீதிலேசிலர்
மட்டிலாக்கணைதூவினார்.



## போது விருத்தம்.

மன்னுலகில்மானிடர்கள் மந்த்ரஞானம்
வருந்தியந்தமந்திரத்தை வலுந்தான்செய்ய
எண்ணியுருப்போடுபவர்போ லாக்காஸ்த்ரம்
இரதிமகன்மீதுசினந் தெய்யத்தானே
ஒன்னுரெண்டுந்தான்தெரியா தவன்போல்நின்று
உச்சிதத்தான்காமதனி லுணர்வாய்ப்பற்றி
நன்றிசெய்தபேர்க்குநன்றி செய்வேனென்று
நகர்ந்திட்டான்சண்டைசெய வுகந்திட்டானே.

## வசனம்.

இந்தப்பிரகாரம் அரக்கர்கள் கைகொண்டமட்டும் அத்திர சத்திரங்களையும் கல்மண்களையும் வாரியிறைத்து ஆரவாரஞ்செய்யக்கண்டு அனிருத்தமகாராஜன் உயுத்தஞ் செய்கிற விதங்காண்க.

## அனிருத்தன் யுத்தம் தரு-இ-ம்-தோடி-அடதாளம்.

### பல்லவி.

அடித்தானே அனிருத்தமாராசன் - திவ்ய
அனங்கன் ருக்குமிபிராணநேசன்.

### அநுபல்லவி.

அசுரர்படையைக்கண்டு - பகம்பொற்றாண்டையிற்கொண்டு
விசைகொண்டாடியேசென்று - பனையும்போலவேசுழன்று (அடி)

### சரணம்.

க. அடித்தானேதடிபோலே - இடித்தானேஇடிபோலே
தலைத்தானேசிலபேரைக் - குலைத்தானேசிலதேரைத்
தடர்ந்துபாய்ந்தெட்டிச் சிற்சிறென
அடர்ந்துபாய்ந்தெட்டிச் சாடுசாடுறென
துடிக்கெனத்துள்ளுஞ் சூரசூரரை
வெடுக்கெனக்கொல்லும் வெல்லும்வீரரை
பஞ்சைத்துரும்புபோலே மதித்தான் - சிலரைக்
கஞ்சிக்கஞ்சியதாக மிதித்தான் - செர்வம்
மிஞ்சிக்கொழுத்த பேரைக்
கொஞ்சிப் பழுத்தபேரை
மிரட்டிச் சுழித்தபேரை
உருட்டி விழித்தபேரை.

மீசைபுடைபடென் றதிரும்பேர்களை
ரோசம்அனலதி லுருக்கும்பேர்களை
வெடுக்கென்றுபல்லைக் கடித்தபேர்களை
சுருக்கென்றுகள்ளைக் குடித்தபேர்களை
ஆலைக்கரும்புபோலே நெறித்தான் - சிலரைத்
தோலைக்கிழித்து நார்போலுரித்தான் - சிலரைத்
காலுக்கஞ்சாறு துண்டம் மேலுக்கஞ்சாறு துண்டம்
கரத்திற்கத்திரிப்பாரும் உரத்தில்பொத்தல்கள் நூறும்
காம்இதுவிதம் சதுஇயிற்செய்தனன்
மறுபடியுஞ்சில சிரசுகள்கொய்தனன்
கடுங்காற்றென அடர்ந்தபேர்களைக்
கொடுங்கூற்றெனத் தொடர்ந்தபேர்களை
மழைத்தூணினில் மோதினான் - சிலரைப்
பாளைக்கம்பென ஊதினான் - சினந்த
சூளைகாற்றின்மேலே
வாழைச் சருகுபோலே
சுழன்றுவிழுந் திட்டாரை
அழன்றுபயந் திட்டாரைத்
தூக்கியெறிந்தான் காததூரமே
பார்க்கும்போது தன்றாபாரமே
அளிக்கும்பேர்களைச் செதுக்கினான்
விழிக்கும்பேர்விழி பிதுக்கினான்
கெட்டிக்காரரையெல்லாம் அழைத்தான் - வரவசு
வெட்டித்தேகங்களெல்லாம் துளைத்தான் - பின்னும்
கட்டுத்தடிகள் பறித்தான்
தட்டுத்தடிகள் முறித்தான்
கணைவேல்சூலன் பிடித்தான்
துணைவாள்வில்லு மொடித்தான்
காதநாக்கையுமுக்கு மரிந்தனன்
பூதகணங்கள்சமீப மெறிந்தனன்
கடுந்தேபின்னும்வந்தபேர்களைத்
தொடர்ந்தோடியும் அடர்ந்தபேர்களை
தாங்கினன்கைத்தொடைசெய்தானே - மூடர்
சிரங்கள்கரங்கள் கொய்தானே - களிக்கும்



திரங்கண்டே சிலர்மாயக்
கரங்கண்டே சிலர்சாயத்
தேர்பிளந்து சிலர்விழ
மார்பிளந்து சிலர்விழத்
திரும்பிவந்தவர் சிரங்கள்மீதிலும்
பதும்பிவந்தவ ருரங்கள்மீதிலும்
சிறந்துதட்டுவர் சொல்லினகத்திலும்
பறந்துதட்டுவர் பல்லின்முகத்திலும்
ஜேஷ்டாதேவியும் வர்சம்பண்ணவே - சுடு
காட்டைப்பிரேதகங்கள் தானும்நண்ணவே - சிலர்
தாஷ்டிகங்கள் குறைத்து
ஊட்டிகளை நெறித்து
சுக்காந்தங்கள் படிக்கத்
துக்கசோவுஞ் சிறக்கச்
சண்டமாருதமென வந்தவர்கள்தலை
மண்டையோடுகள் சிதறவுயிர்நிலை
தகர்ந்திடச்சில பிணத்தைதச்சாய்த்தனன்
நகந்தனிற்சில சனத்தைத்தேய்த்தனன்
சிலதுசித்திர ரதங்கள்சாய - பின்னும்
சிலதுவச்சிர ரதங்கள்மாய
சிலதுதேர்கள் நொறுங்க
சிலதுதேர்கள் நெருங்க
சிலதுஆனைகள்விழ
சிலதுஆனைகள்மாள
சிலதுயானைகள் பார்வைமூடவும்
சிலதுயானைகள் வீரிட்டோடவும்
சிலதுகுதிரைகள் பின்னகன்றிட
சிலதுகுதிரைகள் வீணாய்செத்திட
நீடுமாயவன்போன நேடுந்தோதுகொண்டு
ஓடியோடியே சாடும்போதுதப்பி
ஓடிப்போனவர்போகக்
கூடிப்பொருந்தினர்சாக
உணர்த்தி குறைந்தார்சிலர்
பிணத்தில் மறைந்தார்பலர்

உறைந்தகுருதியில் நுழைந்தபேர்சிலர்
கரைந்தபுழுதியில் மறைந்தபேர்சிலர்
உருக்ஷணத்தில் மாறுவார்சிலர்
சிறுத்தெறும்பெனவூருவார்சிலர்
வாண்டார்போலுட லொடுங்கினரேசிலர்
பிரண்டார்போல்முச் சடங்கினரேசிலர்
துறண்ட பிணங்கள்போலே
சுருண்ட நரிகள்போலே
செள்ளாய் நடந்தபேர்சிலர்
எள்ளாக் கடந்தபேர்சிலர்
சிட்டுக்குருவிபோ லானபேர்சிலர்
பட்டுப்பூச்சிபோல் போனபேர்சிலர்
தெனசேனச்சிலர் ஜன்மமெடுத்திட
அனலெனச்சிலர் குப்புறப்படுத்திட
தடங்காணுமலே சிலர்விழிக்க
இடங்கேடுண்டாய்ச் சிலர்சுழிக்க
சங்கடங்கொண்டு சிலர்புரள
உங்கடங்கொண்டு சிலருருள
கணக்கில்லாப்பசிகொண்டு
பிணக்குப்பை தனையுண்டு
கர்த்தை பொடிக்கவும்
அரத்தம் குடிக்கவும்
சிரத்தை முடிக்கவும்
யிரத்தம் பிடிக்கவும்
கதித்தவர்க்கவர் பிடித்துத்தள்ளவும்
உதைத்தவர்க்கவ ரடித்துக்கொள்ளவும்
குத்துக்காயங்க ளெல்லாம்நோக
அத்திரக்கணைகள் பெருந்துச்சாக
செத்த பிணங்கள்மீதே
கொத்திக் காகங்கள்மோத
செம்பருந் துகளாட
பம்பிசோரு கள்கூட
செள்ளுணுச்சிறுஎறும்பு ஈகள்மொய்ந்சவே
குள்ளநரிகளும் வந்து துஞ்சவே



செருக்களந்தனில் நாய்கள்நாடவே
வளைக்கழுகுகள் வட்டம்போடவே
சிறிச்சிறியோர்ம்பக்கதமாய் - சண்ட
மாருதங்களெந்தர்னேரதமாய்
வாரியேழும்தயங்க
பேரிமுரசுமுழங்க
வசந்தன்மகன் கொடியமின்னவே
விசும்பினிற்பல தேவர்மின்னவே. (அடி)

போது விருத்தம்.

இப்படியுமதன்சுதன்கைத் தூணிலகைந்து
இறந்தனரனேகர் எழுந்திருந்தோரெல்லாம்
தப்பியொழிந்தோடச் சமரொடுங்கவானோர்
தானைக்கப்பேய்க்குலங்கூத் தாட்த்தானே
உப்பரிகைமீதினில்நின் றிந்தமார்க்கம்
ஓயாமல்நோக்கியுமா யிரங்கையுள்ளோன்
சர்ப்பமெனச்சீறிரதி சுதனைநாடிச்
சருகின்றான்வெகுசலுதாய் வருகின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்தமகாராசன் கையிலிருந்த சொர்னத் தூணில் அடிப்பட்டு இராக்ஷத வீரர்களெல்லாம் அழிந்து அலங்கோலமாய் ஓடிப்போனவிந்ததையை, உப்பரிகையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த வாணாசுரன் அதிககோபத்தோடு வருகிற விதங்காண்க.

வாணாசுரன் வருகிற தரு இ-ம்-மோகனம் ஏகதாளம்.

பல்லவி.

வாணாசூரனும் வந்தானே - உடாங்கனையாம்
வனிதைதனைப்பயந்தானே

அநுபல்லவி.

வாணாசூரனும்வந்தான் - நாணாசூர்த்துகந்தான்
மடித்துஇதழ்கடித்து கதித்துச்சீறிக்குதித்து
க்ஷணத்தினிலெழில் - இரதத்திலேறிக்கொண்டு (வா)

சரணங்கள்.

க. மலைபோலத்தலையிலங்கவே அநனிற்சொர்ண
வச்சிரக்கிரீடந்துலங்கவே புனைந்துகொண்ட

கலன்களெல்லாங்குலுங்கவே மாசிபங்குனிக்
கதிர்போற்கண்களிலங்கவே கூர்மைமிகுந்த
சிலைவேல்சூலம் தோமரங்கள்
பலவானதெண்டு வாணங்கள்
செங்கைகள்தனிலிவை தங்கியிலங்கவே
தங்கவரைநிகர் விக்கமலுங்கவே. (வா)

௨. கவரிகுஞ்சங்கள்வீசவே தனகர்த்தரெல்லாம்
கடிந்துமுன்னாகப்பேசவே சிங்கம்போலொத்த
சௌரியப்புலவர்பாடவே மதிமந்திரிமார்
தாழ்ந்துபுகழ்ந்துகூடவே வந்திட்டானே
தவறுமல்மன்னரெல்லாம்
சிவத்தியானமென்றுசொல்லத்
தந்திரவீரர்மிகுந் தூர்க்கேத்திட
விந்தைமுரசுடன் துந்துபியார்த்திட. (வா)

௩. சுழிகெட்டபயலொருத்தனே வந்தெதன்சேனையை
துரும்புபோலுங்குறித்தானே அநேகம்பேரை
விளையாட்டத்துடனறுத்தானே மதங்களைநொறுக்கி
வேல்வாள்களைமுறித்தானே அவன்றன்பின்னும்
உழையாட்டங்கொண்டுகொன்று
விளையாட்டாங்கொண்டுசென்று
உக்கிரமுடையசமருக் கெசமானென
நிற்கிறபயலை வதைக்கிறேனென. (வா)

பொது விருத்தம்.

தொழுதடர்க்துருந்திடும் வீரருக்குவீரு
சொல்லியந்தவிதத்தினிலே வாணாசுரன்
விழுதடர்ந்தஆலமரம் போலேநின்றான்
விம்பையுங்கண்மிரட்டையும் விரியமுங்கண்டு
பழிதுடர்ந்தான்இவனைப்பெற்ற வயிறுதான்பின்
பாழியென்றும் கேணியென்றும் இரதிபாலன்
உளந்தனிலவ்விதம்நினைந்து வந்தானப்போ
உதித்திட்டார்வீரரெலாந் துதித்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வாணாசுரன் பெரியாதத்திலே யேறிவந்தபோது அனிருத்தமகாராசனும் எதிர்த்த தனகர்த்தனுடனே யுத்தஞ்செய்கிற விதங்காண்க.



அனிருத்தனுக்கும்-சேனைகளுக்கும்-சண்டை.

பொது-திபதை-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. தேவர்க்குவருமிடர் தீர்த்திட்டான் - போன்
தேகத்தையேதிட்டுப் பார்த்திட்டான்.

௨. கோபக்கடினபழி யேர்த்திட்டான் - மிகுந்து
கூர்ந்தகார்முகமாரி தூர்த்திட்டான்.

௩. கோலுந்தடிகளை யேவினார் - சிலர்
தொழுந்துச்சுழித் துலாவினார்.

௪. வேலையுஞ்சூலமும் தாவினார் - சிலர்
வெடுக்குவெடுக்கென்று தூவினார்.

௫. தனவானிவனென்று பேசினார் - சிலர்
கள்ளப்பயலென்று ஏசினார்.

௬. மனிதனுமல்லவென்று கூசினார் - சிலர்
வாள்களனேகமாய் வீசினார்.

௭. ஏகமாய்காங்களைமீறினார் - சிலர்
இடும்புவார்த்தைகள்தனைக் கூறினார்.

௮. தீரருக்குள்சுத்ததீரனோ - வலகில்
தேடக்கிடையாதசூரனோ.

௯. வீரருக்குள்சுந்த வீரனோ - எங்கள்
வேந்தனுக்குங்கெட்டிக் காரனோ.

௧௦. என்றுவீராப்புவிம்பையும் பெருக்கினார் - சிலர்
விரிந்தயிடைகளைச் சுருக்கினார்.

௧௧. கருப்புக்கச்சையை யிறுக்கினார் - சிலர்
கதித்துமீசையை முறுக்கினார்.

௧௨. நாக்குகள்வாயி லடக்கினார் - மெத்த
நட்டுவிசாலங்கள் பேசினார்.

௧௩. பாந்தாகாத்தைக்கூட்டம்போ லேகினார் - சிலர்
கைக்குச்சிக்கினதெல்லாம் வீசினார்.

௧௪. மண்டியிட்டுக்குறி நோக்கினார் - சிலர்
வணுத்தசயிரியம் தாக்கினார்.

கரு. கண்டகோடாலியைத் தூக்கினர் - மிகக்
கடிந்துகிராமிசை தாக்கினர்.

கசு. கடினக்கஞ்சனைத்தானே மாய்த்தனர் - சிலர்
காலிலுள்ளவிழியைத் தேய்த்தனர்.

கஎ. எட்டியடியுங்க ளென்றனர் - சிலர்
இடுப்பையொடியுங்க ளென்றனர்.

கஅ. சிட்டைப்பிடியுங்க ளென்றனர் - சிலர்
செகிணிக்கடியுங்க ளென்றனர்.

ககூ. நாணுங்கொண்டே கயிற்றிற்றெங்கடா - உந்தன்
நாடினிச்சுடுகாடு வங்கடா.

உ0. இப்பவும்வந்ததைக் கண்டையே - நீதான்
இனிமேற்கெலிக்கலாம் சண்டையே.

பொது விருத்தம்.

கொழுத்தவுணரிவ்விதமாய்க் கணைகளேவிக்
குதிரைகரியேறியங்கே குலாவக்கண்டு
கழுத்தைமெல்லஅசைத்தசைத்து நகைசெய்தேவெங்
கலக்கடையில்யானையது புகுந்தாப்போலே
செழித்தவயக்குழுவில்நரி புகுந்தாப்போலும்
செம்புழுதிக்காட்டினில் மாருதஞ்சென்றாப்போல்
சுழித்தசுரர்படைக்குள்மதன் மகன்றான்புக்கிச்
சுருக்கினன்வெகுபட்டைை நொறுக்கினனே.

அனிருத்தமகாராஜன் ராக்ஷதச்சேனைகளை வதைக்கிற
தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்தானேகஞ்சனைக் கொன்றவன்பேரன்
அண்டர்வெருவும்படித் தண்டதிகழுடனே
கொண்டல்வண்ணன்மகன் சண்டையைஅதிக்ஷணம்
முடித்தானேமன்மத னுடையகுமாரன்.

அநுபல்லவி.

அடித்தானே சிதறுவர் காலகளை
ஒடித்தானே பதறுவர் கால்களை
இடித்தானே கதறுவர் மேல்களை
பொடித்தானே மதமுள்ள சேல்களை



அடித்துவந்தவ ரிடைகள் முறிந்திட
கடித்துவந்தவர்கள் தொடைகள் நெறிந்திட
அறைந்துவந்தவர்கள்முதுகு பிளந்திட
கறந்துவந்தவர்க ளுதடு கிழிந்திட
வதைத்தானே யெலும்புகளும்பொடியாக (அடித்)

சரணங்கள்.

உருந்தஉருந்தலையும் சிறுத்த விழிகள்தனைக்
கருத்தமலைகளெனப் பருத்த தலைகள்தனைச்
சிதைத்தானேநிணச்சதையும் பிரிவாகவெட்டி
வதைத்தானே க்ஷணம்சில சனங்களை
உதைத்தானே மருமத்திற் கண்களை
விதைத்தானே சனகள கிணங்களை
இதைத்தானே சின்னகரி யினங்களே
ஒலையிட்டுஓடிவந் திவை பார்த்திட
கூளிகட்கு முகசாசிகள் வேர்த்திட
ஊத்தமெழும் பிரத்தமலை திரண்டிட
பார்த்தவிடங்களெங்குந் தலைக ளுருண்டிட
மாய்த்தானேபின்னையுந் தான்சிலபேரை - மண்ணை
வாங்கஅடிதகர்த் தேங்கமுருபுணைகள்
மாங்கதலியொடு வேங்கைமாங்களெனச்
சாய்த்தானேபோரடியால் தசதேதை
தேய்த்தானே சிலர்தனைப்பாரொடு
மாய்த்தானே சிலர்களைவேரொடு
தேய்த்தானே சிலர்களைத்தேரொடு
மாய்த்தானே சிலர்களைச்சேரொடு
வந்துவந்துபின்னுங் கூடுவர்கால்களைச்
சந்துபொந்துகளில் ஓடுவர்மேல்களை
மதகரிமறைவுக் கோடுவர்தலைகளை
ரதகரிகள்மறைவுங் கோடுவர்குலைகளை
நெறித்தானேஆலைக் கரும்புகள்போலே
நீளக்குழம்புகளின் மேலைத்தொலிப்பதென
வாழைப்பழங்கள்தனைத் தோலைக்கிழிப்பதென
உரித்தானேதோல்களை நகங்களினாலே

முறித்தானே விடவிடவாள்களை
அறுத்தானே கடகரிவாள்களை
மறித்தானே திடமுளஆள்களை
முறிந்தானே யெலும்பெழுந்தோள்களை
நெஞ்சுநஞ்சுசிலர் தாள்களைச்சரிந்திட
விஞ்சிவிஞ்சிச்சிலர் தாள்களைநெறிந்திட
நெற்றிகள்கிழிந்துசில ருயிர்கள்மாய்ந்திட
ரத்நங்கள்கிளர்ந்துசில ருயிர்மாய்ந்திட
அரைத்தானேசிலபெய ருரங்களைத்தரைமீதே
வீட்டிநெறிக்குமுன்னே
ஓட்டமெடுக்கவழி
காட்டுமெசார்களைக்
கூட்டிக்கூட்டிப்பிடித்
திரைத்தானேசேனமிசை கைசலியாதே
குறைத்தானேசில பேயர்திறங்களை
அறைத்தானேசில பேருரங்களை
முறித்தானேசில பேயர்கரங்களை
கரைத்தானேசில பேயர்சிரங்களை
ஊதினான்சிலரைத் தரையொடுதரையென
மோதினார்சிலரை யுலர்வடசருகென
உருக்கினான்சிலரை உலைபடுமிரும்பென
நெருக்கினான்சிலரை அலைபடுதுரும்பென
பிளந்துசிலருடலைப்பிளந்து யெரிந்துபின்னும்
குழைந்தபுழுதிதன்னில் நுழைந்தகலப்பைக்கொழு
இரும்பேபோல்சிலர்தனைக் குருதியில்மறைத்தான்
பிரம்பேபோல்சிலர் குடல்மலையெனநிறைத்தான்
உரம்பேபோல்சிலர்களை சிதைத்தான்
சுரும்பேபோல்சிலர்களை வதைத்தான்
எறும்பேபோல்சிலர்களை மிதித்தான்
கரும்பேபோல்சிலர்களை முறித்தான்
பேய்களென்றுசொல்லிச் சிலர்களைவென்றான்
நாய்களென்றுசொல்லிச் சிலர்களைக்கொன்றான்
பிந்திநின்றவர்கள் மூக்குகளரிந்தான்
முந்திநின்றவர்கள் நாக்குகளறுந்தான்



ஆறுதபுண்ணொடு மடிந்தனவொருலக்ஷம்
ஆய்ந்தகரிகள்பரி மாய்ந்ததாறுலக்ஷம்
பாய்ந்தபரிகள்மிக மாய்ந்ததேழுலக்ஷம்
தேரேறிவந்தனர் மடிந்தனரிருலக்ஷம்
பாராளுவர் மாய்ந்ததுலக்ஷம்
போராடுவர் மாய்ந்ததுலக்ஷம்
வீராதிபர் மாய்ந்ததுலக்ஷம்
சூராதிபர் மாய்ந்ததுலக்ஷம்
அடிச்செத்தவர்க ளீரைந்துலக்ஷம்
ஓடிச்செத்தவர்கள் நாலைந்துலக்ஷம்
ஆகமடிந்தவர்க ளைம்பதுலக்ஷம்
போகமடிந்தவர்க ளொன்பதுலக்ஷம்
இதுபோகவும்வில்லொடிந்தன வொருகோடி
ஈட்டியொடிந்தவொரு கோடிகோடியொடு
கீட்டியொடிந்தவொரு கோடிகோடியென
ரதமானதொடிந்தது தானொருகோடி
கதையானதொடிந்ததுகோடி
மதவேல்களொடிந்ததுகோடி
அதிர்சூலங்களொடிந்ததுகோடி
கதிர்வாள்களொடிந்ததுகோடி
இடருங்கணையொடிந்த திருபதுகோடி
துடருங்கணையொடிந்த தருபதுகோடி
எண்ணவொடிந்தது மீரெட்டுக்கோடி
பின்னுமொடிந்தகணையாறெட்டுக்கோடி
நாயும்நரிகளும் குமிகூட
நந்தனுக்குமகன் - மைந்தனுக்குமென
வந்திடச்சுகமி - குந்துபெற்றமென
பேயும்பிடாரிகளும்நடமாட
சீயுங்குருதியுஞ்சில ஆறாய்
வாயும்வரும்பல கூறாய்
ஈயுங்காங்கால்களும்வேறாய்
சாயுந்தலைமுண்டங்கள்போராய்
நாடர்ந்தபனங்குலைகளைப் போலவும்
மோடர்ந்தபெருமலைகளைப் போலவும்
வேசாலம்வெந்தவீடுகள் போலவும்

நாசகாலம்வந்த காடுகள்போலவும்
குவித்தானேபோர்க்கள மெங்கினும்பிணமாய்
முந்திநின்றவர்கள் முந்திநிற்கவும்
பிந்திநின்றவர்கள் பிந்திநிற்கவும்
செபித்தானேமந்திர தியானமும்கணமாய்
சதித்தானேவெண்ணீ றெனச்சிலர்களை
துவைத்தானேசெஞ்சா றெனச்சிலர்களை
அவித்தானேமண்சே றெனச்சிலர்களை
குவித்தானேபுல்போ ரெனச்சிலர்களை
குதிகளாலேபண்டங்க ளதிர்ந்திட
உதைகளாலேநந்தங்க ளுதிர்ந்திட
கூர்மைகண்டுசில சாண்மைகள்தேய்ந்திட
பார்வைகண்டுசிலர் சேண்திசைபாய்ந்திட
அனின்மாமரம் போலவுந்தேர்மிசை
அகமதில்நிகபகை விளைந்திடவே
குலவிழிகள்தனிற் புகையெழுந்திடவே
கோதுந்துரும்பார் சிலபேர்களைவென்றான்
காலுஞ்சலித்தாலுமேநிற்கான்
வேனுங்களைவர்களுக்குஞ் சிக்கான்
காலம்வரில்வாய் மொழிதிக்கான்
சூலந்துளைத்தாலுமெய் செக்கான்
அனந்திஅனந்திச்சிலர் தொண்டைகள்வறண்டிட
கனத்ததடங்கமெங்கும் மண்டைகளுருண்டிட
அண்டர்முனிவரிந்தச் சண்டையைமதிக்கவே
கொண்டல்வண்ணன்பதம் எண்டிசைதுதிக்கவே (அடி)

போது விருத்தம்.

உருக்குமிதன்கொழுநனிந்த விதமாய்த்தேர்க
ளொடித்ததிகபரிகரிக ளுயிரைப்போக்கி
செருக்குமுள்ளஅசுரர்கள் மேற்பாய்ந்துசீறி
நிர்த்தூளிசெய்துபின்னும் நில்லாதோடி
அருக்கலங்கவோடிடும்பேர் தனையும்வாட்டக்
கண்டுரதம்நிவர்ந்தா யிரங்கையுள்ளோன்
செருக்களமெல்லாந்திரிவான் முன்பாய்ச்சென்று
செறுவான்கடினமொடு கூறுவானே.



வசனம்.

இந்தப்பிரகாரம் அனிருத்தமகாராசன் விரசிங்கக் குட்டிபோல் அசுரர்சேனையிற் புகுந்து, யானை குதிரை தேர்காலாள்என்கிற சதுரங்கசேனைகளையும் பொடிப்பொடியாய் அடித்து நிர்த்தூளியாக்குவதை வாணாசுரன்கண்டு ஆஹாவென்று இடிமுழக்கம்போல் அட்டகாசம் செய்து தேரைச்சீக்கிரமாகச்செலுத்தி அனிருத்த மகாராசனுங் கெதிரேவந்து சொல்கிற விதங்காண்க.

தர்க்கம்-தரு-இ-ம்-புன்னாகவராளி அடதாளம்.

வாணாசுரன்.

௧. மீறுதேமட்டிலே நில்லடா - உந்தன்
மிரட்டெல்லாம் எனக்கொரு புல்லடா - உந்தன்
ஊர்பேரதுபேரென்ன சொல்லடா - இனி
உன்னுடல்குத்தாணியிற் சிக்குநெல்லடா - என்னைச்
சூராதிசூரனென் - றெண்ணாமல்வாய்மதம்
சொல்லாமலென்னெதிர் - நில்லாமலுயிர்தப்பி
ஓடிப்போடா திருட்டுக்கள்ளனே - இப்ப
உந்தன்கைகால்கொண்டு வந்தசடங்கண்டு (ஓடி)

அனிருத்தராசன்.

௨. சினங்கொண்டு வாணனேபாசுறாய் - என்னைத்
திருடாதிருடாவென்று ஏசுறாய் - சற்றுங்
கனங்கொள்ளாவார்த்தைகள் பேசுறாய் - ஓராயிரங்
கைபடைத்தோனென்று வீசுறாய் - நித்தம்
பனங்காட்டில்வாழ்நரி - சலசலப்பைக்கண்டு
பயப்படுமோவலை - லகப்படுமோசும்மா
போடாபயித்தியக்காரனே - கொடும்
போர்செய்யவந்தவன் பேர்கேட்கலாகுமோ (போ)

வாணாசுரன்.

௩. உமைபாதம்வருந்தித் துதிக்கினும் - தர்மம்
உள்ளத்தில்நன்றாய்ப் பதிக்கினும் - நீதான்
கமலவேதனைப்போலே விதிக்கினும் - செல்வி
காந்தன்பதியைப்போய் மிதிக்கினும் - நீதான்
எமலோகம்போனாலும் - நீராக்கொடும்பழி [சட்டு
வற்றுக்கொண்டாய்விரைந்துப் - பார்த்துக்கொண்டாய்பு

பயலேறைதரியமாய்நில்லடா - காட்டுப்
பன்றியைக்கோழி வென்றிடுமோவெட்ட (பய)

அனிருத்தராசன்.

ஆழக்கிணற்றிற் குதிப்பதும் - ஒழிந்து
ஆள்பலங்கண்டு சதிப்பதும் - பாவம்
சூழக்கருவங்கள் விதிப்பதும் - வாழ்வு
துலையும்போர்தன்னைத் துதிப்பதும் - பின்னும்
வேளைக்கொருபுத்தி - தனைநினைந்தெளியோரை
வெல்லுவதும்பொய்யைச் - சொல்லுவதும்உங்கட்
குண்டெங்கட்கில்லையசுரனே - சமரில்
ஓடியொழிந்திடும் பேடித்தனம்முங்கட் (குண்)

வாணாசுரன்.

௫. திருடனுக்காண்பிள்ளைச் சூரமோ - இளைத்த
சேனையைக்கொன்றது வீரமோ - மெத்தக்
கெருடனுக்கேளவி பாரமோ - வுன்தலையைக்
கிள்ளத்தானேவெகு நேரமோ - அடடா
குருடனோபிள்ளைகன்று - பயமறியாதாப்போல்
குதிபோட்டுத்திரியாதே - மதிகெட்டாபயலேயுன்
குரும்பெல்லாம்இங்கே செல்லாதடா - கள்ளைக்
குடித்துப்பெண்பிள்ளையை யடித்துப்பயப்படுத்தும்(குரு)

அனிருத்தராசன்.

௬. அத்திகளும்சில வீரரும் - சரிய
அஸ்வங்களும்பல சூரரும் - வர்ணச்
சித்திரத்தேர்களும் தீரரும் - நல்ல
சேவகரும்அமுல் தாரரும் - பின்னும்
எத்தனையோகோடி - மடிந்திடவேகொடுத்
திட்டோனுக்காண்பிள்ளைப் - பட்டமொருக்காலும்
செல்லுமோடாவாணாசூரனே - எங்கும்
செல்லாதபணங்காசு வல்லவர்க்காகிலும் (செ)

வாணாசுரன்.

௭. சூலத்தினாலுன்னை மாய்ப்பண்டா - சின்னத்
துரும்பாவுன்னங்கிசத்தைச் சாய்ப்பண்டா - இந்திர
சாலத்தினாலுன்னை யேய்ப்பண்டா - உடலைத்
தரையோடுதரையாகத் தேய்ப்பண்டா - பின்னும்



காலத்திற்கேற்றிடும் - கோலத்தைச்செய்குவன்
கல்லுடனேயெதிர்த்து - வல்லமைசெலுத்துவன்
கடுந்தூரம்நீயோடிப்பிழையடா - நன்றாய்க்
காலில்வலுவுண்டாயின் மேலும்ஆயுசுண்டாகில் (கடு)

அனிருத்தராசன்.

௮. சாலத்தொழிலுக்குத் திருட்டுக்கும் - உந்தன்
சதுரங்கதளங்களின் மிரட்டுக்கும் - நல்ல
சூலுக்கும்சாலப் புரட்டுக்கும் - உந்தன்
துடுக்குக்கும்அமட்டுக்கு மிரட்டுக்கும் - அஞ்சேன்
தோலைந்தட்டிப்பூனை - தன்னைமிரட்டுறாய்
தொக்குக்குள்உலகத்திற் - சிக்குவார்வேறுண்டு
நானல்லடாவாணாசூரனே - ரொம்ப
நடுங்கிநடுங்கித்தேகம் ஒடுங்கியோடியபேடி (நா)

வாணாசுரன்.

௯. பேயாநீமிஞ்ச லாச்சுதோ - நான்
பேசுவதும்வெறும் பேச்சதோ - எந்தன்
ஆயிரங்கைப்பலன் போச்சுதோ - நீதான்
அப்பவேஆண்பிள்ளை யாச்சுதோ - நல்ல
ஞானமுடன்கர்மந் தியானமுடன்பொறுத்தார்
நாடாள்வார்பொங்கினோர் காடாள்வாரதுபோல
கள்ளனேநீமெத்தத் துள்ளுறாய் - நல்ல
கதமிஞ்சினோர்கள்ளின் மதமிஞ்சினோர்போலக் (கள்ள)

அனிருத்தராசன்.

௧௦. எந்தன்கதைநீங்கி வந்திட்டேன் - வந்து
இறவாதுன்பதியிற் புகுந்திட்டேன் - நான்
உந்தன்மகளோங்கை கலந்திட்டேன் - இப்போ
உன்பலன்பார்க்கவும் வந்திட்டேன் - நான்தான்
சந்தேகம்இல்லாமல் சொன்னேன்நீசங்க்ரகம்
தனைத்தான்நீபாராட்டி யினிமேற்செய்யுங்காரியம்
நடந்தாயடாவாணாசூரனே
நலமாய்க்கப்பலைந்தானே சலுதாய்மலையின்மீதே (நட)

வாணாசுரன்.

௧௧. பாணங்கள்பட்டுடல் நோகவோ - உந்தன்
பல்லெல்லாந்தகர்ந்து ஆளாகவோ - ரொம்ப

நாணங்கள்கெட்டப்புறஞ் சாகவோ - எமன்
நாட்டினுக்கேகுடி போகவோ - ரொம்ப
ஆணவந்தன்னு லுனக்கேகெடுகாலம்
அடுத்துக்கொண்டது சனி தொடுத்துக்கொண்டிருலே
மெத்தக்குறும்புகள்செய்கிறாய் - சரியும்
மேட்டைக்கண்டுகுதிக்கும் ஆட்டுக்குட்டியைப்போலே (மெ)

அனிருத்தமகாராசன்.

௪௨. உனக்குமெனக்குமென்ன இஷ்டமோ - எந்தன்
உடல்நொந்தாலுனக்கென்னகஷ்டமோ - கஷ்டம்
எனக்கல்லாலுனக்கென்ன நஷ்டமோ - சொல்வ
திதுவுனக்கொருசட்ட திட்டமோ - ரொம்ப
சினக்குஞ்சமர்த்துள்ள சூரன்மைந்தனுனல்
சிடுக்காமனும்புரணந் தொடுக்காமனும்பெரும்
சடக்குப்பேசினாய் வாணசூரனே - பெரும்
தாசித்தெருவில்செல்லாக் காசுமாற்றுவார்போல (சட)

வாணாசுரன்.

௪௩. வெங்காயத்தோலியுன் சொல்லடா - சற்றும்
பிரளாமலென்னெதிர் நில்லாடா - பயலே
எங்களுடனேயினி மல்லடா - செய்து
இனிமேல்நீயுயிர்தப்பி வெல்லடா - என்று
அங்கசன்மகனுரம் தன்னில்வாணசூரன்
அடித்தானம்பதுபாணந் தொடுத்தான்பின்னையுந்தானே
அறுநூறுபாணங்கள் தொடுத்திட்டான் - வில்லை
அசைத்துஅதனிற்சில இசைத்துஅதனிற்பின்னும் (அறு)

அனிருத்தமகாராசன்.

௪௪. நூறுதசக்கரப் பேயனே - வெள்ளை
நுரையெழும்பும்பெறுவாயனே - ரொம்பச்
சிறுவதேன்வரைக் காயனே - அரிக்குச்
செகமீந்தமாவலி சேயனே - என்று
கூறியென்மீது வருங்கணைபுல்லென்று
குறித்தேகைக்கணையாலே முறித்தேசின்னபின்னமாய்
வாணசூரன்முன்பா யெதிர்த்திட்டான் - மெத்த
வாட்டத்துடன்வாண்ட காட்டுப்புல்லென்றெண்ணி (வாண)



வாணாசுரன்.

௪௫. அஸ்திரங்கள்முறிகின்ற வீரமும் - வாயில்
அடிக்கடியரியெனுஞ் சாரமும் - வேதச்
சாஸ்திரப்படியமட்டுங் கோரமும் - கவனம்
தவறாமல்சுழல்கின்ற சூரமும் - இதெல்லாம்
பார்த்துவாணசூரன் ஆச்சரியங்கொள்ளவே
பக்கத்திற்றிடமாக நிற்கின்றஅவுணர்கள்
அங்கசன்மகன்மீதிலடர்ந்திட்டார் - பாகர்
அச்செனும்வெல்லமதில் நச்செறும்புகள்போல (அங்)

அனிருத்தமகாராசன்.

௪௬. அசுரரைச்சிலபேரை நொறுக்கினான் - சிலரை
ஆலைக்கரும்புபோல நறுக்கினான் - சிலரை
கசகசென்றுகசக்கி யுருக்கினான் - சிலரை
கண்டங்கண்டமாக நறுக்கினான் - பின்னும்
திசைதிசையாயோடும் பேரைமுடுக்கிக்கொன்றான்
சிலரைக்கால்கள்முறித்தான் சிலரைதோள்கள்முறித்தான்
சிலபேர்தலைகளைக்கிள்ளினான் - பின்னும்
செங்கீரைக்கொழுந்துபோல் வெங்காயப்பருப்புபோல் (சில)

பொது விருத்தம்.

இப்படித்தான்சினந்தசூரன் சொல்லறகெல்லாம்
எதிர்வசனம்அனிருத்தன் சொல்லவாணன்
விற்பிடித்துக்கணைக ளநேகத்தைப்பூட்டி
விடமுறித்தெறிந்தனன் வேள்சேயன்பின்னும்
அப்புரம்போகாமற் பின்னுமசுரர்சாட
அனிருத்தனவர்களையு மாய்க்கத்தானே
சர்ப்பமணிவான்கொடுத்த வடிவேல்தன்னைத்
தாவினான்மதன்மகன்மே லேவினானே.

வசனம்.

இந்தப்பிரகாரம்வாணாசுரன்சொன்ன வார்த்தைகட்கெல்லாம் அனிருத்தமகாராசன் எதிருத்தரம் சொல்லிக்கொண்டு வருகிறபோது வாணாசுரனுக்குக் கோபமதிகரித்து வில்லையெடுத்து நிறுத்திவளைத்து அநேக தேவ தாஸ்திரங்களைப்பூட்டி சரமாரியாகப் பொழிகிறபோது அனிருத்தமகாராசன் அந்தஅஸ்திரங்களைக் கைகளினாற்பிடித்து வெடுக்கு வெடுக்கென்று முறித்து வாணாசுரன்பேரிலே வீசி

யெறியக்கண்டு அசுரன்தனக்கு ஈசுவரன் கொடுத்திருந்த வேலாயுதத்தை யெடுத்துவிட்டான்.

வேலாயுதம் வருகிற தரு-இராகம்-மோகனம்-அடதாளம்.

புல்லவி.

வேலாயுதமும் வந்ததே - சினங்கொண்டு
வேலாயுதமும் வந்ததே

அநுபல்லவி.

வேலாயுதமும் வந்திட நாலாமுகனும்நொந்திட
மேலாம்வரையசைந்திட நீலாமுகில்மறைந்திட (வே)

சரணங்கள்.

௧. வானோர்கள் பின்னோடவே - தவஞ்செய்யும்
ஞானோர்கள் கண்மூடவே - என்றும்
மாயாதிடும்வீரத்துடன் - சாயாதிடும்சூரத்துடன்
தேயாதிடும்பாரத்துடன் - மூயாதிடும்கோரத்துடன் (வே)

௨. கதிரோன்சுட - சொடுக்கவே - கண்களைமூடி
மதிதானுடன் - நடுக்கவே - எட்டுக்
கரியினங்கள் கெஞ்சவே - அரியினங்களஞ்சவே
வரியினங்கள்துஞ்சவே - பரியினங்களஞ்சவே. (வே)

௩. கொண்டலேழுஞ்சிதறவே - தேவர்வெருவ
அண்டர்நாடும் பதறவே - காட்டுப்
புலியானதுவெடித்திட - பயமானதுதொடுத்திட
சிவனானவர்கொடுத்திட - யவனாதியன்விடுத்திட. (வே)

பொது விருத்தம்.

மண்டியிந்தவிதம்வரும்வேல் எதிராய்மாரன்
மைந்தனின்றுவேலையொரு கரத்தாற்பற்றி
கண்டிதமாயெடுத்தவன்மேல் விடவேசீறி
கதித்தழிந்துவுரங்கிழிந்து கைகள்சோர்ந்து
கொண்டல்மழைமிகப்பொழிந்த விதம்போல்மார்பில்
குருதிவெள்ளம்பெருகிடவே கூர்மைதேய்ந்து
தொண்டைவாண்டினைத்தநிக தாகமீறிச்
சோர்ந்திட்டான்தேர்மிசையிற் சாய்ந்திட்டானே.

இதுவுமது.

சந்திதன்கொழுநன்பாதம் தன்னைத்துதித்திடவேசீக்கிரம்
மந்திபமென்றுகூறும் மயக்கந்தீர்ந்தெழுந்துவாணன்



வஸ்திரந்தன்னால்ரத்த வாறெலாந்துடைத்துக்கொண்டு
சித்தசன்மகனைப்பார்த்துச் சீறுவான்கூறுவானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வந்தவேலாயுதத்தை அனிருத்தமகாராசன் சற்றும பயப்படாமல் ஒருகையில் பிடித்து வாணாசுரன்பேரில் விடுத்தான். அது தாக்கியவுடனே வாணாசுரன் மார்பு கிழிந்து ரத்தவெள்ளம் பெருக ரதத்தின்பேரிலே அந்தப் பரமேசுவரனைத் தியானித்து உடனே மயக்கந்தெளிந்து எழுந்து அனிருத்தனைப் பார்த்துச் சொல்கிற விதங்காண்க.

வாணாசுரன் விருத்தம்.

நல்லதுஇனிமேல்நீதான் நாணிஎன்னெதிராய்ந்தானே
நில்லடாபயலேவுன்னை நிமிஷநேரத்துக்குள்ளாய்
உல்லிதன்தோலிபோல வுந்தனைக்கிழித்துமண்டை
சில்லதுநூறதாகச்சிதைக்கிறேன் வதைக்கிறேனே.

வசனம்.

நல்லது இனிமேல் கூசாமல் கெட்டியாய் நில்லடா திருட்டுப்பயலே, இப்போதே உன்தலையை ஆயிரம் சுக்கலாக நொறுக்கி உன்னை யெமலோக மனுப்புகிறேன் பாரடா பயலே.

பொது விருத்தம்.

இந்தமார்க்கமதாய்க்கைக ளிரண்டைஞ்ஞூறுள்ளோன்முன்பாய்
தந்திகள்பரிகட்செல்லாந் தடிந்துஷார்சொல்லிக்கொண்டு
சிந்தையேகருங்கல்லாக்கித் தேர்சூதணம்நடத்தும்போது
மந்திரிநடுத்துக்கொண்டு வழுத்துவானழுத்துவானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வாணாசுரனானவன் யானை குதிரை முதலிய சேனைகளுக்குத் தைரியஞ்சொல்லி மகாகேர்பத்தோடு வேகமாகத் தேர் செலுத்தி அனிருத்தராசன்மீது யுத்தஞ் செய்ய ஆரம்பஞ் செய்கிறபோது கும்பாண்டனென்கிற மந்திரியானவன் ஓடிவந்து வாணாசுரனைத் தடுத்துச் சொல்லுகிற மார்க்கம் எப்படியென்றால்.—

மந்திரி விருத்தம்.

மாவலிசுதனேயிந்த மைந்தன்போர்க்களத்தில்வந்து
சேவகஞ்செய்யச்செய்யத் திராணிதான்வளறுதல்லால்
கோவமெள்ளள்வுமில்லைக் குறிகளுஞ்சிவக்கவில்லை
ஆவியும்பதறவில்லை அலுப்பில்லைசலிப்புமில்லை.

வசனம்.

அகோவாரும் வாணாசுரமகாராசனே! இந்தஇராசகுமாரன் இந்த யுத்தக்களத்திலே தேருமில்லாமல் யானைகுதிரையில்லாமல் தனியாக வந்து அளவற்றராக்ஷத சேனையிலே அஞ்சாமல்நின்று அநேக வீராதிவீரரையெல்லாம் ஓர்நொடியிலே சின்னபின்னமா யடித்து மடித்துமல்லாமல், தேவரீர்விடுத்த அஸ்திரங்களையெல்லாம் கையினால்பிடித்து முறித்தெறிந்தது மல்லாமல் தேவரீருடைய வேலாயுதத்தையும் வெகுஎளிதாகக் காத்திற்பிடித்து உமதுமார்பு கிழியும்படியாக வீசினதுமல்லாமல் சிறிதேனும் இளைப்புக் களைப்புமில்லாமல் மந்தகாசத்தோடு நிற்கிறான். இந்தஆச்சரியங்களை யோசிக்கிறபோது இதுஅந்தமகாவிஷ்ணுவின் மாய்கையேதவிர வேறொன்றல்ல, இந்தவேளையில் திரிமூர்த்திகள்வந்தாலும் இவனை வெல்லமுடியாது. இதையெல்லாம் தேவரீர் யோசனை செய்து பார்த்து தகுந்த உபாயந்தேடி வேறுவித தந்திரத்தாலே இவனை வெல்லவேணுமையா சுவாமி.

போது விருத்தம்.

மந்திரிகும்பாண்டன்சொன்ன வாறதற்கிசைந்துவாணன்
இந்தவீண்பயலோடேநான் எதிர்த்திடிலெளிதாமென்று
சிந்தையில்நினைந்துவாணன் சேணிமண்டலத்திற்பாய்ந்து
பிந்திடாநாகபாசம் பிடித்திட்டான்விடுத்திட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் மந்திரிசொன்ன வார்த்தைகளைக்கேட்டு சரியென்று சம்மதித்து இந்தப்பயலோடு நாம்நெடுநேரம் சண்டைசெய்து கொண்டிருந்தால் நமதுபெருமைக்குக் குறைவுண்டாகுமென்று உடனே ஆகாயத்திற்கிளம்பி மேகமண்டலத்தில் மறைந்துகொண்டு நாகபாசத்தையெடுத்து மானசீகமாக ஷோடசோபசார பூசைகளுஞ்செய்து அனிருத்தன்பேரில் விட்டான். அதுவருகிறவிதங்காண்க.

நாகபாசம் வருகிற தரு-இ-ம்-புன்னாகவராளி அடதாளம்.

பல்லவி.

வந்திட்டுதேநாகபாசம் - மேகம்
சந்திட்டுதேகைலாசம் - சூரிய

அநுபல்லவி.

மண்டலமுழுதுமி - ருண்டிருள்மூடவே
அண்டர்கள்யாவரும் - கண்டரண்டோடவே. (வந்)

சரணங்கள்.

சிதேவிக்குப்பலம் போக - அந்த
மூதேவிக்குப்பல மாக - செம்பொன்



தெள்ளுத்திரவிய - முன்னோர்வெருண்டிட
கள்ளர்கள்யாவரும் - கொள்ளைகொண்டோடிட

௨. மோகிகள்மனமகிழ்ந்திடவே - சுத்த
யோகிகள்தவநிலை கெடவே - யாரும்
முட்டாதபெண்தனைத் - தொட்டதினாலல்லோ
துஷ்டப்பயல் அகப் - பட்டானென்றேசொல்லி- (வந்)

௩. அஷ்டதிக்கெங்கிலும்நடுங்கத் - தானே
யெட்டுக்கஜங்களுமொடுங்க - கண்டு
அத்தனுமானுக்கும் - மித்திரப்பேறுக
சித்தசன்மன்னனி - ருந்தமன்னோராக (வந்)

போது விருத்தம்.

பாசமிந்தவிதத்தில்வந்து மதனராசன்
பாலகன்மெய்தானகைகள் பிசகொணாமல்
தேசமலையாமல்கண்கள் விழித்திடாமல்
சின்னையெனமொழிந்திடுவாய் திறக்கொணாமல்
வாசமுறுமுடம்பதுவு மசைந்திடாமல்
வளைத்துசுற்றிப்பந்தெனவே சுருட்டிக்கொள்ள
ஆசையுறுமங்கை யுடாங்கைதானிந்த
அவதியெல்லாங்கண்டுபின்னு மறைகுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வந்த நாகபாசமானது அனிருத்த மகாராசனை தலையசைக்கவொட்டாமலும், கால்கை ஆடவொட்டாமலும், விழிகளைத் திறக்கவொட்டாமலும், வாய் பேசவொட்டாலும், உடம்பை ரேணுமாத்திரம் அசைக்கவொட்டாமலும் வளைந்து அடக்கி பந்துபோல் உருட்டிக்குண்டுக் கட்டாய்க்கட்டித் தள்ளிவிடவே, இந்த அலங்கோலங்களை உடாங்கைப்பார்த்து அதிக விசனமடைந்து பூமியிலே விழுந்து புலம்புகிற விதங்காண்க.

உடாங்கை தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்வேன் தெய்வமே-ஓகோர இ
மைந்தன்நாகபாசத்தாலே மதிமயங்கலாச்சே (இந்த)

அநுபல்லவி.

சந்ததிசெய்பிழை பொறுப்பாரில்லையோ - இப்போ
யெந்தகப்பன்பெற்றபிள்ளைக் கிடர்கிளைக்கலாச்சே. (இந்)

சரணங்கள்.

௧. அருமையாயுன்சுக மனுபவித்தேன் - இப்போ
தெருவிலேதவிக்கும்பா ரதேசிபோலானேனே. (இந்)

௨. எழில்மிகுந்தஇரதி தேவிவயிற்றில் - நல்ல
அழகுடன்பிறந்ததேகம் அவதிப்படலாச்சே. (இந்)

௩. கொஞ்சுங்கிளி ருக்குமிமாதுடனே - நிதம்
பஞ்சணையில்தூங்குந்தேகம் பங்கப்படலாச்சே. (இந்)

௪. அன்புடனேகொஞ்சிப் பேசுங்கிள்ளைதான் - இப்போ
பம்புபூனைகையிற்சிக்கும் பான்மைபோலாச்சே. (இந்)

௫. சப்ரமாளிகைக்குள் ளெந்தன்சுவாமி - உம்மை
யெப்படிமறைந்திருப்பது நானறியேன். (இந்)

௬. வேணுமட்டும்புனுகணியும் மெய்யின்மேல் - இப்போ
சோணிதாபுரிவீதிமண்ணும் தூளணையலாச்சே. (இந்த)

௭. நீலமேகவர்ணதிரேகரூபம் - இப்போ
ஆலகாலந்தனிலேசிக்கி அவதிப்படலாச்சே. (இந்த)

௮. பாசமதில்சுவாமிநீ கட்டுப்படவே - மெத்த
நாசகாவிவையகத்தில் நான்பிறந்தேன்பாவி. (இந்த)

௯. உன்னையும்உன்தேவியும் நான்பிரித்தேன் - நீர்தான்
என்னையும்பிரிந்துநாகந் தன்னிற்சிக்கலாச்சே. (இந்த)

௧௦. சாந்தமில்லாநாகபாசந்தனிலே - பிராண
காந்தனேநீகட்டுண்ண நான்கண்ணிற்பார்க்கலாச்சே. (இந்த)

௧௧. வாளில்விழுந்தென்னுயிர்நான் மாய்ப்பேனினி - உன்
னூழியெழுத்தெப்படி யுண்டாகுமோநானறியேன். (இந்த)

சிங்கார பத்தியம்.

நீயேயென்தாய்தந்தை நீயேயென்குருதெய்வம்
நீயேசகோதரம் நிசமதாக
நீயேயென்மாமனும் நீயேயென்மகிழ்நனும்
நீயேயென்பந்துவும் நிலையதாக



நீயேயென்பாக்கியம் நீயேயென்யோக்கியம்
நீயேசகாயமும் நேயமாக
நீயேயென்திராணியும் நீயேயென்பிராணனும்
நீயேசற்கீர்த்தியும் நேர்தாக

நேர்ந்துநானிப்படி நினைத்ததெல்லாம்
தேய்ந்துதான்காற்றினிற் சிதறிப்போச்சே
பாந்தளால்நீரலைதல் பார்த்தென்னாவி
ஊர்ந்துதான்பதறுதே ருக்குமிநாயகா.

தீபதை-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. துரையேதுரைச்சிங்கமே - மெச்சும்
துரைகள்சிரோரத்னமே - இப்போ
அரவானதுதேகம் அவடப்பதிவேயெந்தன்
அங்கம்பதறுதையா.

௨. மதனுமரதியும்போலவே - வாழ்வோமென்று
மகிழ்ச்சியாய்நானிருந்தேன் - இந்தச்
சதிமோசம்வருமென்றும் துயரம்விளையுமென்றும்
சதிகாரிநானறியேன்.

௩. என்னாலுனக்கேயிந்த-பொல்லா
இடர்வருமென்றறியேன்-இந்த
அன்யாயந்தன்னைநா ருருடன்சொல்லுவேன்
அழகுள்ளரதிசுதனே.

௪. நாகபாசந்தன்னிலே - சிக்கி
நாகரீகங்குறைந்து - உந்தன்
தேகந்தான்கட்டுண்ணத் தெய்வம்பொறுத்துதோ
செயரதிபாலகனே.

௫. மட்டில்லாச்சேனைகளைக் - கொன்று
வதைத்திட்டகைகளிரண்டும் - பாசக்
கட்டைத்தானெப்படிக் கடக்காதிருந்துதோ
காமராசன்சுதனே.

௬. சித்ரரதிசுதனே - உந்தன்
தேவியைந்தான்சதித்து - இங்கே

சத்துருவின்கையில் தான்கொடுத்தேன்சர்வ
சண்டாளிநான்பாவி.

௭. அண்டர்முனிவர்துதிக்கும் - நல்ல
அச்சுதன்றன்பேரனே - உன்னைக்
கொண்டுவந்திந்தக் கொடுமைக்காளாய்ச்செய்தேன்
கொலைகாரிநான்துரோகி.

௮. சாமியுனக்குச்சத்ரு - சர்வ
சண்டாளிநான்பிறந்தேன் - நல்ல
காமியெனக்குச்சத்ரு என்தந்தையானனே
கருடன்வாகனன்பேரனே

௯. அழகுக்கும்மயிலுக்குமே - நான்தான்
அடங்காதஆசைகொண்டேன் - உன்னைக்
களவால்கொண்டுவந்திங்கே நட்டாற்றில்விட்டேனே
கருமசண்டாளிநானே,

௧௦. நாயகன்நீயேயென்றும் - உனக்கு
நானொருதேவியென்றும் - லோக
மாயஈஸ்வரிசொன்ன வார்த்தைவிணாச்சுதே
மதனராசன்சுதனே.

௧௧. நகாமவுடல்தன்னையே - மோதி
நாகபாசம்சுருட்டவே - நானு
முகனும்பிர்மதேவன் விதித்தவிதியிதுவோ
மோகனவேள்சுதனே.

௧௨. சுவர்ணக்கட்டிஉடனே - விஞ்சைத்
தொழிலாலெனதுசகியாள் - உன்னை
அவதானமாய்க்கொணர்ந் தவதிக்காளாய்ச்செய்தேன்
அனந்தசயனன்பேரனே.

௧௩. மண்ணாகவேபிறந்தால் - யாரும்
வசைசொல்லமாட்டார்களே - நான்றான்
பெண்ணாகப்பிறந்திந்தப் பேதைக்காளானேன்
பெரும்பாவங்கையிலேந்தினேன்.

௧௪. ஆரோஒருத்திசெல்வத்தை - இவள்
அழித்தபாதகியென்றுதான் - என்னை



யேறுமாறாகவே ஈரேழுலகிலுந்தான்
ஏசுவார்க்கிடமானேனே.

௧௫. அவன்புருஷனையிவள்தான் - திருடி
அனுபவித்தவளெனுந்தான் - மெத்த
அவதிக்காளாய்ச்செய்த துரோகியென்றேநான்றான்
அபகீர்த்திக்காளானனே.

௧௬. உனக்கிந்தவிதிவருமோ - திவ்ய
ஒயிலுள்ளவென்துரையே - பிரமன்
எனக்கிந்தவிதியையும் எழுதமறந்திட்டானோ
யான்செய்ததீவினையோ.

௧௭. பாதகனென்றகப்பன் - செய்த
பழியாலேநீமடிந்தாய் - பிராண
நாதாவுனைமறந்து வேறேஒருவரண்டை
நான்வாழப்போகிறேனோ.

உடாங்கனை சிங்காரபத்தியம்.

அந்தமோஅபரூபம் வசனமோஅபிஷேகம்
ஆக்மோநீர்நீல மேகமாகும்
கெந்தமோவுடல்வாசம் ஒயிலுமோமதன்ஒயில்
கெவனமோசாயுஜ்ய கெவனமாகும்
சொந்தமோவெகுசொந்தம் ஆண்மையோவல்லாண்மை
சுகிர்தமோகலியாண சுகிர்தமாகும்
சந்தமோவேயோசை நெஞ்சமோநன்னெஞ்சம்
சாந்தமோஅமிர்தநேர் சாந்தமாகும்
சைவரேயிவ்விதம் புகழ்சாமியுனது
மெய்நாகபாசமதில் மெலிவுபடவே
தெய்வந்தான்பொறுக்கினும் செகம்பொறுக்குமோ
ஐயையோவென்னசெய்வேன் ஆசைநாயகா.

உடாங்கனை திபதை-இ-ம்-எதுதலகாம்போதி அடதாளம்.

கண்ணிகள்.

ஐயையோவுமையாள்தான் சொன்னசொற்பொய்யாகப்போச்சுதே-
ஆசைநாயகன்நாக பாசத்திற்கட்டுண்ணலாச்சுதே. [என்

தெய்வந்தானுலகத்திற்பொய்போனால் நானென்னசெய்குவேன்-இந்
நிராதனன்பத்துக்காரரை நொந்துநான்வைகுவேன். [த்த்

இறந்தபோதிலும்பின்னும்பிறந்தபோதிலுன்னுசைமறப்பனோ-நான்
இன்னொருஜன்மத்தி லுன்னிடதேவியாய்ப்பிறப்பனோ. [மூன்

கறந்தபாலைப்போலப்பிறந்தமேனியைக்கண்ணிற் காண்பனோ-பாசக்
கட்டுக்குள்ளிருந்துந்தவிஷ்டத்தை யினியெப்பப்பூண்பனோ.

வேடிக்கையுடனுன்னைக் கூடிக்குலாவத்தெரிந்தேனே - நீர்தான்
விதனத்திற்சிக்காதபதனத்தை யறியாதிருந்தேனே.

சாடிக்குத்தலைப்பட்டுக்கூடிச் சொல்பவர்வாழ்வுதழைக்குமோ-நித்தம்
தர்மமேஜயமென்றுநன்மை செய்தோர்வாழ்வுஇளைக்குமோ.

அநியாயம்ஒருநாளும் நிலையாதிருந்திட்டமாதுக்கு - இப்போ
ஆராத்துயரமும் தீராவினைவந்ததேதுக்கு.

பனுவலோர்களைத்தானே மனநொந்திடமுன்னாள்வைதனோ - பஞ்ச
பாதகஞ்செய்தே யஞ்சாமற்குருத்துரோகம்செய்தனோ.

குருடரைக்கூனரைமுடவரை மலடரைப்பழித்தனோ - தெய்வ
கோயிற்குளங்களை ஞாயத்தலங்களை அழித்தனோ.

அரவினங்களைமுனம்பறவைகள் தனைக்கூட்டிலடைத்தனோ - நல்ல
ஆட்டுங்கல்சுமைதாங்கி கூட்டுங்கல்களைத்தானேயுடைத்தனோ.

உண்டிடும்வீட்டினில் ரண்டகஞ்செய்துநான்கெடுத்தனோ - பின்னும்
ஒருவன்பெண்டாரைமற்றொருவனுக்குக் கூட்டிக்கொடுத்தனோ.

கொண்டகணவனோடு சண்டித்தனங்கள் பேசித்திரிந்தனோ - ஏழைக்
கோதையரைப்பற்றி வீதியிற்சேலையை உரித்தனோ.

சுங்கங்கள்வாங்கியே பசுக்கொடாதபகரித்தனோ - நானே
அஷ்டருடன்கூடி வெட்டவெளியில் வெட்டிப்பறித்தனோ.

மங்கையர்கர்ப்பங்கலங்கக் குத்திக்கையை யீர்த்தனோ - தீரா
வர்மங்களுடன்செயுங்கர்மங்களைக் கண்ணிற்பார்த்தனோ.

வஞ்சகமாய்த்தீனில் நஞ்சிட்டுயிர்களை மாய்த்தனோ - நானே
மண்ணோரம்பெண்ணோரம் வழக்கோரமேசொல்லித் தீர்த்தனோ.

கொஞ்சத்தனங்களுடன் அஞ்சாமற்பெரியோரைவைதனோ - மெத்த
குஞ்சங்கள்சொல்லியும் கோவத்திசுவத்தி செய்தேனோ.

நல்லோர்க்கும்பெரியோர்க்குமெல்லோர்க்கும்சொன்னசொற்பொ
ய்த்தனோ-நன்று-நடந்திடுக்கடங்களில் முன்னூடன்கல்லைவைத்தடை
த்தனோ.



பொல்லார்க்கேஇடந்தந்து நல்லோர்க்கேயிடங்கேடுசெய்தனோ-நல்ல
போதரவேசொல்லுந் தூதுவர்தலைகளை நெரித்தனோ.

அடைக்கலம்வந்தோரைக் கடக்கவேதுரத்தினனடித்தனோ - லஞ்சம்
அடித்துக்குடிகளைப் படுத்திப்படுத்தி குடிகெடுத்தனோ.

கொடுக்கும்பிச்சைகளைக் கொடுக்கவேண்டாமென்று மறித்தனோ - ந
கூடிப்பிழைக்கும்பேரைச்சாடிசம்பந்தஞ்சொல்லிப்பிரித்தனோ[ன்றாக்

தாரமிழந்தபேர்க்கும் சோரருக்குத்தூது நடந்தனோ - பெற்ற
தந்தைதாய்குருவார்த்தை சிந்தைவைக்காமலேகடிந்தனோ.

மோசைசேர்ந்திடப்பெரி யோரைமனதுநோக வைதனோ - நானே
முன்னொருஜனனத்தில் என்னென்னபெரும்பாவஞ்செய்தனோ.

தன்வினைதனக்கென்று முன்னோர்கள்வேதத்தில் சூட்டிச்சே - அது
தப்பாமலெந்தனுக்கிப்பவே கண்முன்னேகாட்டிச்சே.

என்வினையானதும் என்னைச்சுடாமலேவிட்டுதோ - எந்தன்
இறைவனேயுன்மீது அரவந்தானேவந்துதொட்டுதோ.

கணவனேயுன்தேகம்மனமெலாம்விண்ணுக்கேயேகுதோ - பாசக்
கட்டுக்குளுந்தேகமெட்டுக்குலைந்துதான்நோகுதோ.

உந்தாதமலர்க்கிணையானகண்களில்நீர்தான்பெருகுதோ - இப்போ
உந்தன்மனதுதானேயெந்தனைநொந்துநொந்துருகுதோ.

சந்த்ரமுகமும்நாகபொங்கிக்குளொளிந்துவாடுதோ - உந்தன்
சனத்துக்கும்இனத்துக்கும்மனைவிக்கும்உன்னுவிநேடுதோ.

சுந்தரவுடல்நாகபந்தத்துளேதடுமாறுதோ - பாய்ச்
சுருளுக்குன்கால்கைகால்பிராணமதுன்னுவிசோருதோ.

உலகெங்கும்இருள்மூடப்பலங்கொண்டுவந்திடும்நாகமே - சுற்று
முப்பிசந்தனிலிருந்தெப்படிப்பொறுங்குதுன்தேகமே.

கலகஞ்செய்திடும்பாசம்விலகிப்போகவுமந்த்ரயானமே-விருந்தை
கற்றவென்னதுபாங்கிசித்ரரேகையும்வரக்காணமே.

தாணியரேழாண்டஇரணியன்நெஞ்சைப்பிளந்தவன் - பெருந்
தாரணியேழையும்ஓரடியாலேஅளந்தவன்.

திருவுளந்துக்குத்தான்தெரியாததோவிந்தச்சேதியோ - அவர்
தெரிந்துந்தெரியார்போலிருப்பதுதான்என்னநீதியோ.

கரிசனமாய்ப்பத்தினி திருவுந்தான்பிராணனைமாய்ப்பளே-ரொம்ப
கலக்கமதுமிகுந்துஇலக்கணையழுதுகண்தேய்ப்பளே.

தவறுமலிச்செய்திதுவரைபுரிக்குப்போயெட்டினால் - என்
சுவாமியுனதுசுகம்நேமமுடனேதினங்கேட்டினால்.

குவிமுலைருக்குமியுயிரான்தனைகூண்டிவிடுவளே - நல்ல
குதலைமொழிவனிதைரதிதேவியுந்துக்கப்படுவளே.

சாசுருக்மணியம்மன்சிரசில்மோதியடித்துவிழுவளே - நல்ல
சாம்பவதியம்மன்தேம்பித்தேம்பியழுதுவிழுவளே.

சத்தியபாமையும்புத்திமதியும்போய்வாடுவாள் - உடனே
சாகத்துணிந்துகொண்டுநாகத்தின்புத்தெதக்குத்தேடுவாள்.

மித்ரவிந்தையும்நெஞ்சிற்குத்திக்குலைந்துகொண்டுசோபிப்பாள்-பின்
மீளாத்துயரங்கொண்டு காளிந்திபிராணனைத்தாபிப்பாள். [ஞ ம்

பதினாயிரநூறு மதிமுகஸ்திரீகளும்மயங்குவார் - உந்தன்
பந்துஜனம்சிந்தைநொந்து நொந்தழுதுதயங்குவார்.

ததிபாண்டனுக்குபாகதிதந்தவனுஞ் சிந்தையுருகுவார் - பரந்
தாமனருளுமெந்தன் மாமன்காமனுந்தேகம்கருகுவார்.

காயாம்பூமேனியன் ஆயிரநாமத்தைச்சாற்றுவான் - தேகங்
கஷ்டங்கொண்டழுவாருக்கிஷ்டஞ் சொல்லித்துயாற்றுவான்.

பேயினைக்கொன்றவன் வாயிலுலகமெல்லாங் காட்டினான் - நல்ல
பெண்ணாகத்தோன்றிமுக் கண்ணனுங்குஞ்சுகம்கூட்டினான்.

அந்தமகாராசன் இந்தநகர்தேடிவருவானோ - எந்தன்
அசுராதிபன்தானே நிசமாகப்பாகதிபெறுவானோ.

உந்தன்றுபாந்தானே பாந்தோடுஞ்சேதிநான்கேட்பனோ - நீதான்
ஒய்யாரமாகவேகைவிசிவாக் கண்ணிற்பார்ப்பனோ.

காயம்வசங்கெடில் பாயும்பனைத்திடுமென்பதும் - கொண்ட
கணவன்பகைத்திடில் பிராணன்பனைத்திடாதென்பதும்.

ஞாயமுடன்லோக வாய்மையெனக்குமெய்யாச்சுதே - இப்ப
நகைப்பார்க்கிடமாகி நளினமெல்லாங்குறைந்துபோச்சுதே.

விருத்தம்.

இந்நவிநம்உரகமது தனிற்கட்டுண்ட
இரதிமகன்மீதி அடாங்கனைதான்விழுந்து



செந்துவெல்லாங்கரைந்துருக அரற்றும்போது
சேனைதவிட்டேயசுரன் கொண்டுதிற்பாய்ந்து
பந்தமதைநீக்கிச் சிறைச்சாலைதன்னில்
பங்கமுறக்கால்களுக்குத் தளைகள்பூட்டி
விந்தையுளகாலல்தனில் வைத்தானப்பால்
விரிகடல்சூழ்துவாரகையின் விதஞ்சொல்வேனே.

போது விருத்தம்.

ஆதிமுகுந்தன்மகன்சேய் நாகபாச
மதனிற்கட்டுண்டு சிறையிருந்தானந்தச்
சேதிகொண்டுநாரதனுந் துவரைக்கேகிச்
சீதரன்றன்னுடனுரைக்கச் செல்லும்வேளை
பாதிமதிநுதலியெய ருக்மியென்னும்
பாவைநித்திரைதெளிந்தெழுந்து பார்க்கும்போது
நாதனைப்பொற்கட்டிலொடுங் காணாதாலே
நடுங்கிமனங்கலங்கிமிக நலிலுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் உடாங்கனை புலம்பிக்கொண் டிருக்கிறபோது வாணாசுரனானவன் அனிருத்த மகாராசனை நாகபாசத்திலே கட்டிக் கொண்டுபோய் கடினமான சிறையிலே போட்டுவிட்டான். அப்போது அஷ்டாங்கயோக மகத்துவத்தினாலே சொர்க்க மத்ய பாதாளமெங்கும் நடக்கப்பட்ட விசேஷமெல்லாம் ஒரு நொடியிலே தெரிந்துகொள்ளப்பட்ட பிரமபுத்திரராகிய நாரதமுனிவரானவர் இது விபரமெல்லாந் தெரிந்துகொண்டு, இதை ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினிடத்திலே தெரியப்படுத்த வேணுமென்று துவாரகாபுரியை நோக்கி அதிக வேகமாக வருகிறபோது, அனிருத்த மகாராசன் பட்டத்துத் தேவியாகிய உருக்குமி அம்மனானவள் விடியற்கால மெழுந்து பார்க்கிறபோது தனது பிராணநாயகனான அனிருத்த மகாராசனைக் கட்டிலோடுகாணாம லிருக்கக்கண்டு திகைப்பிரமைகொண்டு, ஐயோ இதென்ன அநியாயமென்று திகைத்து நாலுமூலையும் பார்த்து என் பிராணநாயகன் எங்காவது ஒளிந்துகொண் டிருக்கிறாரோவென்று புலம்புகிற விதங்காண்க.

ருக்துமி புலம்பல். தரு-இ-ம்-பந்துவராளி மட்டையதாளம்.

பல்லவி.

துரையேயென்முன்னிக்கூண்மே வரவேணும்
துயரசோபந்தீர்த்து இன்பம்பெறவேணும்.

அநுபல்லவி.

மறைவாயொளித்துகொண்ட - வரலாறுஇன்னதென்று
தெரியாமலுலேமெழுகா-யுருகுதெந்தன்மனதுதானே. (து)

சரணங்கள்.

௧. தனியாயிருந்துமகிழ்ந்து வாழ்வதேனோ - என்
சாமியுனைப்பிரிந்து மனந்தாழ்வேனோ - தினம்
மெனையாளும்பிராணநாதா
வுனையென்கண்ணில் காணாமல்
இனமேபிரிந்த மான்போல்
மனமேமிகக்கலங்கு தையோ. (துரை)

௨. மழையைக்காணமல் வாடும்பயிரானேன் - சிந்தை
மத்தாற்கடைச்சல்கொண்ட தயிரானேன் - மெந்த
பழிபாவந்தேடிக்கொண்ட
சுழிகேடிபோலானேனே
தழுவுந்தாயைக்காணாத
குழவிபோலானேனையா. (துரை)

௩. பதிவிரதைமனஞ் சோதிக்கலாகாது - பெண்
பாவம்புருஷனை விட்டுப்போகாது - கொலை
சதிமோசங்கோவம்பாவம்
அதினால்தெய்வசகாயம்
உதவாதென்றெண்ணியெனது
மதிதான்மிகக்கலங்குதையோ (துரை)

போது விருத்தம்.

விந்தைவேள்சுதனேவாவா வென்றழைத்தாடவேள்சேயன்
வந்திடாச்செய்கையாலே மாதுருக்குமிதான்பின்னும்
சிந்தைதான்திகைத்துமின்னுந் தீயிடுமெழுகுபோலே
அந்தமாமுகமும்வாடி யலறிநின்றுரைக்கின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அழைத்தும் தனதுகணவன் வாராததினாலே ருக்குமிதேவிபின்னும் புலம்புகிறமார்க்கம் எப்படியென்றால்.

ருக்குமிபுலம்பல்-திபதை-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. அழைக்கவும்வாராததென்ன பிராணநாயகா - துரை
அனிருத்தமாராசனென்னும் நாமதேயகா.



௨. பிழைக்கவும்விரோதமென்னும் ஞானசேயகா - என்னைப்
பிரிதல்பாவமென்றேயோதும் நீதிநேயகா.

௩. காதல்கொண்டென்னுடல்தன்னை நோக்கினேனையா - மிகவும்
கட்டிவுந்தன்தேகந்தன்னைத் தாங்கினேனையா.

௪. சாதஞ்செய்தேவிரகதாபம் நீங்கினேனையா - தேகஞ்
சாணையென்பதில்லாத்துயரந் தாங்கினேனையா.

௫. துரிதமாகஇருபேர்மனது நேர்ந்திருந்தோமே - நல்ல
தூயபொற்கட்டிலின்மீ துட்கார்ந்திருந்தோமே.

௬. இருவரும்பஞ்சணைமீதிற் சாய்ந்திருந்தோமே - தெய்வ
இந்திரன்இந்திராணிபோலே சேர்ந்திருந்தோமே.

௭. நஞ்சென்றுந்தெரிந்ததனை யுண்ணலாகுமோ - புவியில்
நால்வருக்கும் ஆகாத்தொழிலை நண்ணலாகுமோ.

௮. நெஞ்சறிந்தேவஞ்சகத்தை யெண்ணலாகுமோ - தேவி
நித்ரைசெய்யும்வேளை மோசம்பண்ணலாகுமோ.

௯. அஞ்சுபஞ்சபூதமுனக் குறுதிதந்ததோ - அல்லால்
அகிலமாதாசிந்தைதனக்குத் தானுகந்ததோ.

௰. தஞ்சமென்றவெந்தன்கையைப் பார்த்துநொந்ததோ - என்
தலையின்மீதிலெடுத்துவைக்க மனமும்வந்ததோ. [னைத்

௧௧. நாகரீகங்களையெல்லாந் தோற்கலாச்சுதே - இனிமேல்
நாரிகள்சொல்பழிகளைநா னேற்கலாச்சுதே.

௧௨. மோகனலட்சுமிகடாட்சம் போக்கலாச்சுதே - இப்போ
மூதணங்கெனமுகைதன்னைப் பார்க்கலாச்சுதே.

௧௩. செக்கினிலரைத்திடும்போது துள்ளும்எள்ளானேன் - துரையே
சேவலைக்காணாதாற்றும் அன்னப்புள்ளானேன்.

௧௪. அக்கினிபோல்வாட்டும்வெய்யலில் சிக்கும்செல்லானேன்-சு
அறிவில்லாதசித்ராங்தேவி அவள்கைக்குள்ளானேன். [ற்றும்

௧௫. புஷ்பங்கள்மீதனல்பட்டு வேகலாகுமோ - சீதம்
புவியின்மீதாகுகேது லாகலாகுமோ.

௧௬. கற்புடையமாதுசிந்தை நோகலாகுமோ - உந்தன்
கைக்கிளியைவிட்டொழிந்து போகலாகுமோ.

கஎ. கூவமுள்ளேமானத்தோடு நீந்தலாகுமோ - பச்சைக்
குழந்தையைக்கயிற்றுற் கிணற்றிற் சேந்தலாகுமோ.

கஅ. தெய்வசந்நதியில்மயிர் கோதலாகுமோ - கொண்ட
தேவியாள்பாவத்தைக்கையி லேந்தலாகுமோ.

கசு. ரதிக்கும்நான்மருகளாகத் துலங்குகிறேனே - புவியாள்
ராசபந்துக்களோடு நான் இலங்குறேனே.

உ0. சதிக்குள்ளாகியெந்தன்தேகம் கலங்குறேனே - பெற்ற
தாயில்லாதபிள்ளையைப்போற் கலங்குறேனே.

உக. உனக்குக்குதுளண்ணிறு லென்னுயிர்நில்க்காதே-துரையே
உள்ளத்திற்கபடுள்ளார்க்குப் பயிர்பலிக்காதே.

உஉ. சம்மதியாயென்னைக்கண்டு வானகம்பூமி - அறியத்
தான்மறைந்தசெய்கைவிட்டேன் மேற்கிருபைநேமி.

உ௩. மன்மதன்சுதனேயுனக் கேற்றிடுங்காமி - முன்பு
மந்திரஜாலத்தொழிலைவிட்டே இப்போவாசாமி.

## போது வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவி புலம்பியும் கணவன் வாக்காறுமல் பின்னும் புலம்புகிற விதங்காண்க.

### தீபதை-இ-ம்-எதுதுலகாம்போதி அடதாளம்.

### கண்ணிகள்.

க. பாதாரந்தழுவுவாரே - ஈந்தபேர்க்குப்
பழிசெய்துபுழுகுவாரே - தெய்வமென்று
நார்தம்மைத்தொழுகுவாரே - இவரெல்லாம்
நரகத்தில்முழுகுவாரே.

உ. மாட்டினைக்கொன்றிடுவார் - அன்னந்தனில்
மருந்தென்றுநஞ்சிடுவார்
வீட்டினில்தீயிடுவார் - இவரேமன
வேதனைக்குட்படுவார்.

௩. களவிற்கைசார்வார்களே - உயிர்கொல்லுங்
கருமங்கள்நேர்வார்களே - குருவின்முன்
இழிவுபொய்கூறுவார்களே - இவரெல்லாம்
எமலோகஞ்சேர்வார்களே.



௪. குழந்தைகள்தனைக்கொல்லுவார் - ஓதிவைத்த
குருவைகிந்தனைசொல்லுவார்
ஒழிந்துசமரில்வெல்லுவார் - நரகலோகம்
உருக்குக்கடலைமெல்லுவார்.

௫. பில்லிசூனியம்மேவுவார் - தாலியிழந்த
பெண்கள்மய்யலைமேவுவார் - ஏழைகள்மீது
வல்லவர்தமையேவுவார் - எமலோகம்
வடவைக்கம்பங்கள்தாவுவார்.

௬. வஞ்சகங்களையெண்ணுவார் - பாலொடுமுண்ட
மனையில்சண்டகம்பண்ணுவார்
பஞ்சபாதகமெண்ணுவார் - மறலிகையில்
பாசத்திற்கட்டுண்ணுவார்.

எ. பாவைத்தலைகள்சிதைப்பார் - தந்தைதாயை
பதைக்கக்காலினுதைப்பார் - உயர்ந்த
வருணர்கள்தனைவதைப்பார் - மறலிகையின்
வாள்முனைதனிற்கதைப்பார்.

அ. கற்பைச்சரிப்பவர்க்கே - சுமைதாங்கும்
கல்லைமுறிப்பவர்க்கே
நட்பைப்பிரிப்பவர்க்கே - கொலைசெய்வார்க்கும்
நரகபதவியிவர்க்கே.

கூ. அறங்கள்பலவுங்கொடுப்பார் - சிந்தைகலைத்து
அதர்மத்தாலதைத்தடுப்பார் - மாதாகற்பை
உறங்கும்வேளையிற்கெடுப்பார் - நரகலோக
ஊசிமெத்தையிற்படுப்பார்.

க0. கூன்குருடரைப்பழிப்பார் - தேவரிலங்கும்
கோயிற்குளங்களழிப்பார்
நான்குமறையையொழிப்பார் - ஒன்றிருமூன்றும்
நரகச்சுனையிற்குளிப்பார்.

கக. நம்பும்பேர்களைச்சதிப்பார் - வேதியர்நாவும்
நடுங்கக்காலினுதைப்பார் - துரோகஞ்செய்து
இன்பஞ்சிந்தையிற்பதிப்பார் - மறலிகையின்
ஈட்டிமுனையிற்கொதிப்பார்.

கஉ. பன்றிகோழிகளுண்பாரே - பசித்தமாந்தர்
பார்க்கப்போசனந்தின்பாரே
பொன்றுந்தேவசொத்துண்பாரே - இவர்க்கெல்லாம்
பூராநரகமென்பாரே.

கஈ. சிஷன்செய்கிறதோஷமே - குருவுக்கு
தேவிசெய்கிறதோஷமே - புருஷர்க்கு
மோசஞ்செய்சதிநாசமே - இவர்க்கொல்லாம்
முழுதும்நரகவாசமே.

கச. வேட்டகந்தனிற்சாகுமே - பாவிகள்தங்கள்
விதிக்குவேந்தரைநோகுமே - சண்டாளர்க்கு
விட்டகந்தனைநோகுமோ - இவர்க்குநரக
விடுசாசுவதமாகுமே.

பொது விருத்தம்.

இப்படித்தர்மசாஸ்திரத் தியல்புதான்விளம்பிருக்மி
செப்பவுந்தனதுபிராணச் செல்வனுந்தோன்றாதாலே
எப்படியுயிர்பிழைப்பே னென்றுநாளென்றுதென்னி
கற்புளமின்னாள்சிந்தை கலங்கிப்பின்னுரைக்கின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தர்மசாஸ்திரவியல்புகளையெல்லாம் எடுத்துக்கூறியும் பிராணநாயகன் வாராமையினாலே, ருக்குமிதேவி யானவள் பின்னும்பிரலாபிக்கிறவிதம் எப்படியென்றால்.

ருக்குமிபுலம்பல்-தீபதை-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னதப்பிதங்கண்டு எனைநித்யாசோதித்தீர் பிராணநாதா-தேகம்
வின்னப்படவுந்தானே வெறுந்தரைதனில்வைத்தீர் பிராணநாதா.
செழுந்தங்கமயமான சித்ரக்கட்டிலுடனே பிராணநாதா-மறைவா
யொழிந்துக்கொண்டிருப்பது உனக்கிதுதர்மமோ பிராணநாதா.
மன்னவன்னெழில்சுந்தி வருந்தியழுதுகெஞ்சி பிராணநாதா-நானே
என்னசொன்னாலுந்தா னிரங்கில்லையுன்மனம் பிராணநாதா.
தாங்கினாலுங்கண் துடித்ததினாலுந்தான் பிராணநாதா - அதில்
நீங்குவேனில்லையெனத் தைரியம்சொன்னீரே பிராணநாதா.
மீறும்நித்திரைதன்னில் வித்யாசமில்லையென்று பிராணநாதா - நன்றுப்
பேறுதலையெனக்குந் திடமாகச்சொன்னீரே பிராணநாதா.



வாழ்ந்ததுபோதுமினி வாள்கனைகாட்டியே பிராணநாதா - அதில்
வீழ்ந்தெந்தன்பிராணனை விடுவதுநிச்சயம் பிராணநாதா. [இப்படி
எழிலாயென்கைதொட்டு இலங்கும்நாள்முதற்கொண்டுபிராணநாதா-
யொழியுந்தந்திரஜாலம் ஒருநாளும்நான்காணேன் பிராணநாதா.
ஆவியுடலைவிட்டு அப்பாலேபோமுன்னே பிராணநாதா - உந்தன்
தேவிகண்முன்னாகத் திருமுகங்காட்டையா பிராணநாதா.
விதியைநொந்தென்காயம் வீணாகப்போமுன்னே பிராணநாதா-எந்த
னெதிரேவந்தொருவார்த்தை இதமாகப்பேசையா பிராணநாதா.

வசனம்.

அகோகேளும் பிராணநாயகா! அடியாள்பேரிலே யென்னதப்பிதங்கண்டு இப்படி ஒளிந்துகொண்டீர். எனதுமனது தத்தளிக்கின்றதே. எனதுபிராணன் நீங்கிப்போகுமுன்னே என்னெதிரேவந்தொரு வார்த்தை சொல்லுமையா சுவாமி.

ருக்குமி விருத்தம்.

இளவனப்பொயிலுமாண்மை யிவையெல்லாமென்மேல்விட்டுக்
கழலுமுன்னெழிலோடென்முன் கர்த்தனேவருவீரென்று
இளமுலைவனிதைகூவ இரதிசேய்தோன்றாதாலே
பிழையிலாவடிவஞ்சோரப் பின்னையும்புலம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் அழைத்தும் நாயகன்வாராமையினாலே ருக்குமிதேவி பின்னும் புலம்புகிறதெப்படியென்றால்.

ருக்குமிபுலம்பல்-தரு-இ-ம்-இந்துஸ்தானிகாப்பி.

பல்லவி.

உயிரைவிடுவேன்சாமி - உயிர்விடாதிருந்தால்
ஒறுக்குமேஇந்தபூமி - என்சாமிகேளாய்

அநுபல்லவி.

உலகமீரேழதில் - வளருயிர்முழுதையும்
உண்டுமிழ்ந்தாகாத்தும் - செல்வியைமலர்ச்
சென்டெனமார்பிற்சேர்த்தும் - வழிசைவேனை
ஊதியேயெழிலுடன் ஆனிரைமேய்த்தான்
போதகமதினிடர் தீதறக்காத்தான்
சோதைமின்னாட்கெழில் மகனெனவாய்த்தான்
தீதுசெய்ராவண அவுணனைமாய்த்தான்
உள்ளமறிந்திட நிச்சயமேகூர்
உருக்குமியென்னும்முன் தேவியிதோபார். (உயி)

சரணங்கள்.

க. சுந்த்ரக்கட்டிலின்மீதில் - இரண்டுபேரும்
சாய்ந்துமார்பொடுமார்பு - சாய்ந்துஆரோக்கியங்கொண்டு
இந்த்ரன்இந்திராணிபோலவே - வித்தாரமாக
யேகபோகவைபோக யோகவிசேஷம்செய்து
இரதியும்மதனும் போலவே - மனமகிழ்ந்து
இருவரும்மதலைகள்போல் விளையாட
மருமலர்த்தெரியலின் வரிசைகள்சூட
சரிகமபதனிச சாளிகள்பாட
உருவசிவெருவிட ஒயிலுகள்தேட
இந்திரைபருளிய மதன்னேசடிக்க
இட்சணம்என்முன் வாராதிருந்தக்கால் (உயி)

உ. சிங்காரக்குமிப்பெண்ணே - உன்னுகாந்தன்
சிங்காரமுள்ளரூபன் - எங்கென்றுகேட்கும்
மங்கையர்க்கென்னசொல்லுவேன் - அல்லாமற்பின்னும்
மானம்பெரிதல்லாமல் பிராணன்பெரிதல்லவே
மண்ணிற்பிறந்தமாதர்க்கு - ஆகையினாலே
மாதவனுஞ்சிவனும் தடுக்கவந்தாலும்
வேதன்வெகுவய்து கொடுக்கவந்தாலும்
சாதிசனங்கள்வந்து பிடிக்கவந்தாலும்
நீதிநெறிமுறைமை படிக்கவந்தாலும்
மகிழ்நனேவுனதுன்க வாள்தனைநாட்டி
வாள்தனிலெனதிட வுடலினைவிட்டி. (உயி)

ந. புருஷனுடனேயெதிர்த்து - சண்டைபாராட்டி
பொய்சொலும்பெண்களெல்லாம் - நியாநகஞ்சேர்வார்
புருஷன்கொடுத்ததரும்பை - அபாஞ்சியென்றால்
புந்திதனிற்பதித்துச் சந்தோஷங்கொண்டபெண்கள்
புனிதவைகுண்டஞ்சேர்வார் - ஆகையினாலே
பொறுமையினாற்பெரும் கோபத்தைநீக்கி
வறுமையுள்ளோர்தங்க ளாபத்தைப்போக்கி
தருமமேஜயமெனுந் தீபத்தைநோக்கி
நின்றபெறமனதினில் சோபத்தைத்தேக்கி
புத்திக்குச்சரிவர நடத்தினள்பாரி
புலம்புனளிவள் புருஷனுக்கெனக்கோரி. (உயி)



அநுபல்லவி.

அதிவிதத்தெழில் - ரதகஜத்துடன்
மதமிகுந்திடு - துரகதத்துடன் (மன்மத)

சரணங்கள்.

க. சித்திராதங்களும் தத்திக்கவிழ்ந்திட
செத்தபிணங்களு மெத்தக்குவிந்திட. (மன்மத)

உ. அண்டர்வெண்குடையும் தண்டுதிரண்டிட
கண்டவிடமெல்லா மண்டையுருண்டிட. (மன்மத)

ந. அவன்விடுங்கணை இவன்விலக்கிட
இவன்விடுங்கணை யவன்விலக்கிட. (மன்மத)

ச. வீரர்மடிந்திடச் சூரர்மடங்கிடச்
சீறிவரும்அவுல் தாரர்மடிந்திட. (மன்மத)

பொது விருத்தம்.

பார்த்திபன்மதனனேவும் பாணங்கள்மழைபோற்சாட
ஆற்றமாட்டாமற்றனே யமுதுகூக்குரலுங்கொண்டு
காற்றினும்விசையாய்க்கூப் கர்னனுமோடிப்போனான்
சூத்திரத்தேர்மேல்வாண சூரனும்தான்வந்தானே.

வசனம்.

வாணாசுரன் வருகிற விதங்காண்க.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சூரனும் வந்தானே - வாண
சூரனும் வந்தானே.

அநுபல்லவி.

மேரிணையாகிய தேருநடந்திட
வீரபராக்கிரம சூரர்நடந்திட. (சூர)

சரணங்கள்.

க. கொண்டல் நடுங்கவுமே - எம
கண்டனொடுங்கவுமே - விண்ணில்
அண்டர்முனிவருங் கண்டுபயந்திட
மண்டலமெதிரவே சென்டையதிர்ந்திட. (சூர)

உ. மூர்க்கமேபெருக்கிக்கொண்டு - மீசைகள்
சோக்குடன்முறுக்கிக்கொண்டு - கதைம்

நோக்கியகண்களிற் றீப்பொறிபறந்திட
நாக்கினிலேவிஷ வாக்குகள்பிறந்திட. (சூர)

௫. ஆலெனஅலுங்கவுமே - கைகளில்
வேல்கணையிலங்கவுமே - சுதனம்
நால்வகைத்தளமிரு பாலினில்நெருங்கவே
கால்கைகள்பம்பரம்போற் சுழன்றநுங்கவே. (சூர)

**வேறு-திபதை-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.**

**கண்ணிகள்.**

௧. வாணனிப்படிவந் தெதிர்த் திட்டான் - மூண்ட
வடவாக்கினிபோலே கொதித் திட்டான்
பாணப்பிரயோகம் விதித் திட்டான் - மாயன்
படையைத்துரும்பாக மதித் திட்டான்.

௨. குதிரையனேகத்தை யோய்த் தனன் - ஆனை
கோடானுகோடியாய் மாய்த் தனன்
ரதங்களையடியோடே சாய்த் தனன் - காலால்
ரணசுத்தவீரரைத் தேய்த் தனன்.

௩. படைகளநேகத்தைச் சாடவே - ரத்தம்
பாரினில்வெள்ளமா யோடவே
குடல்களைநாய்நரி சூடவே - நல்ல
குறளிகள்மகிழ்ந்து கூத்தாடவே.

௪. சேனுலகத்தினர் வாடவே - தப்பு
சேனைகளுங் கலங் தோடவே
வாணனிந்தப் போடு போடவே - பேய்கள்
வந்துபிணங்கள் தின் றூடவே.

**போது விருத்தம்.**

சூரனிவ்விதம்போர்செய்தான் றூயமால்சேனையெல்லாம்
சிருகேடாகித்தானே திசைதப்பியோடும்போது
பாரினையளந்தோனண்ணன் பலபத்திராமன்றானே
ஏறுவாள்கையிற்கொண்டு எதிர்த்துபோர்செய்கின்றானே.

**வாணசுரனுக்கும் பலபத்திரனுக்கும் யுத்தம்.**
**திபதை-இ-ம்-மோகனம்-அடதாளம்.**

**கண்ணிகள்.**

௧. பலபத்திராமனும் எதிர்த் தனன் - வாணன்
படையைத்திரணமாக மதித் தனன்



கலகத்தைமிகவுமே விளைத் தனன் - ரதம்
கரிபரிகளையெல்லாஞ் சிதைத் தனன்.

௨. தலைகள்திருகிவின்னுக் கெறிந் திட்டான் - பாணம்
சரமாரியாகவே சொரிந் திட்டான்
சிலரைக்கத்தரிக்காய்போ லரிந் திட்டான் - சிலரை
தேகத்தின்தோல்களை யுரிந் திட்டான்.

௩. அடியற்றமரம்போலே சாய்ந்திட - சிலபேர்
அடைமழைவெடுகுபோ லூர்ந்திட
முடியற்றுஅங்கொடியற்று மூய்ந்திட - சிலர்
மூக்குநாக்குமிழந்து மாய்ந்திட.

௪. சிலநாய்கள்பிணங்களைக் கடிக்கவே - பின்னும்
சிலபேய்கள் நிணங்களைக் குடிக்கவே
பலபத்ராமனும் முடிக்கவே - வாணன்
படைகளுங்கலைந்தோட மடுக்கவே.

**போது விருத்தம்.**

மாயவனனுசனிப்பால் மல்லுடன்பொருதும்போது
வாயுவாசுரன்றன்சேனை மதிகுலைந்தோடும்போது
சீயம்போலார்ப்பரித்துச் சினந்துமூச்செறிந்துசீறி
ஆயிரங்கையன்மாய னண்ணனோடெதிர்ந்திட்டானே.

**பலராமனுக்கும் வாணசுரனுக்கும் யுத்தம்.**
**௩௩-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.**

**பல்லவி.**

வாணசூரனும் பலபத்திராமனும்
வாதுகள் செய் தனரோ
ஆண்பிள்ளையாரு லெதிர்நில்லடாவென்று
அஸ்திரம்பெய் தனரே.

**அநுபல்லவி.**

சேனோர்பயந்திடத் தேர்கள்நெரிந்திட
வீணகவேசில வேல்கள்முறிந்திட
ஆனுடல்போய்ச்சில ருதவிகுறைந்திட
ஆணவம்போய்ச்சில ராவிபிரிந்திட (வாண)

**சரணங்கள்.**

பவுருஷம்பேசியே யிருவரும்புலிபோலப்
பாய்ந்துவுலா வினரே

கவ்ஸ்டுகற்போ லிருவரும்அக்கினிக்
கணைகளையே , விளைசே
இவன்விடுங்கணைகளை அவன்பிடித்தெறிந்திட
அவன்வில்லுங்கவசமும் இவன்முறித்தெறிந்திட
இவன்வில்லுங்கவசமும் அவன்முறித்தெறிந்திட
அவன்விடுங்கணைகளை யிவன்முறித்தெறிந்திட (வாணா)

௨. மாவலிமகன்விடும் பாணங்கள்தைத்திட
மன்னன் மயங்கியுமே
காவலன்விடும்கணை தைத்திடவாயிரம்
கையுந் தியங்கவுமே
ஆவிபதறிச்சில அசுரர்கள்தளர்ந்திட
கோவென்றழுதுபிணக் கூட்டத்தில்நுழைந்திட
சேவகமிழந்தனர் தேகங்கள்பிளந்திட
தாவியெழுந்துசிலர் தலைகளுமிழந்திட (வாணா)

௩. பாய்கிறமாடெனப் பாம்பெனச்சீறியே
பல்லைக்கடித் தனரே
ஆயிரங்கைகளி லாயிரமாயிரம்
அம்புதொடுத் தனரே
வாயதினாற்பழி வார்த்தைபடித்திட
பேயும்வில்லுங்கணை பிடித்தங்கொடித்திட
தூயவில்தன்னையுந் துடுக்கென்றொடித்திட
மாயவனன்னாளும் ஓட்டமெடுத்திட (வாணா)

## பொது விருத்தம்.

போர்க்களத்திலடங்காப் போர்நடத்தும்போது
புயல்நிறத்தோனண்ணன்பயந் தோடிப்போனான்
மூர்க்கமுடன்அவுணர்படை யொன்றாய்ச்சேர்ந்து
முனிவுடனேஜயசங்க முழக்கும்போது
பாற்கடலிற்பள்ளிகொண்டோ னுலகளந்தோன்
பச்சைமால்வண்ணனெழிற் பற்பநாபன்
சாற்றரியவிபீஷணனுக் கரியபட்டம்
தந்திட்டார்போர்க்களத்தில் வந்திட்டாரே.

## வசனம்.

பலபத்திராமனானவர் வாணனுடனே யுத்தஞ்செய்து தோற்று ஓடிப்போனதைக்கண்டுஸ்ரீகிருஷ்ணதேவர்வருகிறதெப்படியென்றால்.



## தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

### பல்லவி.

ஸ்ரீகிர்ஷ்ணதேவரும்வந்தார் - போர்க்கோலங்கொண்டு
ஸ்ரீகிர்ஷ்ணதேவரும்வந்தார்

### அநுபல்லவி.

ஸ்ரீகிர்ஷ்ணதேவர்வந்தான் - தேவகிபாலகன்றான்
சித்தரு முனிவரும் நித்தமுந் துதித்திடும்
சத்தரிஷிகள் பரி சுத்தரு மதித்திடும். (ஸ்ரீகிர்)

### சரணங்கள்.

௧. நவரத்னகிரீடந்துலங்க சிங்காரமாக
நாமம்நுதலிலிலங்க சூர்யப்பிரபைபோல்
கவசகுண்டலம்அலுங்க வேடிக்கையாம்
கவுஸ்துவாபரணங்குலுங்க நெகுநெகென்ன
துவர்வாய்க் கனிகள்மின்ன
தவனமாலைகள் பின்ன
துளபமணிவடங்கள் - வளமுடனசையவே
களபசந்தனம்புனு கெழிலுடனிசையவே. (ஸ்ரீகிர்)

௨. ஒருகையிற்சங்குமின்னவே சக்கரந்தானே
ஒருகையிற்கதகதென்னவே கோதண்டந்தானே
ஒருகையில்நெகுநெகென்னவே ஆயுதந்தானே
ஒருகையிற்பளபளென்னவே துத்திப்பூப்போலே
வர்னநிசாருதொட்டு
சொர்ணத்தாற் கச்சைக்கட்டி
மாருதம்போலவே வீரர்தொடர்ந்திட
மேரிணைபாகவே தேருநடந்திட. (ஸ்ரீகிர்)

௩. எவருந்துதிக்கும் நேசனே எள்ளிலெண்ணெய்போல்
எங்கும்நிறைந்த வுல்லாசனே வேதாந்தப்பொருளே
துவரைநகரில்வாசனே மனிதன்போலே
சோணிதாபுரிராசனே ஆகியவாணா
சூரனையடக்கத்தானே
போரைவிடுக்கத்தானே
சோக்குடனேவெகு சாக்ரதைதேடியே
சீக்கிரமாகவேபோர்க்களம் நாடியே. (ஸ்ரீகிர்)

போது விருத்தம்.

பூவினில்யானைகாத்தோன் பொன்னவன்றன்னைமாய்த்தோன்
மூவரிலொருவரான முகுந்தனிவ்விதமாய்வந்து
தேவர்கள்நடுங்கத்தானே சினந்துமுச்செறிந்துசீறும்
மாவலிமைந்தனோடு மல்லதுபொருதுவானே.

வசனம்.

ஸ்ரீகிருஷ்ணதேவரும் வாணாசுரனும் யுத்தஞ் செய்கிற விதங்காண்க.

தரு-இ-ம்-புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி.

கிருஷ்ணதேவனும் வாணாசுரனும்
கெட்டிச்சண்டைசெய்தார் - கணைகள்
மட்டில்லாமற்பெய்தார்.

அநுபல்லவி

அஷ்டநாகங்களும் விஷங்களைக்கக்கியே
அலைந்துஅலைந்து நடுங்க - ஆவி
குலைந்துகுலைந்து நடுங்க
அஷ்டகிருகம்பயப் பட்டுத்தலைத்திடவே
அஷ்டதிசையினர்கள் மெட்டுக்குலைந்திடவே. (கிர்)

சரணங்கள்.

அண்டகடாகமும் வெடித்திடவேயெட்டு
யானைமயக்கங்கொள்ள - தவஞ்செய்
ஞானமுனிவர்துள்ள
சண்டமாருதமிரண்டிடத்தானே
சத்தமேகங்களைய - கெர்ப்ப
முற்றமாதர்குலைய
சண்டைமூண்டுசிலர் மண்டைகள்கிழிந்திட
பெண்டுபிள்ளைகளுங் கண்டுயிரிழந்திட. (கிர்)

௩. குதிரைக்கூட்டங்கள் பாணங்கள்பாய்ந்திட
கோடிகோடிசாக - தப்பினர்
தேடிவாடிநோக
மதமிகுத்திடுங் கடகரிக்கூட்டங்கள்
மலர்ந்துவிழுந்து கடுங்க - உயிர்
துலைந்துசடல மொடுங்க
அதிவிதத்தழகு ரதங்களும்பிளந்திட
கதமிகுந்தவுணர் மதங்களுமிழந்திட. (கிர்)



௪. நீட்டங்கொண்டிடும் சாகரங்களேழும்
நிலைகள்விட்டுக்கலங்க - அசைந்துமே
மலைகளெட்டுங்குலுங்க.
கோட்டைக்கொத்தளங் கோபுரநிலைகளுங்
கோப்பிழந்துபோக - மனைகள்
சாப்புச்சாப்புகளாக
காட்டுமிருகந்துலைக் கோட்டமெடுத்திடவே
காட்டுமனிதர்பயந்தோட்டி கிழிந்திடவே. (கிர்)

போது விருத்தம்.

சக்கரக்கையனேவும் சரங்களால்வாணாசூரன்
உக்கிரங்குலைந்துதேக மூளைந்துதான்புலம்பும்போது
அக்கணமறிந்துசேதி யறைந்துபார்வதியினோடே
திக்குறுதேரிலேறிச் சிவபிரான்வருகின்றாரே.

வாணனும்பகவானோடே வாதிடப்பகவானேவும்
பாணங்கள்படவேவாணன் பயந்துநாணோடும்போது
சேனைக்குள்ளோரெல்லாஞ் செயாசெயாவென்றுபோற்ற
தானுமைத்துனன்றன்வெற்றி சங்கொலிமுழக்கின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வாணாசுரனும், ஸ்ரீகிருஷ்ணதேவரும் வாதிட்டு யுத்தஞ்செய்ய வாணாசுரன் பயந்தோட, தேவர்கள் ஜெயவிஜயவாவென்று ஆர்ப்பரித்துப்போற்ற, ஸ்ரீகிருஷ்ணதேவர் வெற்றிச்சங்க முழக்கினர். பிறகு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியால் அடிப்பட்டோடிய வாணாசுரன் ஆங்காரமடங்கி புலம்பும்போது, பரமசிவன் பார்வதியுடன் இந்த சேதிகளைச்சொல்லி மங்கைபாகனாய் தேரின்பேரிலேறி யுத்தகளம்வருகிற தெப்படியென்றால்.

தரு-இ-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

பரிபூரணானந்த போதவிநோதனே
பரமசிவன்வந்து தோன்றினானே.

அநுபல்லவி.

இருபாதங்களிற்காதுக் கிதமாம்இசைகள்மிஞ்ச
மரகதத்திலிழைத்த வச்சிரச்சிலம்புகொஞ்ச (பரிபூ)

சரணங்கள்.

௧. கங்கைமதிகொன்றைதும்பை யறுகெருக்கு
கனமானசெஞ்சடை தனிற் றுலங்க - நல்ல

செங்கையின்மிசைதானே சத்துருக்கள்தனைவெல்லும்
திரிசூலாயுதம்மான் மழு விலங்க
அங்கமெல்லாம்வெண்ணீ றணிந்துமால்பதைதேடி
மங்கும்வாணாசுரன் வாழும்நகரைநாடி (பரிபூ)

உ. கண்டந்தனி லரவப்பணி யிலங்க - நல்ல
காதிற்றிருவேடந்தான் துலங்க
உண்டையாம் ருத்திராட்சமணி யிலங்க - ஆனை
யுரித்ததோல் போர்த்தினதே யிலங்க - மார்க்
கண்டனைக்காத்திடுங் கங்காளனேயென்று
தொண்டர்மீதில்வந்ததோஷங்கள்தனைவென்று (பரிபூ)

௩. தேவர்கள்பூமாரி தூற் றவுமே - நல்ல
சித்தர்முனிவர்துதி சாற் றவுமே
நாவலர்புகழவே பூதவேதாளங்கள்
நடுங்கியடிபணிந்து போற் றவுமே
தேவதேவனென்று செகமெலாந்துதிக்கவே
மாவலிமகன்வாணன் மனத்துயரொதுக்கவே (பரிபூ)

**விக்கினேசுரர் வருகிற-தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.**

**பல்லவி.**

விநாயகர்தான்வந்தார் - தொந்தி
விநாயகர்தான்வந்தார்.

**அனுபல்லவி.**

அனுகாட்சகன் - அச்சுதன்மைத்துனன்
பிணுகநற்கான் - பெற்றிடும்புத்திரன் (விநா)

**சரணங்கள்.**

க. தொந்திவயிறு குலுங்க - மிக்க
ஐந்துகரமலுங்க
சந்திரசேகரன் மைந்தனும்நானென்று
கந்தனுக்கேநான் முந்திவந்தோனென்று (விநா)

உ. நாகமுகமுந்தடித்து - பாசம்
வாகுடன்கையிற்பிடித்து
நாக்கரும்சூழவே வேகமுமீறியே
வாகுள்ளமூஷிக வாகனமேறியே (விநா)



௩. ஆரும்புகழ்ந்திடவே - வாணா
சூரன்மகிழ்ந்திடவே
பேரும்பெருத்தவன் காரிளிறத்தவன்
வீரம்பெருத்தவன் பாரம்பொறுத்தவன் (விநா)

**சுப்பிரமணியர் வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஏகதாளம்.**

**பல்லவி.**

வந்தான்தெய்வானைநாதனே - சனுதியநாக
வந்தான்தெய்வானைநாதனே

**அநுபல்லவி.**

வந்தான்தெய்வானைநாதன் - வானவர்துதிபொற்பாதன்
வாகுடனேயதி வேகமுமீறியே
தோகைப்நாமயில் வாகனமேறியே (வந்தா)

**சரணங்கள்.**

க. நாராயணன்மருகனே - சத்ருசங்கார
வீரானவேல்முருகனே - சுப்ரமண்யனே
ஓராறுமுகமலுங்க யீராறுகரந்துலங்க
நேருடனுகம்வெண் ணீறுதுலங்கவே
சீருடனேவச்சிர ஆரமிலங்கவே. (வந்தா)

உ. முத்துக்கிரீடங்கள் சூட்டியே - திருவேடமலுங்க
ருத்திராட்சவடங்கள் பூட்டியே - பஞ்சாட்சரமோதி
சித்தரெல்லாங் கொண்டாட சத்தரிஷிகள்பாட
தேவர்கள்பூமழை தாவியேபொழிந்திட
மாவலிதருமக னுவிகுளிர்ந்திட. (வந்தா)

௩. கந்தாசரணம் சரணம் - சதாசிவ
மைந்தாசரணஞ் சரணம் - என்று
சந்திரசூரியர்போற்ற துந்துபிபேரிகையார்த்தற
டணடணவென்று ஜண்டைகளதிரவே
மண்டலமதிரவே கொண்டல்கள்சிதறவே. (வந்தா)

**பூதகணங்கள் வருகிற தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.**

**பல்லவி.**

பூதகணங்கள் வந்துதே - சினங்கொண்டு
பூதகணங்கள் வந்துதே.

அநுபல்லவி.

வாதித்தொன்றோடொன்று - மோதிக்கைகளைநீட்டி
தீதுக்கிசையுந்தங்கள் - சாதித்தொழிலைக்காட்டி. (பூத)

சரணங்கள்.

௧. தெரிவைமார்வயிற்றினிற் கருவையூட்டிக்கொண்டு
அரகரசிவனென்றே யரவம்போட்டுக்கொண்டு. (பூத)
௨. கலைமொழிபகர்ந்து கலைகள்சூறித்துக்கொண்டு
மலைகள்போல்நடந்து தலைகள்விரித்துக்கொண்டு. (பூத)
௩. மூக்குமுகங்கள்வேர்த்து நாக்கைநீட்டிக்கொண்டு
காக்கைகழுவுமஞ்சக் கூக்கைபோட்டுக்கொண்டு. (பூத)

பிரமராட்சதர் தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

பிரமராட்சதர்கள் வந்தனரே - நல்ல
அரகரசிவனேயென் றரவம்போட்டதட்டி. (பிரம)

சரணங்கள்.

மதங்கொண்டகரிகள்போல் சோக்கும் - ஆலா
மரங்கள்போற்சடைகளும் சரங்கள்போல்நோக்கும்
கதங்கொண்டஇடிகள்போல் வீக்கும் - மண்ணில்
கனங்கொண்டபுந்தயலை மனங்கொண்டுகாக்கும். (பிரம)

வைரவர் தரு-இ-ம்-புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி.

வைரவர் வந்தனரே - சனுதுடன்
வைரவர் வந்தனரே.

அநுபல்லவி.

வைரவர் வந்தனர் எயிறுகள்காட்டியே
துயர்கெடமனந்தனில் தைரியம்காட்டியே. (பிரம)

சரணங்கள்.

௧. சிதணங்குங்கடற்சனியும் - முரடியாம்
முதணங்குந்தொடர் குணமும் - கூடிய
பிதியாம்காய்களின் மீதினிலேறியே
சூதுசபதமொடு வாதுகள்கூறியே. (வயிரவர்)
௨. உடுக்கைகளடித்துக்கொண்டு - லவன்னடை
யொடுக்கியே கடித்துக்கொண்டு - வேகமாய்
வெடுக்குவெடுக்கென வார்த்தைகள்பேசியே
துடுக்குடன்கயிறுகள் கோபமாய்வீசியே. (வயிரவர்)



௩. தடிகளைப்போல் துடித்தே - இரும்புத்
தடிகளைத்தான் பிடித்தே - சினந்
திடைகளைமுடிகளை யுடல்களைநெருக்கென
துடைகளையடிகளை கொடிகளைநெருக்கென. (வயிரவர்)

பொது விருத்தம்.

ஆதியுமைநாதனு மைங்கரனும்வேலன்
அளவில்லாச்சேனைக ளாயுதங்களோடே
வாதுசெய்யமனந்துணிந்து கோரங்கொண்டு
வாணனிடபோர்க்களமே வந்துசேர
பூதகணங்களும் பிரமராட்சதாளும்
புத்தியுள்ளவைரவரும் போர்தான்வேண்டி
மாதவன்றன்சேனைகளைத் துரும்பதாக
மதித்துசரவாளிகளை வளைந்துஎய்தார்.

வேறு.

தாலகேதனன்வேள்சாம்பன் சாத்தகிநாலுபேரும்
சாலவேபோர்தான்செய்ய சங்கரன்படைகளெல்லாம்
ஓலமிட்டமுதுவாடி யோடினார்கைலைதேடி
நீலிபோர்க்களமேவந்து நிகரிலாசமரைச்செய்தாள்.

கஞ்சனைக்கொன்றோனேவும் கணைவரும்சமர்த்தைப்பார்த்து
அஞ்சியேபத்திரகாளி அழுதுகொண்டோடாநின்றாள்
வெஞ்சொலும்கோபத்தோடு விக்கினேஸ்பரனும்வந்து
சஞ்சலமில்லானாகி சமர்செய்துஜெயித்துநின்றான்.

சீறியேகடும்போர்செய்தான் சிதானநுசன்முன்னே
ஓரைந்துகாணாற்றாமல் ஓடினனவற்றைக்கண்ட
ஆறுமாமுகனும்வந்தான் அட்சணம்மாரன்நிற்க
சூரனைவதைத்தோன்மீறி தொடர்ந்துபோர்செய்யலுற்றான்.

மாயவன்மகன்தானேவும் வாளியேபத்துநூறு
ஆயிரம்நாலாய்நூறு ஆயிரமாகக்கண்டே
வாயுவேகமதாய்க்கந்தன் வாய்வரண்டோடிப்போனான்
பேயும்டாகினிகள்சூழ பிஞ்சகன்களம்வந்திட்டான்

வேறு.

எரிச்சலிலனும்வார்த்தையுடன் வெறும்மாலும்
இணையில்லாசதுரங்க தளத்திறோடே

செருசமைந்தாணைக்களத்தில் சதுதாய்வந்து
தேவாஞ்சசொர்ண மயத்திகிரியாட
விருச்சிகமாதத்தி னுயர்கடகாசி
விளங்கவதிலெட்டிடிக ளொன்றுய்ச்சேர்ந்து
கருச்சரியபுவிநடுங்க அதட்டும்போலே
கதித்திட்டார்அகோரமுடன் எதிர்த்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம், பரமசிவனும், விநாயகரும், சுப்பிரமணியரும், வயிரவர் முதலாகிய சேனைகளும் ஆயுதபாணிகளாய், வாணாசுரன் போர்க்களம்வந்து, பூதகணங்களும், பிரமராட்சதாளும், ஸ்ரீகிருஷ்ணர் சேனைகளைத் துஞ்சப்படுத்தும்போது, பலபத்திரர், சாத்தகி, சாம்பன் மன்மதனுகிய பிரத்தியும்னன் முதலானவர்கள் எதிர்த்து சாமாரிபொழியவே, அப்பூத கணங்களெல்லாம் நிர்வகிக்கமாட்டாமல் கைலையைத்தேடி ஓடிப்போயின. உடனே பத்திரிகாளியானவள் டாகினி முதலிய சேனைகளுடன்வந்து பலபத்திரர் முதலானவர்களையும் மூர்ச்சையாக்கிநிற்க, அவள் ஸ்ரீகிருஷ்ணதேவர்விட்ட பாணங்களால் புறமுதுகிட்டு புலம்பியோடினுள். பின்பு விநாயகமூர்த்தி ஸ்ரீகிருஷ்ணர்சேனைகளைத் துஞ்சப்படுத்த, அப்போது பலபத்திரர் கோபமீறிவிட்ட ஆயுதப்பிரயோகங்களால் விநாயகமூர்த்தியும் ஓடிப்போனுர். பின்னர் சுப்பிரமணியர் கடும்போர்செய்து நிற்க, மன்மதன் அபாரமான கொடுங்கணைகளையேவி வாட்ட, அதனுல் சுப்பிரமணியரும், வாயுவேகமாய் வாய்வாண்டோடினுர். இவைக ளெல்லாவற்றையும் அறிந்துகொண்ட பரமசிவனைவர் பேய்கணங்கள்சூழ யுத்தபூமியில்வந்து, அண்டகடாகமும் நடுநடுங்க, பாணப்பிரயோகஞ் செய்யும்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் ஈஸ்வரனும் போர்செய்யும் விதம் எப்படியென்ருல்.

ஸ்ரீகிருஷ்ணனுக்கும்-ஈஸ்வரனுக்கும்-யுத்தம்.

௩௫-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

எதிர்த்தாரேசிவன்மாஇம் - கார்மழைபோல
விதித்தாரேகணைவேஇம்.

அநுபல்லவி.

குதித்தாரே யிடியஞ்ச
கதித்தாரே அனல்போலே
கொதித்தாரே சினங்கொண்டு
மிதித்தார் பூமிநடுங்க. (எதிர்த்)



சரணங்கள்.

௧. வடவாக்கினிதன் கருவஞ்சிதறவே - வாணன்
மனஆகலங்கித் துள்ளிக்கதறவே - விருமன்
சடலம்அவெதும்பிப் பதறவே - பேய்கள்
சலங்கிவிழுந்து கால்கையுதறவே - பின்னும்
நெடியதடவட கனகமலை
இடிகுடென்று தத்தளிக்க
படவிதனைபணை முடியில்சுமப்பவ
னுடனும் நெளிநெளிக்க
அடவிதனிஇள மிருகம்பறவைகள்
நடுநடுங்கியே விழிக்க
கடலெழும்பிசடை மரங்களும்செடிகளும்
கனவடிவம் இளைக்க. (எதிர்த்)

௨. குட்டித்தாக்கிக ளாவிதுடிக்கவே - அண்டகோளந்தானும்
குலைந்துவெடிக்கவே - பயந்து
அட்டருடசதா கண்ணீர்வடிக்கவே - அந்தைச்
சூழ்ந்துபேய்களுந் தாவிபிடிக்கவே - பின்னும்
பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்
கட்டுகுலைந்துடல் ஒடுங்க
அட்டகஜங்களும் அட்டநாகங்க
ளட்டதிக்குக ளடங்க
அட்டவசுக்களு மஷ்டகிரிபதி
னெட்டுசித்தரும்நடுங்க
கொட்டகணைகளும் பட்டிஅதனை
மெட்டியுயிரகளை வெட்டிப்பிடுங்க. (எதிர்த்)

௩. எட்டாம்தளகர்த்தர் பயந்தோடவே - இருபதத்
தெழுந்திடச்சேத்திரம் மெய்வாடவே - அன்னி
ஊட்டிநெறிந்தபோர் கண்டோடவே - கிரகம்
ஒன்பதுதான் சுழன்றுடவே - பெருங்
கோட்டைக்கொத்தள மிழுந்த துள்நகை
யோட்டுச் சில்லுகள்பறக்க
நீட்டுக்கணைகளுஞ் சேட்டைமிகுந்தவர்
நாட்டிகங்களைக் கறக்க

கூட்டங்கூட்டமாய் வந்தசேனைகள்
சீட்டிப்படுத் துயரிறக்க
காட்டுநரிகளும் காக்கைகுறளிகள்
கூட்டமிட்டுவிளை யாட்டஞ்சிறக்க. (எதிர்த்)

போது விருத்தம்.

விண்ணவர்முனிவரஞ்ச வேதாளம்நடுங்கவீராறு
கண்ணனும்நடுங்கவைக்கு கையனும்நடுங்கியோட
மண்ணும்விண்ணடுங்கமோக வாளிதான்வருதற்பார்த்து
பெண்ணுடைப்பாகன்றானே பித்தங்கொண்டுளறினனே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தேவர்களும், ரிஷிகளும், பூதகணங்களும், உலகமும் நடுங்கும்படி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும், பரமசிவனும் யுத்தஞ் செய்யும்போது, ஸ்ரீகிருஷ்ணர் விண்ணும் மண்ணும்நடுங்க மோகாஸ்திரத்தைவிடவே, ஈஸ்வரர்அதை யெதிர்க்கமாட்டாமல் பித்தங்கொண்டு அயர்ந்துநின்ற தெப்படியென்றால்,

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

பித்தம்பிடித்துக்கொண்டதே - சங்கரனுக்கு
மெத்தமயக்கங் கண்டதே.

அநுபல்லவி.

சத்தமேகங்கள்நாணச் சண்டைக்குமனதுகொண்டு
விஸ்தாரமுடன்கிருஷ்ணன் விடுமோகாஸ்திரங்கண்டு. (பித்)

சரணங்கள்.

க. ஆனைத்தோல்தனைக் கிழிக்க - சத்திலும்பார்த்து
அரணமெண்டு கிழிக்க - வெள்ளைக்
கூனிந்தளர்ந்து கெளிக்க -, வயிறுலுங்க
குலுங்கிதேகமுஞ் சுளிக்க
கிர்தகிடதாளத்தனனவென்ன சருகிடனமாட
கியானத்தைமறந்து அஞ்ஞானத்தில்மனம்நாட. (பித்)

உ. கல்லுமொட்டையும் கடிக்க - தலையசைத்து
கையுங்கால்களுந் துடிக்க - வாயில்
சல்லிப்பேச்சுகள் படிக்க - கொக்கரணிகாட்டி
சளவாய்நீர்தான் வடிக்க - மண்ணில்



விஷ்ணும்வேலையும்போட்டு வெறுங்கைகளைவிரிக்க
பல்லும்முழுதுகாட்டி பகபகவென்றுசிரிக்க. (பித்)
போணிகாட்டாமலும் - சண்டைகள்செய்யும்
போர்களைவர்ட்டாமலும் - தனதுள்ளாரைக்
காரணங்காட்டாமலும் - வில்லினிற்பெருங்
கணைகளைப்பூட்டாமலும் - பின்னும்
நாரணனுடன்பேச நல்லநினைவில்லாமல்
நாரிப்பாகனும்நடு நிலையில்நில்லாமல். (பித்)

போது விருத்தம்.

நாகணைமீதிற் றூங்கும் நாரணன்விட்டுவந்த
மோகவஸ்திரத்தினாலே முக்கணன்மதிமயங்கி
ஆகமேசோர்ந்துநின்றான் அதுகண்டுவாணசூரன்
தேகந்தான்பதைபதைத்து சீக்கிரம்வந்திட்டானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ஸ்ரீமந்நாராயணனால் விட்ட மோகாஸ்திரத்தினாலே முக்கண்ணனாகிய சிவப்பிரான் சோர்ந்துநிற்க, வாணாசுரன் தனக்கு உப்பலமாய் வந்தவர்கள் கதியைப்பார்த்து பதைபதைத்து வீராவேசங்கொண்டு வருகிற தெப்படி யென்றால்.

தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

வாணன்வந்தெதிர்த்தானே - வல்லிடிநாண
மதங்கொண்டு கதித்தானே.

அநுபல்லவி.

மடித்துக்கைகடித்துத்தான்
துடித்துப்பல்கடித்துக்கொண்டு. (வாணன்)

சரணங்கள்.

க. சத்தமேகங்க ளோடவே - தேவர்களஞ்ச
தங்கமேருவைந் தாடவே - எட்டு
அத்திகள்பயஞ் சூடவே - அண்டநடுங்க
அஷ்டநாகங்கள் வாடவே.
அத்திரங்கள் விடுத்தானே
சித்திரங்கள் படித்தானே
ஆட்டிக்கைநீட்டிப் பல்காட்டிக்குரல்
நீட்டிக் கொண்டு. (வாண)

௨. செருக்கள் நெறிந்திடவே - ஆனைகள்மாண்டு
கிரிபோல் விழுந்திடவே - பாணங்களாலே
வரைக்கான லழிந்திடவே - சுவாஸத்தால்வட
வாக்கினி யொழிந்திடவே - கடின்மான
வுருக்குங்கல்லும் வெடிக்க
முறுக்குமீசை துடிக்க
உருட்டிக்கண் மிரட்டிக்கொண்டு
முறட்டுச்சொல் திரட்டிக்கொண்டு. (வாண)

௩. நீதானபெரும் போரடா - செலுத்தியென்னை
செயிக்கமாட்டாமற் பாரடா - நிச்சயமாக
ஈதோயென்திறம் பாரடா - எவ்வுலகிலும்
எனக்குளதிரி யாரடா - கரும்பயலே
நீதானென்னோ டெதிர்த்து
வாதாடவே கதித்து
நில்லடாவதில்சொல்லடா கருங்கல்லடா எனை
வெல்லடா வென்று. (வாண)

## பொது விருத்தம்.

வரிவிழிகள்மிகச்சிவந்து அனல்தான்துள்ள
மல்பொருதியிவ்விதமாய் வாணாசுரன்
கரங்களொருஆயிரமும் சலியாமற்றுன்
கணைகள்விட அக்கணைகள் கயுந்துசிறி
தரைநடுங்கயுகமழைபோற் பொழிந்துகாலாந்
தனங்கள்தமொறவுமே சாமிபார்த்து
இரவியொருகோடியெனத் துலங்குசக்கரம்
எடுத்திட்டான்வாணன்மிசை தொடுத்திட்டானே.

சக்கராயுதம்வருகிற-தரு-ஞ-ம-மோகனம்-அடதாளம்.

### பல்லவி.

சக்கரஞ்சனு அடன்வந்துதே - எதிர்நின்று
தர்க்கமிட்டோருடல்கைந்துதே.

### அனுபல்லவி.

உக்கிரங்கொண் டரிமேவ
விக்கினங்கண் டதைச்சிவ
உச்சிதக் கர்ச்சிதம்மீறி
நச்சாவம் எனச்சீறி
உஷ்ணமும் வேகமும்கொண்டு
கிர்ஷ்ணதேவர் மொழிகண்டு
உக்கிரத்தின் படியோடி
முக்கிய வாணனைத்தேடி
உரங்களெனுஞ்சொல் திறங்கள்மிகுந்திடும்
சரங்கள்பொழிந்திடுங் கரங்களரிந்திட
ஒளிவுதான் விளைவதாகவே
பளிர்பளிர்பளிர் பளிபளீரென. (சக்க)

### சரணங்கள்.

துஷ்டர்மீதிதுஷ்ணஞ் சாபவே - தவஞ்செய்வோர்க்கு
துக்கமாமஞ்ஞானந் தீயவே - மனந்தெளிந்த
சிஷ்டருக்குக்கஷ்டந் தேயவே - விண்ணிற்சிறந்த
தேவருக்குப்பாவ மூயவே - பலம்பொருந்தி
அஷ்டகஜங்களு மனம்வாட
பட்டத்தானைகள் பயந்தோட
அஷ்டகிரிகளு மதிர்ந்தலைய
மட்டிலாதவு னனுங்குலைய
அஷ்டவசுக்களு மிரண்டலற
எட்டுநாகங்களுஞ் சுருண்டலற
அஷ்டதிக்கின தொடுங்கிக்கொள்ள
கட்டுக்குதிரைகள் நடுங்கித்துள்ள
அர்க்கர்வுணரு முருக்கமிழந்திட
உருக்குமிரும்பதி னிருக்கந்தளர்ந்திட
அரகமானது மிருகநாணவே
முரமுரோவென சரிசரீரென. (சக்க)

நாராணனேயச்சுதா னந்தா - ஆயர்பாடி
நந்தனுக்குஞ்சோதைக்கு மைந்தா - பூமியளந்த
காருணபரிபூரண முகுந்தா - லீலாவிநோத
கண்ணனேகோபால கோவிந்தா - காரவைக்கொன்று
வாரணத்தைக் காத்தோனே
பெருந்தி பூத்தோனே

மாநிலத்தை யுண்டோனே
ஜானகியை கொண்டோனே
வாரணனைப் பெற்றோனே
ஆறுநாலுங் கற்றோனே
வாசிருப மெடுத்தோனே
பாஷைபெல்லாம் படித்தோனே
மாயனேவெகு பாயனேகனி
வாயனேசம்பிர தாயனேமிக
மருவிலாவெழில் திருவின்கொழுநனே
அரிகரியரி அரிகரியென. (சக்க)

போது விருத்தம்.

தேவதேவன்றன்சோதி திருமகன்மகிழ்நனான
பூவினில்யானைகாத்த புயல்வண்ணன்கிருஷ்ணமூர்த்தி
யேவியசக்கரந்தா னிந்தமார்க்கமதாய்வந்து
காவுடன்வாணாசுரன் கரங்களையறுக்குதன்றே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

பல்லவி.

அறுக்குது சக்கரமே - கரங்களை
நொறுக்குது சீக்கிரமே.

அநுபல்லவி.

செருக்கமதாய்ப்பழி பெருக்கியவாணனுக்
கிருக்கிறகரங்களைக் கருக்குக்கருக்கென்று. (அறு)

சரணங்கள்.

உத்தரகுருதனை மெத்தவுஞ்சிவந்திட
—ரத்தமுநிணங்களு மத்தியுங்குவிந்திட. (அறு)
சேவகரவுணர்கள் சாவதுகுறித்திட
மாவலிமகனுடல் நோவதுபெருத்திட. (அறு)
மாற்றலரேயரி கீர்த்தியைவாழ்த்திட
கூற்றுவனனவன் பார்த்துக்கண்பூத்திட. (அறு)
அண்டர்கள்நடுங்கவே மண்டலநெளிந்திட
கண்டங்கண்டமதாய்த் துண்டுகள்விழுந்திட. (அறு)

போது விருத்தம்.

சக்கரந்தானிந்நவிதம் வாணாசுரன்
தடக்கைகளைத்துண்டுதுண்டாய்த் தறிக்கும்வேளை



முக்கணனுமதிமயக்கந் தானுந்தீர்ந்து
முருகுநயனங்கள்தனை விழித்துப்பார்த்து
உக்கிரமுள்ளசக்கரத்தை விலக்கநம்மால்
ஒருக்காலும்முடியாதென் றுரைத்துவோடி
பக்குவமிதென்றுமனந் தனிற்சாத்மீகம்
பதித்திட்டான்மாயவனைத் துதித்திட்டானே.

ஈஸ்வரன்றுதி-தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தேவதேவனே - அரியோஅரிகிருஷ்ண
மானனபாவனே.

அநுபல்லவி.

தேவதேவனே மானனபாவனே
சேஷசயனனே வாசநயனனே
செந்தாமரைப்பாதனே சுந்தரகீதனே
தேவர்களிடுக்கண் தீர்த்தோனே
மாவலிவாணனைக்காத்தோனேஸ்ரீதர வாமன திருமகள்நேசனே
மாதவஅச்சுத வைகுந்தவாசனே.

சரணங்கள்.

போகபோகனே - கார்காலநீல
மேகத்தேகனே - எல்லா
யோகயூகனே - சித்திரவித்தார
நாகரீகனே வாகவிசேஷனே
நான்குபுயத்தனே தீங்குசெயித்தனே
நந்தன்சோதைசேயனே தந்திரவுபாயனே
நாளும்நலமும்பொலம் செயித்திட்டோனே
ஏழுமராமர மெய்திட்டோனே
நரசிங்கரூபனே சாசுவதிமாமனே
இரண்ணியசம்மாரனே எழிற்பரந்தாமனே. (தேவ)
மாயாவதாரனே - நானாவித
வுபாயக்காரனே - கௌசல்யா
தூயகுமாரனே - தாமோதரனே
ஆயிரம்பெயரனே வாயவிந்தாரனே
அச்சுதானந்தனே வுச்சிதமுகுந்தனே
ஆனைக்கிடர்தீர்த்தோனே கானக்குவடைப்பேர்த்தோனே

அலைகடலிற்பள்ளி கொண்டோனே
அலகைமுலைப்பா லுண்டோனே
ஆணவம்போனதே அஞ்சலிபூணுமே
வாணனைக்காத்திட மனம்வைக்கவேணுமே. (தேவ)

௫. ஆதிசோதிநீ - யுலகில்நாறு
பேதபேதம்நீ - சாஸ்திரபுராணம்
வேதபோதம்நீ - மந்திரதந்திரம்
சூதுவாதும்நீ தூதுகாதும்நீ
சூட்சகாரணம்நீ பேச்சும்பிராணம்நீ
சுத்தமபத்தம்அர்த்தமுநீயே சத்தமொத்தமகுத்துவநீயே
தூரமும்நேரமும் ஓரமும்நீயே
காரமும்சாரமும் பாரமும்நீயே
தொண்டனும்வண்டனும் துரைவிரைபலவும்நீ
அண்டமும்பிண்டமும் அருவுருவலவன்நீ. (தேவ)

பொது விருத்தம்.

நாரணனேவுனதுபதத் துதிதான்விட்டு
நானிலத்தில்வேறொரு தெய்வத்தைநாடி
காரணமென்றேதுதிக்கும் அறிவில்லாதார்
கனிந்தமுதமீதில்வெகு காதற்கொண்டு
ஆரணனேஅமுதமுண்ணு விடந்தானுண்ணும்
அறிவுகெட்டபேயருக்கு நிகரோவையா
பூரணனேநீயெவர்க்கும் பெரியோனென்று
போற்றுவான்பின்னும்வர மேற்றுவானே.

ஈஸ்வரன்-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

வரந்தரவேணுமே வைகுந்தவாசவனே.

அநுபல்லவி.

வரந்தரவேணுஞ்சர்வ வல்லபங்களுஞ்செகம்
சிறந்திடும்நாரண ஸ்ரீதரகேசவனே
புரந்தரனிமையவர் பெருந்தவமுனிவர்கள்
நிறைந்தடிதொழுகும்நல் லறந்திகழ்மாயனே. (வரந்)

சரணங்கள்.

எவ்வுலகாண்டிடும் இரணியராசனுமே
எழில்மைந்த னுனதுபதம்



செவ்வியதாய்த்தினம் சேவைசெய்தாசனுமே
சேயன்விரோசன னீன்ற
சேயன்மாவலி வாணாசுரன்பெற்ற
ஆயிரங்கைகளிறுது கைவிட்டிடவேணுமே
நாரணனேசிறு மதலையைப்போல்வட
வாரணமேற்றுயி லானந்தபூரணனே
அண்டம்ஆயிரத் தோரெட்டும்
பிண்டத்திற்கூட்டிய மாயவனே
வரும்பேயினைத்தான் கொன்றும்தந்த
வக்கிரன்சிசுபாலனை மாய்த்தவனே
வனசமீதினில் வளருஞ்செந்திரு
மடந்தையைமார்பினிற் சேர்த்தவனே
சேவடியாற்புவி யாவையுமளந்தந்த
மாவலியைக்காத்த தேவநீயிப்பநல்ல. (வரந்)

௨. தயவுடனிக்கதை நாடகம்சாற்றினவன்
தருநேமமதாகவே
புயல்வண்ணனே யுன்பொற்பாதம்
போற்றினவனெழில்
பொன்னுலகினர்துதி பன்னகசயனனே
மின்னும்பாரதகண்டந்தனில் கலியுகத்தில்
இருடிகேசவனே எழில்மனுநீதிதனிற்
கருங்கொங்குதேசந்தனில் காடிநகர்தனிற்
கம்மவார்சாதியினல மார்ந்திடுஞ்சுஞ்சுகோத்திரன்
நம்புமுன்கோத்திரன் ரங்கப்பசற்பாத்திரன்
இதத்திற்கிசைந்தமகன் எழில்குருவப்பநாய்க்கன்
சுதனுகுந்திருவேங்கட நாய்க்கனருளிய
சேயன்சென்னப்ப நாய்க்கன்சுதன்கவி
நாயனும்அப்பண நாய்க்கனுக்கேநல்ல
அறிவுமழகுமிகு பெருமைதிறமுஞ்சுகம்
திருவருளுமுயர்ந்த பரமபதம்பெறவும். (வரந்)

பொது விருத்தம்.

அரன்துதித்துஇந்த வரங்கேட்கமாயோன்
அப்படியேநல்லதென்று அருள்தான்கூர்ந்து

காமுமொருநானிற்க முன்திகிரிதன்னை
கார்வணனும் வாவெனவேகதமதான
தூர்புகழும்மாயவனே மாலேயென்று
துதித்துவந்துஅச்சுதன்பால் சேர்ந்துதப்பாது
குருமுனிவர்தேவரொடும் அவுணர்வேந்தர்
கூறினார்மால்புகழ் கொண்டாடினாரே.

தீபதை-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. ராசாதிராசருங் கூடினார் - அரி
கேசவன்மகிமைக் கொண்டாடினார்.

௨. பத்தர்மனமகிழ்ந்து குதித்திட்டார் - நல்ல
சித்தர்முனிவர்வந்து துதித்திட்டார்.

௩. சந்திரசூரியர்வந்து புகழ்ந்திட்டார் - சில
செந்துக்கள்யாருமே மகிழ்ந்திட்டார்.

௪. மாற்றலர்அரிபாதம் தேடினார் - அரி
கீர்த்தனம்பாவாணர் பாடினார்.

௫. வேதியர்வேதங்க ளுரைத்திட்டார் - தெய்வ
மாதர்மனமகிழ்ச்சி நிறைத்திட்டார்.

௬. சங்கிதசாகித்யம் படித்திட்டார் - சிலர்
வெங்கலப்பேரிகை யடித்திட்டார்.

௭. உளங்களெல்லாருமே குளிர்ந்திட்டார் - தேவ
ரளவில்லாப்பூமாரி பொழிந்திட்டார்.

போது விருத்தம்.

முகில்நிறமால்பக்கம் வந்துசக்ரம்சேர
முடிமன்னர்ரிஷிகள் சித்தர்முனிவர்வாழ்த்த
இசகம்நடுங்கஎட்டு வாத்தியங்களார்ப்பச்
செம்பொன்வடமேற் றிறந்துசிலைகளோட
மகபதியோடிமையவர் பூமாரிபெய்தார்
வாணன்வந்துநாலுகையால் தொழுதுமாலே
சகலவல்லபம்சிறந்த அரிநீயென்று
சாற்றுவரன்மாயன்பதம் போற்றுவானே.



தரு-இ-ம்-சங்கராபரணம்-மட்டையதாளம்.

பல்லவி.

கோவிந்தனேயரி கோவிந்தனேயரி
கோபாலஸ்ரீகிருஷ்ண கோவிந்தனே.

அனுபல்லவி.

மாவிந்தமென்றுசொல் வைகுந்தவாசனே
மணிமேகவண்ணனே மதனவுல்லாசனே. (கோ)

சரணங்கள்.

௧. பூமியைக்கனிவாயா லுண்டவனே - ஞான
போதமுற்றவனுக்கு விண்டவனே
நாமமோராயிரங் கொண்டவனே - முன்பின்
நானவிதங்களுங் கண்டவனே. (கோ)

௨. ராமாவதாரனே ராஜகம்பீரனே
நாமமோராயிரங் கொண்டவனே
காமனைப்பிள்ளையாய்ப் பெற்றவனே - நல்ல
கஞ்சனைமிஞ்சித்திச் செற்றவனே. (கோ)

௩. அண்டர்துயர்தனைத் தீர்த்தவனே - பயங்
கொண்டகரிதனைக் காத்தவனே
வண்டர்கள்தங்களை யீர்த்தவனே - தச
கண்டன்தலைபத்தும் பேர்த்தவனே. (கோ)

வாணாசுரன் விருத்தம்.

வாதுசெய்துற்குணமாம் தாமதந்தான்
வந்துதுடர்ந்தென்மதியை மறைத்ததாலே
ஆதியென்றுதுதிக்காமல் செய்தகுற்ற
மதுபொறுத்தாய்சிவன்சொல்லை யமுதாய்க்கொண்டாய்
போதாவாய்நாலுகரம் தந்தாய்நல்ல
புத்திதந்தாயழியாத புகழுந்தந்தாய்
ஏதமிலாத்தெய்வமுநீ யாகையாலுன்
எழில்மகன்சேய்க் கென்மகளையீவேன்சாமி.

வசனம்.

அகோவாரும் தேவாதி தேவனாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே உன்னுடைய சேவையால் எனக்கு எல்லாநலமும் கிடைத்து இனி உம்முடையபேரனாகிய அனிருத்த மகாராசனுக்கு என்னுடைய புத்திரியாகிய உடாங்கனையாளை திருமணஞ்செய்து கொடுக்கிறேன் அங்கிகத் தருளவேணுமய்யா சுவாமி.

ஸ்ரீகிருஷ்ணர் வசனம்.

அப்படியே நல்லதையா வாணாசுர மகாராசனே.

வாணாசுரன் வசனம்.

அகோவாருங்கள் மந்திரிமார்களே நாளைய தினம நமது குமாரத்தி உஷாங்கனைக்கும், அனிருத்த மகாராசனுக்கும், திருமணம் நடத்தப் போகிறபடியால், நகரலங்கரிக்க பேரிகை அடிக்கச் சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி வசனம்.

அப்படியே நல்லதய்யா சுவாமி.

கலியாண பேரிகை அடித்தல்.

திபதை-இ-ம்-மோகனம்-அடதாளம்.

கண்ணிகள்.

௧. திருமாலின்பேரனுக்கும் - வாணாசுரன்
சேயாமுஷாங்கனைக்கும் - நல்ல
பெருமைசேர்கலியாணம் நாளைக்கென்றேசொல்லி
பேரியடித்தனரே.

௨. புதிதுபோல் வீடுகளும் - அவரவர்
புரவடைச்சந்துக்களும் - நல்ல
அதிவிதச்சிங்காரம் செய்வீரென்றுசொல்லி
அடித்தார்கள் பேரிகையே.

௩. தெய்வலோகம் போலவே - அவரவர்
தேடிய வீடுதிண்ணை - வாசல்
செய்வீர்அலங்காரம் சுருக்கினிலென்று
செல்வையா யோதினரே.

௪. அஞ்சுவர்ணங்க ளாலும் - துலங்கிய
ஆடைகள்தான் புனைந்து
ரஞ்சிதத்துடனங்கே வந்திடலாமென்று
ரணபேரியடித்தனரே.

௫. சேணுலாவிய ரதங்கள் - தொறுங்கிச்
சிதறிய வீதியெல்லாம் - வந்து
காணும்பேர்கள்மதிக்க முழுதும்கூந்தற்பனை
கட்டிவிளக்கினரே.



பேய்க்கூட்டம் காலறுந்து - வீழ்ந்து
பிரண்டிட்ட வீதியெல்லாம் - நன்றாய்க்
காய்க்குலையுடன்பிஞ்சுக் கனியுடனேவாழைக்
கம்பங்கள்நாட்டினரே.

௭. மேனுங்குடலறுந்து - துரகதங்கள்
விழுந்திட்ட வீதியெல்லாம் - நல்ல
கோலுஞ்சிறந்திடும் தமனியப்பூரண
கும்பங்கள்வைத்தனரே.

௮. மதயானைக் கூட்டங்களே - தலையறுந்து
மடிந்திட்ட வீதியெல்லாம் - நல்ல
அதிவிதமாகவே மாமதுமையமான
அலங்காரம் செய்தனரே.

௯. நங்கக்கம்பங்கள் நாட்டினார் - அளவில்லாத
சாரவிளக்கு நிறைந்தார் - நல்ல
செங்கண்மாலுந்திருவும் தேவர்முனிவர்மெச்ச
தீபங்கள் ஏற்றினரே.

௧௦. சாயாமலுலகங்களை - தலைதனில்
சுமந்திடும் ஆதிசேடன் - நல்ல
ஆயிரம்வாயாலும் புகழ்ந்துமுடியாத
அலங்காரஞ் செய்தனரே.

வாணாசுரன் விருத்தம்.

காட்டுமான்போலேபாயுங் கட்டியக்காரனேநீயாய்
ஓட்டமாய்ப்போடிநீதா னுஷாங்கனைசமுகம்நாடி
தாஷ்டிகமிருந்தாளான சித்திரரேகைதன்னை
தேட்டமாயென்முன்பாகச் சீக்கிரமழைத்துவாராய்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் கட்டியக்காரனே! நீ சீக்கிரமாகப்போய் நம்ம உஷாங்கனை யிடத்திலிருக்கும் பாங்கி சித்திரரேகையை என் முன்பாக அழைத்துவாராய் கட்டியக்காரா.

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே மகாபாக்கிய அய்யா வாணாசுர மகாராசனே.

### சித்திரரேகை வந்து சொல்கிற விருத்தம்.

மாவலிதவத்தால்வந்த மைந்தனேபோற்றிபோற்றி
காவலாபோற்றியெங்கள் கர்த்தனேபோற்றிபோற்றி
தேவரீரழைத்திடென்ற சேதிகேட்டோடிவந்தேன்
ஆவலாயழைத்தசேதி அடியாளுக்குரைத்திடீரே.

### வாணாசுரன் வசனம்.

வாராய் சித்திரரேகாய்! நாளையதினம் நமது குமாரத்திக்குத் திருமணம் நடத்தவேண்டியிருக்கிற படியால், நீ மணவறை ஜோடினை செய்யக்கடவாய் பாங்கி.

### சித்திரரேகை வசனம்.

அப்படியே மகா பாக்கியமையா சுவாமி.

### மணவறை சோடிக்கிற தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

#### பல்லவி.

பாரில்மணவறை சோடித்தனள் - க்ஷணம்
 பாங்கிசித்திரரேகை - நல்ல
பஞ்சதந்திரத்தோடு விந்தைமந்திரங்கற்ற
 பஞ்சவர்ணச்சலாகை.

#### அநுபல்லவி.

சீருடன்சொர்ணத்தால் நாற்சதுரமாகத்
 திண்ணையுந்தான்போட்டு - அதிற்
சிங்காரமாகவே நாலுமூலைக்குநால்
 தங்கக்கால்தான்நாட்டி - நல்ல
ஒருமையாய் மணியூரம்பாராட்டி
 உச்சிதமாய்நல்ல வச்சிரவளைபூட்டி
மெருகுதிறங்கொண்ட கம்பைகள்கூட்டி
 மெட்டிளகாமலே கட்டுகள்மாட்டி
 வெட்டிப்பருங் குலைப்பாளைகள்
 கட்டிப்பசுங் காவோலைத்தை
 மொட்டிக்கயிறுமேலமெள்ளக்
 கட்டித்தங்க ரேக்கென்றிட (பாரி)

#### சரணங்கள்.

கூடிக்கூடிமெச்சித் தேவர்களெல்லோரும்
 கூர்ந்துதான் பார்த்திடவே - வெகு
கோடானுகோடி பரும்பட்டுவேலைகள்
 மேடைபாய்ச் சித்திடவே - நல்ல



மலர்வகைத்திரள்னம்பூ மெருமிச்சங்காய்த்தொங்கல்
 வரிசையாய்க் கோர்த்திடவே - நன்றாய்
பலவகைப்பதுமைகள் யானைகள்யாளிகள்
 பாங்கெலாம் சேர்த்திடவே - முற்றும்
சோடிக்கும்வேடிக்கை நாவலர்பாட
 சூத்திரப்பாவைக ளாட்டங்கள்போட
ஆடிக்கிளிமயி லன்னங்கள்கூட
 ஆனிக்கொடிகளை வாழைக்காய்சாட
 அலுங்கப்பொடிச் சரவேலைகள்
 குலுங்கப்பல மலர்மாலைகள்
 துலங்கக்காந்தி விளக்குகள்
 இலங்கக்கொடி வெகுசோக்குடன். (பாரி)

௨. முத்துச்சரங்களும் வச்சிரச்சரங்களும்
 மூலைக்கு நாலலுங்க - அணி
முத்துக்குஞ்சங்களும் நீலக்குஞ்சங்களும்
 சுற்றிலும்தா னலுங்க - நல்ல
பத்தரைமாற்று அபரஞ்சிச்சரங்களும்
 பளபளன்றே குலுங்க - நல்ல
பச்சைக்கல்வச்சிரக் கல்நெருங்க
 மரகதவட்டங்களும் துலங்க - சுற்றிலும்
எத்தனையோகோடி கண்ணாடிகளுமின்ன
 இதமில்லாத்திபச் சோதிகள்துன்ன
அத்தனையெல்லாம்வெல்லப் பளிர்பளிரென்ன
 ஆரவமாணிக்க வெளிச்சங்கள்மன்ன
 அந்தங்குறை யாக்கிரித்
 தந்தங்களி னலும்மா
 விந்தமல ரானுமனங்
 கொந்துங்கொழுந் தானுமெழிற். (பாரி)

௩. மாயவன்வாழ்ந்திடுங் கோயிலென்றேசில
 மாந்தர்துதிக்கவுமே - சில
மாமுனிவோரீசன் சந்நிதியேயென்று
 மகிழ்ந்துகுதிக்கவுமே - நல்ல

சாஸ்திரவேதன்வாழ் வீடிதென்றேவெகு
  சனங்கள்விதிக்கவுமே - நல்ல
சாஸ்வதிபிரமா தேவேந்திரன்வீடென்று
  தானுமதிக்கவுமே - பதி
னாயிரங்கண்போரா தலங்காரம்யேற்கவே
அஷ்டலட்சுமிகள் வந்திஷ்டமாய்க்காக்கவே
தூயாமாலீசனும் ஓயாமற்பார்க்கவே
சூட்சங்களேபசி தாகங்கள்தீர்க்கவே
  சொன்னவெள்ளியாலும்பல
  வன்னங்களினாலும்பசுந்
  தென்னமடலாலுங்குயில்
  அன்னமயில் கிளியாலுமே. (பாரி)

சித்திரரேகை வசனம்.

அகோசரணஞ் சரணஞ் சரணமையா வாணாசுர மகாராசனே! மணவறை சோடினை யாச்சுதையா சுவாமி.

வாணாசுரன் வசனம்.

அப்படியானால் நல்லகாரியமாச்சுது! நமது குமாரத்தி உடாங்கனையை அலங்கரித்துக் கூட்டிவாராய்பாங்கி.

சித்திரரேகை வசனம்.

அப்படியே மகாபாக்கியமையா மகாராசனே.

உடாங்கனைக்கு அலங்காரஞ்செய்கிற
திபதை-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

இந்திரஜாலச்சித்திரரேகையெனும் பெயர்த்தாதிதான் - குனிந்து
சந்திரவதனேஉடாங்கனைப் பெண்தலைமீதுதான்.
சரிந்தகூந்தல்நனையச்சம்பங்கித் தயிலத்தைச்சாய்த்திட்டாள் - நல்ல
இரண்டுகொங்கைகுலுங்க இடைதுவண்டலுங்கவேதேய்த்திட்டாள்.
சாந்தமுடனேநொய்யதாளங்கள் தீர்ந்தங்கைபாவினாள் - அருங்
கூந்தல்மீதிலெட்டுக் குழைவிரல்பாச்சி யுலாவினாள். [முலி
சுருக்கிமயிர்முடித்துத்தோளுமார்பையுந் தேய்த்துஅசைத்திட்டாள்-
முருக்கமிளகத்தானே முதுகுக்கெண்ணெய்நடவிப் பிசைந்திட்டாள்.
இழுத்துஇழுத்துக்கைகள்இருக்கி முருக்கித்தான்பிடித்திட்டாள்-மெ
லினத்துவிரல்நசுக்கி மணிகட்டுங்கநெட்டையெடுத்திட்டாள். [ல்ல



கைகூப்பிக்கும்பிட்டுக்கால்கள் சண்டையுநீவிப்பிசைந்திட்டாள்-நல்ல
ஒய்யாரத்துடன்பாங்கி யுள்ளங்கால்களுக்கெண்ணெ யிசைந்திட்டா
சீராடிமுடிந்தபின்னிளஞ்சல்லாவாலே துடைத்தனள் - நல்ல [ள்.
போரானபசுந்துகில் சீராகச்சாத்தி யுடுத்தினள்.
திருநாமந்தரித்துப்பின்தெய்வத்தை பணியென்றுபணிந்திட்டாள்-ந
அறுசுவையுடன்றானே யன்னஞ்சாப்பிடமாது துணிந்திட்டாள். [ல்ல
கஸ்தூரிகுங்குமங்கலந்த சவ்வாதுந்தான்பூசினாள் - நல்ல
விஸ்தாரமாக விலாமிச்சவிசிறியால் வீசினாள்.
கலங்காதபேர்நெஞ்சுங் கலங்கியுருகவாடையணிந்திட்டாள் - தலையை
அலங்காரஞ்செய்யவே யணிபணிபூட்டவே பணிந்திட்டாள்.
சோதிவச்சிரமான்றசொன்னச் சடைவில்லைவைத்திட்டாள் - சாதி
சாதிப்பில்லைபதித்த சந்திரபுல்லாக்குமே பதித்திட்டாள்.
தேட்டமுடன்மின்னல்காட்டு மொட்டியாணத்தைப்பூட்டினாள் - அந்த
பூட்டிளகாமலே நாட்டுப்பின்னர்கொக்கி மாட்டினாள்.
வெருவிமதிமயங்கும் விசனங்கள்யாவையும்நீங்கியே - மகிழும்
துரைசானிமுகம்பார்த்துத் தொழுதுகும்பிட்டனள் பாங்கியே.

சித்திரரேகை வசனம்.

அகோராஜாதி ராஜனாகிய வாணாசுர மகாராசனே ! தேவரீர் கட்டளையிட்டபடி உடாங்கனாதேவியை அலங்கரித்துக் கூட்டிவந்தேன் சுவாமி.

வாணாசுரன் வசனம்.

அப்படியானால் கலியாண மண்டபத்திலேபோய் ஆஜராயிருங்கள் பெண்ணே.

சித்திரரேகை வசனம்.

அப்படியே யிருக்கிறோமையா மகாராசனே.

கலியாணச்சடங்கு நடத்துகிற விருத்தம்.

தண்ணிமைசேர்வசனாதி பதிபால்வண்ணன்
  சாத்தகியும்சாம்பனிந்த நால்வர்தானே
மன்னனனிருத்தமனுங் கப்பங்கஸ்நானம்
  வரிசையுடன்நடத்துவித்து மருங்கில்தானே
சொன்னமதாய்சன்னகம்பி துலங்கச்சேர்த்து
  சோமனையுமுடித்துவெகு சுடர்கள்வீச
சென்னிதனில்நவமணிசேர் மகுடஞ்சூட்டிச்
  சிறந்தமணவறைவைத்துச் சிறப்பித்தாரே.

நலங்கு இடுகிற திபதை இ-ம் சங்கராபரணம் ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. ஸ்ரீஹரிசேய்மைந்தனுக்கும் சிரஞ்சீவிசேய்மகடனக்கும்
பேர்பெற்றமறையோர்கள் பிரியமுடன் நலங்கிடவே.

௨. மாவலிதன்பேத்தியுடன் மாயவன்றன்பேரனுமே
சிவாத்னசனத்திருக்கச் சீருடனே நலங்கிடவே.

௩. தெள்ளுமைசேர்மஞ்சளுடன் சிறுபயறுசேர்த்தரைத்து
எள்ளெண்ணெய்தான்கலந்து இதுவுமொரு கிண்ணியிலே.

௪. இதமானபச்சரிசி மிதமாகத்தானெடுத்து
புதியமஞ்சள்நிறமாக்கி யிதுவுமொரு கிண்ணியிலே.

௫. சந்தனமுங்கதம்பமத்தர் சவ்வாதுபுனுகுபன்னீர்
இந்தவண்ணந்தான்மணக்க இருவருக்கு நலங்கிடவே.

௬. மல்லிகைசெண்பகம்செவந்தி மருக்கொழுந்து இருவாட்சி
நல்லநல்லமலர்மணங்கள் நயந்திட நலங்கிடவே.

௭. பேரிகைதுந்துமிமுரசு பூரிசெண்டைதவில் கொம்புடன்
தாரைசின்னம்ஒலிமுழங்க சீருடனே நலங்கிடவே.

௮. மங்கைநல்லாள்இடப்பாகம் மணவாளன்வலப்பாகம்
இங்கிதமாய்த்தானிருக்க இருவருக்கும் நலங்கிடவே.

௯. அரியானும்மகிழ்ந்திருக்கசுரர் முனிவோர்புகழ்ந்திருக்க
துரைமகரேநிறைந்திருக்க இருவருக்கும் நலங்கிடவே.

௧௦. பூவாடைகள்மணிந்திடவே போதனர்கள் மகிழ்ந்திடவே
பாவாணர்கள்புகழ்ந்திடவே பரிவுடனே நலங்கிடவே.

௧௧. சாம்பிராணிப்பால்வாடைகளும் தக்கநந்தமேடைகளும்
தாம்பாடிமணந்திடவே நயவுடனே நலங்கிடவே.

௧௨. பழந்தேங்காய்பச்சரிசி பாக்கிலையும்புசுரர்க்கு
வழங்கவுமேவேதமல்ர் மறையோர்கள் பொழிந்திடவே.

௧௩. கெடுமானும்சனுக்கும் நிறைந்திருக்கும்சனங்களுக்கும்
மடிநிறையத்தாம்பூலம் வரிசையுடன் வழங்கவுமே.

௧௪. அரியானைத்தானினைந்து அட்சதையைமாந்தரெல்லாம்
இருகரத்தால்தானெடுத்து இருவருக்கு நலங்கிடவே.



போது விருத்தம்.

நந்தல்சேயுடன்மற்றுள்ளோர் நலங்குதான்முடித்தபின்பு
மந்தாப்புயத்தோனுன் மாப்பிள்ளைசேசிமீது
தந்திரசாலப்பாங்கி சம்பங்கிதயிலந்தானே
சந்தமாய்ச்சயிலமாகச் சாய்த்திட்டாள்தேய்த்திட்டாளே.

தரு இ-ம் நாதநாமக்கிரியை அடதாளம்.

பல்லவி.

திவ்யசம்பங்கித்தைலம் சாய்த்தனள்
கிரதகிடதாம்தாம் கிரதகிடதிம்திமென —
திகிர்தத்தாளந்தீர்ந்து தேய்த்தனள்.

அநுபல்லவி.

எவ்வணப்பெண்கள் பார்த்துமகிழ
ஈசன்மாலும் மகிழ்ந்துபுகழ
இடையுந்துவண் டாடச்சரிகை
உடையும்அலைந் தாடப்பசும்
தொடையுந்திறந் தாடப்பின்னற்
சடையுஞ்சுழன் றாடக்கூணம். (திவ்ய)

சரணங்கள்.

௧. சுந்தரசெகமாலை சாடவே - முத்துமோகனமாலை
சுழன்றுசுழன்றாடனந் தேடவே - சொர்ணக்கருந்
தனக்கொப்புதொங்கநு மாடவே - எழில்வச்சிரத்தோடு
குலுங்கிகுலுங்கியாட்டம்போடவே - நல்ல
சந்திரவளைகள் சலீர்சலீரென
தண்டைசிலம்பு சலீர்சலீரென
தங்கக்கொடி யிலங்கச்சுய
செங்கற்பணி துலங்கச்சுருள்
தொங்கற்சரங் குலுங்கச்சிமிழ்
கொய்கைக்குட மலுங்கக்கூணம். (திவ்ய)

௨. மதன்மகனுடற்சடவு தீரவே - உடல்நெகிழ்ந்துகலைந்து
வளைந்துநிந்திரைச் சோகமீறவே - கொட்டாவிகள்கொண்டு
இதுசுகமெனச் சிந்தை தேறவே - ஒயில்மன்மதன்மகன்
சுழிற்சகிதனைப் புகழ்ந்துகூறவே - மெள்ளநிவிநீவியே
சதிருடன்மயிர்ச் சிக்கைநீக்கி
நடவிச்சொறிந்து நயிலந்தேக்கி

தட்டிப்பிணைந் திதமாகவே
மெட்டிச் சயிலமதாகவே
குட்டித்தட்டி அடைதாளங்கள்
திட்டத்துடன் தீர்க்கேயினும். (திவ்ய)

சந்திரச்செம்புகளிவள் ஸ்தனங்கள் - என்னுமன்னும்
தளிர்த்துநிறைந் தீபூத்த கொம்புகள் - இவளனுக்கம்
நிந்தனைக்கொலைக்குகந்த அம்புகள் - இவள்கண்கள்
நீலபிருசினிற்கதிக்கும் சிலம்புகள் - இவள்நகை
விந்தைவார்த்தைகள் தன்னைச்சுமந்து
வேர்வைமுத்துகள் திறக்குமிந்து
மின்னப்பணித் திடும்நூலிடை
கனகப்பது மைபோலெனும்
வன்னப்பொறி யருள்செய்மகன்
அனிருத்தமன் தலைமீதினில். (திவ்ய)

போது விருத்தம்.

இரதிசேய்தனக்குத்தானே யெண்ணைத்தேய்த்தானபின்பு
வரிவிழிப்பாங்கிவாணன் மகள்தலைமீதுநானே
சரியுள்ளவாசமோங்குஞ் சம்பங்கித்தயிலஞ்சாய்த்து
திரமுடனுதிதாளம் தீர்த்திட்டாள்கூர்த்திட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் பாங்கியானவள் அனிருத்தமகாராஜனுக்குளெண்ணெய் தேய்த்தபிறகு உடாங்கனைக்கு சம்பங்கித் தயிலந் தேய்க்கிற விதங்காண்க.

தரு இராகம் ஆனந்தபைரவி ரூபகதாளம்.

பல்லவி.

தைலம்தேய்த்தாளே சித்திரரேகை - உடாங்கனை தலையில்
தைலம்தேய்த்தாளே சித்திரரேகை.

அநுபல்லவி.

தைலந்தேய்த்தனள் குயில்போற்குரலினள்
மயில்போற்சாயலி ஒயிலாய்சம்பங்கி. (தைல)

சரணங்கள்.

சாகாதாரேழுபேர் பேரேத்தி - மாதாபிதாப்பேர்
தானுமாசானின் பேரைச்சாற்றி - தேவாதிதேவன்
சர்வலோகேசன் பாதம்போற்றி - தயிலமேந்தித்
தனுங்காமற்கேசு மீதினூற்றி - வச்சிரவளைகள்



உள்ளங்கசந்திடும் பகையைநிறைந்தான்
மெள்ளச்சேர்ந்தார்தங்கிக் கண்ணைத்திறந்தான்
எள்ளத்தனைமிஞ்சாமல் தேகங்கரைந்தான்
வெள்ளைச்சாம்பலாக விண்ணில்மறைந்தான்
உன்தாய்தவுதாயத்தா லுலகத்தில்வெளியே
வந்தான்மெய்யிலாதவன் வம்சவழியே. (இந்)

வசனம்.

கேளுமையாசுவாமி! உயர்ந்தராசகுமாரனென்றால் உனக்கேசொல்லும். அதெப்படியென்றால் ஸ்ரீபகவானாகிய கிருஷ்ணமூர்த்தி யிருக்கிறாரே, அவர்மகன் மன்மதன் உனக்குத்தகப்பனானான்; உன்பெரியப்பனாகிய பிரமதேவன் சிவன்முடியைக் கண்டேனென்று பொய்சொல்லிப் பூசையும் கோயிலும் போக்கடித்துக்கொண்டான்; பொய்ச்சாட்சி கோரித் தாழம்பூவைப் பூசைக்குதவாமல் செய்துவிட்டான்; தன்னுடைய மகளைக்கலந்த தோஷத்தினாலே அஞ்சுசிரசிலே ஒருசிரசிழந்தான். உங்கள்பாட்டனாகிய கண்ணன் முன்னே இராமவதாரமெடுத்தபோது பெண்கொலை செய்ததுமல்லாமல் பெண்சாதியை ராக்ஷதனுக்குப் பறிகொடுத்து திருடன்போலே ஒளிந்து வாலியின்மேல் அம்புதொடுத்துக்கொன்றான். இராக்ஷதன் சிறையில்வைத்த பெண்சாதியைப்பின்னுங்கூட்டிக்கொண்டுவந்து பின்னும் ஓர்வண்ணான்பேச்சைக்கேட்டு வனத்திலோட்டினான். பிறகு, இந்தக் கிருஷ்ணாவதாரத்தில் எத்தனையோ திருட்டு வியபசாரம்முதலிய கெட்டகாரியங்களைச்செய்தான். உன்தகப்பனாகிய மன்மதனோ சிவனோடே யெதிர்த்து அவர்அக்கினிக்கண்ணால்எரிந்து சாம்பலாய் உன்தாயினால் பின்னும் அனங்கனாயெழுந்தான். அப்படிப்பட்ட வங்கிஷத்திலே நீரும் வந்தபடியினாலே இப்படிப்பட்ட கபடநாடகம் உன்னிடத்தில் இல்லாமற்போகுமா சுவாமி.

போது விருத்தம்.

விந்தன்வழியாய்க் களவுசெய்யுந்தோதும்
மெல்லியரைமயக்குந்தொழில் விஞ்சைசூத்திரம்
தந்திரஇந்திரஜாலம் மகேந்திரஜாலம்
சால்திரங்கள்கருதுவதுந் தானேயென்று
நிந்தையெனுந்தூஷணமாய்த் தன்துகாந்தன்
றன்குலந்தைததாழ்ச்சியதால் நிகழ்த்தும்போது
சுந்தரனுந்தன்னெதிரே தோன்றுதால்மெய்
சோருவாள்நல்வழியாய்க் கூறுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள் கள்ளம், கபடு, சூது, வாது, இந்திரஜாலம், மோசம், பெண்களை மயக்குதல் முதலிய நடவடிக்கைகள் வமிசாவளியாய் வரப்பட்டதென்று தனதுமணவாளனை நிந்தனையாக வேசியும், அவன்வாக்காணாதபடியால், பின்னும் சொல்லுகிறமார்க்கம் எப்படியென்றால்.

நீலாம்பரி ருபகை-ஓ-ம்-கல்யாணி-ஆடதாளம்.

கண்ணிகள்.

௧. என்னென்னசொன்னாலும் - என்சுவாமி
 இன்னம்வாராததென்ன - முன்சென்னத்தில்
நன்னிநான்செய்தபாவம் இந்தச்சென்னத்தில்
 கண்ணாரக்கண்டேனையா.

௨. மாலையிட்டமகிழ்நா - உந்தன்தந்தை
 மன்மதராசன்வந்து - எந்தன்
பாலகனெங்கேயென்று கேட்டால்பெரும்
 பாவிநானென்னசொல்வேன்.

௩. உன்தாயாரானயெந்தன் - மாமிசித்ர
 ஒயில்ரதிதேவிவந்து - எந்தன்
மைந்தனெங்கே யென்றுகேட்டாலும்
 மாபாவியென்னசொல்வேன்.

௪. மாரன்தாய்வுனதுபாட்டி - இவ்வுருக்கு
 மணியெனுமம்மன்வந்து - எந்தன்
பேரனெங்கேயென்றுகேட்டால்பெரும்
 பேதைநான் என்னசொல்வேன்.

௫. பதுமநாபன்முகுந்தன் - உந்தன்பாட்டன்
 பரமேஷ்டியிங்கேவந்து - எந்தனிட
பேரனெங்கேயென்று கேட்டால்கொடும்
 பேதைநானென்னசொல்வேன்.

௬. வேந்தர்கட்கென்னசொல்வேன் - பாங்கியரென்னும்
 மெல்லியர்க்கென்னசொல்வேன் - உந்தன்
காந்தனெங்கேயென்று கேட்டிடும்மாசு
 கன்னியர்க்கென்னசொல்வேன்.



மருவிச்சல்லாபஞ்செய்து - முத்தாடிடும்
 வாலப்பிராயத்திலே - நீங்கள்
இருவரும்பிரிவின்றி தலையோட்டிலே
 என்றன்னையெழுதினரோ.

௮. சந்த்ரக்கட்டிலுடனே - யெனதுபிராணை
 சல்லாபஞ்செய்தன்றான் - போன
தந்திரமின்னம்தெரியாச் சடலத்தைநேரே
 தாங்கலாமோவுயிரே.

௯. வேள்மருமகள்ருக்குமி - தனசம்பத்து
 விருதாவாய்ப்போச்சுதென்றும் - உலகத்தில்
தாழ்வுரைதோன்றுமுன்னே பாவியுயிரைத்
 தான்மாய்த்துக்கொள்ளல்நன்றே.

௧0. தவமிருந்தென்னைப்பெற்று - வளர்த்திட்ட
 தாய்தந்தைபந்துகட்கும் - குலத்துக்கும்
அவமானமாகுமுன்னே வுயிரைவிட
 அவதிஜாலமேன்மனமே.

போது விருத்தம்.

அருந்தவராமுகுந்தனுக்கும் உருக்மணிக்கும்
 அத்தையெனும்ரதிதனக்கும் அனங்கனார்க்கும்
சிறந்தபந்துஜனங்களுக்கும் சகிமார்கட்கும்
 செப்புதற்குவகையியாக் தெரியேனென்று
பறந்தபட்சிசிறகிழந்து குலைந்தாற்போலும்
 பத்தாவைப்பிரிந்துருகிப் பாவைசோர்ந்து
வெறுந்தரையில்களினஇள மயில்போற்சாய்ந்து
 விழுகின்றாள்கண்பிசைந்தே யழுகின்றாளே.

வசனம்-

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள் சொல்லிப் பின்னும் புலம்புகிறமார்க்கம் எப்படியென்றால்.

நீலாம்பரி-ருபக-ஓ-ம்-மணிரங்கம்-மட்டையம்.

பல்லவி.

அரைத்துருக்குமி - தேவிகண்பிசைந்
தழுதுகதறினாள் - மிக - அவிபதறினாள்.

அநுபல்லவி.

கசைந்ததற்க்குணப் - பேய்கரும்மனம்
கரைந்துவுருகவே - இரு - கண்ணீர்பெருகவே.

சரணங்கள்.

சைவலமுகில் அலைவென்றிடும்
மயிருங்கலையவே - அதில் - மலர்தான்குலையவே. (அசை)
நாந்தகமென்னும் நயனங்கள்ரண்டும்
சோர்ந்துமூடவே - முக - காந்திவாடவே. (அசை)
ஊக்கும்வேளையில் பிரிந்தநாயகன்
நிரந்தனைநினைந்து - இரு - கரந்தான்பிணைந்து. (அசை)
அதுக்குமெனுக்குங் கெலிப்பும்நீங்கி
ஆகம்வாடவே - கண்ணீர் - ஆறுபோடவே. (அசை)
கோய்மிருந்தவர் போலிரண்டுசெவ்
வாய்மொழிகுழறி - பின்னும் - பேய்போலுளறி (அசை)
சோலையில்இனம் இறந்தபைங்கிளி
போலவாய்திறந்து - கொடுந் - துயரம்நிறைந்து. (அசை)
நாசியில்மலர் வாசமானது
வாசமும்நடுங்கி - மல் - லாசமுமொடுங்கி (அசை)
களித்திருக்கண்கள் முழித்துஆனனம்
வெளுத்திதழ்கருக்கி - மென்னக் - கழுத்தைநெருக்கி (அசை)
மேர்கிர்கும்பஸ்தனக் கட்டுமெட்டு
வார்தான்கழுகவே - முக - வேர்வையொழுகவே. (அசை)
எழில்கவைசிந்த மகிழ்நகோடிய
வழியைக்காணமென்று-வெட்ட - வெளியானதென்று (அ)
வெம்போலேக்கண்ட மகாமலரோனக்
கைகளைவிரித்து - கண் - ணிமைதான்கரைந்து. (அசை)
சேவலைப்பிரிந்தன்னப்புள்ளென
ஆவிசோரவே - வெகு - தாபமீறவே. (அசை)
[illegible]மியைப் பிரிந்துபிழைப்ப
[illegible]வென்று - தான - தேகம்வாடி (அசை)



பொது விருத்தம்.

நிலநிறந்தேகமது தனைக்காணமல்
நீர்நளினமலர்க்காங்கள் தனைக்காணமல்
நீலநிறவிசாலமுறு முரங்காணமல்
நிறைமதிபோலானனத்தின் நேர்காணமல்
காலையெழுங்கதிர்ச்சுடர்போல் முடிகாணமல்
கமுகுதனைப்பழித்தகழுத் தெழில்காணமல்
பாலெனவுந்தேனெனவு மொழிகாணமல்
பயனிலெழுமின்னலெனு மிடைகாணமல்
பசும்பொன்வரைக்கிணையிடுந்தின் புயங்காணமல்
பஞ்சபாணனைப்பழிக்கு மொயில்காணமல்
விசும்பினுறுங்குயில்சிந்தை யுருகிவாட
மேன்மையுறும்ருக்மியழு குரலைக்கேட்டு
நிசம்பெறுநலத்துவராநகர் நிலைத்தென்றனும்
நெடுமாலிணைடிபரவும் நியமமுள்ளார்
குசங்குலுங்குந்தோழியர்கள் சதுநாய்க்கூடி
கோதையவள்மண்டபத்திற் குறுகினரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தனது கணவனைக்காணமல் அவனுடைய ரூப லாவணியங்களை நினைந்து நினைந்து ருக்குமிதேவி புலம்புகிற ஓசை கேட்டுத் தோழிப்பெண்கள் வருகிற விதங்காண்க.

நாதியர் வருகிற தரு-இ-ம்-புன்னாகவராளி ஏகதாளம்.

பல்லவி.

நாதியர்சனுதுடன் வந்தனரே - அபிரயன்சிலாக்ய
நாதியர்சனுதுடன் வந்தனரே

அநுபல்லவி.

நாதியர்சனுதுடன் வந்தனர் - பாதசரங்கள் சதங்கைகள்
நாதமும் சலிர் சலிர் சலிரென
நீதிருதகிடதணக்தோமெனத். (நாதி)

சரணங்கள்.

பூம்படலைகளுமலுங்கவுமே - பளிர் பளிர் பளீரென மின்னும்
தாம்வச்சிரவடங்கள் குலுங்கவுமே - கையில்
காம்பிடுவிடைகள் துவண்டிட
மாம்பின்னற்சடைகள் சுழன்றிட
தீம் திம்தில்லாநம்தரி
தகம் தாம்திக தகிடதணந்தோமென. (நாதி)

உ. மூர்க்கச்சரீரங்கள் மின்னவுமே - எழில்நவமணி யுடன்தங்க
சேக்கடர்நகைபளிசொன்னவுமே - மின்ன
வாக்குகள்மிருதுவுடன்பேசியே
சேர்க்குடன்கைகளைவிசியே
தாக்கிடதகடகதிகட
சேக்கிடதருதாமென. (நாதி)

௩. காந்தனைக்காணமெல்லுருவியுமே - பதறிச்சரீரச்சுடர்
தேயந்திடு ருக்குமிதேவியுமே - தினம்
வாழ்ந்திடுமண்டபத்துள்ளுறச்
சார்ந்துசவ்வாதுமணந்திட
நாந்திமித்ததிமிதிந்திமி
சேணுநிந்தக திமிதகதோமென. (நாதி)

போது விருத்தம்.

கொழுநனேகொழுநனென்று கூர்வதுகொழுநன்பாதம்
தொழுவதும்பிரலாபித்துச் சொல்வதுநயனம்சொண்டில்
ஒழுகுநீர்நிலத்திளோடே வுருக்குமிதாயேநீதான்
அழுவதின்வாலாறென்னென் றறிவையர்கேட்கின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரமாகத் தாதிமார்வந்து ருக்குமிதேவியைப் பார்த்துச் சொல்லுகிறமார்க்கம் எப்படியென்றால்.

தாதியர்-தரு-இ-ம்-புன்னாகவராளி-மட்டையதாளம்.

பல்லவி.

அழுதுபுலம்பிடும்விதஞ்சொல் ருக்குமிதாய்மானே - நீதான்
அனிருத்தமாராசனுக்கு சக்கரைப்பால்தேனே.

அநுபல்லவி.

முழுமதிபோலிருக்கும் முகமலரும்மிகவாடியுன்
மோகனங்கள்தன்னைப் பெருமூச்சிற்கொண்டாடி. (அழு)

சரணங்கள்.

௧. அழகுகுழல்சோர்ந்து தலைவெதும்பிநுதல்சுருங்கி
அனலிலிட்டமெழுகெனவே மனமுழுதும்உருகி
விழிகளிரண்டும்சோர்ந்து யிருநாசிமுகமும்சுருங்கி
வெளுத்ததராக்கனிகள்மங்கிக் கழுத்ததுவுங்குறுகி. (அழு)



உ. வட்டமுள்ள்தோள்கள்தனிந் திறஞ்செய்கைகள்சோர்ந்து
வாரிளரும்கும்பஸ்தன பாரமிரண்டும்வாட
ஒட்டியாணமிளகிவயி றடங்கத்தொடைநடுங்க
வுடலினகத்துயில்நழுவக் கொடியிடைதள்ளாட. (அழு)

௩. காதுக்குளேயெங்கள்வசன மொருநாவைசேர்க்காமல்
கால்களிரண்டும்சோர்ந்துஉள்ளங் கால்களிரண்டும்வெதும்ப
பாதங்களைநிதம்நினையா திருந்தவர்கள்மனம்போல்
பார்வைநமொழியுடல் வேர்வைமிகத்ததும்ப. (அழு)

௪. செம்மையுள்ளபஞ்சணையை நீங்கிவெறுந்தரையில்
சித்திரத்தைப்போலிருந்து ஒற்றைச்சம்மணங்கூட்டி
நம்மைமணஞ்செய்துகொண்டு நல்லெழில்சேர்பிராண
நாதனென்றேயடிக்கடி யவ்வேதனைபாராட்டி. (அழு)

௫. அதிகக்கடன்பட்டவர்போல் சேவலைத்தானிழந்த
அன்னத்தைப்போல்மனது நொந்துகன்னத்திற்கைதாங்கி
சதகமொருநான்குமுன் றிரண்டுசாஸ்திரமாம்
சாரங்களைத்தான்மறந் தொய்யாரமெலாநீங்கி. (அழு)

௬. அரவினங்கள்பசுவினங்கள் பாவைமிருகங்கள்
அனைவோரும்ஐயோவென்று மனமுருகவேதான்
இரவிமதிவிசும்புதரை இவர்கள்சிந்தைகலங்கி
இரண்டுகையுமோதிநுடிச் சிரசில்வைத்துநீதான். (அழு)

தாதியர் விருத்தம்.

இருகரமுந்தலையில்வைத்து ஐயோவென்று
ஏங்கியழுகின்றவிதம் இயம்புமம்மா

ருக்குமி விருத்தம்.

நறுமலர்சேர்பஞ்சணையி லிரண்டாஞ்சாமம்
நாதனுடன்தானணைந்து தூங்கும்போது
தரையிலெனையெடுத்துவைத்துக் கட்டிலோடே
தான்மறைந்தானெனைக்கொண்ட தலைவன்றானே
இரவியுதானுதிக்குஞ் சமயமாச்சு
இன்னம்வரக்காணேனினி யென்செய்வேனே.

தாதியர் வசனம்.

அகோவாருமம்மா ருக்குமிதேவி! நீர்தலையிலே கைவைத்து முகம்வாடி இப்படிப் புலம்புகிற காரணமென்ன சொல்லுமம்மா தாயே.

தர்க்கம் திபதை-இ-ம்-காம்போதி அடதாளம்.

கண்ணிகள்.

ருக்குமி.

திருமகள்பேத்திக்கும் சதிமருமகளுக்கும் பாங்கிமாரே - இப்போ
புருஷர்செய்மோசமோ பெண்கள்செய்மோசமோ பாங்கிமாரே.

பாங்கிகள்.

சாதவேள்சுதன்அதி சுந்தரனானதினாலே ருக்மிதேவி - இது
தெரிவையர்தான்செய்த தீங்குபோற்காணுது ருக்மிதேவி.

ருக்குமி.

கொத்தளங்கள்வளர்ந்த கோட்டைகள்தனைத்தாண்டிபாங்கிமாரே - அ
ந்திரமண்டபத்துள்ளே ஸ்திரீகளெப்படிவந்தார் பாங்கிமாரே. [னக

பாங்கிகள்.

சத்ராதிகளைமந்த்ர தந்த்ரத்தால்வெல்லலாம் ருக்மிதேவி - வித்தை
வித்யாரம்பத்தாலே விண்ணிற்பறக்கலாம் ருக்மிதேவி.

ருக்குமி.

இருவர்மெய்யொன்றாகஇணங்கிசித்திரைசெய்தோம் பாங்கிமாரே-எம்
இருவர்வேறாகவே எப்படிப்பிரித்தாரோ பாங்கிமாரே. [மை

பாங்கிகள்.

உருவேற்றும்மந்திரத்தா அடல்களனுங்காமல்ருக்மிதேவி-சண்டாய்ப்
பிரிவுசெய்தார்மந்த்ர பெலமுள்ளோர்க்கழிவுண்டோ ருக்மிதேவி.

ருக்குமி.

பெண்பாவம்யாருக்கும் பொல்லாதென்றெண்ணமல் பாங்கிமாரே-
மண்மீதெனையெடுத்து வைக்கக்காரணமென்ன பாங்கிமாரே.[மொனா

பாங்கிகள்.

உண்ணுஞ்சோற்றில் நஞ்சிட்டுயிர்கொல்லும்பாவிகள் ருக்மிதேவி - ம
பெண்பாவஞ்செய்திடப் பின்வாங்குவார்களோ ருக்மிதேவி. [ண்ணில்

ருக்குமி.

காக்கவேகையனுங்காமல் கனகக்கட்டிலேக்கையில் பாங்கிமாரே-சனுகா
வந்தியன்னதிராமல் எப்படிநடந்தாரோ பாங்கிமாரே. [ய்

பாங்கிகள்.

சாந்தகசுபனியர் நடத்தவித்தைகளெல்லாம் ருக்மிதேவி - விண்ணில்
சேர்ந்திப்பறக்கப்போன செய்கைபோற்காணுதே ருக்மிதேவி.

ருக்குமி.

மீனவியர்தாமென்றும் மகிழ்நரிவரென்றும் பாங்கிமாரே - தங்கள்
மனைகளிற்பதனமா வைத்துக்கொண்டிருப்பாரோ பாங்கிமாரே.



பாங்கிகள்.

அனுதினமிவரைநா மணைகுவோமென்றெண்ணி ருக்மிதேவி-இந்தக்
கனகமண்டபத்துக்குள் கனமாய்வைத்திருப்பார்கள் ருக்மிதேவி.

ருக்குமி.

வைபோகமாகவே மாளிகைக்கட்டிலின்மீது தாதிமாரே - இன்னும்
செய்ததிந்திரைதுரை தெளியாதிருப்பாரோ பாங்கிமாரே.

பாங்கிகள்.

தூக்கந்தெளிந்துதான் துரையுந்தன்காந்தனே ருக்மிதேவி - இப்போ
சிக்ரமெழுந்தெழில் சித்ரம்போலிருப்பார்கள் ருக்மிதேவி.

ருக்குமி.

தன்சொந்தமாளிகைதனிலுள்ளஜோடினை தாதிமாரே - தனையும்
என்னையுங்காணமல் எண்ணப்படுவாரோ பாங்கிமாரே.

பாங்கிகள்.

உன்னாசையூராசை யுற்றார்பெற்றாராசை ருக்மிதேவி - இவை
தன்னைமறந்திடத் தந்த்ரஞ்செய்வாரம்மா ருக்மிதேவி.

ருக்குமி.

மாதர்தன்வசனத்தால் மனதில்வருந்தாரோ தாதிமாரே - மாதர்
கூதானந்தனிலெந்தன் துரைசிக்கிக்கொள்வாரோ தாதிமாரே.

பாங்கிகள்.

மந்த்ரந்தன்னால்துரை மனதுக்கின்பந்தந்து ருக்மிதேவி - நல்ல
இந்த்ரபோகஞ்செய்ய எத்தனிப்பாரம்மா ருக்மிதேவி.

ருக்குமி.

அப்படியாகிலும் அணைந்தாசைதீர்த்தபின் தாதிமாரே - துரை
யெப்போதும்போலிங்கே கொண்டுவந்திடுவாரோ பாங்கிமாரே.

பாங்கிகள்.

கட்டழகனைத்தானே கவிழ்ந்துகொண்டேகினார் ருக்மிதேவி - சிரசு
வெட்டினும்சாமியை விடமாட்டாரொருபோதும் ருக்மிதேவி.

பொது விருத்தம்.

திருவழகினைக்காண்டோர்கள் சிவனேஇனும்விடாரென்
றரிவையருரைக்கக்கேட்டு அனலிடுமெழுகாய்ச்சிந்தை
உருகியேமுகமுஞ்சோர்ந்து உடலினைந்தையோவென்று
இருகரந்தலைமேற்றாக்கி யேந்திழைபுலம்புவாளே.

வசனம்.

அனிருத்த மகாராசனைத் திருடிக்கொண்டுபோனபெண்கள் பி

க்கினை செய்தாலும் அவனை விடமாட்டார்களென்று தாதிமார் சொல்லக்கேட்டு ருக்குமிதேவி பின்னும்புலம்பிச்சொல்கிற விருத்தாந்தம்.

நந்தமீ-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை ஏகதாளம்.

பல்லவி.

தையல்மாரேயினிநா னென்னசெய்குவேன் - என்
தலைவிதிக்குநானாரைவைகுவேன்.

அநுபல்லவி.

கைகாலெல்லாம் நடுநடுங்குதே - எந்தன்
காயமெல்லாம் வெடுவெடென்குதே - இடையில்
கட்டியமாந்தளிர்ப் - பட்டது கலையுது
மட்டலர்கூந்தலின் - மெட்டதுகுலையுது. (தைய)

சரணங்கள்.

௧. வாய்செத்தார்மேற்கொண்ட கோபமோ - சபை
வழக்கிலேதான்சொன்ன லோபமோ - நான்
தாய்வயிற்றிற்பிறந்த தோஷமோ - இந்த
தாணிதேவிக்கதிக பாபமோ - ஐயோ
சந்திரசீதளம் செந்தழலாகுது
எந்தன்கைகால்களின் சந்துகள்நோகுது. (தைய)

௨. அனகன்சேயன்தேவி யானனே - இப்போ
தவர்க்குப்பச்சைநாபி யானனே - பந்து
ஜனவிரோதங்கொள்பாவி யானனே - நல்ல
தர்மநாளஞ்செயாலோபி யானனே - மனம்
தயிரியமோடவே - பயமதுமீறுது
துயரதுசாரவே - யுயிர்தடுமாறுது. (தைய)

௩. அளிகளேதான்கீதங்கள் பாடுது - தென்ற
லானதுதானென்னேரம் நாடுது - குயில்
கிளிகளோசைவார்த்தை நீடுது - என்
கிட்டத்திற்பூங்கணைகள் சாடுது - நீண்ட
கேசநெகிழ்ந்துரை - பேசநடுங்குது
நாசியின்ரவு - சுவாசமொடுங்குது. (தைய)

பொது விருத்தம்.

இந்தவிதமுரைத்தழவே தாதிமார்கள்
இருநயனங்களுமெழுகுக் கிணையதாக
வெந்துருகியிளங்கிளிகள் மொழிகள்நாண
மேன்மைபெறுகுயிலினங்கள் மிகவுநாண
அந்நமதுகுலைந்துருகும் குழல்கள்சோர
அழுதனர்கள் அவ்வொலிக ளடங்கமேலாய்ச்
சந்திரமுகநுந்துரியாளர்ற்றுமோசை
தனையறிந்துமதனரதி தான்வந்தாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் தாதிமார்களும் அதிக வியாகூலத்தோடு உள்ளங்கலங்கிப் பிரலாபிக்க அவ்வோசையைக்கேட்டு ரதிதேவியானவள் வருகிறது எப்படியென்றால்.

இரதிதேவி வருகிற தரு-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

மாதர்கள்திலகி ரதிமாது வந்தாளே - எழில்
மதனராசேந்த்ரன் பெண்சாதிவந்தாளே.

அநுபல்லவி.

தாதுவையடக்கிக்காம தானு மேகவே - அரிய
தவயோகஞ்செய்வோர்களுக்குத் தாதுண்டாகவே (மாத)

சரணங்கள்.

௧. காதினிற்சொர்னத்தோடுகள் காந்திமின்னவே - அதில்
கனகரத்னத்தொங்க லொன்றோடொன்று பின்னவே (மாத)

௨. சந்திரமுகக்காந்தி தளதள வென்னவே - வாயில்
தந்தங்களில்செங்காந்தி பளபள வென்னவே (மாத)

௩. முத்தணிப்பதக்கங்கள் முழங்கி யாடவே - எழில்
மோகனமாலைஜநன்மாலை யுடன்பின்னல் போடவே (மாத)

௪. சொர்ணச்சரிகைச்சேலையது நெருநெ கென்னவே - நுதலில்
தூயரத்னத்திலகக்காந்தி தகதகென்னவே (மாத)

௫. கொழுந்துடன்பூவாரந்தான் குமுகுமென்னவே - நல்ல
குளிர்ந்தகந்தம்பன்னீர்வாசங்கூடி கமகமென்னவே (மாத)

௬. நீள்கையில்பொன்னின்வளை கலகலென்னவே - இரண்டு
தாள்களிற்சிலம்புதண்டை சலசலென்னவே (மாத)

௭. மன்மதராஜேந்திரன் றன்புகழ்கொண்டாடியே - தன்
மருமகள்ருக்குமி வாழும்மனைதேடியே. (மாத)

வேறு-தரு-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

வந்தாள்அபிநயவுல்லாசதிவ்யலாயகி - எழில்
மதனராசேந்திரன்றன்பிராணநாயகி

அநுபல்லவி.

சந்த்ரமுககாந்திதளதளென்ன
தளர்கைப்ளபளென்ன
செந்தூரரத்னத் திலகம்ப்ளபளென்ன
திந்திமிசெணுத செக்கிணத்தோமென. (வந்தா)

சரணங்கள்.

௧. வச்ரப்புலாக்கின்முத்து அலைந்தாடவே - சுடர்
மணமுதான்கூந்தலைக் கண்டுகலைந்தோடவே - தன்க்
கிச்சையாங்கலவைபூசி
யிந்த்ராணிமெழிலையேசி
உச்சிதவார்த்தைகள் ஒயிலுடன்பேசியே
தச்செணுதத்திமி ததிங்கணத்தோமென. (வந்தா)

௨. காதலீலாவிநோத துரைசாணி - நற்
சொகுசுகல்ரூபத்திற் கெசமாணி - நல்ல
குருவில்லாதொழில்கைப்பற்றாள்
கொக்கோகசாஸ்திரம்கற்றாள்
பரிவினுமுத்தம் துரைதனைப்பெற்றாள்
தரிகதத்ததிமி ததிங்கிணதோமென. (வந்தா)

௩. ததின்னுதின வெனப்பாதங்கள் சரிந்திடவே - அவற்றில்
தண்டைசிதங்கை சிலம்போசை இரைந்திடவே - எழில்
மதனுக்கேற்குமொய்யாரி
மதனுக்கேற்கும்சிங்காரி
மதனனுக்கிசைந்திடு வடிவுளபாரியே
ததிமிதிந்திமிஜெணு ததிங்கிணத்தோமென (வந்தா)

௪. தல்லரம்கெஞ்சங்களெல்லாங் கரைந்திடவே - சுகனம்
காமலாகிரிதரனே சிறந்திடவே - நதி
யெல்லாப்பணியும்பூட்டி
எச்சாணமலரைச்சூட்டி
செல்வத்துடனே சிமிட்டிக்கண்ணோட்டி
தில்லானாத்திரிதிமி ஜெணுதாவென. (வந்தா)

௫. அன்னந்தான்நடையைக் கண்டு ஆசித்திடவே - சுகனம்
மின்னற்கொடியிடையைக் கண்டுவெட்கப்படவே - வெகு
சன்னபின்னற்சடையதுங்க
ஸ்தனபாரங்கள்குலுங்க



சொர்ணச்சரிகைத்தாயில் தகதகென்றிலங்கவே
தின்னாக்தக்கிடதிமி சேக்கணதோமென. (வந்த)

பொதுவிருத்தம்.

மையல்கொள்மலர்ப் பகழியெய்யுமாரன்
மனைவிரதிருக்குமி மாளிகைக்குள்வந்து
மையலர்களழுது புலம்புவதுங்கண்டு
தார்குழல்ரதிக்குமி சோர்ந்துதரையில்வீழ்ந்து
மைசிரசிற்ரதிக்கி யெந்தன்விதியேயென்று
கண்கள்தனைப்பிசைந்தழுத கலக்கங்கண்டு
அய்யய்யோமருமகளே கவர்கள்சோர
அழுதிடுவதேதெனவே புலம்பினாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ரதிதேவியானவள் வந்துபார்த்துத் தன்மருமகள் ஊரும் தோழிமார்களும் புலம்புவதைக்கண்டு சொல்லுகிற விருத்தங்கள்.

ரதிதேவி கேர்ச்சகம்.

மாதர்கள்சிரோமணியே மாங்குயிலேபூங்கிளியே
தேகவுயாக்கனியே தெள்ளமுதேசர்க்கரையே
வேதநிலைவதுமாற மெய்சோர்ந்து நீயழுதிக்
கோதகந்நான்யாதோ சொல்லுமெந்தன்மருமகளே.

அருந்தவத்தாலேபிறந்த அருமைமைந்தன்காமசே
விருந்தருந்தொண்ணுமலெந்த வேதனைவந்தாலதற்கும்
மருந்தநிக்கும்பிரியாற்று மாமனுமாமன்றதப்பன்
இருந்திடவும்வேறேயுனக் கென்னவென்னமருமகளே.

கனகமொப்பமெய்ச்சகிமார் [illegible] தான்விட்டழவே
பனதமிருகம்பாவை பதுமை[illegible]ழவே
மினலிடையிற்றானணிந்த மேகலை[illegible]ழுதும்
நலையவிப்போரியழவும் ஏய்மெல்லமருமகளே.

விட்டைக்கட்டிமுத்திரிந்து வெளிப்புறத்தேதிமுழக்க
விட்டிலுள்ளபேர்கள்மனம் வெருவினதுபோலுன்னுடல்
சேட்டைகெட்டிறங்கருந்து சிக்கநதடியாதிமுக
வாட்டங்கொண்டவாறுயாதப்பா அரகாவென்மருமகளே.

## ருக்குமி-திபதை-இ-ம்-காம்போதி ஏகதாளம்.

### கண்ணிகள்.

க. என்னவென்றுசொல்வேனம்மா — ரதிமாமியே - மனது
எண்ணுமெல்லாமெண்ணுதம்மா — ரதிமாமியே.
பெண்ணென்றேநான்பிறந்து — ரதிமாமியே - மெத்தப்
பேதமைக்காளானேனம்மா — ரதிமாமியே.

உ. மாருததுயரம்வந்து — ரதிமாமியே - எந்தன்
மனமெல்லாம்நிறைந்ததம்மா — ரதிமாமியே
தீராததுயரம்வந்து — ரதிமாமியே - எந்தன்
ஜன்மமெல்லாம்நிறைந்ததம்மா — ரதிமாமியே.

௩. சுகந்துக்கமிரண்டுந்தானே — ரதிமாமியே - நிறுத்தால்
துக்கஞ்சமந்தானேயென்று — ரதிமாமியே
மிகவேதசாஸ்திரங்களில் — ரதிமாமியே - நன்றாய்
விளம்பினதும்பார்த்ததுண்டு — ரதிமாமியே.

௪. துக்கந்துயரந்தானே — ரதிமாமியே - நன்றாய்
தோணுதேயென்சிந்தைக்கிப்போ — ரதிமாமியே
துக்கந்தானென்னசெய்யும் — ரதிமாமியே - கொடிய
தோதகத்தைச்செய்யுமம்மா — ரதிமாமியே.

ரு. தலையும்வலிக்குதம்மா — ரதிமாமியே - மீரக்
குலையும்வலிக்குதம்மா — ரதிமாமியே
கலையுங்கனக்குதம்மா — ரதிமாமியே - தேக
கனமிலங்குறைந்ததம்மா — ரதிமாமியே.

௬. உடைமைகனக்குதம்மா — ரதிமாமியே - எந்தன்
உடம்பெல்லாம்நோகுதம்மா — ரதிமாமியே
இடையும்வலிக்குதம்மா — ரதிமாமியே - எந்தன்
இருதுடையும்நோகுதம்மா — ரதிமாமியே.

௭. முகமுஞ்சோருகுதம்மா — ரதிமாமியே - முகத்தில்
முத்துமுத்தாய்வேர்க்குதம்மா — ரதிமாமியே
அங்கங்கலங்குதம்மா — ரதிமாமியே - ரொம்ப
ஆயாசங்காணுதம்மா — ரதிமாமியே.

௮. பேசவுங்கூடிலையம்மா — ரதிமாமியே - ஆவி
பெருமூச்சுக்கொள்ளுதம்மா — ரதிமாமியே



நாசகாலிதன்துக்கத்தை — ரதிமாமியே - அயன்
நமக்கெனவேபிறப்பித்தானோ — ரதிமாமியே.

௯. முந்திவந்ததுக்கமெல்லாம் — ரதிமாமியே - முள்ளின்
முனையளவாய்த்தோணுதம்மா — ரதிமாமியே
இந்தத்துக்கத்தைப்போலே — ரதிமாமியே - நானே
யெந்நாளுங்கண்டதில்லை — ரதிமாமியே.

க0. மலையைநம்பினபேர்க்கு — ரதிமாமியே - விசனம்
மயக்கமில்லையென்றவார்த்தை — ரதிமாமியே
நிலையில்லாவார்த்தையென்று — ரதிமாமியே - யெந்தன்
நினைவுக்குத்தோணுதிப்போ — ரதிமாமியே.

கக. தொடுப்பற்றுப்போறவேளை — ரதிமாமியே
தொடர்ந்ததானலைக்குதம்மா — ரதிமாமியே
அடுப்புந்திபுப்பகைத்தால் — ரதிமாமியே - அணிக்க
அகத்திலிருக்கலாமோ — ரதிமாமியே.

கஉ. இன்றுன்னைமாய்ப்போனென்று — ரதிமாமியே - துயரம்
செய்திடும்எமவாதனை — ரதிமாமியே
என்னென்றுசொல்வேனம்மா — ரதிமாமியே - இனிநா
னெப்படிப்பிழைப்பேனம்மா — ரதிமாமியே.

க௩. இத்தனைதுக்கஞ்சமந்து — ரதிமாமியே - உயிர்
இருப்பதுவும்பிரயாசம் — ரதிமாமியே
மெத்தமெத்தவார்த்தையென்ன — ரதிமாமியே - உயிர்
விடுவதுவேநிச்சயந்தான் — ரதிமாமியே.

### ரதி விருத்தம்.

ஒயிலுறற்குணந்தான்பெற்ற வுருக்குமிமாதேகேளாய்
செயமுடன்சகலமான செல்வங்களிருக்கும்போது
உயிருந்தான்மாய்க்குமாறு ஒருங்காலுநினைக்கொணாது
துயரந்தானின்னதென்று துலக்கமாயுரைத்திடாயே.

### வசனம்.

அதோகேளம்மா ருக்மிதேவியே! உனக்குஒன்றுகொன்று குறைவில்லாதபடி யெல்லாப்பாக்கியங்களும் நிறைந்திருக்கும்போது இப்படி உயிரை மாய்த்துக்கொள்ள நினைப்பதென்ன அப்படிநேரிட்ட துயரத்தைத் தெரியச்சொல்லம்மா மருமகளே.

ருக்மி லாவணி-தரு.

௩. சோதைபாலன்விண்டு ஆதிமுகுந்தகிருஷ்ணசாமி - தன்
சுதனுமாகிவளர் மதனராசன்கொண்ட
காமி எந்தன் மாமி.
மாதெென் துயர்முகுந்தன் காதல்கேட்கஇப்போது - க்ஷணம்
மடக்கிப்பிடித்துஉன்னை அடக்கிஒடுக்கியும் வி
டாது கெடாது.

௪. நேர்த்திக்குலைந்துஅபகீர்த்திக்கிசைந்த கன்னிநானே - நல்ல
நேசங்குலைந்துமிகு வாசங்கலைந்துமல
ரானேன் மோசம் போனேன்.
சோற்றிலெடுத்தசுவர் காற்றுவிலகினர்சாயும் - அப்போ
குறுநோய்துயரம் வாறுஞ்செல்வசுகம்
தேயும் அது மாயும்.

௫. பெற்றநோம்ஜன்மித்த நோம்கெட்டநோம் - நான்
பெண்ணதானதிந்த மண்ணினுக்கும்மிகப்
பாரம் அதி கோரம்.
குற்றமாகவுயிரற்ற பிணந்தூக்கெனனகூட - பெள்று
கூறலாமெனக்கு ஆரும்பகையுறவு
காடே பகை வீடே.

௬. கூடிவாழ்பவரைக் கூடொணமற்பிரித்தேனே - தர்மம்
கொடுக்கும்பேர்கள்தனை தடுக்கமனதிற்குறித்
தேனே மறித் தேனே.
காடிக்குன்டுணிகள்பாடிக் குடியைக்கெடுத்தேனே - வந்து
நம்புமேழைகளை வம்பிற்சிக்கவிடுத்
தேனே அடித் தேனே.

௭. கடுந்தகொலைகள்செய்தல் தொடர்ந்துகண்ணிற்பார்த்தேனே-
கதைக்கப்பிராணிகளைப் பதைக்கப்பதைக்கமாய்த் [துள்ளித்
தேனே தீய்ந் தேனே.
தடங்கள்சத்திரங்கள் மடங்கள்முடங்கஅழித்தேனே - பெற்ற
தந்தைதாய்குருவின் சிந்தைநோகப்பழித்
தேனே களித் தேனே.

௮. கேட்டுவாங்கிச்சோறு போட்டுக்கொண்டுதுரத்தேனே - கண்
கெடுதிஅகதிகள் முடமும்மலடையிகழ்ந்
தேனே மகிழ்ந் தேனே.



போட்டிசெய்யும்வழக்கைக் கூடியோரம்விண்டேனே - மிக
போற்றியுடைமைக்கொர்தன் கருத்திலாசைகொண்
டேனே வுண் டேனே.

௯. வாகில்லாமலதி துரோகஞ் செய்தஎன்தேகம் - மண்ணில்
மறைந்துபோகநலம் இருந்துமன்னுயிர
போகம் வெகு சோகம்.
மேகவர்ணமெனஆகம் படைத்தகிருஷ்ணசாமி - அறிய
விளக்கமாகச்சொல்வன் பிழைப்பதில்லைநான்
மாமி மதன் காமி.

வசனம்.

ஆகாகேளுமம்மா ரதிதேவியே! என்னுடைய துக்கத்தை உன்னுடனே சொன்னால் நீயும் அதிகசோபதாகத்துக் குள்ளாகுவாய். நான்முந்தினஜென்மத்தில் அதிகபாவஞ் செய்தவளாகையால், இன்னோம் இந்தத் துயரத்தை அநுபவித்திருக்கிறேன். இனி அரைநாழிகையும் பிராணனை வைத்திருக்க மாட்டேனம்மா ரதிதேவியே.

ரதிதேவிசொல் விருத்தம்.

என்செல்வமுனதுசெல்வ மென்துக்கமுனதுதுக்கம்
உன்செல்வமெனதுசெல்வ முன்துக்கமெனதுதுக்கம்
உந்தனுயிர்போம்போதென் வல்லுயிர்கூடப்போக
அஞ்சிடாதாகையாலுன் னுபாசமுரைத்திடாயே.

வசனம்.

அகோகேளும் ருக்மிதேவியே! என்சுகமெல்லாம் உனதுசுகமே, என்துக்கமெல்லாம் உனதுதுக்கமே, நீபிராணனைவிட்டு விடுவதானால் அதுக்குமுன்னமே என்பிராணனை விட்டுவிடுவேன், ஆகையால் நீஉனக்குநேர்ந்த துயரமெல்லாம் விபரமாய்ச்சொல்லுமம்மா மருமகளே.

ருக்குமிதேவிசொல்-திபதை-இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

உற்றகாரியந்தன்னை ஒளியாமற்சொல்கிறேன் மாமியே - நீதான்
உண்மையாய்க்கேட்டிடு மென்மாமன்மன்மதன் காமியே.

அந்தைபோதத்தினிலென் னைசநாயகன் காமலோலனே - விண்
ணமரசெல்லாம்மெச்சும் அழகில்மிஞ்சினவுந்தன் பாலனே.

வெறுத்தைக்கட்டிவிசீது மின்னஞ்சிரோமே படுத்திட்டார் - நித்திரை
பொறுக்கமாட்டாமலே பிணமிக்கைசிக்கதயிற் கொடுத்திட்டார்.

வாஇசித்திராதேவி மாதென்மேற்சினங்கொண்டிவையவே - யானுஞ்
சாந்துகலவையாலே சைலமாய்க்கைகபாகஞ் செய்யவே.

தூக்கந்தெளிந்துதான் அருகுடனெழுந்தாரென் சாமியே - முகத்தை
பார்க்களனக்குப் பயமாயிருந்துதே மாமியே.

பாங்கில்லாமாலையிற் பாவியுஞ்சயனிக்க மாட்டேனே - மாலை
தூங்கினதேதென்று துரைமுகநோக்கினன் கேட்டேனே.

என்னைப்புகழ்ந்து இருகண்ணாலென்முகம் நோக்கியே - காந்தன்
றன்னிடமணிமார்பில் சாந்தமதாயென்னைத் தாக்கியே.

நித்திரைசெய்ததில் நிந்தனையில்லையென்று மாமியே - நல்ல
சத்தமிருதுவசனம் சொன்னரேகனிவாயால் சாமியே.

வலதுகண் துடிக்குது வலதுதோள் துடிக்குது சாமியே - என்று
புலவிதமாகவே புல்லிகள்சொல்லிச்சென் மாமியே.

அதினாலேவேறொரு ஆயாசமில்லையென்று கூறினர் - பின்
எதுவந்தாலுமுகுந்தன் இருபாதந்துணையென்று கூறினர்.

அறுசுவைகளைத்தானே அன்புடனிருபேரும் அருந்தினோம் - பின்
விருவரும்முத்தாடி யேகபோகஞ்செய்யப் பொருந்தினோம்.

இரணியகட்டில்மே லிறைவனுடன்கூடிப் படுத்திட்டேன் - நல்ல
சிருணயமாகவே நித்திரைக்கென்சிந்தை கொடுத்திட்டேன்.

சூரியனுதிக்கவும் ஆரம்பமாகிய நேரமே - ஆக
கேவிழைநான்றனே நீங்கினேன்நித்திரைப் பாரமே.

கூர்ந்தகண்கள்திறந்து கோதைநானெழுந்து வுட்கார்ந்தனே - என்
காந்தனுங்கட்டிலுங் காணமலிருக்க வேமாந்தனே.

என்னகாரணமென்று யெண்ணாதெல்லாமனதி லெண்ணினேன் - தை
பன்னிப்பிசைந்து பலபலயோசனை பண்ணினேன்.

சொந்தமாயென்சிந்தை சோதிக்கவேயந்தன் சாமியே - செய்த
இந்திரசாலமென்றே யெண்ணிக்கொண்டேனந்தன் மாமியே.

துரையேவாவாவென்று தொழுதுதொழுதுகொஞ்சி அழைத்திட்டேன் - பின்
துரையும்வாராததால்ஸ்மானைகெட்டேதேகங்களைத்திட்டேன்.

அனையவாவாவென்று அதிவிதமுடன்பின்னும் தொழுதனே - எந்தன்
னைவன்வாராததால் கதறிக்கண்ணீர்விட்டு அழுதேனே.



அந்தச்சத்தங்கேட்டு அட்சணந்தாதிமார் வந்திட்டார் - கொழுங்
கொம்பலைநல்லோலென் கோலங்கண்டேமனம் நைந்திட்டார்.

ஆயாசந்தான்தீர ஆலவட்டங்களை ஆட்டினர் - எங்கள்
தாயேநீயழுகின்ற தவுதாயஞ்சொல்லென்று கேட்டனர். [யா

தாதிமாரோடேயென் தவுதாயங்களையெல்லா முரைத்திட்டேன் - து
வாதையால்சகமெல்லாம் மணல்போலவிண்ணுக்கு இறைத்திட்டேன்.

இஷ்டமுள்ளதுரை யெழிலைநன்றாகவே கண்டுதான் - யாரோ
கட்டிலுடனெடுத்துக் கடுக்கஇருளிற்கொள்ளை கொண்டுதான்.

ஏகிமறைந்தாரென் றெங்களிருதயம் எண்ணுதே - பின்னும்
சோகத்துக்கேதுவாந் துக்கந்தானெங்களைச் சன்னுதே.

தாதிமாரிப்படிச்சாற்ற வயிறுபகீரென்னுதே - பிராண
நாதனைக்காணமற் பாதியாயிசுயிப்போ சென்றுதே.

ஈரேழுலகத்தில் எங்கிருப்பாரோ வென்சாமியே - சென்னக
ளார்கொண்டுபோனரென் றறிவதுமெப்படி மாமியே.

மினுக்கமெலாநீங்கி விசனவெள்ளந்தானே பெருகுதே - துன்ரைய
நினைக்கநினைக்கத்தானே நெஞ்சமெல்லாம்புண்ணா யுருகுதே.

இதுசல்லவேளையென் றிந்துவுமெரிபோலச் சாடுதே - கிளிகள்
எதிர்வந்துசுழன்றாடி யிடைவிடாமற்கீதம் பாடுதே.

பொதிகைமலைத்தென்றல் போகமென்மேலாகச்சாயுதே - மாமன்
மதனாரசேந்திரன் மலர்க்கணைகளும்வந்துபாயுதே.

கொஞ்சத்தனங்கொண்டு குயில்களிடைவிடாமற் கூவுதே - நல்ல
பஞ்சவன்னக்கிளிகள் பயிலுடன்வார்த்தைநக ளேவுதே.

பழிகாரன்முன்பாயென் பத்தாவைக்காணமல் மாமியே - நான்
இளமைவயதுமாது எப்படிப்பிழைப்பேனோ சாமியே.

போது விருத்தம்.

களிதுள்ளோனுனதருமைப் பாலன்றன்னைக்
காணமென்றவசனமன்றக் காதிற்கேட்டு
குளிமுலைருக்குமிதரையில் வீழ்ந்துசோகம்
கொண்டதுவும்பாராமல் குழல்தான்சோர
தவமதனாற்பிறந்ததிரு மகனேயென்று
தலைமிசையிலிருகரமுந் தாங்கிமோதி
புவிதனில்வேரற்றமலர்ச் செடிபோல்வீழ்ந்து
பு[illegible]மிகமதனரதி புலம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ரதிதேவியானவள் மகனை நினைந்து புலம்புகிற விதங்காண்க.

இரதிபுலம்பல்-தரு ௫-ம்-மோகனம்-ஏகதாளம்.

பல்லவி.

எங்கேதான்மறைந்தாயடா - என்வயிற்றில்மகனே
இதுக்கோநீபிறந்தாயடா.

அநுபல்லவி.

அங்கசன்குலக்கொழுந்தே - யெந்தனைப்பெற்ற
ஐயனேநீதானெழுந்தே - எழில்
மங்கையர்புகழுமுத்தன் வடிவஞ்செல்வமுங்கொண்டு
சிங்காரம்பொருந்துருக்மி தேவிதன்னையும்விண்டு (எங்கே)

௧. கொங்கைநகள்விம்முதடா - பிராணன்றனுடல்மேல்
கோபங்கொண்டமருதடா - தாங்கியேபெற்ற
திருவயிர்குமுறுதடா - எழில்
அங்கசனுன்றகப்பன் அவருடனுஞ்சொல்லாமல்
பங்கையபூங்கண்ணனெனும்
பாட்டனுடனுஞ்சொல்லாமல். (எங்கே)

௨. பிராணன்நீதேகமும்நீயே - என்மகனேஎங்கள்
பேர்சொல்லும் - புதல்வனும்நீயே
குறைவில்லாச்செல்வமும்நீயே - ருக்குமிதேவியை
கூடிரட்சிப்பவன்நீயே ஆகையால்பின்னும்
ஒருமகன்மகனல்ல ஒருவன்சபைதாநல்ல
ஒருமரக்தோப்பல்ல வுலகமிப்படிச்சொல்ல. (எங்கே)

௩. புத்திதான்தடுமாறுதே - வெய்யலில்வைத்த
பூப்போலுடல்சோருதே - ஐயோமிகப்
புத்திரசோபம்மீறுதே - உடலைவிட்டாவி
போகுதென்றுண்மைகூறுதே ஆகையால்நானே
பெற்றதாய்நானேபாவி பிள்ளைமலடிமேல்நேசம்
வைத்தேபிராணனைமாய்க்க வந்தால்வெகுவிசேஷம் (எங்)

இரதி விருத்தம்.

அப்பனேமகனேயெந்தன் னழகுகண்மணியேபிரம்மன்
தப்பில்லாதேசிர்ஷ்டித்த சந்திரக்குன்றேயித்தரன்
ஒப்பிலாக்குணமுமாண்மை யுயிருமென்கணிற்காணாமல்
எப்படிமனதுதேர்வேன் எவ்விடம்பிழைப்பேனையா!



வசனம்.

அப்பாமகனே! என்கண்மணியே! உன்னைக்காணாமல் இனியெப்படி நான்பிழைப்பேனடா.

இரதிபுலம்பல்-திபதை-௬-ம்-காம்போதி-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. அப்பனேயென்றுயிரேவுன் னழகைக்கண்ணிற்காணாமல்
எப்படிநான்பிழைப்பேன்மகனே - மகனே.

௨. இந்திராணிபோலிருக்கும் எழில்ருக்குமிதேவிதன்னை
எந்தவிதம்நீமறந்தாய்மகனே - மகனே.

௩. ஜகன்மோகனமான திருவழகைக்காணுதால்
நகரெழிலும்போச்சுதையாமகனே - மகனே.

௪. புத்திரனேநீயொருவன் போய்மறைந்துக்கொண்டதில்
எத்தனைபேர்கள்தவிப்பார்கள்மகனே - மகனே.

௫. தேவகியுனைக்காணேனென்ற சேதிதனைக்காதிற்கேட்டால்
சீவனைசனுந்தாய்விடுவாள்மகனே - மகனே.

௬. என்மாமியுனதுபாட்டி யெழில்ருக்மணியம்மனுக்கு
அன்புள்ளபேரன்நீயேமகனே - மகனே.

௭. திருவார்இன்னுமெழுபேர் சிறஞ்சீவிப்பாட்டிமார்க்கும்
அருமைபேரனும்நீயேமகனே - மகனே.

௮. பதினாயிரங்கோபஸ்திரீ பாட்டிமார்செல்வத்துக்கும்
இதமானபேரன்நீயேமகனே - மகனே.

௯. நளினமலர்க்கண்ணனும் நாரணன்சிந்தைக்கேற்கும்
அழகுள்ளபேரன்நீயேமகனே - மகனே.

௧௦. கைகொடுத்தெந்தனைக்கொண்ட கன்னல்வில்மாரனுக்கும்
உயிரும்நீசுதனும்நீயேமகனே - மகனே.

௧௧. மலடியென்றேதும்பழி வருகாமலென்வயிற்றில்
சிலைபோலேநீபிறந்தாய்மகனே - மகனே.

௧௨. ஈயிரண்டுமாதமுன்னை அன்பாய்ச்சுமந்துபெற்ற
வயிறுங்குமுறுதையாமகனே - மகனே.

௧௩. ஓயாமலேவுனது உடம்பெல்லாம்முத்தமிட்ட
வாயும்பதறுதையாமகனே - மகனே.

௧௪. ஆசையுடனேயுனது அழகுள்ளஉச்சிமோந்த
நாசிமயங்குதையாமகனே - மகனே.

௧௫. நகைசெய்துகொஞ்சியுந்தன் நகைமுகந்தன்னிற் சேர்ந்த
முகந்தானேவாடுதையாமகனே - மகனே.

௧௬. அங்கையாலேந்தியுனக் கமுதுதினங்கொடுத்த
கொங்கைகள்வாடுதையாமகனே - மகனே.

௧௭. கொஞ்சிக்குலாவித்தவழுங் குழந்தையினுன்னையணைத்த
நெஞ்சந்தளருதய்யாமகனே - மகனே.

௧௮. ஐயாஅப்பாவென்றுன்னை யழைத்துத்தாவியெடுத்த
கைகளுருகுதையாமகனே - மகனே.

௧௯. இங்கிதமகனேநீ யேறிவிளையாடின
அங்கந்தளருதய்யாமகனே - மகனே.

௨0. பெற்றும்பெறுதபாவி பெரும்பாவியிவளென்று
உற்றார்பெற்றார்சொல்வாரோமகனே - மகனே.

௨௧. அப்பனேயுன்னறிவை யழகையுந்தான்மறந்து
எப்படிநான்பிழைப்பேன்மகனே - மகனே.

௨௨. உற்றாரென்றுலகாரென் றுன்னைக்காணமல்வே
ற்றற்றுடானேனேன்மகனே - மகனே.

௨௩. தெய்வச்சகாயமில்லா தேசாந்திரிபோலானேனே
ஐயோயினியென்செய்வேன்மகனே - மகனே.

பொது விருத்தம்.

வேள்மனைவியிந்தவிதம் புலம்பிச்சோர்ந்து
மேதினியிற்சித்திரம்போ லிற்கும்போது
யாழ்க்காத்தாள்ருக்மிசோ பிதத்திறனோடே
அத்தைரதிமதிமுகத்தை யாய்ந்துபார்த்து
தாள்களின்மேற்றோகைமயில் போலேவிழுந்து
சாற்றுவாள்புருஷனைக் காணமல்வினில்
வாழ்கவுயிர்வைத்திருக்க மாட்டேனென்று
வாடுவாள்தன்துயரம் பாடுவாளே.



வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்மிதேவியானவள் தனது மாமியாகிய ரதிதேவியைப்பார்த்து அத்தே! இனி நான் என் காந்தனைக்காணமல் எனது பிராணனை வைத்திருக்க மாட்டேனென்று பின்னும் புலம்பிச் சொல்லுகிறவிதங்காண்க.

ருக்மி லாவணி-தரு.

௧. பத்தமானவெந்தன்அத்தை மாமியென்னும் ரதியே - மிகு
பணிந்துன்சுதனெழிலை நினைந்துகலங்குமெந்தன்
மதியே - எந்தன் - விதியே.

மெத்தமெத்தச்சுகவித்தைதருந் சுகபோக்கியம் - அந்த
வித்தைநச்சுகத்துக்கிணை எந்தன்சுவாமிசுகம்
யோக்யம் - நல்ல - பாக்யம்.

௨. அந்தச்சுகம்விலக வந்துவினைத்திடுங்கிலேசம் - தன்னை
அகத்தைவிட்டுமெள்ள நகர்த்துவதுபிர
யாசம் - வெகு - மோசம்.

எந்தநாளைக்குந்தன்மைந்தன்திருமுகத்தைப்பார்ப்பேன்-பார்த்து
திலங்குமதிமுகத்தில் துலங்குமெந்தன்முகம்
சேர்ப்பேன் - சுகம் - ஏற்பேன்.

௩. அனுமும்அதிரசங்கள் நினைவில்நினைக்கவிஷமாச்சே - என்
ஆவிபதறிவாய் நாவுமீரம்வற்றிப்
போச்சே - பெரு - மூச்சே.

இனம்பிரிந்தமானெனவே நினைவுதானேங்குது - அய
ரேகமாய்ப்படர்ந்து தேகஞ்சுரணைகெட்டு
சோங்குது - கவை - யோங்குது.

௪. ரதியுன்மைந்தனுக்குச் சதியுமாகநான்பூர்ந்தேன் - வெகு
ராசராசர்புகழ் ராசராசர்மெச்ச
வாழ்ந்தேன் - கூணந் - தாழ்ந்தேன்.

விதியைவெல்வதற்கு மதிதன்னாலுமாகாதே - என்னை
வேண்டிவந்ததுயர் தீண்டிடாமற்போ
காது - ஆ - காது.

௫. நண்ணித்தவித்தவர்க்குத் தண்ணீர்தானுங்கொடாலோபீ-கொ
நாதனுக்கத விரோதமானபச்சை [ண்ட
நாவீ - நான் - பாவீ.
பெண்ணுக்கழகுபதி கண்ணுக்கழகுமைதானே - என்ற
பேச்சினுக்குமெனக்கும் வாச்சுததிகபகை
மானே - மெய் - தானே.

௬. கெடுதிவிசனந்தன்னை வடிவில்மதனனறியானோ - எழில்
கிருஷ்ணதேவனிந்த நஷ்டந்தன்னையறி
யானோ - தெரி-யானோ.
சடுதிதனிலென்துயர் விடியுமென்றயெண்ணமய்யோ - இலெ
சடலநீங்கியுயிர் கடந்துபோகுமிது
பொய்யோ - ஐ - யய்யோ.

௭. வானைநாட்டியதில் விழ்ந்துசாவதுவிசேஷம் - உயிர்
வைத்திருப்பதனிற் பத்தினிக்கதிக
தோஷம் - வெகு - நாசம்.
ஏழையாயதிக வேளைவந்ததிந்தவேளை - உயி
ரேகமட்டும்பொறுக்குந் துரோகியெனதுமனம்
கோழை - வெகு - பாழை.

௮. ஓங்கிமறநெறியைத் தாங்கிவளருந்தர்மசாஸ்த்ரம் - சொல்லு
முயிரைமடிப்பவர்க்குத் துயரமானதனு
மாத்ரம் - இது - சூத்ரம்.
பாங்குமுடல்வலுவுநீங்கலாச்சுமேதேவி - கண்டு
பதுங்கலாச்சுதிப்ப ஒதுங்கலாச்சுசீ
தேவி - நான் - பாவி.

பொது விருத்தம்.

இலகுகிளிமொழிரதி பாதத்தில்விழ்ந்து
இந்தவிதஞ்சொல்லிமனந் தேங்கித்தேங்கி
அலகைகளுமன்திளகக் கொலைபாவத்துக்
கஞ்சாதமூடர்களு மாவிசோர
சலிகையுள்ளபேத்தி யுருக்குமியுமங்கந்
தான்பதறியழுதிடு மச்சத்தங்கேட்டு
உலகளந்தமால்பதத்தை மனதில்நன்று
யூன்றினள்ருக்மணியுக் தோன்றினளே.



வசனம்.

இந்தப்பிரகாரம் மாமியான ரதிதேவி பாதத்திலே ருக்மிதேவி யானவள் விழ்ந்து பிரலாபித்துக்கொண் டிருக்கிறபோது, அந்தச் சத்தங்கேட்டு சாக்ஷாத் உலகமாதாவாகிய ருக்குமணி யம்மன் வருகிற விருத்தாந்தம்.

ருக்குமணி தாயார் வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

வந்தாளேருக்மணியம்மன் வனசமாமெனவே - கை

அநுபல்லவி.

தந்தாளேஅச்சுதனுங்கொயில் மனைவிநானெனவே - நிதி
மிகுந்தாளே அரிதுளகவினை
சிறந்தாளே சகலகலைகளை
யுணர்ந்தாளே அரியருள்செயலி
லுகந்தாளே தோகைமாமடமயில்
சிந்தையும்வெருவிட வொயிலினுலாவியே
சித்திரம்வெருவிட மோடியில்மேவியே
தீம்தகதிமிதக திமிதகதிமிதக
செணுதகதாம்திமி ததிங்கணத்தோமென. (வந்தா)

சரணங்கள்.

௧. கைகாலிலணிநகைகாலிச்சுடர் கலகலவென்றிடவே - நயமாக்
கழுத்திலணிநகைகள் சலசலவென்றிடவே - கரு
மைசார்விழியெழில் நெகுநெகுநெகுவென
மெய்சார்கலவைகள் கமகமகமவென
நெய்சாரிதழது பளபளபளவென
மெய்சார்சுடர் தளதளதளவென
காந்தருவகன்னியர் கைதொழுதேத்திட
வேந்தர்கன்னியர் விழிகள்பூத்திட
தீந்தகசெணுந்தக சேகிணசெணுத்தக
தோந்தகதாந்தக தீந்தகதோமென. (வந்தா)
இடையானதைநவிண்ணில் மின்னற்கொடிகண்டு மகிழ்ந்திடவே-ஒயில்
நடையானதைபொன்னுலகன்னங்கள்கண்டுபுகழ்ந்திடவே - பின்னற்
சடையானதுமுகிலினை வென்றிட
உடலானதுபொருள்தனை வென்றிட

துடையான துகதலியை வென்றிட
உடையான துரவிதனை வென்றிட
இருபதமானதை மரைமலரென்றிட
திருமுகமானதை நிறைமதிவாழ்ந்திட
கிரதகிட திமிஜெணு ஜெணுகிரதகிட திமி
தரிஜகதணு திமி ததிங்கணத்தோமென. (வந்தா)

௩. சத்தியவாமைப்பெண்ணெனக்குச்சவுத்திதானெனவே-அந்த
மித்திரவிந்தைதனக்குநானே மேலுமேலெனவே - எழில்
சித்தசனென்மகனெனப் புகழ்பேசியே
சித்தசன்மனைவிதன் னெழிலையேசியே
அத்தணிவளையொளிர் கைதனைவீசியே
வெற்றிகொள்சம்பத்து மிகுமகராசியே
என்மகன்மருமகள் அழுதிடுமித்திரம்
என்னவோவதை யறிவமெனச்சீக்கிரம்
தின்னதின்னசேனு தின்னதின்ன
தனன்தன்னதின்னத்த திங்கணத்தோமென. (வந்தா)

ருக்குமணித் தாயார்வருகிற சிங்காரபந்தியம்.

முத்துமணியேபவளமுலவுமணியே யெழில்கொள்
முதலைமூங்கில்தன்னில் முளைத்தமணியே
சித்ரமணியேபுனித சர்ப்பமணியேவஜ்ர
செய்யமணியேதளினச் செல்வமணியே
அத்திமணியேப்சுவில் ஆனமணியேபருவ
ஆயிழைகழுத்தினிடை யார்ந்தமணியே
பத்துமணியேகமுகு பயந்தமணியேகன்னல்
பங்கயந்தனிற்றோன்று பளிங்குமணியே
சகலமணியொளியின் மிகுசாதிமணியே
எழில்மதனனருள் குமாரனிருகண்மணியே
உளமுருகியழுகுரலி ேைசகேட்டு
ஒளிவுடனேவந்தனள் உருக்குமணியே.

வேறு தரு-இ-ம்-மணிரங்கம் அடதாளம்.

பல்லவி.

மதன்அன்னையாஞ்சந்திர வதனருக்மணியம்மன்
மருமகளாதி தானைவந்தாளே - லோக
மாயவனுக்குக் கைதந்தாளே - சினம்



மடந்தையர்சிலர் - நடந்தெதிருடன்
தொடர்ந்தவரி - படர்ந்தலைந்திட (மதன)

சரணங்கள்.

௧. சதுர்முகனும்தனது - சுதனெனவும்நல்ல
சாத்மீகவரிசைகள் பேசியே - பாக்கியம்
தாழ்வொன்றில்லா மகராசியே - மிகத்
தளிர்த்திடுஞ்சுடர் - கொழித்திடும்எழில்
துளிர்த்திடும்நிறம் - வெளுத்திடுஞ்சுய. (மதன)

௨. முத்துப்பதக்கங்கள் - சித்திரச்சரத்தொங்கல்
முச்சுடர்காணவும் மின்னவே - செக
மோகன்மாலைகள் துன்னவே - மதி
முகந்துலங்கவும் - சுகந்தகலவை
மிகுந்திடுமணம் - செகம்புகழவும். (மதன)

௩. தாவடங்களும்திவ்ய பூவடங்களுமிதந்து
தகதகதகதகவென் றிலங்கவுமே - நல்ல
தளுக்குஞ்சித்ரவடங்கள் குலுங்கவுமே - வெகு
தளித்திரர்தனை - முறித்தெறிந்திடு
பெருக்கிடுஞ்சுகம் - குறித்திடும்எழில். (மதன்)

௪. வச்சிரப்புலாக்குதொங்கல் ரத்னக்கல்லுடன்முத்து
வான்மின்னல் வெருவுதுலங்கவே - நல்ல
வைடூரியந்த்து மிலங்கவே - எழில்
வரிக்குயில் - சோலைக்கிளி
போலக்குரல் - ஓலத்தினள். (மதன்)

௫. பாஸ்கரனென்ற விரேக்குகள்தோடுகள்
பளிபளீரெனமின்னி யலங்கவுமே - சித்ர
பாதரிமுருகுகள் துலங்கவுமே - உற்றுப்
பார்த்தவர்விழி - பூத்திடவுடல்
வேர்த்திடவயர் - வோத்திடநல்ல. (மதன்)

௬. சந்திரக்கும்மிழும்வில்லை சுந்தரலாகிடும்ரேக்கும்
சன்னபின்னற்சடை சுழன்றாடவுமே - மேகம்
தானும்மின்னலும் வெட்கியோடவுமே - சதி
தாட்டிக்குணம் - காட்டிப்பிணி
சேட்டைத்தொழில் - ஓட்டவென்றோ. (மதன்)

௭. சோதிப்பிரகாசம்போலப் பாதிப்பிறைநுதலில்
சுட்டியும்பளபளென்றிலங்கவுமே - அகிற்
றெங்கலுந்தளதளென் றிலங்கவுமே - பிலாச்
சுளைக்கும் - கொம்பினளிக்கும்
மதனுனைக்கும் - ரசமொழிக்குமிணை. (மதன்)

௮. நெற்றியில்செந்தூர ரத்னத்திலகமின்ன
நேத்திரத்தில்நீல மையிலங்கவுமே - கன்னம்
நேராய்வச்சிரத் தொங்கலலுங்கவுமே - நல்ல
திறம்பெற்றுயர் - திறம்பெற்றதி
வாம்பெற்றெழில் - அறம்பெற்றவள். (மதன்)

௯. கொன்னைப்பூரவிக்கை மின்னதகதகென
கொங்கைக்குடங்கள் மெல்லக்குலுங்கவுமே - வாசந்
கொந்தும்பூமாலைகளலுங்கவுமே - கருங்
குயிற்குரலுள - கயல்நயனியர்
மயிலொயிலினர் - செயஞ்செயமென. (மதன்)

௧௦. கனவின்சோதியைவென்ற கனகரத்னவளைகள்
கலகலகலகலென் றொலிக்கவுமே - நல்ல
கவினைசத்துடன்தொங்கல் அலுங்கவுமே - உயர்
கனம்பெறவேவெகு - சனந்துதிக்கவே
சனம்புகழின - வணங்கதிக்கவே. (மதன்)

௧௧. பார்க்கக்கண்களுக்கூசுஞ் சூற்கொண்டகார்மின்னலை
பழிக்குஞ்சிற்றிடை துவண்டலுங்கவுமே - மாந்தளிர்
பட்டுநெகுநெகென்று துலங்கவுமே - அதி
பதித்தியானமே - துதிக்குஞ்சுற்ற
மிதிக்கும்புகழ் - விதர்ப்பன்மகள். (மதன்)

௧௨. தண்டைவெண்டயஞ்சொர்ன செண்டுபாடகம்அந்த
சலங்கைகவிகலீரென் றார்த்திடவே - கண்டு
சந்த்ரசூரியர்வெட்கம் வர்த்திடவே
கிர்தகிர்தாக்கிட சேணுதக்கிட
திமிசேகிடதகிடக்கிடதன. (மதன்)

௧௩. அதைவென்றுளமைந்தன் மனைவிருக்குமிதேவி
அழுதாலொலிகேட்டு க்ஷணமாகவே - நல்ல
[illegible]

ஆணிபணிமணிகனிகனிசென
தனுதனுதிமிசெனுதிமிதக்க. (மதன்)

போது விருத்தம்.

தன்னவுருக்மணியம்மன் இவ்விதமாய்வந்து
சந்திரமண்டபத்துட்சென்று பார்க்கும்போது
மொழிதளர்ந்துநாவுலர்ந்து இடைதள்ளாடி
முகம்வாடிக்கைகள்பிசைந் தையோவென்று
உளரியுடல்நடுநடுங்கிக் கண்ணீர்சிந்தும்
உருக்குமியைப்பார்த்துமனங் கலங்கியோடி
குழவியெனஅழைத்தாரத்திற் சேர்த்துஎண்ணம்
குறிக்கின்று ளிவ்விதமாயுரைக்கின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் வந்த உருக்குமணிதேவி யம்மையானவள் சந்திரமண்டபத்துள்ளே வந்து உருக்குமிதேவி புலம்பிக்கொண் டிருக்கிற அலங்கோலத்தைக்கண்டு திடுக்கிட்டு ஓடிவந்து அவளையெடுத்து மார்புடன் அணைத்துக்கொண்டு சொல்கிற விதங்காண்க.

தரு இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

தாயேஎன்பேத்தியே யழுதுசோர்ந்திடும் வர்லாறு
தப்பாமல்சொல்லுமம்மா - உன்துயரத்தை
அப்பாலேதள்ளுமம்மா. (தாயே)

அநுபல்லவி.

சாயமயிலைப்போலே ஓயிலாளேயென்பேரன்
தனக்கான அபிஷேகமே - கண்ணேயுனக்
கித்தனையேன்சோகமே. (தாயே)

சரணங்கள்.

௧. பேதமைக்குள்பட்ட விபரத்தைச்சொல்லன்னப்
பேடைத்தோகைமயிலே - ஒருநாளும்
வாடாதிளங்குயிலே. (தாயே)

௨. துயரத்துக்கான காரணமென்னவோ
சுந்தரப்பசுங்கிளியே - அண்ணன்மகளே
எந்தன்இருவிழியே. (தாயே)

௩. புருடனுடன்கூடி வாழ்கின்றபெண்ணுக்கு
பொல்லாதிந்தச்சோபமே - எனக்கிது
சொல்லும்வஜாதீபமே. (தாயே)

௪. பூங்கணையான்மகன் பென்போன்மணிமார்பில்
பொருந்தும் பெரும்புகழே - என்மருமகள்
இரதிமருமகளே. (தாயே)

போதுவிருத்தம்.

தீர்க்கமுள்ளநளினமலர்க் கரங்களாலே
தேகமுழுதுந்தடவிச் சிரசைநீவி
முருக்கிதழைநீவிமுகம் நீவிக்கண்ணீர்
முழுதுந்துடைத்தே குளிர்ந்தமொழிகள்பேசி
நெருக்கமறநல்லிணங்க மனேகங்கூற
நீண்டவவள்துயரந்தான் நீங்காதாலே
உருக்குமணிஉருக்குமிதன் முகத்தைப்பார்த்து
உரைக்கின்றுள்சோபிதத்தைக் குறைக்கின்றுளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக ருக்குமணியம்மன் அநேகவிதமான தேறுதலை சொல்லியும், கண்ணீரைத் துடைத்து மடியிலே வைத்துக்கொண்டு அவள் சரீரமெல்லாம் தடவி மனதைத்தேற்றியும், அவள் துயரமும் சோபதாபமும் நீங்காதிருப்பதைக்கண்டு ருக்குமணிதேவி பின்னும் சொல்கிற விதங்காண்க.

உருக்மணி அகவல்.

அந்தமேமிகுந்த அரிவையர்க்கரசே
எந்தனுருயிரே யென்னிருகண்ணே
நினைப்பினும்வசனம் நீட்டினும்குனுக்கில்
வனப்பினும்சற்றும் மருவில்லாமின்னே
அன்னமேதேவர் அமுதொடுஞ்சேர்ந்த
கன்னலின்ரசத்திற் கலந்தசெந்தேனே
கானகமுலவுங் கவரிமான்கன்றே
வானவர்க்கரிதாம் மாணிக்கக்குன்றே
எனதுபாலனுக்கும் எழிலுலாவிக்கும்
இனியளாய்வந்த என்மருமகளே
மாற்றலர்துதிக்கும் மாதுக்குமெனக்கும்
பேத்தியாய்வந்த பிரபந்தமே



அம்மையேஉனக்கு ஆறிடாத்துயரம்
வெம்மைவந்தடர்ந்த விதிவழியென்ன
தலைதனிலிருந்து தாள்களின்வரைக்கும்
கன்னிதரிக்கக் கலனில்லையென்றோ
மின்னல்நேரிடைக்கு விக்தையாயுடுக்க
சொன்னமாஞ்சரிகைத் துகிலில்லையென்றோ
பூசவுங்குளிர்ச்சி பொருந்தவுஞ்சுகந்த
வாசமாங்கலவை வகையில்லையென்றோ
கொண்டலோடிணங்குங் கூந்தலிற்றரிக்க
வண்டினம்வருந்து மலரில்லையென்றோ
மாதேசெவ்வாய் மலர்க்கினிதருந்த
சீததாம்பூலத் தினில்லையென்றோ
அன்னமும்தேவர் அமுதமுந்தேனும்
கன்னலின்ரசமும் கண்டில்லையென்றோ
நன்மைபூத்தட தானிலம்புகழ
தன்மமேசெய்யத் தனமில்லையென்றோ
பரிகரிமதங்கள் பல்லக்குமேனு
சரசவாகனங்கள் தானில்லையென்றோ
பண்டிதராமைச்சர் பாக்கியர்பெருக்கம்
தண்டுசைனியங்கள் தானில்லையென்றோ
சித்திரமாளிகைகள் சிங்காரமனைகள்
சித்திரசாவடிகள் தானில்லையென்றோ
எழிற்குறைந்துள்ளம் ஏங்கியேமயங்கி
அழுகின்றனிதமேன் அல்லாமலின்னம்
சிறுவாவியபெரன் சித்தமேயெனக்கு
பாசெலாநிறைந்த பாட்டனிருக்க
சாதுவாயுனக்கோர் தாழ்வுதோன்றமல்
பாதுகாத்திடவும் பாட்டிமாரிருக்க
இனிமையாயுனக்கு இசைந்திடும்பாட்டிமார்
எனையல்லாலின்னம் எழுபேரிருக்க
அருமையாயிரண் டாயிரங்கோபஸ்
திரிகளேயுனக்குச் க்ஷேமமாயிருக்க
திரிவையேசகல செல்வங்கள்தனிலும்
மருவில்லாதியாம் மாமியாரிருக்க
மனமயங்குற்ற மதனராசேந்திரன்

வனப்பினில்மிகுந்த மாமனுமிருக்க
சொந்தமாயனேகம் தோழிமாரிருக்க
சந்தமாய்ப்பந்து சனங்களுமிருக்க
புவனமீரேழும் புகழ்ந்திடும்படிக்கு
கவின்பெறுமுந்தன் காந்தனுமிருக்க
வுன்புத்திக்கேற்க வுசிதமாய்ச்சகல
சம்பத்திலொன்றும் தளர்ந்திடாதிருக்க
என்னசொன்னாலு மென்னிருகண்ணே
உன்னிடதுயரம் ஒழிந்திடாதென்ன
துஷ்டனாயெனது சுதன்சுதனுன்னை
திட்டியேயிகழ்ந்த தீவினையுண்டோ
மெய்சோகவுன்னை வேதனைப்படுத்தி
கைதொட்டடித்த காரணமுண்டோ
பேத்தியேயெனது பேரன்பெண்பாவம்
ஏற்றிடாளென்றென் னிருதயமறியும்
சர்ப்பனைகிணையாத் தையலேநீயும்
கற்புள்ளாளென்றென் கருத்துக்கேதெரியும்
அறிவினில்மிகுந்த அன்னையேசிறந்த
பிரியமாயெந்தன் பேரனும்நீயும்
பாங்குடன்மகிழ்ந்து படுத்தன்பாய்த்தூங்கும்
காங்கயமயத்துக் கட்டில்தானெங்கே
திருவருள்மிகுந்த சித்ரமேயுந்தன்
புருஷன்றானெங்கே போயினனம்மா
நறுமலரணையில் நாடிடுந்தேகம்
தரைமிசைபுரண்ட தாழ்ச்சிதானென்ன
ஊகத்தோடெனக்கு உற்றகாரியத்தை
சோகத்தைநீக்கிச் சொல்லுவாய்கண்ணே.

போது விருத்தம்.

பெருக்கமுடனுந்தனுக்குச் சகலபாக்யம்
பேர்பெறவும்சுகம் பெறவும்பிசகிடாமல்
இருக்கவுடல்நிறங்குலைந்து முகமும்வாடி
இருதயத்தில்சொல்லவொண்ணா தேக்கங்கொண்ட
நெருக்கமெனக்கோதுவென்று அன்பாய்க்கேட்க
நேரிழைகண்ணே! திறந்து மடியைநீங்கி
உருக்குமணியம்மன்முகம் தன்னைப்பார்த்து
யோசித்தாளிவ்விதமாய் வாசித்தாளே.



வசனம்.

இந்தப்பிரகாரங்கேட்ட உருக்குமணிதேவியைப் பார்த்து உருந்தமிதேவி சொல்லுகிறது எப்படியென்றால்.

உருந்துமி-தரு-இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

என்னவென்றுநான்சொல்வேனம்மா - பாட்டியேயினிநான்
எப்படித்துயரம்வெல்லுவேனம்மா.

அநுபல்லவி.

அன்னத்தண்ணீரெனக்குப்பகையாச்சே - என்சுகமெல்லாம்
ஆற்றிற்கரைத்தபுளியாய்ப்போச்சே - தலையில்
அன்றெழுதினவன்தானெனை யழித்தெழுதாதவிதியை
பெண்ணாகநான்பிறந்துபிழைத்துவாழ்ந்தபெருங்கதையை

சரணங்கள்.

௧. ஆகமேமுழுதும் நோகுதே - என்கிந்தைதான்
ஆலைவாய்கரும்ப தாகுதே - சோக
தாகமேயதிக மாகுதே - தாதுந்தணிந்து
தாஷ்டீகங்குறைந்து போகுதே - அய்யோ
சாகத்துணிந்தபேர்க்குச் சமுத்ரம்ஒருசாண்காணும் [என்]
ஆகையாலென்துயரஞ்சொன்னா லக்யானம்மெத்தவேணும்

௨. வேந்தனில்லாநாடாகி னேன் - பரதேசியானேன்
வெள்ளாமையில்லாக்காடாகினேன் - நலம்
கூந்தனில்லாவேடாகி னேன் - சம்சாரத்தோடு
குழந்தையில்லாவீடாகி னேன் - எழில்
வாய்ந்திடுந்திவ்யசிலாக்ய வாசமில்லாதபூவானேன்
சாந்தம்பொருந்தவயங்கும் சந்திரனில்லாராவானேன் (என்)

௩. ஏழுமாமரத்தைக் காய்ந்தானே - ராமபாணத்தால்
ஈரைந்துமுகனை மாய்த்தானே - முனிவன்
ரூளிலுள்ளவிழியைத்தேய்த்தானே - கஞ்சனென்னும்
சண்டாளபாவியுயிரைமாய்ந்தானே - பாலாம்
ஆழியிற்றுயின்றோன்மைந்த னருள்சுதன்னைநெட்டதேவி
வாள்நட்டிவிழுந்துயிரை மடித்திடநான்பிறந்தபாவி (என்)

போது வசனம்.

இந்தப்பிரகாரம்சொன்ன ருக்குமிதேவியைப்பார்த்து ருக்மணி யம்மன்கேட்கிறது எப்படியென்றால்.

நுக்குமணி விருத்தம்.

மதனாதிமருமகளாய் வாழாதேதேனோ
மன்னனருள்எழில்சுதனை மருவாதேதேனோ
அதிவிதசல்முகத்திருளும் நீங்காதேதேனோ
அறுசுவையோடன்னமமுத மருந்தாதேதேனோ
ஏதுவிதஞ்சொன்னாலுமனம் தேறாதேதேனோ
இனியுலகிற்பிராணன்வைத் திருக்காதேதேனோ
விதனமதையுருக்குமியே கபடம்நீங்கி
வெல்லுவாய்விபசமதைச் சொல்லுவாயே.

வசனம்.

ஆகாகேளும் எனது பேத்தியாகிய வுருக்குமியே! நீ இப்படி அலங்கோலமான துயரங்கொண்டு பிராணனை மாய்த்துக்கொள்ள நினைக்கிற மார்க்க மென்னவோ, கபடமில்லாமல் என்னுடன் சொல்லம்மா, ருக்குமியே.

ருக்மி விருத்தம்.

உற்றகாரியஞ்சொல்லென்ற வுருக்குமணிப்பாட்டிகேளாய்
நற்றவமுன்னாட்செய்து நான்பெற்றசெல்வந்தன்னில்
முத்தியம்வந்தவாறும் மதிமயங்கியவாறெல்லாம்
சுற்றும்நான்மறைத்திடாமற் சாற்றுவேன்கேளாயம்மா.

வசனம்.

அகோகேளுமம்மா வுருக்குமணிப்பாட்டியே! எனக்கு வந்தது யாம் எல்லாம் விபரமாய்ச் சொல்லுகிறேன்.

நுக்குமணி வசனம்.

அப்படியே சொல்லம்மா ருக்குமிமானே.

ருக்மி சொல் அகவல்.

செகமெலாநிறைந்த ஸ்ரீதரனருளும்
சுகமனுபவிக்கும் தூயருக்குமணியாம்
பாட்டியேயானோர் பாவியென்துயரம்.
கேட்டமாயிப்போ செப்புவேன்கேளாய்.
நேற்றைத்தினத்தில் சோமஸ்தமித்து



வேற்றுமையாகும் மின்னாந்திகோம்
இனிமைசேர்மகிபன் என்பிராணநேசன்
தினந்தொறுநடாத்தும் செயலெல்லாமறந்து
கனகம்ர்மியத்துக் கட்டிலின்மீதில்
நினைவில்லாதயர்ந்து நித்திரைசெய்தார்
அந்தருணம்யான் அதிகவிச்சித்ர
சித்திரமண்டபத்துள் செம்மையாய்ச்சென்று
நித்திரைசெய்த நிந்தனையைப்பார்க்க
பற்றியேவயிறு பகீரென்றதம்மா
கருதுஞ்செந்திருவே காந்தனேதுயின்றால்
இருதயங்கலங்கல் என்னென்றுகேட்டால்
மதன்சுதனென்னை மனந்துமேகலந்த
எதுதினம்அதுதொட்டின்னோவரைக்கும்
கோதிலாவிடுதிக் கோயிலுக்கிரவில்
மாதுநான்வாரா வின்னக்குமுன்பேன்
சகலசம்பங்கள் சாதித்துளன்று
சுகமனுபவித்துத் துயிலுவான்பாய்
ஆசையால்ராத்திரி அழகுள்ளகாந்தன்
சேகாநித்திரை செய்யநான்கண்டு
புதுமையாயெந்தன் புத்திக்குத்தோன்ற
மதிமிக்கலங்கி வாடினேன்பாட்டி
தாங்கலாமனத்தைத் தயிரியப்படுத்தி
தூங்குமஞ்சனத்திற் றேகைநானேறி
போயுயிர்க்காந்தன் போர்மதன்மகனை
நாயகன்மார்பில் நான்மெள்ளச்சாய்ந்து
பதனமாயிருந்தேன் பதிமுகம்நோக்கி
அதிவிதவன்னிகை யறிவிறுங்கிசைந்த
கொழுநனேயெழில்சேர் கொற்றவாவிப்போ
எழுமெழுமென்று இன்பமாயழைத்தேன்
அழைக்கவும்நித்திரை யகன்றிடாதாலே
இழைக்கொணாச்சுதிகொண் டேழிசையுடனே
மெய்ப்புடன்வீணை மீட்டியேபதங்கள்
செப்பவுநித்திரை தெளியாதினாலே
தலையொடுமுடலைத் தட்டியேயெழுப்பி
தொலையொணாதோஷம் தொலைந்திடுமென்று
சையலாயங்கை தன்னதாற்காந்தன்

மெய்யெலாம்பூப்போல் மெள்ளவேவீசி
சித்திரவித்தாரச் செய்கையினாலும்
நித்திரைசோகம் நீங்காததினால்
என்னென்னமொழிக ளியம்பியுங்கவினை
மன்னவன்சித்திரை மாறாததினால்
சாதிகஸ்தூரி சவ்வாதுபன்னீர்
சீதசந்தனத்தின் தெளிவுகளிறைக்க
தூக்கமேதெளிந்து துரையெழுந்திருந்து
சீக்கிரமெந்தன் றெளிமுகம்நோக்கி
பார்க்கஅன்னேரம் பாதமேபணிந்து
தூக்கஞ்செய்விதஞ் சொல்லென்றுகேட்டேன்
பல்லிளிளின்று பதிலுறுதின்சயும்
சொல்லுதேயதுதன் தோஷமென்னவென்றும்
தோளிடிகொண்டு துடிக்குதாம்பகம்
வேள்மகனேயிவ் விதமென்னவென்று
சிந்தையேகலங்கித் தெரிவைநான்கேட்கும்
சந்தேகம்பார்த்தென் சுவாமிதானென்னை
இருகையால்தாவி யெடுத்தெந்தன்மடியில்
மருவில்லாதிருத்தி மார்பினோடணைத்து
பெண்களுக்காசே பிராணநாயகியே
யென்னிருகண்ணே யென்றெனைப்புகழ்ந்து
துயின்றதில்நயனந் துடித்ததிற்பல்லி
நவின்றதினுனக்கோர் நஷ்டமுமில்லை
வதுகாரணத்தில் நெஞ்சுபுண்ணாகன்றாய்
பாதுகாத்திடவும் பாட்டனாரிருக்க
சிந்தையாந்துயரம் நீங்குவாயென்றென்
சிந்தனைபகன்றுத் தேற்றினன்பாட்டி
மருவறவெனது மனதுபாலாகி
அறுவகைச்சுவைக ளன்புடனருந்தி
மலர்வகைதரித்துள் வாடைகளணிந்து
தலைவனு மியானும் தாம்பூலமருந்தி
மனதேதாடிமனமும் மகிழ்ந்துறான்றுதி
கனகமாமயத்துக் கட்டிலின்மீதே
ஆநமோடாக மனோந்தின்பமாக
மோகவாருதியில் மூழ்கியேநன்றாய்
யோகபோகஞ்செய் திருவருமிருக்க



தாகமேநன்றாய்த் தான்தணிந்தப்பால்
சுசிகரமாகச் சுந்தரன்றன்னெழில்
வசிகரமுகத்தென் மதிமுகமணைத்து
மெய்யினோடிருக மெய்யினையணைத்து
கையதனோடிரு கையினைப்பின்னி
காலொடுங்கால்கள் கவ்வலாய்ப்பின்னி
சீலமாய்நித்திரை செய்திட்டோம்பாட்டி
தூக்கமுந்தெளிந்து தோகைநானெழுந்து
பார்க்கவும்என்னது பத்தாவைக்காணேன்
வனிதையென்வயிறு பகீரென்றதப்போ
கனகமாமயத்துக் கட்டிலுங்காணேன்
என்னகாரணமென் றிருதயமுலைவாய்
பொன்னென்னவுருகிப் புலம்பினேனம்மா
காந்தனேசெய்த கபடதாவென்று
ஏந்திழைமின்னி லெண்ணினேனம்மா
அனகவேள்மைந்த னழகுகண்மணியே
வனிதைமுன்னிப்போ வந்திடாயென்று
மனதினுக்கிசைந்த வாறெலாங்கூறி
கனத்துடனழைத்தும் கணவனைக்காணேன்
என்னெனையாளும் எண்ணுதும்எண்ணி
கன்றினைக்காணாக் கபிலையைப்போலும்
அழுதனவ்வோசை யரிவையர்கேட்டு
தொழுதுஎன்முன்பாய்த் தோன்றினாரம்மா
சகிகளோடிந்தச் சங்கதிசொன்னேன்
பகிரென்றவர்கள் பகர்ந்ததுகேட்டு
அப்பவேயெந்தன் ஆவிதான்பதறி
கொப்பெனக்கண்ணீர் கொட்டினேனம்மா
அந்தமேமிகுந்த அன்புள்ளபாட்டி
உந்தனோடின்னம் உற்றதுசொல்வேன்
அனகவேள்மகன்றன் னழகுகாணமல்
இனிநானுயிர்வைத் திருக்கமாட்டேனே.

பொது விருத்தம்.

சசிவதனவிருக்குமிமா நிந்தமார்க்கம்
சாற்றுதல்கல்லுருக்குமனித் தாய்தான்கேட்டு

நிசிபடைந்தமனத்தினளாய்த் தேகஞ்சோர்ந்து
கேமிதனில்சித்திரம்போல் நிற்கும்போது
பசியடைந்ததரித்திரத்தை விலக்குமெந்தன்
பாலகன்றன்வதனமெப்பப் பார்ப்பனென்று
உசிதாதியுருக்குமணி பதத்தில்விழ்ந்து
உருகுவாள்மதிமயங்கி அழுகுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமணியம்மனிடத்தில் சகலசங்கதியும் ருக்குமியானவள் சொல்லிக்கொண்டு வருகிறபோது ருக்குமணியம்மையானவள் மதிமயங்கி ஒன்றுந்தோன்றாமல் சித்திரப்பதுமைபோல் நிற்கிறபோது ரதிதேவியானவள் ஓடிவந்து மாமியார் திருவடியில்விழுந்து என்னுடையபாலகனை இனிநானெப்போது காணுவேனென்று பிரலாபிக்கிறது எப்படியென்றால்.

இரதிதேவி-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

மறந்துபிராணனைவிடுவதற்கொரு
மருந்துசொல்லம்மாமாமியே - நல்ல

அநுபல்லவி.

பரந்தாமன்எந்தன் அம்மான்கிருஷ்ணை
பகவான்கைதொட்ட காமியே - உந்தன்
பிறந்தவன்மகன் கணவன்விவேகமும்
சிறந்திகழ்முகில் புகழ்ந்திடும்தேகமும்
துரந்தரன்கெச கேசரியோகமும்
சிறந்திடும்புஜபல தாஷ்டீகமும். (மறந்து)

சரணங்கள்.

௧. நான்பாவி நான்தானே துரோகி
நான்தானேபடுக்ஷிமியே - ஐயோ
நான்தானேதோஷி நான்தானேலோபி
நான்தானே கெடுக்ஷிமியே - எந்தன்
காந்தன்புகழும் ரூபசிங்காரமும்
வேந்தர்புகழும் வீரசூரமும்
மாந்தர்புகழும் மதனவிஸ்தாரமும்
சாந்தகுணமும் ஒழிந்துகம்பீரமும். (மறந்து)



௨. நிந்தையாகவே கடுந்தவிரோதத்தை
நீதிமார்க்கத்தால் வெல்வானே - எந்தன்
தந்தைதாய்தானே மதனும்ரதியென்று
சகலபேருடன் சொல்வானே - நல்ல
விந்தையதனில் மிகுந்திடும்லோலனை
தந்திரமந்திர இந்திரஜாலனை
சுந்தரியுருக்குமிக் கனுகூலனை
எந்தன்வயிற்றில் பிறந்திடும்பாலனை. (மறந்து)

௩. செத்தாலும்புத்திர சோபங்கள்தான்
தீராபேர்க்கு வீணானேனே - நல்ல
புத்திரனில்லாதார்க்குச் சொர்க்கமேதென்ற
பொல்லாதசொல்லுக் காளானேன் - மிகக்
கற்றோர்புகழும் ராஜவசிகரனை
சத்துராதிகனை வெல்லும்சீலனை
வித்தாரமிகும் வசந்தகுமாரனை
அத்தேஅத்தே உன்னிடபோரனை. (மறந்து)

பொது விருத்தம்.

விந்தைதாதியிந்த விதமாகச்சொல்லி
விம்மிவிம்மித்தானழுது மெய்தான்வேர்த்து
சந்திரமுகஞ்சோர்ந்து பிரக்ஞைதான்தப்பி
தரணிதனிற்சித்திரம்போல் நிற்கத்தானே
பந்தமெனும்பயோதர ருக்குமிதன்னைவி
பதைபதைத்துஉருக்குமணி பதத்தில்விழ்ந்து
எந்தன்பதிமறைந்தவிதம் நீர்தான்சொல்லென்
றேத்துவாள்மதிமயங்கிச் சாற்றுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ரதிதேவி புலம்பிக்கொண்டிருக்கிற போது முன்னே மூர்ச்சையடைந்திருந்த உருக்குமியானவள் தெளிந்தெழுந்து உருக்குமணி தேவியின்பாதத்திலேவிழுந்து புலம்புகிறவிதங்காண்க.

ருக்குமி தீபதை-இ-ம்-முகாரி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

௧. கன்னியேபவழமுல்லையேவுளர்
கன்னலே வயற் செந்நெலே
மின்னவேதான்கு வேதவாசங்கா
வீசமே விதற்ப தேசமே.

௨. ஆளும்வேந்தன்றன் மோகத்தால்வந்த
அம்மையே பார்க்கும் தன்மையே
சூழவேலோக நீதிதான்சொல்லும்
சொன்னமேமட வன்னமே.

௩. தெய்வருக்மணி யெனுந்தமணியச்
சிட்டியே யெந்தன் பாட்டியே
சைவரும்புகழ் விபுதையேபாவி
தானம்மா வுலகில் நானம்மா.

௪. ஆகாமெனக் குனியலால்வே
றாம்மா முகம் பாரம்மா
மேதினியுள்ள மாதர்களெல்லாம்
வீணம்மா என்சொல் கேளம்மா.

௫. சுதவேள்மகன் மறைந்த விபரந்
சொல்லம்மா பிராணன் புல்லம்மா
அரிமனதுனது மனதுகாணிரண்
டல்லவே பகையை வெல்லவே.

௬. பிரிந்துப்பிரிந்தெனக் குரைத்திட்டானுயிர்
பிழைக்குமோ வாழ்வு தழைக்குமோ
பெருத்ததுயரத்தை நீக்கவேதுகை
பேசுமோ நீக்குந் தோஷமோ.

௭. காந்தனெழில்தனைப் பாவிநானெப்போ
காண்பனோ இன்பம் பூண்பனோ
சேர்ந்தணைந்தவனுயிரோ டென்னுயிர்
சேருமோ துய ராறுமோ.

௮. காந்தனெழில்நான் பார்த்ததிசையெங்கும்
காணுதே பயம் தோணுதே
பூந்தவீட்டுப்பெண் பிறந்தவீட்டுக்குப்
போகுமோ போக லாகுமோ.

௯. உந்தன்மைந்தனைப் பூங்கணைவந்து
வட்டுதே யென்னை வாட்டுதே
சந்திரன்குளிர்கிரணம் அனலாய்ச்
சாடுதே மெய் வாடுதே.



௧௦. பைங்கிளிகளெந்தன் மீதிலேவசை
பாடுதே தென்றல் சாடுதே
செங்கதிரவர் பார்வைமேல்வந்து
சீறுதே குயில் கூறுதே.

௧௧. மறலிதூதுவர் வந்தென்வாழ்வதை
வளைக்கிறார் வாவென் றிழைக்கிறார்
குறளிக்கூட்டங்கள் வந்தென்முன்புகுந்
தாடுதே கூட்டம் போடுதே

௧௨. குயிலுருக்மணித் தோகையே துயர்
குறையுமே எந்தன் இறையுமே
உயிரையேயினி விடச்செய்வதை
உத்தமம் நல்ல வுத்தமம்.

ருக்குமணியிடத்தில்-பின்னும்-ருக்மிதேவி-புலம்புகிற
(வேறு-ஒடித் தரு.)

விண்ணுலகெங்கும் மண்ணுலகெங்கும்
விளங்கும்வேதாந்தமே - பரப்
பிரம்மானந்தமே - ஆன
விண்டுவே வேதன்சிவன்
அண்டர்மா தவர்களும்
கண்டுமே புகழ்ந்திடும்
குண்டினு புரிதனில்
மெய்விளங்கவு மாசுசெய்திடும்
விதர்ப்பராசனே - தன்மை
மிகுந்தநேசனே - நிறைந்த
மேகம்போல் தைரிய
வாகதாய் செய்தவ
யோகமால் பிறந்திடு
நாகமே பெருமணி
ஏவுருக்மணியெனும் பெயர்கொண்ட
எழில்பொன்சிட்டியே - ஒயிலே
எனதுபாட்டியே - ரொம்ப
இட்டமாய் என்விரல்
தொட்டகா தலனைப்பொற்
கட்டிலோ டேமறைந்
திட்டது ததிந்திட

உறுதிசொல்லாவிட் டாலாகஞ்சோர்ந் து
உயிர்கில்லாதென்றால் - அதற்
குவமையாதென்றால் - மண்ணில்

ஊனிச்சாத் தினபல
வனிமீ தேறவும்
தாணுத்தான் முறிந்தது
வனிதான் சாய்ந்தது

அந்தக்கதைபோ லாச்சுதென் துயர்
ஆருடன்சொல்லுவேன் - எப்படி
அகத்துள்வெல்லுவேன் - பாச

அச்சமே நீங்கிய
கெச்சித யோகிகள்
பச்சமா மறைகளில்
நிச்சயம் ஆகிய

சூக்ஷம்யாதென்றால் உலகேழிலும்
சோதிமால்சித்தமே - நினைக்கும்
சொல்தானித்தமே - அளவம்

சூடுமால் கொலுச்சபை
தேடியே சலுதுடன்
நாடியே யென்முறை
பாடிநீ விபரமாய்

சொல்லியென்துய ராற்றுமற்போனால்
தோஷமேயுனக்கே - பிணம்
சுடுகாடெனக்கே - பேசும்

சொல்லினும் கிழக்கினும்
புல்லினும் தெற்கினும்
கல்லினும் மேற்கினும்
இல்லினும் வடக்கினும்

எவ்விடம்பார்க்கினும் எனதுகாந்தன்
எழில்போற்காணுதே - தலை
யேனோகோணுதே - பொன்னுல

கிந்தரனோ வேளெனும்
சுந்தரனோ மோகன
மந்தரனோ எனமுழுச்
சந்தரனோ புகழ்ந்திடும்



எனதுகாந்தன் முகவிஸ்தாரம்
எப்படிகாண்பனோ - இன்பம்
எழிலாய்ப் பூண்பனோ - திவ்ய

எருடன் நலமிகும்
பேருடன் வளமிகும்
ஊருடன் மங்களச்
சீருடன் க்ஷேமமாய்

நாலுபேரைப்போல் பூமியின்கண்
நான்பிழைப்பனோ - இனிமேல்
நகைதான்விளைப்பனோ - ஆதி

நாரணன் லோகக்
காரணன் பரி
பூரணன் தன்னிட்
பாரியே யெந்தன்

மகிழ்நன்மறைந்த விளையுஞ்சிக்காமல்
மயங்குறுபிராணனே - என்ன
மாயமோகாணனே - வன

வாசமோ சந்தி
யாசமோ பா
தேசமோ என்ன
மோசமோ தெரிகிலன்

மதன்மருமகள் தோஷிநானென்று
வாட்டிடுஞ்சொல்லதே - வருமுன்
மடிந்தால்நல்லதே - நிறைந்த

மதியில்லா திரவெனுஞ்
சுதியில்லா கவியெனும்
நதியில்லா தலமெனும்
பதியில்லா உலகெனும்

ஆனிவோற்ற மாமதாகினன்
அகதியானனே - நா
வறுதியானனே - வாய்

அலறுதே நாவு
குழறுதே தேகம்
தளருதே முகம்
விளறுதே மிறும்

துயரக்கடலில் மூழ்கித்தேகம்
சாணேபோகுதே - ரொம்ப
சோகமாகுதே - கண்கள்

சோருதே    சொல்தடு
மாறுதே    வேர்வை
ஊறுதே    தாகம்
மீறுதே    ஐயோ

விதிக்குநானினிச் செய்யும்வகையை
இசைந்துகேளம்மா - நீதான்
எழிலாய்வாழம்மா - நின்றன்

திங்கினும்    முன்முனைந்
கங்கினும்    மேலினு
மெங்கினும்    கீழினு
மங்கினும்    சிறந்த

மாயனின்னிநீனத் திப்பவேபெரு
வானைநாட்டியே - வீழ்ந்து
மடிவேன்பாட்டியே.

பொது விருத்தம்.

கயல்விழிநீர்தான்சிந்தக் காயம்தேய்ந்திவ்வாறோதி
உயிரில்லையெனச்சோர்ந்த வுருக்குமிதன்றுயர்பாராமல்
செயரதிசோர்ந்துவீழ்ந்த செய்தியுந்தான்பாராமல்
ஓயில்மதன்சுதனைக்கூவி யுருக்மணிபுலம்புவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள் புலம்பி மூர்ச்சையால் விழுந்ததையும் ரதிதேவி புலம்புவதையுங்கண்டு அவர்கள் துயரத்தை யும்பாராட்டாமல் அதிக விசனமடைந்து உருக்குமணி புலம்புகிறது எப்படியென்றால்.

ருக்குமணிபுலம்பல்-நந்-இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

மகன்சுதனேநீயெங்கேமறைந்தாயோடா - கண்மணியே
வானுலகத்திற்போய்பிறந்தாயோடா.

அநுபல்லவி.

சுகந்தந்தருக்குமியை    மறந்தாயோடா - என்னுடன்
சொல்லாமற்கண்காணமல்    பறந்தாயோடா - உந்தன்



வாணிக்குமாமனென்றும் அயனுக்குத்தந்தையென்றும்
மாதவர்வாழ்த்தின்பமேற்கவே
காணக்கிடையாதான வெழில்லான்விதர்ப்பன்மகள்
தருக்கிணுளசந்தேகந்தீர்க்கவே
மாணிக்கக்கிரீடமுந் தகதகென்றிலங்கவே
மகரகுண்டலங்களும் பளபளென்றிலங்கவே
வைணிக்கொத்துன்னரத்ன கங்கணமிலங்கவே
ஒளிர்வச்சிரக்கடகங்கள் பளீரெனத்துலங்கவே.(கபட)

௯. பார்கொண்டுதாங்கொணு த சர்வசண்டாளமெனும்
பாவங்களெல்லாநைந்துசோரவே
நேர்கொண்டதர்மதானம் பூமிக்குப்பிரியமான
கின்னயமெல்லாம்வளர்த் தேறவே
சீர்கொண்டசெங்கமலப் பாதாரவிந்தங்கண்டும்
சேவித்தபேர்மோட்சஞ் சேரவே
கார்கொண்டதேகவெழிலும் மோகனஸ்தாரங்கண்ணிற்
கண்டபேர்க்கெல்லாம் பரிதீரவே.
ஆர்கொண்டசெஞ்சடையன் நேர்கொண்டுமதிக்கவே
அறங்கொண்டபஞ்சாயுதந் திறங்கொண்டுகதிக்கவே
பேர்கொண்டகவிவாணர் சீர்கொண்டுவிதிக்கவே
பிலங்கொண்டராஜராஜர் நலங்கொண்டுதுதிக்கவே.    (கபட)

பொதுவிருத்தம்.

சதுர்முகன்றன்றகப்பனிந்த விதமதாகத்
தன்சுதன்சேய்மாளிகைக்குச் சதுதாய்வந்து
எதிமயக்குமுருக்குமிதன் மயக்கப்பார்த்து
சகசியமெல்லாந்தெரிந்தும் தெரியான்போல
மதிமதனவுருக்குமணி மயக்கம்பார்த்து
மனங்கலங்கித்திருவைமலர்க் கரங்களாலே
பதனமுட்னெடுத்தணைத்து மடிமேல்வைத்துப்
பகர்கின்றான்இங்கிதமாய் நுவல்கின்றானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ஸ்ரீ கிருஷ்ண தேவரானவர் தனது போஜனடை ய அரண்மனைக்குவந்து அங்கே ருக்குமணிதேவி முதலானவர்கள் புல ம்பிக்கொண் டிருப்பதைப் பார்த்துத் தனக்கு யாதொன்றும் தெரியா ததுபோலே ஜாடையாக சமிக்கைசெய்து கொண்டு ஸ்ரீ ருக்குமணி தேவியை இருகைகளாலும் வாரியெடுத்து மார்போடணைத்துக் கொ ண்டு சொல்லுகிற விதங்காண்க.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தரு-இ-ம்-நாதநாமக்கிரியை சதுதாளம்.

பல்லவி.

உனக்கேனித்தனை கோபமே - வெகுசிலாக்கியகுண
ருக்குமணியே மாணிக்கதீபமே

அநுபல்லவி.

எனக்கே ஆயாசம் பெருகுது - உன்னைப்பார்க்கப்பார்க்க
இருதயகமலமெல்லாம் உருகுது - எழில்
வனக்கிளியேயுயர் மாமரக்குயிலே
வணிக்கும்விழியினுளே பென்மையிலே
மனக்குறைவானதைச் சொல்லிளமயிலே
மானேதேனே மரகதக்குயிலே. (உன)

சரணங்கள்

௧. தெளிவாம்சீராம்எவ்வன்னமே-என்னசொன்னாலும் சோட...
தெளியாததேதுஇன்னமே-அபிராயவிசுதனை
அழகால்மிகுத்தவன்னமே-எந்தன்கண்மணியே
பதினாயிரமாற்றுசொன்னமே-உந்தன்பாதபங்கயமலர்
தொழுதுபணிந்தவர்க்கு வரமருள்வாயே
துஷ்டநிக்கிரகத்தைச் சுமிம்பெருந்தீயே
தனிமைமன்மதனுக்கு வாய்த்திடுந்தாயே
சகலசம்பத்தில் மகராசியும்நீயே (உன)

௨. செகதீசனென்னை மதித்திடினும் - சதுர்முகபிரமாவென்
செயலாய்ப்பெருமைகதித்திடினும்-எந்நாளுந்தானே
பகவானென்றேயண்டர்துதித்திடினும்-நான்றானேயுந்த
பதியாகிச்சுகங்கள் விதித்திடினும் - உன்வயிற்றிற்பிறந்
மகனும்மதன்வாழ்வதுவுந்தழைக்கவும்
மனவியாகுலதரித்திரம் இளைக்கவும்
சுகமாயுன்தாய்தந்தை பிழைக்கவும்
சொந்தமாம்பந்து ஜனங்களிக்கவும் (உனக்)

௩. சாதிசனங்கள்பழித்தாரோ - அதுவல்லாமதுந்தன்
சவுத்திகள்சண்டைக் கிழுத்தாரோ-அங்காரத்தோடு
சூதுவாதுகள்மொழிந்தாரோ-வெகுமூலாசுகளு...டோ... [ய
தோழிமார்கள்திர்சொல்பழித்தாரோ எதுவோவது சொல்வ
நீநெறிக்குப்பனை யாகியஇகழே
நிறைந்தவசனங்களைப் புகழ்ந்திடுந்தனே
எதுமனுகொள்ளு தறந்திகழ்புகழே
இலங்கவிதர்ப்பனும் ராசன்றன்மகளே. (உனக்)



வசனம்.

கேளும்பெண்ணே! பெண்கண்ணே! உனக்கு ஒன்றுமொன்று குறைவில்லாமல் எல்லாப் பாக்கியங்களும் நிறைந்திருக்கவும், நீயிந்த விதமாக மகாகோபதாபத்தோடு புலம்புகிற காரணமென்ன் எனக்கு விபரமாகச் சொல்லும் பெண்ணரசே.

பொது விருத்தம்.

தலைகளொருபத்துள ராவணனைக்கொன்றான்
சதுர்முகனும்வேதனுக்குந் தாதையானான்
இலைபதன்மேற்பள்ளிகொண்டான் வெண்ணெயுண்டான்
இரணியனைச்சங்கரித்தான் பேதமானான்
அரவைகரனைக்கொன்றவனிவ் விதந்தான்கேட்க
அம்மனத்தகுணமுருக்கன் மடியைநீங்கி
உலகளந்தமரைமலர்த்தாளை தன்னில்விழுந்து
உருகுவாள்மதிமயங்கி அழுகுவாளே.

வசனம்.

இந்தப்பிரகாரங்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து ஸ்ரீ ருக்குமணிதேவி சொல்லுகிறது எப்படியென்றால்.

ருக்குமணி-திபதை-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னவென்றுசொல்வேன்சுவாமி - இப்போ
எனதுகனமோடு மனதுகலங்குது
உனதுமகன்மகன் மனைவியினிமண்ணில்
எப்படிப்பிழைப்பாள்சாமி.

சின்னமாய்த்தயிர்யம் நழுவிப்போச்சுதே - வெகு
விகடவசையினன் நகடஅதிபதி
முகடிமகிழ்ந்திட அகடெபளிபொன
விசனசமுத்ரம் மூழ்கலாச்சே.

௨. பிராந்துபரந்துக் காளானேனே - பழி
சிதறிய தோதகங்களை
இதியுளதிய பேதகங்கொண்டு
திரியும்பேர்க்குநான் விருனேனே.

௩. அருமற்றதோஷிகானே - விதி
அழுந்புனல்தயில் முழுதும்கொ்யுது

பழுதென்றேசொல்லத் துணையதானது
அறிந்துமுறிந்திட்ட தூசியானேன்.

௫. படிக்கும்பேர்களைப் பழித்திட்டேனே - ஸ்துதி
பஞ்சபஞ்சிதியைத் தெஞ்சிமிதித்தனே
வஞ்சகந்தனை நெஞ்சில்பதித்தனே
பத்துப்பேர்சொல்லை அழித்திட்டேனே.

௬. கொடுக்கும்பேர்களை மறித்திட்டேனே - நல்ல
கோயில்மடங்களை ஞாயஸ்தலங்களை
தீயிட்டழித்தனே தாயைப்பழித்தனே
கூடிப்பிழைப்போரைப் பிரித்திட்டேனே.

௭. விலைமதிக்காவெழில் சேர்மெய்யா - தலை
வெட்டினும்கையில் குட்டினுமிகத்
திட்டினும்உனை விட்டிடேனென
வியாகுலந்தான் வளருதையா.

௮. உலகமெல்லாம்அளந்தபாதா - இந்த
ஊரும்பகைத்தது பேரும்பகைத்தது
யாரும்பகைத்தனர் பாரிலினியெந்தன்
உயிர்நில்லாது பிராணநாதா.

வசனம்.

அகோவாரும் ஸ்ரீகேசவ நாராயண மாதவ கோவிந்தா! அகிலாண்டகோடிப் பிரமாண்டநாயகா! இப்போது என்னுடைய ஆவி நிலைதளர்ந்து சோருது என்னுடைய விசாரத்தை யெப்படிச் சொல்லுவேன் பிராணநாயகா.

ஸ்ரீகிருஷ்ணபகவான்-விருத்தம்

திசைபுகழும்விதர்ப்பன்றன் மகளேகேளாய்
நோயைத்தனைமருந்தால் தீர்க்கலாகும்
குசலமதையூக்கத்தா லொதுக்கலாகும்
கோபமதைநற்குணத்தால் குறைக்கலாகும்
பசிதனைச்சாதத்தால் பகைக்கலாகும்
பாவமனைத்தருமத்தால் செயிக்கலாகும்
விசனமதைத்தயிரியமாங் கன்த்தைக்கொண்டு
வெல்லலாம்நாதனுடன் சொல்லலாமே.



வசனம்.

அகோகேளும்பெண்ணே! நோய்களையாதிகளை மணிமந்திர ஔஷதங்களால் தீர்த்துக்கொள்ளலாம், குசலக்கோளாறுகளை மதியூகத்தால் விடுவிக்கலாம், கோபமென்கிற ஆங்காரத்தை சாந்தகுணத்தால் வெல்லலாம், பசியை போசனத்தால் தணிக்கலாம், பாவத்தைத் தருமத்தால் அழிக்கலாம், அதுபோலே நோய்விசனங்களையும் தைரியமென்கிற வாளாயுதத்தால் பிளந்தெறியலாம், ஆனபடியினாலே உனக்குண்டாகிய மனோவியாகூலத்தை யென்னிடம் சொல்லடி ருக்குமணியே.

ருக்குமணி-நாடித்தரு இ ம்-முகாரி-ஏகதாளம்.

அகிலலோகங்களெல்லாம் அளந்தபாதனே - எந்தன்
அஞ்ஞானத்தைச்சொல்லக்கேளும் பிராணநாதனே - கொடிய
என்னசொல்வேன் அநியாயத்தை
கன்னல்வில்லோன் புத்திரன்
சொன்ன மண்டபத்திலே
மின்னந்தி நேரத்திலே

தூங்குமஞ்சனத்தின்மீது படுத்திட்டானே - நித்தை
சோபநாயகத்திற்கேசிந்தை கொடுத்திட்டானே - தெளிந்த
சுத்தசற் குணத்தினள்
பத்தினித் தனத்தினள்
சத்யவாச கத்தினள்
சித்ரவொயில் ருக்குமி

மண்டபத்தில்வந்துபார்த்து மனங்கலங்கினளாம் - சந்திர
வதனங்கறுத்துதேகம் வாடிவதங்கினளாம் - வாச
மலரணை யலுங்கவே
கொலுசுகள் கைபற்றியே
சலுதுடன்மின் னேறியே
தலைவன்முகம் நோக்கியே

நேசமுங்கலைந்துநயிரியம் இளைத்திட்டாளாம் - துரையே[த்தும்
நித்திரைநீங்கியெழுந்தருள்வீரென அழைத்திட்டாளாம்-அழை
நித்திரைதெளி யாததினாலே
சித்திரவித்தாரமான

பத்தியங்கள்சொல்லியே
ருக்கிரவிஷே மீட்டினன்
அந்தவித்தாரத்தினாலும் நித்திரைதெளியாததினாலே - தனது
ஆசைநாயகன்கண்களை விழியாததினாலே - வேத
ஆகமப்புராணப் பொருள்
வாகுட னுரைத்தாளாம்
மோகவேள் செய்நித்திரை
சோகஞ்சற் றாறாததினாலே
காலுங்கையைமெல்லெனவாய் நீவினாளாம் - உடல்மேல்
கதம்பப்பொடிதூவிமலர்களை தூவினாளாம் - அதிலும்
கணவன்நித்திரை தெளியாதால்
மணமிகுத்த சவ்வாது
புனுகுஅத்தர் கஸ்தூரி
பன்னீரிவை தெளித்தாளாம்
பெருத்தநித்திரைதானே நீங்கிவிழிதிறந்தானாம் - திறந்து
பிராணநாதன்சலுதாக வெழுந்திருந்தானாம் - எழுந்த
பிராணநாதன் றன்னையே
பிராணதேவி நோக்கியே
திராணியாக நித்திரை
இரணியவேளை செய்தது
எந்தன்னயனந்தான் வலதுபாகமிடிப்பதும் - துரையே
இடைவிடாமல்வலது நயனந்தான்துடிப்பதும் - கெடுதி
பெறுவோ யெட்டுத்திக்கிலும்
பதினாறு கோணத்திலும்
மிதமில்லாமல் பல்லிகள்
பதைபதைத் தாற்றுது
என்னகாரணம் நீயெனக்குச்சொல்லவேணுமே - துரையே
என்னுடைய துயரந்தன்னை வெல்லவேணுமே - என்று
இந்தவிதங் கேட்டமின்
சந்த்ரமுகம் நோக்கியுன்
மைந்தன்பாலன் இவைகளில்
சந்தேகம்வே றில்லையென்று



தைரியவார்த்தைசொல்லி நெஞ்சந்தேற்றினனாம் - துயரச்
சஞ்சலமென்பதையெல்லாம் ஆற்றினனாம் - தந்திர
தால்டிகத் திருவிக்ரமன்
பாட்டனாக வாழ்கவே
வாட்டம்வேண்டா மென்னவும்
வாட்டம்நீங்கி ருக்குமி
அறுசுவைப்பதார்த்தமெல்லாம் படைத்திட்டாளாம் - படைத்து
ஆசைநாயகனையன்பா யழைத்திட்டாளாம் - நன்றாய்
அறுசுவைப் பதார்த்தங்கள்
இருவரும் நுகர்ந்துதான்
நறுமிமாசலந்தன்னிற்
கரதலங்கழுவியே
சந்தனங்கஸ்தூரிபன்னீர் பூசினாளாம் - நல்ல
சரசசல்லாபவார்த்தை பேசினாளாம் - பாரி
சாதமுல்லை செவ்வந்தி
காதம்வாடை வீசிய
நிதில்லாத புஷ்பங்கள்
போதவு மணிந்தாராம்
இச்சிரமாம்தாம்பூலத்தைச் சாதித்தாராம் - சொம்பக்
கெவுனமாய்க்கொக்கோக சாஸ்திரம்சோதித்தாராம் - பரத
கேளிகை யுல்லாசமாய்
வேளும்ரதி நாணவே
தானுந்தானும் ஒன்றதாய்
நீளும்மைகள் பின்னலாய்
பொருந்திருவர்ஒன்றதாய்ச் சேர்ந்திட்டாராம் - மூன்று
போகஞ்செய்துகாமலாகிரி தீர்ந்திட்டாராம் - அப்பால்
புனலாடிச் சுந்தரச்சோமன்
மினுஞ்சொர்ணச் சரிகைச்சேலை
புனிதாகப் புனைந்தப்பாலே
கனகக்கட்டி லின்மேல்
அம்லதூளிகாமெத்தைமீதில் படுத்திட்டாராம் - இளர்ந்து
அணைந்துநித்திராதேவிக்கேசித்தை கொடுத்திட்டாராம் - மேலும்

அதிகநித்திரை சாதித்தல்
அதிகசத்ரு வென்பதால்
விதிவசத்தால் ருக்குமியே
சதியாம்நித்திரை நீங்கியே
கட்டிலையுங்கணவனையுங் காணாததினாலே - தனது
கணவன்மறைந்தமார்க்கஞ் சற்றும்தோணாததினாலே - வச்சிர
காயமுழுதும் வாடியே
தாயிழந்த பிள்ளைபோல
ஆவென்றும் பரந்துதான்
வாயுநாவு முலர்ந்துதான்
மகிழ்நன்பாதம்மிகவும்வேண்டித் தொழுதிட்டாளாம் - ருக்மி
மண்ணின்மேல்விழுந்து கதறியழுதிட்டாளாம்
மானயன ருக்குமிதேவி
தானழுத சத்தங்கேட்டு
ஏனழுதா யென்றுதான்
நானுஞ்சென்று கேட்கவே
நடந்தசேதியித்தாவென்று உரைத்திட்டாளே - இரண்டு
நயனநீராலெந்தன்மனதைக் கரைத்திட்டாளே - முடியும்
நாரிழந்த பூவைப்போல்
காரிழந்த பயிரைப்போல்
வேரிழந்த தருவைப்போல்
ஊரிழந்த அகதிபோல்
சென்மமெல்லாம் நடுநடுங்கிவாடுறாளே - அவள்
சீவனைமாய்க்கும்விதந்தான் தேடுறாளே - சுவாமி
செந்தாமரைப் பாதனே
உந்தன்சொந்த மருமகள்
விந்தைநாரி தேவிதான்
வந்துஇந்தச் சேதமே
செவியிற்கேட்டுக்கதறிப்புலம்பி அழுகிறாளே - அவளி
காசில்மோதியடித்துமண்ணில் விழுகிறாளே - எழில்
சகம்புகழும் எழில்கொண்ட
மகனேமகனே உனதுதிரு
முகமேகாணாததினாலே
நகரேபாழாச் சென்சொல்லி



மதிமயங்கிமண்ணுங்கல்லும் அருந்துறாளே - வுயிர்
மாய்த்திடும்விதங்கள்தேடி வருந்துறாளே - நான்
வந்திந்த வரலாறெல்லாம்
எந்தன்காதிற் கேட்கவும்
எந்தன்கண்ணிற் பார்க்கவும்
சிந்தைதடுமாறுது
சென்மமெல்லாந்துயர் நிறைந்துஆவிசோருதே - போன்
திருமுகமெப்பக்காண்போமென்று மனதுகோருதே - நல்ல
சித்திர வித்தாரனென்
புத்திரன்றன் பாலகன்
உத்தம வசிகரன்
இத்தனைநாளுமென்னுடன்
அன்னனன்மகனைத்தானே விட்டுப்பிரியவில்லையே - இந்த
அனியாயந்தானிங்கேவந்து விடியவில்லையே - நல்ல
அன்னத்தைப் பகைக்குது
சொன்னத்தை வெறுக்குது
வன்னத்தைக் குலைக்குது
கன்னத்திற் கைநாடுது
இத்தனைதுயரவாதை பொறுக்கமாட்டேன் - மண்ணில்
இனியெந்தனுயிரைவைத்து இருக்கமாட்டேன் - துயரம்
இப்பிறப்பை விட்டினி
அப்புறம்போ வென்றெனைக்
குப்புறவே தள்ளுது
எப்படிநான் பிழைப்பது
அகிலதேவிக்குமெனக்கும் பொருத்தமில்லையோ - நாங்கள்
அழுதுயிர்விடுவதுனக்கு வருத்தமில்லையோ - இந்த
அச்சம்நீக்கி நன்மையாய்
ரட்சிக்கவே யெங்கள்மேல்
பட்சம்உண்டோ யில்லையோ
நிச்சயம்நீர் சொல்லுவீர்
உள்ளசேதியிதுதான்சாமி பிராணநாயகா - புவியை
உண்டவனோரண்டைந்த ஞானநாமதேயகா,

பொது விருத்தம்.

துதிப்பொருமின் றுதிதொட்டு அந்தமட்டும்
 தாசனவுந்தப்பாமற் சொல்லக்கேட்டு
சதிக்கவல்லானிந்தவித மொன்றுந்தாணு
 தவனெனவுஞ்சுதனிமேந்தான் சடைகொண்டு
மதிக்குட்பெருந்துயரடைந்தான் போலேகண்ணீர்
 வருஷித்தென்விதியிதென்று வாடும்போது
விதர்ப்பன்மகள்ருக்மெனிறைணி மால்வாட்டத்தை
 வென்றிட்டாள்பின்னையும் நவின்றிட்டாளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமணிதேவியானவள் சகல சங்கதிகளையும் ஆதியோடந்தமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறபோது ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் ஒன்று மறியாதவரைப்போலே கன்சமிக்கைசெய்து கொண்டு தானும் மகாவிசனப்படுகிறவர்போ லிருந்தார். அதைக்கண்ட ருக்குமணிதேவியானவள் கிருஷ்ணமூர்த்தி கொண்டசோபதாபம் நீங்கும்படியாய் பன்னீர் தெளித்து ஆலவட்டங்களால் விசிறி சயித்தியோபசாரங்களைச் செய்ய கிருஷ்ணபகவான் சோபம்நீங்கி எழுந்து உட்கார்ந்தார், அப்போது ருக்குமணிதேவி சொல்லுகிறது எப்படியென்றால்.

ருக்குமணி லாவணி-தரு.

க. வேதவேதஜக நாதகிதவிநோதா - ஜய
 வீராமஅய தாரந்தன்னிலெழில்
 சேதா - ச - மேதா..

பூதலமுழுதுந் நீதிலாதளந்தபாதா - புகழ
 வேண்டும்பாதந்துதி பாண்டுமைந்தர்தங்கள்
 தூதா - பிராண - நாதா

உ. நாஷ்டிகம்விலக்கி வாட்டுந்துயரந்தனக்காளாய் - நான்
 தவிக்குந்துயரமுந்தன் செவிக்குநேற்றுஇப்பக்
 கேளாய் - மலர்த் - தாளாய்.

காட்டில்ரமதுசுதன் தேட்டமானவெழில்மாரன் - மகன்
 நமக்கும்உமக்கும்புகழ் சுமக்கும்கவின்மிகுந்த
 போன் - இவகு - சூரன்.

௩. சந்திரக்கட்டிலுடன் எந்தத்தீவில்மறைந்தானோ - அல்ல
 சனனம்சுத்திசெய்து கனகவுல்கிற்பறந்
 தானோ - மறந் - தானோ.



இந்திரஜாலவித்தை மந்திரவாதிகள்செய்ததிதோ - அல்ல
 தெட்டிக்காய்க்குணத்துத் துட்டராட்சதர்கள்
 தோதோ - செய்த - சூதோ.

௪. சூரர்களுடன்கந்திருவர் செய்தசதிதானோ - வெகு
 தோஷம்வருந்திய பசாசினங்கள்செய்த
 வேனோ - நிசந் - தானோ.

உருவமாறிவந்துநாறசனங்கள் செய்ததோஷமோ - நல்ல
 உசிதவார்த்தைசொல்லி அசுரர்தானுஞ்செய்த
 மோசமோ - பரி - காசமோ.

௫. மையதாகச்சித்தர்செய்ய நினைத்திடுமபாயமோ - உரு
 மாற்றஞ்செய்துவந்து கூற்றுவன்செய்தவு
 பாயமோ - என்ன - மாயமோ.

வெய்யமதிமுகமும் வெய்யல்படாதுக்குமுன்பாரோ - ஞானி
 விடியற்காலத்திற்குள் சடுதியாய்க்கொண்டுபோ [ந்து
 னாரோ - யெந்த - ஆரோ.

௬. பாகுமொழிருக்மி நாகரீகசுகம்போக்கவே - தன்
 பதியைக்காணேனென்று அதிகமானதுய
 ரக்கவே - அதைப் - பார்க்கவே

ஆசந்தாள்வதங்கிச் சோகமிறிமுகம்வாடுதே - எந்தன்
 ஆவிகூடுவிட்டுப் போவமென்றுபழி
 போடுதே - வழி - தேடுதே.

௭. வாதும்பொய்யும்பழி சூதுந்தீதுந்தெரியேனே - மதன்
 மைந்தன்றான்மறைந்த தெந்தவிதமென்றறி
 யேனே - பாவி - நானே

நாதனேயிக்கவை நீதெரிந்துசொல்லக்காணுமே - செய்ய
 நயனனேயெனது துயரம்நினைந்துசொல்ல
 வேணுமே - சுகந் - தோணுமே.

௮. சருவலோகந்துதிகிருபை தங்கியபொற்பாதமே - ரண்டின்
 சாட்சியாயெனக்கு வாச்சுநேயதிக
 சேதமே - வி - சோதமே

இரதிமைந்தனுக்குச் சிறுவனில்லையென்றபேறே - பயந்
 தெட்டப்போனதிப்போ கிட்டவந்ததைப்
 பாரே - அவ - தாறே.

ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி விருத்தம்.

காகமாமணியுருக்கு மணியேகேளாய்
நமதுசுதன்சுதனழகின் நலந்தானந்தி
ஆகருஷ்ணம்தம்பனம் பேதனவுச்சாடம்
அஷ்டகருமமந்த்ரதந்த்ர மகேந்த்ரஜாலம்
வேகமுள்ளவேற்கலைநன் கட்டுவித்தை
விஞ்சிகற்றமெல்லிநல்லார் வேஷமாறி
மோகமுடன்தானெடுத்துப் போய்மறைந்த
மோசந்தான்காண்பது பிரயாசந்தானே.

வசனம்.

அகோகேளும் ருக்குமணியே! நமது பேரனுடைய ரூபலாவண்ணிய சுந்தரத்தைக்கண்டு இந்த்ரஜால மகேந்த்ரஜாலம் வசியம் மோகனம் தம்பனம் ஆகருஷ்ணம் வித்துவேஷணம் முதலான வித்தைகளைக்கற்றபெண்கள்யாரோ வஞ்சனைசெய்து எடுத்துக்கொண்டுபோய்விட்டதாகக் காணப்படுகிறது, இனி அவனைக்கண்டு பிடிப்பது அசாத்தியமாயிருக்கிறது ருக்குமணியே.

ருக்குமணியம்மன் சோபமடைதல்

போது விருத்தம்

அஞ்சுகனையான்தந்தை இவ்விதமாய்த்தானே
அறைந்திடவேஉருக்குமணி யம்மன்கேட்டு
ஒஞ்சரித்தபார்வைகொண்டு பெருமூச்சிட்டு
உடைமையெல்லாங்கழற்றியரி முன்பாய்வைத்து
வஞ்சகிமாபாவியும்நா னென்றேகண்ணீர்
வருஷிக்கேயுயிர்பிழைக்க மாட்டேனென்று
கொஞ்சுகிள்ளைமொழிகுழறித் தாஷ்டீகந்தான்
குறைந்திட்டாள்சோபிதந்தான் நிறைந்திட்டாளே.

வசனம்.

இப்படிப்பிரகாரம் கிருஷ்ணமூர்த்தியானவர் சொல்லக்கேட்ட ருக்குமணியம்மன் மகாவிசனமடைந்து தனது உடைமையெல்லாங் கழற்றி சுவாமிபாதத்திலே வைத்துப்போட்டு இனிநான் உயிர்வைத்திருக்கமாட்டேனென்று சோபதாப மடைந்தாள்.

போது கந்தார்த்தம்.

பூலைகளிற்புனிதநகர்களில்
மாதமொழி ஆடன்மருவுமிடங்களில்
சோதிக்கவேனைசுவாமிசொன்னதற்
கேதுசெய்வனெனஇருதயத்தினில்



என்னுடெதல்லாமென்னிருள் - மாயந்திடுஞ்செய்கை
எதுவோஅது நன்னிருள்
பெண்ணாய்ப்பிறந்தபேர்க்கு எண்ணமதிகமென்று
எண்ணமிகுந்தபேர்க்குக் கண்ணீரதிகமென்று. (என்)

௨. வாழ்ந்ததினிச்சரி வையகந்தனில்
நாந்தகத்தனை நாட்டியதுதனில்
வீழ்ந்துபிராணனை விடுவனெனச்சொலி
காந்தன்றனதிரு கமலமலர்ப்பதம்
கருணையாய்த் தொழுதாள் - போனேசினேந்து
கண்ணீர்விட்டழுதாள்
தரணியெங்கும்பயந்த இரணியாசுரனைத்தானே
திரணமாகவேகொன்ற அருணம்மால்பொற்பாதம் (கரு)

௩. மொழியுங்குளறியே முகமும்வாடியே
விழிகள்சுருங்கியே விதலைபொருந்திய
மழையைப்பழித்திடும் மயிருங்குலைந்திதழ்
அழகுமொதுங்கியே ஆவிபதறியே
ஆகமெலாம் வாடினாள் - வேதனைகொண்ட
அலகைபோற் பேச்சாடினாள்
நாகமானதுதான்குலைந்திட யூகமானதுதான்குறைந்திட
தாகமானதுதானிறைந்திட சோகமானதுதான்மிகுந்திட (ஆக)

௪. சுதனழித்திடுஞ் சுதனைக்காண்பது
அகப்பிரயத்தனம் அவதிக்கிடமெனும்
பதிசலிப்புடன் பகரக்கலைநிறை
மதிநிகர்த்திடும் வதனருக்மணி
மனநொந்துதளர்ந்தாள் - பிரக்கினைதப்பி
மயங்கியேவிழுந்தாள்
வனமிழந்தமனைபோலும் கனமிழந்தகரிபோலும்
சனமிழந்ததுரைபோலும் இனமிழந்தகரைபோலும் (மன)

போது விருத்தம்.

மஞ்சனருள்சுதனைநினைந் துயிர்போம்வண்ணம்
வருந்திமதிமயங்கிமலர்ப் பதத்தில்வீழ்ந்து
சஞ்சலத்தாற்பயந்ததிசோ பிதந்தான்கொண்ட
சந்த்ரமுகருக்மணியைச் சாமிதானே

கஞ்சமலர்க்கரங்கள்தனை நெடித்தணைத்தென்
காமரசேமாதரசே கற்கண்டென்றும்
அஞ்சனக்கண்ணீர் துடைத்துத் திகிலாற்றியை
ஆற்றுவாறுறுதிசொலித் தேற்றுவானே.

ஸ்ரீகிருஷ்ணர் கந்தார்த்தம்.

க. பருவத்தகற்பினிலேபெற்றபெண்கள் மனதொப்புங்கணமேமெதங்
கருதிக்குகந்தபொருளைத்தெரிந்து துயரத்தை வெல்லல்சுகமே ரூம்
கருதிச்சிறத்தல்அறமிட்டுயர்தல் கதமற்றிருத்தல்தகுமே
தருமத்தைநினையா ததர்மத்தையெண்ணிப்

படுத்தேகுடி கெடுத்தேழையை
அடுத்தேநலம் விடுத்தேசுதல்
தருமோ பத்தினியே - ருக்மணியே
சர்க்கரையே முக்கனியே
செகமெலாநிறைந்திடும் பகவானெனவனு தன்
மகிழ்நனுகவேநீதான் அகதிபோலலைவது. (தரு)

உ. நெடிதானசற்குணமின்னேயுனக்கு நிசமாகச்சொல்வன்கேளாய்
வடவாக்கினிக்குஇணையாய்ச்சிவந்து மதியாதெதிர்த்த துயரம்
பட்டாதொதுக்கிசுகமேகொடுக்கப் பதிநானிருக்கசதிநீ
வடிவாம்சித்ரத்தை நிகராம்உடலத்தை

வளைத்துந்துயர் சிளைத்தும்களை
தழைத்தும்மிக இளைத்தும்மட
மானே தியங்காதே - கற்கண்டேசெந்
தேனே தியங்காதே
நீனேகுறைப்பதும்பழி வேனே நினைப்பதும்துயர்
தானேவிளைப்பதும்இவை தானேதனக்குக்கேடு. (மா)

௩. சிலம்பொருந்துநாளம்புனுகத்தர் தேட்டம்மிகுந்தபன்னீர்
மேலுஞ்சவாதுதாளாஞ்சுகந்தம் மிகவேமணக்குங்கந்தம்
காலம்புகழ்ந்தஇருவாட்சிமுல்லை சாதஞ்செவ்வந்திதாழை
கோலஞ்சிறந்த பூச்சூடுங்கூந்தல்

குலைந்தேஎழில் உலைந்தேமதி
கலைந்தேமிக அலைந்தேஇளம்
குயிலே அழுகாதே - தரைதனிலேயாயில்
மயிலே அழுகாதே



கயலும்வாளுமம்பேலும் அயலாம்அற்புதமானும்
செயலுங்கூர்மையைத்தேடும் மைசார்கண்கள்பிசைந்து. (குயி)

சித்ரஞ்சிறந்தசோமன்புனைந்த சேமம்மிகுந்தவசனி
முதம்பெறம்பக்தெள்ளால்தாறுயிம் மூன்றும்மிசைந்தருமொழி
சாதந்திகழ்த்துபானும்நெய் நன்னல் சார்தேனினித்தவசனி
வரஞ்சொல்லாத வேதங்கள்மெச்சும்

இணக்கம்பெறு வணக்கத்துடன்
மணக்கும்நய குணச்சித்ரமே
எந்தனிரு விழியே - தைரியம்விடாதே
எழில்சேர் பைங்கிளியே
மந்திரதந்திரத்திலும் எந்தவிதத்திலும்
உந்தன்போலேயிங்கே வந்துசேரவுஞ்செய்வேன். (எந்த)

பொது விருத்தம்.

இந்தவிதம்கண்ணபிரான் சிந்தைதன்னில்
எண்ணமிட்டுமௌனமதா யிருக்கும்போது
சுந்தரஞ்சேர்அனிருத்த ராசன்றன்னைத்
தூங்குமஞ்சக்கட்டிலுடன் தூங்கும்போது
விந்தையதாய்க்களவுசெய்து போனதென்று
விளம்பவரும்செய்தியெல்லாங் கேட்டங்குள்ள
தந்திரஞ்சேர்மகுடமன்னர் பலருங்கூடிச்
சார்ந்திட்டார்சுவாமியிடஞ் சேர்ந்திட்டாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் ஒன்றுமறியாதவர் போலே மௌனமாயிருக்கிறபோது அனிருத்தமகாராசனை தூங்கு மஞ்சக்கட்டிலுடனே யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்களென் கிற சமாசாரங் கேள்விப்பட்டவுடன் ராசாதிராசாக்க ளெல்லாருங் கூடி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின்சமுகந் தேடிவருகிறதெப்படியென்றால்.

பொது விருத்தம்.

கதிரொளிமின்னிட்டோடக் கனமணிமகுடம்பூண்டு
அதிவிதபுயக்கீர்த்தி யாரங்களுடைவிற்பூண்டு
விதவிதப்படைகளேந்தி வீரங்கள்மிகவுங்கூறி
சதிருடன்மன்னர்வந்து சாமிமுன்சேர்ந்திட்டாரே.

வசனம்.

அதேதெப்படியென்றால், சகலமான ராசாதிராசாக்களும் சிரசி லே நவரத்தினகிரீடமணிந்து புயகீர்த்தி வாகுவலயம் ஆரநூபுர கடக

கங்கணம் முதலான ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு ஆண்மைகள் பேசிக்கொண்டு பலவிதமான ஆயுதங்களை யேந்திக்கொண்டு வீரங்கள் பேசிக்கொண்டு பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் முழங்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் சமுகந்தேடிவருகிற தெப்படியென்றால்.

தரு-௩-ம்-மத்தியமாவதி ஆதிதாளம்.

பல்லவி.

ராஜாதிராசரும் வந்தார் - வேடிக்கையாக
ராஜாதிராசரும் வந்தார்.

அநுபல்லவி.

ராஜாதிராஜர்மகிழும் தேசாதிதேசர்புகழும்
ராஜாராஜர்புகழ்ராஜ ஆரோக்கிய ராஜாராஜமானியராஜசிலாக்கிய (ரா)

சரணங்கள்.

௩. சாத்தகிதால கேதனும் - உக்ரசேனனும்
சாம்பன்வேதகி நாதனும்
ஏத்தாதி சமேதனும் - ராஜாதிராஜர்
இன்னும்அநேக போதனும் - ஒருவர்க்கொருவர்
அணுகாமலே தொடர்ந்து
க்ஷணமாகவே நடந்து
அண்டர்முனிவர்புகழ் தனுதினந்தேடியே
கொண்டல்வண்ணனிட கொலுவினைநாடியே. (ரா)

௪. இரத்நக்கிரீடங்கள் சூட்டியே - நுதல்கள்தன்னில்
திருநாமங்களைத் தீட்டியே - கழுத்திலன்றாய்
முத்துச்சரங்கள் பூட்டியே - தோள்களிற்றங்க
முகிழ்சேர்சேக்குகள் நாட்டியே - ரத்நபாரங்கள்
மின்னவுரங்கள் தன்னில்
இன்னலங்காரங்கள் தன்னில்
முச்சுடரெனவொளிர் வாள்களிலங்கிட
பச்சிடவங்கிமெய் மீதுதுலங்கிட. (ரா)

௫. வேதங்கள்நான்குஞ் செழிக்கவே - உல்லாசங்கண்டு
விண்ணோர்கள்துள்ளிக் களிக்கவே - எல்லார்மீதும்
மாதர்பன்னீரைத் தெளிக்கவே - வேதியர்நன்றாய்
வாழ்த்தியட்சதை யளிக்கவே - பாங்குடன்வந்த



மன்னர்சாமரம் வீச
மின்னார்புகழ்ந்து பேச
மங்கையரிங்கித மென்றும்மதித்திட
செங்கதிர்தங்குலொளதுங்கமுதித்திட. (ரா)

௬. பேரிசெண்டைக ளடிக்கவே - தனாகரீமெனப்
புள்ளாங்குழல் பிடிக்கவே - ஆலாத்திகளைக்
காரிகைமார்க ளெடுக்கவே - கட்டியக்காரர்
கட்டியங்கள் படிக்கவே - மகராஜரென்று
கவிராஜரும் துதிக்க
சிவத்தியானரும் மதிக்க
கங்குலைநீக்கிய கதிரவன்புகழவே
நங்கையருஞ்சிலர் நாட்டியத்திகழவே. (ராச)

௭. நந்தன்அசோதைக்குஞ் சேயனே - தேவதேவனே
நானுவிதவு பாயனே - பிரம்மதேவனை
உந்தியிலீன்ற மாயனே - வெண்ணெய்தயிரை
யுண்ணுஞ்செங்கனி வாயனே - தாமோதரனே
உலகேழும்உண்டோனே
இலைமேற்பள்ளிகொண்டோனே
உம்பர்கள்நாதனே வுலகளந்தோனென
நம்பினற்கருள்தரும் நாராயணவென (ரா)

ராஜாக்கள் விருத்தம்.

மாதவாபோற்றிபோற்றி வாமனாபோற்றிசெல்வி
காதலாபோற்றிபோற்றி கருடவாகனனேபோற்றி
ஆதவகுலத்தாய்போற்றி அச்சுதானந்தாபோற்றி
சீதராபோற்றியுன்றன் சேவடிபோற்றிபோற்றி.

வசனம்.

அகோ ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகம்பீர ராஜவுத்தண்ட ராஜகோலாகலா, அகிலாண்டகோடிப் பிரம்மாண்ட நாயகா, ஆதிபராபர வஸ்துவே, உன்னுடைய திருவடிகளுக்குச் சரணஞ்சரணமையா சுவாமி.

ஸ்ரீகிருஷ்ணர் விருத்தம்.

இஷ்டமுடனே துதிக்கு மன்னர்கேளீர்
எந்தன்மகன்மைந்தனெங்கே யேகினானோ

கட்டி யுடனேயெடுத்துக் கொண்டுபோனார்
கள்ளர்களோவின்னுலகக் கன்னிமாரோ
துட்டர்களோராட்சதரோ அசுர்தானோ
ருதுசெய்தார்விஞ்சைகந்த சுரமின்னோரோ
அஷ்ட திக்குப்பாலகரோ, இன்னாரென்று
அறிந்துசொல்வதுங்கள்கடன் அரசரே.

வசனம்.

அகோகேளுங்கள் ராசாதிராசாக்களே! என்னுடையபேரனாகிய அனிருத்தமாராசன் போனவிடந்தெரியவில்லை, தேவஸ்திரீகள்களவுசெய்துக்கொண்டுபோனார்களோ, இன்னும்யார்செய்தவஞ்சனையோ தெரியவில்லை, ஆகையினாலே நீங்களெப்படியாவது அவனிருக்குமிடத்தைத்தேடிக்கண்டுபிடித்துவாருங்களய்யா மகாராசாக்களே.

இராஜாக்கள் விருத்தம்.

அச்சுதனேவுனதுதிரு வுளந்தான்காணா
வதிசயங்களில்லையிது வறிந்துசொன்னால்
மிச்சமெனும்நயனாதி பாலன்றன்னை
மந்திரத்தின்வலிமையினால் கொண்டுபோனார்
நச்சரவக்கலனணியும் சிவனானாலும்
நார்சுரரைவெற்றிகொளும் நமனானாலும்
வச்சிரகரத்தோனானாலும் போரில்வென்றுன்
மகன்சுதனைக்ஷணங்கொண்டு வருவோம்சுவாமி.

வசனம்.

வாருமையாசுவாமி சர்வலோகதயாபுரா ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே! உம்முடைய திருவுளமறியாத காரியங்கள் எந்தலோகங்களிலுமில்லை அவனிருக்கிறவிடத்தைத் தேவரீர் எங்களுக்குத் தெரிவித்தால் அவனைக்கொண்டுபோனவர்கள் [illegible] நாங்கள்போய் மீட்டுக்கொண்டுவருகிறோமையாசுவாமி.

போது விருத்தம்.

ஞாலமன்னரிவ்விதமா யுரைக்கக்கேட்டு
நாரணனும்நல்லதென்று னப்பால்விண்ணில்
நீலமுகிலினஞ்செறிந்தே யெழுந்தாற்போலும்
நிலமதிரப்பேரிகை வாத்தியங்களார்ப்ப
[illegible] வெருவப் பின்னும்கோடி
[illegible]தேர்பரிகள் கரிகளோடும்



நாலிரண்டு திசையெங்கும் வளைந்துசூழ்ந்தார்
நடக்கைகுறிதொழில்விபரம் நவிலுவோமே.

வசனம்.

இந்தப்பிரகாரம் ராசர்கள்சொல்ல, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியும் சரியென்று தலையசைத்தார். அந்தவேளையில் ஆகாசவீதியிலே நீலமேகங்கள் வந்து வளைந்தாற்போல, அநேக யானை குதிரை தேர்களுடன் பேரிவாத்தியங்கள் டமடமவென்று அஷ்டதிசைகளும் அதிரும்படியாக வந்து வளைந்தார்கள். இப்படி ராஜாதி ராசாக்கள் வந்து கூடி அனிருத்த மகாராசனைக் கொண்டுபோனவர் யாரென்று கேட்டுக்கொண்டிருக்கிறபோது ஸ்ரீ நாரதமகாமுனிவரானவர் கிருஷ்ண மூர்த்தியின் சமுகம் தேடிவருகிற விதங்காண்க.

நாரதர்வருகிற-திபதை.

௧. ஆதியுமாகியநாதியுமாகிய
ஆனந்தமெய்ப்பொருளே - என்று
ஓதியுணர்கிறைத்தேதவஞ்செய்திடும்
யோகியருக்கருளே - வருந்
தீதெல்லாமோடிடச்செய்துசுரர்க்கருள்
தெய்வீகமாம்அருளே - தாரும்
மாதவனேநமோவென்றுமேநாரத
மாமுனிதோன்றினரே.

௨. சாலோகசாமீப சாரூபமாம்பதம்
தருஞ்சோமனும்சால்லியும் - புகழ்
மேலாம்பதவியிது தானென்றேயெல்லோர்க்கும்
விபரத்துடனேசொல்லியும் - இதில்
பாலாகுந்தயிராகும் தேனாகும்நெய்யாகும்
பதங்கள்பகிர்ந்துசொல்லியும் - பதி
னாலுலகின்செய லெல்லாந்தெரிந்திடும்
நாரதர்தோன்றினரே.

௩. காட்டினில்வாழ்ந்திடும் புலித்தோலிடையினிற்
கட்டினதே துலங்க - சின்ன
முட்டையொன்றிடையி லிலங்கவுமார்பினில்
முப்புரிநூலிலங்க - பின்னும்
சாட்டைகள்போலாலம் விழுதுபோல்தலைதனில்
சடைமுடி தானதுங்க - அந்த

நாட்டினிலுள்ளவ ரெல்லோர்க்குநல்லவர்
நாரதர்தோன்றினரே.

௪. கக்கத்தில்கன்றுக்கிர்ஷ்ணாசனந்தானக்
காதிற்குண்டலமிலங்க - அந்தச்
செர்க்கத்தோர்புகழுவே வேதச்சுவடிதானே
தோள்மீதினிற் றுலங்க - பின்னும்
பொக்கெனும்ருத்ராட்சத்தாழ்வடம் - கழுத்தினிற்
பூண்டதுதான்றுலங்க - நல்ல
வக்கணையாக்கைகள் வீசியேநாரத
மாமுனிதோன்றினரே.

௫. பெட்டகத்துள்ள திருநீற்றினுண்டைகள்
பெயரவேதான்பொடித்து - நல்ல
கெட்டுகெட்டாக வுடம்பெல்லாம்பூசியே
நேமங்கள்தான்முடித்து - பின்னும்
வட்டமதான கமண்டலமுந்தெண்டு
வலதுகையிற்பிடித்து - அசைந்து
மட்டடனேநடந் திஷ்டமாய்நாரத
மாமுனிதோன்றினரே.

௬. செம்பொன்னனேகங்கள் தந்தாலும்இல்லாத
சேதியைச்சொல்லாரென்றும - பின்னும்
ரம்பப்புகழ்ந்தாலும் தஜ்போனாலும்பொய்யைப்
நாக்கினிற்கொள்ளாரென்றும் - பின்னும்
சம்பளமில்லாமல் சேவகமுலகெல்லாம்
சலியாமற்செய்வாரென்றும் - என்னை
நம்புவாருலகத்தி லுள்ளோரெல்லாமென்று
நாரதர்தோன்றினரே.

௭. அரிகரியேநம நாராயணாநம
அச்சுதனேநமவே - நல்ல
கரியமாலேநம கோவிந்தனேநம
காகுத்தனேநமவே - நல்ல
பரியுருவோய்நம சிதரனேநம
பத்மநாபாநமவே - நல்ல
நரகரியேநம கிர்ஷ்ணாநமோவென்று
நாரதர்தோன்றினரே.



௮. சிவசிவசிவசிவ சிவசிவவெனசிதம்
சிவத்தியானங்களைப்பற்றியே - நேமம்
தவறாமலனுதினம் பூசைசெய்திடும்பேர்க்குத்
தானேவந்திடும் முத்தியே - பின்னும்
உவரியானதுவழும் சூழ்ந்திடுந்தரையுட
னுலகேழுஞ் சுற்றியே - பின்னும்
துவரைநகர்வாசன் கொலுவினில்நாரத
தூய்முனி தோன்றினரே.

பொது விருத்தம்.

நாரதனுமிவ்விதமாய் வந்துமாயோன்
நளினமலர்ப்பதந்துதிக்க நவில்வான்மாயோன்
வாருமையாநாரதரே சுகமோவென்ன
வந்தனம்நாரதருஞ் சுகந்தானென்ன
பாருலகிலுள்ளபல சேதியெல்லாம்
பார்த்தவர்போல் ஞானத்தாற்பரிந்துகாண்பீர்
தீரமுடன்இன்றறிந்த செய்தியெல்லாம்
தெரிவிப்பீரென்னமுனி யறிவிப்பாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் நாரதமாமுனிவர் வந்ததைக்கண்ட ஸ்ரீ கிருஷ்ண தேவர் வணங்கி க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக்கொண்டு வரும் நாரதமுனிவரே! நீர் திரிலோகசஞ்சாரியாகையால் உமக்குத்தெரியாத சேதியில்லையே, இன்றையத்தினம் ஏதாவது விசேடங்களுண்டானால் சொல்லுமென்றுகேட்க, அப்படியே நல்லது சுவாமியென்று நாரதர் சொல்லுகிற விதங்காண்க.

நாரதர்-திபதை-இ-ம்-ஏதுகுலகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

க. அண்டர்பதிதனிலானிரை மேய்த்திடும்மாயா - இந்த
எண்டிசையண்டங்களுண்டுமிழ்செங்கனிவாயா.

உ. தேவகிக்கும்வசுதேவனுக்கும் ஏழித்பாலா - நல்ல
கோபஸ்திரீகளுடன் கொஞ்சிவிளையாடும்லோலா.

௩. மாதவஅச்சுத மாலவபத்தவதாரா - நல்ல
சோதியேமாயசொரூபனே துஷ்டசம்மாரா.

௪. பதுமநாபாசுதத்தபத்தர்கள் மீதுதயாளா - ராஜ
பதியெனும்தசரதபாலனே சீதைநயனா.

௫. தெள்ளியனாகிய செந்தாமரைமலர்ப்பாதா - நீதா
னெள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்தவித்தா.

௬. மாயனேநீயில்லாமண்ணும்விண் ணெங்கினுமில்லையே - ஜக
மாயனேநீயில்லாமறைகளுஞ் சாஸ்திரமில்லையே.

௭. எல்லாந்தெரிந்திடும் ஏகபராபரா வுனக்கே - சேதி
சொல்லுவதேதென்று சும்மாயிருந்திட்டாலெனக்கே.

௮. வாட்டமில்லாமலேவயிறா றிக் கொள்ளுதிப்போது - மிகப்
பாட்டியுப்பிசம் பொறுத்திடவென்றாலாகாது.

௯. ஆகையாலேயிப்போ வையனேயுன்புகழோதி - பணிந்து
சேகரமாகவேசெப்பவந்தே னுள்ளசேதி.

௧௦. ரஞ்சிதனேயத்த ராத்திரிவேளைசிமானே - உந்தன்
மஞ்சன்மகன்அனிருத்தம மன்னனைத்தானே.

௧௧. சுந்தரனேகேளுஞ் சோணிதாபுரிராசன்தாது - பெற்ற
சந்ததியானவுடாங்கனையென்று சொல்மாது.

௧௨. சேகரமேவியசித்ரரேகை யெனுந்தாதி - வெகு
வேகமாய்ப்பறந்திட விஞ்சைமந்திரந்தனையோதி.

௧௩. அந்தரமாய்ச்சகி யிந்நகர்வந்துசேர்ந்து - மாய
மந்திரத்தாற்சொர்ண மாளிகைக்குள்ளாசப்பூந்து

௧௪. புருஷனும்தேவியும் இருவரைவேறாகப்பிரித்து - க்ஷணம்
தரைமீதுருக்குமித் தையலைக்கைவிட்டுச்சரித்து.

௧௫. காரணனேயுந்தன்பேரனைக் கட்டிலோடேந்தி - க்ஷணம்
ஆருமறியாமல் ஆகாயமார்க்கத்தில்நீந்தி.

௧௬. விந்தைமிகுந்திடும் வேள்மகன்றனை மறித்தாளே - பாங்கி
சந்திரச்சேக்கையுடாங்கனை முன்புவைத்தாளே.

௧௭. தூக்கந்தெளிந்தன்பேரன் ரூரன்மகளெழில்பார்த்து - மயல்
தீர்க்கவந்தாளான தெரிவையென்றேமனஞ்சேர்த்து.

௧௮. ஆவியுமுயிருமொன்றாகவு மிந்திராணிமாது - கூடந்
தேவேந்திரன்போலச் சேர்ந்துவிளையாடும்போது.

௧௯. காரணக்கோலத்தைக் கண்டார்களேசிலமின்னார் - அதைச்
சூரனுடனேபோய்ச் சோதனைமாநர்கள்சொன்னார்.



௨௦. சினமுற்றிச்சூரனும் தேரிலேறிப்புறப்பட்டான் - க்ஷணம்
அனிருத்தன்மீதினில் அசுரரையேவியேவிட்டான்.

௨௧. வேகமதாய்வந்த வீரரைநொடியிற்கொன்றானே - வாணன்
ஆகாயமார்க்கத்தின்மறைந்து க்ஷணத்திற்சென்றானே.

௨௨. பாதகனும்நாகபாசத்தை யேவிவிட்டானே - அதி
சீதாரவுன்பேரன்சேஷனாற் கட்டுபட்டானே.

௨௩. கண்டிதமாய்பாசக் கட்டுடனேபிடித்தானே - வாணன்
கொண்டுடனேசிறைக் கூடத்திற்போட்டடைத்தானே.

௨௪. உண்டானசேதியை யொழியாமல்நான்சொன்னேன்சாமி-இனி
அண்டருலகம்போய் அடியேனும்வாக்ருபைநேமி.

## போது விருத்தம்.

விண்டுவுமவரைச்சார்ந்த வேந்தருமிதஞ்சொல்லாத
தண்டுதானியங்களோடு தளகர்த்தரோடுமீசன்
தொண்டனும்வாணசூரத் துரைநகரெல்லைசேர்ந்து
மண்டலநடுக்கத்தானே மணிமுரசறைந்திட்டாரே.

## வசனம்.

இந்தப்பிரகாரம் நாரதமகாமுனிவரானவர் சகல சங்கதிகளையும் சொல்லக்கேட்டவுடன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அனேக சேனைசனியங்களுடன் அதிகவேகமாகப் புறப்பட்டு வாணாசுர மகாராசனுடைய பட்டணத்திற்குச் சமீபமாகப்போய் வளைந்துகொண்டு ரணபேரிகை அடித்தார்கள், அந்த ஆரவாரங்களைக்கேட்ட வாணாசுரன் தன்னுடைய சேனைவீரர்களைப்பார்த்துச் சொல்கிறது எப்படியென்றால்.

## வாணாசுரன் விருத்தம்.

மந்திரிமாரேகேளீர் வலியுறுவீரர்கேளீர்
அந்தரம்நடுங்கக்காது படைபடஅசுரர்நாண
துந்துமிமுரசங்கொண்டு சேர்ந்திடக்கருதும்தன்மை
எந்தமார்க்கந்தானென்று எதிர்த்திருந்துவாரீர்.

## வசனம்.

அகோகேளீர் மந்திரிமார்களே! படைவீரர்களே! இப்போது சத்துராங்கசேனைகள்வந்து நமதுகோட்டையை வளைந்துகொண்டு ஆரவாரஞ்செய்கிற காரணந்தெரியவில்லை. நீங்கள் சீக்கிரமாகப்போய்த் தெரிந்துவாருங்கள் மந்திரிகளே.

மந்திரிமார் விருத்தம்.

அரக்கருக்கரசேநாங்கள் அனைவரும்பார்த்துவந்தோம்
செருத்தனைநடத்தவந்தார் செய்கைபோற்காணுதெந்தத்
தெருக்களுங்கடுகிநிற்கும் தேர்கரிபரிகள்தன்னின்
பெருக்கமுந்தொகைப்பெண்ணிப் பேசவுங்கூடாதையா.

வசனம்.

அகோகேளும் வாணாசுரமகாராசனே! நாங்கள்போய்ப் பார்த்து வந்தோம் நமதுபட்டணத்தை யாரோ சத்துருக்கள் சேனைகளோடு வந்து வளைந்துகொண்டார்கள்போற் காணுதையா மகாராசனே.

வாணாசுரன் வசனம்.

அகோவாருங்கள் சேனைவீரர்களே! சீக்கிரம் நமதுசேனைகளை அணிவகுத்து யுத்தத்துக்குப் புறப்படுங்கள்.

சேனைவீரர் வசனம்.

அப்படியே நல்லதையா சுவாமி.

பொது வசனம்.

இப்படிப்புறப்பட்ட இருதிறத்தார் சேனைகளும் கடலுடன்கடல் எதிர்த்ததுபோல் எதிர்த்து யுத்தஞ்செய்கிறது எப்படியென்றால்.

சிபதை-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

கண்ணிகள்.

௧. தேவகிக்குமக னானவன்படையும்
மாவலிக்குமக னானவன்படையும்
இனந்தடர்ந்து கைகலந்தனர்
தேவர்நாணத்தானே.

௨. மண்டியிட்டுச்சிலர் அடைகளைத்தட்டியே
முண்டினவர்தங்கள் தலைகளைவெட்டியே
மன்னரவுணர்கை கலந்தனர்கள்
மலைகள்நடுங்கத்தானே.

௩. சீறிச்சினந்தவர்கள் மெய்கள்நெருங்கிட
பாரிவந்தவர்கள் கைகள்நொருங்கிட
தேருந்தேருமே தாக்கினர்
இல்லுச்சில்லாகத்தானே.

௪. சுத்தவீரர்கள் மீசைமுறுக்கியே
மெத்தமெத்தவும் வார்த்தைகள்பெருக்கியே
சூலஞ்சூலமுந் தாக்கினர்
கடலேழும் பத்தானே.



௫. விற்கொடிந்துசிலரோட்ட மெடுக்கவும்
பல்லுதிர்ந்துசிலர் சாய்ந்துபடுக்கவும்
வேலும்வேலுமே தாக்கினர்
சிலவேந்தர் நடுங்கத்தானே.

௬. பாரடாவென்று பவுருஷம்பேசியே
ஆரடாவென்றமுன் ஆண்மைகள்பேசியே
பாணபாணமுந் தாக்கினர்
திக்குப்பாலர் நடுங்கத்தானே.

௭. எட்டிஎட்டிப்பல மல்லருதைத்திட
மட்டிலாமலே யவுணர்கள்செத்திட
மீட்டிமீட்டியுந் தாக்கினர்
எமனும் நடுங்கத்தானே.

௮. மண்டைகள்கிழிந் தூளைகள்சிதறிட
கண்டவர்பயந் தாவிகள்பதறிட
மழுவுமழுவுந்தாக்கினர்
சவையெழும் பத்தானே.

௯. மாயவன்றன்னைச் சார்ந்தசனங்களும்
ஆயிரங்கரன் சேனையினங்களும்
வாளும்வாளுமே தாக்கினர்
சிலமன்னர் நடுங்கத்தானே.

௧௦. வாடிவாடிச்சில பேய்களுமாய்ந்திட
ஓடியோடிச்சில பேய்களுமோய்ந்திட
வலியும்வலியுந் தாக்கினர்
வட்டவையெழும் பத்தானே.

௧௧. காலொடிந்து புறம்பொடிந்தது
வாலறுந்து விழுந்துபொடிந்தது
கரிகள்திரண்டகூட்டமே
குதிரைக்கூட்டந்தானே.

௧௨. ஆற்றிநாறுபோல் தோல்கள்கிழிந்திட
சேத்துமண்ணெனமாம் சங்குழைந்திட
அதலகுதல மாகியே
ஆனைக்கூட்டந்தானே.

௧௩. சாய்ந்தொடிந்தது சில்சிலாதங்கள்
பேர்ந்தொடிந்தது சிலசிலாதங்கள்
தளர்ந்துவீழ்ந் தொடிந்திடவே
சிலாதங்கள் தானே.

௧௪. கோப்பழிந்தது சிலசிலாதங்கள்
மேப்பழிந்தது சிலசிலாதங்கள்
குலுங்கிக் குலுங்கிவீழவே
எங்கெங்குந் தானே.

௧௫. ரத்தவாறுகள் வெள்ளங்கள்பெருகவே
புத்தியற்றவர் பொருளெனக்குறுகவே
நிணங்கள்பெருத்துக் காணவே
நெருக்கம தாகவே.

௧௬. பிணங்கள்குவியத்தானே குடல்களைச்சிலநாய்கள்
நிணங்கள்குவியத்தானே யுடல்களைச்சிலபேய்கள்
குலவையிட்டுக் கழுகினங்கள்
கொத்தித் தின்னத்தானே.

௧௭. வட்டமிட்டுச்செம் பருந்துகளாடியே
மட்டில்லாதசெந் நரிகளுங்கூடியே
மண்டைநிணங்களை யண்டிடக்காகங்கள்
உண்டுமகிழத்தானே.

௧௮. இந்திரலோகத்துத் தேவர்களுங்குளிர்
சந்திரலோகத்தார் யாவர்களுங்கண்டு
இந்தச்சண்டைபோல் கண்டதில்லையென
இசைந்துபேசினரே.

பொது விருத்தம்.

இருதிறத்தவருங்கூடி யிவ்விதமாகத்தானே
பொருதவேவாணன்சேனை பொருக்கெனமடிந்ததாலே
துரிதமாய்பின்னும்வாணா சுரன்படைபெருக்கப்பார்த்து
அரிபடைவாவும்பார்த்து அசுரர்களுரைக்கின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம் இருதிறத்துச் சேனைகளும் யுத்தஞ்செய்கிற போது வாணாசுரன்சேனைகள் மடிந்துபோவதையும் கிருஷ்ணமூர்த்தி யின்படைகள் பெருகுவதையும்பார்த்து ராக்ஷதர்கள் சொல்லுகிறது எப்படியென்றால்.



கீர்த்தனை இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

௧. பயல்களேயுங்களை யித்தனைவீம்புகள்
பண்ணச்சொல்லிச் சொன்னதாரடா
எயிறுகளால்கவ்விக் கொல்கிறோமுங்களை
யெங்கள்சாமார்த்தியம் பாரடா.

௨. ஈயெனவெறும்பெனக் காலில்நசுக்கியே
யிப்பவேயுங்களைக் கொன்றிடுவோம்
வைகுண்டப்புருஷர்கள் கரும்பயல்கிருஷ்ணனை
வாய்களிற்கவ்வியே மென்றிடுவோம்.

௩. சத்துருவென்றுவந் தோர்களைத்தீயினில்
தள்ளியேசெள்ளென வாட்டிடுவோம்
செத்தபிணங்களை ருசியில்லாமலே
செக்கிலேபோட்டினி யாட்டிடுவோம்.

௪. ஓடாதொளியாதே நொருமன்றாகி
யுசாருடனேயினி நில்லுங்கடா
ஈடேற்றோடிய நாய்கள்போல்விழிக்கிறீர்
யெங்களைத்தானினி வெல்லுங்கடா.

௫. அவுணர்களிப்படிச் சபதங்கள்பேசியே
அச்சுதன்சேனையை வளைத்தனரே
கவலையிடல்லெனச் சேனைகள்மீதினில்
சேனையனேகமாய் வளைத்தனரே.

௬. வீரர்பயந்திட உக்கிரமிகுந்திடும்
வேலாயுதங்களை வீசினரே
சூரனேகரைக் கொன்றுபயங்கொண்ட
சூலாயுதங்களை வீசினரே.

பொது விருத்தம்.

சரிந்துவிழுந்தெழுந்தவை ரோட்டங்கொள்ள.
சமர்க்களத்தில்நின்றவர்கள் துணலாய்க்காந்த
முரிந்தகன்றவீரர்களுக் குறுதிசொல்லி
மோகனவேளும்பரம நாயன்முன்னோன்

விரிந்தபுகழ்படைத்தவுப நந்தன்சாம்பன்
மேலானசாத்தகியும் விரைவிற்சென்று
தெரிந்தும்தெரியாரென்போர்க் களத்தில்நின்ற
சேனைகளின்னிலைசினந்துசெப்புவானே.

வசனம்.

இந்தப்பிரகாரம் இந்திறத்துச் சேனைகளும் கைகலந்து அரசசேனைகள் அலங்கோலமாய் முறிந்து ஓடிப்போவதைக்கண்டு பலராமமூர்த்தி சொல்லுகிறது எப்படியென்றால்.

பலராமர் விருத்தம்.

அட்டிமெச்சுப்போல்நின் றதட்டியவவுணர்கேளீர்
மேட்டிமையாகவந்தென் வீரத்தைத்தியாண்மை
காட்டினீர்நீங்கள்மெத்தக் காரியக்காரராகில்
ஓட்டங்கொள்ளாமல்சிங்க ஏறுபோல்நின்றிடுமே.

வசனம்.

அகோவாருங்கள் இராட்சதர்களே! நீங்கள் உண்மையான வீரர்களாயிருப்பது நிசமானால் ஓடிப்போகாமல் என்முன்னே நில்லுங்களடா வீரர்களே.

தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

அடித்தானேபலபத்திராமன் - பின்னும்
அடித்தானேபலபத்திராமன்.

அநுபல்லவி.

அடித்தானேசிலபேரை - ஒடித்தானேசிலதேரை
அறுத்தானேசிலர்மேலை - வுரித்தானேசிலர்தோலை
அகிலமெங்கிலும் கிடுகிடென்றிட
நகரிசெண்டைகள் திடுதிடென்றிட
அடங்கிக்கந் திருவரும்பம்பிட
ஒடுங்கித் தும்புருவர்கும்பிட.

சரணங்கள்.

ஒடித்தானே சிலபேர்கரங்கள்
இடித்தானே சிலபேர்உரங்களை
உல்லிப்பிளவுகள்போலச் - சில்லுச்சில்லுகளாக
உடைத்தானே சிலபேர்சிரங்கள்



மடித்தானே சிலபேரை
பொடித்தானே சிலதேரை
வளைத்தானே சிலர்கையை
குழைத்தானே சிலர்மெய்யை
மழுவெனுங்கொழு பளபளென்றிட
ஒளிகொளும்பணி தளதளென்றிட
மான்குட்டியைப் போலவாகியே
மின்குட்டியைப் போலுலாவியே. (அடித்)

௨. உதைத்தானேசிலர் நெஞ்சுகலங்க
வழித்திமிசையாலே சோளப்பொரிகள்போலே
குதித்தானே அகிலங்கள்நடுங்க
மிதித்தானே சேனைகள்நடுங்க
சிதைத்தானே சிலதேரை
வதைத்தானே சிலபேரை
செதுக்கினன் சிலர்மூக்கை
கசக்கினன் சிலர்நாக்கை
வெட்டினன் சூரரை
வெட்டினன் வேவுகாரரை
சேறெனச்சிலர் குழைந்துயிர்விட
நீறெனச்சிலர் கரைந்துயிர்விட. (அடித்)

௩. கிழித்தானேசிலரைப் பனைநார்போல
நெருக்குண்டபடும்பேர்கள் சரீரங்கள்தனைத்தானே
குழைத்தானேமிக நஞ்சுஞ்சோறுபோல்
இழைத்தானேசிலர் சோறும்வாறுபோல்
கனைத்தஞ்சிச் சிலர்தேகம்
துளைத்துக்கெட் டுயிர்போக
கதைத்துத் துள்ளியழுதார்
உதைத்துக்கொண் டுயிர்விட
காதுங்கண்ணு மிழந்தனர்சிலர்
பாதமறுந்து விழுந்தனர்சிலர்
காலுங்கைக ளறுந்தனர்சிலர்
வேலுஞ்சூல மிழந்தனர்சிலர். (அடித்)
அடித்துவந்தவர்கள் முங்கிமுழந்தனர்
ஆங்காரமதுசற்றும் நீங்காமல்வாப்பர்ணம்

தடுத்துவிட்டவர் மீதிலெதிர்த்தான்
கடுத்துப்பல வாளிசொரிந்தான்
அடுத்தந்தப் பாணங்கள்
விடுத்தவர் காணங்கள்
அடங்கலுங் கெடுத்தாய்ந்து
மடங்காதார் மிசைசாய்ந்து
அவுணரன்பது லட்சம்மாய்ந்திட
நமனும்பரும் மெச்சிவாழ்ந்திட
ஆயிரந்தேர்களுஞ் சாய்ந்திட
ஆயிரம்யானைகள் மாய்ந்திட. (அடித்)

௫. சலிப்பில்லாக்கைச் சித்திரத்தால்
தளங்களொன்பதுலட்சம் மழுங்கலாச்சுதுசெரச்சம்
உலப்பிடவருமிட வலத்தாலே
கலப்பையாயுதம் பலத்தாலே
கலக்கங்கொண்டனர் லட்சம்
மலக்கங்கண்டனர் லட்சம்
கருவழிந்தனர் லட்சம்
அறிவொழிந்தனர் லட்சம்
கண்ணைமூடினர் லட்சம்
விண்ணிலோடினர் லட்சம்
கவிழ்ந்தார்பதி னாலுலட்சம்
அமிழ்ந்தார்பதி னேழுலட்சம். (அடித்)

௬. வளைத்தும்கரிகள் மெய்யையரிந்தான்
மாதவத்தினரேச வேதனுங்கேலிபேச
கரிகளாயிரம் பின்னும் பரிகளாயிரம் முன்னும்
எரியம்புகைவளை யெய்யும்பலசேனைகள்
பனிரண்டாயிரம் பின்னும்
பனிரண்டாயிரம் முன்னும்
மண்டிவந்திடும் பேர்கள்
முண்டிவந்திடும் பேர்கள்
பத்துலட்சம்குதிரைகள் மாய்ந்திட
பத்துலட்சம்குதிரைகள் மாய்ந்திட
மலைகள்போற்பிணங்களைக் குவித்தான்
தலைகள்கிள்ளியே மண்ணிலறைந்தான் (அடித்)



சேனோர்பகடி பண்ணலாச்சு
வீரர்தி வீரரும் காரர்தி சூரரும்
வித்தாரங்கள்மிகத் தானே
மெத்தப்பேசிடவுந் தானே
வேந்தரும் பலருமகிழ்ந்திட
மாந்தர்கள் பலருமிகழ்ந்திட
வேதனுள்ள மிதம்பெருத்திட
மாதவர்பலரும் சிரித்திட
அப்புறஞ்சில தண்டுநானைகள்
குப்பல்குப்பல தாகவந்திட
அதுகளும்பின்னும் வந்தசேனையும்
அதலகுதலமதாய் கொறுங்கிட. (அடித்)

போது விருத்தம்.

பார்த்திபர்க்காசுனை பலபத்திராமன்றானே
சேற்றுமண்போலேவாணன் சேனையைமிதிக்கும்போது
தூத்தலைப்போலும்வாணா சுரன்படைபெருக்கக்கண்டு
சாத்தகிராசன்வந்து சமர்செய்யத்துணிந்திட்டானே.

வசனம்.

இப்படிப் பலபத்திராமன் அகோரமான யுத்தஞ்செய்து வாணன்சேனைகளை அழித்தபோது பின்னும் சேனைகள் வருவதைக்கண்டு சாத்தகிமன்னன் யுத்தஞ்செய்கிற தெப்படியென்றால்,

தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

சாத்தகிராசனும்வந்தெதிர்த்தானே - சூரன்சேனைக்கு
சனுதாகக்கணைகள் விதித்தானே.

அநுபல்லவி.

பார்த்தமர்பயந்திடப் - போத்தெனவேசென்று
தூத்தலைப்போல்வரும் - ஆத்திரங்களைவென்று
மாற்றலர்தனைசூரண மாத்திரமேகொன்று
கூற்றுவனுலகி லேற்றிவிடுவனென்று. (சாத்த)

சரணங்கள்.

விட்டிடும்பாணங்கள் பட்டுடல்கிழிக்கவும்-கூகூவென்றேயழுது
நஷ்டமென்றேசில துஷ்டர்கள்விழிக்கவும்
அஷ்டகசங்கள்பயப் - பட்டுடல்நேய்ந்திட
திட்டமுள்ளரதங்கள் - பொட்டெனச்சாய்ந்திட

குட்டிக்காணங்க ளிட்டேபகைமாய்ந்திட
கட்டுக்குதிரையுதை பட்டுமேசாய்ந்திட. (சாந்த)

௭. பெற்றவயிறதுபற்றி யெரிந்திடவே - பளபளவெனமின்னும்
கத்தியிலவுணரைக் கொத்தியெறிந்திடவே
குத்துயிருளதள கர்த்தரைமிதித்திட
ரெத்தவெள்ளங்களிற் செத்தவருதித்திட
அற்றிடுங்கவந்தங்கள் நத்தியெதிர்த்திட
சித்தர்கள்தேவர்கள் வெற்றிமதித்திட. (சாந்த)

௮. சிந்துவந்தேசில ராக்கைவிழுந்திடவே - ருத்திரபூமியில்
தாக்குடனேபிணப் போக்குமிகுந்திடவே
மூக்குமுகங்களும் நகக்குகள்வாடவே
காக்கைகளக்கழுவுகள் மீக்குமிசாடவே
நாய்க்குமிநரிக்குமி கூக்குரல்போடவே
பாக்யமென்றேசில பேய்க்குமிநாடவே. (சாந்த)

போது விருத்தம்.

வாதுசெய்யுஞ்சாந்தகிகைக் கணைகளாலும்
வாளுமழுவாயுதங்கள் இணைகளாலும்
மோதிவிசைகொண்டுதைத்த வுதைகளாலும்
மூர்க்கமுள்ளவாணன்படை மூயாதாலே
நிதுபெறுசண்டைசற்று மொழியாதாலும்
சேனைபினுமென்மேலாய்ச் சேர்வதாலும்
வாதுசெய்யமனமிசைந்தோர் தேர்மீதேறி
மன்மதனுஞ்சமர்க்களத்தில் வந்திட்டானே.

வசனம்.

மன்மதராசன் ரணக்களத்தில் வந்து யுத்தஞ்செய்கிற விதங் காண்க.

ராகம்-தீபனை-௯-ம்-சங்கராபரணம் அடதாளம்.

கண்ணிகள்.

௧. சம்பிரதாயங்களைக் கூறினான் - மதன்
செம்பொன்ரதந்தனி லேறினான்.

௨. வாரிதனோழுங் கலங்கவோ
பேரிகைமேள முழங்கவே.

௩. செந்திருவயிற்றிற் பிறந்திட்டான் - நல்ல
சுந்தரமன்மதன வந்திட்டான்.



௪. வந்துசமர் நடிப்பாறினான் - அவன்
இந்தவிதமாகக் கூறினான்.

௫. வாணனைச்சார்ந்த பயல்களே - சாந்தன்
திராணியைப்பாரும் பயல்களே.

௬. மூடரேயெந்தனை வெல்லுங்கோ - இனி
யோடாதுசாருடன் நில்லுங்கோ.

௭. தப்பிடாப்பாணங்கள் பெய்கிறேன் - இப்போ
பற்பசங்காரங்கள் செய்கிறேன்.

௮. சீக்கிரம்இப்படிக் கூறினான் - மீது
நோக்கியேயவுணர்கள் சீறினார்.

௯. பொங்கியபாணங்கள்தாவினார் - க்ஷணம்
அங்கசன்மீதினிற் றாவினார்.

௧௦. அந்தக்கணைகள் தடுத்திட்டான் - மதன்
சொந்தக்கணைகள் விடுத்திட்டான்.

௧௧. மேகங்கள்போலே சொரிந்திட - அவ
ராகங்கள்தானே நெறிந்திட.

௧௨. தேர்களநேக மழிந்ததே - அவுணர்
பேர்களநேக மொழிந்ததே.

௧௩. மட்டில்லாக்குதிரைகள் மாய்ந்ததே - பின்னும்
பட்டத்துப்புரவிகள் பாய்ந்ததே.

௧௪. ஆனையநேக மடிந்ததே - பட்டுத்
தானையநேக முடிந்ததே.

௧௫. வறியதேர்க ளழிந்தனர் - ரத்த
வாரியிலநேக ரொழிந்தனர்.

௧௬. கால்வேறுகைவேறு மாகவே - வெகு
நால்விதச்சேனைகள் சாகவே.

௧௭. மூவருஞ்செமத்தக் களிக்கவே - சேணிற்
றேவர்கள்பூமாரி தெளிக்கவே.

சாம்பவன் யுத்தம்.

தரு-இ-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

சாம்பவன் வந்தெதிர்த்தானே - படையை
சருகுதுரும்பென மதித்தானே,

அநுபல்லவி.

விம்புதள்கூறியே விராப்புமீறியே
பாம்பெனச்சீறியே பருரதமேறியே. (சாம்)

சரணங்கள்.

க. காடார்மின்னலைப் பழிக்கவுமே - யிரு
கண்களிற்றீப்பொறி தெளிக்கவுமே
சூரைநார்போற் கிழிக்கவுமே - கருந்
தும்பிகள்போலச் சுழிக்கவுமே - பருந்
தேர்கள் பொடிந்திட
சேவகர் மடிந்திட
பாரத முடிந்திட
பாணங்க ளொடிந்திட. (சாம்)

உ. அடிபடுஞ்செண்டெனக் குதித்தானே - நல்ல
ஆயிரநாமனைத் துதித்தானே
முடிமன்னர்தங்களைச் சதித்தானே - வெகு
மூடரைத்தரையொடு மிதித்தானே - சிலர்
துடைகளை முறித்தான்
தோள்களை யுரித்தான்
உடல்தனை நெறித்தான்
உயிர்களைப் பறித்தான். (சாம்)

௩. திமுக்குதிமுக்கென வந்தவரும் - நல்ல
தின்னுதின்னுவென வந்தவரும்
அமுக்குஅமுக்கென வந்தவரும் - நல்ல
அழுந்துஅழுந்தென வந்தவரும் - அந்த
குமுக்களு மூய்ந்திட
கூக்குர லோய்ந்திட
சமர்க்களம் தேய்ந்திட
சவங்களும் சாய்ந்திட. (சாம்)



வசனம்.

அகோகேளுமையாகவாமி! என துபிராணநாயகா! அகிலாண்டகோடிப் பிரம்மாண்டநாயகராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் புத்திரனாகச் சொல்லுகிறேன். ஸ்திரீகளெல்லாரும் உன்புருஷனைக் கேவலங்கேட்டால் என்னசொல்லுவேன். தவிர இந்தப்பூமியிலே வாழப்பட்ட கற்புள்ளஸ்திரீகளுக்கும், சத்தியமே ஜபமென்றெண்ணி நடக்கும் புருஷர்களுக்கும் மானமேபெரிதல்லாமல் பிராணன்பெரிதல்லவே? புருஷன் மனதுக்கு விரோதமாய் நடக்கும் ஸ்திரீகள் கட்டிய கணவனை நினைக்கும் பொய்ப்பழமை பாராட்டப்பட்ட ஸ்திரீகள் நரகஞ் சேர்வார்கள். மேலும் புருஷன்கொடுத்த துரும்பை அபரஞ்சிதமாகப் பாராட்டிப் புருஷன் சுகம் தன் சுகமென்றும் புருஷன் பணிவிடையே இந்திரபோகமென்றும் புருஷனிருக்கும் வீடே மோட்சவீடென்றும் நினைத்திருப்பது பதிவிரதைகளுக்கு வழக்கம். பெண்சாதி செய்கிறபாவம் புருஷர்களைப் பாதிசேருமென்கிறபடியினாலே புருஷனைப்பிரிந்து கற்புள்ள ஸ்திரீகள் ஒருநிமிஷமும் வாழமாட்டார்கள். ஆகையால் இதோ இந்த வாளாயுதத்தை நாட்டி அதில் வீழ்ந்து இறந்துபோகிறேன் என் பிராணநாயகா.

பொது விருத்தம்.

விண்டுவிளுனைவாள்மேல் வீழ்ந்துயிர்மாய்ப்பேனென்று
கண்டிதமாகக்கூறக் காந்தன்முன்தோன்றாதாலே
வண்டுந்துண்டுகளோர்டேதிஸ் வாளில்வீழ்ரோஷத்தாலே
கொண்டவன்வருவானென்று குலந்தன்னையிகழ்வாளே,

வசனம்.

இந்தப்பிரகாரம் ருக்குமிதேவியானவள் ஸ்ரீமகாவிஷ்ணு சாக்ஷியாக உயிரைவிடுவேனென்று சபதங்கூறியும், கணவன்எதிரே வாராததினாலே தலைபோகிற ஆபத்தில் ஒருபொய் சொல்லலாமென்று உலகத்தார் சொல்லுகிறார்களென்படியினாலே, இனிதனது கணவனுடைய வமிசாவளியைக் கொஞ்சம்தூஷித்தால் அந்தரோஷம் பொறுக்கமாட்டாமல் கணவன்வெளியே வருவானென்று நினைத்து அவள்சொல்லிவருகிற விதங்காண்க:

ருக்குமி-தரு-௪-ம்-முகாரி-ஏகதாளம்.

பல்லவி.

இதிலொருநடிகளவுந்தீங்கில்லையே - சீர்கொண்டிட்டநாயகத்தின்
என்னளவுங்குற்றஞ்சொல்லவும்பாங்கில்லையே.

அநுபல்லவி.

மதனராசனும்உன்னிடத்தாராவே - அவரைப்பெற்றிடு
மாதவனுந்தியில்வந்திடும்வேதாவே - அவன்
வந்தனையாய்த்தாமரை மலரைப்புகழ்ந்தான்
நந்தவனங்கோயிற் பூசையிழந்தான்
சந்தேகமில்லாமல் மகளைக்கலந்தான்
அந்தப்பாவத்தாலே சிரசொன்றிழந்தான்
வாணியைநாவினில் வைத்ததுபொய்யாமோ
வீணென்றுசொல்லாமல் விதியின்வழிபோமோ. (இதி)

சரணங்கள்.

இராமனென்றேதானு நான்போல்உருவெடுத்தான்-சீதையை
ராவணாசுரனுக்குப் பறிகொடுத்தான் [கள்
சீமன்வாலியைத்தாளிக்துவாணம்தொடுத்தான்-சகோதரர்வி-
சுக்ரீபன்விபீஷணற்குப் பட்டங்கொடுத்தான்-பின்னும்
ராவணன்றனையுள் ளாள்வைத்துமாய்த்தான்
தேவிசீதைமுகம் நாணமறப்பார்த்தான்
காவில்துருவாசன்செய் போசனமேற்றான்
பாவிகைகேசி மகனுயிர்காத்தான்.
ராமரும்நீரென்னை ரட்சிப்பவர்நீரே
வாமனன்போலவுன் வம்சமும்நேரே. (இதி)
வசுதேவன்தேவகி மகனாய்ப்பிறந்தும் - ஆயர்குலத்தில்
வனிதைஅசோதைதந்தன் மகவாயிருந்தும்
பசுவினங்கள்தான்மேய்த்துப் பாலைக்கறந்தும் - அருந்திவழி
பத்தாமல்வீட்டின் கதவுகளைத்திறந்தும் - நல்ல [த்திரு
மாங்கனிபோல்தோய்ந்த தயிர்பால்குடிப்பான்
தூங்கும்இடைப்பெண்கள் மார்மேற்படுப்பான்
பாங்கிசைந்தாற்கொஞ்சம் சையோகந்தொடுப்பான்
பாங்குகெட்டாற்சீக்கிரம் ஓட்டமெடுப்பான்
வேணக்கொருவேஷம் விந்தரிக்கும்சிரம்
கோளுங்குண்டுணிகளுஞ் தோத்திரம்நேராம். (இதி)
உன்தகப்பனும் எந்தனின்மாமனுரே - லோகாதிலோகத்து
உயிர்க்கெல்லா முண்டானகாமனுரே [ள்ள
சந்தேகமில்லாமலே யிளஞ்சோமனுரே - இவரொடுகங்கை
சடையில்வைக்கும்வள்ளி தெய்வானைமாமனுரே - அவர்



சங்குச்சகுக்கென்னவே குளுக்கித்தலையில்தானே
மெதுக்குத்தானங்கள் தீர்த்து அதுக்கியுடல்கசுக்கி
உலுக்கிக்கைகால்பிடித்துக் கலிக்குஞ்சுகங்கொடுத்து
அதுக்கிப்பிலுக்கியிடை குலுக்கிக்குலுக்கியொயிலாய். (தை)

உ. அனங்கன்பெண்சாதிபோ லொய்யார - உடாங்கனைந்தபோ
அபாங்கிப்பலகைமீ துட்கார - தேகத்திலான்ற
ஆயாசமெல்லாந் தாந்தீர - தலையிற்கூந்தல்
அலங்காரம்தாறு மாறாய்த்தூர - கந்துப்புலாக்கு
மலுங்கத்தொங்கலுங்கொப்பி யலுங்கச்சொர்ணச்சோடுகள்
அலுங்கக்கொங்கைக்குடங்கள் அலுங்கச்சந்த்ரவடங்கள்
அலுங்கச்செந்தூரத்துயில் அலுங்கச்சரிகைவளை
அலுங்கப்பாதசரங்கள் அலுங்கக்குலுங்கத்தானே. (தை)

ங. சார்த்பிரவசனம்வாயிற் பிறக்க - முகாரவிந்தம்
சந்த்ரோதயத்தைப்போலே சிறக்க - அத்தருபன்னீர்
சாந்துசவ்வாதுவீடை பறக்க - மருதுபாரி
சாதம்செவ்வந்திவாசம் திறக்க - தான்தோய்ந்தகூந்தல்
சரிந்திடக்கைகள்நடம் புரிந்திடபொன்வளைகள்
உடைந்திடப்போன்னம் செறிந்திடஇடைத்துகில்
சரிந்திடத்தும்பிவி பறந்திடாவிக்கையும்
பிரிந்திடவேர்வைகள் சொரிந்திடவொயிலுடன். (தை)

பொது விருத்தம்.

தாதியுநற்சம்பங்கித் தயிலந்தேய்த்தாள்
சந்திரமுகத்தையலர்கள் தண்ணீர்வார்த்தார்
போதரவாயாடைபணி புனைந்தார்கெந்தம்
பூவணிந்தார்திருநாமம் பொருந்தவைத்தார்
ஏதமில்லாசங்கணங்கள் தரித்தாராவாகோ
டிருவரையுமணைவரையி லிருத்திக்கொண்டார்
கோதிலாநலங்குவைத்து ஸ்திரீகளோசை
கூட்டுவார்சோபனம்பா ராட்டுவாரே.

சோபனத் தீபதை ௭-ம் சங்கராபரணம் ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. ஸ்ரீகிருஷ்ணதேவனுக்குச் செங்கனிவாயனுக்கு
பாருண்டுமிழ்ந்தோனுக்குப் பக்தர்சகாயனுக்கு
கார்மேகவண்ணனுக்குக் கமலக்கண்மாயனுக்கு
சீர்கொண்டபுத்ரனுவ் சித்ரசேனேயனுக்கு

சிரஞ்சீவிசுதன்றன் பாலகிக்கும்
சோபனமே சோபனமே நித்ய சுபசோபனம்.

௨. சத்திமணவாளனுக்குச் சகியணியும்ஈசனுக்கு
மைத்துனனாகவாழும் வைகுந்தவாசனுக்கு
பத்தாவதாரனுக்குப் பரமபுருஷனுக்கு
புத்திரன்சேயனிருத்தனும் புகழுள்ளராசனுக்கு
புயல்நிறக்கூந்த லுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௩. மகவான்வள்ளிதெய்வானை மணவாளன்வேலனுக்கும்
தருமாமனுஞ்சங்கித சற்குணவேலனுக்கு
மிருவேதசாஸ்திரபுராண வேதாந்தசீலனுக்கும்
மகனாகவேபிறந்த மன்மதன்பாலனுக்கும்
வாணன்மகளுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௪. பதுமநாபனுக்குஞ்சகல பாக்கியவிஸ்தாரனுக்கும்
ரதிதேவிமாமனுக்கும் ராவணசம்மாரனுக்கும்
நிதமும்மருகனுக்கு மைந்தன்குமாரனுக்கும்
பதுமையென்னும்உருக்குமணி பயந்தளித்த போனுக்கும்
மான்போல்நயன வுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௫. ராசாதிராசன்ன ராசவசீகரனுக்கும்
ராசகோலாகலராச ராசவொய்யாரனுக்கும்
ராசராசவுரகதண்ட ராசகம்பீரனுக்கும்
ராசகோபாலபால ராசசிங்காரனுக்கும்
ரதிபாலனுக்கு முடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௬. எண்கண்ணும்நான்முகமும் இலங்கியவேதனுக்கும்
பண்பானதந்தையர்க்கும் பாண்டவர்தூதனுக்கும்
மண்ணும்விண்ணும் தானளந்த மரைமலர்ப்பாதனுக்கும்
உண்மைதவறுப்பேத்தி யுருக்குமிசமேதனுக்கு
ஒலவிஸ்தார உடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௭. ஆயிரநாமனுக்கும் ஆபுராரோக்கியனுக்கும்
மாயாவதாரனுக்கும் வளர்த்தோரும்பார்யனுக்கும்
சாயந்திரிமாமனுக்கும் சார்மீகயோகனுக்கும்
சேயாமன்மதராசன் சேயாட்சிலாங்கனுக்கும்
செயவுல்லாச வுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.



வேறு சோபனந்-திபதை-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

கன்னிகள்.

௧. ஸ்ரீகிர்ஷ்ணசாமிதன் பேரனுக்கும்
திடங்கொண்டஇருந்திய உடாங்கனைக்கும்
சீர்கொண்டகலியாணஞ் சிறந்திடவே
செயங்கொண்டமுகூர்த்தந்தா னிறைந்திடவே
கார்கொண்டநிறனை கருடவாகனன்வேதன்
ஆர்கொண்டசெஞ்சடை யானுமைமங்கான்வேலன்
போர்கொண்டமுனிவர்கள் பெரியோரந்தணர்வேந்தர்
வார்கொண்டதனமாதர் வரிசையாகநிறைந்து
மகிழ்ந்திடவே துயரை யிகழ்ந்திடவேயின்பம்
திகழ்ந்திடவேமெச்சிப் புகழ்ந்திடவேபூ
வாளியின்பாலனுக்கும் வாணன்புத்ரியுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௨. பகலாகத்தீபங்கள் துலங்கவுமே
பரங்குடன்மேற்கட்டி துலங்கவுமே
மகரதோரணங்களுங் குலுங்கவுமே
மலர்மாலைதொங்கலு மனுங்கவுமே
தெருதெருவினர்ம்பைகள் செங்கைகளசைக்கவே
தொகையில்லாதெழில்வச்சிரத் தூணிதுலங்கவே
செகமோகனமான சித்ரங்கள்விளங்கவே
ககனந்தனைபுல்லவுங் கலியாணமண்டபத்தில்
கனத்துடனேசகல சனத்துடனேநங்கள்
இனத்துடனேநல்ல நினைத்துடனே [கும்
கலினவேள்பாலனுக்கும்வாணன் கண்மணியாமுடாங்கனைக்
சோபனமே சோபனமே.

௩. அச்சுதன்மனதுதான் மகிழ்ந்திடவே
அயிராணிநாதனும் புகழ்ந்திடவே
வச்சிரவாரங்கள் திகழ்ந்திடவே
வனைந்துஅடர்ந்துகாந்தி நெகிழ்ந்திடவே
நட்சத்திரங்களைப்போலே நற்சித்ரக்குடைகளும்
பச்சைவர்னக்குடைகள் படர்சீலைக்குடைகளும்
குச்சுள்ளபூச்சக்ரக் குடைகள்நெருநெகென
விச்சித்ரமாகியவெண் சாமரம்பெண்கள்
வீசவுமேவரிசைபேசவுமே கலவைபூசவுமே
வெகுவுல் லாசமதாம்
விந்தைமேவள்பாலனுக்கும்வாணன் மெல்லியுடாங்கனைக்கும்
சோபனமே சோபனமே.

௪. சுருதிநாயகன்கிருபை முடங்காமலே
சுக்கிராசாரிசொல்லுங் கடங்காமலே

இரணியன்சொன்னசொல்லுக் கொடுங்காமலே
யென்னென்னவாதைசெய்தும் நடுங்காமலே
இரணியநமவென்று இயம்பாமற்கனிவாயால்
அரியோநமவென்று அஷ்டாட்சரத்தையோதி
பரமானந்தங்கொண்ட பரமபாகவதனென
பிரகலாதனென்று பேர்கொண்ட அரிபத்தன்
பேத்திக்குமேவாணற்கு மார்த்திக்குமேசயசற்
கீர்த்திக்குமேகிர்ஷ்ண மூர்த்திக்குமே
பெருமைசேர்போஜன பிரபலகுணசீலனுக்கு
சோபனமே சோபனமே.

போது விருத்தம்.

தோதகல்கலங்கனுதான் முடிக்கும்போது
கோதையர்கள்சோபனங்கள் கூறும்போது
நீதகல்நாள்க்லமு முகூர்த்தலக்னம்
சிறந்திடும்போதுயர்வளநாள் சேரும்போது
மாதவனும்மறையவரு மன்னர்யாரும்
மானிடர்களவுணர்கள் மற்றுள்ளோரெல்லாம்
சாதுல்வும்வேதசாஸ் திரத்தின்கூறுய்ச்
சாற்றுவார்மணமுநிறை வேற்றுவாரே.

தரு-௫-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி.

மாமணமேநிறைவேறுதுஇன்பமதாய் - செயசெயசெயவென
வானவர்புகழ்ந்திடவேவெகு சம்பமதாய்.

அநுபல்லவி.

காமனையருள்பரந் தாமனுமாகிய
ராமனுமாயிர நாமனும்புகழ்ந்திட.

சரணங்கள்.

௧. பூசுரர்மனமகிழ்ந் தாசிகளுரைத்திடவே - கமகமகமவென
வாசருமவுணரும் வாசங்கள்நிறைத்திடவே - நல்ல
வாசவன்வானவர் நேசமதாகவே
கேசவன்பெருமையைப் பேசிமகிழ்ந்திட. (மாமண)

௨. நாரதன்வீணையை நயமுடன்மீட்டவுமே - எக்காளங்களொடு
சாரசநாதசரம் பாசாட்டவுமே - வெகு
பூரிசின்னங்களின் நேரிசைபெருத்திட
சீருளமுரசொடு பேரிகையடித்திட. (மாமண)

௩. வேலினும்விழியினர் வித்தைகளோதவுமே - வேயிசைகளு
கோலாகலமுடன் கொம்புகளூதவுமே - நல்ல [டன்
பாலினும்மொழியினர் மாலிமைகாட்டவும்
வாலிபரனிபுடன் சாலுவைபூட்டவும். (மாமண)



௪. ஆணும்பெண்களுமநிசயஞ்சூடவுமே - மட்டடங்கலொன்று
தோணவும்பாவைகள் ஆரத்திலோடவுமே - நல்ல
வாணங்கள்பிருசுகள் சேனுமதிர்ந்திட
பூணும்விநோதங்கள் காணமதித்திட. (மாமண)

௫. அதிபெருங்காரணச் சுந்தரமாயனுமே - வந்துகேட்டிடும்படி
னுதவியமாவலி புதல்வியதேசயனுமே - அவன் [க்குமண
புதல்வியின்கைதனை மதன்மகன்கையிற்கொடுத்திட
மதன்மகனுடாங்கனை மலர்க்கரம்பிடித்திட. (மாமண)

போது விருத்தம்.

வாணனுக்குமருமக னென்றுரைக்கத்தானே
மதன்மகனும்வாணனருள் மகளைநன்றாய்
பாணிக்கிரகம்செய்தபின்பு அம்மிமீதில்
பய்யமிதித்தனலை வலம்வந்தானப்பால்
சேனைதனிற்றுலங்குமருந் ததியைப்பார்த்தார்
சீருடனேமணமுந்தி விருந்தாரப்பால்
பூணுமுத்தாலாலத்தி யெடுத்துமாதர்
புகழ்ந்திட்டார்மங்கலந்தான் புகன்றிட்டாரே.

மங்களம்-திபதை-௫-ம்-எதுகுலகாம்போதி.

கண்ணிகள்.

௧. ஸ்ரீகிர்ஷ்ணதேவனுக்கும் தேவானுகூலனுக்கும்
சிரானமுகுந்தனுக்கும் சீதானுக்கும்
பாரிதன்மாமனுக்கும் பாலனெனவேபிறந்த
மாரன்மகனுக்கசுரன் மகளுக்குமெழிலாய்
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

௨. தேவகிதன்பாலனுக்கும் செந்திருமணாளனுக்கும்
மூவடிக்குமிடங்கொடுத்து முனிவர்வாழ்த்த
சாவிலாக்கீர்த்திபெற்றும் சாயுஜ்யபதம்பெற்ற
மாவலிதன்பேத்திக்கும் மதன்சுதனுக்கும்
செயமங்களம் நித்ய சுபமங்களம்

௩. அச்சுதானந்தனுக்கு அனுசிபார்ப்பதிகௌரி
பக்ஷமுடன்கொடுத்த வரம்பலிதமாகி
கச்சுநூகில்கடையணிந்து கலியாணக்கோலங்கொண்ட
லட்சணவுடாங்கனைக்கும் ரதிசுதனுக்கும்
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

௪. எத்திசையும்விண்ணுமண்ணும் ஈரேழுலகிலெங்கும்
வித்துவினைவுண்டாக வேண்டிமலராம்
அந்திரங்களேவிமய லனலெழுப்புமதனவேள்

புத்திரனுக்கும்வாணனருள் புதல்விதனக்கும்
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

௫. ஆயர்குலசோதைமுன்பு ஆயிரத்தெட்டண்டங்களும்
தூயபுவனங்கள்புவித் தோற்றமுதலாய்
வாயதனிற்காட்டியருள் மாலின்மெலாம்விளங்கும்
மாயவன்றன்பேரனுக்கும் வாணன்மகளுக்கும்
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

௬. வேதவேதியாகி விளம்பவேமாலவனும்
மாதவனும்வானவரும் மகிழ்ந்துவாழ்த்த
காதலுடன்கவிவாணர் கவிமழைபொழியவே
ஆதிவஸ்துபேரனுக்கும் அசுரன்மகளுக்கும்
செயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஊஞ்சல்-தீபதை-இ-டீ-ஆநந்தபைரவி.

கண்ணிகள்.

௧. மகராசராடி ரூஞ்சல்-மதனரதி
மைந்தனிருந்தாடி ரூஞ்சல்
சுகராசராடி ரூஞ்சல் - அனிருத்த
துரையிருந்தாடி ரூஞ்சல்.

௨. தீரனிருந்தாடி ரூஞ்சல் - மதன
வெய்யோனிருந்தாடி ரூஞ்சல்
மாரன்மகனாடி ரூஞ்சல் - உருக்குமணி
பேரனிருந்தாடி ரூஞ்சல்.

௩. தமனியமண்ட பமதனிலே - நவரத்னம்
தான்பதித்த கால்கள்நாட்டி
செம்பவள விட்டங்கள்பூட்டி - சோதிமின்னல்
செதுக்குவஜ்ரப் பலப்புமூட்டி.

௪. துலங்குமபாஞ்சிக் கட்டில் - எழில்மிகுந்த
சோதிநவரத்னக் கட்டில்
அலங்காரக் கட்டில்தனிலே - வாணன்மக
ளனிருத்த ராடிரூசல்.

௫. அந்தமுடன்தாளக் கோவை - பூச்சரங்கள்
பந்திபந்தியாய்த் துலங்கும்
விந்தையசுமான ஓரியில் - தகதகென
சந்திரவிதான மோங்க.

௬. சந்திரகோது சிலங்குமூஞ்சல் - தகதகென
தானக்குச் சிலங்குமூஞ்சல்
அந்தமேமிகுந்த வூஞ்சல் - வாணன்மக
ளனிருத்தனாடி ரூஞ்சல்.



௭. வச்சிரரேக்கடர்ந்த வூஞ்சல் - கலகலென
வயிரமணியலங்கு மூஞ்சல்
அச்சரங்கள்துலங்கு மூஞ்சல் - வாணன்மக
ளனிருத்தனாடி ரூஞ்சல்.

௮. மாமழைக்குமிழ்சிறந்த வூஞ்சல் - நீலவர்ண
மணிச்சரங்களலங்கு மூஞ்சல்
யாளிக்கொடிதுலங்கு மூஞ்சல் - வாணன்மக
ளனிருத்தனாடி ரூஞ்சல்.

௯. நளினமலரிலங்கு மூஞ்சல் - கொம்புகளும்
நாகரிகமான வூஞ்சல்
அழகுரவாதல வூஞ்சல் - வாணன்மக
ளனிருத்தனாடி ரூஞ்சல்.

௰. உச்சிதத்தமனிய வூஞ்சலே - வாசனைக
ளோங்குபரிமள வூஞ்சலே
அச்சுதன்மகன் மதனன்மகனும் - வாணன்மகள்
அழகுபெறவாடு மூஞ்சல்.

௧௧. நவரத்னமகுட மிலங்க - தகதகென
நளினபுயக் கிரிதியலங்க
கவசகுண்டலங்கள் துலங்க - பீதாம்பரம்
கதிரவன்போற் றுலங்கியலங்க.

௧௨. காதிலணிதோடுமாட - ஜகமாலை
கனமாலையொயில் கொண்டாட
சோதிரத்ன வளைகளாட - புலாக்குடன்
சொர்ணத்தகி லுடனுமாட.

௧௩. பேடைமயிற்சாய லலுங்க - திலகமின்ன
பின்னற்சடை சுழன்றுகுலுங்க
ஆடையாபரண மலுங்க - வாணன்மக
ளனிருத்தனாடி ரூஞ்சல்.

௧௪. பூங்கிளிகள் கொஞ்சிப்பேச - மயிலுமுடன்
மாங்குயில்கள் மகிழ்ந்துகூவ
தீங்குழலிசைந்து பாட - ரதிமகனும்
சூரன்மக ளாடிரூஞ்சல்.

௧௫. மோகவேள்பால னென்றும் - எழில்பெருகு
யோகவிவேக னென்றும்
போகதேவேந்திர னென்றும் - கவிவாணர்
வாகுடன்புகழ் பாடவே.

## பூச்செண்டாடல்-திபதை-இ-ம்-ஆனந்தபைரவி.

கண்ணிகள்.

௧. உத்தமவெழில் பொருந்தும் - பொன்
ஊஞ்சலின்மே லிருந்தும் - நல்ல
சித்தசன்மைந்தனும் வாணன்மகளுமலர்ச்
செண்டுகளாடினரே.

௨. காவினி கலகலெனச் - சொர்ணச்
சாங்கரும் சலசலென - எழில்
திருமகள்போனும் வாணன்மகளுமலர்ச்
செண்டுகளாடினரே.

௩. பாதசரங்களனுங்க - எழிற்
சோதிவடங் குலுங்க - அரி
சிதரன்போனும் வாணன்மகளுமலர்
செண்டுகளாடினரே.

௪. காவலர் தான்புகழ - நல்ல
மூவரும் தான்மகிழ - எழில்
தேவகிபோனும் வாணன்மகளுமலர்ச்
செண்டுகளாடினரே.

௫. மயிலின மகிழவுமே - திவ்ய
ஒயிலெழில் திகழவுமே - நல்ல
செயாதிமைந்தனும் வாணன்மகளுமலர்
செண்டுகளாடினரே.

௬. அண்டர்கள் மொய்க்கவுமே - எழில்
கண்டுகளிக்கவுமே - நல்ல
விண்டுவின்போனும் வாணன்மகளுமலர்
செண்டுகளாடினரே.

வாழ்த்துக்கள்.

கார்வாழிகதிர்மதியோ டுடுக்கள்வாழி
கண்ணுதலோன்மாலயனும் கனிந்துவாழி
நீர்வாழியதுவளைந்த நெடும்பூவாழி
நீலநிறமால்மகனும் அவன்றன்பேரன்
பேர்வாழிவாணன்மக ளுலகிலிந்தப்
பெருங்கதையைநாடகமாய்ச் சொன்னோன்வாழூ
மூர்வாழியெழுதினவர் படித்தோரச்சி
லச்சிட்டோர்சுகமுடனே வாழ்கமாதோ.

வாணாசுர நாடகம் முற்றிற்று.

G-1393PPM
M42
1758